
ஸ்ரீ தேவி பாகவத ஸாரம்
श्री देवी भागवत-सा

ஆசிரியர் 'அண்ணா' உரை எழுதிய
எங்கள் நூல்கள்

ஈச-கேன-கட உபநிஷதங்கள்	3	00
காலிகோ	5	00
ப்ரச்ன–முண்டக-மாண்டுக்ய-ஐதரேய உபநிஷதங்கள் (பக்கம் 172)	(அச்சில்)	
தைத்திரீய உபநிஷத்து (பக்கம் 91) காலிகோ	2	50
சாந்தோக்ய-ப்ருஹதாரண்யக உபநிஷத்துகளின் ஸாரம், ப்ரஹ்மஸூத்ரத்துடன் (மூன்றாவது பதிப்பு) பக்கம் 320	6	00
காலிகோ	9	00
மஹாநாராயண உபநிஷத்து (தைத்திரீய நாராயணவல்லி) பக்கம் 146	5	00

II. பகவத்கீதை

ஸ்ரீமத் பகவத்கீதை	8	00
காலிகோ	9	50
ஸ்ரீமத் பகவத்கீதை (பாராயணம்)	4	00
ஸ்ரீமத் பகவத்கீதை மூலம் (தமிழ்) பாக்கட் சைஸ்	2	00
ஸ்ரீமத் பகவத்கீதை வெண்பா (முத்து ஐயர் இயற்றியது) பக்கம் 223	2	00
விவேக சூடாமணி (பக்கம் 392+XII)	4	25
காலிகோ	5	50
ஸ்ரீ ருத்ரம்-சமகம் (மஹாந்யாஸத் துடன்-பக்கம் 296)	6	50
காலிகோ	10	00
தைத்திரீய மந்த்ரகோசம் :—		
தமிழில் ஸ்வரத்துடன்	6	00
நாகரத்தில் ஸ்வரத்துடன் முதல்பாகம்	2	50
ஷை இரண்டாம் பாகம்	3	00
ஸ்ரீதேவிமாஹாத்மியம்	9	00
,, அட்டை பைண்டு	12	00
ஸ்ரீதேவிமாஹாத்மியம் பாராயணம் (தமிழில் மூலம்)	2	00

3/4

ஸ்ரீதேவீ பாகவத ஸாரம்

॥ श्रीदेवीभागवतसारः ॥

உரையுடன் கூடியது

முதல் பாகம்

(நவாஹக்ரமத்தில் முதல் மூன்று நாள் கதை)

மஹிஷாஸுர வதம் வரை

1.1—5.18.

உரை ஆசிரியர்

“அண்ணா”

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்
மயிலாப்பூர் : : சென்னை 600 004

Published by

Sri Ramakrishna Math
11 Ramakrishna Math Road
Madras 600 004

First Edition
3 M 3 C — 1979

Printed in India
at Amra Press
132 L. B. Road
Madras - 600 041

பொருளடக்கம்

ஸ்ரீதேவீ பாகவத ஸாரம்

முதல் பாகம்

நவாஹக்ரமப்படி

முதல் நாள்

இரண்டாவது நாள்

ஸ்கந்தம் 3.

மூன்றுவது நாள்

ஸ்கந்தம் 4.

ஸ்கந்தம் 5.

முகவுரை

இதிஹாஸங்களும் புராணங்களும் 'மறை' எனப்படும் வேதத்தில் மறைந்து கிடக்கும் உண்மைகளை விளக்க வந்தவை. அவை நுட்பமான தத்துவங்களை பூதக்கண்ணாடியைப் போல் பெரிதாக்கிக் காட்டுகின்றன. ஒரு சிற்றெறும்பை பூதக்கண்ணாடியில் பார்த்தால் அதன் கண்களும் கால்களும் தெரியாத உறுப்புக்களும் தெளிவாய்த் தெரிகின்றன. அதே மாதிரி வேதத்தைப் படிக்கும் போது விளங்காத தத்துவங் களை நன்றாகத் தெரியும்படி பெரிதாக்கிக் காட்டுவது புராணம். காலத்தையும் தேசத்தையும், தேவர்களையும் மனிதர்களையும் பல மடங்கு பெரிதாக்கிக் காட்டுவது அதன் இயல்பு. அதனால் அதை உண்மைக்குப் புறம்பானதென்றோ கட்டுக் கதையென்றோ புறக்கணிக்கக் கூடாது.

புராணங்கள் இந்து மதத்தில் ஒரு சாரார்க்கோ இந் நாட்டின் ஒரு பகுதியினர்க்கோ மட்டும் உரித்தானவை யல்ல. அவை பாரத நாட்டின் பொது உடைமை. கவியின் மூலமும் கதைகளின் மூலமும் ஆன்ம வாழ்க்கையில் நிகழும் போராட்டங்களை அவை சித்திரித்துக் காட்டுகின்றன. புராணம் பழையதினும் பழையதாயினும் (புரா அபி நவ:) தினந்தோறும் உதித்துப் புத்தொளி தரும் சூரியனைப் போல் என்றும் புதிது (நவோ நவோ பவதி). நாம் புதிது புதிதாய்ப் படிக்கும் நூல்களில் பெரும் பகுதி இரண்டாந் தடவை படிக்கவும் தகுதிபெற்றவை. ஆனால் புராணங்களோ பல நூற்றாண்டுகளாக இந்நாடு முழுவதையும் வசப்படுத்தி வந் துள்ளன. அன்றுபோல் இன்றும் புராணங்களைப் பல்லாயிரக் கணக்கான மக்கள் படித்தும் கேட்டும் இன்புறுகின்றனர். புராணங்களை நீக்கிவிட்டால் இந்துமதம் உப்பில்லாத உண்டி போல் ஆகிவிடும்.

இராமாயணமும் பாரதமும் இதிஹாஸங்கள் எனப் படுவன. அவை இந்நாட்டுப் பண்டைகாலச் சரித்திரத்துடன்

தொடர்புடையவை. 'இங்ஙனம் இருந்தது எனக் கூறுவ தால் 'இதி ஹ ஆஸம்' எனப் பெயர் ஏற்பட்டது.

வேதவியாஸர் கிருஷ்ணவதார காலத்தில் வேதங்களைப் பாகுபாடு செய்தாற்போல் மஹாபாரதத்தை எழுதிப் புராணங்களையும் கோர்வையாக ஒழுங்குபடுத்திச் சீடர்க ளுக்கு உபதேசித்தார். எத்தனையோ நூல்கள் தோன்றி மறைந்த பின்பும் அவை பிரசாரத்திலிருப்பது அவை நாட்டின் உயிர்நிலை என்பதைச் சுட்டிக் காட்டுகிறது.

முக்கியமான புராணங்கள் பதினெட்டு. அவையெல்லாம் சேர்ந்து ஏறக்குறைய நாலு லக்ஷம் சுலோகங்கள். அவற்றுள் பாகவதத்திற்குத் தனிச் சிறப்பு உண்டு.

பாகவதம் இரண்டு. ஒன்று விஷ்ணு பாகவதம். அது பகவான் விஷ்ணுவின் அவதாரங்களையும் லீலைகளையும் கூறு வது. மற்றொன்று தேவீபாகவதம். அது பகவதி என்ற பராசக்தியின் பெருமைகளைப் பேசுவது. இரண்டுமே பதினெண்ணாயிரம் சுலோகங்களும் பன்னிரண்டு ஸ்கந்தங் களும் உடையவை. விஷ்ணு பாகவதத்தில் அத்தியாயங்கள் 335; தேவீ பாகவதத்தில் 318.

பராசக்திக்கும் இரண்டு வடிவம் என அப்பய்யதீக்ஷிதர் 'ரத்னத்ரய பரீக்ஷை' எனும் நூலில் கூறுகிறார்;

'தர்ம: பும் ரூபமாப்த்வா ஸகல ஜகதுபாதான பாவம் பிபர்த்தி, ஸ்த்ரீ ரூபம் ப்ராப்ய திவ்யா பவதி சமஹிஷீ ஸ்வாச்ரயஸ்யாதிகர்த்து: 1—தர்மம் ஆண்வடிவு கொண்டு உலகனைத்திற்கும் உபாதான காரணமாக (விச்வம் விஷ்ணு, என்றபடி) விளங்குகிறது. பெண்வடிவு கொண்டு தனது ஆசிரயமாகிய ஆதிகர்த்தாவுக்குப் பத்தினியாகிறது.'

நாராயணனும் நாராயணியும் பகவானும் பகவதியும் ஒரே தத்துவத்தின் இரண்டு வடிவங்கள். அக்காரணத்தால் விஷ்ணு பாகவதமும், தேவீபாகவதமும் ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போன்றவை. தேவீ பாகவதத்தில் ஹயக்ரீவ அவதாரம், கிருஷ்ண சரித்திரம், மஹாபாரதக் கதை முதலியவை இடம் பெறுவது இரண்டு பாகவதங்

களின் நோக்கமும் ஒன்றே என்பதையும் விஷ்ணுவும் வைஷ்ணவீ எனப் பெயர்பெற்ற பகவதியும் ஒன்றே என்பதையும் காட்டுவதாகும்.

தேவீபாகவதத்தை ஸூகர் முனிவர்களுக்குச் சொல்ல ஆரம்பிக்கையில் பின்வருமாறு கூறுகிருர்: ''ஆகமங்களில் ஒப்புயர்வற்றதாயும், சாஸ்திரங்களனைத்தின் ரகசியமாயும், வேதத்தின் கருத்திற்கொத்ததாயும் உள்ளது இப்புராணம். வேதமார்க்கத்தில் எவள் 'வித்யா' எனவும், 'ஆத்யா சக்தி' எனவும், 'பர தேவதை' எனவும், எல்லாம் அறிந்தவள் எனவும், பிறவித்தளையைச் சேதிப்பதில் திறமை மிக்கவள் எனவும், அனைத்துயிர்களிலும் உறைபவள் எனவும் கூறப்படு கிருளோ அந்த பகவதியின் பெருமை இங்கு விளக்கப்படு கிறது. அது நமக்கு மூலதனம். தர்மப்ரஜாபதியின் புத்திர ராக அவதரித்த பகவான் நாராயணரால் அதில் நிர்மலமான தர்மம் கூறப்படுகிறது. காயத்ரியின் ரகசியமும், காயத்ரி ஸஹஸ்ரநாமம், மணித்வீபத்தின் வர்ணனையும் அதில் அடங் கியுள்ளன. ஹிமவானுக்குப் புத்திரியாக அவதரித்த தேவியால் உபதேசிக்கப்பட்ட பகவதி கீதையும் உளது.''

மதுகைடப வதத்திற்குப் பின் மணித்வீபத்தில் மும் மூர்த்திகளும் தேவியை தரிசித்தபோது அவர்கள் தேவியிடம் வினவினுர்கள்: 'இரண்டல்லாத ஒன்றே பிரம்மம் என்ருல் அது நீயா, பரமசிவமா? நீ ஆணு, பெண்ணு?'' என்று (பக்கம் 197). தேவி 'எனக்கும் பரமசிவத்திற்கு மிடை எப்போதும் பேதமில்லை. நாங்கள் இருவருமே ஒன்றேயா வோம். அவரே நான், நானே அவர். மதிமயக்கத்தால் பேதம் கற்பிக்கப்படுகிறது. உலக உற்பத்திக்காலத்தில் பேதம் தோன்றுகிறது. அப்பொழுது பிரம்மாவும் தோன்று கிருர். தோற்றமும் மறைவுமாகிற இவ்விரண்டு முள்ளவரை இந்த பேதமும் உண்டு. உலக ஸம்ஹார காலத்தில் நான் ஆணுமன்று, பெண்ணுமன்று, அலியுமன்று. உற்பத்தி காலத்தில்தான் இந்த பேதம் கற்பிக்கப்படுகிறது. எல்லா தேவர்களிடமும் நான் பல பெயர்களைத் தரித்துக் கொண்டு அந்தந்த சக்தியாக விளங்கிப் பராக்ரமச் செயல்களைப் புரி கிறேன். கௌரீ, ப்ராஹ்மீ, ரௌத்ரீ, வாராஹீ, வைஷ் ணவீ, சிவா, வாருணீ, கௌபேரீ, நாரசிம்ம, வாஸவீ எல்லாம் நானே' என்று கூறுகிருள். இது தான் தேவியின் தத்துவம்.

விஷ்ணுபாகவதத்தைப் படிப்பதற்கும் கேட்பதற்கும் 'ஸப்தாஹக்ரமம்' விசேஷமாகக் கொள்ளப்படுவது போல், தேவிபாகவதத்திற்கு 'நவாஹக்ரமம்' விசேஷமாகக் கருதப் படுகிறது. அந்தக்கிரமத்தில் முதல் மூன்று நாள் கதை முதல் பாகமாகவும், அடுத்த மூன்று நாள் கதை இரண்டாவது பாகமாகவும் கடைசி மூன்று நாள் கதை மூன்ருவது பாகமாகவும் வெளியிடப்படுகிறது.

சௌனகாதி முனிவர்களின் ஸத்ரயாகத்தில் ஸூதர் எழுந்தருளுதலும், வியாஸருக்கு நாரதர் செய்யும் உபதேசமும், பரதத்வ நிர்ணயமும் ஹயக்ரீவர் கதை, மது கைடப வதம், சுகர் சரித்திரம், கௌரவகுல உத்தாரணம் முதலியவையும் முதல் நாள் கதை. சந்தனு சரித்திரம், பஞ்சபாண்டவர் ஜனனம், மஹாபாரத இறுதிக்கதை ஆகியவை இரண்டாவது நாள் பகுதி. மும்மூர்த்தி ரகசியம், ஸத்யவிரதன் கதை, ஸூதர்சன சரித்திரம், நவராத்ரி மகிமை, கிருஷ்ண சரித்திரம், மஹிஷாஸூரவத வர்ணனை ஆகியவை மூன்ருவது நாள் பகுதி. இங்ஙனம் இம்மூன்று நாள் கதைகளும் முதல் பாகமாக வெளிவரும் இந்நூலில் அடக்கம்.

தெய்வத்தைத் தாயாக வழிபடும் பண்பு பாரத நாட்டின் தனிச் சிறப்பு. அங்ஙனம் வழிபடுவோர்க்கு நிர்க்குணமும் ஸகுணமும், கர்மமும், பக்தியும், யோகமும், ஞானமும், அத்துவைதமும், துவைதமும், இல்லறமும் துறவறமும் எல்லாம் அன்னையின் உள்ளத்திற்கு உகந்தனவாகவும், எல்லாமாயிருக்கும் அவளை அடையும் மார்க்கங்களாகவும் விளங்கும். நவயுக அவதார புருஷராகிய ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் இவ்வுண்மையைத் தமது வாழ்க்கையாலும் உபதேசங்களாலும் நிலைநாட்டியுள்ளார்.

இந்தப் புத்தகத்தில் மூலத்தின் தொடர்பு கெடாமல், முக்கியமான விஷயங்கள் விடுபடாமல், புராணத்திலுள்ள 18000 சுலோகங்களும் பொறுக்கி யெடுத்த 6000 சுலோகங்களில் சுருக்கித் தரப்பட்டுள்ளன. சுலோகங்களின் எண்ணிக்கையில் 2.6 என்பதற்குப்பின் உதாரணமாக 2.9. என்று வந்தால் இடையில் இரண்டு சுலோகங்கள் விரிவுக் கஞ்சி விடப்பட்டிருக்கின்றன என்று கொள்ளவேண்டும். ஒவ்வொரு சுலோகமும் நாகரத்தில் அச்சிடப்பட்டு அடியில் தமிழ் மொழிபெயர்ப்புடன் கூடியதாகக் காணப்படும்.

அச்சிடுவதில் பிழைகளைத் திருத்தி உதவிய பிரும்மஸ்ரீ வழுத்தூர் ராஜகோபால சர்மா அவர்களுக்கும், ஸ்ரீ N. விச்வநாதன் அவர்களுக்கும், இதை அழகாக அச்சிட்டுத் தந்த அச்சுக் கூடத்தாருக்கும், இதைப் படித்து எங்கள் முயற்சியை ஸபலமாக்கும் அன்பர்களுக்கும் மனமார்ந்த நன்றி.

உரையாசிரியர்

ஸ்ரீராமகிருஷ்ண மாணவரில்லம்,
சென்னை – 4.
ஸித்தார்த்த ஞூ ஆனி 25 வ
குருபூர்ணிமா
9.7.1979.

श्रीः

श्रीगणेशाय नमः

॥ श्रीदेवीभागवत-सारः ॥

पाठविधिः

शुक्लाम्बरधरं विष्णुं शशिवर्णं चतुर्भुजम् ।
प्रसन्नवदनं ध्यायेत् सर्वविघ्नोपशान्तये ॥ १ ॥

वागीशाद्याः सुमनसः सर्वार्थानामुपक्रमे ।
यं नत्वा कृतकृत्याःस्यु-स्तं नमामि गजाननम् ॥ २ ॥

ஸ்ரீ:

ஸ்ரீ கணேசாய நம:

‖ ஸ்ரீதேவீபாகவத—ஸார: ‖

பாடவிதி:

சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்ப்புஜம் |
ப்ரஸன்ன-வதனம் த்யாயேத் ஸர்வவிக்னோப சாந்தயே ‖ 1 ‖

வாகீசாத்யா: ஸுமனஸ: ஸர்வார்த்தானு—முபக்ரமே |
யம் நத்வா க்ருதக்ருத்யா: ஸ்யுஸ்தம்நமாமி கஜானனம் ‖ 2 ‖

---

1. எங்கும் நிறைந்த வரும், அன்பர்க்குகந்த வடிவ மெடுப்பவரும் வெண்மையான ஆடை உடுத்தவரும், நிலவு போன்ற ஒளி உள்ளவரும், நான்கு கைகளுள்ளவரும், ஆனந்தம் பொங்கும் முகமண்டலத்தை உடையவரும் ஆகிய கணபதியை எல்லா இடையூறுகளும் நீங்குவதற்காக தியானம் செய்ய வேண்டும்.

2. பிரம்மா முதலிய தேவர்கள் எல்லாச் செயல்களின் தொடக்கத்திலும் எவரை வணங்கி காரியஸித்தி யடைந்தார் களோ அந்த கஜானனரை நான் வணங்குகிறேன்.

दोर्भिर्युक्ता चतुर्भिः स्फटिकमणिमयी-मक्षमालां दधाना
हस्तेनैकेन पद्मं सितमपि च शुकं पुस्तकं चापरेण ।
भासा कुन्देन्दु-शंखस्फटिकमणिनिभा भासमानाऽसमाना
सा मे वाग्देवतेयं निवसतु वदने सर्वदा सुप्रसन्ना ।। ३ ।।

अस्य श्रीदेवीभागवताख्य-महामन्त्रस्य वेदव्यासो भगवान् ऋषिः। अनुष्टुप्छन्दः। श्रीजगदम्बा देवता। सर्वचैतन्यरूपा बीजम्। बुद्धिरूपा शक्तिः। आद्या विद्या कीलकम्।। श्रीजगदम्बा-प्रीत्यर्थे पाठे विनियोगः ।। ४ ।।

தோர்ப்பிர்யுக்தா சதுர்ப்பி: ஸ்ப்படிகமணிமயீ-மக்ஷமாலாம் ததாஞ
ஹஸ்தேனைகேன பத்மம் ஸிதமபிச சுகம் புஸ்தகஞ் சாபரேண
பாஸாகுந்தேந்து சங்கஸ்ப்படிக மணிநிபா பாஸமாஞ (அ) ஸமாஞ
ஸா மே வாக்தேவதேயம் நிவஸது வதனே ஸர்வதா ஸுப்ரஸன்ஞ ‖ 3 ‖

அஸ்ய ஸ்ரீதேவீ பாகவதாக்க்ய—மஹாமந்த்ரஸ்ய வேதவ்யாஸோ பகவான் ருஷி: | அனுஷ்டுப்சந்த: | ஸ்ரீஜகதம்பா தேவதா ‖ ஸர்வசைதன்யரூபா பீஜம் | புத்திரூபா சக்தி: | ஆத்யா வித்யா கீலகம் | ஸ்ரீஜகதம்பாப்ரீத்யர்த்தே பாடே விநியோக: ‖ 4 ‖

---

3. நான்கு கைகள் உடையவளும், ஸ்படிகமணியாலான ஜபமாலை ஏந்தியவளும், ஒரு கையில் தாமரையும், ஒரு கையில் வெள்ளைக்கிளியும் உடையவளும், இன்னொரு கையில் புஸ்தகம் உடையவளும், குந்தமலர், சந்திரன், ஸ்ப்டிகம் முதலியவற்றைப் போல் தூய வெண்மையாகப் பிரகாசிப்பவளும் நிகரற்றவளுமான அந்த வாக்தேவதை எனது முகத்தில் எப்பொழுதும் அருள் சுரப்பவளாக எழுந்தருளியிருக்க வேண்டும் எனப் (பிரார்த்திக்கிறேன்.)

(करन्यासः) ॥ ह्लां-अंगुष्ठाभ्यां नमः। ह्लीं-तर्जनीभ्यां नमः। ह्लूं-मध्यमाभ्यां नमः। ह्लैं-अनामिकाभ्यां नमः। ह्लौं-कनिष्ठिकाभ्यां नमः। ह्लः-करतलकरपृष्ठाभ्यां नमः ॥ ५ ॥

(अंगन्यासः) ॥ ह्लां-हृदयाय नमः। ह्लीं-शिरसे स्वाहा। ह्लं-शिखायै वषट्। ह्लैं-कवचाय हुं। ह्लौं-नेत्रत्रयाय वौषट्। ह्लः-अस्त्राय फट् ॥ ६ ॥

भूर्भुवस्सुवरोमिति दिग्बन्धः। ध्यानम् ॥ ७ ॥

ओं सर्वचैतन्यरूपां तां आद्यां विद्यां च धीमहि।
बुद्धिं या नः प्रचोदयात् ॥ ८ ॥

(கரந்யாஸ:) ஹ்ராம்—அங்குஷ்ட்டாப்ப்யாம் நம: | ஹ்ரீம்—தர்ஜனீப்ப்யாம் நம: | ஹ்ரூம்—மத்த்யமாப்ப்யாம் நம: | ஹ்ரைம்—அநாமிகாப்ப்யாம் நம: | ஹ்ரௌம்—கனிஷ்டிகாப்ப்யாம் நம: | ஹ்ர: கரதலகரப்ருஷ்டாப்ப்யாம் நம: || 5 ||

(அங்கந்யாஸ:) ஹ்ராம்—ஹ்ருதயாய நம: | ஹ்ரீம்—**சி**ரஸே ஸ்வாஹா | ஹ்ரூம்—**சி**காயை வஷட் | ஹ்ரைம்—கவசாய ஹூம் | ஹ்ரௌம்—நேத்ரத்ரயாய வௌஷட் | ஹ்ர:—அஸ்த்ராய பட் || 6 ||

பூர்ப்**பு**வஸ்ஸுவரோமிதி **தி**க்ப**ந்த**: | **த்**யானம் || 7 ||

ஓம் ஸர்வசைதன்யரூபாம் தாம் ஆத்யாம் வித்யாஞ்ச **தீ**மஹி |
புத்திம் யா ந: ப்ரசோதயாத் || 8 ||

---

7. 'பூர்ப்புவஸ்ஸுவரோம்' என்று திமைகள் அணுகா வண்ணம் திக்பந்தம்.

8. ஓம். அனைத்தறிவின் வடிவினளும் நம்முடைய புத்தி சக்தியைத் தூண்டுபவளும் எவளோ அந்த ஆதி வித்யா ஸ்வரூபிணியை தியானிப்போமாக.

या विद्येत्यभिधीयते श्रुतिपथे शक्तिः सदाऽऽद्या परा
सर्वज्ञा भवबन्धचित्तिनिपुणा सर्वाशये संस्थिता।
दुर्ज्ञेया सुदुरात्मभिश्च मुनिभि-र्ध्यानास्पदं प्रापिता
प्रत्यक्षा भवतीह सा भगवती सिद्धिप्रदा स्यात् सदा ॥ ९ ॥

श्रीमद्भागवतं पुराणममलं यद्ब्राह्मणानां धनं
धर्मो धर्मसुतेन यत्र गदितो नारायणेनामलः।
गायत्र्याश्च रहस्यमत्र च मणिद्वीपश्च संवर्णितः
श्री देव्या हिमभूभृते भगवती-गीता च गीता स्वयम्॥ १० ॥

யா வித்யேத்யபிதீயதே ச்ருதிபதே சக்தி: ஸதாऽऽத்யா பரா
ஸர்வஜ்ஞா பவபந்தசித்திநிபுணா ஸர்வாசயே ஸம்ஸ்திதா |
துர்ஜ்ஞேயா ஸுதுராத்மபிச்ச முனிபிர்—த்யாநாஸ்பதம் ப்ராபிதா
ப்ரத்யக்ஷா பவதீஹ ஸா பகவதீ ஸித்திப்ரதா ஸ்யாத் ஸதா || 9 ||

ஸ்ரீமத்பாகவதம் புராணமமலம் யத்ப்ராஹ்மணாநாம் தனம்
தர்மோ தர்மஸுதேன யத்ர கதிதோ நாராயணேநாமல: |
காயத்ர்யாச்ச ரஹஸ்யமத்ர ச மணித்வீபச்ச ஸம்வர்ணித:
ஸ்ரீதேவ்யா ஹிமபூப்ருதே பகவதீ-கீதா ச கீதா ஸ்வயம் || 10 ||

---

9. எவள் 'வித்யா' என்று வேதமார்க்கத்தில் கூறப்படுகிறாளோ, ஆத்யா சக்தி என்றும் பராசக்தி என்றும் கூறப்படுகிறாளோ, எவள் எல்லாம் அறிந்தவளோ, பிறவிப் பிணியைப் போக்குவதில் சிறந்தவளோ, எல்லாருடைய உள்ளங்களிலும், உறைபவளோ, துராத்மாக்களால் அறிய முடியாதவளோ, முனிவர்களுடைய தியானத்தில் பிரத்யக்ஷமாகக் காணப்படுபவளோ அந்த பகவதியானவள் எப்பொழுதும் சித்தியை அருள்பவளாக இருக்கட்டும்.

10. பரிசுத்தமான ஸ்ரீமத்பாகவதம் எனும் புராணம் எதுவோ அது பிராம்மணர்களின் மூலதனம்; தர்மப்ரஜாபதியின் புத்திரராக அவதரித்த நாராயணரால் அதில், நிர்மலமான தர்மம் கூறப்படுகிறது; காயத்ரியின் ரஹஸ்யமும் மணித்வீபத்தின் வர்ணனையும் அதில் அடங்கியுள்ளன; ஸ்ரீதேவியாலேயே ஹிமவானுக்கு நேரில் 'பகவதீ-கீதா' உபதேசிக்கப்படுகிறது.

सृष्टौ या सर्गरूपा जगदवनविधौ पालनी या च रौद्री
संहारे चापि यस्या जगदिदमखिलं क्रीडितं या पराख्या ।
पश्यन्ती मध्यमाऽथो तदनु भगवती वैखरी वर्णरूपा
साऽस्मद्वाचं प्रसन्ना विधि-हरि-गिरिशाराधिताऽलंकरोतु ॥११॥

(पंचपूजा)। लं—पृथिव्यात्मिकायै गन्धं समर्पयामि।
हं—आकाशात्मिकायै पुष्पाणि समर्पयामि।
यं—वाय्वात्मिकायै धूपमाघ्रापयामि।
रं—अग्न्यात्मिकायै दीपं दर्शयामि।
वं—अमृतात्मिकायै अमृतं महानैवेद्यं निवेदयामि।
सं—सर्वात्मिकायै सर्वोपचारपूजां समर्पयामि॥

ஸ்ருஷ்டௌ யா ஸர்க்கரூபா ஜகதவனவிதௌ பாலனீ யா ச ரௌத்ரீ
ஸம்ஹாரே சாபி யஸ்யா ஜகதிதமகிலம் க்ரீடிதம் யா பராக்யா—
பச்யந்தீ மத்த்யமாऽதோ ததனு பகவதீ வைகரீ வர்ணரூபா
ஸாऽஸ்மத்வாசம் ப்ரஸன்னா விதி-ஹரி-கிரிசாராதிதா ऽலங்கரோது || 11 ||

(பஞ்சபூஜா) | லம்-ப்ருதிவ்யாத்மிகாயை கந்தம் ஸமர்ப்பயாமி |
ஹம்—ஆகாசாத்மிகாயை புஷ்பாணி ஸமர்ப்பயாமி |
யம்—வாய்வாத்மிகாயை தூபமாக்ராபயாமி |
ரம்—அக்ன்யாத்மிகாயை தீபம் தர்சயாமி |
வம்—அம்ருதாத்மிகாயை அம்ருதம் மஹாநைவேத்யம் நிவேதயாமி |
ஸம்—ஸர்வாத்மிகாயை ஸர்வோபசாரபூஜாம் ஸமர்ப்பயாமி |

---

11. எவள் சிருஷ்டியில் உலக வடிவாகவும், ஸ்திதியில் பாலன வடிவாகவும், ஸம்ஹாரத்தில் ருத்ர வடிவாகவும் உள்ளவளோ, இவ்வுலகனைத்தும் எவளுடைய விளையாட்டோ, எவள் பரா, பச்யந்தீ, மத்யமா, வர்ணரூபமான வைகரீ என்ற வாக்தேவதையோ, பிரம்மா விஷ்ணு சிவன் ஆகியோரால் பூஜிக்கப் பெற்றவளோ அந்த பகவதீ நமக்குப் பிரஸன்னமாகி நமது வாக்கை அலங்கரிக்கட்டும்.

நவாஹக்கிரமம்

முதல் நாள்	—35	அத்யாயம்—	1.1	முதல்	3.3	முடிய
இரண்டாவதுநாள்	—35	,,	— 3.4	,,	4.8	,,
மூன்ருவது நாள்	—35	,,	— 4.9	,,	5.18	,,
நாலாவது நாள்	—35	,,	— 5.19	,,	6.18	,,
ஐந்தாவது நாள்	—31	,,	— 6.19	,,	7.18	.,
ஆருவது நாள்	—39	,,	— 7.19	,,	8.17	,,
ஏழாவது நாள்	—35	,,	— 8.18	,,	9.28	,,
எட்டாவது நாள்	—35	,,	— 9.29	,,	10.13	,,
ஒன்பதாவது நாள்	—38	,,	—10.14	,,	12.14	,,

முதல் ஸ்கந்தம்

श्री:

श्रीगणेशाय नमः

॥ श्रीदेवीभागवत-सारः ॥

प्रथमः स्कन्धः

॥ अवतारिका ॥ १ ॥

ओं सर्वचैतन्यरूपां तामाद्यां विद्यां च धीमहि ।
बुद्धिं या नः प्रचोदयात् ॥ १. १ ॥

ஸ்ரீ:

ஸ்ரீகணேசாய நம:

ஸ்ரீதேவீ பாகவத ஸார:

ப்ரதம: ஸ்கந்த:

1. அவதாரிகா

ஓம் ஸர்வசைதன்ய ரூபாம் தாமாத்யாம் வித்யாஞ்ச தீமஹி |
புத்திம் யா ந: ப்ரசோதயாத் ‖ 1.1 ‖

1.1. ஓம். அனைத்தறிவின் வடிவினளும் நம்முடைய புத்திசக்தியைத் தூண்டுபவளும் எவளோ அந்த ஆதிவித்யா ஸ்வரூபிணியை தியானிப்போமாக.

ஸ்ரீ:

ஸ்ரீகணேசனுக்கு நமஸ்காரம்

ஸ்ரீதேவீ பாகவத ஸாரம்

முதல் ஸ்கந்தம்

शौनक उवाच—

सूत सूत महाभाग धन्योऽसि पुरुषर्षभ।
यदधीतस्त्वया सम्यक् पुराणसंहिताः शुभाः॥ १.२॥

अष्टादशपुराणानि कृष्णेन मुनिनाऽनघ।
कथितानि सुदिव्यानि पठितानि त्वयाऽनघ॥ १.३॥

சௌனகர் கூறியது—

1.2. ஸூதரே! மகாபாக்கியசாலியான ஸூதரே! புருஷர்களிற் சிறந்தவரே! புண்ணியம் மிக்க புராணத் தொகுதிகள் செம்மையாக உம்மால் அத்தியயனம் செய்யப் பட்டிருப்பதால் நீர் புண்ணியச் செல்வம் படைத்தவர்.

1.3. பாவமற்றவரே! புண்ணிய புருஷரே! கிருஷ்ண துவைபாயன முனிவரால் கூறப்பட்டதும் தெய்வீகமானது மாகிய பதினெட்டுப் புராணங்களும் உம்மால் படிக்கப் பட்டிருக்கின்றன.

पंचलक्षणयुक्तानि सरहस्यानि मानद।
त्वया ज्ञातानि सर्वाणि व्यासात् सत्यवतीसुतात्॥ १.४॥

अस्माकं पुण्ययोगेन प्राप्तस्त्वं क्षेत्रमुत्तमम्।
दिव्यं विश्वसनं पुण्यं कलिदोषविवर्जितम्॥ १.५॥

समाजोऽयं मुनीनां हि श्रोतुकामोऽस्ति पुण्यदाम्।
पुराणसंहितां सूत ब्रूहि त्वं नः समाहितः॥ १.६॥

विना ज्ञानेन सर्वज्ञ नैव मुक्तिः कदाचन।
भ्रमतां कालचक्रेऽत्र नराणां त्रिगुणात्मके॥ १.२४॥

1.4. பெருமையளிப்பவரே! ஐந்து லக்ஷணங்களுடன் கூடிய எல்லா இரகசியங்களுடன் ஸத்தியவதீ புத்திரரான வியாஸரிடமிருந்து உம்மால் அறியப்பட்டுள்ளன.

1.5. தெய்வத்தன்மை வாய்ந்ததும், சிரத்தையை வளர்ப்பதும், புண்ணியம் மிக்கதும், கலிதோஷமில்லாததும் ஆகிய இச்சிறந்த க்ஷேத்திரத்தை எங்களுடைய புண்ணிய வசத்தால் நீங்கள் அடைந்துள்ளீர்கள்.

1.6. முனிவர்களுடைய இக்கூட்டம் கேள்வியில் ஆசை கொண்டுள்ளது. ஸூதரே! புண்ணியத்தையளிக்கும் புராண ஸம்ஹிதையை நீர் எங்களுக்கு அமைதியாயிருந்து கூறியருளுதல் வேண்டும்.

1.24. எல்லாமறிந்தவரே! முக்குணவடிவான கால சக்கரத்தில் இங்கு சுழலும் மனிதர்க்கு ஞானமில்லாமல் ஒருபொழுதும் முக்தி இல்லை.

1.4. ஐந்து லக்ஷணங்கள்: ஸர்க்கம், ப்ரதிஸர்க்கம், வம்சம், மன்வந்தரம், வம்சானுசரிதம்.

1.24. ஞானமில்லாமல் முக்தியில்லை: பதினெட்டு வகைப்பட்ட கர்மம் விரிவுபட்டதெனினும் அது தாழ்ந்ததே. யாகரூபமான இப்படகுகள் திடமற்றவை. எவர்கள் இதையே பெரும் பேருகக் கண்டு களிக்கிருர்களோ அந்த மூடர்கள் பிறப்பிறப்பை மீண்டும் அடையவே அடைகிருர்கள்.

—மு.உப.2.7.

अतः सर्वरसोपेतं पुण्यं भागवतं वद ।
पावनं मुक्तिदं गुह्यं मुमुक्षूणां सदा प्रियम् ॥ १. २५ ॥

श्रीसूत उवाच—

धन्योऽहमतिभाग्योऽहं पावितोऽहं महात्मभिः ।
यत्पृष्टं च महत्पुण्यं पुराणं वेदविश्रुतम् ॥ २. १ ॥
तदहं संप्रवक्ष्यामि सर्वश्रुत्यर्थ-संमतम् ।
रहस्यं सर्वशास्त्राणा-मागमानामनुत्तमम् ॥ २. २ ॥
नत्वा तत्पदपंकजं सुललितं मुक्तिप्रदं योगिनां
ब्रह्माद्यैरपि सेवितं स्तुतिपरै-र्ध्येयं मुनीन्द्रैः सदा ।
वक्ष्याम्यद्य सविस्तरं बहुरसं श्रीमत्पुराणोत्तमं
भक्त्या सर्वरसालयं भगवतीनाम्ना प्रसिद्धं द्विजाः
॥ २. ३ ॥

1.25. ஆகையால் சுவையனைத்துடன் கூடியதாயும், புண்ணியத்தை வளர்ப்பதாயும், புனிதமானதாயும், முக்தி யளிப்பதாயும், இரகசியமானதாயும், முக்தியில் நாட்ட முள்ளோர்க்கும் பிரியமானதாயுமுள்ள பாகவதத்தைக் கூறியருள்வீராக.

ஸ்ரீஸூதர் கூறியது—

2.1. வேதத்தில் கூறப்பட்டதாயும் புண்ணியம் மிகுந்த தாயுமுள்ள புராணத்தைக் கூறும்படி மகான்களாகிய நீங்கள் என்னைக் கேட்டமையால் நான் செல்வம்படைத்தவனாயும், பாக்கியம் மிகுந்தவனாயும் புனிதத்தன்மை எய்தியவனாயும் ஆகிவிட்டேன்.

2.2. ஆகமங்களில் ஒப்புயர்வற்றதாயும், சாஸ்திரங் களனைத்தின் ரகசியமாயும், வேதத்தின் கருத்திற் கொத்த தாயும் உள்ள அதை நான் எடுத்துக் கூறுகிறேன்.

2.3. அந்தணர்களே! அழகியதாயும் யோகிகளுக்கு முக்தியளிப்பதாயும் பிரம்மா முதலிய தேவர்களாலும் சேவிக்கப்பட்டதாயும், துதிப்பதில் ஆர்வமுள்ள முனிசிரேஷ்

या विद्येत्यभिधीयते श्रुतिपथे शक्तिः सदाऽऽद्या परा
सर्वज्ञा भवबन्धछित्तिनिपुणा सर्वाशये संस्थिता ।
दुर्ज्ञेया सुदुरात्मभिश्च मुनिभिर्ध्यानास्पदं प्रापिता
प्रत्यक्षा भवतीह सा भगवती सिद्धिप्रदा स्यात्सदा
॥ २.४ ॥

सृष्ट्वाखिलं जगदिदं सदसत्स्वरूपं
शक्त्यात्मया त्रिगुणया परिपाति विश्वम् ।
संहृत्य कल्पसमये रमते तथैका
तां सर्वविश्वजननीं मनसा स्मरामि ॥ २.५ ॥

டர்களால் எப்பொழுதும் தியானிக்கப்பட்டதாயும் உள்ள தேவியின் பாதகமலங்களை வணங்கி ருசிமிகுந்ததும், எல்லா ரஸங்களுக்கும் இருப்பிடமானதும் பகவதியின் பெயரால் பிரசித்தமானதும் ஆகிய சிறந்த புராணத்தை இப்பொழுது பக்தியுடன் விரிவாய்ச் சொல்லப்போகிறேன்.

2.4. வேதமார்க்கத்தில் எவள் வித்தை எனவும் ஆத்யா சக்தி எனவும் பரதேவதை எனவும் எல்லாம் அறிந்தவள் எனவும், ஸம்ஸாரத் தளையைச் சேதிப்பதில் திறமையுள்ளவளெனவும் அனைத்துயிர்களிலும் உறைபவளெனவும் கூறப்படுகிருளோ துராத்மாக்களால் அறிதற்கியலாதவளோ முனிவர்களால் தியானமாகிய இடத்தில் சேவிக்கப்பட்டுப் பிரத்தியக்ஷமாகிருளோ அந்த பகவதி இங்கு சித்தியை யளிப்பவளாக எப்பொழுதும் இருக்கட்டும்.

2.5. உயிருள்ளதும் உயிரில்லாததுமான இவ்வுலகனைத்தையும் முக்குண வடிவான தனது சக்தியால் சிருஷ்டித்துக் காத்துக் கல்பமுடிவில் அனைத்தையும் அழித்துத் தாளெருத்தியாயிருந்து விளையாடும் அந்த அனைத்துலக மாதாவை மனதால் தியானிக்கின்றேன்.

2.3. ஆகமம்:—தந்திர சாஸ்திரம், சிருஷ்டி, பிரளயம் தேவதார்ச்சனம், புரச்சரணம், ஷட்கர்மஸாதனம், தியான யோகம், ஆக ஏழு விஷயங்களைக் கூறுவது.

2.4. ஆத்யா:—ஒ. ஆதிசக்தி-ரமேயாத்மா பரமா பாவனுக்ருதி: | —ல.ஸ.

ब्रह्मा सृजत्यखिलमेतदिति प्रसिद्धं
पौराणिकैश्च कथितं खलु वेदविद्भिः ।
विष्णोस्तु नाभिकमले किल तस्य जन्म
तैरुक्तमेव सृजते न हि स स्वतन्त्रः ॥ २. ६ ॥

विष्णुस्तु शेषशयने स्वपितीति काले
यन्नाभिपद्म-मुकुले खलु तस्य जन्म ।
आधारतां किल गतोऽत्र सहस्रमौलिः
संबोध्यतां स भगवान् हि कथं मुरारिः ॥ २. ७ ॥

एकार्णवस्य सलिलं रसरूपमेव
पात्रं विना नहि रसस्थिति-रस्ति कच्चित् ।
या सर्वभूतविषये किल शक्तिरूपा
तां सर्वभूतजननीं शरणं गतोऽस्मि ॥ २. ८ ॥

2.6. பிரம்மா இவ்வனைத்தையும் சிருஷ்டிக்கிறார் என்று பௌராணிகர்களாலும் வேதத்தைக் கற்றுணர்ந்தவர்களாலும் கூறப்பட்டிருப்பது பிரசித்தம்; அவருடைய பிறவியோ விஷ்ணுவின் நாபிகமலத்தில் என்பதும் அவர்களால் கூறப்பட்டுளது; அந்த பிரம்மா சிருஷ்டிக்கிறார் எனினும் சுதந்திரமுடையவரல்லர்.

2.7. எவருடைய நாபி கமலத்தில் பிரம்மா பிறந்தாரோ அந்த விஷ்ணுவும் ஆதிசேஷ சயனத்தில் கல்பகால முடிவில் உறங்குகிறார்; ஆயிரம் பண முடிகளையுடைய ஆதிசேஷன் அவருக்கு ஆதாரமாவதால் அந்த முராரி எங்ஙனம் பகவான் என்று அழைக்கப்படலாம்?

2.8. (விஷ்ணுவின் சயனமிருக்கும்) ஒரே ரஸ ரூபமான அந்த ஸமுத்திர ஜலத்திற்கும் ஆதாரமாக ஒரு பாத்திரம்

2.7. பகவான்:—ஒ. ஐச்வர்யஸ்ய ஸமக்ரஸ்ய தர்மஸ்ய யசஸ: ச்ரிய: | வைராக்யஸ்ய ச மோக்ஷஸ்ய ஷண்ணாம் பக இதீரிணா || விஷ்ணுபுராணம் 6.5.74.

योगनिद्रा-मीलिताक्षं विष्णुं दृष्ट्वांबुजे स्थितः ।
अजस्तुष्टाव यां देवीं तामहं शरणं व्रजे ॥ २. ९ ॥
तां ध्यात्वा सगुणां मायां मुक्तिदां निर्गुणां तथा ।
वक्ष्ये पुराण-मखिलं श्रृण्वन्तु मुनयस्त्विह ॥ २. १० ॥
पुराण-मुत्तमं पुण्यं श्रीमद्भागवताभिधम् ।
अष्टादशसहस्राणि श्लोकास्तत्र सुसंस्कृताः ॥ २. ११ ॥
स्कन्धा द्वादश चैवाऽत्र कृष्णेन विहिताः शुभाः ।
त्रिशतं पूर्णमध्याया अष्टादशयुताः स्मृताः ॥ २. १२ ॥

இல்லாமலில்லை. எவள் எல்லாப் பொருள்களிடத்தும் சக்தி வடிவில் (நீரில் சுவைபோல்) உறைகிருளோ அந்த அனைத்துலக மாதாவைச் சரணமடைகின்றேன். (அவள்தான் அனைத்திற்கும் ஆதாரம்).

2.9. யோகநித்திரையில் விஷ்ணுவானவர் கண் மூடியிருக்கக்கண்டு அவர் நாபிகமலத்திலிருந்த பிரம்மா எந்த தேவியைத் துதித்தாரோ அவளை நான் சரணமடைகின்றேன்.

2.10. ஸகுணமான மாயாவடிவினளாயும் முக்தியளிக்கும் நிர்குண வடிவினளாயும் உள்ள அந்தப் பராசக்தியை தியானித்துப் புராணமனைத்தையும் இங்கு கூறுகிறேன். முனிவர்கள் கேட்கட்டும்.

2.11. ஸ்ரீமத்பாகவதம் எனப் பெயர் பெற்ற இச்சிறந்த புராணம் புண்ணிய வடிவானது. அதில் நன்கு சோதிக்கப்பட்ட பதினெண்ணுயிரம் சுலோகங்கள் இருக்கின்றன.

2.12. ஸ்ரீகிருஷ்ணதுவைபாயனரால் அதில் மங்கள வடிவான பன்னிரண்டு ஸ்கந்தங்களும் முன்னூற்றுப்பதினெட்டு அத்தியாயங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

2.9. பிரம்மாவின் ஸ்துதி:—விஸ்ருஷ்டௌ ஸ்ருஷ்டி ரூபா த்வம் ஸ்திதிரூபா ச பாலனே | ததா ஸம்ஹ்ருதி ரூபாந்தே ஜகதோऽஸ்ய ஜகன்மயே | மஹாவித்யா மஹா மாயா மஹாமேதா மஹாஸ்ம்ருதி:. ||

| தேவீமாஹாத்மியம் 1.76

2.12. விஷ்ணுபாகவதத்தில் அத்தியாயங்கள் 335; சுலோகங்கள் 18,000.

सर्गश्च प्रतिसर्गश्च वंशो मन्वन्तराणि च।
वंशानुचरितं चैव पुराणं पंचलक्षणम् ॥ २. १८ ॥
निर्गुणा या सदा नित्या व्यापिकाऽविकृता शिवा।
योगगम्याऽखिलाधारा तुरीया या च संस्थिता ॥ २. १९ ॥
तस्यास्तु सात्त्विकी शक्ती राजसी तामसी तथा।
सरस्वती महालक्ष्मीः महाकालीति ताः स्त्रियः ॥ २ २० ॥
तासां तिसॄणां शक्तीनां देहांगीकारलक्षणः।
सृष्टयर्थं च समाख्यातः सर्गशास्त्रविशारदैः ॥ २. २१ ॥

2.18. ஸர்க்கம், ப்ரதிஸர்க்கம், வம்சம், மன்வந்தரங்கள், வம்சானுசரிதம் எனப் புராணம் ஐந்து லக்ஷணங்களையுடையது.

2.19. முக்குணங்களுக்கப்பாற்பட்டவளாயும், அழிவற்றவளாயும், எப்பொழுதும் எங்கும் நிறைந்தவளாயும், மாறுபாடற்றவளாயும், மங்கள வடிவினளாயும், யோகத்தால் அடையக்கூடியவளாயும், அனைத்திற்குமாதாரமாயும், (விழிப்பு கனவு உறக்கமாகிய) மூன்று நிலைகளைக்கடந்தவளாயும் எவள் நிலைத்துள்ளவளோ;

2.20. அவளுடைய பெண்ணுருக்கொண்ட ஸாத்விக சக்தி மஹாலக்ஷ்மி, ராஜஸசக்தி ஸரஸ்வதி, தாமஸசக்தி மஹாகாளி எனப்படுவர்.

2.21. அம்மூன்று சக்திகளும் உடலுருக்கொண்டது சிருஷ்டிகாரியத்திற்காக என்று சிருஷ்டிசாஸ்திரத்தை அறிந்தவர்களால் கூறப்பட்டுள்ளது (இது ஸர்க்கம்).

2.18. விஷ்ணுபாகவதத்தில், ஸர்க்கம், விஸர்க்கம், ஸ்தானம், போஷணம், ஊதிகள், மன்வந்தரம், ஈசானுகதா, நிரோதம், முக்தி, ஆசிரயம் எனப் பத்துலக்ஷணம் கூறப்படுகிறது.

2.20. ஸாத்விகசக்தி மஹாலஷ்மி, ராஜஸசக்தி மஹாஸரஸ்வதி, தாமஸசக்தி மஹாகாளி.

2.21. ஆதிசக்தியிடமிருந்து மூன்று சக்திகள் தோன்றியது தேவீ மாஹாத்மியம் பிராதானிக ரஹஸ்யத்தில் விளக்கப்பட்டுள்ளது. *'நிராகாராச ஸாகாரா ஸைவ நாரு-பிதானப்ருத்'*.

हरिद्रुहिणरुद्राणां समुत्पत्तिस्ततः स्मृता ।
पालनोत्पत्तिनाशार्थं प्रतिसर्गस्स्मृतो हि सः ॥ २. २२ ॥

सोमसूर्योद्भवानां च राज्ञां वंशप्रकीर्तनम् ।
हिरण्यकशिप्वादीनां वंशास्ते परिकीर्तिताः ॥ २. २३ ॥

स्वायम्भुव-मुखानां च मनूनां परिवर्णनम् ।
कालसंख्या तथा तेषां तत्तन्मन्वन्तराणि च ॥ २. २४ ॥

तेषां वंशानुकथनं वंशानुचरितं स्मृतम् ।
पंचलक्षणयुक्तानि भवन्ति मुनिसत्तमाः ॥ २. २५ ॥

सपादलक्षं च तथा भारतं मुनिना कृतम् ।
इतिहास इति प्रोक्तं पंचमं वेदसम्मितम् ॥ २. २६ ॥

2.22. காப்பதற்கும் தோற்றுவிப்பதற்கும் அழிப்பதற்கும் அவர்களிடமிருந்து விஷ்ணு பிரம்மா ருத்திரன் ஆகியோரின் உற்பத்தி கூறப்படுகிறது. அது பிரதிஸர்க்கம் எனப்படுவது.

2.23. சந்திரன் சூரியன் ஆகியோரிடமிருந்து தோன்றிய அரசர்களின் வரலாற்றைக் கூறுவது வம்சம். இங்கு ஹிரணியகசிபு முதலியவர்களின் வம்சங்களும் கூறப்படுகின்றன.

2.24. ஸ்வாயம்புவர் முதலிய மனுக்களின் வர்ணனை மன்வந்தரம். அவர்களுடைய காலக்கணக்கும் அந்தந்த மன்வந்தர விவரங்களும் இதில் கூறப்படும்.

2.25. அவர்களின் வம்ச வரலாற்றைக் கூறுவது வம்சானுசரிதம் எனப்படும். முனிசிரேஷ்டர்களே! இவ்வாறுக (புராணங்கள்) ஐந்து லக்ஷணங்களை உடையவையாகின்றன.

2.26. வேதவியாஸமுனிவரால் ஒன்றேகால் லக்ஷம் சுலோகங்களைக் கொண்டதும் ஐந்தாவது வேதம் போன்றதும் இதிஹாஸம் எனப்படுவதுமான பாரதமும் இயற்றப்பட்டது.

शौनक उवाच—

सकलगुणगणाना-मेकपात्रं पवित्र—
मखिलभुवनमातु-र्नाटचवद्यद्विचित्रम् ।
निखिलमलगणानां नाशकृत्कामकन्दं
प्रकटय भगवत्या नामयुक्तं पुराणम् ।। २. ४० ।।

सूत उवाच—

व्यासेन कृत्वाऽतिशुभं पुराणं
शुकाय पुत्राय महात्मने यत् ।
वैराग्ययुक्ताय हि पाठितं वै
विज्ञाय चैवाऽरणिसम्भवाय ।। ३. ३६ ।।
श्रुतं मया तत्र तथा गृहीतं
यथार्थवद् व्यासमुखान्मुनीन्द्राः ।

சௌனகர் கூறியது—

2.40. எந்த பாகவதபுராணம் எல்லா குணச்சிறப்புகளும் ஒருங்கே யமையப் பெற்றதோ, பரிசுத்தமானதோ, எல்லா உலகங்களுக்கும் மாதாவான தேவியின் நாடகம் போல் விசித்திரமானதோ, பாவக் கூட்டமனைத்தையும், நாசம் செய்வதோ, ஆசைகளின் பூர்த்திக்கு வேர் போன்றதோ, பகவதியின் பெயருடன் கூடியதோ அதைப் பிரகாசப் படுத்துங்கள்.

ஸூதர் கூறியது—

3.36. மங்களம் மிக்க எந்தப் புராணம் வியாஸரால் செய்யப்பட்டு மஹாத்மாவும் வைராக்கிய சீலரும், விசேஷ ஞானம் படைத்தவரும் அரணியில் தோன்றிய தமது புத்திருமான சுகருக்கு உபதேசம் செய்யப்பட்டதோ;

पुराणगुह्यं सकलं समेतं
गुरोः प्रसादात्करुणानिधेश्च ॥ ३. ३७ ॥

सुतेन पृष्टः सकलं जगाद
द्वैपायनस्तत्र पुराणगुह्यम् ।
अयोनिजेनाद्भुतबुद्धिना वै
श्रुतं मया तत्र महाप्रभावम् ॥ ३. ३८ ॥

श्रीमद्भागवतांघ्रिप-फलास्वादाहरः सत्तमाः
संसारार्णव-दुर्विगाह्य-सलिलं सन्तर्तुकामः शुकः ।
नानाख्यान-रसालयं श्रुतिपुटैः प्रेम्णाऽशृणोदद्भुतम्
तच्छ्रुत्वा न विमुच्यते कलिभयादेवंविधः
कः क्षितौ ॥ ३. ३९ ॥

3.37. முனிசிரேஷ்டர்களே! அந்தப் புராணரகசியம் அனைத்தும் அடங்க உள்ளது உள்ளபடி கருணைநிதியும் குருவுமான வியாஸரருளால் அவர் வாயிலிருந்தே எங்கு அது உபதேசிக்கப்பட்டதோ அங்கேயே என்னால் கேட்டு கிரகிக்கப்பட்டது.

3.38. கர்ப்பவாஸமின்றிப் பிறந்தவரும் அற்புதமான புத்தியுள்ளவரும் ஆகிய சுகராலும், ஸூதனாகிய என்னாலும் வினவப்பட்டு துவைபாயனர் அங்கு புராண ரகசியமனைத்தையும் கூறவே என்னால் அந்த மஹாப்பிரபாவம் கேட்கப்பட்டது.

3.39. ஸாதுக்களே! ஆழங்காணமுடியாத பிறவிக் கடலைக்கடக்க விரும்பிய சுகர் பலவிதமான கதைகளின் சுவைக்கிருப்பிடமான ஸ்ரீமத்பாகவதமென்னும் கற்பக விருக்ஷத்தினுடைய பழரஸத்தை மிகுந்த பிரியத்துடன் காதுகளின் வழி உட்கொண்டார். இவ்வுலகில் அற்புதமான அதைச் செவிமடுத்து கலியின் பயத்தினின்று விடுபடாதவர் எவரேனுமுளரோ?

पापीयानपि वेदधर्मरहितः स्वाचारहीनाशयो
व्याजेनापि शृणोति यः परमिदं श्रीमत्पुराणोत्तमम् ।
भुक्त्वा भोगकलापमत्र विपुलं देहावसानेऽचलं
योगिप्राप्य-मवाप्नुयाद् भगवतीनामांकितं सुन्दरम्
॥ ३. ४० ॥

या निर्गुणा हरिहरादिभिरप्यलभ्या
विद्या सतां प्रियतमाऽथ समाधिगम्या ।
सा तस्य चित्तकुहरे प्रकरोति भावं
यः संशृणोति सततं तु सतीपुराणम् ॥ ३. ४१ ॥

इति श्रीदेवीभागवते महापुराणे
प्रथमस्कन्धे तृतीयोऽध्यायः ॥
॥ अवतारिका समाप्ता ॥

3.40. ஒருவன் பாவியாயினும், வேததர்மங்களின்று விலகியவனுயினும் குலாசாரப்படி நடவாதவனுயினும், ஏதோ நிமித்தமாத்திரம் இந்த உத்தமமானதும் சிறப்பு மிக்கதுமான புராணத்தைக் கேட்டாலும், இம்மையில் பெறுதற்கரிய போகங்களையெல்லாமனுபவித்து, உடல் விழுந்தபின் அழிவில்லாததும் யோகிகளாலடையத்தக்கதும் பகவதியின் பெயரால் விளங்குவதுமான அழகிய பதத்தையடைவான்.

3.41. எந்தப்பரதேவதை முக்குணங்களைக் கடந்தவளாயும் ஹரிஹரர்களாலும் அடைதற்கரியவளாயும் வித்யாஸ்வரூபிணியாயும், ஸாதுக்களுக்குப் பிரியம் மிகுந்தவளாயும் ஸமாதியால் அடையப்படுபவளாயும் உள்ளவளோ அந்த பகவதியின் புராணமாகிய இதை எவன் எப்பொழுதும் சிரத்தையுடன் கேட்கிருனே அவனுடைய இருதயகுகையில் பாவனுருபமாய்ப் பிரகாசிக்கின்ருள்.

இங்ஙனம் ஸ்ரீதேவீபாகவத மஹாபுராணத்தில்
முதல் ஸ்கந்தத்தில் மூன்ருவது அத்தியாயம் முற்றும்.
அவதாரிகை முற்றும்.

॥ हयग्रीव-कथा ॥ २ ॥

सूत उवाच—

पुरा सरस्वतीतीरे व्यासः सत्यवतीसुतः ।
आश्रमे कलविंकौ तु दृष्ट्वा विस्मयमागतः ॥ ४. ४॥

जातमात्रं शिशुं नीडे मुक्तमण्डान् मनोहरम् ।
ताम्रास्यं शुभसर्वांगं पिच्छांकुरविवर्जितम् ॥ ४. ५ ॥

तौ तु भक्ष्यार्थ-मत्यन्तं रतौ श्रमपरायणौ ।
शिशोश्चंचुपुटे भक्ष्यं क्षिपन्तौ च पुनः पुनः ॥ ४. ६ ॥

अंगेनांगानि बालस्य घर्षयन्तौ मुदान्वितौ ।
चुंबन्तौ च मुखं प्रेम्णा कलविंकौ शिशोः शुभम् ॥ ४. ७ ॥

2. ஹயக்ரீவர் கதை

ஸூதர் கூறியது—

4.4. முன்ஒருகாலத்தில் ஸத்தியவதீ புத்திரரான வியாஸர் ஸரஸ்வதி நதிக்கரையில் தமது ஆசிரமத்திலிருக்கையில் ஆணும் பெண்ணுமாயிருந்த இரு குருவிகளைக், கண்ணுற்று (அவற்றின் செயலால்) வியப்படைந்தார்.

4.5. அப்போதுதான் முட்டையிலிருந்து வெளி வந்ததும் மனதிற்கினியதும், தாமிரம் போல் சிவந்த வாயுடையதும், எல்லா உறுப்புகளிலும் அழகியதும், இறகு முளையாததுமான குஞ்சைக் கூண்டில் கண்டு;

4.6. அவ்விரண்டு குருவிகளும் அதற்கு உணவூட்ட ஆசைமேலிட்டு அதற்காகப்பாடுபட்டுக் கொணர்ந்தஉணவை அந்தக் குஞ்சின் திறந்த வாயில் சிறிதுசிறிதாக மேன்மேலும் போடுவதையும்;

4.7. குஞ்சினுடைய உறுப்புக்களுடன் தம் உறுப்புக்களை மகிழ்ச்சியுடன் அணைத்துக் கொண்டு அழகிய முகத்தில் அன்பினால் முத்தமிடுவதையும்;

वीक्ष्य प्रेमाद्भुतं तत्र बाले चटकयोस्तदा ।
व्यासश्चिन्तातुरः कामं मनसा समचिन्तयत् ॥ ४. ८ ॥

तिरश्चामपि यत्प्रेम पुत्रे समभिलक्ष्यते ।
किं चित्रं यन्मनुष्याणां सेवाफलमभीप्सिताम् ॥ ४. ९ ॥

मन्वादिभिश्च मुनिभि-र्धर्मशास्त्रेषु भाषितम् ।
पुत्रवान् स्वर्गमाप्नोति अपुत्रस्तु कथं च न ॥ ४. १६ ॥

दृश्यतेऽत्र समक्षं तन्नानुमानेन साध्यते ।
पुंत्रवान्मुच्यते पापादाप्तवाक्यं च शाश्वतम् ॥ ४. १७ ॥

एवं बहुविधां चिन्तां कृत्वा सत्यवतीसुतः ।
निश्वस्य बहुधा चोष्णं विमनाः संबभूव ह ॥ ४. २१ ॥

4.8. அக்குருவிகளுக்கு அவ்வாருகத் தமது குஞ்சினிடம் இருந்த அற்புதமான பிரேமையையும் கண்ணுற்ற வியாஸர் சிந்தையிலாழ்ந்தவராய்ப் பின்வருமாறு தம் மனதில் யோசிக்கலானுர்.

4.9. 'பறவைகளுக்குக்கூடத் தமது குஞ்சுகளிடம் எவ்வளவு பிரேமை காணப்படுகிறது! அப்படியிருக்கத் தமது மக்களிடம் சேவையின் பயனை விரும்பும் மனிதர் களுக்குப் புத்திரர்களிடம் ஆசையிருப்பது ஒரதிசயமா?

4.16. 'மனு முதலிய முனிவர்களால் புத்திரனையுடையவனே சுவர்க்கத்தையடைவான், புத்திரனில்லாதவனுக்கு ஒருபொழுதும் சுவர்க்கமில்லை என்று தர்மசாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளது.

4.17. 'அது அனுமானத்தால் ஸாதிக்கப்பட்டதன்று; இங்கேயே நேரில் காணப்படுகிறது. புத்திரனையுடையவன் பாவத்திலிருந்து விடுபடுகிருன் என்று சாஸ்திரம் கூறுவது என்றுமுள்ள உண்மை.'

4.21. இங்ஙனம் பலவாருய்ச் சிந்தனை செய்து ஸத்தியவதி புத்திரரான வியாஸர் வெம்பிப் பெருமூச் செறிந்து மனவமைதியிழந்தவரானுர்.

विचार्य मनसाऽत्यर्थं कृत्वा मनसि निश्चयम् ।
जगाम च तपस्तप्तुं मेरुपर्वतसन्निधौ ॥ ४. २२ ॥

मनसा चिन्तयामास कं देवं समुपास्महे ।
वरप्रदाननिपुणं वांछितार्थप्रदं तथा ॥ ४. २३ ॥

एवं चिन्तयतस्तस्य नारदो मुनिसत्तमः ।
यदृच्छया समायातो वीणापाणिः समाहितः ॥ ४. २५ ॥

तं दृष्ट्वा परमप्रीतो व्यासः सत्यवतीसुतः ।
कृत्वार्घ्य-मासनं दत्त्वा पप्रच्छकुशलं मुनिम् ॥ ४. २६ ॥

श्रुत्वाऽथ कुशलप्रश्नं पप्रच्छ मुनिसत्तमः ।
चिन्तातुरोऽसि कस्मात्त्वं द्वैपायन वदस्व मे ॥ ४. २७ ॥

4.22. மனதில் வெகுவாகச் சிந்தித்துப் பின்னர் ஒரு நிச்சயத்தைச் செய்து கொண்டு மேருமலையின் ஸந்நிதியில் தவம்புரியச் சென்றார்.

4.23. வரந்தருவதில் நிபுணரும் வேண்டிய விருப்பங்களையளிப்பவருமான எந்த தேவனை ஆராதிக்கலாமென, மனதில் யோசித்தார்.

4.25. இங்ஙனம் யோசித்துக்கொண்டிருந்த அவர்முன் முனிசிரேஷ்டரான நாரதர் வீணையைக் கையிலேந்தியவராய் பக்தியிலாழ்ந்தவராய் தெய்வவசமாக அங்குவந்து சேர்ந்தார்.

4.26. அவரைக்கண்டு ஸத்தியவதி புத்திரரான வியாஸர் பரமப்ரீதியுடன் அர்க்கியமும் ஆஸனமுமளித்து அம்முனிவருடைய நலனைப்பற்றி வினவினார்.

4.27. நலனை விசாரித்து அவருடைய வார்த்தைகளைக் கேட்ட முனிசிரேஷ்டர் 'நீர் ஏதோ கவலைப்படுவதாய்க் காண்கிறதே, காரணமென்ன?' என்று வினவினார்.

व्यास उवाच—

अपुत्रस्य गतिर्नास्ति न सुखं मानसे ततः ।
तदर्थं दुःखितश्चाहं चिन्तयामि पुनः पुनः ॥ ४. २८ ॥

सर्वज्ञोऽसि महर्षे त्वं कथयाऽऽशु कृपानिधे ।
कं देवं शरणं यामि यो मे पुत्रं प्रदास्यति ॥ ४. ३० ॥

नारद उवाच—

पाराशर्य! महाभाग! यत्त्वं पृच्छसि मामिह ।
तमेवार्थं पुरा पृष्टः पित्रा मे मधुसूदनः ॥ ४. ३२ ॥

ब्रह्मोवाच—

देवदेव जगन्नाथ! भूतभव्यभवत्प्रभो ।
तपश्चरसि कस्मात्त्वं किं ध्यायसि जनार्दन ॥ ४. ३६ ॥

வியாஸர் கூறியது—

4.28. புத்திரனில்லாதவனுக்கு நற்கதியில்லையாதலால் என் மனதில் சுகமில்லை. அதனுல் நான் துன்பத்திற் குள்ளாகி மீண்டும் மீண்டும் அதைப்பற்றியே சிந்திக்கிறேன்.

4.30. மகரிஷியே! கருணைக்கடலே! நீர் எல்லாமறிந் தவர். எந்த தெய்வத்தை நான் சரணடையட்டும்? எந்த தெய்வம் எனக்குப் புத்திரனையளிக்குமென்று விரைவில் கூறியருளும்.

நாரதர் கூறியது—

4.32. மகா பாக்கியசாலியான பராசர புத்திரரே! எந்தக் கேள்வியை என்னிடம் இங்கு நீர் கேட்கிறீரோ அதே பொருளைப்பற்றி (அதாவது சரணடைவதற்குரிய தெய்வம் என்பதைப்பற்றி) முன்பு என்னுடைய பிதாவாகிய பிரம்மா வால் மதுஸூதனர் கேட்கப்பட்டார்.

பிரம்மா கூறியது—

4.36. தேவதேவராகிய ஜகந்நாதா! சென்றதும் வருவதும் நிகழ்வதுமான முக்காலத்திற்கும் பிரபுவே! நீர் எதற்காகத் தவம் புரிகின்றீர்? ஜனர்த்தன! நீர் எதை தியானம் செய்கின்றீர்? (எந்த தெய்வத்தைப் பூஜிக்கின்றீர்?)

विस्मयोऽयं ममात्यर्थं त्वं सर्वजगतां प्रभुः ॥
ध्यानयुक्तोऽसि देवेश किं च चित्रमतः परम् ॥ ४. ३७ ॥

हरिरुवाच—

स्रष्टा त्वं पालकश्चाहं हरः संहारकारकः ।
कृताः शक्त्येति संतर्कः क्रियते वेदपारगैः ॥ ४. ४६ ॥

तया विरहितस्त्वं न तत्कर्मकरणे प्रभुः ।
नाऽहं पालयितुं शक्तः संहर्तुं नाऽपि शंकरः ॥ ४. ४८ ॥

तदधीना वयं सर्वे वर्तामः सततं विभो ।
प्रत्यक्षे च परोक्षे च दृष्टान्तं शृणु सुव्रत ॥ ४. ४९ ॥

प्रत्यक्षं तव धर्मज्ञ तस्मिन्नेकार्णवे पुरा ।
पंचवर्षसहस्राणि बाहुयुद्धं मया कृतम् ॥ ४. ५३ ॥

4.37. தேவர்கள் தலைவரே! உலகனைத்திற்கும் பிரபுவாய் விளங்கும் நீர் தியானம் பயில்வது எனக்கு மிகுந்த வியப்பைத் தருகிறது. இதைவிட என்ன அதிசயமுளது?

ஹரி கூறியது—

4.46. சிருஷ்டிகர்த்தா நீர், பரிபாலிப்பவன் நான், ஸம்ஹார கர்த்தா ஹரன் என்றிப்படி செய்யப்பட்டிருப்பது பராசக்தியால் என்று வேதத்தைக் கரைகண்டவர்களால் நிர்ணயிக்கப்பட்டுளது.

4.48. அச்சக்தியில்லாவிட்டால் நீர் உமது தொழிலைச் செய்ய வல்லவராக மாட்டீர், நான் பரிபாலிக்க இயலாது, சங்கரர் அழிக்க இயலாது.

4.49. எக்காலத்தும் அச்சக்திக்கு வசப்பட்டவர்களாகவே நாம் அனைவரும் இயங்குகிறோம். நல்ல விரதம் பூண்டவரே! இதற்குப் பிரத்தியக்ஷமாகவும் பரோக்ஷமாகவும் திருஷ்டாந்தம் கூறுகிறேன், கேளும்.

4.53. தர்மமுணர்ந்தவரே! இது உமக்குப் பிரத்தியக்ஷ அனுபவம். ஆதியில் ஒரே ஜலமாயிருந்த அக்காலத்தில் ஐயாயிரம் ஆண்டுகள் என்னால் (மதுகைடபர்களுடன்) மல் யுத்தம் செய்யப்பட்ட நிகழ்ச்சி.

तौ कर्णमलजौ दुष्टौ दानवौ मदगर्वितौ ।
देव-देव्याः प्रसादेन निहतौ मधुकैटभौ ॥ ४.५४ ॥

तदा त्वया न किं ज्ञातं कारणं तु परात्परम् ।
शक्तिरूपं महाभाग किं पृच्छसि पुनः पुनः ॥ ४. ५५ ॥

पुरा पुरस्तेऽज शिरो मदीयं
गतं धनुर्ज्यास्खलनात्तव चाऽपि ।
त्वया तदा वाजिशिरो गृहीत्वा
संयोजितं शिल्पिवरेण भूयः ॥ ४. ५९ ॥

हयाननोऽहं परिकीर्तितश्च
प्रत्यक्षमेतत्तव लोककर्तः ।
विडम्बनेयं किल लोकमध्ये
कथं भवेदात्मपरो यदि स्यात् ॥ ४. ६० ॥

4.54. துஷ்டர்களும், என் காதின் அழுக்கிலிருந்து தோன்றியவர்களும், கொழுத்து கர்வம் பிடித்தவர்களும், மதுகைடபர்கள் என்று பெயர் பெற்றவர்களுமான தானவர் களிருவரும் தேவ தேவியின் அனுக்கிரகத்தால் கொல்லப் பட்டனர்.

4.55. மஹாபாக்கியசாலியே! அப்பொழுது உயர்ந்த திற்கெல்லாம் உயர்ந்ததாய் விளங்கும் சக்திருபமே அனைத் திற்கும் காரணமென்பது உம்மால் அறியப்படவில்லையா? அதைப்பற்றி மீண்டும் மீண்டும் கேட்பது எதற்கு?

4.59. பிரம்மதேவரே! முன்னொரு சமயம் உன் முன் னிலையில் என்னுடைய தலையானது வில்லிற்பூட்டியிருந்த நாண் அறுந்து போனதால் எங்கோ கொண்டு போகப் பட்டது. அப்பொழுது சில்ப நிபுணரைக் கொண்டு உம்மால் குதிரையின் தலை ஒன்று எடுத்து எனக்கு மீண்டும் பொருத்தப்பட்டது.

4.60. உலகைச் சிருஷ்டிப்பவரே! அதனால் நான் (ஹயானன்) குதிரைமுகத்தோன் எனக் கூறப்படுவதும் உமக் குப் பிரத்தியக்ஷம். நான் சுதந்திரமுடையவனாயிருப்பின் உலகத்தினிடை இந்த உருமாற்றம் எங்ஙனம் நிகழும்?

तस्मान्नाहं स्वतन्त्रोऽस्मि शक्त्यधीनोऽस्मि सर्वदा ।
तामेव शक्तिं सततं ध्यायामि च निरन्तरम् ॥
नाऽतः परतरं किंचिज्जानामि कमलोद्भव ॥ ४. ६१ ॥

नारद उवाच—

इत्युक्तं विष्णुना तेन पद्मयोनेस्तु सन्निधौ ।
तेन चाप्यह-मुक्तोऽस्मि तथैव मुनिपुंगव ॥ ४. ६२ ॥
तस्मात्त्वमपि कल्याण-पुरुषार्थाप्तिहेतवे ॥
असंशयं हृदम्भोजे भज देवीपदांबुजम् ॥
सर्वं दास्यति सा देवी यद्यदिष्टं भवेत्तव ॥ ४. ६३ ॥

सूत उवाच—

नारदेनैव-मुक्तस्तु व्यासः सत्यवतीसुतः ।
देवीपादाब्जनिष्णातस्तपसे प्रययौ गिरौ ॥ ४. ६४ ॥

4.61. கமலத்தில் உதித்தவரே! ஆதலால் நான் சுதந்திரமுடையவனல்லன். எப்பொழுதும் பராசக்திக்கு அடங்கி நடப்பவன். அந்தச் சக்தியையே எப்பொழுதும் இடைவிடாது தியானம் செய்கிறேன். பராசக்திக்கும் மேலான எதையும் நான் அறியேன்.

நாரதர் கூறியது—

4.62. முனிசிரேஷ்டரே! விஷ்ணுவால் இவ்வாறு உபதேசிக்கப்பட்ட பிரம்மாவின் ஸந்நிதியில் அவரால் நானும் அவ்வாறே உபதேசிக்கப்பட்டேன்.

4.63. ஆகையால் நீரும் மங்களமான புருஷார்த்த சித்தியின் பொருட்டு இருதய கமலத்தில் தேவியை வழிபடுவீராக. அந்த தேவீ உமக்கு எது எது இஷ்டமோ அதையெல்லாம் அளிப்பாள். சந்தேகமில்லை.

ஸூதர் கூறியது—

4.64. நாரதரால் இங்ஙனம் உபதேசிக்கப்பெற்ற ஸத்தியவதீ புத்திரரான வியாஸர் தேவியின் பாதகமலங்களில் நிலைத்த மனமுடையவராய்த் தவம்புரிவதற்காக மலையை நோக்கிச் சென்றார்.

ऋषय ऊचुः—

सूताऽस्माकं मनः कामं मग्नं संशयसागरे।
यथोक्तं महदाश्चर्यं जगद्विस्मयकारकम्॥ ५. १॥

यन्मूर्धा माधवस्यापि गतो देहात्पुनः परम्।
हयग्रीवस्ततो जातः सर्वकर्ता जनार्दनः॥ ५. २॥

सूत उवाच—

शृण्वन्तु मुनयः सर्वे सावधानाः समन्ततः।
चरितं देवदेवस्य विष्णोः परमतेजसः॥ ५. ५॥

कदाचिद्दारुणं युद्धं कृत्वा देवः सनातनः।
दशवर्षसहस्राणि परिश्रान्तो जनार्दनः॥ ५. ६॥

(சௌனகாதி) ரிஷிகள் கூறியது—

5.1. ஸூதரே! தேவரீர் கூறிவந்ததில் மிக ஆச்சரியமானதும் உலகம் நகையாடத்தக்கதுமான ஒரு விஷயத்தைப்பற்றி எங்கள் மனது சந்தேகமாகிற கடலில் மூழ்கியது போன்றிருக்கிறது.

5.2. அது எதுவெனின் ஸர்வகர்த்தாவும் ஜனார்த்தனருமான விஷ்ணுவின் தலையும் அவருடைய உடலினின்று போய்ப் பிறகு அவர் குதிரைத் தலை உடையவரானார் என்பது.

ஸூதர் கூறியது—

5.5. முனிவர்களே! தேவதேவரும் பரமதேஜஸ்வியுமான விஷ்ணுவின் சரித்திரத்தை முழுவதும் கூறுகிறேன். எல்லோரும் கவனமாய்க் கேளுங்கள்.

5.6. ஒருகாலத்தில் ஆதிதேவரான ஜனார்த்தனர் பதினாயிரம் வருஷங்கள் (அசுரர்களுடன்) கடும் போர்புரிந்து சோர்வடைந்தவராய்;

समे देशे शुभे स्थाने कृत्वा पद्मासनं विभुः ।
अवलम्ब्य धनुः सज्यं कण्ठदेशे धरास्थितम् ॥ ५. ७ ॥

दत्त्वा भारं धनुष्कोटयां निद्रामाप रमापतिः ।
श्रान्तत्वाद्दैवयोगाच्च जातस्तत्रातिनिद्रितः ॥ ५. ८ ॥

स्थितेषु सर्वदेवेषु निद्रासुप्ते जगत्पतौ ।
चिन्तामापुः सुराः सर्वे ब्रह्मरुद्रपुरोगमाः ॥ ५. १३ ॥

तानुवाच ततः शक्रः किं कर्तव्यं सुरोत्तमाः ।
निद्राभंगः कथं कार्यश्चिन्तयन्तु सुरोत्तमाः ॥ ५. १४ ॥

तमुवाच तदा शंभु-निद्राभंगेऽस्ति दूषणम् ।
कार्यं चैव प्रकर्तव्यं यज्ञस्य सुरसत्तमाः ॥ ५. १५ ॥

5.7. சமமாயும் மங்களமாயுமுள்ள ஒரு இடத்தில் பத்மாஸனத்திலமர்ந்து நாண் பூட்டிய வில்லைப் பூமியிலூன்றிக் கழுத்தை அதன்மேல் வைத்துக்கொண்டு;

5.8. அவ்வில்லின் நுனியில் பாரத்தை யிறுத்தி ரமாபதியாகிய அவர் உறங்கிவிட்டார். களைப்பினுலும் தெய்வச் செயலாலும் அவ்வுறக்கம் பேருறக்கமாகிவிட்டது.

5.13-14. அங்ஙனம் ஜகத்பதியான விஷ்ணு தூக்கத்தில் ஆழ்ந்திருப்பதைக்கண்டு ப்ரம்மா ருத்திரன் முதலான எல்லா தேவர்களும் கவலை கொண்டு நிற்கையில் இந்திரன் அவர்களை நோக்கி 'தேவசிரேஷ்டர்களே! இப்பொழுது என்ன செய்ய வேண்டும், தூக்கத்தை எப்படி கலைப்பது என்ற காரியத்தைப்பற்றி யோசிக்க வேண்டும்' என்று கூறினுர்.

5.15. சம்பு அப்பொழுது அவரிடம் கூறியதாவது: 'தூக்கத்தைக் கலைப்பது தவறெனக் கூறப்படுகிறது. எனினும் தேவசிரேஷ்டர்களே! இப்பொழுது யக்ஞம் நடக்க வேண்டியிருப்பதாலும்—அதற்கு விஷ்ணு உடனிருக்க வேண்டியதாலும்—அதற்கு வேண்டியதைச் செய்தாக வேண்டும்.

उत्पादिता तदा वम्री ब्रह्मणा परमेष्ठिना ।
तया भक्षयितुं तत्र धनुषोऽग्रं धरास्थितम् ॥ ५. १६ ॥

भक्षितेऽग्रे तदाऽनिम्नं गमिष्यति शरासनम् ।
तदा निद्राविमुक्तोऽसौ देवदेवो भविष्यति ॥
देवकार्यं तदा सर्वं भविष्यति न संशयः ॥ ५. १७ ॥

स वम्रीं सन्दिदेशाथ देवदेवः सनातनः ।
इत्युक्ता ब्रह्मणा वम्री धनुषोग्रं त्वरान्विता ।
चखाद संस्थितं भूमौ विमुक्ता ज्या तदाऽभवत् ॥ ५. २५ ॥

शब्दः समभवद्घोरस्तेन त्रस्ताः सुरास्तदा ।
दिशो घोरतराश्चासन् सूर्योप्यस्तंगतोऽभवत् ।
चिन्तामापुः सुराः सर्वे किं भविष्यति दुर्दिने ॥ ५. २९ ॥

5.16. 'பரமேஷ்டியாகிய பிரம்மாவால் செள் என்ற ஒரு பூச்சி உண்டாக்கப்பட்டிருக்கிறதல்லவா? பூமியிலூன்றியிருக்கும் வில்லின் முனையை அதனுல் தின்றுவிட முடியும்.

5.17. 'நுனி தின்று விடப்பட்டால் வில்லானது நிமிர்ந்துவிடும். அப்போழுது இந்த தேவதேவர் நித்திரை கலைந்தவராய் விடுவார். அதன்மேல் தேவகாரிய மெல்லாம் நடைபெறும்; சந்தேகமில்லை.'

5.25. ஆதிதேவ தேவராகிய பிரம்மா செள்ளிடம் அங்ஙனமே கட்டளையிட்டார். பிரம்மாவால் கட்டளையிடப் பட்ட செள்ளும் பூமியிலிருந்த வில்லின் நுனியை விரைவில் தின்று விட்டது. வில் நாணிற்றுப் போயிற்று.

5.29. பயங்கரமான பேரொலி அதனுலுண்டாயிற்று. தேவர்கள் அப்பொழுது நடுங்கினர்கள். திசைகளெல்லாம் பயத்தைக் கொடுப்பவையாயின; சூரியன் அஸ்தமித்தாற் போலாயிற்று; இத்தியநாளில் என்ன நிகழப்போகிறதோ தேவர்களெல்லாம் கவலை கொண்டனர்.

एवं चिन्तयतां तेषां मूर्धा विष्णोः सकुण्डलः ।
गतः समुकुटः क्वापि देवदेवस्य तापसाः ॥ ५. ३० ॥

दृष्ट्वा कबन्धं विष्णोस्ते विस्मिताः सुरसत्तमाः ।
चिन्तासागरमग्नाश्च रुरुदुः शोककर्शिताः ॥ ५. ३२ ॥

ब्रह्मोवाच—

चिन्तयन्तु महामायां विद्यां देवीं सनातनीम् ।
सा विधास्यति नः कार्यं निर्गुणा प्रकृतिः परा ॥ ५. ४८ ॥

सूत उवाच—

इत्युक्त्वा वै सुरान् वेधा निगमानादिदेश ह ।
देहयुक्तान् स्थितानग्रे सुरकार्यार्थ-सिद्धये ॥ ५. ५० ॥

5.30. முனிவர்களே! அவர்கள் இவ்வாறு கவலைப் பட்டுக் கொண்டிருக்கையில் தேவதேவரான விஷ்ணுவினுடைய தலை கிரீடத்துடனும் குண்டலங்களுடனும் அறுபட்டுப் போனவிடந் தெரியாமற் போய்விட்டது.

5.32. சிரமில்லாத விஷ்ணுவின் உடலைப்பார்த்து தேவர்கள் வியப்புற்றவர்களாய்த் துன்பக்கடலில் மூழ்கியவர்களாய் சோகத்தால் பீடிக்கப்பட்டுப்பேரொலியிட்டழுதனர்.

பிரம்மா கூறியது—

5.48. மஹாமாயை என்றும் வித்யா என்றும் சொல்லப்படும் ஆதிதேவியை தியானம் செய்யுங்கள். பிரகிருதியாயும் குணங்களுக்கப்பாற்பட்டவளாயுமுள்ள அந்தப் பராசக்தி நமது காரியத்தைக் கூட்டி வைப்பாள்.

ஸூதர் கூறியது—

5.50. இவ்வாறு பிரம்மா தேவர்களிடம் கூறிவிட்டு, தேவர்களுடைய காரிய சித்திக்காக தேகந்தரித்து எதிரில் நின்ற வேதங்களை நோக்கிப் பின்வருமாறு கட்டளையிட்டார்.

ब्रह्मोवाच—

स्तुवन्तु परमां देवीं ब्रह्मविद्यां सनातनीम् ।
गूढांगीं च महामायां सर्वकार्यार्थसाधनीम् ॥ ५. ५१ ॥

वेदा ऊचुः—

नमो देवि महामाये विश्वोत्पत्तिकरे शिवे ।
निर्गुणे सर्वभूतेशि मातः शंकरकामदे ॥ ५. ५३ ॥

त्वां संस्तुमोऽम्ब भुवनत्रयसंविधान-
दक्षां दयारसयुतां जननीं जनानाम् ।
विद्यां शिवां सकललोकहितां वरेण्यां
वाग्बीजवास-निपुणां भवनाशकर्त्रीम् ॥ ५ ५६ ॥

பிரம்மா கூறியது—

5.51. எல்லாக் காரியங்களையும் கூட்டிவைப்பவளும், அங்கங்களை மறைத்துக் கொண்டிருப்பவளும் மஹா மாயை என்றும் பிரம்மவித்தை என்றும் பெயர் படைத்தவளும் ஆதிதேவதையுமான பராசக்தியைத் துதியுங்கள்.

வேதங்கள் கூறியன—

5.53. தேவியே! மஹாமாயையே! உலகை உற்பத்தி செய்பவளே! மங்களஸ்வரூபியே! குணங்களைக்கடந்தவளே! உயிர்களனைத்தையுமாள்பவளே! சங்கரருக்குக் காமத்தைத் தோற்றுவிப்பவளே! தாயே!

5.56. அம்பிகையே! மூவுலகத்தையும் படைத்துக் காக்குந் திறமை வாய்ந்தவளும், கருணாரஸம் நிறைந்தவளும் ஜனங்களின் அன்னையும், வித்யாஸ்வரூபிணியும், மங்கள வடிவினளும், உலகனைத்திற்கும் நன்மை புரிபவளும், சிறந்தவளும், வாக்பீஜ-அக்ஷரத்தில் வசிப்பதில் பிரியமுள்ளவளும், பிறவிப்பிணியைப் போக்குபவளுமான உன்னைப் போற்றுகின்றோம்.

उपेक्षा किं चेयं तव सुरसमूहेऽतिविषमा
हरे-र्मूर्ध्नो नाशो मत-मिह महाश्चर्यजनकम् ।
महद्दुःखं मातस्त्वमसि जननच्छेदकुशला
न जानीमो मौलिर्विघटन-विलम्बः कथमभूत् ॥ ५. ६३ ॥

एते सुरास्त्वां सततं नमन्ति
कार्येषु मुख्याः प्रथितप्रभावाः ।
शोकार्णवात्तारय देवि देवा-
नुत्थाप्य देवं सकलाधिनाथम् ॥ ५. ६७ ॥

सूत उवाच—

तानुवाच तदा वाणी चाकाशस्थाऽशरीरिणी ।
देवान् प्रति सुखैः शब्दै-र्जनानन्दकरी शुभा ॥ ५. ७० ॥

5.63. அம்மா ! மிகவும் சிக்கலான இந்த சமயத்தில் நீ தேவர் சமூகத்தைக் கவனியாமல் புறக்கணிப்பது ஏன்? மிகவும் ஆச்சரியகரமாக ஹரியின் தலை நஷ்டமானது உனக்குச் சம்மதமா? இது பெருந் துக்கம். நீயோ பிறவித் துன்பத்தைப் போக்குவதில் வல்லவள். விஷ்ணுவின் தலையை மீண்டும் சேர்த்து வைப்பதில் தாமதம் ஏன் நிகழ்கிற தென்று நாங்கள் அறியோம்.

5.67. தேவியே ! காரியங்களில் முக்கியஸ்தானம் வகிப்பவர்களாயும் பிரசித்தமான மகிமையுடையவர்களாயும் உள்ள இந்த தேவர்கள் உன்னை எப்பொழுதும் துதிக்கிறார்கள். அனைவருக்கும் நாதனாகிய விஷ்ணுவை எழுப்பிவிட்டு தேவர்களைச் சோகக் கடலிலிருந்து கரையேற்றுவாயாக.

ஸூதர் கூறியது—

5.70. அப்பொழுது அந்த தேவர்களை நோக்கி இனியதும் சுபமானதும் மக்களின் மனதை மகிழ்விப்பதுமான அசரீரிவாக்கு ஆகாயத்தினின்று பின்வருமாறு கூறியது.

मा कुरुध्वं सुराश्चिन्तां स्वस्थास्तिष्ठन्तु चाऽमराः ।
स्तुताऽहं निगमैः कामं सन्तुष्टास्मि न संशयः ॥ ५. ७१ ॥

पुरा दैत्यो महावाहु-र्हयग्रीवोऽतिविश्रुतः ।
तपश्चक्रे सरस्वत्यास्तीरे परमदारुणम् ॥ ५. ८६ ॥

तदाऽहं तामसं रूपं कृत्वा तत्र समागता ।
दर्शने पुरतस्तस्य ध्यातं तत्तेन यादृशम् ॥ ५. ८९ ॥

हयग्रीव उवाच—

यथा मे मरणं मातर्न भवेत्तत्तथा कुरु ।
भवेयममरो योगी तथाऽजेयः सुरासुरैः ॥ ५. ९७ ॥

5.71. 'தேவர்களே! கவலைப்படவேண்டாம். அமரர்கள் அமைதியாயிருக்கட்டும். வேதங்களால் நான் நன்கு துதிக்கப்பட்டேன். அதனால் ஸந்தோஷமடைந்தேன். ஸந்தேகமில்லை.

5.86. முன்னொருகாலத்தில் பெருந்தோள் படைத்தவனும் மிகப்பிரசித்தி பெற்றவனுமான அசுரனொருவன், ஹயக்ரீவனென்று இருந்தான். ஸரஸ்வதி நதிக்கரையில் அவன் கடுந்தவம்புரிந்தான்.

5.89. அவன் எந்த ரூபத்தில் தியானித்தானோ அது போன்ற தாமஸ உருவங்கொண்டு நான் அவன் முன் சென்று தர்சனமளித்தேன்.

ஹயக்கிரீவாசுரன் கூறியது—

5.97. தாயே! எனக்கு எப்படி மரணம் ஏற்படாமலிருக்குமோ அப்படிச் செய்தருள வேண்டும். நான் அமரனாகவும், யோகியாகவும், தேவர்களாலும் அசுரர்களாலும் ஜயிக்கப்படாதவனாகவும் ஆகவேண்டும்.

देव्युवाच—

जातस्य हि ध्रुवो मृत्यु-र्ध्रुवं जन्म मृतस्य च ।

मर्यादा चेदृशी लोके भवेच्च कथमन्यथा ॥ ५. ९८ ॥

एवं त्वं निश्चयं कृत्वा मरणे राक्षसोत्तम ।

वरं वरय चेष्टं ते विचार्य मनसा किल ॥ ५. ९९ ॥

हयग्रीव उवाच—

हयग्रीवाच्च मे मृत्यु-र्नान्यस्माज्जगदम्बिके ।

इति मे वांछितं कामं पूरयस्व मनोगतम् ॥ ५. १०० ॥

देव्युवाच—

स पीडयति दुष्टात्मा मुनीन् वेदांश्च सर्वशः ।

न कोऽपि विद्यते तस्य हन्ताऽद्य भुवनत्रये ॥ ५. १०३ ॥

தேவி கூறியது—

5.98. பிறந்தவனுக்குச் சாவு நிச்சயம்; இறந்தவனுக்குப் பிறப்பு நிச்சயம். இப்படிப்பட்ட நியதியொன்று உலகில் உண்டு. அதை மாற்றுவதெங்ஙனம்?

5.99. ராக்ஷஸசிரேஷ்டனே! மரண விஷயத்தில் இந்த நிச்சயத்தை மனதில் வைத்துக் கொண்டு நன்ருக ஆலோசித்து உனக்கு இஷ்டமான வரத்தைக் கேட்பாயாக.

ஹயக்ரீவாசுரன் கூறியது—

5.100. ஜகதம்பிகையே! குதிரைமுகம் படைத்த ஒருவனல் எனக்கு மரணம் ஏற்படுவதானல் ஏற்படட்டும். வேறு எவராலும் மரணம் வரக்கூடாது. இதுதான் என் விருப்பம். மனத்துதித்த இந்த ஆசையைப் பூர்த்தி செய்தருள்வாயாக.

தேவி (தேவர்களை நோக்கி) கூறியது—

5.103. அந்த துஷ்டாத்மா முனிவர்களையும் வேதங்களையும் எல்லாத் திக்குகளிலும் துன்புறுத்தலானன். அவனைக் கொல்லக் கூடியவன் இப்பொழுது மூவுலகிலும் இல்லை.

3

तस्माच्छीर्षं हयस्यास्य समुद्धृत्य मनोहरम् ।
देहेऽत्र विशिरो विष्णोस्त्वष्टा संयोजयिष्यति ।। ५. १०४ ।।
हयग्रीवोऽथ भगवान् हनिष्यति तमासुरम् ।
पापिष्ठं दानवं क्रूरं देवानां हितकाम्यया ।। ५. १०५ ।।

सूत उवाच —
एवं सुरांस्तदाऽऽभाष्य शर्वाणी विरराम ह ।
देवास्तदाऽतिसन्तुष्टास्तमूचु-र्देवशिल्पिनम् ।। ५. १०६ ।।
कुरु कार्यं सुराणां वै विष्णोः शीर्षाभियोजनम् ।
दानवप्रवरं दैत्यं हयग्रीवो हनिष्यति ।। ५. १०७ ।।
इति श्रुत्वा वचस्तेषां त्वष्टा चातित्वरान्वितः ।
वाजिशीर्षं चकर्त्ताशु खड्गेन सुरसन्निधौ ।। ५. १०८ ।।

5.104. ஆகையால் ஒரு குதிரையின் அழகிய தலையை எடுத்து இங்கு தலையில்லாமலிருக்கும் விஷ்ணுவின் தேகத்தில் த்வஷ்டா பொருத்தட்டும்.

5.105. குதிரைத்தலையை உடைய பகவான் அதன் பிறகு அந்தப் பாவியும் கொடியவனும் தானவனுமான அசுரனை தேவர்களின் நன்மையைக்கருதிக் கொல்லுவார்.

ஸூதர் கூறியது—

5.106. இவ்வாறு தேவர்களை நோக்கிக் கூறிவிட்டு சர்வாணியாகிய தேவி பேச்சை நிறுத்தினாள். தேவர்கள் மகிழ்ச்சி மிகுந்தவர்களாய் தேவசில்பியாகிய த்வஷ்டாவிடம் பின்வருமாறு கூறினார்கள்.

5.107. 'விஷ்ணுவின் தேகத்தில் தலையைப்பொருத்துவதாகிய தேவ காரியத்தைச் செய்து முடியும். தானவர்களின் தலைவனான அசுரனை ஹயக்ரீவரான விஷ்ணு ஸம்ஹரிப்பார்.'

5.108. அவர்களுடைய இவ்வார்த்தையைக் கேட்டு த்வஷ்டாவும் வெகுவிரைவில் தேவர்கள் முன்னிலையிலேயே ஒரு குதிரையின் சிரத்தை வாளாலறுத்தார்.

विष्णोः शरीरे तेनाऽऽशु योजितं वाजिमस्तकम् ।
हयग्रीवो हरिर्जातो महामाया-प्रसादतः ॥ ५. १०९ ॥

कियता तेन कालेन दानवो मदर्दपितः ।
निहतस्तरसा संख्ये देवानां रिपुरोजसा ॥ ५. ११० ॥

य इदं शुभमाख्यानं शृण्वन्ति भुवि मानवाः ।
सर्वदुःखविनिर्मुक्तास्ते भवन्ति न संशयः ॥ ५. १११ ॥

महामाया-चरित्रं च पवित्रं पापनाशनम् ।
पठतां शृण्वतां चैव सर्वसंपत्तिकारकम् ॥ ५. ११२ ॥

इति श्रीदेवीभागवते प्रथमस्कन्धे पंचमोऽध्यायः ॥

॥ हयग्रीवकथा समाप्ता ॥

5.109. விஷ்ணுவின் உடலில் குதிரைத்தலை த்வஷ்டாவால் சீக்கிரம் பொருத்தப்பட்டது. மஹாமாயையின் அருளால் ஹரியும் ஹயக்ரீவரானார்.

5.110. கொழுப்பால் கர்வங் கொண்டிருந்தவனும் தேவசத்துருவுமான தானவன் சிறிது காலத்திற்குப்பின், யுத்தத்தில் விரைவில் வீரியம் மிக்க விஷ்ணுவால் கொல்லப் பட்டான்.

5.111. எந்த மனிதர்கள் சுபகரமான இந்த உபாக்கியானத்தைக் கேட்கிறார்களோ அவர்கள் எல்லா துக்கங் களினின்றும் விடுபடுவர்; இதில் சந்தேகமில்லை.

5.112. மஹாமாயையின் சரித்திரம் பரிசுத்தமானது, பாவத்தைப் போக்குவது; படிப்பவர்க்கும் கேட்பவர்க்கும் ஸகல ஸம்பத்தையும் தருவது.

இங்ஙனம் ஸ்ரீதேவீபாகவதத்தில்
முதல் ஸ்கந்தத்தில் ஐந்தாவது அத்தியாயம் முற்றும்.
ஹயக்ரீவ கதை முற்றும்.

॥ मधुकैटभवधः ॥ ३ ॥

ऋषय ऊचुः —

सौम्य यच्च त्वया प्रोक्तं शौरेर्युद्धं महार्णवे ।
मधुकैटभयोः सार्धं पंचवर्षसहस्रकम् ॥ ६. १ ॥

कथं तावसुरौ जातौ कथं च हरिणा हतौ ।
तदाचक्ष्व महाप्राज्ञ चरितं परमाद्भुतम् ॥ ६. २ ॥

सूत उवाच —

पुरा चैकार्णवे जाते विलीने भुवनत्रये ।
शेषपर्यंकसुप्ते च देवदेवे जनार्दने ॥ ६. २० ॥

3. மதுகைடபவதம்

ரிஷிகள் கூறியது—

6.1. மனதிற்கினியவரே! பிரளய சமுத்திரத்தில் விஷ்ணுவுக்கும் மதுகைடபர்களுக்குமிடை ஐயாயிரம் வருஷம் நிகழ்ந்த யுத்தத்தைப்பற்றி உம்மால் கூறப்பட்டதல்லவா?

6.2. அவ்வசுரர்கள் எப்படித் தோன்றினுர்கள்? ஹரியால் எப்படிக் கொல்லப்பட்டார்கள்? புத்தியிற் சிறந்தவரே! மிக அற்புதமான அந்தச் சரித்திரத்தை எங்களுக்குக் கூறியருளும்.

ஸூதர் கூறியது—

6.20. ஆதிகாலத்தில் எங்கும் ஒரே சமுத்திரமாகி முவ்வுலகும் முழுகிப்போன பொழுது தேவ தேவரான ஜனர்த்தனர் ஆதிசேஷப்படுக்கையில் உறங்கிக் கொண்டிருக்கையில்;

विष्णुकर्णमलोद्भूतौ दानवौ मधुकैटभौ।
महाबलौ च तौ दैत्यौ विवृद्धौ सागरे जले ॥ ६. २१ ॥

चिन्ता-मवापतु-श्चित्ते भ्रातराविव संस्थितौ।
क्व तिष्ठति जलं चेदं सुखरूपं सुविस्तरम् ॥ ६. २५ ॥

आवां वा कथमुत्पन्नौ केन वोत्पादितावुभौ।
पितरौ क्वेति विज्ञानं नास्ति कामं तथावयोः ॥ ६. २६ ॥

एवं विबुध्यमानौ तौ चिन्ताविष्टौ यदाऽसुरौ।
तदाऽऽकाशे श्रुतं ताभ्यां वाग्बीजं सुमनोहरम् ॥ ६. ३० ॥

गृहीतं च ततस्ताभ्यां तस्याभ्यासो दृढः कृतः।
तदा सौदामनी दृष्टा ताभ्यां खे चोत्थिता शुभा ॥ ६. ३१ ॥

6.21. அவருடைய காதுமலத்திலிருந்து மது கைடபர் என்ற இரண்டு அசுரர்கள் தோன்றி மகாபலம் பொருந்திய வர்களாய்ச் சமுத்திர ஜலத்திலேயே வளர்ந்தனர்.

6.25-26. சகோதரர்களைப்போலிருந்த அவ்விருவரும் தங்கள் மனதில் 'இன்பமயமாயும் மிக விஸ்தாரமாயும் உள்ள இந்த நீர்ப்பரப்பு எதன் மேல் நிற்கிறது? நாம்தான் எப்படி உற்பத்தியானோம்? யாரால் நாமிருவரும் உண்டாக்கப்பட்டோம்? தாய் தந்தையர் எங்கே? இதையெல்லாம் பற்றிய அறிவு ஏதும் நமக்குக் காணவில்லையே' என்றிங்ஙனம் யோசிக்கலாயினர்.

6.30. இப்படி அவ்வசுரர்கள் ஆராய்ந்து கொண்டு சிந்தையிலாழ்ந்திருக்கையில் மனதிற்கு மகிழ்ச்சியூட்டும் வாக்பீஜமானது ஆகாயத்திலிருந்து அவர்களுக்குக் கேட்டது.

6.31. அதை திடமாய் மனதிற்கொண்டு திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கையில் ஆகாயத்திடை எழுந்த அழகான மின்னல் கொடிபோன்ற ஒரு ஒளியும் அவர்களால் காணப்பட்டது.

ताभ्यां विचारितं तत्र मन्त्रोऽयं नात्र संशयः।
तथा ध्यानमिदं दृष्टं गगने सगुणं किल॥ ६. ३२॥

निराहारौ जितात्मानौ तन्मनस्कौ समाहितौ।
बभूवतु-र्विचिन्त्यैवं जपध्यानपरायणौ॥ ६. ३३॥

एवं वर्षसहस्रं तु ताभ्यां तप्तं महत्तपः।
प्रसन्ना परमा शक्ति-र्जाता सा परमा तयोः॥ ६. ३४॥

खिन्नौ तौ दानवौ दृष्ट्वा तपसे कृतनिश्चयौ।
तयोरनुग्रहार्थाय वागुवाचाऽशरीरिणी॥ ६. ३५॥

वरं वां वांछितं दैत्यौ ब्रूतं परमसम्मतम्।
ददामि परितुष्टास्मि युवयोस्तपसा किल॥ ६. ३६॥

6.32. அதைப்பற்றி நன்கு ஆலோசித்து 'இது ஒரு மந்திரமாக இருக்க வேண்டும். அதில் சந்தேகமில்லை. அவ்வாறே ஆகாயத்தில் கண்ட ஒளியும் ஸகுணமான தியானத்திற் குரியதாயிருக்க வேண்டும்' (என்று நிச்சயம் கொண்டனர்).

6.33. இங்ஙனம் சிந்தித்து உணவையொழித்துப் புலன்களையடக்கி மனதை ஒரு முகப்படுத்தி ஜபத்தியான பராயணர்களாயினர்.

6.34. இவ்வாறு ஆயிரம் வருஷம் அவர்களால் பெரிய தவம் செய்யப்பட்டது. ஒப்புயர்வற்ற பராசக்தி அவர்களுக்குப் பிரஸன்னமாயினள்.

6.35. தவத்தில் நிச்சய புத்தியுடையவர்களாய் வருந்திக் கொண்டிருந்த அவ்வசுரர்களிருவரையும் பார்த்து, அவர்களுக்கு அனுக்கிரகம் செய்யும் பொருட்டு அசரீரிவாக்கால் (தேவி) பின்வருமாறு கூறினள்.

6.36. 'தைத்தியர்களே! உங்களுடைய தவத்தால், நான் ஸந்தோஷமடைந்துள்ளேன். உங்களுக்கு மிகவும் விருப்பமான வரம் எதுவோ அதைக் கேளுங்கள், கொடுக்கிறேன்.'

सूत उवाच—

इति श्रुत्वा तु तां वाणीं दानवावूचतुस्तदा ।

स्वेच्छया मरणं देवि वरं नो देहि सुव्रते॥ ६. ३७ ॥

वागुवाच—

वांछितं मरणं दैत्यौ भवेद्वां मत्प्रसादतः ।

अजेयौ देवदैत्यैश्च भ्रातरौ नात्र संशयः ॥ ६. ३८ ॥

सूत उवाच—

इति दत्तवरौ देव्या दानवौ मददर्पितौ ।

चक्रतुः सागरे क्रीडां यादोगणसमन्वितौ ॥ ६. ३९ ॥

कालेन कियता विप्रा दानवाभ्यां यदृच्छया ।

दृष्टः प्रजापतिर्ब्रह्मा पद्मासनगतः प्रभुः ॥ ६. ४० ॥

ஸூதர் கூறியது—

6.37. அவ்வார்த்தையைக் கேட்ட தானவரிருவரும் 'தேவி, வரமளிக்குந் திறத்தினளே! நாங்கள் எங்கள் இஷ்டப்படி மரணமடைவதற்கு வரந்தந்தருள்வாய்' என்றனர்.

அசரீரி வாக்கு கூறியது—

6.38. என்னுடைய அனுக்கிரகத்தால் நீங்கள் விரும்பிய வண்ணமே உங்களுக்கு மரணம் ஏற்படும். சகோதரர்களாகிய நீங்களிருவரும் தேவர்களாலும் தைத்தியர்களாலும் ஜயிக்கப்படமாட்டீர்கள். இதில் சந்தேகமில்லை.

ஸூதர் கூறியது—

6.39. இங்ஙனம் தேவியால் வரமளிக்கப் பெற்ற அசுரர்களிருவரும் கொழுப்பால் கர்வித்து நீர்வாழும் பிராணிகளுடன் கூடி விளையாடிக் கொண்டிருந்தனர்.

6.40. பிராம்மணர்களே! சிறிது காலத்திற்குப்பின் அவ்வசுரர்களால் எதிர்பாராத வகையில் பத்மாஸனத்தில் வீற்றிருப்பவரும் பிரபுவும் பிரஜாபதியுமாகிய பிரம்மா பார்க்கப்பட்டார்.

दृष्ट्वा तु मुदितावास्तां युद्धकामौ महाबलौ ।
तमूचतुस्तदा तत्र युद्धं नौ देहि सुव्रत ।। ६. ४१ ।।
नो चेत्पद्मं परित्यज्य यथेष्टं गच्छ मा चिरम् ।
यदि त्वं निर्बलश्चासि क्व योग्यं शुभमासनम् ।। ६. ४२ ।।
वीरभोग्यमिदं स्थानं कातरोऽसि त्यजाशु वै ।
तयोरिति वचः श्रुत्वा चिन्तामाप प्रजापतिः ।। ६. ४३ ।।
विष्णुं प्रबोधयाम्यद्य शेषसुप्तं जनार्दनम् ।
चतुर्भुजं महावीर्यं दुःखहा स भविष्यति ।। ७. ५ ।।

ब्रह्मोवाच—

दीननाथ हरे विष्णो वामनोत्तिष्ठ माधव ।
भक्तार्तिहृद्धृषीकेश सर्वावास जगत्पते ।। ७. ८ ।।

6.41–42. அவரைக்கண்டு களிப்புற்றவர்களாய் மஹாபலசாலிகளான அவர்கள் யுத்தத்தில் விருப்பங் கொண்டு அவரை நோக்கி 'விரதம் பூண்டவரே! எங்களுடன் யுத்தம் செய்ய வாருங்கள். இல்லேயேல் பத்மாஸனத்தை விட்டு விலகி விரைவில் எங்கேனும் செல்லக் கடவீர். உமக்கு பலமில்லேயாளுல் இந்த மங்களமான ஆஸனத்திற்கு என்ன யோக்கியதை ?

6.43. 'இந்த ஸ்தானம் வீரர்களுடைய அனுபவித்தற் குரியது. நீர் பயந்தவராயிருப்பதால் சீக்கிரம் இதை விட்டகலும்.' அவர்களுடைய இவ்வார்த்தையைக் கேட்டு பிரம்மா கவலேக்குள்ளானுர்.

7.5. 'ஆதிசேஷன் மேலுறங்கும் ஜனுர்த்தனராகிய, விஷ்ணுவை எழுப்புகிறேன். நான்கு புஜங்களுடையவரும் மஹாவீரியம் படைத்தவருமான அவர் துக்கத்தைப்போக்கு பவராவார்' என்று பிரம்மா எண்ணினுர்.

பிரம்மா கூறியது—

7.8. 'தீனநாதா! ஹரே! விஷ்ணே! வாமனு! மாதவா! எழுந்திரும். பக்தர்களின் துன்பத்தைத் துடைப் பவரே! ருஷீகேசா! ஜகந்நாதா! எங்கும் உள்ளவரே!

इमौ दैत्यौ महाराज हन्तुकामौ मदोद्धतौ ।
न जानास्यखिलाधार कथं मां संकटे गतम् ॥ ७. १२ ॥

उपेक्षसेऽतिदुःखार्तं यदि मां शरणं गतम् ।
पालकत्वं महाविष्णो निराधारं भवेत्ततः ॥ ७. १३ ॥

सूत उवाच—

एवं स्तुतोऽपि भगवान्न बुबोध यदा हरिः ।
योगनिद्रासमाक्रान्तस्तदा ब्रह्मा ह्यचिन्तयत् ॥ ७. १४ ॥

हरिरप्यवशः शेते यथाऽन्यः प्राकृतो जनः ।
ययाभिभूतः का वार्ता किलान्येषां महात्मनाम् ॥ ७. २४ ॥

स्तौम्यद्य योगनिद्रां वै यया मुक्तो जनार्दनः ।
घटयिष्यति युद्धं च वासुदेवः सनातनः ॥ ७. २५ ॥

7.12. 'மகாராஜனே! இவ்விரண்டு அசுரர்களும் மதம் பிடித்தவர்களாய் என்னைக் கொல்ல விரும்புகிறார்கள். அனைத்திற்குமாதாரமானவரே! நான் கஷ்டத்திற்குள்ளாயிருப்பதை நீர் ஏன் அறியவில்லையோ?

7.13. 'மகாவிஷ்ணுவே, மிகுந்த துக்கத்தினால் கஷ்டப்படுபவனும் உம்மைச் சரணடைந்தவனுமாகிய என்னை நீர் கவனியாது கைவிட்டால் உம்முடைய பாலிக்குந்தன்மை ஆதாரமற்றுப் போகுமன்றோ?'

ஸூதர் கூறியது—

7.14. இங்ஙனம் துதிக்கப்பட்டும் பகவான் ஹரி யோக நித்திரையிலாழ்ந்தவராய் எழுந்திருக்காத பொழுது பிரம்மா மீண்டும் சிந்திக்கலானார்.

7.24. 'யோகமாயையின் வசப்பட்டு பிராகிருத ஜனங்களைப் போல் ஹரியும் தன்வயமிழந்து தூங்குகிறாரெனின் மற்ற மகாத்மாக்களைப்பற்றி என்ன சொல்வது'?

7.25. 'யோகநித்ரா தேவியைத் துதிப்போம்.' அப்பொழுது அவள் வசமிருந்து விடுபட்டு ஸ்நாதனரும் வாஸுதேவருமாகிய ஜனார்த்தனர் யுத்தத்திற்கு முயற்சி செய்வார்.'

ब्रह्मोवाच—

देवि त्वमस्य जगतः किल कारणं हि
ज्ञातं मया सकलवेदवचोभिरम्ब ।
यद्विष्णुरप्यखिललोकविवेककर्ता
निद्रावशं च गमितः पुरुषोत्तमोऽद्य ॥ ७. २७ ॥

नाट्यं तनोषि सगुणो विविधप्रकारं
नो वेत्ति कोऽपि तव कृत्यविधानयोगम् ।
ध्यायन्ति यां मुनिगणा नियतं त्रिकालं
सन्ध्येति नाम परिकल्प्य गुणान् भवानि ॥ ७. ३० ॥

नो वेत्ति विष्णुरधुना मम दुःखमेतत्
जाने त्वयाऽऽत्मविवशीकृतदेहयष्टिः ।
मुंचाददिेव-मथवा जहि दानवेन्द्रौ
यद्रोचते तव कुरुष्व महानुभावे ॥ ७. ३७ ॥

பிரம்மா கூறியது—

7.27. தேவி! வேதமந்திரங்களனைத்தாலும் நீயே உலகிற்குக் காரணம் என்பது என்னாலறியப்பட்டுளது. அதனால் தான் அகிலவுலகிற்கும் விவேகமளிப்பவரும் புருஷோத்தமருமாகிய விஷ்ணுவும் இப்பொழுது நித்திரையின் வசமாக்கப்பட்டுள்ளார்.

7.30. பவானி! மூன்று வேளைகளிலும் ஸந்தியை எனும் பெயரால் தினந்தோறும் முனிகணங்கள் (குணங்களைக்கடந்த) உன்னை குணங்களைக் கற்பித்து தியானம் செய்கின்றார்கள். (அதற்கிணங்க) நீயும் பலவகையான ஸகுணவடிவில் (உலகில்) நாடகம் நடிக்கிறாய். நீ (பற்றற்று) செயல் புரியும் வகையான இந்த யோகத்தை அறிந்தவர் எவருமிலர்.

7.37. விஷ்ணுவானவர் இப்பொழுது என்னுடைய இந்த துக்கத்தை உணரவில்லை. உன்னாலேதான் அவர் ஒரு கட்டையைப் போல் உணர்வற்ற நிலையில் புகுத்தப் பட்டுள்ளார். அவரை அவ்வுறக்கத்திலிருந்து விடுவிக்க வேண்டும். இல்லையேல் இவ்வசுரர்களையாவது கொல்ல வேண்டும். பெருமைமிக்கவளே! எது உனக்குப் பிரியமோ அதைச் செய்தருள்வாயாக.

सिन्धूद्भवापि न हरिं प्रतिबोधितुं वै
शक्ता पतिं तव वशानुगमाद्यशक्त्या ।
मन्ये त्वया भगवति प्रसभं रमाऽपि
प्रस्वापिता न बुबुधे विवशीकृतेव ॥ ७. ३९ ॥

धन्यास्त एव भुवि भक्तिपरास्तवांघ्रौ
त्यक्त्वाऽन्यदेवभजनं त्वयि लीनभावाः ।
कुर्वन्ति देवि भजनं सकलं निकामं
ज्ञात्वा समस्तजननीं किल कामधेनुम् ॥ ७. ४० ॥

त्वं शक्तिरेव जगतामखिलप्रभावा
त्वन्निर्मितं च सकलं खलु भावमात्रम् ।
त्वं क्रीडसे निजविनिर्मितमोहजाले
नाट्ये यथा विहरते स्वकृते नटो वै ॥ ७. ४२ ॥

7.39. பகவதி! ஸமுத்திரராஜன் பெண்ணுகிய லக்ஷ்மியும் ஆதிசக்தியாகிய உன்வயப்பட்டுள்ள தனது நாயகனுகிய ஹரியை எழுப்புவதற்குச் சக்தியற்ற நிலையிலிருக்கிருள். அந்த ரமாதேவியும் உன்னுல் தான் வலுவில் உறக்கத்திலாழ்த்தப்பட்டுத் தன் வயமிழந்தவள்போல் எதையும் அறியவில்லை.

7.40. தேவீ! இவ்வுலகில் வேறு தேவதைகளை வழிபடுவதைவிட்டு எவர்கள் உன்னுடைய பாதகமலங்களில் பக்தியுடையவர்களாய் உன்னிடம் மனம் லயித்தவர்களாய் உளரோ அவர்களே செல்வவான்கள். உன்னையாராதிக்கும் முறைகளையெல்லாம் செவ்வனேயறிந்து அகில உலகிற்கும் தாயும் (வேண்டுவார் வேண்டுவதையளிக்கும்) காமதேனுவுமான உன்னை அவர்கள் வழிபடுகிருர்கள்.

7.42. அனைத்தையுமுற்பத்தி செய்யும் உலகசக்தி நீயே. ஸங்கல்ப மாத்திரத்தால் உன்னுல் எல்லாம் சிருஷ்டிக்கப்பட்டுள்ளது. ஒரு நடிகன் தான் கற்பனை செய்த நாடகத்தில் தானே நடிப்பது போல் உன்னுல் நிர்மாணம் செய்யப்பட்ட இந்திரஜாலம் போன்ற இவ்வுலக நாடகத்தில் நீ விளையாடுகிருய்.

उत्तिष्ठ देवि कुरु रूपमिहाद्भुतं त्वं
मां वा त्विमौ जहि यथेच्छसि वाललीले ।
नो चेत्प्रबोधय हरिं निहनेदिमौ यः
त्वत्साध्यमेतदखिलं किल कार्यजातम् ॥ ७. ४७ ॥

सूत उवाच—

एवं स्तुता तदा देवी तामसी तत्र वेधसा ।
निःसृत्य हरिदेहात्तु संस्थिता पार्श्वतस्तदा ॥ ७. ४८ ॥
विस्पन्दित-शरीरोऽसौ यदा जातो जनार्दनः ।
धाता परमिकां प्राप्तो मुदं दृष्ट्वा हरिं ततः ॥ ७. ५० ॥

ऋषय ऊचुः—

का सा शक्तिः पुरा प्रोक्ता यया विष्णुर्जितः प्रभुः ।
कुतो जाता कथं शक्ता का शक्तिर्वद सुव्रत ॥ ८. ८ ॥

7.47. தேவியே! எழுந்திருப்பாய். அற்புதமான உருவுடன் தோன்றி இவர்களை யொழிப்பாய். இல்லையேல் என்னையாவது கொன்றுவிடு. குழந்தையைப் போல் விளையாடுபவளே! உனக்கு எது விருப்பமோ அதைச் செய். அல்லாவிட்டால் விஷ்ணுவை எழுப்பு. அவர் இவர்களைக் கொல்லட்டும். செயற்படக்கூடிய இதுவெல்லாம் உன்னாலேயே ஆகவேண்டும்.

ஸூதர் கூறியது—

7.48,50. இவ்வாறு பிரம்மாவால் துதிக்கப்பெற்ற தாமஸ குணவடிவான தேவி அப்பொழுது விஷ்ணுவினுடைய தேகத்திலிருந்து வெளிக்கிளம்பி அருகில் நின்றாள். சரீரத்தை அசைத்துக் கொண்டு எழுந்த ஜனார்த்தனரைக் கண்டு பிரம்மா பரமஸந்தோஷத்தை யடைந்தார்.

ரிஷிகள் கூறியது—

8.8. திடவிரதமுடையவரே! எந்த சக்தியால் பிரபுவாகிய விஷ்ணுவும் ஜயிக்கப்பட்டார் என்று முன்பு கூறப்பட்டதோ அந்த சக்தி எது? எங்கிருந்து தோன்றிற்று? அது எப்படிப்பட்டது? அதன் பெருமை என்ன? இதைக் கூறியருளுதல் வேண்டும்.

सर्वकृत्सर्वभृत्स्रष्टा विरजः सर्वगः शुचिः ।
स कथं निद्रया नीतः परतन्त्रः परात्परः ।। ८. १० ।।

सूत उवाच—

साऽऽद्या शक्तिः परिणता सर्वस्मिन् या प्रतिष्ठिता ।
दाहशक्तिस्तथा वह्नौ समीरे प्रेरणात्मिका ।। ८. ३० ।।

शिवोऽपि शवतां याति कुण्डलिन्या विवर्जितः ।
शक्तिहीनस्तु यः कश्चि-दसमर्थः स्मृतो बुधैः ।। ८. ३१ ।।

एवं सर्वत्र भूतेषु स्थावरेषु चरेषु च ।
ब्रह्मादि-स्तम्बपर्यन्तं ब्रह्माण्डेऽस्मिन् महातपाः ।। ८. ३२ ।।

8.10. அனைத்தையும் செய்பவர், அனைத்தையும் தாங்குபவர், சிருஷ்டிப்பவர், மாசற்றவர், எங்கும் நிறைந்தவர், பரிசுத்தர், மேலானதிற்கெல்லாம் மேலானவர் என்று கூறப்படும் விஷ்ணு எவ்வாறு நித்ராசக்தியால் மயங்கிப் பரதந்திரரானார்?

ஸௌதர் கூறியது—

8.30. அது ஆதிசக்தி. அனைத்திலும் ஊடுருவி நிலை பெற்றுள்ளது. அக்கினியில் எரியும் சக்தியாகவும், காற்றில் தள்ளும் சக்தியாகவும் உளது.

8.31. குண்டலினிசக்தியாகிய அது இன்றேல் சிவனும் சவம் போலாகின்றான். எவனாயினும் சக்தியில்லாதவனாயின் அவன் செயல் புரியச் சாமர்த்தியமில்லாதவன் என்று புத்திமான்கள் கூறுகிறார்கள்.

8.32. மஹாதபஸ்விகளே! எங்கும் எல்லாப் பொருள்களிலும், அசையாத ஜடப் பொருள்களிலும் அசையும் ஜீவராசிகளிலும் பிரம்மா முதல் புழுவரை இந்த பிரம்மாண்டத்தில் சக்தி வியாபித்துளது.

एवं सर्वगता शक्तिः सा ब्रह्मेति विविच्यते ।
योपास्या विविधैः सम्यग्विचार्या सुधिया सदा ॥ ८. ३४ ॥
विष्णौ च सात्त्विकी शक्तिस्तया हीनोऽप्यकर्मकृत् ।
द्रुहिणे राजसी शक्तिर्यया हीनो ह्यसृष्टिकृत् ॥ ८. ३५ ॥
शिवे च तामसी शक्तिस्तया संहारकारकः ।
इत्यूह्यं मनसा सर्वं विचार्य च पुनः पुनः ॥ ८. ३६ ॥
सगुणा निर्गुणा सा तु द्विधा प्रोक्ता मनीषिभिः ।
सगुणा रागिभिः सेव्या निर्गुणा तु विरागिभिः ॥ ८. ४० ॥
धर्मार्थकाममोक्षाणां स्वामिनी सा निराकुला ।
ददाति वांछितान् कामान् पूजिता विधिपूर्वकम् ॥ ८. ४१ ॥

8.34. இங்ஙனம் எங்கும் பரவியுள்ள அந்த சக்தியே பரப்பிரம்மம் என விவேகிகளால் கூறப்படுவது. அதுவே புத்திமான்களால் எப்பொழுதும் நன்கு ஆராய்ந்து அறியப் படுவதும் பலவிதமாக உபாசிக்கப்படுவதுமாகும்.

8.35. விஷ்ணுவினிடத்தில் அது ஸாத்விக சக்தியாய் விளங்குகிறது. அது இல்லேயேல் அவர் செயலேதும்புரியார். பிரம்மாவிடத்தில் ராஜஸ சக்தியாயுளது. அது இல்லேயேல் அவர் சிருஷ்டி செய்ய இயலாது.

8.36. சிவனிடத்தில் அது தாமஸ சக்தியாயுளது. அதனுல் அவர் ஸம்ஹாரகர்த்தாவாகிறுர். இங்ஙனம் மேன்மேலும் விசாரித்து அனேத்தையும் மனதால் ஊகித்துக் கொள்ளவேண்டும்.

8.40. அந்த சக்தி ஸகுணம் நிர்க்குணம் இரண்டு வகையென்றும், ஆசையுடையவர்களால் ஸகுணமாயும் வைராக்கிய சீலர்களால் நிர்க்குணமாயும் உபாசித்தற்குரிய தென்றும் ஞானிகளால் கூறப்பட்டுளது.

8.41. அறம் பொருள் இன்பம் வீடு எனும் அனேத்திற்கும் அந்தப் பராசக்தியே ஒப்பற்ற ஈசுவரி. முறைப்படி பூஜிக்கப் பெற்றுல் அவள் விரும்பிய காரியங்களேயெல்லாம் அளிப்பாள்.

तस्माच्छक्तिः सदा सेव्या विद्वद्भिः कृतनिश्चयैः ।
निश्चयः सर्वशास्त्राणां ज्ञातव्यो मुनिसत्तमाः ॥ ८. ४८ ॥
कृष्णाच्छ्रुतं मया चैतत् तेन ज्ञातं तु नारदात् ।
पितुः सकाशात्तेनापि ब्रह्मणा विष्णुवाक्यतः ॥ ८. ४९ ॥
न श्रोतव्यं न मन्तव्यमन्येषां वचनं बुधैः ।
शक्तिरेव सदा सेव्या विद्वद्भिः कृतनिश्चयैः ॥ ८. ५० ॥

सूत उवाच—

यदा विनिर्गता निद्रा देहात्तस्य जगद्गुरोः ।
नेत्रास्य-नासिका-बाहु-हृदयेभ्यस्तथोरसः ॥ ९. १ ॥
निःसृत्य गगने तस्थौ तामसी शक्तिरुत्तमा ।
उदतिष्ठज्जगन्नाथो जृम्भमाणः पुनः पुनः ॥ ९. २ ॥

8.48. முனிவர்களே! ஆகையால் நிச்சயபுத்தியுடைய வித்வான்களால் பராசக்தி எப்பொழுதும் சேவிக்கப்பட வேண்டும் எனும் இதுவே எல்லா சாஸ்திரங்களாலும் அறிய வேண்டிய முடிவான உண்மை.

8.49. என்னல் இது கிருஷ்ணத்துவைபாயனரிடமிருந்து கேட்கப்பட்டது; அவரால் நாரதரிடமிருந்து கேட்கப்பட்டது; நாரதரால் தன்பிதாவான பிரம்மாவிடமிருந்து கேட்கப் பட்டது; பிரம்மாவால் விஷ்ணுவிடமிருந்து அறியப்பட்டது.

8.50. இதற்குமாருன பிறருடைய பேச்சுக்கள் புத்தி மான்களால் கேட்கவும் படாது, நினைக்கவும் படாது. சக்தியே எக்காலத்தும் கற்ருேர்களாலும் நிச்சயபுத்தியுள்ள வர்களாலும் பூஜித்தற்குரியவள்.

ஸூதர் கூறியது—

9.1–2. ஜகத்குருவான விஷ்ணுவின் தேகத்திலிருந்து தூக்கம் கலைந்தபின் அவருடைய கண் வாய் மூக்கு தோள் இருதயம் மார்பு இவற்றினின்று உத்தம தாமஸ சக்தி யானவள் ஆகாயத்தில் நின்ருள். ஜகந்நாதர் அடிக்கடி கொட்டாவி விட்டுக்கொண்டு எழுந்தார்.

तदाऽपश्यत् स्थितं तत्र भयत्रस्तं प्रजापतिम् ।
उवाच च महातेजा मेघगंभीरया गिरा ॥ ९. ३ ॥

विष्णुरुवाच—

किमागतोऽसि भगवंस्तपस्त्यक्त्वाऽत्र पद्मज ।
कस्माच्चिन्तातुरोऽसि त्वं भयाकुलितमानसः ॥ ९. ४ ॥

ब्रह्मोवाच—

त्वत्कर्णमलजौ देव दैत्यौ च मधुकैटभौ ।
हन्तुं मां समुपायातौ घोररूपौ महाबलौ ॥ ९. ५ ॥
भयात्तयोस्समायातस्त्वत्समीपं जगत्पते ।
त्राहि मां वासुदेवाद्य भयत्रस्तं विचेतनम् ॥ ९. ६ ॥

9.3. அப்பொழுது அங்கு பயத்தால் நடுங்கிக் கொண்டு நிற்கும் பிரம்மாவைப்பார்த்து மஹாதேஜஸ்வியான விஷ்ணு மேககர்ஜனை போன்ற தொனியில் கூறலானார்.

விஷ்ணு கூறியது—

9.4. தாமரையில் தோன்றிய பகவானே! தவத்தை விட்டு நீர் இங்கு வந்த காரணமென்ன? பயத்தாற் கலங்கிய மனத்தினராகவும் கவலைமிக்கவராகவும் நீர் காணப்படுவதேன்?

பிரம்மா கூறியது—

9.5. தேவதேவா! உங்கள் காது மலத்திலிருந்து தோன்றியவர்களும் கோரரூபத்துடனும் மகாபலத்துடனும் கூடியவர்களுமான மதுகைடபர்கள் என்னைக் கொல்ல வந்திருக்கின்றனர்.

9.6. ஜகத்பதியே! அவர்களிடம் பயந்து நான் உங்களிடம் வந்திருக்கிறேன். வாசுதேவா! பயத்தால் நடுங்குபவனும் அறிவிழந்தவனுமான என்னை இப்பொழுது காத்தருளும்.

विष्णुरुवाच—

तिष्ठाद्य निर्भयो जातस्तौ हनिष्याम्यहं किल ।
युद्धायाजग्मतु-र्मूढौ मत्समीपं गतायुषौ ॥ ९. ७ ॥

सूत उवाच—

एवं वदति देवेशे दानवौ तौ महाबलौ ।
विचिन्वानावजं चोभौ संप्राप्तौ मदगर्वितौ ॥ ९. ८ ॥

निराधारौ जले तत्र संस्थितौ विगतज्वरौ ।
तावूचतु-र्मदोन्मत्तौ ब्रह्माणं मुनिसत्तमाः ॥ ९. ९ ॥

पलायित्वा समायातः सन्निधावस्य किं ततः ।
युद्धं कुरु हनिष्यावः पश्यतोऽस्यैव सन्निधौ ॥ ९. १० ॥

விஷ்ணு கூறியது—

9.7. பயத்தை விட்டு நில்லும். அவர்களை நான் கொல்லுகிறேன். ஆயுள் முடிந்து விட்டதால்தான் அந்த மூடர்கள் போர் செய்யும் எண்ணத்துடன் என்னருகில் வந்திருக்கின்றனர்.

ஸூதர் கூறியது—

9.8 இவ்வாறு தேவர்களின் தலைவர் கூறும்பொழுது, மஹா பலத்தோடு கூடியவர்களும் மதத்தால் கர்வங் கொண்டவர்களுமான அவ்விரு அசுரர்கள் பிரம்மாவைத் தேடுபவர்களாய் அங்கு வந்தடைந்தனர்.

9.9. முனிசிரேஷ்டர்களே! மதம் பிடித்து மதியிழந் தவர்களாய்க் கவலையற்றவர்களாய் அங்கு ஆதாரமில்லாமல் ஜலத்தில் நின்று கொண்டிருந்த அவ்விருவரும் பிரம்மாவை நோக்கிப் பின்வருமாறு கூறினார்கள்.

9.10. எதற்காக இவருடைய ஸந்நிதிக்கு ஓடி வந் தாய்? சண்டைக்கு வா. இவருடைய முன்னிலையில் இவர் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே உன்னைக் கொல்லப் போகிறோம்.

पश्चादेनं हनिष्याव: सर्पभोगोपरिस्थितम् ।
त्वमद्य कुरु संग्रामं दासोऽस्मीति च वा वद ॥ ९. ११ ॥

सूत उवाच —

तच्छ्रुत्वा वचनं विष्णुस्तावुवाच जनार्दनः ।
कुरुतं समरं कामं मया दानवपुंगवौ ॥ ९. १२ ।

हरिष्यामि मदं चाहं युवयो-र्मत्तयोः किल ।
आगच्छतं महाभागौ श्रद्धा चेद्वां महाबलौ ॥ ९. १३ ॥

बाहुयुद्धं तयोरासीन्मल्लयोरिव मत्तयोः ।
श्रान्ते मधौ कैटभस्तु संग्राममकरोत् तदा ॥ ९. १४ ॥

9.11. பாம்பணைமீதிருக்கும் இவரைப் பிற்பாடு கொல்வோம். நீ இப்பொழுது போர்புரி; அல்லது எங்களுக்கு அடிமையாகிறேன் என்றுவது சொல்.

ஸூதர் கூறியது—

9.12–13. அவ்வார்த்தையைக் கேட்ட ஜனார்த்தனர் அவர்களை நோக்கி ‘அசுரசிரேஷ்டர்களே! உங்கள் இஷ்டப்படி என்னுடன் போர்புரியுங்கள்; கர்வமடைந்திருக்கும் உங்கள் கொழுப்பை நான் அடக்குகிறேன்? பலசாலிகளே! பாக்கியவான்களே! உங்கள் பலத்தில் உங்களுக்கு நம்பிக்கையிருந்தால் வாருங்கள்’ என்று கூறினர்.

9.14. மதம் பிடித்த மல்லர்கள் செய்யும் பாஹு யுத்தத்தைப் போல் அவர்களிடை மற்போர் நிகழ்ந்தது. மது களைப்படைந்தபொழுது கைடபன் சண்டைக்கு வந்தான்.

पुनर्मधुः कैटभश्च युयुधाते पुनः पुनः ।
बाहुयुद्धेन रागांधौ विष्णुना प्रभविष्णुना ॥ ९. १५ ॥

पंचवर्ष-सहस्राणि यदा जातानि युद्ध्यता ।
हरिणा चिन्तितं तत्र कारणं मरणे तयोः ॥ ९. १६ ॥

चिन्तनाज्ज्ञान-मुत्पन्नं देवीदत्तवरावुभौ ।
कामं वांछितमरणौ न मम्लतु-रतस्त्विमौ ॥ ९. ३२ ॥

रोगग्रस्तोऽपि दीनोऽपि न मुमूर्षति कश्चन ।
कथं चेमौ मदोन्मत्तौ मर्तुकामौ भविष्यतः ॥ ९. ३६ ॥

नन्वद्य शरणं यामि विद्यां शक्ति सकामदाम् ।
विना तया न सिध्यन्ति कामाः सम्यक् प्रसन्नया ॥ ९. ३७ ॥

9.15–16. பின்பு மதுவும் அதன் பின் கைடபனுமாக மாறிமாறிப் போர்புரிந்தார்கள். போர் வெறியால் குருடர்களான அவர்களுடன் விஷ்ணுவால் நிகழ்த்தப்பட்ட போரில் ஐயாயிரம் ஆண்டுகள் கழிந்தன. அப்பொழுது அவர்களுடைய மரணத்திற்குத் தகுந்த காரணத்தைப்பற்றி ஹரியானவர் ஆலோசித்தார்.

9.32. ஆலோசித்த பொழுது இவர்களிருவரும் தேவியினிடமிருந்து வரம் பெற்றவர்கள் என்ற ஞாபகம் வந்தது. இவர்கள் விருப்பப்படி மரணமடையக் கூடியவர்கள். ஆகையால் இவர்கள் இப்படி யுத்தத்தால் களைப்படையமாட்டார்கள்.

9.36. வியாதியால் பீடிக்கப்பட்டவனுயிருந்தாலும் ஏழையாய்க் கஷ்டப்படுபவனுயிருந்தாலும் எவனும் சாக விரும்புவதில்லை. மதோன்மத்தர்களாயிருக்கும் இவர்கள் எப்படி சாகவிரும்புவார்கள்?

9.37. ஆசையைப் பூர்த்தி செய்விக்கும் ஸ்ரீவித்யா சக்தியைச் சரணடைகின்றேன். அவளுடைய அருளில்லாமல் எந்தக் காரியமும் நன்கு சித்திக்காது.

एवं संचिन्त्यमानस्तु गगने संस्थितां शिवाम् ।
अपश्यद्भगवान् विष्णु-र्योगनिद्रां मनोहराम् ॥ ९. ३८ ॥

कृतांजलि-रमेयात्मा तां च तुष्टाव योगवित् ।
विनाशार्थं तयोस्तत्र वरदां भुवनेश्वरीम् ॥ ९. ३९ ॥

विष्णुरुवाच —

नमो देवि महामाये सृष्टिसंहारकारिणि ।
अनादिनिधने चण्डि भुक्तिमुक्तिप्रदे शिवे ॥ ९. ४० ॥

साहाय्यं कुरु मे मातः खिन्नोऽहं युद्धकर्मणा ।
दृप्तौ तौ वरदानेन तव देवार्तिनाशने ॥ ९. ४८ ॥

9.38. இவ்வாறு சிந்திக்கையில் பரமமங்களஸ்வரூபணியாய் மனத்திற்கினியவளாய் ஆகாயத்தில் தோன்றிய யோகநித்ராதேவியை பகவான் விஷ்ணு பார்த்தார்.

9.39. அளவிடமுடியாத பெருமை வாய்ந்தவரும் யோகேசுவரருமான விஷ்ணு அவர்களுடைய அழிவின் பொருட்டு வரமளிக்கும் புவனேசுவரியாகிய அந்த தேவியைக் கைகூப்பிக்கொண்டு துதிக்கலானார்.

விஷ்ணு கூறியது—

9.40. சிருஷ்டிஸ்திதிஸம்ஹாரத்தைச் செய்பவளாயும் ஆதியந்தமற்றவளாயும், இவ்வுலக போகத்தையும் முக்தியையும் அளிப்பவளாயும், மங்கள வடிவினளாயும், மஹாமாயையாயும் உள்ள தேவியே, உனக்கு நமஸ்காரம்.

9.48. தாயே! தேவர்களின் துன்பத்தைத்துடைப்பவளே! வரம் பெற்றதால் கர்வித்திருக்கும் இவ்வசுரர்களுடன் போர் புரிந்து நான் துன்பமடைந்துள்ளேன். எனக்கு உதவி புரிந்தருள்வாயாக.

देव्युवाच —

देवदेव हरे विष्णो कुरु युद्धं पुनः स्वयम् ।
वंचयित्वा त्विमौ शूरौ हन्तव्यौ च विमोहितौ ॥ ९. ५० ॥

मोहयिष्याम्यहं नूनं दानवौ वक्रया दृशा ।
जहि नारायणाऽऽशु त्वं मम मायाविमोहितौ ॥ ९. ५१ ॥

सूत उवाच —

मन्दस्मितयुतैः कामप्रेमभावयुतैरनु ।
दृष्ट्वा मुमुहतुः पापौ देव्या वक्रविलोकनम् ॥ ९.६२ ॥

मोहितौ तौ परिज्ञाय भगवान् कार्यवित्तमः ।
उवाच तौ हसञ्श्लक्ष्णं मेघगम्भीरया गिरा ॥ ९. ६५ ॥

தேவி கூறியது—

9.50. தேவதேவனுகிய ஹரியே! விஷ்ணுவே! மறுபடியும் நீராகவே போருக்குச் செல்லலாம். இந்த வீரர்கள் மாயையினுல் வஞ்சிக்கப்பட்டு கொல்லப்படவேண்டும்.

9.51. நாராயணரே! என்னுடைய வக்ரப்பார்வையால் நான் அந்த தானவர்களை நிச்சயம் மோஹிக்கச் செய்கிறேன். என் மாயையால் மதியிழந்த அவர்களை நீர் விரைவில் அப்பொழுது கொன்று விடலாம்.

ஸூதர் கூறியது—

9.62. புன்முறுவலுடன் காமமும் பிரேமையும் கலந்தது போன்ற பார்வையை தேவியானவள் அவர்கள் மீது செலுத்தவே அந்தப் பாவிகள் தேவியின் வக்ரப் பார்வையைக் கண்டு மதியிழந்தனர்.

9.65. காரியத்தையறிந்தவர்களிற் சிறந்தவரான பகவான் அவர்கள் மதிமயங்கியிருப்பதையறிந்து அவர்களை நோக்கிச் சிரித்துக் கொண்டு மேககர்ஜனை போல் கம்பீரமானதும் மனதைக்கவருவதுமான குரலில் பின்வருமாறு பேசினுர்.

वरं वरयतां वीरौ युवयोर्योऽभिवांछितः ।
ददामि परमप्रीतो युद्धेन युवयोः किल ।। ९. ६६ ।।

तच्छ्रुत्वा वचनं विष्णोः साभिमानौ स्मरातुरौ ।
वीक्षमाणौ महामायां जगदानन्दकारिणीम् ।।
तमूचतुश्च कामार्तौ विष्णुं कमललोचनौ ।। ९. ६९ ।।

हरे न याचकावावां त्वं किं दातुमिहेच्छसि ।
ददाव तुभ्यं देवेश दातारौ नौ न याचकौ ।। ९. ७० ।।

तयोस्तद्वचनं श्रुत्वा प्रत्युवाच जनार्दनः ।
भवेतामद्य मे तुष्टौ मम वध्यावुभावपि ।। ९. ७२ ।।

9.66. 'வீரர்களே! உங்களுக்கு விருப்பமான வரத்தைக் கேளுங்கள். உங்களுடன் செய்த யுத்தத்தால் உங்களுடைய வீரத்தை மிகவும் மெச்சும் நான் உங்களுக்கு வரமளிக்கின்றேன்.'

9.69. கர்வங்கொண்டவர்களும் காமவசப்பட்டவர்களுமான அவர்கள் விஷ்ணுவின் வார்த்தையைக் கேட்டு உலகிற்கானந்தமளிக்கும் மஹாமாயையையும் பார்த்துக்கொண்டே காமத்தால் பீடிக்கப்பட்டவர்களாய்த் தாமரைக் கண்ணரான விஷ்ணுவை நோக்கிப் பின் வருமாறு கூறினர்.

9.70. 'ஹரியே! தேவர்களின் தலைவரே! நாங்கள் பிச்சைக்காரர்களல்லோம். நீரென்ன எங்களுக்கு வரமளிப்பதாய்க் கூறுவது? நாங்கள் கொடையாளிகள், யாசகர்களன்று. உமக்கு வரமளிக்கிறோம், கேளும்.'

9.72. அவர்களுடைய அவ்வார்த்தையைக் கேட்டு ஜனார்த்தனர் 'உங்களுக்கு அப்படி வரம் கொடுக்கும் திறமையும் ஸந்தோஷமும் இருக்குமேயானால் என்னால் நீங்கள் இருவரும் மரணமடையவேண்டும்' என்று பதில் கூறினர்.

तच्छ्रुत्वा वचनं विष्णोर्दानवौ चातिविस्मितौ ।
वंचिताविति मन्वानौ तस्थतुः शोकसंयुतौ ॥ ९. ७३ ॥

विचार्य मनसा तौ तु दानवौ विष्णुमूचतुः ।
प्रेक्ष्य सर्वं जलमयं भूमिं स्थलविवर्जिताम् ॥ ९. ७४ ॥

हरे योऽयं वरो दत्तस्त्वया पूर्वं जनार्दन ।
सत्यवागसि देवेश देहि तं वांछितं वरम् ॥ ९. ७५ ॥

निर्जले विपुले देशे हनस्व मधुसूदन ।
वध्यावावां तु भवतः सत्यवाग्भव माधव ॥ ९. ७६ ॥

स्मृत्वा चक्रं तदा विष्णुस्तावुवाच हसन्हरिः ।
हन्म्यद्य वां महाभागौ निर्जले विपुले स्थले ॥ ९. ७७ ॥

9.73. விஷ்ணுவின் அவ்வார்த்தையைக் கேட்டு அவ்வசுரர்கள் வியப்படைந்தவர்களாய் 'நாம் வஞ்சிக்கப்பட்டோம்' என்று எண்ணி வருத்தத்திலாழ்ந்து சற்றுத் தயங்கினர்.

9.74–75. மனதில் ஆலோசனை செய்து, எல்லாம் ஜலமயமாயும் பூமியில் தரை காணப்படாமலும் இருப்பதைப் பார்த்து அவ்வசுரர்கள் விஷ்ணுவை நோக்கி, கூறியதாவது: 'ஹரியே, ஜனார்த்தரே! தேவர்களின் தலைவரே! நீர் ஸத்தியமான வாக்குடையவர். உம்மால் முன்பு எங்களுக்கு எந்த வரமளிக்கப்பட்டதோ நாங்கள் விரும்பியதைக் கேட்கலாமென்று அதை இப்பொழுது கொடும்.

9.76. 'மாதவனே! மதுஸூதனனே! உம்மால் நாங்கள் கொல்லப்படலாம்; ஆனால் ஜலமில்லாமல் விசாலமாயுள்ள இடத்தில் நீர் எங்களைக் கொல்ல வேண்டும். அதனால் ஸத்திய வாக்குள்ளவராயாகலாம்.'

9.77. விஷ்ணுவானவர் சக்ராயுதத்தை நினைத்துக் கொண்டு புன்சிரிப்புடன் அவர்களை நோக்கி 'பாக்கியசாலிகளே! உங்களை நான் ஜலமில்லாமல் விசாலமாயுள்ள இடத்தில் இப்பொழுது கொல்லுகிறேன்' என்று கூறினர்.

इत्युक्त्वा देवदेवेश ऊरू कृत्वाऽतिविस्तरौ ।
दर्शयामास तौ तत्र निर्जलं च जलोपरि ॥ ९. ७८ ॥

नास्त्यत्र दानवौ वारि शिरसी मुंचतामिह ।
सत्यवागहमद्यैव भविष्यामि च वां तथा ॥ ९. ७९ ॥

तदाकर्ण्य वचस्तथ्यं विचिन्त्य मनसा च तौ ।
वर्धयामासतुर्देहं योजनानां सहस्रकम् ॥ ९. ८० ॥

भगवान् द्विगुणं चक्रे जघनं विस्मितौ तदा ।
शीर्षे सन्दधतां तत्र जघने परमाद्भुते ॥ ९. ८१ ॥

रथांगेन तदा भिन्ने विष्णुना प्रभविष्णुना ।
जघनोपरि वेगेन प्रकृष्टे शिरसी तयोः ॥ ९. ८२ ॥

9.78. இங்ஙனம் கூறிவிட்டு தேவர்களுக்கீசரான விஷ்ணு தனது துடையை விஸ்தாரமாக்கிக்கொண்டு ஜலத்திற்குமேல் உள்ள ஜலமில்லாத விசாலமான இடமாக அவர்களுக்குக் காட்டினுர்.

9.79. 'அசுரர்களே! இதோ இங்கு ஜலமில்லே. இவ்விடத்தில் உங்கள் தலேகளே வையுங்கள். நான் என் வார்த்தையை ஸத்தியமாக்குகிறேன். நீங்களும் உண்மை பேசியவர்களாவீர்கள்' என்ருர் விஷ்ணு.

9.80. உண்மையான அவ்வார்த்தையைக் கேட்டு அவர்கள் சற்று மனதால் ஆலோசித்து தங்கள் உடல்களே யோஜனே பருமனுக வளர்த்துக் கொண்டனர்.

9.81. பகவான் தனது துடையை அதைப்போல் இருமடங்காக்கினுர். அதைக்கண்டு வியப்புற்று அவ்வசுரர்கள் அற்புதமான விஷ்ணுவின் துடைகளில் தங்கள் தலேகளே வைத்தார்கள்.

9.82. அங்ஙனம் துடைகளின்மேல் வைக்கப்பட்டதும் ஸர்வவல்லமை பொருந்திய விஷ்ணுவால் சக்ராயுதத்தைக் கொண்டு அவர்களுடைய சிறந்த தலேகள் வேகமாய்த் துண்டிக்கப்பட்டன.

गतप्राणौ तदा जातौ दानवौ मधुकैटभौ ।
सागरः सकलो व्याप्तस्तदा वै मेदसा तयोः ।। ९. ८३ ।।

मेदिनीति ततो जातं नाम पृथ्व्याः समन्ततः ।
अभक्षा मृत्तिका तेन कारणेन मुनीश्वराः ।। ९. ८४ ।।

इति वः कथितं सर्वं यत्पृष्टोऽस्मि सुनिश्चितम् ।
महाविद्या महामाया सेवनीया सदा बुधैः ।। ९. ८५ ।।

इति श्रीदेवीभागवते प्रथमस्कन्धे
नवमोऽध्यायः ।।

।। मधुकैटभवधवर्णनं समाप्तम् ।।

9.83–84. மதுகைடபர்களென்ற அவ்விரண்டு அசுரர்களும் இங்ஙனம் உயிரிழந்தவர்களாயினர். சமுத்திரம் முழுவதும் அவர்களுடைய (மேதஸால்) கொழுப்பால் வியாபிக்கப்பட்டது. அதனுல் ஏற்பட்டதரை முழுதிற்கும் 'மேதினீ' என்ற பெயர் ஏற்பட்டது. முனீசுவரர்களே! அக்காரணத்தால் மண்ணுனது தின்பதற்குத் தகுதியற்றது.

9.85. எதைப்பற்றி உங்களால் நான் வினவப்பட்டேனே அதையெல்லாம் உங்களுக்கு உள்ளதுள்ளபடி கூறியாயிற்று. மஹாவித்தையும் மஹாமாயையுமான பராசக்தி புத்திமான்களால் எப்பொழுதும் பூஜிக்கப்பட வேண்டும் என்பது முடிவு.

இங்ஙனம் ஸ்ரீதேவீபாகவதத்தில் முதல் ஸ்கந்தத்தில்
ஒன்பதாவது அத்தியாயம் முற்றும்.

மதுகைடபவத வர்ணனை முற்றும்.

॥ शुकचरित्रम् ॥ ४ ॥

सूत उवाच—

प्रवक्ष्यामि शुकोत्पत्तिं व्यासात् सत्यवतीसुतात् ।
अथोत्पन्नः शुकः साक्षाद्योगिनां प्रवरो मुनिः ॥ १०. ३ ॥

मेरुशृंगे महारम्ये व्यासः सत्यवतीसुतः ।
तपश्चचार सोऽत्युग्रं पुत्रार्थं कृतनिश्चयः ॥ १०. ४ ॥

जपन्नेकाक्षरं मन्त्रं वाग्बीजं नारदाच्छ्रुतम् ।
ध्यायन् परां महामायां पुत्रकामस्तपोनिधिः ॥ १०. ५ ॥

4. சுக சரித்திரம்

ஸூதர் கூறியது—

10.3. ஸத்யவதிபுத்திரரான வியாஸரிடமிருந்து சுகர் தோன்றிய வரலாற்றை இனிக் கூறுகிறேன். அங்ஙனம் தோன்றிய சுக முனிவர் யோகிகளுக்குள் தலைசிறந்தவர் என்பதை அனைவரும் அறிவர்.

10.4. ஸத்தியவதி புத்திரரான வியாஸர் மனதிற்கு மிகவும் இனிய மேருமலையினுச்சியில் இருந்து கொண்டு புத்திரனையடைய வேண்டுமென்ற திடஸங்கல்பத்துடன் கடுந்தவம் புரிந்தார்.

10.5. தவத்தைச் செல்வமாயுடையவரும் புத்திரனை விரும்பியவருமான அவர் மஹாமாயையான பராசக்தியை தியானம் செய்து கொண்டு நாரதரிடமிருந்து உபதேசம் பெற்ற வாக்பீஜமாகிய ஒரெழுத்து மந்திரத்தை ஜபித்தார்.

अतिष्ठत्स गताहारः शतसंवत्सरं प्रभुः ।
आराधयन्महादेवं तथैव च सदाशिवाम् ॥ १०. ७ ॥

गत्वा ऋषिसमीपन्तु तमुवाच जगद्गुरुः ।
उत्तिष्ठ वासवीपुत्र पुत्रस्ते भविता शुभः ॥ १०. १९ ॥

सर्वतेजोमयो ज्ञानी कीर्तिकर्ता तवानघ ।
अखिलस्य जनस्यात्र वल्लभस्ते सुतः सदा ॥ १०. २० ॥

सूत उवाच—

तदाकर्ण्य वचः श्लक्ष्णं कृष्णद्वैपायनस्तदा ।
शूलपाणिं नमस्कृत्य जगामाश्रम-मात्मनः ॥ १०. २१ ॥

10.7. ஆகாரமின்றி மகாதேவரையும் என்றும் மங்கள வடிவினளான பராசக்தியையும் பூஜிப்பவராய்த் தவச் செல்வராகிய அவர் நூருண்டு தவத்தில் நின்ருர்.

10.19.—20. உலகத்திற்கு குருவான மகாதேவர் அந்த ரிஷியின் சமீபம் சென்று அவரிடம் கூறுவார்: 'வாஸவீ புத்திரனே! பாவமற்றவனே! எழுந்திரு. உனக்குச் சுப மான புத்திரன் உண்டாவான். உன்னுடைய அப்புத்திரன் உலக மக்களிற் சிறந்தவனும் ஒளிமிகுந்த ஞானியாயும் எப்பொழுதும்' உன்னுடைய கீர்த்தியைப் பரப்புபவனும் விளங்குவான்.

ஸூதர் கூறியது—

10.21. கிருஷ்ணத்துவைபாயனர் மனங்குளிர அவ் வார்த்தையைக் கேட்டுச் சூலபாணியை நமஸ்கரித்துத் தமது ஆசிரமம் சென்ருர்.

कथं करोम्यहं चात्र दुर्घटं च महाश्रमम् ।
एवं चिन्तयतस्तस्य घृताची दिव्यरूपिणी ॥ १०. २९ ॥

प्राप्ता दृष्टिपथं तत्र समीपे गगने स्थिता ।
तां दृष्ट्वा चपलापांगीं समीपस्थां वराप्सराम् ॥ १०. ३० ॥

पंचबाणपरीतांगस्तूर्णमासीद् धृतव्रतः ।
चिन्तयामास च तदा किं करोम्यद्य संकटे ॥ १०. ३१ ॥

नारदाच्च मया पूर्वं श्रुतमस्ति कथानकम् ।
यथोर्वशीवशो राजा पराभूतः पुरूरवाः ॥ १०. ३६ ॥

10.29–31. '(வரத்தைப் பெற்ற போதிலும் இல்வாழ்க்கையில் விருப்பமில்லாதவனுகிய) நான் மிகவும் கஷ்டமானதும் எளிதில் சாதிக்கமுடியாததுமாகிய இக்காரியத்தை எப்படிச் செய்வேன்?' என்று அவர் சிந்தித்துக் கொண்டிருக்கும் பொழுது அருகில் ஆகாயத்தில் தெய்வீக ரூபத்துடன் தோன்றிய க்ருதாசி எனும் ஸ்திரீயின் மேல் அவர் பார்வை விழுந்தது. சலிக்கும் கண்களையுடையவளும் சமீபத்திலுள்ளவளும் சிறந்த அப்ஸரஸ்திரீயுமான அவளைக் கண்டு காம வேதனையுடையவரான போதிலும் தனது விரதத்தில் பற்றுள்ளவராய்ப் பரபரப்புடன் 'இந்த ஸங்கடத்தில் இப்பொழுது நான் என்ன செய்ய வேண்டும்?' என்று யோசித்தார்.

10.36. 'முன்பு புரூரவஸ் எனும் அரசர் ஊர்வசியினிடம் வசப்பட்டு எவ்வாறு அவமானத்தையடைந்தார் என்ற கதையை நாம் நாரதரிடம் கேட்டிருக்கிறேமே' என்று சற்று மனங்கலங்கினர்.*

---

*இதற்குமேல் 11, 12, 13 அத்தியாயங்களில் உள்ள கதைச் சுருக்கம் பின்வருமாறு:—

சௌனகாதியர் சூதரை நோக்கி 'புரூரவஸ் யார்? ஊர்வசியால் அவர் எப்படி அவமானமடைந்தார்?' என்று கேட்டனர்.

ஸூதர் கூறியது:—முன்னாட்களில் ஸுத்யும்னன் என்று ஒரு அரசன் இருந்தான். அவன் ஒரு நாள் வேட்டையாடச் சென்ற போது ஒரு அழகிய உத்யான வனத்தைக்கண்டு அதில் புகுந்ததும் பெண்ணாக மாறிவிட்டான். அவன் ஏறிவந்த குதிரையும் பெண் குதிரையாயிற்று. அவ்வனம் பரமசிவனும் பார்வதியும் தனித்திருக்குமிடம். அதில் பிரவேசிப்பவர்கள் பெண்ணுருவையடையக்கடவதென்று பரமசிவனுடைய சாபம் ஏற்பட்டிருந்தது. ஸுத்யும்னன் இதையறியாமல் பிரவேசித்ததால் அவனுக்கு அந்நிலையேற்பட்டது. பெண்ணுருவில் ராஜ்யத்திற்குத் திரும்பச் செல்ல மனம் வராமல் அவன் வனத்திலேயே சிறிது காலம் தங்கியிருந்தான். அப்பொழுது சந்திரனுடைய புத்திரனான புதன் 'இளை' என்ற புதுப்பெயருடனிருந்த இப்புதுமைப் பெண்ணைச் சந்தித்து அவளுடன் கூடும்படி விதி விளையாடிற்று. இளை கருத்தரித்து ஒரு அழகிய ஆண் குழந்தையைப் பெற்றாள். அக்குழந்தைதான் நாளடைவில் புரூரவஸ் எனும் அரசனாய் விளங்கியவன்.

புரூரவஸ் பிறந்த பின் குலகுருவான வசிஷ்டருடைய அனுக்கிரகத்தால் ஸுத்யும்னன் ஒரு மாதம் ஆணாகவும் ஒரு மாதம் பெண்ணாகவும் மாறிமாறியிருக்கக் கூடிய நிலையையடைந்தான். ஆண் உருவம் வந்தபோது அரசாட்சியைக் கவனிப்பதும் பெண் உருவம் வந்தபோது அந்தபுரத்தில் அடங்கியிருப்பதுமாயிருந்தான். இதையறிந்து நாட்டு மக்கள் அவனிடம் வெறுப்புக் கொண்டனர் என்பதைக் கண்டு ஸுத்யும்னன் தன் புத்திரனாகிய புரூரவஸ்ஸுக்குப் பட்டாபிஷேகம் செய்துவிட்டு வனம் சென்றான். அங்கு நாரதரிடம் நவாக்ஷரீ மந்திரோபதேசம் பெற்று பராசக்தியை பக்தியுடன் ஆராதித்து ஸாயுஜ்யப் பதவியையடைந்தான்.

புரூரவஸ் அரசு நடத்துகையில் அவனுடைய கீர்த்தி இந்திரலோகத்தையும் எட்டியது. அவனுடைய பேராண்மையையும் பெருங் குணங்களையும் கேள்விப்பட்ட தேவதாசியான ஊர்வசி அவனையடைய விரும்பினுள். பூலோகம் வந்து புரூரவஸ்ஸை மணந்துகொண்டு அவனுடன் வாழலானுள். அவள் ஏற்படுத்திய நிபந்தனை ஒன்று உண்டு. அதாவது அவளுக்கு நெய்யன்றி வேறு உணவு இல்லை; அவள் பிரியத்துடன் கொண்டுவந்திருந்த இரண்டு ஆட்டுக் குட்டிகளுக்குத் தீங்கு வராமல் அரசன் காக்கவேண்டும். சிற்றின்ப வேலை தவிர ஒரு பொழுதும் வஸ்திரமின்றி அரசன் அவள் கண்ணில் படக்கூடாது. இதை மீறினுல் அவள் அரசனை விட்டுச் சென்று விடுவாள். அரசன் அதற்குச் சம்மதித்து அவளிடத்தில் மனதைப் பறிகொடுத்து அரசாங்க அலுவல்களையும் தான தருமங்களையும் மறந்து பல வருஷங்கள் கழித்தான். அவளில்லாமல் ஒரு நிமிஷங்கூட இருக்க அவன் பொறுக்கமாட்டான். இப்படியிருக்கையில் அவளை மீண்டும் இந்திரலோகம் அழைத்துப்போக தேவேந்திரன் கட்டளைப்படி ஒரு கந்தர்வன் வந்து அவளைச் தனியில் சந்தித்துப் பேச வாய்ப்புக் கிடைக்காததால் அவளுடைய ஆடுகளைக் கவர்ந்து கொண்டு போனுன். ஆடுகளின் குரலைக் கேட்டு ஊர்வசி அரசனை ஏழுப்பவே, அவன் இடுப்பில் வஸ்திரமில்லாமலிருந்ததையும் மறந்து பரபரப்புடன் வெளியே சென்றுன். கந்தர்வன் ஒரு மின்னலை உண்டாக்கிவிட்டு ஆடுகளை விட்டு விட்டு மறைந்து விட்டான். மின்னல் வெளிச்சத்தில் ஆடையில்லாமலிருந்த புரூரவஸ்ஸை ஊர்வசி கண்டாள். தன்னுடைய நிபந்தனையை ஞாபகப்படுத்தி ஊர்வசி உடனே அவ்விடம் விட்டகன்றுள். அரசன் அவளைத் தேடியலைந்து குருக்ஷேத்திரத்தில் சந்தித்தான். 'நான் உனது அடிமை, நீ அகன்றுல் நான் உயிரை விடுவேன்' என்று அவளிடம் கூறினுன். ஊர்வசி அரசனை இகழ்ச்சிப் பார்வையுடன் பார்த்து, ''அரசே! உமது அறிவை வரவழைத்துக் கொள்ளும். வேசிகளை நம்பக் கூடாது. அவர்கள் அன்பும் உறவும் நிலையற்றவை. இதை நீர் அறியாதது ஆச்சரியம். இனி வருந்துவதிற் பயனில்லை. அரண்மனைக்குத் திரும்பிப் போகலாம். நான் என் வழி போகிறேன்'' என்று போய் விட்டாள். அவளிடமிருந்த மோகத்தால் அரசன் நீண்ட காலம் துக்கத்தில் ஆழ்ந்திருந்தான் என்பது கதை.

एवं चिन्तयमानं तु दृष्ट्वा व्यासं तदाऽप्सराः ।
भयभीता हि संजाता शापं मां विसृजेदयम् ॥ १४. २ ॥

सा कृत्वाऽथ शुकीरूपं निर्गता भयविह्वला ।
कृष्णस्तु विस्मयं प्राप्तो विहंगीं तां विलोकयन् ॥ १४. ३ ॥

कामस्तु देहे व्यासस्य दर्शनादेव संगतः ।
मनोऽतिविस्मितं जातं सर्वगात्रेषु विस्मितः ॥ १४. ४ ॥

स तु धैर्येण महता निगृह्णन्मानसं मुनिः ।
न शशाक नियन्तुं च स व्यासः प्रसृतं मनः ॥ १४. ५ ॥

मन्थनं कुर्वतस्तस्य मुनेरग्निचिकीर्षया ।
अरण्यामेव सहसा तस्य शुक्रमथापतत् ॥ १४. ७ ॥

14.2–3. இங்ஙனம் (ஊர்வசிமாதிரி தான் இந்த க்ருதாசியும் இவள் வலையில் விழக்கூடாது என்று) சிந்தித்துக் கொண்டிருந்த வியாஸரை அந்த அப்ஸர ஸ்திரீ பார்த்து 'இவர் நம்மை சபித்து விடுவார் போலிருக்கிறது' என்று பயத்தால் நடுங்கி அவள் ஒரு கிளி ரூபத்தை எடுத்துக் கொண்டாள். கிருஷ்ணத்துவைபாயனர் அந்தப் பறவையைப் பார்த்து ஆச்சரியமடைந்தார்.

14.4. க்ருதாசியைப் பார்த்தவுடனேயே வியாஸருடைய உடலில் ஏற்பட்ட காமவேகம் எல்லா அவயவங்களிலும் ஒரு விறுவிறுப்பை உண்டாக்கி அவருடைய மனதையும் பிரமிக்கச் செய்தது.

14.5. அவ்வியாஸ முனிவர் மிகவும் தைரியத்துடன் மனதை அடக்க முயன்றும் நழுவிவிட்ட மனதைக் கட்டிப் பிடிக்க முடியவில்லை.

14.7. அக்கினியை மூட்டி உபாஸிப்பதற்காக அரணிக் கட்டையைக் கடைய ஆரம்பிக்கவே விரைவில் அவருடைய சுக்லம் வெளிப்பட்டு அரணியில் விழுந்தது.

सोऽविचिन्त्य तथा पातं ममन्थारणिमेव च ।
तस्माच्छुकः समुद्भूतो व्यासाकृतिमनोहरः ॥ १४. ८ ॥

विस्मयं जनयन्बालः संजातस्तदरण्यजः ।
यथाऽध्वरे समिद्धोऽग्निर्भाति हव्येन दीप्तिमान् ॥ १४. ९ ॥

व्यासस्तु सुत-मालोक्य विस्मयं परमं गतः ।
किमेतदिति संचिन्त्य वरदानाच्छिवस्य वै ॥ १४. १० ॥

तेजोरूपी शुको जातोऽप्यरणीगर्भसम्भवः ।
द्वितीयोऽग्निरिवात्यर्थं दीप्यमानः स्वतेजसा ॥ १४. ११ ॥

गंगान्तः स्नापयामास समागत्य गिरेस्तदा ।
पुष्पवृष्टिस्तु खाज्जाता शिशोरुपरि तापसाः ॥ १४. १३ ॥

14.8. அங்ஙனம் விழுந்ததைப் பொருட்படுத்தாமல் மேலும் அரணியைக் கடைந்து கொண்டேயிருந்தார். அதிலிருந்து மனதைக்கவரும் உருவத்துடன் வியாஸரைப் போலவே ஒரு உருவம் வெளிவந்தது. அதுதான் சுகர்.

14.9. எங்ஙனம் யாகத்தில் மூட்டிய அக்கினி ஹோமத் திரவியத்தால் பிரகாசிக்குமோ அங்ஙனம் அரணியிலிருந்து தோன்றிய இந்த குமாரன் ஆச்சரியத்தை விளைவித்துக் கொண்டு பிரகாசித்தான்.

14.10–11. வியாஸரும் புத்திரனைப்பார்த்து மிகவும் வியப்புற்று 'இது எங்ஙனம் நிகழ்ந்தது?' என்று ஆலோசித்து, 'இது சிவனுடைய வரதானத்தின் மகிமை. ஒளி வண்ணனாய் அரணியின் கர்ப்பத்திலிருந்துதித்த இந்த சுகன் தன்னுடைய தேஜஸ்ஸால் இரண்டாவது அக்கினியைப் போல் பிரகாசிக்கிறான்' என மகிழ்ந்தார்.

14.13. முனிவர்களே! மலையிலிருந்து இறங்கிவந்து கங்காதேவி குழந்தைக்கு நீராட்டுவித்தாள். ஆகாயத்திலிருந்து குழந்தையின் மேல் அப்பொழுது பூமாரி பெய்தது.

जातकर्मादिकं चक्रे व्यासस्तस्य महात्मनः ।
देवदुन्दुभयो नेदु-र्ननृतुश्चाप्सरोगणाः ॥ १४. १४ ॥

जगुर्गन्धर्वपतयो मुदितास्ते दिदृक्षवः ।
विश्वावसु-र्नारदश्च तुम्बुरुः शुकसंभवे ॥ १४. १५ ॥

तुष्टुवु-र्मुदिताः सर्वे देवा विद्याधरास्तथा ।
दृष्ट्वा व्याससुतं दिव्य-मरणीगर्भसम्भवम् ॥ १४. १६ ॥

अन्तरिक्षात्पपातोर्व्यां दण्डः कृष्णाजिनं शुभम् ।
कमण्डलुस्तथा दिव्यः शुकस्यार्थे द्विजोत्तमाः ॥ १४. १७ ॥

सद्यः स ववृधे बालो जातमात्रोऽतिदीप्तिमान् ।
तस्योपनयनं चक्रे व्यासो विद्याविधानवित् ॥ १४. १८ ॥

14.14. அந்த மகாத்மாவாகிய குழந்தைக்கு வியாஸர் ஜாதகர்மா முதலியவற்றைச் செய்வித்தார். தேவதுந்துபிகள் முழங்கின. அப்ஸரகணங்கள் நர்த்தனம் செய்தனர்.

14.15–16. கந்தர்வ சிரேஷ்டர்கள் பாடினார்கள். சுகர் பிறந்த காட்சியைப் பார்த்த விச்வாவஸு, நாரதர், தும்புரு ஆகியோர் துதித்தனர். தேவர்களும் வித்யாதரர்களும் மற்றும் எல்லோரும் அரணியின் கர்ப்பத்திலுதித்த திவ்யமான வியாஸபுத்திரனைக் கண்டு ஆனந்தமடைந்தனர்.

14.17. பிராம்மண சிரேஷ்டர்களே! ஆகாயத்திலிருந்து மங்களமாக தெய்வத்தன்மை வாய்ந்த தண்டம், மான்தோல், கமண்டலு ஆகியவை சுகருடைய உபயோகத்திற்காக வீழ்ந்தன.

14.18. பிறந்த அளவிலேயே அக்குழந்தை மிகவும் தேஜஸ்வியாக வளரலானான், வித்தையின் முறையையறிந்த வியாஸர் அவனுக்கு உபநயனம் செய்வித்தார்.

उत्पन्नमात्रं तं वेदाः सरहस्याः ससंग्रहाः ।
उपतस्थु-र्महात्मानं यथाऽस्य पितरं तथा ॥ १४. १९ ॥

यतो दृष्टं शुकीरूपं घृताच्याः सम्भवे तदा ।
शुकेति नाम पुत्रस्य चकार मुनिसत्तमाः ॥ १४. २० ॥

बृहस्पति-मुपाध्याय कृत्वा व्याससुतस्तदा ।
व्रतानि ब्रह्मचर्यस्य चकार विधिपूर्वकम् ॥ १४. २१ ॥

सोऽधीत्य निखिलान् वेदान् सरहस्यान् ससंग्रहान् ।
धर्मशास्त्राणि सर्वाणि कृत्वा गुरुकुले शुकः ॥ १४. २२ ॥

गुरवे दक्षिणां दत्त्वा समावृत्तो मुनिस्तदा ।
आजगाम पितुः पार्श्वं कृष्णद्वैपायनस्य च ॥ १४. २३ ॥

14.19. இரகசியமான உபநிஷதங்களுடனும் ஸம்ஹிதைகளுடனும் வேதங்கள் இவருடைய தந்தையைத் தாமே வந்தடைந்தாற்போல் இவரிடமும் வந்து சேவை புரியலாயின.

14.20. முனிசிரேஷ்டர்களே! இவருடைய பிறப்பின் பொழுது கிருதாசியினுடைய கிளிவடிவம் காணப்பட்டதால் புத்திரராகிய இவருக்கு வியாஸர் சுகர் (ஸம்ஸ்கிருதத்தில் 'சுக:' என்றால் கிளி) எனப் பெயரிட்டார்.

14.21. வியாஸபுத்திரர் பிருஹஸ்பதியை உபாத்தியாயராக அடைந்து பிரம்மசரிய விரதங்களை விதிப்படி அனுஷ்டித்தார்.

14.22–23. இரகசியமான உபநிஷதங்களுடனும் ஸம்ஹிதைகளுடனும் எல்லா வேதங்களையும் எல்லா தர்ம சாஸ்திரங்களையும் குருகுலத்தில் கற்று முடித்து குருவிற்கு தக்ஷிணை கொடுத்து சுகமுனிவர் தந்தையாகிய கிருஷ்ணத்துவைபாயனரிடம் திரும்பிவந்தார்.

दृष्ट्वा व्यासः शुकं प्राप्तं प्रेम्णोत्थाय ससम्भ्रमः ।
आलिलिंग मुहु-र्घ्राणं मूर्ध्नि तस्य चकार ह ॥ १४. २४ ॥

दारकर्म ततो व्यासः शुकस्य पर्यचिन्तयत् ।
कन्यां मुनिसुतां कान्ता-मपृच्छदतिवेगवान् ॥ १४. २६ ॥

शुक उवाच—

अयोनिजोऽहं विप्रर्षे योनौ मे कीदृशी मतिः ।
न वांछाम्यहमग्रेऽपि योनावेव समुद्भवम् ॥ १४. ४२ ॥

किं सुखं तात संसारे निजतत्त्वविचारणात् ।
मूढानां सुखबुद्धिस्तु विटसु कीटसुखं यथा ॥ १४. ४७ ॥

14.24. சுகர் திரும்பிவந்ததைக் கண்டு வியாசர் அன்பு பொங்க எழுந்து அவரை உச்சி முகர்ந்து பலமுறை இறுகத் தழுவிக்கொண்டார்.

14.26. பின்பு வியாஸர் சுகருக்கு விவாஹம் செய்விக்க எண்ணியவராய் முனிவர்களின் பெண்களில் அழகானவர் களைப் பற்றி மிகவும் துரிதமாய் விசாரித்தார்.

சுகர் கூறியது—

14.41. வேதரிஷியாகிய தந்தையே! நான் ஸ்திரீ யோனியிற் பிறவாதவன். என் மனது யோனியை நாட வில்லை. மீண்டும் எதிர் காலத்திலும் யோனியிற் பிறப்பதை நான் விரும்பவில்லை.

14.47. அப்பா! ஆத்ம தத்துவத்தை ஆராய்ந்தால் ஸம்ஸாரத்தில் என்ன சுகம்? மூடர்களுக்கு இருக்கும் சுகபுத்தியோவெனின் அது மலத்தில் புழுக்களுக்கிருப்பது போன்றதேயாம்.

अधीत्य वेदशास्त्राणि संसारे रागिणश्च ये ।
तेभ्यः परो न मूर्खोऽस्ति सधर्माः श्वाऽश्वसूकरैः ॥ १४. ४८ ॥

मानुष्यं दुर्लभं प्राप्य वेदशास्त्राण्यधीत्य च ।
बध्यते यदि संसारे को विमुच्येत मानवः ॥ १४. ४६ ॥

नातः परतरं लोके क्वचिदाश्चर्य-मद्भुतम् ।
पुत्रदारगृहासक्तः पण्डितः परिगीयते ॥ १४. ५० ॥

न बाध्यते यः संसारे नारीमायागुणैस्त्रिभिः ।
स विद्वान् स च मेधावी शास्त्रपारंगतो हि सः ॥ १४. ५१ ॥

किं वृथाऽध्ययनेनात्र दृढबन्धकरेण च ।
पठितव्यं तदेवाऽऽशु मोचयेद्भवबन्धनात् ॥ १४. ५२ ॥

14.48. வேதசாஸ்திரங்களைப்படித்தும் ஸம்ஸாரத்தில் பற்றுள்ளவர்கள் எவர்களோ அவர்களைவிட மூடர்கள் எவருமில்லை. அவர்கள் நாய்க்கும் குதிரைக்கும் பன்றிக்கும் சமமானவர்கள்.

14.49. அடைதற்கரிய மனிதப் பிறவியையடைந்து வேத சாஸ்திரங்களையுங் கற்று ஸம்ஸாரத்தில் கட்டுப்பட்டால் எந்த மனிதன் தான் விடுதலையடைய முடியும்?

14.50. புத்திரன் என்றும் மனைவி என்றும் வீடு என்றும் பற்றுக் கொண்டவனைப் பண்டிதன் என்று புகழ்கிறார்களே, இதைவிட மேலான ஆச்சரியமும் அற்புதமும் உலகில் இல்லவே இல்லை.

14.51. பெண்ணென்னும் மாயையாகிற முப்பிரிக் கயிற்றால் எவன் கட்டுப்பட்டுத் துன்பத்துக்காளாகவில்லையோ அவனே வித்வான், அவனே புத்திசாலி, அவனே சாஸ்திரங்களிற் கரைகண்டவன்.

14.52. திடமாகக் கட்டுறச் செய்யும் வீண் அத்தியயனத்தினால் இங்கு என்ன பயன்? எது ஸம்ஸார பந்தத்திலிருந்து விடுவிக்குமோ அதைத்தான் விரைவில் கற்க வேண்டும்.

गृह्णाति पुरुषं यस्माद् गृहं तेन प्रकीर्तितम् ।
क्व सुखं बन्धनागारे तेन भीतोऽस्म्यहं पितः ।। १४. ५३ ।।

व्यास उवाच—

न गृहं बन्धनागारं बन्धने न च कारणम् ।
मनसा यो विनिर्मुक्तो गृहस्थोपि विमुच्यते ।। १४. ५७ ।।

न्यायागतधनः कुर्वन्वेदोक्तं विधिवत्क्रमात् ।
गृहस्थोऽपि विमुच्येत श्राद्धकृत्सत्यवाक् शुचिः ।।१४. ५८ ।।

ब्रह्मचारी यतिश्चैव वानप्रस्थो व्रतस्थितः ।
गृहस्थं समुपासन्ते मध्याह्नातिक्रमे सदा ।। १४. ५९ ।।

14.53. புருஷனை விடாது பிடித்துக் கொள்வதாலேயே (க்ருஹித்துக் கொள்வதாலேயே) வீட்டிற்கு க்ருஹம் என்ற பெயர் ஏற்பட்டது போலும். கட்டிவைக்கும் சிறை போன்ற வீட்டில் என்ன சுகம்? தந்தையே! அதைக்கண்டு நான் பயப்படுகிறேன்.

வியாஸர் கூறியது—

14.57. வீடு பந்தப்படுத்தும் இடமன்று; பந்தத்திற்கு அது காரணமுமாகாது. மனதில் எவன் பற்று நீங்கியவனோ அவன் கிருஹஸ்தனாயினும் முக்தி எய்துவான்.

14.58. நியாய வழியில் வந்த பொருளைக் கொண்டு வேதத்தில் விதித்த கர்மங்களை ஒழுங்காக முறைப்படி செய்து கொண்டு(பித்ருகார்யம்செய்து) ஸத்தியவாக்கும் பரிசுத்தமும் உடையவனாய் இருந்தால் கிருஹஸ்தனும் விடுபடுவான்.

14.59. (விரதத்தைக் கைக்கொண்ட) பிரம்மசாரியும் ஸந்நியாஸியும் வானப்பிரஸ்தனும் உச்சிவேளை நெருங்கினால் எப்பொழுதும் (உணவிற்காக) கிருஹஸ்தனை நாடுகிறார்கள்.

श्रद्धया चाऽन्नदानेन वाचा सूनृतया तथा ।
उपकुर्वन्ति धर्मस्था गृहाश्रमनिवासिनः ॥ १४. ६० ॥

गृहाश्रमात्परो धर्मो न दृष्टो न च वै श्रुतः ।
वसिष्ठादिभिराचार्यै-र्ज्ञानिभिः समुपाश्रितः ॥ १४. ६१ ॥

किमसाध्यं महाभाग वेदोक्तानि च कुर्वतः ।
स्वर्गं मोक्षं च सज्जन्म यद्यद्वांछति तद्भवेत् ॥ १४. ६२ ॥

आश्रमादाश्रमं गच्छेदिति धर्मविदो विदुः ।
तस्मादग्निं समाधाय कुरु कर्माण्यतन्द्रितः ॥ १४. ६३ ॥

14.60. கிருஹஸ்தாசிரமத்தில் வாழ்பவர்கள் அதற்குரிய தர்மத்தில் நிலைபெற்றவர்களாய்ச் சிரத்தையுடன் அன்ன தானம் செய்தும் இனிய வார்த்தை பேசியும் உலகிற்கு உபகாரம் செய்கின்றனர்.

14.61. கிருஹஸ்தாசிரமத்தைவிடச் சிறந்த தர்மம் ஒன்று கண்டதுமில்லை கேட்டதுமில்லை. ஞானிகளான வஸிஷ்டர் முதலிய ஆசாரியர்களால் அது கைக்கொள்ளப் பட்டது.

14.62. மகாபாக்கியசாலியே! வேதத்திற் கூறியுள்ள கர்மங்களை அனுஷ்டிப்பவனுக்கு எதுதான் அஸாத்தியம்? ஸ்வர்க்கமுமோ, மோக்ஷமுமோ, நற்பிறவியோ எதெதை விரும்பினுலும் அது கூடிவரும்.

14.63. ''ஒரு ஆசிரமத்திலிருந்து இன்னொரு ஆசிரமத்திற்குச் செல்ல வேண்டும்'' என்று தர்மத்தையறிந்தவர்கள் கருதுகிருர்கள். ஆகையால் அக்கினியை ஆராதித்துக் கொண்டு கர்மங்களைச் சோம்பலின்றிச் செய்பவனுயிரு.

देवान् पितॄन् मनुष्यांश्च सन्तर्प्य विधिवत्सुत ।
पुत्रमुत्पाद्य धर्मज्ञ संयोज्य च गृहाश्रमे ॥ १४. ६४ ॥
त्यक्त्वा गृहं वनं गत्वा कर्ताऽसि व्रतमुत्तमम् ।
वानप्रस्थाश्रमं कृत्वा संन्यासं च ततः परम् ॥ १४. ६५ ॥
इन्द्रियाणि महाभाग मादकानि सुनिश्चितम् ।
अदारस्य दुरन्तानि पंचैव मनसा सह ॥ १४. ६६ ॥
तस्माद्दारान् प्रकुर्वीत तज्जयाय महामते ।
वार्धके तप आतिष्ठेदिति शास्त्रोदितं वचः ॥ १४. ६७ ॥
विश्वामित्रो महाभाग तपः कृत्वातिदुश्चरम् ।
त्रीणि वर्षसहस्राणि निराहारो जितेन्द्रियः ॥ १४. ६८ ॥
मोहितश्च महातेजा वने मेनकया स्थितः ।
शकुन्तला समुत्पन्ना पुत्री तद्वीर्यजा शुभा ॥ १४. ६९ ॥

14.64–65. புத்திரனே! தர்மம் அறிந்தவனே! தேவர்களையும், பிதிருக்களையும் மனிதர்களையும் விதிப்படி திருப்தி செய்வித்து கிருஹஸ்தாசிரமத்தைக் கைக்கொண்டு புத்திரனை உத்பத்தி செய்து, பின்பு கிருஹத்தை விட்டு வனம் சென்று உத்தமமான வானப்பிரஸ்தாசிரம விரதங்களை யனுஷ்டித்து அதற்குமேல் ஸந்நியாஸத்தையடையலாம்.

14.66. மகாபாக்கியசாலியே! மனதுடன் கூடிய ஐந்து இந்திரியங்களும் நிச்சயமாகக் கொழுப்பேறியவை. மனைவியில்லாதவனால் அடக்க முடியாதவை.

14.67. புத்தியிற்சிறந்தவனே! ஆகையால் அவற்றை ஜயிப்பதற்காக மனைவியை ஏற்றுக்கொள். கிழப்பருவத்தில் தான் தவத்தில் நிலைபெறவேண்டும் என்பது சாஸ்திரங்களில் கூறியுள்ள வசனம்.

14.68–69. மஹாபாக்கியசாலியே! மஹாதேஜஸ்வியான விசுவாமித்திரர் மூவாயிரம் வருஷம் ஆஹாரமில்லாமல் இந்திரியங்களை ஜயித்து அனுஷ்டித்தற்கரிய தவத்தைச் செய்துகொண்டு வனத்திலிருந்தும் மேனகையால் மோஹத்தையடையவே அவருடைய வீரியத்தால் அழகிய புத்திரியாகிய சகுந்தலை உண்டானாள்.

दृष्ट्वा दाससुतां कालीं पिता मम पराशरः ।
कामबाणार्दितः कन्यां तां जग्राहोडुपे स्थितः ॥ १४. ७० ॥

तस्मात् त्वमपि कल्याण कुरु मे वचनं हितम् ।
कुलजां कन्यकां वृत्वा वेदमार्गं समाश्रय ॥ १४. ७१ ॥

श्री शुक उवाच—

नाहं गृहं करिष्यामि दुःखदं सर्वदा पितः ।
वागुरासदृशं नित्यं बन्धनं सर्वदेहिनाम् ॥ १५. १ ॥

इन्द्रोऽपि न सुखी तादृग्यादृशो भिक्षुनिःस्पृहः ।
कोऽन्यः स्यादिह संसारे त्रिलोकी-विभवे सति ॥ १५. ३ ॥

14.70. என்னுடைய தகப்பனுரான பராசரர் காளி என்னும் செம்படவப் பெண்ணைக்கண்டு காமவசப்பட்டு அக் கன்னிகையுடன் ஓடத்தில் கூடிநின்ருர்.

14.71. மங்களஸ்வரூபியே! ஆகையால் நீயும் உனக்கு நன்மை தரக்கூடிய என் வார்த்தைப்படி நட. நல்ல குலத்தில் பிறந்த கன்னிகையை மணந்துகொண்டு வேதமார்க்கத்தைக் கைக்கொள்.

ஸ்ரீசுகர் கூறியது—

15.1. அப்பா! பிராணிகளைப் பிடிக்கும் வலை போன்றதும், உடல் படைத்தவர்களுக்கெல்லாம் எப்பொழுதும் பந்தத்திற்குக் காரணமாவதும், துன்பத்தையே தருவதுமான கிருஹஸ்தாசிரமத்தை ஒருபொழுதும் நான் ஏற்க மாட்டேன்.

15.3. ஒரு பற்றற்ற ஸந்நியாஸி எந்த சுகத்தையடைகின்ருனே அந்த சுகத்தை இந்திரனும் அடைவதில்லை. மூவுலகச் செல்வத்தையடைந்தவனுயிருந்தாலும் இந்த ஸம்ஸாரத்தில் ஸந்நியாஸியைவிட வேறு எவன்தான் சுகமடைகிருன்?

तपन्तं तापसं दृष्ट्वा मघवा दुःखितोऽभवत् ।
विघ्नान् वहुविधानस्य करोति च दिवस्पतिः ॥ १५. ४ ॥

जानन्नपि महाभाग पुत्रं वा वीर्यसंभवम् ।
नियोक्ष्यसि महाघोरे संसारे दुःखदे सदा ॥ १५. ९ ॥

जन्मदुःखं जरादुःखं दुःखं च मरणे तथा ।
गर्भवासे पुनर्दुःखं विष्ठामूत्रमये पितः॥ १५. १० ॥

योगशास्त्रं वद मम ज्ञानशास्त्रं सुखाकरम् ।
कर्मकाण्डेऽखिले तात न रमेऽहं कदाचन ॥ १५. १६ ॥

वद कर्मक्षयोपायं प्रारब्धं संचितं तथा ।
वर्तमानं यथा नश्येत् त्रिविधं कर्ममूलजम् ॥ १५. १७ ॥

15.4. தவஞ் செய்யும் தபஸ்வியைக்கண்டு தேவர்கள் நாயகனுகிய இந்திரன் (இவன் தன்னை மீறிவிடுவானென்று) துக்கத்தையடைகிறுன். இந்திரன் அவனுக்குப் பலவிதமான இடையூறுகளைச் செய்கிறுன்.

15.9. பகவானே! நீங்கள் அறிந்தவர்களாயிருந்தும் உங்கள் வீரியத்திலுதித்த புத்திரனை எப்பொழுதும் மகா கோரமான துன்பம் தரும் ஸம்ஸாரத்தில் ஏவுகின்றீர்கள்.

15.10. அப்பா! பிறவி துன்பம், மூப்பு துன்பம், சாவும் அவ்வாறே துன்பம்; மலமும் மூத்திரமும் நிறைந்த கர்ப்பத்தில் வசிப்பதும் மறுபடி துன்பம்.

15.16. எனக்கு யோகசாஸ்திரத்தைக் கூறுங்கள்; சுகத்தைத்தரக்கூடிய ஞானசாஸ்திரத்தை உபதேசியுங்கள்; கர்மகாண்டம் முழுதிலும், அப்பா! நான் ஒருபொழுதும் விருப்பங்கொள்ளேன்.

15.17. பிராரப்தம், ஸஞ்சிதம், ஆகாமி எனும் மூன்று வகையான கருமங்களின் மூலம் உண்டாகும் கருமப்பிணி எப்படி ஒழியுமோ அப்படிப்பட்ட உபதேசத்தைச் செய்யுங்கள்.

सूत उवाच—

एवं विधानि वाक्यानि श्रुत्वा व्यासः शुकस्य च ।
संप्राप महतीं चिन्तां किं करोमीत्यसंशयम् ।। १५. २१ ।।

शोचन्तं पितरं दृष्ट्वा दीनं शोकपरिप्लुतम् ।
उवाच पितरं व्यासं विस्मयोत्फुल्ललोचनः ।। १५. २३ ।।

अहो मायाबलं चोग्रं यन्मोहयति पण्डितम् ।
वेदान्तस्य च कर्तारं सर्वज्ञं वेदसम्मितम् ।। १५. २४ ।।

पुराणानां च वक्ता च निर्माता भारतस्य च ।
विभागकर्ता वेदानां सोऽपि मोहमुपागतः ।। १५. २६ ।।

तां यामि शरण देवीं या मोहयति वै जगत् ।
ब्रह्मा विष्णुहरादींश्च कथाऽन्येषां च कीदृशी ।। १५. २७ ।।

ஸூதர் கூறியது—

15.21. சுகருடைய இம்மாதிரியான வார்த்தைகளைக் கேட்ட வியாஸர் 'இனி நான் என்ன செய்வேன்?' என்று பெருங்கவலையில் ஆழ்ந்தார். அதில் சந்தேகம் இல்லை.

15.23. சோகம் மேலிட்டவரும் எளியவரும் துக்கப் படுபவருமான தன் தந்தையாகிய வியாஸரைக்கண்டு வியப் பால் மலர்ந்த கண்களுடன் சுகர் பின்வருமாறு கூறலானார்.

15.24–26. 'மாயையின் வலிமை கொடியது; அது பண்டி தரையும் மயக்குகிறது. வேதாந்த நூலைத் தொகுத்தவரும், எல்லாம் அறிந்தவரும், வேதத்திற்குச் சமமான புராணங் களைக் கூறியவரும், பாரதத்தைச் செய்தவரும், வேதங்களை விபாகம் செய்தவரும் ஆகிய இவருமல்லவா மோஹத்தை யடைகின்றார்.

15.27. 'பிரபஞ்சத்தை மோகிக்கச் செய்யும் தேவி எவளோ அவளை நான் சரண் புகுகின்றேன். பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் ஆகியோருடைய கதையும் இதுவேயாகும் பொழுது மற்றவர்களைப்பற்றிக் கூறுவதற்கு என்ன இருக் கிறது.'

तां नत्वा मनसा देवीं सर्वकारणकारणम् ।
जननीं सर्वदेवानां ब्रह्मादीनां तथेश्वरीम् ॥ १५. ३४ ॥

पितरं प्राह दीनं तं शोकार्णवपरिप्लुतम् ।
अरणीसम्भवो व्यासं हेतुमद्वचनं शुभम् ॥ १५. ३५ ॥

पाराशर्य महाभाग सर्वेषां बोधतः स्वयम् ।
किं शोकं कुरुषे स्वामिन् यथाऽज्ञः प्राकृतो नरः ॥ १५. ३६ ॥

अद्याहं तव पुत्रोऽस्मि न जाने पूर्वजन्मनि ।
कोऽहं कस्त्वं महाभाग विभ्रमोऽयं महात्मनि ॥ १५. ३७ ॥

कुरु धैर्यं प्रबुध्यस्व मा विषादे मनः कृथाः ।
मोहजालमिमं मत्वा मुंच शोकं महामते ॥ १५. ३८ ॥

15.34–35. எல்லா காரணங்களுக்கும் மூலகாரணமான தேவியும் பிரம்மா முதலிய தேவர்களனைவரையும் தோற்றுவித்தவளும் ஈசுவரியுமான அவளை மனதால் வணங்கி, அரணியிலுதித்தவரான சுகர் துயரக் கடலிலாழ்ந்து மனம் நொந்திருந்த தந்தையாகிய வியாஸரை நோக்கிக் காரணங்களுடன் கூடியதும் அழகியதுமான பின்வரும் வார்த்தைகளைக் கூறினார்.

15.36. ‘பராசரபுத்திரரும் மகாபாக்கியசாலியும் எல்லோருக்கும் பிரத்தியக்ஷயமாய் ஞானத்தை போதிப்பவருமாகிய ஐயனே! ஒன்றுமறியாத மனிதரைப் போல் நீர் ஏன் துக்கப்படுகிறீர்’?

15.37. ‘இப்பொழுது நான் உங்கள் புத்திரன்; முன் பிறவியில் எவர் புத்திரனோ அறியேன்; நான் யார்? நீங்கள் யார்? மஹாபாக்கியசாலியே! எங்கும் வியாபித்த ஆத்மாவிடம் இவ்வுலகமே ஒரு மதிமயக்கம்.

15.38. ‘தைரியத்தைக் கைக்கொள்ளுங்கள்; துயரத்திற்கு மனதிலிடந்தராமல் எழுந்திருங்கள்; புத்தியிற் சிறந்தவரே! இது ஒரு மோஹஜாலம் எனக் கருதித் துயரத்தை விடுங்கள்.’

व्यास उवाच—

पठ पुत्र महाभाग मया भागवतं कृतम् ।
शुभं न चातिविस्तीर्णं पुराणं ब्रह्मसम्मितम् ।। १५. ४७ ।।
सदसज्ज्ञानविज्ञानं श्रुतमात्रेण जायते ।
येन भागवतेनेह तत्पठ त्वं महामते ।। १५. ४९ ।।
वटपत्रे शयानाय विष्णवे बालरूपिणे ।
केनास्मि बालभावेन निर्मितोऽहं चिदात्मना ।। १५. ५० ।।
किमर्थं केन द्रव्येण कथं जानामि चाखिलम् ।
इत्येवं चिन्त्यमानाय मुकुन्दाय महात्मने ।। १५. ५१ ।।
श्लोकार्धेन तया प्रोक्तं भगवत्याऽखिलार्थदम्
सर्वं खल्विदमेवाहं नान्यदस्ति सनातनम् ।। १५. ५२ ।।

(மனம் தேறிய) வியாஸர் கூறியது—

15.47. மகனே! பாக்கியசாலியே! என்னால் செய்யப் பட்டுள்ள பாகவதம் எனும் நூலை அத்தியயனம் செய். அது மிக விரிவானதன்று; வேதத்திற்கொப்பாய் மங்கள கரமாய் விளங்குவது.

15.49. மகாபுத்திசாலியே! காரண காரியங்களின் பகுத்தறிவு அதைக் கேட்ட மாத்திரத்திலேயே இங்கு ஒரு வருக்கு உண்டாகும். அந்த பாகவதத்தை நீ படி.

15.50. ஆலிலையில் குழந்தை வடிவில் சயனித்திருந்த விஷ்ணு 'சிச்சக்தியால் நான் எதற்காகக் குழந்தை வடி வாக்கி இங்கு விடப்பட்டுள்ளேன்?

15.51–52. 'எதற்காக எப்பொருளைக் கொண்டு எவ் வாறு இது எல்லாம் நிகழ்கிறதென்று எங்ஙனம் அறியலாம்'? என்று சிந்தித்துக் கொண்டிருக்கையில் மஹாத்மாவாகிய அம்முகுந்தருக்கு பகவதியால் அரை சுலோகத்தில் பொருளனைத்தும் உபதேசிக்கப்பட்டது. 'அனாதியான இவ் வுலகனைத்தும் நானே; என்னையன்றி வேறொன்றுமில்லை' என்பது அது.

तद्वचो विष्णुना पूर्वं संविज्ञातं मनस्यपि ।
केनोक्ता वागियं सत्या चिन्तयामास चेतसा ॥ १५. ५३ ॥

तदा शान्ता भगवती प्रादुरास चतुर्भुजा ।
शंखचक्रगदापद्मवरायुधधरा शिवा ॥ १५. ५६ ॥

दिव्याम्बरधरा देवी दिव्यभूषणभूषिता ।
संयुता सदृशीभिश्च सखीभिः स्वविभूतिभिः ॥
प्रादुर्बभूव तस्याग्रे विष्णोरमिततेजसः ॥ १५. ५७ ॥

तां दृष्ट्वा ताश्च संवीक्ष्य तस्मिन्नेकार्णवे जले ।
विस्मयाविष्टहृदयः सम्बभूव जनार्दनः ॥ १५. ६३ ॥

15.53. விஷ்ணுவின் மனதில் ஏற்கெனவே தோன்றிய இவ்வுண்மையான வார்த்தை இப்போது யாரால் சொல்லப் பட்டது என்று யோசித்தார்.

15.56–57. அப்பொழுது பகவதீ தேவியானவள் சாந்தஸ்வரூபிணியாயும் மங்கள வடிவினளாயும் நான்கு கைகளில் சங்கு, சக்கரம், கதை ஆகிய சிறந்த ஆயுதங்களையும் தாமரையையும் ஏந்தியவளாயும், திவ்யமான ஆடையாபரணங்களாலலங்கரிக்கப்பெற்றவளாயும் தன்னைப் போன்றவர்களும் தன்னுடைய சக்தியே உருக் கொண்டவர்களுமான தோழிகளால் சூழப்பெற்றவளுமாய் அளவற்ற தேஜஸ்வியான விஷ்ணுவின் முன் தோன்றினாள்.

15.63. ஒரே ஜலமயமாயிருந்த அவ்விடத்தில் தேவியையும் அவளைச் சூழ்ந்தவர்களையும் கண்ணுற்று ஜனார்த்தனர் ஆச்சரியம் மேலிட்ட உள்ளத்தினராயினர்.

चिन्तयामास सर्वात्मा दृष्टमायोऽतिविस्मितः ।
कुतो भवाः स्त्रियः सर्वाः कुतोऽहं वटतल्पगः ॥ १५. ६४ ॥

अस्मिन्नेकार्णवे घोरे न्यग्रोधः कथमुत्थितः ।
केनाऽहं स्थापितोऽस्म्यत्र शिशुं कृत्वा शुभाकृतिः ॥ १५. ६५ ॥

दृष्ट्वा तं विस्मितं देवं शयानं वटपत्रके ।
उवाच सस्मितं वाक्यं विष्णो किं विस्मितो ह्यसि
॥ १६. १ ॥

महाशक्त्याः प्रभावेण त्वं मां विस्मृतवान् पुरा ।
प्रभवे प्रलये जाते भूत्वा भूत्वा पुनः पुनः ॥ १६. २ ॥

निर्गुणा सा पराशक्तिः सगुणस्त्वं तथाऽप्यहम् ।
सात्त्विकी किल या शक्तिस्तां शक्तिं विद्धि मामिकाम्
॥ १६. ३ ॥

15.64.-65 ஸர்வாத்மாவாகிய விஷ்ணு இந்த மாயை போன்ற காட்சியைக்கண்டு வியப்பினுல் 'இந்த ஸ்திரீகளெல்லாம் எங்கிருந்துண்டானுர்கள்? நானும்தான் ஏன் ஆலிலை மேலிருக்கிறேன்? இந்த பயங்கரமான பிரளய ஜலத்தில் ஆலமரம் எப்படி உண்டாயிற்று? நான் யாரால் அழகிய சிறு குழந்தையாக்கப்பட்டு இங்கு ஸ்தாபிக்கப் பட்டேன்?' என்று யோசித்தார்.

16.1–3. அவ்வாறு வியப்புற்று ஆலிலையில் சயனித்துக் கொண்டிருந்த விஷ்ணுவை நோக்கிப் புன்முறுவலுடன் தேவியானவள் பின்வரும் வார்த்தையைச் சொன்னுள். 'விஷ்ணுவே! நீர் ஏன் வியப்புறுகிறீர்? பராசக்தியின் மகிமையால் சிருஷ்டியின் போதும் பிரளயத்தின் போதும், மீண்டும் மீண்டும் தோன்றும் நீர் என்னை மறந்து விட்டீர். அந்த பராசக்தி நிர்க்குணமானவள். நீர் ஸகுணமூர்த்தி, நானும் அப்படியே. ஸாத்விக சக்தி எதுவோ அந்த சக்தியை என்னுடையதாக அறிந்துகொள்ளும்.

त्वन्नाभिकमलाद् ब्रह्मा भविष्यति प्रजापतिः ।
स कर्ता सर्वलोकस्य रजोगुणसमन्वितः ॥ १६. ४ ॥

विश्वस्यास्य महाभाग त्वं वै पालयिता तथा ।
तद्भ्रुवोर्मध्यदेशाच्च क्रोधाद्रुद्रो भविष्यति ॥ १६. ८ ॥

तपः कृत्वा महाघोरं प्राप्य शक्तिं तु तामसीम् ।
कल्पान्ते सोऽपि संहर्ता भविष्यति महामते ॥ १६. ९ ॥

तेनाऽहं त्वामुपायाता सात्त्विकीं त्वमवेहि माम् ।
स्थास्येऽहं त्वत्समीपस्था सदाऽहं मधुसूदन ॥
हृदये ते कृतावासा भवामि सततं किल ॥ १६. १० ॥

विष्णुरुवाच—

श्लोकस्यार्धं मया पूर्वं श्रुतं देवि स्फुटाक्षरम् ।
तत्केनोक्तं वरारोहे रहस्यं परमं शिवम् ॥ १६. ११ ॥

16.4. 'உம்முடைய நாபிகமலத்திலிருந்து பிரஜைகளுக்குப் பதியான பிரம்மா உண்டாகப்போகிறார். ரஜோ குணத்துடன் கூடிய அவர் உலகனைத்தையும் சிருஷ்டிப்பவராவார்.

16.8. 'மஹாபாக்கியசாலியே! அவ்வாறே நீர் இவ்வுலகனைத்தையும் இரக்ஷிப்பவர். பிரம்மாவின் புருவமத்தியிலிருந்து அவருடைய கோபத்தால் ருத்திரர் உண்டாவார்.

16.9. மகாபுத்திசாலியே! கோரமான தவம்புரிந்து என்னுடைய தாமஸ சக்தியையடைந்து கல்பத்தின் முடிவில் ருத்திரர் ஸம்ஹாரகர்த்தா ஆவார்.

16.10. 'மதுஸூதனரே! அதனால் நான் உன்னையடைந்தேன். என்னை நீர் ஸாத்விகீ சக்தியென அறிவீராக. நான் எப்பொழுதும் உமது ஸமீபத்தில் இருப்பேன். எல்லாக் காலத்திலும் உமது இருதயத்தில் குடிகொண்டிருப்பேன்.'

விஷ்ணு கூறியது—

16.11. தேவி! தெளிவான அக்ஷரங்களுடன் கூடிய ஒரு சுலோகத்தின் பாதி முன்பு என்னால் கேட்கப்பட்டது. அது மங்களத்தைத் தரும் பரமரகசியம். அது யாரால் சொல்லப்பட்டது?

महालक्ष्मीरुवाच—

शृणु शौरे वचो मह्यं सगुणाऽहं चतुर्भुजा ।
मां जानासि न जानासि निर्गुणां सगुणालयाम् ॥ १६. १४ ॥

त्वं जानीहि महाभाग तया तत्प्रकटीकृतम् ।
पुण्यं भागवतं विद्धि वेदसारं शुभावहम् ॥ १६. १५ ॥

सूत उवाच—

शुकोऽधीत्य पुराणं तु स्थितो व्यासाश्रमे शुभे ।
न लेभे शर्म कर्मात्मा ब्रह्मात्मज इवापरः । १६. ४० ॥

एकान्तसेवी विकलः स शून्य इव लक्ष्यते ।
नात्यन्तभोजनासक्तो नोपवासरतस्तथा ॥ १६. ४१ ॥

மகாலக்ஷ்மி கூறியது—

16.14–15. விஷ்ணுவே! என் வார்த்தையைக் கேளும். நான் ஸகுணமானவள். நான்கு கைகளுடன் கூடினவள். என்னை அறிகிறீர். ஸகுணத்திற்கு ஆலயமான நிர்க்குண ஸ்வரூபிணியாக நீர் அறியவில்லை. மகாபாக்கிய சாலியே! அவளை அறிந்து கொள்ளும். அவளால்தான் அது பிரகடனம் செய்யப்பட்டது. மங்களத்தைத்தருவதும், புண்ணியம் மிக்கதும் வேதஸாரமுமான பாகவதத்தின் வித்து என்று அதை அறிந்துகொள்ளும்.

ஸூதர் கூறியது—

16.40. சுகர் பாகவத புராணத்தை அத்தியயனம் செய்துவிட்டு மங்களமான வியாஸாசிரமத்தில் இருந்தார். இன்னொரு பிரம்மபுத்திரரைப் போலிருந்த அவர் கர்மத்தில் ஸந்தோஷமடையவில்லை.

16.41. தனிமையில் நாட்டமுடையவராயும், கலகலப் பற்றவராயும், ஏதுமற்றவர் போலும் அவர் காணப்பட்டார். உணவில் அதிக விருப்பமற்றவராயும் உபவாஸத்திலும் மனம் செல்லாதவராயுமிருந்தார்.

चिन्ताविष्टं शुकं दृष्ट्वा व्यासः प्राह सुतं प्रति ।
किं पुत्र चिन्त्यते नित्यं कस्माद् व्यग्रोऽसि मानद
॥ १६. ४२ ॥

गच्छ त्वं मिथिलां पुत्र पालितां जनकेन ह ।
स ते मोहं महाभाग नाशयिष्यति भूपतिः ॥ १६. ४५ ॥

जीवन्मुक्तः स राजर्षिर्ब्रह्मज्ञानमतिः शुचिः ।
तथ्यवक्ताऽतिशान्तश्च यागी योगप्रियः सदा ॥ १६. ४८ ॥

शुक उवाच—

दंभोऽयं किल धर्मात्मन् भाति चित्ते ममाऽधुना ।
जीवन्मुक्तो विदेहश्च राज्यं शास्ति मुदान्वितः ॥ १६. ५० ॥

16.42. சிந்தையிலாழ்ந்திருந்த புத்திரனுகிய சுகரைப் பார்த்து வியாஸர் கூறுவார்: 'குழந்தாய்! எப்பொழுதும் என்ன சிந்தனை செய்து கொண்டிருக்கிருய்? உன் மனது எதில் ஈடுபட்டுள்ளது?

16.45. 'புத்திரா! ஜனகரால் பாலிக்கப்படும் மிதிலைக்கு நீ சென்ருல் அந்த ஜனகமகாராஜா உன்னுடைய மனக் கலக்கத்தைப் போக்கிவிடுவார்.

16.48. 'அவர் ஜீவன்முக்தர், ராஜரிஷி, பிரம்ம ஞானத்தில் ஆழ்ந்த மதியுடையவர், பரிசுத்தமானவர், உண்மையை உபதேசிப்பவர், பரமசாந்தர், யோகி, எப்பொழுதும் யோகத்தில் பிரியமுள்ளவர்.'

சுகர் கூறியது—

16.50. தர்மாத்மாவாகிய தந்தையே! என் மனதில் நீர் சொல்லும் இந்த விஷயம் கபடமாய்த் தோன்றுகிறது. (என்ருலும்) ஜீவன்முக்தரும் விதேஹர் எனப்பெயர்படைத் தவருமான இவர் மனமகிழ்ச்சியுடன் அரசாளுகிருரே!

द्रष्टुमिच्छाम्यहं भूपं विदेहं नृपसत्तमम् ।
कथं तिष्ठति संसारे पद्मपत्रमिवाम्भसि ।। १६. ५२ ।।

शत्रुमित्र-परिज्ञानं वैरप्रीतिकरं सदा ।
व्यवहारे परे तिष्ठन् कथं न कुरुते नृपः ।। १६. ५८ ।।

दृष्टपूर्वो न मे कश्चिज्जीवन्मुक्तश्च भूपतिः ।
शंकेयं महती तात गृहे मुक्तः कथं नृपः ।। १६. ६० ।।

दिदृक्षा महती जाता श्रुत्वा तं भूपतिं तथा ।
सन्देह-विनिवृत्त्यर्थं गच्छामि मिथिलां प्रति ।। १६. ६१ ।।

16.52. தண்ணீரில் தாமரையிலைபோல் ஸம்ஸாரத்தில் அவர் எப்படி நிலைபெற்றுள்ளார் என்று அறிவதற்காக வாவது அந்த அரசசிரேஷ்டரான விதேஹபூபதியைக் காண நான் விரும்புகிறேன்.

16.58. பகைவன் நண்பன் என்ற உணர்ச்சி பகைமையையும் நட்பையும் தோற்றுவிக்கும்: அப்படிப்பட்ட ராஜ்ய விவகாரத்திலிருந்து கொண்டு அவர் எப்படி பேதத்தைச் செய்யாமலிருப்பார்?

16.60. ஜீவன் முக்தனான ஒரு அரசனை நான் இதற்கு முன் பார்த்ததில்லை. தந்தையே! கிருஹஸ்தாசிரமத்திலிருந்து கொண்டே இவ்வரசன் எப்படி முக்தனாயிருப்பான் என்று எனக்கு இது பெரிய சந்தேகமாயிருக்கிறது.

16.61. அந்த அரசனைப்பற்றிக் கேட்டபின் அவரைக் காணவேண்டுமென்ற ஆசை மிகுதியாயுளது; சந்தேகத்தைப் போக்கிக் கொள்வதற்காக மிதிலைக்குப் போகிறேன்.

व्यास उवाच—

स्वस्त्यस्तु शुक दीर्घायुर्भव पुत्र महामते ।
सत्यां वाचं प्रदत्त्वा मे गच्छ तात यथासुखम् ॥ १७. ७ ॥

आगन्तव्यं पुनर्गत्वा ममाश्रम-मनुत्तमम् ।
न कुत्रापि च गन्तव्यं त्वया पुत्र कथंचन ॥ १७. ८ ॥

सुखं जीवामि पुत्राऽहं दृष्ट्वा ते मुखपंकजम् ।
अपश्यन् दुःखमाप्नोमि प्राणस्त्वमसि मे सुत ॥ १७. ९ ॥

दृष्ट्वा त्वं जनकं पुत्र सन्देहं विनिवर्त्य च ।
अत्रागत्य सुखं तिष्ठ वेदाध्ययन-तत्परः ॥ १७. १० ॥

வியாஸர் கூறியது—

17.7. குழந்தாய்! சுகா! சிறந்தமதிமானே! உனக்கு மங்களமுண்டாகட்டும். நீ சிரஞ்ஜீவியாக இரு. அப்பா! எனக்கு வாக்குறுதியொன்று கொடுத்துவிட்டு உன்னிஷ்டப் படி போய்வா.

17.8. போய்விட்டு என்னுடைய ஒப்புயர்வற்ற ஆசிர மத்திற்கு மீண்டும் திரும்பிவரவேண்டும். புத்திரா! எவ் வாற்ருனும் நீ வேறெங்கும் போய்விடக்கூடாது.

17.9. மகனே! தாமரை போன்ற உன் முகத்தைப் பார்த்துக்கொண்டு நான் இன்பமாய் வாழ்கிறேன். காணு விட்டால் துன்பமடைவேன். பிள்ளாய், நீ என்னுடைய பிராணனுயிருக்கிருய்.

17.10. மகனே! நீ ஜனகரைப்பார்த்து சந்தேகத்தைத் தீர்த்துக்கொண்ட பிறகு இங்கு வந்து வேதாத்தியயனத்தில் மனதூன்றியவனுய் நிலைபெறுவாயாக.

सूत उवाच—

इत्युक्तः सोऽभिवाद्यार्य कृत्वा चैव प्रदक्षिणाम् ।
चलितस्तरसाऽतीव धनुर्मुक्तः शरो यथा ॥ १७. ११ ॥

सम्पश्यन् विविधान् देशाँल्लोकांश्च वित्तधर्मिणः ।
वनानि पादपांश्चैव क्षेत्राणि फलितानि च ॥ १७. १२ ॥

तापसांस्तप्यमानांश्च याजकान् दीक्षयान्वितान् ।
योगाभ्यासरतान्योगि-वानप्रस्थान् वनौकसः ॥ १७. १३ ॥

शैवान् पाशुपतांश्चैव सौराञ्छाक्तांश्च वैष्णवान् ।
वीक्ष्य नानाविधान् धर्माञ्जगामातिस्मयन्मुनिः ॥ १७. १४ ॥

ஸூதர் கூறியது—

17.11. இவ்வாறு கூறப்பட்ட சுகர் சிரேஷ்டராகிய தந்தையைப் பிரதக்ஷிணம் செய்து, நமஸ்கரித்து, வில்லிலிருந்து விடப்பட்ட பாணம் போல் மிகவும் வேகமாகச் சென்ருர்.

17.12. விதவிதமான தேசங்களேயும் பொருளீட்டி தர்மம் செய்பவர்களின் லோகங்களேயும் வனங்களேயும் மரங்களேயும் விளேபொருள்கள் நிறைந்த வயல்களேயும்,

17.13. தவத்திலாழ்ந்த முனிவர்களேயும் தீக்ஷைபூண்டு யாகஞ் செய்பவர்களேயும் யோகாப்பியாசத்தில் பற்றுள்ள யோகிகளேயும், வனவாசம் செய்யும் வானப் பிரஸ்தர்களேயும்,

17.14. சைவர்கள், பாசுபதர்கள், ஸௌரர்கள், சாக்தர்கள், வைஷ்ணவர்கள் ஆகியவர்களேயும் இன்னும் பலவித ஆசாரமுள்ளவர்களேயும் கண்டு ஆச்சரியமடைந்தவராய் சுகமுனிவர் சென்ருர்.

वर्षद्वयेन मेरुं च सम्मुल्लंघ्य महामतिः ।
हिमाचलं च वर्षेण जगाम मिथिलां प्रति ॥ १७. १५ ॥

प्रविष्टो मिथिलां मध्ये पश्यन् सर्वद्धिमुत्तमाम् ।
प्रजाश्च सुखिताः सर्वाः सदाचाराः सुसंस्थिताः ॥ १७. १६ ॥

क्षत्रा निवारितस्तत्र कस्त्वमत्र समागतः ।
किं ते कार्यं वदस्वेति पृष्टस्तेन नचाब्रवीत् ॥ १७. १७ ॥

निःसृत्य नगरद्वारात् स्थितः स्थाणुरिवाचलः ।
विस्मितोऽतिहसंस्तस्थौ वचो नोवाच किंचन ॥ १७. १८ ॥

प्रतीहार उवाच—

ब्रूहि मूकोऽसि किं ब्रह्मन् किमर्थं त्वमिहागतः ।
चलनं च विना कार्यं न भवेदिति मे मतिः ॥ १७. १९ ॥

17.15. சிறந்த புத்திமானுன சுகர் இரண்டு வருஷங்களில் மேருவையும் ஒரு வருஷத்தில் இமயமலேயையுங்கடந்து மிதிலேயை அடைந்தார்.

17.16. சிறந்த செல்வங்களெல்லாம் நிறைந்த மிதிலேயினுட் புகுந்து பிரஜைகளெல்லாம் இன்புற்று வாழ்வதையும் நல்ல ஆசாரமுடையவர்களாகவும் தர்மத்தில் நிலே பெற்றவர்களாயிருப்பதையும் கண்டார்.

17.17. 'நீ யார்? இங்கு எதற்கு வந்தாய்? உன் காரியமென்ன? கூறுவாய்' என்று காவலாளியால் தடுத்து வினவப்பட்டார். ஆனுல் அவர் பதில் சொல்லவில்லே.

17.18. பட்டணத்தின் வாயிலிலிருந்து விலகி ஒரு கட்டையைப்போல் அசையாமல் நிற்கலானுர். ஒரு வார்த்தையும் பேசவில்லே. புன்முறுவலால் மலர்ந்த முகத்துடன் நின்றுர்.

காவலாளி கூறியது—

17.19. பிராம்மணரே! கூறும். நீர் ஊமையா? எதற்காக இங்கு வந்தீர்? ஒரு காரியமுமில்லாமல் இடம் பெயர்வது நிகழாது என்பது என் நம்பிக்கை.

राजाज्ञया प्रवेष्टव्यं नगरेऽस्मिन् सदा द्विज ।
अज्ञातकुलशीलस्य प्रवेशो नाऽत्र सर्वथा ॥ १७. २० ॥

शुक उवाच—

यदर्थमागतोऽस्म्यत्र तत्प्राप्तं वचनात्तव ।
विदेहनगरं द्रष्टुं प्रवेशो यत्र दुर्लभः ॥ १७. २२ ॥
क्व मेरुर्मिथिला क्वेयं पद्भ्यां च समुपागतः ।
परिभ्रम फलं किं मे वंचितो विधिना किल ॥ १७. २७ ॥

सूत उवाच—

तच्छ्रुत्वा वचनं तस्य मत्वा तं ज्ञानिनं द्विजम् ।
क्षत्ता प्रवेशयामास कक्षां चातिमनोरमाम् ॥ १७. ४८ ॥

17.20. பிராம்மணரே! எப்பொழுதுமே இந்நகரில் அரசனுடைய உத்திரவினால்தான் பிரவேசிக்க இயலும். குலமும் குணமும் தெரியாத ஒருவனுக்கு ஒருபொழுதும் இங்கு பிரவேசிக்க இயலாது.

சுகர் கூறியது—

17.22. நான் என்ன காரியமாக வந்தேனோ உன் வார்த்தையாலேயே அது விளங்கிவிட்டது. விதேக நகரத்தைப்பார்க்க வந்தேன். அங்கு பிரவேசிப்பது மிகக் கடினம் என்பதும் தெரிந்துவிட்டது.

17.27. மேருமலை எங்கே? இந்த மிதிலை எங்கே? கால்நடையாக வந்தேன். ஊர் சுற்றியதின் பயன் என்ன? விதியால் நான் வஞ்சிக்கப்பட்டேன்.

ஸூதர் கூறியது—

17.48. அவ்வார்த்தையைக் கேட்ட காவலாளி அவரை ஞானியாகிய பிராம்மணன் என்று அறிந்துகொண்டு அழகான உட்பிராகாரத்திற்குச் செல்ல அனுமதித்தான்.

पश्यन् स त्रिविधाँल्लोकान् प्रासरद्राजमन्दिरम् ।
प्राप्तः परमतेजस्वी द्वितीय इव भास्करः ।। १७. ५१ ।।

निवारितश्च तत्रैव प्रतीहारेण काष्ठवत् ।
तत्रैव च स्थितो द्वारि मोक्षमेवानुचिन्तयन् ।। १७. ५२ ।।

छायाया-मातपे चैव समदर्शी महातपाः ।
ध्यानं कृत्वा तथैकान्ते स्थितः स्थाणुरिवाचलः ।। १७. ५३ ।।

तं मुहूर्ता-दुपागत्य राज्ञोऽमात्यः कृतांजलिः ।
प्रावेशयत्ततः कक्षां द्वितीयां राजवेश्मनः ।। १७. ५४ ।।

तत्र दिव्यं मनोरम्यं पुष्पितं दिव्यपादपम् ।
तद्वनं दर्शयित्वा तु कृत्वातिथिसत्क्रियताम् ।। १७. ५५ ।।

17.51. முவ்வுலகப் பொருள்களும் நிறைந்திருந்த அந்தப்பிராகாரத்தைக் கடந்து அரசன் மாளிகையை அடைந்தார். அவருடைய தேஜஸ் இரண்டாவது சூரியன் போலிருந்தது.

17.52. அங்கு மறுபடி காவலாளியால் தடுக்கப்பட்டு அங்கேயே மோக்ஷத்தைப்பற்றிச் சிந்திப்பவராய்க் கட்டையைப்போல் வாயிலருகில் நின்றார்.

17.53. மஹாதபஸ்வியான அவர் வெய்யிலையும் நிழலையும் சமமாய்க் கருதுபவராய்த் தனிமையில் தியானத்திலாழ்ந்து தூணைப்போல் அசையாமலிருந்தார்.

17.54. அரசருடைய மந்திரி சிறிது நேரங்கழித்து அவரைக் கைகூப்பிக்கொண்டு அணுகி அரண்மனையின் இரண்டாவது பிராகாரத்திற்கழைத்துப் போனார்.

17.55. அங்கு தெய்வீகமான புஷ்பங்களுடன் கூடிய விருக்ஷங்கள் நிறைந்ததும் மனத்திற்கினியதுமான நந்தவனத்தைக் காண்பித்து அதிதி பூஜையை முறைப்படி செய்வித்தார்.

वारमुख्याः स्त्रियस्तत्र राजसेवापरायणाः ।
गीतवादित्रकुशलाः कामशास्त्रविशारदाः ॥ १७. ५६ ॥

ता आदिश्य च सेवार्थं शुकस्य मन्त्रिसत्तमः ।
निर्गतः सदनात्तस्माद्व्यासपुत्रः स्थितस्तदा ॥ १७. ५७ ॥

पूजितः परया भक्त्या ताभिः स्त्रीभि-र्यथाविधि ।
देशकालोपपन्नेन नानान्नेनातितोषितः ॥ १७. ५८ ॥

ततोऽन्तःपुरवासिन्यस्तस्यान्तःपुरकाननम् ।
रम्यं सन्दर्शयामासु-रंगनाः काममोहिताः ॥ १७. ५९ ॥

स युवा रूपवान् कान्तो मृदुभाषी मनोरमः ।
दृष्ट्वा ता मुमुहुः सर्वास्तं च काममिवापरम् ॥ १७. ६० ॥

17.56–57. அந்நாளன்று அரச சேவையில் முக்கிய மானவர்களும் ஆடல் பாடல்களில் தேர்ந்தவர்களும் காம சாஸ்திரமறிந்தவர்களுமான ஸ்திரீகளை சுகருக்குப் பணிவிடை செய்யக் கட்டளையிட்டுவிட்டு மந்திரி சிரேஷ்டர் அவ்விடம் விட்டகன்றார். வியாஸ புத்திரர் அங்கு தங்கினார்.

17.58. அந்த ஸ்திரீகளால் முறைப்படி பரமபக்தி யுடன் பூஜிக்கப்பட்டார். இடத்திற்கும் காலத்திற்கும் ஏற்றவகையில் பலவகை அன்னங்களால் திருப்தி செய்விக்கப் பட்டார்.

17.59. பின்னர் அந்தப்புரத்தில் வசிக்கும் சில ஸ்திரீ கள் அந்தப்புரத்திலுள்ள அழகிய உத்யானவனத்தை அவருக் குக் காட்டினார்கள். அந்த ஸ்திரீகள் இவரிடம் காமத்தால் மோகமடைந்தார்கள்.

17.60. அழகியவராகவும், கவர்ச்சியுடையவராகவும், மிருதுவான பேச்சுடையவராகவும், மனதிற்கினியவராகவும் இன்னொரு மன்மதனைப்போலுமிருந்த அந்த யௌவன புருஷரைக்கண்டு அந்த ஸ்திரீகளெல்லாம் மதிமயங்கினார்கள்.

जितेन्द्रियं मुनिं मत्वा सर्वाः पर्यचरंस्तदा ।
आरणेयस्तु शुद्धात्मा मातृभावमकल्पयत् ॥ १७. ६१ ॥

आत्मारामो जितक्रोधो न हृष्यति न तृप्यति ।
पश्यंस्तासां विकारांश्च स्वस्थ एव च तस्थिवान् ॥ १७. ६२ ॥

तस्मै शय्यां सुरभ्यां च ददुर्नार्यः सुसंस्कृताम् ।
परार्ध्यास्तरणोपेतां नानोपस्कर-संवृताम् ॥ १७. ६३ ॥

स कृत्वा पादशौचं च कुशपाणिरतन्द्रितः ।
उपास्य पश्चिमां सन्ध्यां ध्यानमेवान्वपद्यत ॥ १७. ६४ ॥

याममेकं स्थितो ध्याने सुष्वाप तदनन्तरम् ।
सुप्त्वा यामद्वयं तत्र चोदतिष्ठत्ततः शुकः ॥ १७. ६५ ॥

17.61. ஆனால் அவர் இந்திரியங்களை ஜயித்தவர் எனக் கண்டு அவருக்குப் பணிவிடை செய்தார்கள். சுத்தாத் மாவான சுகர் அவர்களை தாயைப்போலக் கருதினார்.

17.62. ஆத்மாவிடத்தில் ரமிப்பவராயும் கோபத்தை வென்றவராயும் அவர்களுடைய காம சேஷ்டைகளைக்கண்டு மகிழ்ச்சியையோ திருப்தியையோ அடையாதவராயும் தன்னிலை பிறழாதவராயுமிருந்தார்.

17.63. அவருக்கு அப்பெண்கள் நன்கு சுத்தம் செய் யப்பட்டதும் நல்ல கந்தத்துடன் கூடியதும் விலையுயர்ந்த விரிப்புக்களுடன் கூடியதும் பல போக்கியவஸ்துக்களுடன் கூடியதுமான படுக்கையை அளித்தார்கள்.

17.64. அவர் கால்களை சுத்தம் செய்துகொண்டு தர்ப் பையைக் கையில் தரித்துக்கொண்டு கவனக்குறைவின்றி ஸாயங்கால ஸந்தியாவந்தனத்தைச் செய்துவிட்டு தியானத் திலாழ்ந்தார்.

17.65. ஒரு யாமம் தியானம் செய்துவிட்டு சுகர் தூங்கினார். இரண்டு யாமம் தூங்கியபின் எழுந்தார்.

पाश्चात्यं यामिनीयामं ध्यानमेवान्वपद्यत ।
स्नात्वा प्रातः क्रियाः कृत्वा पुनरास्ते समाहितः ।। १७. ६६ ।।

श्रुत्वा तमागतं राजा मन्त्रिभिः सहितः शुचिः ।
पुरः पुरोहितं कृत्वा गुरुपुत्रं समभ्यगात् ।। १८. १ ।।

कृत्वाऽर्हणां नृपः सम्यग्दत्तासन-मनुत्तमम् ।
पप्रच्छ कुशलं गां च विनिवेद्य पयस्विनीम् ।। १८. २ ।।

किं निमित्तं महाभाग निःस्पृहस्य च मां प्रति ।
जातं ह्यागमनं ब्रूहि कार्यं तन्मुनिसत्तम ।। १८. ५ ।।

17.66. கடைசியாமம் தியானம் செய்தார். பின் ஸ்நானம் செய்து காலைக்கடன்களை முடித்து மறுபடியும் ஸமாதியிலாழ்ந்தார்.

18.1. அவருடைய வரவைப்பற்றிக் கேள்விப்பட்ட அரசர் பரிசுத்தராக மந்திரிமார்கள் சூழப் புரோஹிதரை முன்னிட்டுக்கொண்டு குரு புத்திரராகிய அவரையணுகினார்.

18.2. அரசர் அவரை நன்கு பூஜித்துச் சிறந்த ஆஸனத்தையளித்து குசலப்ரச்னம் செய்து கறவைப்பசுவை அர்ப்பணம் செய்து மரியாதை செய்தார்.

18.5. 'மஹாபாக்கியசாலியாகிய முனிசிரேஷ்டரே! என்ன காரியத்தை உத்தேசித்துப் பற்றற்றவராகிய தங்களுக்கு என்னைக் கருதி இங்கு வரும்படியானது. காரியம் ஏற்பட்டதின் நிமித்தத்தைக் கூறியருள வேண்டும்' என்றார்.

शुक उवाच —

व्यासेनोक्तो महाराज कुरु दारपरिग्रहम् ।
सर्वेषामाश्रमाणां च गृहस्थाश्रम उत्तमः ।। १८. ६ ।।

मया नांगीकृतं वाक्यं मत्वा बन्धं गुरोरपि ।
न बन्धोऽस्तीति तेनोक्तो नाहं तत्कृतवान् पुनः ।। १८. ७ ।।

इति सन्दिग्ध-मनसं मत्वा मां मुनिसत्तमः ।
उवाच वचनं तथ्यं मिथिलां गच्छ मा शुचः ।। १८. ८ ।।

याज्योऽस्ति जनकस्तत्र जीवन्मुक्तो नराधिपः ।
विदेहो लोकविदितः पाति राज्यमसंकटम् ।। १८. ९ ।।

சுகர் கூறியது—

18.6. மஹாராஜரே! என் தந்தையாகிய வியாஸ ரால் கலியாணம் செய்து கொள்ளும்படி ஏவப்பட்டேன். எல்லா ஆசிரமங்களிலும் கிருஹஸ்தாசிரமம் உத்தமமான தென்று அவர் கூறினுர்.

18.7. தந்தையும் குருவுமாகிய அவருடைய அந்த வாக்கியம் பிறவித்தளையில் உட்படுத்துவதென்று கருதி என்னுல் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அதில் பந்தமில்லை என்று அவர் மறுபடியும் வற்புறுத்தியும் நான் அவர் சொற் படி செய்யவில்லை.

18.8. முனிசிரேஷ்டராகிய அவர் நான் மனதில் தர் மத்தைப்பற்றிச் சந்தேகமுடையவன் என்று எண்ணி 'வருத் தப்படாதே! மிதிலைக்குப்போ' என்று உண்மையான வார்த் தையைக் கூறினுர்.

18.9. 'யாகங்களைச் செய்பவரும் ஜீவன் முக்தருமான ஜனக மஹாராஜா அங்கிருக்கிறுர். விதேஹர் என உலகப் பிரசித்தியானவர்; கஷ்டப்படாமல் ராஜ்யத்தை ஆளுகிறுர்;

कुर्वन् राज्यं तथा राजा मायापाशै-र्न वध्यते ।
त्वं बिभेषि कथं पुत्र वनवृत्तिः परंतपः ।। १८. १० ।।
पश्य तं नृपशार्दूलं त्यज मोहं मनोगतम् ।
कुरु दारान् महाभाग पृच्छ वा भूपतिं च तम् ।। १८. ११ ।।
सन्देहं ते मनोजातं कथयिष्यति पार्थिवः ।
तच्छ्रुत्वा वचनं तस्य मामेहि तरसा सुत ।। १८. १२ ।।
संप्राप्तोऽहं महाराज त्वत्पुरे च तदाज्ञया ।
मोक्षकामोऽस्मि राजेन्द्र ब्रूहि कृत्यं ममाऽनघ ।। १८. १३ ।।
तपस्तीर्थव्रतेज्याश्च स्वाध्यायस्तीर्थसेवनम् ।
ज्ञानं वा वद राजेन्द्र मोक्षं प्रति च कारणम् ।। १८. १४ ।।

18.10. ‘அரசாளுபவராயிருந்தும் அவர் மாயையின் வலையில் கட்டுப்படாமலிருக்கிறார்; மகனே, வனத்தில் வசிப்பவனும் சிறந்த தவஞ்செய்பவனுமிருக்கும் நீ ஏன் பயப்படுகிறாய்?

18.11. ‘அந்த அரசசிரேஷ்டரைப் போய்ப்பார்; உன் மனத்தில் புகுந்துள்ள மோகத்தை தூரத்தள்ளு; மஹாபாக்கியசாலியே, விவாஹம் செய்துகொள்; அதைப்பற்றி அவ்வரசனை வேண்டுமானால் கேள்.

18.12. ‘உன் மனதிலுள்ள சந்தேகத்திற்கு அவர் சமாதானம் கூறுவார். அவருடைய வார்த்தையைக் கேட்டுக்கொண்டு, மகனே! சீக்கிரம் என்னிடம் திரும்பிவா’ எனக் கூறினார்.

18.13. அரசசிரேஷ்டரே! பாவமற்றவரே! அவருடைய இந்தக் கட்டளைப்படி உம்முடைய பட்டணத்தை நாடி நான் வந்துள்ளேன். நான் மோக்ஷத்தில் விருப்பமுள்ளவன். எது செய்யத்தகுந்ததோ அதை எனக்குக் கூறியருளுங்கள்.

18.14. தவம், புண்ணியக்ஷேத்திரவாஸம், விரதம், யாகம், வேதம் ஓதுதல், தீர்த்தாடனம், ஞானம் முதலிய பல ஸாதனங்களில் மோக்ஷத்திற்குச் சிறந்த காரணமாவதைக் கூறவேண்டும்.

जनक उवाच—

श्रृणु विप्रेण कर्तव्यं मोक्षमार्गाश्रितेन यत् ।
उपनीतो वसेदादौ वेदाभ्यासाय वै गुरौ ।। १८. १५ ।।

अधीत्य वेदवेदान्तान् दत्त्वा च गुरुदक्षिणाम् ।
समावृत्तस्तु गार्हस्थ्ये सदारो निवसेन्मुनिः ।। १८. १६ ।।

नान्यवृत्तिस्तु सन्तोषी निराशीः गतकल्मषः ।
अग्निहोत्रादि-कर्माणि कुर्वाणः सत्यवाक् शुचिः ।। १८. १७ ।।

पुत्रं पौत्रं समासाद्य वानप्रस्थाश्रमे वसेत् ।
तपसा षड्रिपून् जित्वा भार्यां पुत्रे निवेश्य च ।। १८. १८ ।।

सर्वानग्नीन् यथा न्याय-मात्मन्यारोप्य धर्मवित् ।
वसेत्तुर्याश्रमे शान्तः शुद्धवैराग्य-संभवे ।। १८. १९ ।।

ஜனகர் கூறியது—

18.15. மோக்ஷ மார்க்கத்தில் செல்ல விரும்பும் வேதியனுல் எது செய்தற்குரியதோ அதைக் கூறுகிறேன் கேளும். உபநயனமானதும் முதலில் வேதாப்பியாஸத்திற்காக குருவுடன் வசிக்கவேண்டும்.

18.16. வேத வேதாந்தங்களை அத்தியயனம் செய்து குருவிற்கு தக்ஷிணை கொடுத்து ஸமாவர்த்தனத்திற்குப்பின் விவாஹம் செய்து கொண்டு கிருஹஸ்தாசிரமத்தில் பத்னியுடன் முனிவன் வசிக்க வேண்டும்.

18.17. அக்னிஹோத்ரம் முதலிய கர்மங்களைச் செய்பவனுயும், உண்மை பேசுபவனுயும், பரிசுத்தனுயும் ஆசையற்றவனுயும் பாவங்களற்றவனுயும் ஸந்தோஷமுடையவனுயும், இதற்குமாருன செயல்களில் மனஞ் செல்லாதவனுயுமிருக்க வேண்டும்.

18.18–19. பிள்ளையையும் பேரனையும் பெற்றுப்பின்பு வானப்பிரஸ்தாசிரமத்தில் வசிக்க வேண்டும். தவத்தால் அறுவகை அகச்சத்துருக்களையும் வென்று மனைவியைப் புத்திரனிடம் ஒப்புவித்துவிட்டு எல்லா அக்னிகளையும் முறைப்படி ஆத்மாவில் ஆரோபணம் செய்து கொண்டு தருமத்தையறிந்தவன் பரிசுத்தமான வைராக்கியம் வந்ததும் மனவமைதியுடன் நாலாவது (ஸந்நியாஸ) ஆசிரமத்தில் வாழ வேண்டும்.

विरक्तस्याधिकारोऽस्ति सन्यासे नान्यथा क्वचित् ।
वेदवाक्यमिदं तथ्यं नान्यथेति मतिर्मम ।। १८. २० ।।

शुकाष्टाचत्वारिंशद्वै संस्कारा वेदबोधिताः ।
चत्वारिंशद् गृहस्थस्य प्रोक्तास्तत्र महात्मभिः ।। १८. २१ ।।

अष्टौ च मुक्तिकामस्य प्रोक्ताः शमदमादयः ।
आश्रमादाश्रमं गच्छेदिति शिष्टानुशासनम् ।। १८. २२ ।।

18.20. வைராக்கிய முள்ளவனுக்கே ஸந்நியாஸத்தில் அதிகாரமுண்டு; வேறுபடியாக ஒருபொழுதுமில்லை. இது உண்மையான வேதவாக்கியம். ஈதன்றிவேறு வழியில்லை என்பது என்னுடைய துணிபு.

18.21. சுகரே! வேதத்தில் போதிக்கப்பட்டுள்ள ஸம்ஸ்காரங்கள் நாற்பத்தெட்டு; அவற்றில் மஹாத்மாக்களால் கிருஹஸ்தனுக்கு விதிக்கப்பட்டவை நாற்பது.

18.22. சமம் (அந்தக்கரணவடக்கம்), தமம் (புறக்கரணவடக்கம்) முதலிய எட்டு முக்தியில் விருப்பமுள்ளவனுக்கு விதிக்கப்பட்டவை. இங்ஙனம் ஒரு ஆசிரமத்திலிருந்து மற்றொரு ஆசிரமத்திற்குச் செல்லவேண்டும் என்பது ஆசார சீலர்களான பெரியோர்களின் கட்டளை.

நாற்பத்தெட்டு ஸம்ஸ்காரங்கள்—பிரம்மசரியத்திற்கு முன் கர்ப்பாதானம் பும்ஸவனம் ஸீமந்தம் ஜாதகர்மா நாமகரணம் அன்னப்ராசனம் சௌளம் என	7
பிரம்மசரியத்தில் உபநயனத்துடன்	6
விவாஹம்	1
கிருஹஸ்தாசிரமத்தில் தினம் பஞ்சமகாயக்ஞும்	5
ஔபாஸனம், அக்னிஹோத்ரம் தர்ச, பூர்ண மாஸம் முதலிய ஹவிர் யக்ஞுங்கள்	7
வருஷம் ஒருமுறை பாகயக்ஞுங்கள்	7
வாழ்க்கையில் ஒருமுறை ஸோமயக்ஞுங்கள்	7
வானப்பிரஸ்த ஸந்நியாஸாசிரமங்களில் ஆத்ம குணங்களின் அப்பியாஸம்	8

शुक उवाच—

उत्पन्ने हृदि वैराग्ये ज्ञानविज्ञानसंभवे ।
अवश्यमेव वस्तव्य-माश्रमेषु वनेषु वा ।। १८. २३ ।।

जनक उवाच—

इन्द्रियाणि बलिष्ठानि न नियुक्तानि मानद ।
अपक्वस्य प्रकुर्वन्ति विकारांस्ताननेकशः ।। १८. २४ ।।

भोजनेच्छां सुखेच्छां च शय्येच्छामात्मजस्य च ।
यती भूत्वा कथं कुर्याद्विकारे समुपस्थिते ।। १८. २५ ।।

दुर्जरं वासनाजालं न शान्ति-मुपयाति वै ।
अतस्तच्छमनार्थाय क्रमेण च परित्यजेत् ।। १८. २६ ।।

சுகர் கூறியது—

18.23. ஞானத்திற்கும் விக்ஞானத்திற்கும் காரணமான வைராக்கியம் இருதயத்தில் உதித்த பின்பு கிருஹஸ்தாசிரமம் முதலியவற்றில் வசிப்பது அல்லது வனத்தில் வசிப்பது அவசியமா?

ஜனகர் கூறியது—

18.24. இந்திரியங்கள் மிகவும் வலிவுடையவை, அடக்க முடியாதவை; அபிமானமற்றவரே! பக்குவமடையாதவனுக்கு இந்திரியங்கள் பலவகையான மனோவிகாரங்களை உண்டாக்குகின்றன.

18.25. சாப்பாட்டில் ஆசை, சுகவாழ்வில் ஆசை, படுக்கையில் ஆசை, புத்திரன் வேண்டுமென்ற ஆசை ஆகிய விகாரங்கள் தோன்றினால் ஸந்நியாஸியாகிவிட்டபின் இவற்றை எப்படிப்பூர்த்தி செய்வது?

18.26. வாஸனைக் கூட்டம் எளிதில் தேய்ந்து போவதில்லை; மனதில் அமைதியுண்டாவதில்லை; ஆகையால் அவற்றைப்படிப்படியாக விட்டு சாந்தியையடைய வேண்டும்.

ऊर्ध्वं सुप्तः पतत्येव न शयानः पतत्यधः ।
परिव्रज्य परिभ्रष्टो न मार्गं लभते पुनः ॥ १८. २७ ॥

यथा पिपीलिका मूलाच्छाखाया-मधिरोहति ।
शनैः शनैः फलं याति सुखेन पदगामिनी ॥ १८. २८ ॥

विहंगस्तरसा याति विघ्नशंकामुदस्य वै ।
श्रान्तो भवति विश्रम्य सुखं याति पिपीलिका ॥ १८. २९ ॥

मनस्तु प्रबलं काम-मजेय-मकृतात्मभिः ।
अतः क्रमेण जेतव्य-माश्रमानुक्रमेण च ॥ १८. ३० ॥

गृहस्थाश्रमसंस्थोऽपि शान्तः सुमतिरात्मवान् ।
न च हृष्येन्न च तपेल्लाभालाभे समो भवेत् ॥ १८. ३१ ॥

18.27. உயரப்படுத்துறங்குபவன் கீழே விழுவான்; கீழேயே தூங்குபவன் விழமாட்டான். ஸந்நியாஸியாகித் தவறி விழுந்தால் மீண்டும் ஈடேற அவனுக்கு வழியில்லை.

18.28. எறும்பானது மெதுவாக வேரிலிருந்து கிளைக்கு ஊர்ந்து சென்று எப்படி பழத்தையடைந்தனுபவிக்கிறதோ அப்படிச் செல்வது சிறந்தது.

18.29. பறவையானது (பழத்தின் மேல் வேகமாய் உட்கார்ந்தால் விழுந்துவிடும் என்ற) விக்கினத்தைக் கவனியாமல் விரைவில் பாய்கிறது. சிரமத்தையடைகிறதேயன்றிப் பயனையடைவதில்லை. எறும்பு சிரமமில்லாமல் சுகத்தையடைகிறது.

18.30. மனதிலெழும் வலிவுடைய காமம் ஆசிரம தர்மங்களால் திருந்தாதவர்களால் வெல்லமுடியாதது; ஆகையால் ஒவ்வொரு ஆசிரமமாக ஏறிச்சென்றே அதை வெல்ல வேண்டும்.

18.31. கிருஹஸ்தாசிரமத்திலிருக்கும் பொழுதும் புத்திமான் அடக்கமுடையவனாகவும் அமைதியுடையவனாகவும் இலாபத்தில் மகிழ்ச்சி பொங்குதலும் நஷ்டத்தில் வருந்துதலும் இல்லாமல் சமநிலையில் இருக்க வேண்டும்.

विहितं कर्म कुर्वाणस्त्यजंश्चिन्तान्वितं च यत् ।
आत्मलाभेन सन्तुष्टो मुच्यते नात्र संशयः ॥ १८. ३२ ॥

पश्याऽहं राज्यसंस्थोऽपि जीवन्मुक्तो यथाऽनघ ।
विचरामि यथा कामं न मे किंचित्प्रजायते ॥ १८. ३३ ॥

भुंजानो विविधान् भोगान् कुवन् कार्याण्यनेकशः ।
भविष्यामि यथाऽहं त्वं तथा मुक्तो भवानघ ॥ १८. ३४ ॥

कथ्यते खलु यद् दृश्य-मदृश्यं बध्यते कुतः ।
दृश्यानि पंचभूतानि गुणास्तेषां तथा पुनः ॥ १८. ३५ ॥

आत्मा गम्योऽनुमानेन प्रत्यक्षो न कदाचन ।
स कथं बध्यते ब्रह्मन् निर्विकारो निरंजनः ॥ १८. ३६ ॥

18.32. விதித்த கர்மங்களைச் செய்து கொண்டு பயனில் சிந்தையைத் துறந்து ஆத்மலாபத்தில் சந்தோஷத்தை யடைந்து வாழ்பவன் முக்தி எய்துகிறான் என்பதில் சந்தேக மில்லை.

18.33. பாவமற்றவரே! நான் அரசாட்சியிலிருந் தாலும் ஜீவன்முக்தனாக எவ்வாறு சஞ்சரிக்கிறேன் என் பதையும் எனக்கு ஆசை சிறிதும் உதிப்பதில்லை என்பதையும் எப்படி என்று கவனித்துப்பாரும்.

18.34. பாவமற்றவனே! பலவிதமான போகங்களை யனுபவித்துக் கொண்டும் அநேகவிதமான காரியங்களைச் செய்துகொண்டும் நான் எப்படி முக்தனாயிருக்கிறேனோ அப்படி நீரும் இரும்.

18.35. எது காணப்படுவதாய்க் கூறப்படுகிறதோ அந்த திருச்யப்ரபஞ்சம் காணப்படாததான ஆத்மாவை எங்ஙனம் கட்டுப்படுத்தும்? பஞ்சபூதங்களும் திருச்யம்; மேலும் அவற்றின் குணங்களும் அவ்வாறே திருச்யம்.

18.36. ஆத்மா அனுமானத்தாலறியப்படுவதேயன்றி (உலகப் பொருள்களைப்போல்) பிரத்தியக்ஷமாய் ஒரு பொழு தும் காணப்படுவதன்று. பிரம்மஸ்வரூபியே! மாறுபாடற்ற தும் மாசற்றதுமான அவ்வாத்மா எங்ஙனம் கட்டுப்படும்?

मनस्तु सुखदुःखानां महतां कारणं द्विज ।
जाते तु निर्मले ह्यस्मिन् सर्वं भवति निर्मलम् ॥ १८. ३७ ॥

भ्रमन् सर्वेषु तीर्थेषु स्नात्वा स्नात्वा पुनः पुनः ।
निर्मलं न मनो यावत् तावत् सर्वं निरर्थकम् ॥ १८. ३८ ॥

न देहो न च जीवात्मा नेन्द्रियाणि परन्तप ।
मन एव मनुष्याणां कारणं बन्धमोक्षयोः ॥ १८. ३९ ॥

शुद्धो मुक्तः सदैवाऽऽत्मा न वै बध्येत कर्हिचित् ।
बन्धमोक्षौ मनः संस्थौ तस्मिञ्छान्ते प्रशाम्यति ॥ १८. ४० ॥

शत्रु-मित्र-मुदासीनो भेदाः सर्वे मनोगताः ।
एकात्मत्वे कथं भेदः संभवेद्द्वैतदर्शनात् ॥ १८. ४१ ॥

18.37. மஹத்தான சுகதுக்கங்களுக்குக் காரணம் மனதேயாகும். அது மாசற்றதாகிவிட்டால் எல்லாம் மாசற்றதாகிவிடும்.

18.38. எல்லா தீர்த்தங்களையும் சுற்றிவந்து திரும்பத் திரும்ப ஸ்நானம் செய்தாலும் மனது எதுவரை மாசற்ற தாகவில்லையோ அதுவரை எல்லாம் வீணே.

18.39. பகையை வென்றவரே! மனிதர்களின் பந்தத்திற்கும் மோக்ஷத்திற்கும் காரணம் மனதேயன்றி தேகமோ, ஜீவாத்மாவோ, இந்திரியங்களோ அன்று.

18.40. ஆத்மா எப்பொழுதுமே பரிசுத்தமானது, முக்திநிலையிலிருப்பது; அது ஒருபொழுதும் கட்டுப்படாதது. பந்தமும் மோக்ஷமும் மனதில் நிலைபெற்றவை; அது சாந்தமானல் ஒருவன் சாந்தியடைகிருன்.

18.41. பகைவன் நண்பன் உதாசீனன் என்ற பேதங்களெல்லாம் மனதிற் புகுந்துள்ளவை; ஆத்மா ஒன்ருயிருக்கும்பொழுது பேதமேது? துவைதத்தைக் காணும் பொழுதே பேதம் தோன்றுகிறது.

जीवो ब्रह्म सदैवाहं नात्र कार्या विचारणा ।
भेदबुद्धिस्तु संसारे वर्तमाना प्रवर्तते ॥ १८. ४२ ॥

अविद्येयं महाभाग विद्या चैतन्निवर्तनम् ।
विद्याऽविद्ये च विज्ञेये सर्वदैव विचक्षणैः ॥ १८. ४३ ॥

विनाऽऽतपं हि च्छायायां जायते च कथं सुखम् ।
अविद्यया विना तद्वत्कथं विद्यां च वेत्ति वै ॥ १८. ४४ ॥

गुणा गुणेषु वर्तन्ते भूतानि च तथैव च ।
इन्द्रियाणीन्द्रियार्थेषु को दोषस्तत्र चात्मनः ॥ १८. ४५ ॥

मर्यादा सर्वरक्षार्थं कृता वेदेषु सर्वशः ।
अन्यथा धर्मनाशः स्यात्सौगतानामिवानघ ॥ १८. ४६ ॥

18.42. ஜீவனெனும் நான் எப்பொழுதுமே பிரம்மம் தான்; அதைப்பற்றி விசாரிக்க வேண்டியதேயில்லை; பேத புத்திதான் ஸம்ஸாரத்தில் புகுந்துழல்வது.

18.43. மகாபாக்கியசாலியே! இங்ஙனம் உழல்வது அவித்தை. இதிலிருந்து விலகுவதே வித்தை. வித்தையும் அவித்தையும் விவேகிகளால் எப்பொழுதும் பிரித்தறியப்பட வேண்டும்.

18.44. (அவித்தைக்கும் ஒரு பயனுண்டு) வெய்யில் இல்லாமலே இருந்தால் நிழலில் சுகம் எப்படி உண்டாகும், அது எப்படித்தான் தெரியும்? அங்ஙனமே அவித்தை யில்லாமல் போனுல் ஒருவன் வித்தையை எப்படி அறிவான்?

18.45. குணங்கள் குணங்களில் இருக்கின்றன; பஞ்சபூதங்களும் அவ்வாறே அவற்றின் குணங்களிலிருக்கின்றன; இந்திரியங்கள் அவ்வவற்றிற்குரிய விஷயங்களிலிருக்கின்றன; அதனுல் ஆத்மாவிற்கு என்ன தோஷம்?

18.46. பாவமற்றவரே! அனைத்தையும் காக்கும் பொருட்டு வேதங்களனைத்திலும் ஒவ்வொன்றுக்கும் ஒரு எல்லை ஏற்படுத்தப்பட்டுளது; ஸௌகதர்கள் எனப்படும் பௌத்தர்களைப்போல் அந்த எல்லையை மீறினுல் தர்மம் அழிவுறும்.

धर्मनाशे विनष्टः स्याद्वर्णाचारोऽतिवर्तितः ।
अतो वेदप्रतिष्ठेन मार्गेण गच्छतां शुभम् ।। १८. ४७ ।।

शुक उवाच—

सन्देहो वर्तते राजन् न निवर्तति मे क्वचित् ।
भवता कथितं यत्तच्छृण्वतां मे नराधिप ।। १८. ४८ ।।

वेदधर्मेषु हिंसा स्या-दधर्मबहुला हि सा ।
कथं मुक्तिप्रदो धर्मो वेदोक्तो वद भूपते ।। १८. ४९ ।।

प्रत्यक्षेण त्वनाचारः सोमपानं नराधिप ।
पशूनां हिंसनं तद्वद्भक्षणं चामिषस्य च ।। १८. ५० ।।

18.47. தர்மத்தின் கட்டுப்பாடு குலைந்தால் வர்ண ஆசாரம் அதிக்கிரமிக்கப்பட்டு அழிந்துபோம். ஆகையால் வேதத்தில் வரையறுக்கப்பட்ட வழியில் செல்லுபவர்க்கே நன்மை உண்டாகும்.

சுகர் கூறியது—

18.48. அரசே! தாங்கள் இதுவரை கூறியதைக் கேட்டும் என்னுடைய ஸந்தேகம் அப்படியே இருக்கிறது, கொஞ்சங்கூட நீங்கவில்லை.

18.49. அரசே! வேத தர்மத்தில் ஜீவஹிம்ஸை இருக்கிறது; அது அதர்மம் மிகுந்துளது; அப்படியிருக்க வேதங் கூறிய தர்மம் முக்தியளிப்பதாக எப்படியாகும்?

18.50. மக்களையாள்பவரே! ஸோமபானம் கண் கண்ட அனுசாரமல்லவா? அவ்வாறே பிராணிகளைக்கொல் வதும் அவற்றின் மாமிசத்தைப் புசிப்பதும் அதர்மமல்லவா?

जनक उवाच—

हिंसा यज्ञेषु प्रत्यक्षा साऽहिंसा परिकीर्तिता ।
उपाधियोगतो हिंसा नान्यथेति विनिर्णयः ।। १८. ५७ ।।

अहिंसां च तथा विद्धि वेदोक्तां मुनिसत्तम ।
रागिणां साऽपि हिंसैव निःस्पृहाणां न सा मता ।। १८. ५९ ।।

अरागेण च यत्कर्म तथाऽहंकारवर्जितम् ।
अकृतं वेदविद्वांसः प्रवदन्ति मनीषिणः ।। १८. ६० ।।

शुक उवाच—

सन्देहोऽयं महाराज वर्तते हृदये मम ।
मायामध्ये वर्तमानः स कथं निःस्पृहो भवेत् ।। १९. १ ।।

ஜனகர் கூறியது—

18.57. . யக்ஞங்களில் பிரத்தியக்ஷமாகக் காணப்படும் ஹிம்ஸை எதுவோ அது ஹிம்ஸையன்று என்று கூறப்பட்டுள்ளது.

15.59. முனிசிரேஷ்டரே! வேதம் விதித்த ஹிம்ஸையை அஹிம்ஸையாகவே கொள்ளவேண்டும்; ஆசைவாய்ப்பட்டவர்களுக்கு அதுவும் ஹிம்ஸையே; ஆனுல் பற்றற்றவர்களுக்கு அங்ஙனமாகாது.

18.60. ஆசையில்லாமலும் அஹங்காரமில்லாமலும் செய்யப்பட்ட கருமம் எதுவாயினும் அது செய்யப்படாததே என்று வேதத்தையுணர்ந்த அறிவாளிகள் கூறுகிருர்கள்.

சுகர் கூறியது—

19.1. மஹாராஜரே! மாயையின் மத்தியில் உழலும் மனிதன் எங்ஙனம் பற்றற்றவனுயிருக்க இயலும்? எனது உள்ளத்தில் இந்த ஸந்தேகம் இருந்து கொண்டே இருக்கிறது.

अन्तर्गतं तमश्छेत्तुं शास्त्राद् बोधो हि न क्षमः।
यथा न नश्यति तमः कृतया दीपवार्तया ॥ १९. ३ ॥

वित्तैषणा न ते शान्ता तथा राज्यसुखैषणा।
जयैषणा च संग्रामे जीवन्मुक्तः कथं भवेत् ॥ १९. ५ ॥

जाग्रत्स्वप्न-सुषुप्तिश्च तव राजन् भवन्ति हि।
अवस्थास्तु यथा कालं तुरीयातु कथं नृप ॥ १९. ८ ॥

पदात्यश्वरथेभाश्च सर्वे वै वशगा मम।
स्वाम्यहं चैव सर्वेषां मन्यसे त्वं न मन्यसे ॥ १९. ९ ॥

न मेऽद्य रमते चित्तं गृहदारादिषु क्वचित्।
एकाकी निःस्पृहोऽत्यर्थं चरेयमिति मे मतिः ॥ १९. १२ ॥

19.3. அந்தக்கரணத்தினுள்ளே பொதிந்துள்ள அஞ்ஞான இருளைப் போக்குவதற்கு சாஸ்திர ஞானத்தால் இயலாது. தீபம் என்கிற வார்த்தையைச் சொன்னதால் எங்ஙனம் இருட்டு நீங்கிவிடாதோ அங்ஙனம்தான் இதுவும்.

19.5. பொருளில் ஆசை உமக்கு ஒழியவில்லை; அவ்வாறேதான் அரசாளும் ஆசையும், போரில் ஜயிக்க வேண்டுமென்ற ஆசையும், நீர் எப்படி ஜீவன்முக்தராவீர் ?

19.8. அரசே! விழிப்பு, கனவு, உறக்கம் என்ற நிலைகள் உமக்கு அந்தந்தக் காலத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. அப்படியிருக்கையில் துரியாவஸ்தையடைந்தவராக எப்படி ஆவீர் ?

19.9. 'காலாட்படை குதிரை தேர் யானை எல்லாம் என்வசம் இருக்கின்றன; நான் அவற்றிற்கெல்லாம் அதிபன்' என்று நீர் எண்ணுகிறீரா இல்லையா ?

19.12. என் மனது இப்பொழுது ஒரு சிறிதும் வீடு மனைவி முதலியவற்றில் விருப்பங்கொள்ளவில்லை. தன்னந்தனியனாய் முற்றும் பற்றற்றவனாய்ச் சஞ்சரிக்கவேண்டுமென்பதே என் கருத்து.

निःसंगो निर्ममः शान्तः पत्रमूलफलाशनः ।
मृगवद्विचरिष्यामि निर्द्वन्द्वो निष्परिग्रहः ॥ १९. १३ ॥
किं मे गृहेण वित्तेन भार्यया वा सुरूपया ।
विरागमनसः कामं गुणातीतस्य पार्थिव ॥ १९. १४ ॥
चिन्त्यसे विविधाकारं नानारागसमाकुलम् ।
दम्भोऽयं किल ते भाति विमुक्तोऽस्मीति भाषसे ॥ १९. १५ ॥
कदाचिच्छत्रुजा चिन्ता धनजा च कदाचन ।
कदाचित्यसैन्यजा चिन्ता निश्चिन्तोऽसि कदा नृप ॥ १९. १६ ॥
तव वंशसमुत्थानां विदेहा इति भूपते ।
कुटिलं नाम जानीहि नान्यथेति कदाचन ॥ १९. १८ ॥

19.13. எதிலுந்தொடர்பற்றவனுகவும் என்னுடையது என்பதில்லாதவனுகவும், அமைதி நிறைந்த மனத்தினனுகவும், இலே, கிழங்கு, பழம் முதலியவற்றைப் புசிப்பவனுகவும், துவந்துவ புத்தியில்லாதவனுகவும், விவாகம் செய்துகொள்ளாதவனுகவும் மான்களைப்போல் இஷ்டப்படி சஞ்சரிப்பவனுகவும் இருக்க விரும்புகிறேன்.

19.14. அரசே! வீட்டாலோ பணத்தாலோ அழகிய மனேவியாலோ ஆசையற்றவனும் முக்குணங்களைக் கடந்தவனும் உள்ள எனக்கு ஆகவேண்டியதென்ன?

19.15. நீர் பலவிதமான ஆசைகளுக்கிருப்பிடமான பலபல எண்ணங்களை எண்ணுகின்றீர். அப்படியிருந்து கொண்டு 'நான் முக்தனுய் விட்டேன்' என்று பேசுகிறீர். இது வெறும் இடம்பம் என்றே எனக்குத் தோன்றுகிறது.

19.16. உமக்கு ஒரு பொழுது சத்துருக்களாலேற்பட்ட கவலே, ஒருபொழுது பொருளாலேற்பட்ட கவலே, ஒரு பொழுது சைனியத்தைப்பற்றிய கவலே; எப்பொழுது கவலேயற்றிருக்கிறீர்?

19.18. அரசே! உம்முடைய குலத்தில் உதித்தவர்களுக்கு 'விதேகர்கள்' என்ற பெயர் ஏமாற்றமேயன்றி ஒரு பொழுதும் அர்த்தமுடையதாகாது என்பதை நீர் உணரவேண்டும்.

निमि-नामाऽभवद्राजा पूर्वं तव कुले नृपः ।
यज्ञार्थं स तु राजर्षिर्वसिष्ठं स्वगुरुं मुनिम् ॥ १६. २१ ॥

निमन्त्रयामास तदा तमुवाच नृपं मुनिः ।
निमन्त्रितोऽस्मि यज्ञार्थं देवेन्द्रेणाधुना किल ॥ १६. २२ ॥

कृत्वा तस्य मखं पूर्णं करिष्यामि तवापि वै ।
तावत्कुरुष्व राजेन्द्र संभारं तु शनैः शनैः ॥ १६. २३ ॥

इत्युक्त्वा निर्ययौ सोऽयं महेन्द्रयजने मुनिः ।
निमिरन्यं गुरुं कृत्वा चकार मखमुत्तमम् ॥ १६. २४ ॥

तच्छ्रुत्वा कुपितोऽत्यर्थं वसिष्ठो नृपतिं पुनः ।
शशाप च पतत्वद्य देहस्ते गुरुलोपक ॥ १६. २५ ॥

19.21–23. முன்பு உமது குலத்தில் நிமி என்ற ராஜரிஷியாகிய ஒரு அரசர் இருந்தாரே அவர் யக்ஞத்திற்காகத் தமது குருவாகிய வசிஷ்ட முனிவரை வரித்தார். அப்பொழுது அம்முனிவர் 'நான் ஏற்கெனவே தேவேந்திரனுல் யக்ஞத்திற்காக வரிக்கப்பட்டுள்ளேன். அந்த யாகத்தைப் பூர்த்தி செய்துவிட்டு உம்முடைய யாகத்தை நடத்தித் தருகிறேன். அரசசிரேஷ்டரே! அதுவரை மெதுவாக யாகத்திற்கு வேண்டிய பொருள்களை சேகரம் செய்யும்' என்று கூறினுர்.

19.24. இப்படிக் கூறிவிட்டு அம்முனிவர் மகேந்திரனுடைய யாகத்திற்குப் போய்விடவே, நிமியானவர் வேருெரு குருவையடைந்து யாகத்தைச் சிறப்பாக நடத்தினுர்.

19.25. அதைக் கேட்டு மிகவும் கோபங் கொண்ட வசிஷ்டர் மறுபடி அரசனிடம் வந்து 'குருவஞ்சகனே! உன்னுடைய சரீரம் இப்பொழுதே விழட்டும்' என்று சாபங் கொடுத்தார்.

राजाऽपि तं शशापाथ तवापि च पतत्वयम् ।
अन्योन्य-शापात् पतितौ तावेव च यथाश्रुतम् ।। १६. २६ ।।

विदेहेन च राजेन्द्र कथं शप्तो गुरुः स्वयम् ।
विनोद इव मे चित्ते विभाति नृपसत्तम ।। १६. २७ ।।

जनक उवाच—

सत्यमुक्तं त्वया नात्र मिथ्या किंचिदिदं मतम् ।
तथाऽपि श्रृणु विप्रेन्द्र गुरुर्मम सुपूजितः ।। १६. २८ ।।

पितुः संगं परित्यज्य त्वं वनं गन्तुमिच्छसि ।
मृगैः सह सुसम्बन्धो भविता ते न संशयः ।। १६. २६ ।।

19.26. அரசனும் 'உம்முடைய இந்த சரீரமும் விழட்டும்' என்று பிரதிசாபங் கொடுத்தான். அவ்விருவரும் அவ்வாறே ஒருவர்க்கொருவர் கொடுத்த சாபத்தால் வீழ்ந்தனர் என்று கேள்விப்பட்டுள்ளோம்.

19.27. ராஜேந்திரரே! விதேக மன்னரால் குருவே எப்படி சபிக்கப்பட்டார் என்பது என் சித்தத்தில் விநோதமாகத் தோன்றுகிறது.

ஜனகர் கூறியது—

19.28–29. உம்மால் சொல்லப்பட்டதெல்லாம் உண்மையே. அதில் சிறிதும் பொய்யில்லை என்பது ஒப்புக்கொள்ளப்பட்டது. எனினும் பிராம்மணோத்தமரே! நான் சொல்வதைக் கேளும். உமது தந்தை என்னால் பூஜிக்கப்பெற்ற குரு ஆவார். அவருடைய ஸங்கத்தைத் துறந்து நீர் வனம் செல்ல விரும்புகிறீர். அங்கு மிருகங்களுடன் உமக்கு ஸங்கம் நன்றாக ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை.

महाभूतानि सर्वत्र निःसंगः क्व भविष्यसि ।
आहारार्थं सदा चिन्ता निश्चिन्तः स्याः कथं मुने ।। १९. ३० ।।
दण्डाजिनकृता चिन्ता यथा तव वनेऽपि च ।
तथैव राज्यचिन्ता मे चिन्तयानस्य वा न वा ।। १९. ३१ ।।
विकल्पोपहतस्त्वं वै दूरदेशमुपागतः ।
न मे विकल्पसन्देहो निर्विकल्पोऽस्मि सर्वथा ।। १९. ३२ ।।
सुखं स्वपिमि विप्राहं सुखं भुंजामि सर्वदा ।
न बद्धोऽस्मीति बुद्ध्याऽहं सर्वदैव सुखी मुने ।। १९. ३३ ।।
त्वं तु दुःखी सदैवासि बद्धोऽहमिति शंकया ।
इति शंकां परित्यज्य सुखी भव समाहितः ।। १९. ३४ ।।

19.30. மஹா பூதங்கள் எங்கும் நிறைந்திருக்கையில் நிஸ்ஸங்கராக நீர் எங்ஙனம் ஆவீர்? முனிவரே! ஆகாரத்திற்காக எப்பொழுதும் சிந்தையிருக்கையில் நிச்சிந்தையாக நீர் எப்படி இருப்பீர்?

19.31. தண்டம், மான்தோல் முதலியவற்றைப் பற்றிய எண்ணம் உமக்கு வனத்திலுமிருக்கும். அப்படித்தான் எனக்கும் சிந்தித்தாலோ சிந்திக்காவிட்டாலோ ராஜ்யத்தைப்பற்றிய எண்ணமிருக்கும்.

19.32. மனக்குழப்பமடைந்து நீர் தூரதேசத்திலிருந்து வந்தவர். என் மனதில் சந்தேகத்தாலேற்பட்ட குழப்பமில்லை. நான் எப்பொழுதும் நிர்விகல்பனாயிருக்கிறேன்.

19.33. பிராம்மணரே! எப்பொழுதும் நான் சுகமாய் உறங்குகிறேன், சுகமாய் உண்கிறேன். முனிவரே! நான் எதிலும் கட்டுப்பட்டவனன்று என்ற நிச்சயபுத்தியால் நான் எப்பொழுதுமே சுகமாயிருக்கிறேன்.

19.34. ‘நான் கட்டுப்பட்டுள்ளேன்’ என்ற சந்தேக எண்ணத்தால் நீர் எப்பொழுதும் துக்கப்படுகிறீர். இந்த சந்தேகத்தைவிட்டு மனதை வசப்படுத்திக்கொண்டு சுகமாயிரும்.

देहोऽयं मम बन्धोऽयं न ममेति च मुक्तता ।
तथा धनं गृहं राज्यं न ममेति च निश्चयः ।। १९. ३५ ।।

सूत उवाच—

तच्छ्रुत्वा वचनं तस्य शुकः प्रीतमनाऽभवत् ।
आपृच्छय तं जगामाशु व्यासस्याश्रम-मुत्तमम् ।। १९. ३६ ।।

आगच्छन्तं सुतं दृष्ट्वा व्यासोऽपि सुख-माप्तवान् ।
आलिंग्याघ्राय मूर्धानं पप्रच्छ कुशलं पुनः ।। १९. ३७ ।।

स्थितस्तत्राश्रमे रम्ये पितुः पार्श्वे समाहितः ।
वेदाध्ययनसम्पन्नः सर्वशास्त्रविशारदः ।।१९. ३८ ।।

19.35. இந்த தேகம் என்னுடையது என்ற இதுவே பந்தம்; என்னுடையதன்று என்பதே மோக்ஷம். அவ்வாறே இந்த தேகமும் பொருளும் வீடும் அரசும் என்னுடையதல்ல என்பது நிச்சயம்.

ஸூதர் கூறியது—

19.36. அவருடைய அவ்வார்த்தையைக் கேட்டு சுகர் மனதில் ப்ரீதியுள்ளவராகி அவரிடம் உத்திரவு பெற்றுச் சிறந்த வியாஸாசிரமத்திற்கு விரைவில் திரும்பிச் சென்றார்.

19.37. வியாஸரும் திரும்பிவந்த புத்திரனைக்கண்டு இன்புற்று இறுகத்தழுவி உச்சிமோந்து யோக க்ஷேமங்களை விசாரித்தார்.

19.38. மனதிற்கினிய அவ்வாசிரமத்தில் அடக்கமுள்ளவராய்த் தந்தையினருகில் வேதாத்தியயன ஸம்பன்னராய் ஸகல சாஸ்திரங்களையும் கரைகண்டவராய் அவர் வசித்துவந்தார்.

जनकस्य दशां दृष्ट्वा राजस्थस्य महात्मनः ।
स निर्वृतिं परां प्राप्य पितुराश्रम-संस्थितः ॥ १९. ३९ ॥

पितॄणां सुभगा कन्या पीवरी नाम सुन्दरी ।
शुकश्चकार पत्नीं तां योगमार्गस्थितोऽपि हि ॥ १९. ४० ॥

स तस्यां जनयामास पुत्रांश्चतुर एव हि ।
कृष्णं गौरप्रभं चैव भूरिं देवश्रुतं तथा ॥ १९. ४१ ॥

कन्यां कीर्तिं समुत्पाद्य व्यासपुत्रः प्रतापवान् ।
ददौ विभ्राजपुत्राय त्वणुहाय महात्मने ॥ १९. ४२ ॥

अणुहस्य सुतः श्रीमान् ब्रह्मदत्तः प्रतापवान् ।
ब्रह्मज्ञः पृथिवीपालः शुककन्यासमुद्भवः ॥ १९. ४३ ॥

19.39. அரசாட்சியிலிருந்து கொண்டும் மஹாத்மாவாகிய ஜனகர் பற்றற்றிருந்த நிலையைப்பார்த்தமையால் சுகரும் அவரைப்போலவே தன் தந்தையின் ஆசிரமத்தில் மிகவும் இன்பத்துடன் வாழ்ந்தார்.

19.40. யோகமார்க்கத்தில் இருப்பவராயினும் பித்ரு தேவதைகளின் பெண்ணான பீவரீ, என்னும் அழகிய கன்னிகையை விவாஹம் செய்து கொண்டார்.

19.41. அவளிடம் கிருஷ்ணன், கௌரப்ரபன், பூரி, தேவச்ருதன் என்ற நாலு புத்திரர்களைப் பெற்றார்.

19.42. புகழ்மிக்க அவ்வியாஸபுத்திரர் கீர்த்தி என்ற ஒரு பெண்ணையும் பெற்றார். அவளை விப்ராஜ புத்திரனும் மஹாத்மாவுமான அணுஹருக்குக் கல்யாணம் செய்து கொடுத்தார்.

19.43. அணுஹருடைய புத்திரன் ஸ்ரீமானும் பிரதாபவானுமான ப்ரஹ்மதத்தன். சுக கன்யையிடம் தோன்றிய அவன் அரசாள்பவனாயும் பிரம்ம ஞானியாயும் விளங்கினான்.

कैलास-शिखरे रम्ये त्यक्त्वा संगं पितुः शुकः ।
ध्यान-मास्थाय विपुलं स्थितः संगपराङ्मुखः ॥ १९. ४६ ॥

उत्पपात गिरेः श्रृंगात् सिद्धिं च परमां गतः ।
आकाशगो महातेजा विरराज यथा रविः ॥ १९. ४७ ॥

व्यासस्तु विरहाक्रान्तः क्रन्दन् पुत्रेति चासकृत् ।
गिरेः श्रृंगे गतस्तत्र शुको यत्र स्थितोऽभवत् ॥ १९. ४९ ॥

क्रन्दमानं तदा दीनं व्यासं मत्वा श्रमाकुलम् ।
सर्वभूतगतः साक्षी प्रतिशब्दमदात्तदा ॥ १९. ५० ॥

19.46–47. (நாளடைவில்) சுகர் தந்தையிடமிருந்து பிரிந்து அழகிய கயிலாய மலைச் சிகரத்தில் தியானத்திலிருந்து பற்றின்மையால் பெருமைபெற்று சித்திகளின் எல்லை நிலத்தை எய்தியவராய் மலையுச்சியிலிருந்து மேலே கிளம்பி மஹாதேஜஸ்வியாய் ஆகாய மார்க்கமாய்ச் செல்லுகையில் சூரியனைப்போல் பிரகாசித்தார்.

19.49. வியாஸர் பிரிவாற்றாமையால் 'மகனே!' என்று பலமுறை கதறிக் கொண்டு சுகர் இருந்த மலையுச்சிக்குச் சென்றார்.

19.50. மலையில் வந்த எதிரொலி—அங்கிங்கெனாதபடி எங்கும் ஸாக்ஷியாயிருக்கும் பரம்பொருளே அவர் வருத்தத்தால் மனம் நொந்து கதறுவதையெண்ணிப்பதில் கூறுவது போலிருந்தது.

शिवस्तत्र समागत्य पाराशर्य-मबोधयत् ।
व्यास शोकं मा कुरु त्वं पुत्रस्ते योगवित्तमः ॥
कीर्तिस्ते विपुला जाता तेन पुत्रेण चानघ ॥ १९. ५२ ॥

छायां द्रक्ष्यसि पुत्रस्य पार्श्वस्थां सुमनोहराम् ।
तां वीक्ष्य मुनिशार्दूल शोकं जहि परंतप ॥ १९. ५३ ॥

॥ इति श्रीदेवी-भागवते प्रथमस्कन्धे एकोनविंशोऽध्यायः ॥

॥ शुक-चरित्रं समाप्तम् ॥

19.52–53. பரமசிவனும் அங்கெழுந்தருளிப் பராசர புத்திரரான வியாஸருக்கு ஆறுதல் கூறினார்: 'உமது புத்திரன் யோகிகளில் தலைசிறந்தவன். அவனுக்காக நீர் வருந்துதல் தகாது. பாவமற்றவரே! அந்தப்புத்திரனால் உம்முடைய கீர்த்தி எங்கும் பரந்து விளங்கும். உம்முடைய புத்திரனின் மனதிற்கினிய உருவம் நிழல் வடிவில் உமது பக்கத்திலிருக்கக் காண்பீர். முனிசிரேஷ்டரே! பகையைவென்றவரே! அவ்வுருவைக்கண்டு சோகத்தை வெல்வீராக!''

இங்ஙனம் ஸ்ரீதேவீபாகவதத்தில் முதல் ஸ்கந்தத்தில்
பத்தொன்பதாவது அத்தியாயம் முற்றும்.

சுகசரித்திரம் முற்றும்.

॥ कौरवकुलोद्धारणम् ॥ ५ ॥

सूत उवाच—

शिष्या व्यासस्य येऽप्यासन् वेदाभ्यास-परायणाः ।
आज्ञामादाय ते सर्वे गताः पूर्वमहीतले ॥ २०. २ ॥

असितो देवलश्चैव वैशंपायन एव च ।
जैमिनिश्च सुमन्तुश्च गताः सर्वे तपोधनाः ॥ २०. ३ ॥

तानेतान् वीक्ष्य पुत्रं च लोकान्तरित-मप्युत ।
व्यासः शोक समाक्रान्तो गमनायाकरोन् मतिम् ॥ २०. ४ ॥

सस्मार मनसा व्यासस्तां निषादसुतां शुभाम् ।
मातरं जाह्नवीतीरे मुक्तां शोकसमन्विताम् ॥ २०. ५ ॥

5. கௌரவகுல உத்தாரணம்

ஸூதர் கூறியது—

20.2. வேதத்தைக் கற்பதில் ஊக்கங் கொண்டவர்களாயிருந்த வியாஸருடைய சிஷ்யர்கள் எவர்களோ அவர்களெல்லோரும் அவரவர்கள் முன்னிருந்த இடங்களுக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

20.3. தவச் செல்வர்களாகிய அஸிதர், தேவலர், வைசம்பாயனர், ஜைமினி, ஸுமந்து எல்லோருமே சென்று விட்டார்கள்.

20.4. புத்திரனும் வேறுலகுக்குச் சென்று (சீடர்களாகிய) இவர்களும் பிரிந்து போய் விட்டபின் வியாஸர் மனவருத்தம் மேலிட்டவராய் அவ்விடம் விட்டுத் தானும் செல்ல எண்ணினார்.

20.5. கங்கைக் கரையில் மனவருத்தம் மேலிட்ட நிலையில் (பல ஆண்டுகளுக்கு முன்) விட்டுப்பிரிந்த தன் தாயாகிய சீரிய செம்படவப் பெண்ணை மனதால் நினைத்தார்.

स्मृत्वा सत्यवतीं व्यासस्त्यक्त्वा तं पर्वतोत्तमम् ।
आजगाम महातेजा जन्मस्थानं स्वकं मुनिः ॥ २०. ६ ॥

द्वीपं प्राप्याथ पप्रच्छ क्व गता सा वरानना ।
निषादास्ते समाचख्यु-र्दत्ता राज्ञे तु कन्यका ॥ २०. ७ ॥

दाशराजोऽपि संपूज्य व्यासं प्रीति-पुरस्सरम् ।
स्वागतेनाऽभिसत्कृत्य प्रोवाच विहितांजलिः ॥ २०. ८ ॥

दाशराज उवाच—

अद्य मे सफलं जन्म पावितं नः कुलं मुने ।
देवानामपि दुर्दर्शं यज्जातं तव दर्शनम् ॥ २०. ९ ॥

20.6. அவ்வாறு ஸத்தியவதியை நினைத்துக்கொண்டு மஹாதேஜஸ்வியான வியாஸர் அந்தச் சிறந்த மலையுச்சியை விட்டுத் தனது பிறப்பிடத்திற்குச் சென்றார்.

20.7. கங்காதுவீபத்தையடைந்து (ஸத்தியவதியைக் காணாமல்) அழகிற் சிறந்த அவள் எங்கே சென்றுள்ளாள் என்று வினவினார். அரசனுக்கு அவள் கன்னிகாதானம் செய்யப்பட்ட செய்தியை அங்கிருந்த செம்படவர்கள் கூறினார்கள்.

20.8. செம்படவர்கள் தலைவன், வியாஸரை மிகுந்த அன்புடன் பூஜித்து நல்வரவு கூறி மரியாதை செய்து கை கூப்பிக்கொண்டு அவரிடம் பின்வருமாறு கூறினான்.

செம்படவர் தலைவன் கூறியது—

20.9. தேவர்களும் காணுதற்கரிய தங்களுடைய தரிசனம் எனக்குக் கிட்டியதால் இப்பொழுது என் பிறவி பயனுடையதாயிற்று. முனிவரே! எங்கள் குலமும் புனிதமாயிற்று.

सूत उवाच—

सरस्वत्यास्तटे रम्ये चकाराश्रममण्डलम् ।
व्यासस्तपः-समायुक्त-स्तत्रैवास समाहितः ॥ २०. ११ ॥

सत्यवत्याः सुतौ जातौ शन्तनोरमितद्युतेः ।
मन्वानौ भ्रातरौ व्यासः सुखमाप वने स्थितः ॥ २०. १२ ॥

चित्रांगदः प्रथमजो रूपवाञ्छत्रुतापनः ।
बभूव नृपतेः पुत्रः सर्वलक्षणसंयुतः ॥ २०. १३ ॥

विचित्रवीर्यनामाऽसौ द्वितीयः समजायत ।
सोऽपि सर्वगुणोपेतः शन्तनोः सुखवर्धनः ॥ २०. १४ ॥

ஸூதர் கூறியது—

20.11. (தாயின் வரலாற்றைத் தெரிந்து கொண்ட பின்) வியாஸர் அழகிய ஸரஸ்வதீ நதிக்கரைக்குச் சென்று அங்கு ஆசிரமம் அமைத்துக்கொண்டு தவத்தில் நிலைபெற்ற வராய் மனமடங்கி இருந்தார்.

20.12. அளவிலா வீரியம் பொருந்திய சந்தனுவிடம் ஸத்தியவதிக்கு இரு குமாரர்கள் தனக்குச் சகோதரர்களாகப் பிறந்திருப்பதைக் கேட்டு வனத்திலிருக்கையில் மகிழ்ச்சி யடைந்தார்.

20.13. அரசனுக்குப் புத்திரனாக முதலிற் பிறந்த சித்ராங்கதன் அழகுமிக்கவன், சத்ருக்களை வெல்பவன், எல்லா லக்ஷணங்களும் பொருந்தியவன்.

20.14. சந்தனுவின் மகிழ்ச்சியை வளர்ப்பவனாய் இரண்டாவது மகனாய்ப் பிறந்த விசித்திரவீரியன் எனப் பெயர் படைத்தவனும் எல்லா குணங்களும் பொருந்திய வனாயிருந்தான்.

8

गांगेयः प्रथमस्तस्य महावीरो बलाधिकः ।
तत्रैव तौ सुतौ जातौ सत्यवत्यां महाबलौ ॥ २०. १५ ॥

अथ कालेन कियता शन्तनुः कालपर्ययात् ।
तत्याज देहं धर्मात्मा देही जीर्णमिवाम्बरम् ॥ २०. १६ ॥

कालधर्मं गते राज्ञि भीष्मश्चक्रे विधानतः ।
प्रेतकार्याणि सर्वाणि दानानि विविधानि च ॥ २०. १८ ॥

चित्रांगदं ततो राज्ये स्थापयामास वीर्यवान् ।
स्वयं न कृतवान् राज्यं तस्माद्देवव्रतोऽभवत् ॥ २०. १९ ॥

चित्रांगदस्तु वीर्येण प्रमत्तः परदुःखदः ।
बभूव बलवान् वीरः सत्यवत्यात्मजः शुचिः ॥ २०. २० ॥

20.15–16. இதற்குமுன் அவ்வரசனுக்கு கங்காதேவியிடம் பிறந்த காங்கேயன் என்ற ஒரு புத்திரன் இருந்தான். அவன் மகாவீரன், மிகுந்த பலமுள்ளவன். மகாபலசாலிகளாய்ப் பின்பு பிறந்த இருவரும் சேர்ந்து வசித்து வரும் நாளில் தர்மாத்மாவாகிய சந்தனு நைந்துபோன வஸ்திரத்திரத்தை அதை உடுத்தவன் நீக்குவதுபோல் காலப்போக்கில் உடலைவிட்டார்.

20.18. காலநியதியையொட்டி மறைந்துபோன அரசனுக்கு (மூத்தகுமாரனை காங்கேயன் என்ற) பீஷ்மர் முறைப்படி பிரேத காரியங்களனைத்தையும் செய்து பலவிதமான தானங்களையும் செய்தார்.

20.19. பிறகு வீரியவானுகிய அவர் சித்திராங்கதனை அரசப் பதவியில் வைத்தார். தான் அரசாட்சியை ஏற்கவில்லை. (திடவிரதம் பூண்டு வாழ்ந்த) அக்காரணத்தால் அவர் தேவவிரதர் எனப் பெயர் பெற்றவனுர்.

20.20. ஸத்தியவதியின் குமாரனுனவனும் பரிசுத்தமாயிருந்தவனுமான அவ்வீரன் (சித்திராங்கதன்) பலம் மிகுந்தவனுய்த்தன் வீரியத்தால் மதம் பிடித்தவனுய்ப் பிறரைத் துன்புறுத்தலானுன்.

अथैकदा महाबाहुः सैन्येन महता वृतः ।
प्रचचार वनोद्देशान् पश्यन् वध्यान् मृगान् रुरून् ॥ २०. २१ ॥

चित्रांगदन्तु गन्धर्वो दृष्ट्वा तं मार्गगं नृपम् ।
उततारान्तिकं भूमे-र्विमानवर-मास्थितः ॥ २०. २२ ॥

तत्राभूच्च महद्युद्धं तयोः सदृशवीर्ययोः ।
कुरुक्षेत्रे महास्थाने त्रीणि वर्षाणि तापसाः ॥ २०. २३ ॥

इन्द्रलोकमवापाशु गन्धर्वेण हतो रणे ।
भीष्मः श्रुत्वा चकाराशु तस्यौर्ध्वदेहिकं तदा ॥ २०. २४ ॥

गांगेयः कृतशोकस्तु मन्त्रिभिः परिवारितः ।
विचित्रवीर्यनामान राज्येशं च चकार ह ॥ २०. २५ ॥

20.21. ஒரு சமயம் பெருந்தோள்படைத்த அவன் பெரிய சைனியம் சூழ கொடிய விலங்குகளையும் மான்களையும் வேட்டையாடும் நோக்கத்துடன் வனத்திற்குச் சென்றான்.

20.22. ஒரு கந்தர்வன் சிறந்த விமானத்தில் செல்லுகையில் அவ்வழி போய்க் கொண்டிருந்த சித்ராங்கத ராஜனைக்கண்டு பூமியில் அவனருகே இறங்கினான்.

20.23. தபஸ்விகளே! சிறந்த ஸ்தலமாகிய குருக்ஷேத்திரமெனும் அவ்விடத்தில் சமமான வீரியம் படைத்த அவ்விருவர்களிடை மூன்று ஆண்டுகள் போர் நிகழலாயிற்று.

20.24. (சித்திராங்கதன்) போர்க்களத்தில் கந்தர்வனால் கொல்லப்பட்டு இந்திரலோகமடைந்தான். இச் செய்தியைக் கேட்டு பீஷ்மர் அவனுக்கு உத்திரக்கிரியைகளைச் செய்தார்.

20.25. காங்கேயர் விசனம் மேலிட்டவராய் மந்திரிகளுடன் கூடியாலோசித்து விசித்திரவீரியன் எனப் பெயர் படைத்த தம்பியை நாட்டிற்கதிபதியாக்கினார்.

यौवनं परमं प्राप्तः सत्यवत्याः सुतः शुभः ।
चकार चिन्तां भीष्मोऽपि विवाहार्थं कनीयसः ॥ २०. २८ ॥

काशिराजसुतास्तिस्रः सर्वलक्षणसंयुता : ।
तेन राज्ञा विवाहार्थं स्थापिताश्च स्वयंवरे ॥ २०. २९ ॥

तत्र भीष्मो महातेजास्ता जहार बलेन वै ।
निर्मथ्य राजकं सर्वं रथेनैकेन वीर्यवान् ॥ २०. ३१ ॥

मातृवद्भगिनीवच्च पुत्रीवच्चिन्तयन् किल ।
तिस्रः समानयामास कन्यका वामलोचनाः ॥ २०. ३३ ॥

सत्यवत्यै निवेद्याशु द्विजानाहूय सत्वरः ।
दैवज्ञान् वेदविदुषः पर्यपृच्छच्छुभं दिनम् ॥ २०. ३४ ॥

20.28. ஸத்யவதியின் புத்திரனும் சிறந்த யௌவனப் பருவத்தையடைந்து மங்கள வடிவினுய் விளங்கியவனும் தனக்கிளையவனுமாகிய அவனுக்கு விவாஹம் செய்விப்பதை பற்றி பீஷ்மர் சிந்திக்கலானுர்.

20.29. அப்பொழுது காசிராஜனுடைய புத்திரிகள் மூவர் எல்லா லக்ஷணங்களும் பொருந்தியவர்களாயிருக்கவே அவ்வரசனுல் அவர்களுடைய விவாஹத்தின் பொருட்டு ஸ்வயம்வர ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

20.31. மஹாதேஜஸ்வியும் வீரியவானுமான பீஷ்மர் அங்கு சென்று ஒற்றைத் தேரில் இருந்து கொண்டு கூடி யிருந்த அரசகுமாரர்களைத் தனது பலத்தால் வென்று அரச குமாரிகளைக் கவர்ந்தார்.

20.33. அழகிய கண்படைத்த அம்மூன்று கன்னிகை களையும் தாயைப்போலும் சகோதரியைப்போலும் புத்திரி யைப்போலும் கருதி ஊருக்குக் கொண்டு சென்ருர்.

20.34. ஸத்தியவதியிடம் விஷயத்தை தெரிவித்து விரைவில் ஜோதிடஞானமுள்ள வேதவித்வான்களையழைத்து அவர்களிடம் சுபமான தினத்தைப்பற்றி வினவினர்.

कृत्वा विवाहसंभारं यथा वै भ्रातरं निजम् ।
विचित्रवीर्यं धर्मिष्ठं विवाहयतिता यदा ॥ २०. ३५ ॥

तदा ज्येष्ठाऽप्युवाचेदं कन्यका जाह्नवीसुतम् ।
लज्जमानाऽसितापांगी तिसृणां चारुलोचना ॥ २०. ३६ ॥

गंगापुत्र कुरुश्रेष्ठ धर्मज्ञ कुलदीपक ।
मया स्वयंवरे शाल्वो वृतोऽतिमनसा नृपः ॥ २०. ३७ ॥

वृताऽहं तेन राज्ञा वै चित्रे प्रेमसमाकुले ।
यथायोग्यं कुरुष्वाद्य कुलस्यास्य परंतप ॥ २०. ३८ ॥

सूत उवाच—

एवमुक्तस्तया तत्र कन्यया कुरुनन्दनः ।
अपृच्छद् ब्राह्मणान् वृद्धान् मातरं सचिवांस्तथा ॥ २०. ४० ॥

20.35–36. விவாகத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து தனது சகோதரனும் தர்மிஷ்டனுமாகிய விசித்திர வீரியன் கல்யாணம் செய்து கொள்ள வேண்டிய சமயத்தை பீஷ்மர் எதிர்பார்த்துக் கொண்டிருந்தபொழுது மூவரில் மூத்தவளும் கரிய கண்படைத்து மிக அழகியவளுமான கன்னிகை வெட்கத்துடன் அவரிடம் பின்வருமாறு கூற லானாள்.

20.37–38. 'கங்காதேவியின் புத்திரரே! குரு சிரேஷ்டரே! தர்மந் தெரிந்தவரே! குலவிளக்குப்போன்ற வரே! ஸ்வயம்வரத்தில் முழுமனத்துடன் என்னால் சால்வ ராஜா வரிக்கப்பட்டிருந்தார். பிரேமை நிறைந்த மன துடன் அவராலும் நான் வரிக்கப்பட்டிருந்தேன். எதிரிகளை வெல்பவரே! இந்தக் குலத்திற்கு எது பொருத்தமோ அதை இப்பொழுது நீர் செய்தல் வேண்டும்.'

ஸௌதர் கூறியது—

20.40. குருநந்தனரான பீஷ்மர் அக்கன்னிகையால் இங்ஙனம் கூறப்பெற்றதும் வயது முதிர்ந்த பிராம்மணர் களையும் தாயாரையும் மந்திரிகளையும் ஆலோசனை கேட்டார்.

सर्वेषां मतमाज्ञाय गांगेयो धर्मवित्तमः ।
गच्छेति कन्यकां प्राह यथारुचि वरानने ॥ २०. ४१ ॥

विसर्जिताऽथ ता तेन गता शाल्वनिकेतनम् ।
उवाच तं वरारोहा राजानं मनसेप्सितम् ॥ २०. ४२ ॥

विनिर्मुक्तास्मि भीष्मेण त्वन्मनस्केति धर्मतः ।
आगतास्मि महाराज गृहाणाद्य करं मम ॥ २०. ४३ ॥

शाल्व उवाच—

गृहीता त्वं वरारोहे भीष्मेण पश्यतो मम ।
रथे संस्थापिता तेन न ग्रहीष्ये करं तव ॥ २०. ४५ ॥

20.41. தர்மந்தெரிந்தவர்களில் சிறந்தவரான காங்கேயர் எல்லோருடைய அபிப்பிராயத்தையும் தெரிந்து கொண்டு கன்னிகையை நோக்கி, ''அழகிய முகம் படைத்தவளே! உன் விருப்பப்படி நீ போகலாம்'' என்று பதிலளித்தார்.

20.42–43. அவரால் விடப்பட்டு அவ்வழகிய பெண் சால்வனுடைய அரண்மனைக்குச் சென்று மனதால் தான் விரும்பிய அவ்வரசனிடம் 'நான் உம்மிடம் மனதை வைத்தவள் என்றுணர்ந்த பீஷ்மரால் தர்மத்திற்கிணங்க நான் விடப்பட்டுள்ளேன். மகாராஜரே! உம்மை நாடி வந்துள்ளேன். என்னை இப்பொழுது பாணிக்கிரஹணம் செய்து கொள்ளும்' என்று கூறினள்.

சால்வன் கூறியது—

20.45. சிறந்த பெண்ணே! நான் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே நீ பீஷ்மரால் தூக்கித் தேரில் வைக்கப்பட்டாய். உன் கையை நான் பிடிக்கமாட்டேன்.

रुदती विलपन्ती सा त्यक्ता तेन महात्मना।
पुनर्भीष्मं समागत्य रुदती चेदमब्रवीत्॥ २०. ४७॥

शाल्वो मुक्तां त्वया वीर न गृह्णाति गृहाण माम्।
धर्मज्ञोऽसि महाभाग मरिष्याम्यन्यथा ह्यहम्॥ २०. ४८॥

भीष्म उवाच—

अन्यचित्तां कथं त्वां वै गृह्णामि वरवर्णिनि।
पितरं स्वं वरारोहे व्रज शीघ्रं निराकुला॥ २०. ४९॥

तथोक्ता सा तु भीष्मेण जगाम वनमेव हि।
तपश्चकार विजने तीर्थे परमपावने॥ २०. ५०॥

द्वे भार्ये चातिरूपाढ्येतस्य राज्ञो बभूवतुः।
अम्बालिकाचाम्बिका च काशिराजसुते शुभे॥ २०. ५१॥

20.47. அந்த மகாபுருஷனுல் கைவிடப்பட்ட அவள் அழுது பிரலாபித்துக்கொண்டு திரும்பி பீஷ்மரை அடைந்து அழுதுகொண்டே இப்படிக் கூறினுள்.

20.48. 'வீரரே! உம்மால் விடப்பட்ட என்னைச் சால்வன் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டான். நீரே ஏற்றுக் கொள்ளும். நீர் தர்மந்தெரிந்த மகான். இல்லையேல் நான் உயிரைவிடுவேன்.

பீஷ்மர் கூறியது—

20.49. 'அழகிய பெண்ணே! வேருெருவனிடம் மனதைவைத்த உன்னை நான் எப்படி ஏற்றுக்கொள்வேன்? மனங்கலங்காமல் விரைவில் உன் தந்தையிடம் போய்ச் சேர்.'

20.50. பீஷ்மரால் அங்ஙனம் கூறப்பட்ட அவள் வனம் சென்று பரிசுத்தமானதும் ஜனஸஞ்சாரமற்றதுமான ஒரு புண்ணிய ஸ்தலத்தில் தவம் புரியலானுள்.

20.51. மிக அழகுவாய்ந்த அம்பாலிகை அம்பிகை என்ற காசிராஜ புத்திரிகளான மற்ற இருவரும் அரசனுக்கு மனைவிகளாயினர்.

राजा विचित्रवीर्योऽसौ ताभ्यां सह महाबलः।
रेमे नानाविहारैश्च गृहे चोपवने तथा ॥ २०. ५२ ॥

वर्षाणि नव राजेन्द्रः कुर्वन् क्रीडां मनोरमाम्।
प्रापासौ मरणं भूयो गृहीतो राजयक्ष्मणा ॥ २०. ५३ ॥

मृते पुत्रेऽतिदुःखार्ता जाता सत्यवती तदा।
कारयामास पुत्रस्य प्रेतकार्याणि मन्त्रिभिः ॥ २०. ५४ ॥

भीष्ममाह तदैकान्ते वचनं चातिदुःखिता।
राज्यं कुरु महाभाग पितुस्ते शन्तनोः सुत ॥ २०. ५५ ॥

भ्रातुर्भार्यां गृहाण त्वं वंशं च परिरक्षय।
यथा न नाशमायाति ययातेर्वंश इत्युत ॥ २०. ५६ ।

20.52. மகாபலசாலியான அரசன் விசித்ரவீரியன் அவர்களுடன் கூடி வீட்டிலும் உபவனங்களிலும் பலவகையான லீலைகளைப் புரிந்து கொண்டு இன்ப வாழ்க்கை நடத்தினன்.

20.53. இப்படி மனம்போனபடி யெல்லாம் ஒன்பது வருஷங்கள் அரசர் பெருமானுகிய அவன் விளையாட்டாகக் கழித்துப் பின்னர் ராஜயக்ஷ்மா எனும் நோயால் பீடிக்கப் பட்டு மரணமடைந்தான்.

20.54. புத்திரனுடைய மரணத்தால் மிகுந்த துக்கத் திலாழ்ந்த ஸத்யவதி மந்திரிகளுடன் யோசித்து அவனுக்குப் பிரேத காரியங்களைச் செய்வித்தாள்.

20.55–56. பிறகு துக்கம் மேலிட்டவளாய் பீஷ் மரிடம் தனிமையில் கூறினள்: 'மகாபாக்கியசாலியான மகனே! உனது பிதாவாகிய சந்தனுவின் ராஜ்யத்தை நீதான் ஆள வேண்டும். மேலும் யயாதியின் வம்சம் எப்படி அழிந்து போகாமலிருக்குமோ அப்படி நீ உன் சகோதரன் மனைவியையும் (நியோக முறைப்படி) ஏற்றுக்கொண்டு வம் சத்தைக் காப்பாற்று.'

भीष्म उवाच —

प्रतिज्ञा मे श्रुता मातः पित्रर्थं या मया कृता ।
नाहं राज्यं करिष्यामि न चाहं दारसंग्रहम् ॥ २०. ५७ ॥

कुलीनं द्विजमाहूय वध्वा सह नियोजय।
नात्र दोषोऽस्ति वेदेऽपि कुलरक्षाविधौ किल ॥ २०. ५९ ॥

पौत्रं चैवं समुत्पाद्य राज्यं देहि शुचिस्मिते ।
अहं च पालयिष्यामि तस्य शासनमेव हि ॥ २०. ६० ॥

तच्छ्रुत्वा वचनं तस्य कानीनं स्वसुतं मुनिम् ।
जगाम मनसा व्यासं द्वैपायन-मकल्मषम् ॥ २०. ६२ ॥

பீஷ்மர் கூறியது—

20.57. தாயே! என் தந்தையின் பொருட்டு என்னுல் செய்யப்பட்ட பிரதிக்ஞையை நீங்கள் கேட்டிருக்கிறீர்கள். நான் அரசாளவும் மாட்டேன், விவாகம் செய்து கொள்ளவும் மாட்டேன்.

20.59. நல்ல குலத்துதித்த ஒரு பிராம்மணரைக் கூப்பிட்டு பெண்ணுடன் நியோக முறைப்படி கூட ஏற்பாடு செய்யுங்கள். குலத்தை ரக்ஷிப்பதற்காக அங்ஙனம் செய்வதில் தோஷமில்லை என்று வேதமும் கூறுகிறது.

20.60. உனக்கு ஒரு பேரனை அங்ஙனம் உண்டாக்கி அவனுக்கு அரசைக்கொடு. அவனுக்காக அரசாட்சியை நான் பரிபாலிக்கிறேன்.

20.62. பீஷ்மருடைய அவ்வார்த்தையைக் கேட்டு ஸத்தியவதி குற்றமற்ற முனிவனும், கன்னிப்பருவத்தில் தனக்கு துவீபத்தில் பிறந்தவனுமான வியாஸரை மனதால் எண்ணினுள்.

स्मृतमात्रस्ततो व्यास आजगाम स तापसः ।
कृत्वा प्रणामं मात्रेऽथ संस्थितो दीप्तिमान्मुनिः ॥ २०. ६३ ॥

तमुवाच मुनिं माता पुत्रमुत्पादयाधुना ।
क्षेत्रे विचित्रवीर्यस्य सुन्दरं तव वीर्यजम् ॥ २०. ६५ ॥

व्यासः श्रुत्वा वचो मातुराप्तवाक्य-ममन्यत ।
ओमित्युक्त्वा स्थितस्तत्र ऋतुकालमचिन्तयत् ॥ २०. ६६ ॥

अम्बिका च यदा स्नाता नारी ऋतुमती तदा ।
संगं प्राप्य मुनेः पुत्रमसूतान्धं महाबलम् ॥ २०. ६७ ॥

जन्मान्धं च सुतं वीक्ष्य दुःखिता सत्यवत्यपि ।
द्वितीयां च वधूमाह पुत्रमुत्पादयाशु वै ॥ २०. ६८ ॥

20.63. நினைத்த மாத்திரத்தில் அந்தத் தபஸ்வியான வியாஸர் வந்துசேர்ந்தார். தேஜஸ்வியான அவர் தாயை வணங்கி அவள் முன் நின்றார்.

20.65. தாய் அவரை நோக்கி 'விசித்ரவீர்யனுடைய மனைவியிடம் உனது வீரியத்தால் அழகிய ஒரு புத்திரனை நீ இப்பொழுது உற்பத்தி செய்ய வேண்டும்' என்று கூறினாள்.

20.66. தாய் கூறிய அவ்வார்த்தையைக் கேட்டு வியாஸர் அது கொள்ள வேண்டிய கட்டளையெனக் கருதி 'ஆகட்டும்' என ஒப்புக்கொண்டு அங்கிருந்து கொண்டு ருதுகாலத்தை நோக்கியிருந்தார்.

20.67. ருதுஸ்நானம் செய்த ஸ்திரீயாகிய அம்பிகை முனிவருடன் கூடி மகாபலசாலியான ஒரு புத்திரனைப் பெற்றாள். அவன் குருடனாயிருந்தான்.

20.68. பிறவிக்குருடனாயிருந்த அப்பிள்ளையைக் கண்டு ஸத்தியவதி மிகவும் மனம் வருந்தினாள். மற்றொரு மருமகளைப் புத்திரோத்பத்தியின் பொருட்டு துரிதப் படுத்தினாள்.

ऋतुकालेऽथ सम्प्राप्ते व्यासेन सह संगता ।
तथाचाम्बालिका रात्रौ गर्भं नारी दधार सा ॥ २०. ६९ ॥

सोऽपि पाण्डुःसुतो जातो राज्ययोग्यो न संमतः ।
पुत्रार्थे प्रेरयामास वर्षान्ते च पुनर्वधूम् ॥ २०. ७० ॥

न गता च वधूस्तत्र प्रेष्या संप्रेषिता तया ।
तस्यां च विदुरो जातो दास्यां धर्मांशतः शुभः ॥ २०. ७२ ॥

एवं व्यासेन ते पुत्रा धुतराष्ट्रादयस्त्रयः ।
उत्पादिता महावीरा वंशरक्षणहेतवे ॥ २०. ७३ ॥

20.69. ருதுகாலத்தில் இரவில் வியாஸருடன் கூடி அம்பாலிகை என்ற அவள் கருத்தரித்தாள்.

20.70. அவள் பெற்ற பிள்ளையாகிய பாண்டு அரசப் பதவிக்குத் தகுதியற்றவனைப்போல் வெண்மை படர்ந்த தோலுடன் பிறந்தான். ஒரு வருஷம் சென்றபின் மறுபடி ஒரு புத்திரனைப் பெறும்படி ஸத்தியவதி அவளைத் தூண்டினாள்.

20.72. அவள் வியாஸரிடம் செல்லாமல் தன்னுடைய தாதியை அவரிடம் அனுப்பிவைத்தாள். அந்தத்தாதியிடம் யமதர்மராஜனுடைய அம்சமான விதுரர் ஸத்துவகுணம் பொருந்தியவராகப் பிறந்தார்.

20.73. இவ்வாறு திருதராஷ்டிரன் முதலாகிய மூன்று புத்திரர்கள் மகாவீரர்களாக வம்சரக்ஷணத்தின் பொருட்டு வியாஸரால் தோற்றுவிக்கப்பட்டனர்.

इति श्रीदेवीभागवते प्रथमस्कन्धे विंशोऽध्यायः ॥

॥ कौरवकुलोद्धारण कथा समाप्ता ॥

॥ प्रथमं स्कन्धः समाप्तः ॥

இங்ஙனம் ஸ்ரீதேவீபாகவதத்தில் முதல் ஸ்கந்தத்தில்
இருபதாவது அத்தியாயம் முற்றும்.

கௌரவகுல உத்தாரணக் கதை முற்றும்.

முதல் ஸ்கந்தம் முற்றும்.

இரண்டாவது ஸ்கந்தம்

॥ द्वितीयः स्कन्धः ॥

॥ व्यास जनन कथा ॥ ६ ॥

ऋषय ऊचुः—

उत्पत्तिं वेदव्यासस्य सत्यवत्यास्तथा पुनः ।
श्रोतुकामाः पुनः सर्व ऋषयः संशितव्रताः ॥ १. ५ ॥

सूत उवाच—

प्रणम्य परमां शक्तिं चतुर्वर्गप्रदायिनीम् ।
आदिशक्तिं वदिष्यामि कथां पौराणिकीं शुभाम् ॥ १. ६ ॥
यस्योच्चारणमात्रेण सिद्धिर्भवति शाश्वती ।
व्याजेनापि हि बीजस्य वाग्भवस्य विशेषतः ॥ १. ७ ॥
सम्यक् सर्वात्मना सर्वैः सर्वकामार्थसिद्धये ।
स्मर्तव्या सर्वथा देवी वांछितार्थप्रदायिनी ॥ १. ८ ॥

6. வியாஸர் பிறந்த கதை
(இரண்டாவது ஸ்கந்தம்)

ரிஷிகள் கூறியது—

1.5. இனி ஸத்தியவதியிடம் வேதவியாஸர் பிறந்த வரலாற்றைக் கேட்பதற்கு விரதம் பூண்ட ரிஷிகளெல்லோரும் ஆவலுடையவர்களாயிருக்கின்றனர்.

ஸூதர் கூறியது—

1.6. (தர்மம் அர்த்தம் காமம் மோக்ஷம்) எனும் நான்கு வகைப்பட்ட புருஷார்த்தங்களையும் அளிக்கும் ஆதி பராசக்தியை வணங்கி சுபமான புராணக்கதையைக் கூறுகிறேன்.

1.7–8. எந்த தேவியினுடைய மந்திரத்தை அதிலும் விசேஷமான (மந்திரமாகிய 'ஐம்' எனும்) வாக்பவபீஜத்தை வியாஜமாக உச்சரித்தால் கூட சாசுவதமான சித்தி ஏற்படுமோ எவள் எண்ணியதை எண்ணியவாறு அளித்தருள்பவளோ அந்த தேவி எல்லோராலும் எல்லாவகையிலும் எப்பொழுதும் நன்ருக தியானம் செய்யப்படவேண்டியவள்.

राजोपरिचरो नाम धार्मिकः सत्यसंगरः ।
चेदिदेशपतिः श्रीमान् बभूव द्विजपूजकः ॥ १. ९ ॥

तपसा तस्य तुष्टेन विमानं स्फाटिकं शुभम् ।
दत्तमिन्द्रेण तत्तस्मै सुन्दरं प्रियकाम्यया ॥ १. २० ॥

तेनारूढस्तु सर्वत्र याति दिव्येन भूपतिः ।
स भूमावुपरिस्थोऽसौ तेनोपरिचरो वसुः ॥ १. २२ ॥

* कालिका वसुना दत्ता तरसा जलजीविने ।
नाम्ना कालीति विख्याता तथा मत्स्योदरीति च ॥ १. ३८ ॥

1.9. சேதி தேசத்தை ஆண்டு கொண்டிருந்த அரசன் ஒருவன் உபரிசரன் என்ற பெயர் பெற்றவன் இருந்தான். அவன் செல்வம் நிறைந்தவனுயும் பிராம்மணர்களைப் பூஜிப் பவனுயும் தர்மசிந்தை படைத்தவனுயும் ஸத்தியவிரதம் பூண்டவனுயும் இருந்தான்.

1.10. அவனது தவத்தால் ஸந்தோஷமடைந்த தேவேந்திரன் அவனுக்குப் பிரியத்தைச் செய்ய விரும்பி அழகியதும் சிறந்ததுமானதொரு ஸ்படிக விமானத்தையளித் திருந்தான்.

1.11. தெய்வீகமான அதில் ஏறிக்கொண்டு அவ் வரசன் எங்கும் செல்வான். பூமிக்குமேல் சஞ்சரித்ததால் இவன் உபரிசரன் எனும் பெயர் பெற்று வசுக்களில் ஒருவனுக விளங்கினுன்.

1.38. வசுவாகிய உபரிசரனுக்கு (ஒரு மீன் வடிவி லிருந்த அப்ஸரஸ்திரீயிடம்) பிறந்த பெண் அந்த வசுவால் ஒரு செம்படவனுக்குக் கொடுக்கப்பட்டு காளீ என்றும் காளிகா என்றும் மத்ஸ்யோதரீ என்றும் பெயர் பெற்ற வளாய் விளங்கினுள்.

---

*காளிகா வஸுனு தத்தா—உபரிசரர் என்ற அந்த வசுவினுடைய ரேதஸ் ஒரு சமயம் யமுனை நதியில் விழவே அப்பொழுது சாபத்தால் மீன் வடிவில் அந்நதியிலிருந்த ஒரு அப்ஸ்ரஸ்ஸின் வயிற்றில் அது சேரலாயிற்று. அதி

मत्स्यगन्धेति नाम्ना वै गुणेन समजायत ।
विवर्धमाना दाशस्य गृहे सा वासवी शुभा ॥ १. ३९ ॥

एकदा तीर्थयात्रायां व्रजन् पाराशरो मुनिः ।
आजगाम महातेजाः कालिन्द्यास्तटमुत्तमम् ॥ २. १ ॥

निषादमाह धर्मात्मा कुर्वन्तं भोजनं तदा ।
प्रापयस्व परं पारं कालिन्द्या उडुपेन माम् ॥ २. २ ॥

दाशः श्रुत्वा मुनेर्वाक्यं कुर्वाणो भोजनं तटे ।
उवाच तां सुतां बालां मत्स्यगन्धां मनोरमाम् ॥ २. ३ ॥

उडुपेन मुनिं बाले परं पारं नयस्व ह ।
गन्तुकामोऽस्ति धर्मात्मा तापसोऽयं शुचिस्मिते ॥ २. ४ ॥

1.39. மீன் வாடை உடலிலிருந்த குணத்தால் அவளுக்கு மத்ஸ்யகந்தி எனும் பெயரும் ஏற்பட்டது. வசு புத்திரியான அவ்வழகிய பெண் செம்படவன் வீட்டில் வளர்ந்து வந்தாள்.

2.1. ஒரு சமயம் மகாதேஜஸ்வியான பராசர முனிவர் தீர்த்தயாத்திரையாகச் செல்லுகையில் யமுனை நதிக்கரைக்கு வந்து சேர்ந்தார்.

2.2. அங்கு அப்பொழுது சாப்பிட்டுக் கொண்டிருந்த ஒரு செம்படவனைப் பார்த்து அந்த தர்மாத்மா 'என்னைப் படகிலேற்றி யமுனையின் அக்கரைக்குக் கொண்டுபோய்ச் சேர்' என்று கேட்டுக்கொண்டார்.

2.3—4. கரையில் போஜனம் செய்து கொண்டிருந்த அச்செம்படவன் முனிவர் சொல்லைக்கேட்டு தன்னுடைய அழகிய இளம் பெண்ணாகிய மத்ஸ்ய கந்தியை நோக்கி, 'குழந்தாய்! புன்முறுவல் பூத்தவளே! இம்முனிவர் தபஸ்வி, தர்மாத்மா நதியைக்கடக்க விரும்புகிறார். படகில் அவரை அக்கரைக்கு அழைத்துப்போ' என்றார்.

விருந்து ஆணும் பெண்ணுமாக இரண்டு குழந்தைகள் தோன்றின. அக்குழந்தைகள் ஒரு செம்படவனால் உபரிசரனிடம் சேர்க்கப்பட்டன. அவன் ஆண் குழந்தையை வைத்துக் கொண்டு பெண் குழந்தையைச் செம்படவனுக்குக் கொடுத்து விட்டான். அவள் பெயர் காளீ.

इत्युक्ता सा तदा पित्रा मत्स्यगन्धाऽथ वासवी ।
उडुपे मुनिमासीनं संवाहयति भामिनी ॥ २. ५ ॥

पराशर उवाच—

श्रृणु सुन्दरि पुत्रस्ते विष्णवंशसम्भवः शुचिः ।
भविष्यति च विख्यातस्त्रैलोक्ये वरवर्णिनि ॥ २. २९ ॥

केनचित्कारणेनाहं जातः कामातुरस्त्वयि ।
कदाऽपि च न संमोहो भूतपूर्वो वरानने ॥ २. ३० ॥

दृष्ट्वा चाप्सरसां रूपं सदाऽहं धैर्यमावहम् ।
दैवयोगेन वीक्ष्य त्वां कामस्य वशगोऽभवम् ॥ २. ३१ ॥

2.5. வசுபுத்திரியான மத்ஸ்யகந்தியெனும் அவ்வழகிய பெண் தந்தையால் இங்ஙனம் ஏவப்பட்டு படகில் முனிவரை உட்கார்த்தி ஆற்றைக் கடக்கலானாள்.

பராசரர் கூறியது—

2.29. அழகியே! சிறந்தமேனி படைத்தவளே! நான் சொல்வதைக் கேள். பரிசுத்தமான விஷ்ணுவின் அம்சத்தால் உனக்கு ஒரு புத்திரன் உண்டாகப் போகிறான். அவன் மூவுலகிலும் புகழுடன் விளங்குவான்.

2.30. அழகிய முகம் படைத்தவளே! ஏதோ ஒரு காரணத்தால் நான் இப்பொழுது உன்னிடம் காமத்தால் கவரப்பட்டுள்ளேன். இதற்கு முன் ஒருபொழுதும் இப்படி மோகத்தை நான் அடைந்ததில்லை.

2.31. அப்ஸரஸ்திரீகளின் அழகிய வடிவைக்கண்டும் நான் எப்பொழுதும் தைரியத்துடன் நிலைதவறாமலிருந்திருக்கிறேன். தெய்வஸங்கல்பத்தால் உன்னைக்கண்டு காமத்திற்கு நான் வசமாகிவிட்டேன்.

तत्किंचित्कारणं विद्धि दैवं हि दुरतिक्रमम् ।
दृष्ट्वाऽहं चातिदुर्गन्धां त्वां कथं मोहमाप्नुयाम् ॥ २. ३२ ॥

पुराणकर्ता पुत्रस्ते भविष्यति वरानने ।
वेदविद्भागकर्ता च ख्यातश्च भुवनत्रये ॥ २. ३३ ॥

सूत उवाच—

इत्युक्त्वा तां वशं यातां भुक्त्वा स मुनिसत्तमः ।
जगाम तरसा स्नात्वा कालिन्दीसलिले मुनिः ॥ २. ३४ ॥

साऽपि सत्यवती जाता सद्यो गर्भवती सती ।
सुषुवे यमुनाद्वीपे पुत्रं काममिवापरम् ॥ २. ३५ ॥

2.32. அதற்குக் காரணம் நாம் மீறமுடியாத ஏதோ ஒரு தெய்வ ஸங்கல்பம் என்று நீ உணர வேண்டும். இல்லையேல் துர்நாற்றம் வீசும் உன்னைக்கண்டு எப்படி நான் மோஹமடையக்கூடும்?

2.33. அழகிய முகம் படைத்தவளே! உன் புத்திரன் புராணகர்த்தாவாகவும், வேதத்தையறிந்தவனாகவும் வேதத்தைப்பாகுபடுத்தி வகுப்பவனாகவும் மூவுலகிலும் புகழ் பெற்றவனாகவும் ஆவான்.

ஸூதர் கூறியது—

2.34. இங்ஙனம் கூறித் தன் வசப்பட்ட அவளை அனுபவித்துவிட்டு யமுனை நீரில் ஸ்நானம் செய்துவிட்டு அம் முனிசிரேஷ்டர் விரைவில் சென்றுவிட்டார்.

2.35. உத்தமப் பெண்ணாகிய அந்த ஸத்தியவதி உடனே கருத்தரித்து யமுனையாற்றுத்திட்டில் புதியதொரு காமதேவனைப் போன்றழகிய புத்திரனைப் பெற்றாள்.

जातमात्रस्तु तेजस्वी तामुवाच स्वमातरम् ।
तपस्येव मनः कृत्वा विविशे चातिवीर्यमान् ॥ २. ३६ ॥

गच्छ मातर्यथाकामं गच्छाम्यहमतः परम् ।
तपः कर्तुं महाभागे दर्शयिष्यामि वै स्मृतः ॥ २. ३७ ॥

मातर्यदा भवेत्कार्यं तव किंचिदनुत्तमम् ।
स्मर्तव्योऽहं तदा शीघ्र-मागमिष्यामि भामिनि ॥ २. ३८ ॥

स्वस्ति तेऽस्तु गमिष्यामि त्यक्त्वा चिन्तां सुखं वस ।
इत्युक्त्वा निर्ययौ व्यासः साऽपि पित्रन्तिकं गता ॥ २. ३९ ॥

द्वीपे न्यस्तस्तथा बालस्तस्माद् द्वैपायनोऽभवत् ।
जातमात्रो जगामाशु वृद्धिं विष्ण्वंशयोगतः ॥ २. ४० ॥

2.36–38. பிறந்தவுடன் தேஜஸ்வியாகவும் வீரியம் படைத்தவனுகவும் விளங்கிய அப்புத்திரன் தவத்தில் மனம் சென்றவனுய் அவ்வாழ்க்கையை மேற்கொள்பவனுய்த் தன் தாயை நோக்கி, 'தாயே! தாங்கள் தங்கள் விருப்பப்படி செல்லலாம். நான் தவஞ் செய்யப் போகிறேன். மஹா பாக்கியவதியே! தாங்கள் எப்பொழுது என்னை நினைத்தாலும் தங்கள் முன் காட்சியளிப்பேன். தாயே! தங்களுக்கு மிக முக்கியமான காரியம் ஏதேனும் ஆகவேண்டியிருந்தால் என்னை நினைக்கலாம். அப்பொழுது சீக்கிரம் வருவேன்' என்று கூறினுர்.

2.39. 'உங்களுக்கு மங்களமுண்டாகட்டும். நான் போய் வருகிறேன். கவலையைவிட்டு நீங்கள் சுகமாயிருங்கள்' என்று கூறிவிட்டு வியாஸர் சென்று விட்டார். அவளும் தந்தையிடம் சென்ருள்.

2.40. அவளால் பாலகனுக துவீபத்தில் விடப்பட்டதால் அவர் துவைபாயனர் எனும் பெயருடையவரானுர். விஷ்ணுவின் அம்சம் அவரிடம் கூடியிருந்ததால் பிறந்தவுடன் அவர் வளர்ச்சியடைந்தவரானுர்.

तीर्थे तीर्थे कृतस्नानश्चचार तप उत्तमम् ।
एवं द्वैपायनो जज्ञे सत्यवत्यां पराशरात् ॥ २. ४१ ॥

चकार वेदशाखाश्च प्राप्तं ज्ञात्वा कलेर्युगम् ।
वेदविस्तारकरणाद् व्यासनामाऽभवन्मुनिः ॥ २. ४२. ॥

पुराणसंहिताश्चक्रे महाभारतमुत्तमम् ।
शिष्यानध्यापयामास वेदान् कृत्वा विभागशः ॥ २. ४३ ॥

सुमन्तुं जैमिनिं पैलं वैशम्पायनमेव च ।
असितं देवलं चैव शुकं चैव स्वमात्मजम् ॥ २. ४४ ॥

सूत उवाच—

एतच्च कथितं सर्वं कारणं मुनिसत्तमाः ।
सत्यवत्याः सुतस्याऽपि समुत्पत्तिस्तथा शुभा ॥ २. ४५ ॥

2.41. புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்து கொண்டு அவர் உத்தமமான தவத்தைச் செய்தார். பராசரருக்கும் ஸத்தியவதிக்கும் புத்திரனுக துவைபாயனர் பிறந்த வரலாறு இது.

2.42. கலியுகம் நெருங்கி வருவதையுணர்ந்து அவர் வேதத்தைச் சாகைகளாகப் பிரித்தார். வேதத்தைப் பிரித்து விஸ்தாரப் படுத்தியதால் அம்முனிவர் வியாஸர் எனப் பெயர் பெற்றுர்.

2.43–44. புராண ஸம்ஹிதைகளைத் தொகுத்து மஹாபாரதத்தையும் ஆக்கினுர். வேதங்களைப் பாகுபாடு செய்து ஸுமந்து, ஜைமினி, பைலர், வைசம்பாயனர், அஸிதர், தேவலர் முதலிய சிஷ்யர்களுக்கும் தன் புத்திரனுகிய சுகருக்கும் அத்தியயனம் செய்வித்தார்.

ஸூதர் கூறியது—

2.45. முனிசிரேஷ்டர்களே! ஸத்தியவதியின் பிள்ளையாக வியாஸர் சுபஜனனம் எய்தியதும் அதன் காரணமும் எல்லாம் இங்ஙனம் கூறியாயிற்று.

संशयो नहि कर्तव्यः सम्भवे मुनिसत्तमाः ।
महतां चरिते चैव गुणा ग्राह्या मुनेरिति ॥ २. ४६ ॥

कारणाच्च समुत्पत्तिः सत्यवत्या झषोदरे ।
पराशरेण संयोगः पुनः शन्तनुना तथा ॥ २. ४७ ॥

अन्यथा तु मुनेश्चित्तं कथं कामाकुलं भवेत् ।
अनार्यजुष्टं धर्मज्ञः कृतवान् स कथं मुनिः ॥ २. ४८. ॥

सकारणेयमुत्पत्तिः कथिताऽऽश्चर्यकारिणि ।
श्रुत्वा पापाच्च निर्मुक्तो नरो भवति सर्वथा ॥ २. ४९ ॥

य एतच्छुभमाख्यानं शृणोति श्रुतिमान्नरः ।
न दुर्गति-मवाप्नोति सुखी भवति सर्वदा ॥ २. ५० ॥

2.46. முனிசிரேஷ்டர்களே! இவருடைய பிறப்பைப் பற்றி சந்தேகப்படக்கூடாது. மகான்களுடைய சரித்திரத்திலுள்ள குணங்களைத்தான் கிரகிக்க வேண்டும்.

2.47. ஸத்யவதி மீன் வயிற்றில் பிறந்ததும் பராசரருடன் கூடியதும், மறுபடி சந்தனுவுடன் கூடியதும் (நமக்கு விளங்காத) ஏதோ ஒரு தெய்வீகமான காரணத்தால் என்று கொள்ளவேண்டும்.

2.48. இல்லையேல் முனிவரின் சித்தம் எப்படி காமத்தால் கலக்கமுறும்? தர்மமறிந்த அம்முனிவர் எங்ஙனம் மேலோர்க்கொவ்வாத காரியத்தைச் செய்தவராவார்?

2.49. காரணத்துடன் கூடிய இவருடைய ஆச்சரியமான பிறப்பு எடுத்துரைக்கப்பட்டது. இதைக்கேட்டு ஒரு மனிதன் பாவங்களினின்று விடுபட்டவனாவான்.

2.50. இந்த மங்களகரமான வரலாற்றைக் கேள்வியிற் சிறந்த எந்த மனிதன் கேட்கிறானோ அவன் துர்க்கதியை அடைய மாட்டான். எப்பொழுதும் சுகமாய் வாழ்வான்.

इति श्रीदेवीभागवते द्वितीयस्कन्धे द्वितीयोऽध्यायः

॥ व्यासजननकथा समाप्ता ॥

இங்ஙனம் தேவீபாகவதத்தில் இரண்டாவது ஸ்கந்தத்தில் இரண்டாவது அத்தியாயம் முற்றும்.

வியாஸர் பிறந்த கதை முற்றும்.

॥ शन्तनु चरित्रम् ॥ ७ ॥

ऋषय ऊचुः—

माता व्यासस्य या प्रोक्ता नाम्ना सत्यवती शुभा ।
सा कथं नृपतिं प्राप्ता शन्तनुं धर्मवित्तमम् ॥ ३. ३ ॥

सूत उवाच—

इक्ष्वाकुवंशप्रभवो महाभिष इति स्मृतः ।
सत्यवान् धर्मशीलश्च चक्रवर्ती नृपोत्तमः ॥ ३. १५ ॥

एकदा ब्रह्मसदनं गतो राजा महाभिषः ।
गंगा महानदी तत्र संस्थिता सेवितुं विभुम् ॥ ३.१६ ॥

7. சந்தனு சரித்திரம்

ரிஷிகள் கூறியது—

3.3. ஸத்தியவதி எனப் பெயர்பெற்ற எந்த மங்கள வடிவினள் வியாஸருடைய தாயார் எனக் கூறப்பட்டாளோ அவள் எங்ஙனம் தர்மம் தெரிந்தவர்களில் சிறந்தவரான சந்தனுமகாராஜனை அடைந்தாள்?

ஸூதர் கூறியது—

3.15. இக்ஷ்வாகு வம்சத்திலுதித்த மஹாபிஷன் என்ெருரு சிறந்த அரசர் இருந்தார். அவர் ஸத்தியவானுகவும் தர்மசிலராகவும் சக்ரவர்த்தியாகவும் விளங்கினுர்.

3.16. புண்ணிய வசத்தால் மேலுலகம் சென்ற அந்த மஹாபிஷன் ஒரு சமயம் பிரம்மாவின் ஸபைக்குச் சென்ருர். மகாநதியான கங்காதேவி பிரபுவான பிரம்மாவை ஸேவிப்பதற்கு அங்கு நின்று கொண்டிருந்தாள்.

तस्या वासः समुद्धूतं मारुतेन तरस्विना ।
अधोमुखाः सुराः सर्वे न विलोक्यैव तां स्थिताः ॥ ३.१८ ॥

राजा महाभिषस्तां तु निःशंकः समपश्यत ।
साऽपि तं प्रेमसंयुक्तं नृपं ज्ञातवती नदी ॥ ३.१९ ॥

दृष्ट्वा तौ प्रेमसंयुक्तौ निर्लज्जौ काममोहितौ ।
ब्रह्मा चुकोप तौ तूर्णं शशाप च रुषान्वितः ॥ ३.२० ॥

मर्त्यलोकेषु भूपाल जन्म प्राप्य पुनर्दिवम् ।
पुण्येन महताविष्टस्त्वमवाप्स्यसि सर्वथा ॥ ३.२१ ॥

गंगां तथोक्तवान् ब्रह्मा वीक्ष्य प्रेमवतीं नृपे ।
विमनस्कौ तु तौ तूर्णं निःसृतौ ब्रह्मणोऽन्तिकात् ॥ ३.२२ ॥

3.18. வேகமாக வீசின காற்ருல் அவளுடைய வஸ்திரம் விலகிற்று. அப்பொழுது அங்கிருந்த தேவர்களெல்லாம் தலைகவிழ்ந்து அவளைப் பாராமலிருந்தனர்.

3.19. அரசன் மஹாபிஷன் மட்டும் வெட்கப்படாமல் பார்த்துக் கொண்டே இருந்தான். கங்கையும் அவ்வரசன் காமத்துடன் தன்னைப் பார்ப்பதை உணர்ந்தாள்.

3.20. காம வசப்பட்டு பிரேமையுடன் வெட்கமில்லாமல் நின்ற அவர்களைக்கண்டு பிரம்மா வெகுண்டு கோபங் கொண்டவராய் உடனே சபித்தார்.

3.21. 'அரசனே! நீ பூலோகத்தில் மறுபடி பிறந்து மீண்டும் புண்ணியத்தின் பயனுய் தேவலோகத்தையடைவாயாக'.

3.22. அரசனிடத்தில் பிரேமை கொண்ட கங்கையையும் பார்த்து பிரம்மா அவ்வாறே கூறினுர். இருவரும் மனம் வருந்தி விரைவில் பிரம்மாவின் முன்னிலையிலிருந்து அகன்றனர்.

स नृपश्चिन्तयित्वाऽथ भूलोके धर्मतत्परान् ।
प्रतीपं चिन्तयामास पितरं पुरुवंशजम् ।। ३. २३ ।।

दत्त्वा राज्यश्रियं सर्वां वनं राजा विवेश ह ।
तत्रापि च तपस्तप्त्वा समाराध्य पराम्बिकाम् ।। ३. ५८ ।।

जगाम स्वर्गं राजाऽसौ देहं त्यक्त्वा स्वतेजसा ।
राज्यं प्राप महातेजाः शन्तनुः सार्वभौमिकम् ।। ३. ५९ ।।

स कदाजिद्वने घोरे गंगातीरे चरन् नृपः ।
ददर्श मृगशावाक्षीं सुन्दरीं चारुभूषणाम् ।। ४. २ ।।

महाभिषं साऽपि मत्वा प्रेमयुक्ता बभूव ह ।
किंचिन्मन्दस्मितं कृत्वा तस्थावग्रे नृपस्य च ।। ४. ५. ।।

3.23. அவ்வரசன் பூலோகத்தில் தர்மத்தில் சிறந்தவர்களை எண்ணிப் பார்த்துப் புருவம்சத்துதித்த ப்ரதீபன் என்பவனைத் தனக்குத் தந்தையாய்க் கொள்ளத் தீர்மானித்து அவனிடம் பிறந்தான்.

3.58–59. நாளடைவில் பிரதீபன் எல்லா அரசுரிமையையும் சந்தனு என்ற அப்பிள்ளையிடம் கொடுத்துவிட்டு வனம் சென்று அங்கு தவம் புரிந்து, பராசக்தியைப் பூஜித்துத் தன் தேஜஸ்ஸால் உடலை நீத்து ஸ்வர்க்கலோகம் சென்றான். சந்தனுவும் மகாதேஜஸ்வியாய்ச் சக்கரவர்த்திப் பதவியையடைந்தான்.

4.2. அவ்வரசன் ஒரு சமயம் கங்கைக்கரையிலுள்ள பயங்கரமான வனத்தில் சஞ்சரிக்கையில் மான்விழி படைத்தவளும் இனிமையாய்ப் பேசுபவளுமாகிய ஒரு அழகிய ஸ்திரீயைக் கண்டான்.

4.5. அவளும் அவனை மஹாபிஷன் என்றுணர்ந்து பிரேமையுடையவளானாள். சிறிது புன்முறுவல் பூத்து அவன் முன் நின்றாள்.

राजा तां नाभिजानाति गंगेयमिति निश्चितम् ।
महाभिषं समुत्पन्नं नृपं जानाति जाह्नवी ।। ४. ९ ।।

स्त्र्युवाच—

जानामि त्वां नृपश्रेष्ठ प्रतीपतनयं शुभम् ।
का न वांछति चावंगी भावित्वात् सदृशं पतिम् ।। ४. ११ ।।

वाग्बन्धेन नृपश्रेष्ठ चरिष्यामि पतिं किल ।
श्रृणु मे समयं राजन् वृणोमि त्वां नृपोत्तम ।। ४. १२ ।।

यच्च कुर्यामहं कार्यं शुभं वा यदि वाऽशुभम् ।
न निषेध्या त्वया राजन् न वक्तव्यं तथाऽप्रियम् ।।४. १३ ।।

4.9. அரசன் அவளை கங்கை என்று தெரிந்து கொள்ள வில்லை. கங்கையோ மஹாபிஷன்தான் அவ்வரசனுய்த் தோன்றியவன் என்பதை அறிவாள்.

ஸ்திரீ கூறியது—

4.11. அரசசிரேஷ்டரே! உம்மை நான் ப்ரதீபருடைய மங்களகரமான புத்திரர் என்று அறிவேன். அழகிய எந்த ஸ்திரீதான் தனக்குச் சமமான பதி வாய்க்க வேண்டுமென்று விரும்பமாட்டாள்?

4.12. அரசசிரேஷ்டரே! ஒரு வாக்குறுதிக்குக் கட்டுப்படக்கூடிய ஒரு கணவனை நான் பின்பற்றுவேன். உம்மை நான் மனைவியாயடைவதற்கு ஒப்பந்தம் என்னவென்பதைக் கூறுகிறேன் கேளும்.

4.13. நல்லதோ கெட்டதோ நான் எந்தக் காரியம் செய்தாலும் உம்மால் நான் தடுக்கப்படக் கூடாது. பிரியமில்லாத வார்த்தையும் உம்மால் என்னை நோக்கிச் சொல்லுதல் கூடாது.

यदा च त्वं नृपश्रेष्ठ न करिष्यसि मे वचः ।
तदा मुक्त्वा गमिष्यामि यथेष्टं देशमारिष ॥ ४. १४ ॥

तथेत्युक्ताऽथ सा देवी चकार नृपतिं पतिम् ।
एवं वृता नृपेणाऽथ गंगा मानुषरूपिणी ॥ ४. १६ ॥

रेमाते मन्दिरे दिव्ये रमानारायणाविव ।
एवं गच्छति काले सा दधार नृपतेस्तदा ॥ ४. २० ॥

गर्भं गंगा वसुं पुत्रं सुषुवे चारुलोचना ।
जातमात्रं सुतं वारि चिक्षेपैवं द्वितीयके ॥ ४. २१ ॥

तृतीयेऽथ चतुर्थेऽथ पंचमे षष्ठ एव च ।
सप्तमे वा हते पुत्रे राजा चिन्तापरोऽभवत् ॥ ४. २२ ॥

4.14. அரசசிரேஷ்டரே! நாட்டில் நன்மதிப்பிற்குரியவரே! எப்பொழுது இந்த என் வார்த்தையை நீர் செய்யாமற் போவீரோ அப்பொழுது உம்மைவிட்டுப் பிரிந்து என்னிஷ்டப்படி சென்று விடுவேன்.

4.16. அரசன் 'அப்படியே ஆகட்டும்' என்று அவளிடம் கூறி அவளை வரிக்கவே, மானிட வடிவில் வந்த அந்த கங்காதேவி அவனைப் பதியாக் ஏற்றுக் கொண்டாள்.

4.20–21. திவ்யமான மாளிகையில் லக்ஷ்மியையும் நாராயணனையும் போல் அவர்கள் இன்புற்று வாழ்ந்தனர். இப்படி காலம் செல்லுகையில் அழகிய கண் படைத்த கங்கை அரசனிடம் கருத்தரித்து வஸுவைப் புத்திரனுகப் பெற்ருள். பிறந்ததும் அம்மகனை கங்கை நீரில் எறிந்து விட்டாள். அவ்வாறே இரண்டாவது குழந்தையையும் செய்தாள்.

4.22. பிறகு மூன்ருவது நான்காவது ஐந்தாவது ஆருவது ஏழாவது பிள்ளையும் அங்ஙனமே கொல்லப்பட்டபொழுது அரசன் கவலையிலாழ்ந்து பின்வருமாறு யோசிக்கலானுன்.

निवारयामि यदि मां त्यक्त्वा यास्यति सर्वथा ।
अष्टमोऽयं सुसम्प्राप्तो गर्भो मे मनसीप्सितः ॥ ४. २४ ॥

न वारयामि चेदद्य सर्वथेयं जले क्षिपेत् ।
भविता वा न वाचाग्रे संशयोऽयं ममाद्भुतः ॥ ४. २५ ॥

ततः काले यदा जातः पुत्रोऽयमष्टमो वसुः ।
तं दृष्ट्वा नृपतिः पुत्रं तामुवाच पतन् पदे ॥ ४. २८ ॥

हिंसिताः सप्त पुत्रा मे करभोरु त्वया शुभाः ।
अष्टमं रक्ष सुश्रोणि पतामि तव पादयोः ॥ ४. ३० ॥

एवं वदति भूपाले सा गृहीत्वा सुतं शिशुम् ।
गच्छन्ती वचनं कोपसंयुता तमुवाच ह ॥ ४. ३१ ॥

4.24. 'நான் தடுத்தால் இவள் என்னை எப்படியாயினும் விட்டுப் போய்விடுவாள். நான் மனதில் ஆசைப்படும் புத்திரனை இப்பொழுது எட்டாவதாகக் கருத்தரித்திருக்கிறாள்.

4.25. 'நான் இப்பொழுது தடுக்காவிட்டால் நிச்சயமாகத் தண்ணீரில் குழந்தையை எறிந்துவிடுவாள். அதற்கு மேல் குழந்தை பிறக்குமோ பிறக்காதோ, என்ன நிகழுமோ என்ற அதிசயமும் சந்தேகமும் மனதைக் குழப்புகிறது.'

4.28. உரிய காலத்தில் எட்டாவது வஸு பிள்ளையாகப் பிறந்ததைக்கண்டு அரசன் அவளுடைய காலில் விழுந்து அவளிடம் கூறினன்:

4.30. 'மங்கள வடிவினர்களான என்னுடைய ஏழு பிள்ளைகள் உன்னல் கொல்லப்பட்டனர். அழகிய துடை படைத்தவளே! எட்டாவது குழந்தையைக் காப்பாற்று. உன் பாதங்களில் பணிகிறேன்.'

4.31. அரசன் இப்படி பேசிக் கொண்டிருக்கும் பொழுதே அவள் குழந்தையை எடுத்துக்கொண்டு போக ஆரம்பித்துக் கோபத்துடன் அவனிடம் பின்வருமாறு கூறினள்.

पुत्रकाम सुतं त्वेनं पालयामि वने गता ।
समयो मे गमिष्यामि वचनं ह्यन्यथा कृतम् ॥ ४. ३२ ॥

गंगां मां वै विजानीहि देवकार्यार्थमागताम् ।
वसवस्तु पुरा शप्ता वसिष्ठेन महात्मना ॥ ४. ३३ ॥

व्रजन्तु मानुषीं योनिं स्थितां चिन्तातुरास्तु माम् ।
दृष्ट्वेदं प्रार्थयामासु-र्जननी नो भवानघे ॥ ४. ३४ ॥

तेभ्यो दत्त्वा वरं जाता पत्नी ते नृपसत्तम ।
देवकार्यार्थसिद्ध्यर्थं जानीहि सम्भवो मम ॥ ४. ३५ ॥

सप्त ते वसवः पुत्रा मुक्ताः शापादृषेस्तु ते ।
कियन्तं कालमेकोऽयं तव पुत्रो भविष्यति ॥ ४. ३६ ॥

4.32. 'புத்திரனை விரும்புவரே! இந்தப் புத்திரனை வனத்தில் கொண்டுபோய்க் காப்பாற்றுகிறேன். நமது ஒப்பந்தப்படி நீர் கொடுத்த வாக்குறுதி மாறிவிட்டதால் நான் போகிறேன்.

4.33–34. 'தேவகாரியத்தின் பொருட்டு வந்த கங்கை என்று என்னைத் தெரிந்து கொள்ளும். மகாத்மா வாகிய வசிஷ்டரால் முன்பு வசுக்கள் மனிதப்பிறவியடையும் படி சபிக்கப்படவே அவர்கள் கவலையிலாழ்ந்திருக்கையில் நான் அவர்கள் முன் வரக்கண்டு அவர்கள் என்னை நோக்கி 'பாவமற்றவளே! நீ எங்களுக்கு மனிதப் பிறவியில் தாயாக வரவேண்டும்'' என்று கேட்டுக் கொண்டனர்.'

4.35. 'அரசசிரேஷ்டரே! அவர்களுக்கு அவ்வரத் தைக் கொடுத்து தேவகாரியம் சித்திப்பதற்காக உமக்குப் பத்தினியாக வந்தவள் நான் என்ற இந்த என்னுடைய வரலாற்றைத் தெரிந்து கொள்ளும்.

4.36. 'உமக்குப் புத்திரர்களாய்ப் பிறந்த ஏழு வஸுக் கள் ரிஷி சாபத்திலிருந்து விடுவிக்கப்பட்டனர். இவன் ஒருவன் குறிப்பிட்ட காலம் வரை உமது புத்திரனுக இருப்பான்.

गंगादत्तमिमं पुत्रं गृहाण शन्तनो स्वयम् ।
वसुं देवं विदित्वैनं सुखं भुंक्ष्व सुतोद्भवम् ॥ ४. ३७ ॥

अद्य तत्र नयाम्येनं यत्र त्वं वै मया वृतः ।
दास्यामि यौवनं प्राप्तं पालयित्वा महोपते ॥ ४. ३८ ॥

इत्युक्त्वाऽन्तर्दधे गंगा तं गृहीत्वा च बालकम् ।
राजा चातिदुःखार्तः संस्थितो निजमन्दिरे ॥ ४. ४५ ॥

एवं गच्छति कालेऽथ नृपति-र्मृगयां गतः ।
गंगातीरमनुप्राप्तः स राजा शन्तनुस्तदा ॥ ४. ४६ ॥

तत्रापश्यत्कुमारं तं मुंचन्तं विशिखान् बहून् ।
आकृष्य च महाचापं क्रीडतं सरितस्तटे ॥ ४. ४७ ॥

4.37. 'சந்தனுமகாராஜரே! கங்கையால் கொடுக்கப்பட்ட இந்தப் புத்திரனை ஏற்றுக் கொள்ளும். இவன் தேவன் என்றும் வஸு என்றும் உணர்ந்து பிள்ளையாலேற்படும் சுகத்தையனுபவிப்பீராக.

4.38. 'அரசே! நீர் என்னை எந்த இடத்தில் மனைவியாக வரித்தீரோ அந்த இடத்திற்கு இப்பொழுது நான் இவனைக் கொண்டு போகிறேன். அவனைக் காப்பாற்றி அவன் யௌவனப்பருவமடைந்ததும் உம்மிடம் அளிக்கிறேன்.'

4.45. இங்ஙனம் கூறிவிட்டு கங்கை அக்குழந்தையை எடுத்துக்கொண்டு அங்கேயே மறைந்து விட்டாள். அரசன் மிகுந்த துக்கத்தால் பீடிக்கப்பட்டவனாய்த் தன் அரண்மனையிலிருந்தான்.

4.46. இவ்வாறு காலங்கடந்தபின் சந்தனு மகாராஜன் ஒரு சமயம் வேட்டையாடுவதற்காக கங்கைக் கரையை அடைந்தான்.

4.47. அங்கு நதிக்கரையில் பெரிய வில்லை இழுத்து பல பாணங்களை விட்டு விளையாடிக் கொண்டிருந்த ஒரு குமாரனைக் கண்டான்.

पप्रच्छ विस्मितो राजा कस्य पुत्रोऽसि चानघ।
नोवाच किंचिद्धीरोऽसौ मुंचन्शिलीमुखानथ ॥ ४. ५२ ॥

अन्तर्धानं गतः सोऽथ राजा चिन्तातुरोऽभवत्।
गंगां तुष्टाव भूपालः स्थितस्तत्र समाहितः ॥ ४. ५३ ॥

दर्शनं सा ददौ चाथ चारुरूपा यथा पुरा।
दृष्ट्वा तां चारुसर्वांगीं बभाषे नृपतिः स्वयम्।
कोऽयं गंगे गतो बालो मम त्वं दर्शयाधुना ॥ ४. ५४ ॥

गंगोवाच—

पुत्रोऽयं तव राजेन्द्र रक्षितश्चाष्टमो वसुः।
ददामि तव हस्ते तु गांगेयोऽयं महातपाः ॥ ४. ५५ ॥

4.52. அரசன் அவனை வியப்புடன் நோக்கி 'பாவ மற்றவனே! நீ யாருடைய புத்திரன்?' என்று கேட்டான். பாணங்களை விட்டுக் கொண்டிருந்த அந்த தீரன் ஏதும் பேசவில்லை.

4.53. அவன் அங்கேயே மறைந்து விட்டான். அரசன் சிந்தையிலாழ்ந்து வருத்தமுற்றான். பின்பு மனதை ஒரு முகப்படுத்தி கங்கையைத் துதித்துக்கொண்டு அங்கே நின்றான்.

4.54. முன்போல் அழகிய உருவுடன் அவள் தரிசன மளித்தாள். எல்லா அங்கங்களிலும் அழகுபடைத்த அவளை நோக்கி அரசன் 'கங்கே! இப்பொழுது நான் கண்ட பாலன் யார்? எங்கு சென்றான்? நீ எனக்கு அவனைக் காண்பி' என்றான்.

கங்கை கூறியது—

4.55. 'அரசசிரேஷ்டரே! அவன் என்னால் காப்பாற்றப்பட்ட உம்முடைய புத்திரனாகிய எட்டாவது வஸு; மஹாதபஸ்வியாகிய அந்த காங்கேயனை உமது கையில் இப்பொழுது ஒப்புவிக்கிறேன்.'

सूत उवाच—

इत्युक्त्वान्तर्दधे गंगा दत्त्वा पुत्रं नृपाय वै ।
गत्वा गजाह्वयं राजा चकारोत्सव-मुत्तमम् ॥ ४. ६० ॥

यौवराज्येऽथ गांगेयं स्थापयामास पार्थिवः ।
सुखमास स धर्मात्मा न सस्मार च जाह्नवीम् ॥ ४. ६१ ॥

चत्वार्येव तु वर्षाणि पुत्रेण सह भूपतिः ।
रममाणः सुखं प्राप कुमारेण यथा हरः ॥ ५. ५ ॥

एकदा विक्षपन् बाणान् विनिघ्नन् खड्गसूकरान् ।
स कदाचिद्वनं प्राप्तः कालिन्दीं सरितांवराम् ॥ ५. ६ ॥

महीपतिरनिर्देश्य-माजिघ्रद् गन्धमुत्तमम् ।
तस्य प्रभवमन्विच्छन् संचचार वनं तदा ॥ ५. ७ ॥

ஸூதர் கூறியது—

4.60. இப்படிக் கூறி கங்கையானவள் புத்திரனை அரசனிடம் அளித்துவிட்டு மறைந்தாள். அரசன் ஹஸ்தினுபுரிக்குச் சென்று புத்திரன் வரவைச் சிறந்த உத்ஸவமாகக் கொண்டாடினன்.

4.61. காங்கேயனுகிய அப்புத்திரனை யுவராஜாவாக ஸ்தாபித்து இன்புற்றிருந்தான். தர்மாத்மாவாகிய அவன் கங்கையைப் பற்றிய எண்ணத்தை விட்டுவிட்டான்.

5.5. குமரக் கடவுளுடன் பரமசிவனைப் போல் தன் புத்திரனுடன் சுகமெய்தி அவ்வரசன் இன்புற்றிருக்கையில் நாலு வருஷங்கள் கழிந்தன.

5.6–7. ஒரு சமயம் சந்தனு சிறந்த நதியாகிய யமுனைக் கரையிலுள்ள வனத்தையடைந்து அம்புகளை எய்து காட்டுப் பன்றி முதலிய மிருகங்களை வேட்டையாடுகையில் அடையாளங் காணமுடியாத ஒருவகையான உத்தம வாஸனையை முகர்ந்தான். அதின் உற்பத்திஸ்தானத்தைக் காண விரும்பி வனத்தில் ஸஞ்சரித்தான்.

स ददर्श नदीतीरे संस्थितां चारुदर्शनाम् ।
श्रृंगारसहितां कान्तां सुस्थितां मलिनाम्बराम् ॥ ५. ११ ॥

दृष्ट्वा तामसितापांगीं विस्मितः स महीपतिः।
अस्या देहस्य गन्धोऽयमिति संजातनिश्चयः ॥ ५. १२ ॥

शन्तनुरुवाच—

संजातकामोऽहमरालनेत्रे त्वां वीक्ष्य कान्तां च मनोरमां च ।
ब्रूहि प्रिये याऽसि चिकीर्षसि त्वं किंचेति सर्वं मम विस्तरेण
॥ ५. १७ ॥

5.11. நதிக்கரையில் கண்ணிற்கினிய ஒரு பெண் நிற்பதைக் கண்டான். அவள் ஆடை அழுக்காயிருந்தபோதிலும் அலங்கரித்துக்கொண்டு வசிகரமாயிருந்தாள்.

5.12. கருவிழிபடைத்த அவளை அரசன் வியப்புடன் நோக்கி இவள் உடலிலிருந்துதான் இந்த வாசனை வருகிறதென்று நிச்சயித்தான்.

சந்தனு கூறியது—

5.17. கடைக்கண்ணழகியே! மனதிற்கினியவளாய்ப் பிரகாசிக்கும் உன்னைக் கண்டு நான் காதல் கொண்டுள்ளேன். பிரியமானவளே! நீ யார்? நீ எதை விரும்புகிறாய்? எல்லாவற்றையும் விரிவாக எனக்குச் சொல்.

इत्येवमुक्ता सुदती नृपेण प्रोवाच तं सस्मितमम्बुजेक्षणा ।
दासस्य पुत्रीं त्वमवेहि राजन् कन्यां पितुः शासनसंस्थितां च ॥ ५. १८ ॥

तरीमिमां धर्मनिमित्तमेव संवाहयामीह जले नृपेन्द्र ।
पिता गृहे मेऽद्य गतोऽस्ति कामं सत्यं ब्रवीम्यर्थपते तवाग्रे ॥ ५. १९ ॥

इत्याकर्ण्य वचस्तस्या नृपतिः काममोहितः ।
गतो दासपतेर्गेहं तस्या याचनहेतवे ॥ ५. २७ ॥

शन्तनुरुवाच—

धर्मपत्नीं करिष्यामि सुतामेतां तवाऽनघ ।
त्वया चेद्दीयते मह्यं सत्यमेतद् ब्रवीमि ते ॥ ५. ३० ॥

5.18–19. தாமரை போன்ற கண்ணும் அழகிய பல் வரிசையும் படைத்த அவள் அரசன் சொல்லியதைக் கேட்டு 'அரசே! என்னைச் செம்படவருடைய பெண் என்றும் தந்தையின் கட்டளைக்குக் கட்டுப்பட்ட கன்னிகை என்றும் தெரிந்து கொள்ளவேண்டும். இந்த ஓடத்தைக் குலதர்மத்தையனுசரித்து நீரில் ஓட்டிக் கொண்டிருக்கிறேன். என் தந்தை இப்பொழுது வீட்டுக்குப் போயிருக்கிறார். உம்மிடம் நான் சொல்வதெல்லாம் உண்மை' என்று கூறினாள்.

5.27. காமவசப்பட்டிருந்த அரசன் அவளுடைய வார்த்தையைக் கேட்டு அவளைத் தனக்குத் தரும்படி கேட்பதற்காகச் செம்படவனின் வீடு சென்றான்.

சந்தனு கூறியது—

5.30. 'பாவமற்றவரே! உம்முடைய இந்தப்புத்திரியை எனக்குக் கொடுக்கச் சம்மதித்தால் நான் அவளை என்னுடைய தர்மபத்தினியாகச் செய்து கொள்ளுகிறேன். நான் உம்மிடம் இதை ஸத்தியமாகக் கூறுகிறேன்.'

दाश उवाच—

कन्यारत्नं मदीयं चेद्यत्त्वं प्रार्थयसे नृप ।
दातव्यं तु प्रदास्यामि न त्वदेयं कदाचन ॥ ५. ३१ ॥

तस्याः पुत्रो महाराज त्वदन्ते पृथिवीपतिः ।
सर्वथा चाभिषेक्तव्यो नान्यः पुत्रस्तवेति वै ॥ ५. ३२ ॥

सूत उवाच—

श्रुत्वा वाक्यं तु दाशस्य राजा चिन्तातुरोऽभवत् ।
गांगेयं मनसा कृत्वा नोवाच नृपतिस्तदा ॥ ५. ३३ ॥

कामातुरो गृहं प्राप्तश्चिन्ताविष्टो महीपतिः ।
न सस्नौ बुभुजे नाथ न सुष्वाप गृहं गतः ॥ ५. ३४ ॥

செம்படவன் கூறியது—

5.31. அரசே! என்னுடைய கன்னிகா ரத்தின மாகிய இவளை நீர் பிரார்த்தித்தால் கொடுக்கிறேன். அவள் எப்படியும் ஒருவனுக்குக் கொடுக்க வேண்டியவளே. ஒரு பொழுதும் கொடுக்காமலிருக்க முடியாது.

5.32. மகாராஜரே! உம்முடைய அரசாட்சிக்குப் பின் அவளுக்குப் பிறக்கும் புத்திரன் பூமிக்குப் பதியாக எவ்வகையிலும் அபிஷேகம் செய்விக்கப்பட வேண்டும். உம் முடைய புத்திரன் வேறு எவனும் அபிஷேகம் பெறக் கூடாது.

ஸூதர் கூறியது—

5.33. செம்படவனுடைய வார்த்தையைக் கேட்டு அரசன் சிந்தையிலாழ்ந்தான். காங்கேயனை மனதி லெண்ணிக்கொண்டு அரசன் ஒன்றும் பதில் சொல்லவில்லை.

5.34. காமத்தால் பீடிக்கப்பட்டவனாய் அரசன் தன் மாளிகைக்குச் சென்று கவலைமேலிட்டு ஸ்நானம் செய்யவு மில்லை, சாப்பிடவுமில்லை. நன்றாய்த் தூங்கவுமில்லை.

चिन्तातुरन्तु तं दृष्ट्वा पुत्रो देवव्रतस्तदा ।
गत्वापृच्छन्महीपालं तदसन्तोषकारणम् ॥ ५. ३५ ॥

शन्तनुरुवाच—

एकापत्यस्य मे तात वृथेदं जीवितं किल ।
मृते त्वयि मृधे क्वापि किं करोमि निराश्रयः ॥ ५. ४७ ॥

सूत उवाच—

तदाकर्ण्याथ गांगेयो मन्त्रिवृद्धानपृच्छत ।
शशंसुर्विदितार्थस्तु गांगेयस्तदचिन्तयत् ॥ ५. ५१ ॥

सहितस्तैर्जगामाशु दाशस्य सदनं तदा ।
प्रेमपूर्वमुवाचेदं विनम्रो जाह्नवी-सुतः ॥ ५. ५२ ॥

5.35. அப்பொழுது அங்ஙனம் கவலையால் துன்புற்றிருந்த அரசனைக் கண்ணுற்ற தேவவிரதன் தந்தையையணுகிச் சந்தோஷமில்லாமலிருப்பதற்குக் காரணத்தை வினவினான்.

சந்தனு கூறியது—

5.47. குழந்தாய்! ஒரே மகனை உடைய என்னுடைய இவ்வாழ்க்கை வீண். ஏதாவது ஒரு போருக்குச் சென்று நீ இறந்துவிட நேர்ந்தால் அடைக்கலமில்லாத நான் என்ன செய்வேன்?

ஸூதர் கூறியது—

5.51. இவ்வார்த்தையைக் கேட்ட காங்கேயன் வயதான மந்திரிகளை அடுத்துத் (தந்தையின் கவலைக்குக் காரணத்தைப்பற்றி) விசாரித்தான். அவர்கள் அறிந்ததைக் கூறினார்கள். காங்கேயன் அதைப்பற்றி யோசித்தான்.

5.52. பின்பு அவர்களுடன் விரைவில் செம்படவன் வீடு சென்று காங்கேயன் அன்புடனும் வணக்கத்துடனும் பின்வருமாறு கூறினான்.

गांगेय उवाच—

पित्रे देहि सुतां तेऽद्य प्रार्थयामि सुमध्यमाम् ।
माता मेऽस्तु सुतेयन्ते दासोऽस्म्यस्याः परन्तप ।। ५. ५३ ।।

दाश उवाच—

त्वं गृहाण महाभाग पत्नीं कुरु नृपात्मज ।
पुत्रोऽस्या न भवेद्राजा वर्तमाने त्वयीति वै ।। ५. ५४ ।।

गांगेय उवाच—

मातेयं मम दाशेयी राज्यं नैव करोम्यहम् ।
पुत्रोऽस्याः सर्वथा राज्यं करिष्यति न संशयः ।। ५. ५५ ।।

காங்கேயன் கூறியது—

5.53. எதிரிகளை வெல்பவரே! என்னுடைய தந்தைக்கு இடையழகு படைத்த உமது புத்திரியைக் கொடுக்க வேணுமாய்ப் பிரார்த்திக்கிறேன். இந்த உமது மகள் எனக்குத் தாயாவாள். நான் அவளுக்கு அடிமை.

செம்படவன் கூறியது—

5.54. கௌரவகுலத்து அரசபுத்திரரே! நீர் இருக்கும் பொழுது இவளுக்குப் பிறக்கும் புத்திரன் அரசனாக இயலாது. ஆகையால் மகாபாக்கியசாலியே! நீரே இவளைப் பத்தினியாக ஏற்றுக்கொள்ளும்.

காங்கேயன் கூறியது—

5.55. இவள் எனது தாயாவாள். நான் அரசாட்சியை ஏற்கப் போவதில்லை. இவளுக்குப் பிறக்கும் புத்திரனே எவ்வகையிலும் அரசாள்வான். அதில் சந்தேகமில்லை.

दाश उवाच—

सत्यं वाक्यं मया ज्ञातं पुत्रस्ते बलवान् भवेत्।
सोऽपि राज्यं बलान्नूनं गृह्णीयादिति निश्चयः ॥ ५. ५६ ॥

गांगेय उवाच—

न दारसंग्रहं नूनं करिष्यामि हि सर्वथा।
सत्यं मे वचनं तात मया भीष्मं व्रतं कृतम् ॥ ५. ५७ ॥

सूत उवाच—

एवं कृतां प्रतिज्ञां तु निशम्य झषजीवकः।
ददौ सत्यवतीं तस्मै राज्ञे सर्वांगशोभनाम् ॥ ५. ५८ ॥

செம்படவன் கூறியது—

5.56. உமது வார்த்தை ஸத்தியம் என்பது என்னால் உணரப்பட்டதெனினும் உமது புத்திரன் பலவானுயிருப்பான், அவன் நிச்சயமாகத் தன் வலிமையால் அரசைப் பிடுங்கிக் கொள்ளக்கூடும்.

காங்கேயன் கூறியது—

5.57. நான் ஒருக்காலும் கலியாணம் செய்து கொள்ளப் போவதில்லே. இது நிச்சயம். ஐயனே! இந்த என் வார்த்தை ஸத்தியம். (பீஷ்மம்) அஞ்சக்கூடிய இவ் விரதத்தை நான் மேற்கொண்டுவிட்டேன்.

ஸௌதர் கூறியது—

5.58. இவ்வாறு காங்கேயன் செய்த பிரதிக்ஞையைக் கேட்டு அந்தச் செம்படவன் எல்லா அங்கங்களிலும் அழகியவளான ஸத்தியவதியை அரசனுக்குக் கொடுத்தான்.

अनेन विधिना तेन वृता सत्यवती प्रिया ।
न जानाति परं जन्म व्यासस्य नृपसत्तमः ।। ५. ५९ ।।

।। इति श्रीदेवीभागवते द्वितीयस्कन्धे पंचमोऽध्यायः ।।

।। शन्तनु चरित्रं समाप्तम् ।।

5.59. இந்த முறையில் ஸத்தியவதி அரசனுக்கு மனைவியானாள். இதற்குமுன் அவளிடம் வியாஸர் பிறந்திருந்த வரலாறு அவ்வரச சிரேஷ்டனுக்குத் தெரியாது.

இங்ஙனம் ஸ்ரீதேவீபாகவதத்தில்
இரண்டாவது ஸ்கந்தத்தில் ஐந்தாவது அத்தியாயம்
முற்றும்.

சந்தனு சரித்திரம் முற்றும்.

॥ पंच-पांण्डव जननम् ॥ ८ ॥

सूत उवाच—

शूरसेनसुता कुन्ती बालभावे यदा द्विजाः ।
कुन्तीभोजेन राजा तु प्रार्थिता कन्यका शुभा ॥ ६. १३ ॥

कुन्तीभोजेन सा बाला पुत्री तु परिकल्पिता ।
सेवनार्थन्तु दीप्तस्य विहिता चारुहासिनी ॥ ६. १४ ॥

दुर्वासास्तु मुनिः प्राप्तश्चातुर्मास्ये स्थितो द्विजः ।
परिचर्या कृता कुन्त्या मुनिस्तोषं जगाम ह ॥ ६. १५ ॥

8. பஞ்சபாண்டவர் ஜனனம்

ஸௌதர் கூறியது—

6.13. பிராம்மணர்களே! ராஜா சூரஸேனனுடைய நல்ல புத்திரியான குந்தீ சிறுமியாயிருக்கும்போதே குந்தி போஜன் என்பவரால் வளர்ப்புப் பெண்ணுகப் பிரார்த்தித்து எடுத்துக் கொள்ளப்பட்டார்.

6.14. அழகிய புன்சிரிப்புடைய அச்சிறுமி புத்திரியாகக் குந்திபோஜனுல் ஏற்றுக் கொள்ளப்பட்டபின் சூரிய பூஜையில் பணிவிடை செய்வதற்கு நியமிக்கப்பட்டாள்.

6.15. துர்வாஸ முனிவர் சாதுர்மாஸ்ய விரதம் அனுஷ்டிக்க அரண்மனையில் வந்து தங்கியபொழுது குந்தியால் செய்யப்பட்ட பணிவிடையை மெச்சிச் சந்தோஷமடைந்தார்.

ददौ मन्त्रं शुभं तस्यै येनाहूतः सुरः स्वयम् ।
समायाति तथा कामं पूरयिष्यति वांछितम् ॥ ६. १६ ॥

गते मुनौ ततः कुन्ती निश्चयार्थं गृहे स्थिता ।
चिन्तयामास मनसा कं सुरं समचिन्तये ॥ ६. १७ ॥

उदितश्च तदा भानुस्तया दृष्टो दिवाकरः ।
मन्त्रोच्चारं तथा कृत्वा चाहूतस्तिग्मतुस्तदा ॥ ६. १८ ॥

गर्भं दधार सुश्रोणी सुगुप्ते मन्दिरे स्थिता ।
धात्री वेद प्रिया चैका न मातान्य जनस्तथा ॥ ६. २६ ॥

गुप्तः सद्मनि पुत्रस्तु जातश्चातिमनोहरः ।
कवचेनातिरम्येण कुण्डलाभ्यां ल्समन्वितः ॥ ६. ३० ॥

6.16. எந்த தேவதை அழைக்கப்பட்டாலும் பிரசன்ன மாகி விரும்பிய வண்ணம் ஆசையைப் பூர்த்தி செய்விக்கக் கூடிய ஒரு மங்களமான மந்திரத்தை அவர் அவளுக்கு உபதேசித்தார்.

6.17. முனிவர் சென்ற பின் வீட்டிலிருந்து கொண்டு மந்திரத்தைச் சோதித்து நிச்சயப்படுத்திக்கொள்ள விரும்பி எந்த தேவதையை எண்ணலாம் என்று யோசித்தாள்.

6.18. அப்பொழுது திவாகரனுகிய சூரியன் உதய மாவதைக் கண்டு உபதேசித்தபடி மந்திரத்தை உச்சரித்து சூரியனை அழைத்தாள்.

6.29. (அழைப்பு வீண்போகா வண்ணம் சூரியனு டைய அனுக்கிரகத்தால்) அழகிய கன்னியாகிய அவள் கருத்தரித்து நன்ருக ரக்ஷிக்கப்பட்ட வீட்டிலிருந்தாள். அவளுக்குப் பிரியமான ஒரு தாதிக்கு மட்டும் இவ்விஷயம் தெரியும். தாயாருக்கோ வேறு ஜனங்களுக்கோ தெரியாது.

6.30. அவ்வீட்டில் ரகசியமாகவே அவளுக்குப் புத்தி ரனும் பிறந்தான். அவன் கவச குண்டலங்களுடன் மனதைக் கவரும் அழகுடையவனுய் விளங்கினன்.

मंजूषायां सुतं कुन्ती मुंचन्ती वाक्यमब्रवीत् ।
किं करोमि सुतार्ताऽहं त्यजे त्वां प्राणवल्लभम् ॥ ६. ३१ ॥

इत्युक्त्वा तं सुतं कुन्ती मंजूषायां धृतं किल ।
धात्री हस्ते ददौ भीता जनदर्शनतस्तथा ॥ ६. ३६ ॥

मंजूषा वहमाना च प्राप्ता ह्यधिरथेन वै ।
राधा सूतस्य भार्या वै तथासौ प्रार्थिता सुतः ।
कर्णोऽभूद् बलवान् वीरः पालितः सूतसद्मनि ॥ ६. ३७ ॥

कुन्ती विवाहिता कन्या पाण्डुना सा स्वयंवरे ।
माद्री चैवापराभार्या मद्रराजसुता शुभा ॥ ६. ३९ ॥

6.31–36. அப்பிள்ளையை ஒரு பெட்டியில் வைத்து மற்ற ஜனங்கள் பார்க்கக்கூடாதென்று அஞ்சியவளாய் 'மகனே! நான் என்ன செய்வேன்! பிள்ளையைப் பெற்று மகிழாமல் துன்புறுகிறேன். என் உயிருக்குயிரான உன்னைக் கைவிடுகிறேன்' என்று சொல்லிக் கொண்டு பெட்டியை எடுத்துத் தாதியின் கையில் கொடுத்தாள்.

6.37. தாதி கொண்டுபோன அப்பெட்டி அதிரதன் என்ற ஒரு தேர்ப்பாகன் கையில் சேர்ந்தது. அவனுடைய மனைவி ராதை என்பவள் அவனை வளர்ப்புப் பிள்ளையாக ஏற்றுக் கொண்டாள். தேர்ப்பாகன் வீட்டில் வளர்ந்து கர்ணன் என்ற பெயருடன் அவன் பலவானாகவும் வீரனாகவும் விளங்கினான்.

6.39. நாளடைவில் கன்யாஸ்வயம்வரத்தில் குந்தியானவள் பாண்டுவையடைந்து கல்யாணம் செய்து கொண்டாள். பாண்டுவின் இரண்டாவது மனைவி மத்ர தேசத்தரசன் பெண்ணாகிய மாத்ரி எனும் மங்கலப்பெண்.

मृगया-रममाणस्तु वने पाण्डुर्महाबलः ।
जघान मृगबुद्धया तु रममाणं मुनिं वने ॥ ६. ४० ॥

शप्तस्तेन तदा पाण्डुर्मुनिना कुपितेन च ।
स्त्रीसंगं यदि कर्तासि तदा ते मरणं ध्रुवम् ॥ ६. ४१ ॥

इति शप्तस्तु मुनिना पाण्डुः शोकसमन्वितः ।
त्यक्त्वा राज्यं वने वासं चकार भृशदुःखितः ॥ ६. ४२ ॥

कुन्ती माद्री च भार्ये द्वे जग्मतुः सहसंगते ।
सेवनार्थं सतीधर्मं संश्रिते मुनिसत्तमाः ॥ ६. ४३ ॥

भर्तुर्वाक्येन सा तत्र स्मृत्वा धर्मं सुरोत्तमम् ।
संगम्य सुषुवे पुत्रं प्रथमं च युधिष्ठिरम् ॥ ६. ५३ ॥

6.40. மகாபலசாலியான பாண்டு காட்டில் வேட்டையாடுகையில் மான் என்று எண்ணி (மனைவியுடன் கூடி) ரமித்துக்கொண்டிருந்த ஒரு முனிவரைக் கொன்றுவிட நேர்ந்தது.

6.41. கோபங்கொண்ட அம்முனிவரால் 'நீ இனி ஸ்திரீயுடன் புணர்ந்தால் அப்பொழுதே நிச்சயமாய் மரணமடைவாய்' என்று பாண்டு சபிக்கப்பட்டான்.

6.42. இங்ஙனம் முனிவரால் சபிக்கப்பட்ட பாண்டு சோகமும் துக்கமும் மேலிட்டவனாய் ராஜ்யத்தை விட்டு வனத்தில் வசிக்கலானான்.

6.43. முனிசிரேஷ்டர்களே! அவனுடைய மனைவிகள் இருவரும் பதிவிரதா தர்மத்தையனுசரித்து அவனுக்குச் சேவை செய்வதற்காக வனத்திற்கு உடன் சென்றனர்.

6.53. கணவனுடைய உத்திரவுப்படி குந்தியானவள் தேவசிரேஷ்டனாகிய தர்மராஜனை மனதால் நினைத்து அவரருளால் யுதிஷ்டிரன் எனும் முதல் புத்திரனைப் பெற்றாள்.

वायोर्वृकोदरं पुत्रं जिष्णुं चैव शतक्रतोः ।
वर्षे वर्षे त्रयः पुत्राः कुन्त्यां जाता महाबलाः ॥ ६. ५४ ॥

स्मृत्वा तदाऽश्विनौ देवौ मद्रराजसुता सुतौ ।
नकुलः सहदेवश्च सुषुवे वरवर्णिनी ॥ ६. ५५ ॥

एवं ते पाण्डवाः पंच क्षेत्रोत्पन्नाः सुरात्मजाः ।
वर्षवर्षान्तरे जाता वने तस्मिन् द्विजोत्तमाः ॥ ६. ५६ ॥

॥ इति श्रीदेवीभागवते द्वितीय स्कन्धे षष्ठोऽध्यायः ॥

पाण्डवजननकथा समाप्ता

6.54. வாயுவினிடம் அவ்வாறே விருகோதரன் (பீமன்) எனும் புத்திரனையும் இந்திரனிடம் ஜிஷ்ணு (அர்ஜுனன்) என்பவனையும் பெற்ருள். இங்ஙனம் ஒவ்வொரு வருஷம் ஒருவனுக மகாபலசாலிகளான மூன்று புத்திரர்கள் பிறந்தார்கள்.

6.55. சிறந்த மேனி படைத்த மத்ரராஜன் மகளாகிய மாத்ரியும் (குந்தியால் மந்திரம் உபதேசிக்கப்பட்டு) அச்வினீதேவர்களை மனதால் நினைத்து நகுலன் ஸஹதேவன் என்ற இரண்டு புத்திரர்களைப் பெற்ருள்.

6.56. பிராம்மணசிரேஷ்டர்களே! இவ்வாருகப் பாண்டுவின் மனைவிகளிடம் தேவர்களின் புதல்வர்களாக அவ்வனத்தில் வருஷத்திற்கொருவராய்ப் பாண்டவர்களாகிய அவ்வைவரும் பிறந்தார்கள்.

இங்ஙனம் ஸ்ரீதேவீபாகவதத்தில்
இரண்டாவது ஸ்கந்தத்தில் ஆருவது அத்தியாயம் முற்றும்.

பாண்டவ ஜனன கதை முற்றும்.

॥ महाभारत-अवसानकथा ॥ ९ ॥

सूत उवाच—

निहतेषु च पुत्रेषु धृतराष्ट्रोऽतिदुःखितः ।
तस्थौ पाण्डवराज्ये च भीमवाग्बाण-पीडितः ॥ ७. ७ ॥

गान्धारी च तथाऽतिष्ठत्पुत्रशोकातुरा भृशम् ।
सेवां तयोर्दिवारात्रं चकारार्तो युधिष्ठिरः ॥ ७. ८ ॥

विदुरोऽप्यतिधर्मात्मा प्रज्ञानेत्र-मबोधयत् ।
युधिष्ठिरस्यानुमते भ्रातृपार्श्वे व्यतिष्ठत ॥ ७. ९ ॥

9. மகாபாரத இறுதிக் கதை

ஸூதர் கூறியது—

7.7. (பாரதப் போரில்) புத்திரர்களெல்லாம் மடிந்த பின் திருதராஷ்டிரர் துக்கத்திலாழ்ந்து பாண்டவராஜ்யத்தில் பீமனுடைய சொல்லம்பால் பீடிக்கப்பட்டவராய் இருந்து வந்தார்.

7.8. காந்தாரியும் புத்திரசோகம் மேலிட்டவளாய் அவ்வாறே அங்கிருந்தாள். அவர்களுடைய துன்பத்தால் தானும் வருத்தமுற்ற யுதிஷ்டிரர் அவர்களுக்கு இரவும் பகலும் சேவை செய்தார்.

7.9. மிகவும் தர்மாத்மாவான விதுரர் யுதிஷ்டிரருடைய அனுமதியுடன் தன் தமயன் பக்கத்திலிருந்து கொண்டு அவருடைய ஞானக்கண்ணைத் திறக்க முயன்றார்.

कारयामास विधिवत्पुत्राणां चौर्ध्वदेहिकम् ।
ददौ दानानि विप्रेभ्यो धृतराष्ट्रोऽम्बिकासुतः ॥ ७. ३४ ॥

कृत्वौर्ध्वदैहिकं सर्वं गान्धारी सहितो नृपः ।
प्रविवेश वनं तूर्णं कुन्त्या च विदुरेण च ॥ ७. ३५ ॥

संजयेन परिज्ञातो निर्गतोऽसौ महामतिः ।
पुत्रैर्निवार्यमाणाऽपि शूरसेनसुता गता ॥ ७. ३६ ॥

ते गत्वा जाह्नवीतीरं शतयूपाश्रमं शुभम् ।
कृत्वा तृणैः कुटिं तत्र तपस्तेपुः समाहिताः ॥ ७ ३८ ॥

गताब्दानि च षट् तेषां यदा याता हि तापसाः ।
युधिष्ठिरस्तु विरहादनुजानिद-मब्रवीत् ॥ ७. ३९ ॥

7.34. அம்பிகா புத்திரராகிய திருதராஷ்டிரர் புத்திரர்களுக்கு முறைப்படி உத்தரக்கிரியைகளைச் செய்வித்து பிராம்மணர்களுக்கு தானங்களை வழங்கினார்.

7.35–36. உத்தரக்கிரியைகளை எல்லாம் செய்து முடித்தபின் ஸஞ்ஜயர் மூலம் நிலைமையறிந்தவராய் மிகுந்த மதியானுன திருதராஷ்டிர மகாராஜன் காந்தாரியுடனும் குந்தியுடனும் விதுரருடனும் விரைவில் வனம் புகுந்தார். புத்திரர்கள் தடுத்தும் கேளாமல் சூரஸேன புத்திரியான குந்தி (திருதராஷ்டிரருக்கும் காந்தாரிக்கும் உதவியாக) அவர்களுடன் சென்றாள்.

7.38. அவர்கள் கங்கைக்கரையை அடைந்து அழகான சதயூப ஆசிரமத்தருகில் பர்ணசாலையமைத்துக் கொண்டு மனதையடைக்கித் தவஞ் செய்யலாயினர்.

7.39. தவம் மேற்கொண்டு அவர்கள் சென்று ஆறு வருஷம் கடந்தபின் யுதிஷ்டிரர் பிரிவாற்றாமையால் தம்பிமார்களிடம் பின்வருமாறு கூறினார்.

स्वप्ने दृष्टा मया कुन्ती दुर्बला वनसंस्थिता ।
मनो मे जायते द्रष्टुं मातरं पितरौ तथा ॥ ७. ४० ॥
विदुरं च महात्मानं संजयं च महामतिम् ।
रोचते यदि वः सर्वान् व्रजाम इति मे मतिः ॥ ७. ४१ ॥
ततस्ते भ्रातरः सर्वे सुभद्रा द्रौपदी तथा ।
वैराटी च महाभागा तथा नागरिको जनः ॥ ७. ४२ ॥
प्राप्ताः सर्वजनैः सार्धं पाण्डवा दर्शनोत्सुकाः ।
शतयूपाश्रमं प्राप्य ददृशुः सर्व एव ते ॥ ७. ४३ ॥
विदुरो न यदा दृष्टो धर्मस्तं पृष्टवांस्तदा ।
क्वाऽस्ते स विदुरो धीमांस्तमुवाचाऽम्बिकासुतः ॥ ७. ४४ ॥
विरक्तश्चरते क्षत्ता निरीहो निष्परिग्रहः ।
कुत्राप्येकान्तसंवासी ध्यायतेऽन्तः सनातनम् : ॥ ७. ४५ ॥

7.40–41. 'வனத்தில் வசிக்கும் தாய் குந்தீ மிகவும் பலஹீனமாயிருப்பதாக நான் கனவு கண்டேன். அவளையும் திருதராஷ்டிரரையும் காந்தாரியையும் மகாத்மாவான விதுரரையும் சிறந்த புத்திமானான ஸஞ்ஜயரையும் பார்க்கவேண்டுமென்ற ஆசை என் மனத்திலெழுந்துளது. உங்களுக்கும் விருப்பம் இருக்குமானால் நாம் செல்வோம்.'

7.42–43. அதைக்கேட்டு அவருடைய எல்லா சகோதரர்களும் ஸுபத்ரை, துரௌபதீ, உத்தமியான உத்தரை ஆகியோரும் நகரத்து ஜனங்களும் எல்லோருமாக (தாயார் முதலியவர்களை) காண ஆவலுடையவர்களாய்ச் சதயூபாசிரமத்தையடைந்து அவர்களைக் கண்டனர்.

7.44–45. புத்திமானாகிய விதுரரை அங்கு காணாமையால் தர்மபுத்திரர் திருதராஷ்டிரரிடம் அவர் எங்குளார் என்று வினவ, அவர் வைராக்கியம் பூண்டு எதிலும் ஆசையில்லாதவராய் எவரிடமும் எதையும் ஏற்காதவராய்த் தனிமையில் எங்கோ இருந்துகொண்டு உள்ளத்தில் ஆதிபுருஷனை தியானித்துக் கொண்டிருப்பதாய்க் கூறினார்.

गंगां गच्छन् द्वितीयेऽह्नि वने राजा युधिष्ठिरः ।
ददर्श विदुरं क्षामं तपसा संशित-व्रतम् ।। ७. ४६ ।।

दृष्ट्वोवाच महीपालो वन्देऽहं त्वां युधिष्ठिरः ।
तस्थौ श्रुत्वा च विदुरः स्थाणुभूत इवानघः ।। ७. ४७ ।।

क्षणेन विदुरस्यास्या-न्निःसृतं तेज अद्भुतम् ।
लीनं युधिष्ठिरस्यास्ये धर्मांशत्वात्परस्परम् ।। ७. ४८ ।।

क्षत्ता जहौ तदा प्राणाञ्छुशोचाऽति युधिष्ठिरः ।
दाहार्थं तस्य देहस्य कृतवानुद्यमं नृपः ।। ७. ४९ ।।

शृण्वतस्तु तदा राज्ञो वागुवाचाशरीरिणी ।
विरक्तोऽयं न दाहार्हो यथेष्टं गच्छ भूपते ।। ७. ५० ।।

7.46. யுதிஷ்டிர மகாராஜா கங்கைக் கரையில் வனத்தில் சென்று தேடி விரதத்தாலும் தவத்தாலும் மெலிந்து இருந்த விதுரரை இரண்டாவது நாள் கண்டார்.

7.47. யுதிஷ்டிரர் அவரை நோக்கி, 'நான் யுதிஷ்டிரன், உம்மை நமஸ்கரிக்கிறேன்' என்று கூறினர். அதைக் கேட்டு மாசற்ற விதுரர் கட்டைபோல் அசைவற்றிருந்தார்.

7.48. இருவரும் தர்மதேவதையின் அம்சங்கொண்டவர்களாதலால் அவருடைய முகத்திலிருந்து கிளம்பிய அத்புதமான ஒரு ஒளி அப்பொழுது ஒரு கணத்தில் யுதிஷ்டிரர் முகத்தில் மறைந்தது.

7.49. விதுரர் உயிரை விட்டார். யுதிஷ்டிரர் துக்கம் மேலிட்டவராய் அவருடைய உடலுக்குத் தீ மூட்ட ஏற்பாடு செய்தார்.

7.50. 'இவர் வைராக்கியமுள்ளவர்; இவருடைய உடலைக் கொளுத்துதல் தகாது; அரசே! உம்மிஷ்டப்படி நீர் செல்லலாம்' என்ற ஆகாசவாணி யுதிஷ்டிரர் காதில் விழும்படி சொல்லியது.

श्रुत्वा ते भ्रातरः सर्वे सस्नुर्गङ्गा-जलेऽमले ।
गत्वा निवेदयामासु-र्धृतराष्ट्राय विस्तरात् ॥ ७. ५१ ॥

तदा पृष्ट्वा ययुः सर्वे पाण्डवा मुनयस्तथा ।
राजा नागपुरं प्राप्तः कुर्वन् व्यासकथां पथि ॥ ७. ५८ ॥

ततो दिने तृतीये च धृतराष्ट्रः स भूपतिः ।
दावाग्निना वने दग्धः सभार्यः कुन्तिसंयुतः ॥ ८. १ ॥

संजयस्तीर्थयात्रायां गतस्त्यक्त्वा महीपतिम् ।
श्रुत्वा युधिष्ठिरो राजा नारदात् दुःख-माप्तवान् ॥ ८. २ ॥

षट्त्रिंशेऽथ गते वर्षे कौरवाणां क्षयात्पुनः ।
प्रभासे यादवाः सर्वे विप्रशापात् क्षयं गताः ॥ ८. ३ ॥

7.51. இதைக்கேட்ட சகோதரர்களெல்லோரும் பரிசுத்தமான கங்கையில் நீராடிவிட்டு திருதராஷ்டிரரிடம் சென்று நிகழ்ந்ததை விரிவாகத் தெரிவித்தார்கள்.

7.58. பிறகு அவரிடம் விடைபெற்றுப் பாண்டவர்களும் முனிவர்களும் ஹஸ்திநபுரம் சென்றனர். வழியில் வியாஸருடைய கதையைப் பேசிக்கொண்டு போனார்கள்.

8.1. அதிலிருந்து மூன்றுவது நாள் திருதராஷ்டிர மகாராஜா தன் மனைவியுடனும் குந்தியுடனும் காட்டுத் தீயால் எரிக்கப்பட்டார்.

8.2. அரசனை விட்டுப்பிரிந்த ஸஞ்ஜயர் தீர்த்தயாத்திரை சென்றார். நாரதரிடமிருந்து இதைப்பற்றிக் கேள்வியுற்ற யுதிஷ்டிரர் துக்கத்திலாழ்ந்தார்.

8.3. கௌரவர்கள் அழிந்து முப்பத்தாறு வருஷங்களுக்குப்பின் பிராம்மண சாபத்தால் யாதவர்களெல்லாம் பிரபாஸ க்ஷேத்திரத்தில் அழிந்தனர்.

देहं तत्याज रामस्तु कृष्णः कमललोचनः ।
व्याधवाणहतः शापं पालयन् भगवान् हरिः ॥ ८. ५ ॥

वसुदेवस्तु तच्छ्रुत्वा देहत्यागं हरेरधः ।
जहौ प्राणाञ्छुची कृत्वा चित्ते श्रीभुवनेश्वरीम् ॥ ८. ६ ॥

पुरी सा वासुदेवस्य प्लावितोदधिना ततः ।
अर्जुनः सर्वलोकान् वै गृहीत्वा निर्गतस्तदा ॥ ८. १० ॥

दुःखितो धर्मराजानं वृत्तान्तं सर्वमब्रवीत् ।
देहत्यागं हरेः श्रुत्वा यादवानां क्षयं यथा ॥ ८. १५ ॥

गमनाय मतिं चक्रे राजा हैमाचलं प्रति ।
षट्त्रिंशद्वार्षिकं राज्ये स्थापयित्वोत्तरासुतम् ॥ ८. १६ ॥

8.5. பலராமர் உடலை நீத்தார். கமலக்கண்ணரும் பகவானும் ஹரியுமாகிய கிருஷ்ணரும் சாபத்தைப் பரிபாலிப்பவராய் வேடனுடைய பாணத்திற்கிலக்காகி மறைந்தார்.

8.6. பகவான் மறைந்ததைக் கேட்டு வருந்தி வசுதேவர் புவனேசுவரியை மனதில் நினைத்துக்கொண்டு பிராணனை விட்டார்.

8.10. வாசுதேவருடைய நகரமாகிய துவாரகையை சமுத்திரம் கொண்டது. அர்ஜுனன் ஏனைய ஜனங்களை அழைத்துக்கொண்டு அங்கிருந்து கிளம்பினுன்.

8.15–16. தர்மபுத்திரரிடம் வந்து துக்கத்துடன் நடந்தவற்றையெல்லாம் கூறினுன். பகவானுடைய தேகத்தியாகத்தையும் யாதவர்களின் அழிவையும் கேட்டு அவர் இமாலயத்தை நோக்கிச் செல்லத் தீர்மானித்து முப்பத்தாறு வயது நிறைந்த உத்தரையின் குமாரனை பரீக்ஷித்தை ராஜ்யத்தில் ஸ்தாபித்தார்.

निर्जगाम वनं राजा द्रौपद्या भ्रातृभिः सह ।
षट्त्रिंशच्चैव वर्षाणि कृत्वा राज्यं गजाह्वये ॥ ८. १७ ॥
गत्वा हिमाचले षट् ते जहुः प्राणान् पृथासुताः ।
परीक्षिदपि राजर्षिः प्रजाः सर्वाः सुधार्मिकः ॥
अपालयत्स राजेन्द्रः षष्टिवर्षाण्यतन्द्रितः ॥ ८. १८ ॥
बभूव मृगयाशीलो जगाम च वनं महत् ।
राजा घर्मेण सन्तप्तो ददर्श मुनिमन्तिके ॥ ८. २० ॥
ध्याने स्थितं मुनिं राजा जलं पप्रच्छ चातुरः ।
नोवाच किंचिन्मौनस्थश्चुकोप नृपतिस्तदा ॥ ८. २१ ॥
मृतं सर्पं तदाऽऽदाय धनुष्कोट्या तृषातुरः ।
कलिनाऽऽविष्टचित्तस्तु कण्ठे तस्य न्यवेशयत् ॥ ८. २२ ॥

8.17. ஹஸ்தினபுரியில் முப்பத்தாறு வருஷம் அரசாண்ட பின் இவ்வாறாக திரௌபதியுடனும் சகோதரர்களுடனும் தர்மபுத்திரர் வனம் புகுந்தார்.

8.18. திரௌபதியுடன் அறுவராகிய பிருதையின் (குந்தியின்) புத்திரர்கள் இமயமலை சென்று உயிரை நீத்தார்கள். சிறந்த தார்மிகனும் ராஜரிஷியுமாகிய பரீக்ஷித்து மகாராஜன் மக்கள் அனைவரையும் சலிப்பின்றி அறுபதாண்டு பரிபாலித்தான்.

8.20–21. ஒரு சமயம் பெரியதொரு வனத்திற்கு வேட்டையாடச் சென்ற அவ்வரசன் வெயிலின் கொடுமையால் மிகவும் துன்புற்ற நிலையில் அருகாமையில் ஒரு ஆசிரமத்தைக்கண்டு அதில் தியானத்திலிருந்த முனிவரையணுகி தாகத்திற்கு நீர் கேட்டான். முனிவர் பதிலேதும் சொல்லாமல் மௌனமாயிருக்கக்கண்டு அரசன் கோபங் கொண்டான்.

8.22. செத்துப்போய்க்கிடந்த ஒரு பாம்பை வில்லின் நுனியாலெடுத்து அதை அவருடைய கழுத்தில் போட்டான். பசியால் வாடியிருந்த அரசனுடைய மனதில் கலி புகுந்து விட்டதால் அவன் செயல் இங்ஙனமாயிற்று.

आरोपिते तथा सर्पे नोवाच मुनिसत्तमः ।
न चचाल समाधिस्थो राजापि स्वगृहं गतः ॥ ८. २३ ॥

तस्य पुत्रोऽति-तेजस्वी गवि जातो महातपाः ।
महाशक्तोऽथ शुश्राव क्रीडमानो वनान्तिके ॥ ८. २४ ॥

शशाप नृपतिं क्रुद्धो गृहीत्वाऽऽशु करे जलम् ।
पितुः कण्ठेऽद्य मे येन विनिक्षिप्तो मृतोरगः ॥
तक्षकः सप्तरात्रेण तं दशेत्पापपूरुषम् ॥ ८. २५ ॥

मुनेः शिष्योऽथ राजानं समुत्पेत्य गृहे स्थितम् ।
शापं निवेदयामास मुनिपुत्रेण चार्पितम् ॥ ८. २६ ॥

8.23. அப்படி கழுத்தில் பாம்பு போடப்பட்ட பொழுதும் முனிசிரேஷ்டர் பேசவில்லை. ஸமாதியிலாழ்ந்திருந்த அவர் அசையவுமில்லை. அரசன் அரண்மனைக்குச் சென்று விட்டான்.

8.24. பசுவின் வயிற்றில் தோன்றியவனும் சிறந்த தபஸ்வியும் ஒளிமிகுந்தவனும் மிகுந்த சக்திவாய்ந்தவனும் ஆகிய அவருடைய புத்திரன் வனத்தினுள் விளையாடிக் கொண்டிருந்தவன் இச்செய்தியைக் கேட்டான்.

8.25. கோபம் மூண்டவனாய் அவன் விரைவில் கையில் நீரை எடுத்துக் கொண்டு அரசனைப் பின்வருமாறு சபித்தான்: 'என் தந்தையின் கழுத்தில் எவனால் செத்தபாம்பு போடப்பட்டதோ அந்தப் பாவியாகிய மனிதனை தக்ஷகன் எனும் பாம்பு ஏழுநாட்களுள் கடிக்கட்டும்.'

8.26. முனிவரின் சீடர் (முனிவரின் கட்டளையால்) அரசன் அரண்மனையிலிருக்கும் பொழுது அவனிடம் சென்று முனிபுத்திரனால் சாபம் கொடுக்கப்பட்ட செய்தியைத் தெரிவித்தார்.

अभिमन्युसुतः श्रुत्वा शापं दत्तं द्विजेन वै ।
अनिवार्यं च विज्ञाय मन्त्रिवृद्धानुवाच ह ।
शप्तोऽहं द्विजरूपेण मम द्वेषादसंशयम् ॥ ८. ३० ॥
किं विधेयं मयाऽमात्या उपायश्चिन्त्यतामिह ।
उपायस्तु प्रकर्तव्यः सर्वथा शास्त्रसम्मतः ॥ ८. ३९ ॥
मणिमन्त्रौषधीभिश्च विधिवत्प्राणरक्षणे ।
इत्युक्त्वा सचिवान् राजा कल्पयित्वा सुरक्षकान् ॥ ८. ४० ॥
कारयित्वाथ प्रासादं सप्तभूमिकमुत्तमम् ।
आरुरोहोत्तरासूनुः सचिवैः सह तत्क्षणम् ॥ ८. ४१ ॥
न कश्चिदारुहेत्तत्र प्रासादे चातिरक्षिते ।
वातोऽपि न चरेत्तत्र प्रवेशे विनिवार्यते ॥ ९. ४४ ॥

8.30–41. அபிமன்யு புத்திரனை பரிக்ஷித்து பிராம்மணபுத்திரனால் சாபம் கொடுக்கப்பட்டதைக் கேட்டு அது விலக்க முடியாததென்பதையும் உணர்ந்து வயதுமுதிர்ந்த மந்திரிகளையழைத்து அவர்களிடம் பின்வருமாறு கூறினான்: "என்னுடைய கொடுமையே பிராம்மண வடிவத்தில் வந்து எனக்குச் சாபமாகிவிட்டது. அமைச்சர்களே! இப்பொழுது நான் செய்யத்தக்கது என்ன? உபாயத்தை யோசித்துக் கூறுங்கள். சாஸ்திரஸம்மதமான வழி எவ்வகையாயினும் மணி, மந்த்ரம், மருந்து முதலியவற்றால் முறைப்படி உயிரைக் காப்பாற்றக் கைக்கொள்ளப்படவேண்டும்". இங்ஙனம் மந்திரிகளிடம் கூறிவிட்டு அரசன், உயிர்க்காப்பாளர்களை ஏற்படுத்திக்கொண்டு ஏழுமாடியுள்ள ஒரு மாளிகையை வாசஸ்தானமாக்கி அதின் மேல் மாடியில் உடனே மந்திரிமார்களுடன் புகுந்தான்.

9.44. கடுமையான காவல் வைக்கப்பட்ட அம்மாளிகையின் மாடியில் யாரும் ஏற இயலாது. வாயிலில் தடுக்கப்பட்டுக் காற்றுக்கூட உட்புக முடியாமல் இருந்தது.

भक्ष्य-भोज्यादिकं राजा तत्रस्थश्च चकार सः।
राजकार्याणि सर्वाणि तत्रस्थश्चाकरोन्नृपः ॥ ९. ४५ ॥

कश्चिच्च कश्यपो नाम ब्राह्मणो मन्त्रिसत्तमः।
शुश्राव च तथा शापं प्राप्तं राज्ञा महात्मना ॥ ९. ४९ ॥

स धनार्थी द्विजश्रेष्ठः कश्यपः समचिन्तयत्।
व्रजामि तत्र यत्रास्ते शप्तो राजा द्विजेन सह॥
इति कृत्वा मतिं विप्रः स्वगृहान्निःसृतः पथि ॥ ९. ५१ ॥

तस्मिन्नेव दिने नाम्ना तक्षकस्तं नृपोत्तमम्।
शप्तं ज्ञात्वा गृहात्तूर्णं निःसृतः पन्नगोत्तमः ॥ १०. १ ॥

वृद्ध-ब्राह्मणवेषेण तक्षकः पथि निर्गतः।
अपश्यत्कश्यपं मार्गे व्रजन्तं नृपतिं प्रति ॥ १०. २ ॥

9.45. அரசன் சாப்பாடு முதலியவற்றை அங்கேயே செய்துகொண்டு அரச காரியங்களனைத்தையும் அங்கிருந்தே கவனித்துவந்தான்.

9.49. மந்திர சக்தி வாய்ந்த கச்யபர் என்ற ஒரு பிராம்மணர் மகாத்மாவாகிய அரசனுக்குச் சாபம் ஏற்பட்ட வரலாற்றைக் கேள்விப்பட்டார்.

9.51. அந்த பிராம்மணசிரேஷ்டர் பொருளில் நாட்டமுடையவராய்ப் பின்வருமாறு எண்ணினார்: 'சாபத்தால் பீடிக்கப்பட்ட அரசன் பிராம்மணர்களுடன் எங்கு இருக்கிறானோ அங்கு நான் செல்லுகிறேன்.' இவ்வாறு நிச்சயித்து அவர் தன் வீட்டிலிருந்து கிளம்பினார்.

10.1. அதே நாளில் ஸர்ப்பராஜனான தக்ஷகன் அரசனுக்கேற்பட்ட சாபத்தை அறிந்து தன் வீட்டிலிருந்து கிளம்பினான்.

10.2. வயது சென்ற பிராம்மண வேஷத்தில் தக்ஷகன் வழியே போய்க்கொண்டிருக்கும் பொழுது அரசனிடம் போய்க்கொண்டிருந்த கச்யபரைப் பார்த்தான்.

तमपृच्छत्पन्नगोऽसौ ब्राह्मणं मन्त्रवादिनम् ।
क्व भवांस्त्वरितो याति किंच कार्यं चिकीर्षति ॥ १०. ३ ॥

कश्यप उवाच—

परीक्षितं नृपश्रेष्ठं तक्षकश्च प्रधक्ष्यति ।
तत्राहं त्वरितो यामि नृपं कर्तुमपज्वरम् ॥ १०. ४ ॥

मन्त्रोऽस्ति मम विप्रेन्द्र विषनाशकरः किल ।
जीवयिष्याम्यहं तं वै जीवतव्योऽधुना किल ॥ १०. ५ ॥

तक्षक उवाच—

अहं स पन्नगो ब्रह्मंस्तं धक्ष्यामि महीपतिम् ।
निवर्तस्व न शक्तस्त्वं मया दष्टं चिकित्सितुम् ॥ १०. ६ ॥

10.3. மந்திரவாதியான பிராம்மணரை நோக்கி அந்த நாகன் 'தாங்கள் வேகமாக எங்கு போகிறீர்கள்? என்ன காரியத்தை விரும்பிச் செல்லுகிறீர்கள்?' என்று வினவினுன்.

கச்யபர் கூறியது—

10.4. அரசசிரேஷ்டனை பரீக்ஷித்தைத் தக்ஷகன் கடிக்கப் போகிருன். நான் அங்கு விரைவில் சென்று அரசனைக் கவலையினின்று நீக்க விரும்புகிறேன்.

10.5. பிராம்மணசிரேஷ்டரே! விஷத்தை நாசம் செய்யும் மந்திரம் என்வசமுள்ளது. அரசனை நான் இப்பொழுது பிழைப்பூட்டப் போகிறேன். அவன் பிழைப்பிக்க வேண்டியவன்.

தக்ஷகன் கூறியது—

10.6. பிராம்மணரே! அந்த நாகன் நான்தான். அரசனைக் கடிக்கப் போகிறேன். என்னுல் கடிக்கப்பட்டவனுக்குச் சிகிச்சை செய்ய உம்மால் இயலாது. திரும்பிப் போய்விடும்.

कश्यप उवाच—

अहं दष्टं त्वया सर्प नृपं शप्तं द्विजेन वै।
जीवयिष्याम्यसन्देहं कामं मन्त्रबलेन वै ॥१०.७॥

तक्षक उवाच—

यदि त्वं जीवितं यासि मया दष्टं नृपोत्तमम्।
मन्त्रशक्तिबलं विप्र दर्शय त्वं ममानघ ॥
धक्ष्याम्येनं च न्यग्रोधं विषदंष्ट्राभिरद्य वै ॥१०.८॥

कश्यप उवाच—
जीवयिष्ये त्वया दष्टं दग्धं वा पन्नगोत्तम ॥१०.९॥

கச்யபர் கூறியது—

10.7. நாகரே! பிராம்மண சாபத்திற்காளான அரசனை நீர் கடித்தால் நான் என் இஷ்டப்படி மந்திர பலத்தால் சந்தேகமின்றிப் பிழைப்பூட்டுவேன்.

தக்ஷகன் கூறியது—

10.8. பிராம்மணரே! பாவமற்றவரே! என்னால் கடிக்கப்பட்ட அரசசிரேஷ்டனை நீர் பிழைப்பிக்கக் கூடுமானால் எனக்கு அந்த மந்திரசக்தி பலத்தைக் காட்டும். இந்த ஆலமரத்தை இப்பொழுது என்னுடைய விஷப்பற்களால் கடிக்கிறேன்.

கச்யபர் கூறியது—

10.9. நாகசிரேஷ்டரே! உம்மால் கடிக்கப்பட்டு இம்மரம் எரிந்து போனாலும் நான் பிழைப்பிக்கிறேன்.

सूत उवाच—

अदशत्पन्नगो वृक्षं भस्मसाच्च चकार तम्।
उवाच कश्यपं भूयो जीवयैनं द्विजोत्तम ॥ १०.१० ॥

दृष्ट्वा भस्मीकृतं वृक्षं पन्नगेन विषाग्निना।
सर्वं भस्म समाहृत्य कश्यपो वाक्य-मब्रवीत् ॥ १०. ११ ॥

पश्य मन्त्रबलं मेऽद्य न्यग्रोधं पन्नगोत्तम।
जीवयाम्यद्य वृक्षं वै पश्यतस्ते महाविष ॥ १०. १२ ॥

इत्युक्त्वा जलमादाय कश्यपो मन्त्रवित्तमः।
सिषेच भस्मराशिं तं मन्त्रितेनैव वारिणा ॥ १०. १३ ॥

ஸௌதர் கூறியது—

10.10. தக்ஷகன் அந்த மரத்தைக் கடித்தான். அதை சாம்பலாகச்செய்தான். கச்யபரை நோக்கி 'பிராம்மணோத் தமரே ! இதை மீண்டும் பிழைப்பூட்டும்' என்றான்.

10.11. தக்ஷகனுடைய விஷத்தியால் மரம் பொசுக் கப்பட்டதைக் கண்டு அந்தச் சாம்பலைக் கூட்டி வைத்துக் கச்யபர் கூறுவார்:

10.12. 'நாகசிரேஷ்டரே ! விஷவடிவினரே ! இப் பொழுது என்னுடைய மந்திர சக்தியைப்பாரும். நீர் பார்த்துக்கொண்டிருக்கும்போதே ஆலமரத்தைப் பிழைப் பூட்டுகிறேன்.'

10.13. என்றிங்ஙனம் கூறிவிட்டு மந்திரத்தில் வல்ல வரான கச்யபர் ஜலத்தை எடுத்து மந்திரித்துச் சாம்பல் குவியலை நனைத்தார்.

वंचयामि कथं चैनं राजानं पापकारिणम्।
विप्रशापाद्धतं मूढं विप्रपीडाकरं शठम् ॥ १०. ३० ॥

इति संचिन्त्य सर्पोऽसौ स्वान्नागान् निकटे स्थितान्।
कृत्वा तापसवेषांस्तान् प्राहिणोत् सुभुजंगमान् ॥ १०. ४१ ॥

फलमूलादिकं गृह्य राज्ञे नागोऽथ तक्षकः।
स्वयं च कीटरूपेण फलमध्ये ससार ह ॥ १०. ४२ ॥

विदारितं फलं राज्ञा तत्र कृमिरभूदणुः।
स कृष्णनयनस्ताम्रो दृष्टो भूपतिना स्वयम् ॥ १०. ५९ ॥

तं दृष्ट्वा नृपतिः प्राह सचिवान् विस्मितानथ।
अस्तमभ्येति सविता विषादद्य न मे भयम् ॥ १०. ६० ॥

अंगीकरोमि तं शापं कृमिको मां दशत्वयम्।
एवमुक्त्वा स राजेन्दुः ग्रीवायां सन्न्यवेशयत् ॥ १०. ६१ ॥

10.30–42. 'பிராம்மணரைப் பிடித்தவனும் அவருடைய சாபத்தால் அழிவுற்றவனும் பாவியும் மூடனும் துஷ்டனுமான இவ்வரசனை நான் எப்படி ஏமாற்றலாம்' என்று ஆலோசித்துத் தக்ஷகன் தன்னைச் சேர்ந்த நாகர்களைப் பழங்கள் முதலியவற்றை எடுத்துக் கொண்டு அரசனைக் காணச் செல்லும் தபஸ்விகளைப்போல் வேஷம் பூணச்செய்து தான் ஒரு புழு வடிவில் ஒரு பழத்தின் நடுவில் ஒளிந்திருந்தான்.

10.59. அந்தப் பழம் பிளக்கப்பட்ட பொழுது அதில் அணுப்போன்ற ஒரு புழுவை அரசன் கண்டான். அது தாமிரம் போல் சிவந்து கரிய கண்ணுடையதாயிருந்தது.

10.60–61. ஆச்சரியத்துடன் அதைப் பார்த்த மந்திரிகளை நோக்கி அரசன் 'இப்பொழுது சூரியன் அஸ்தமிக்கிறான். இனி எனக்கு விஷ பயமில்லை. சாபத்தை ஏற்றுக் கொள்ளுகிறேன். இந்தச் சிறிய புழு என்னைக் கடிக்கட்டும்' என்று சொல்லி அதைத் தன் கழுத்தில் வைத்துக் கொண்டான்.

अस्तं जाते दिवानाथे धृतः कण्ठेऽस्थ कीटकः ।
तक्षकस्तु तदा जातः कालरूपी भयानकः ॥ १०. ६२ ॥

उत्थिताऽग्निशिखा घोरा विषजा तक्षकाननात् ।
प्रजज्वाल नृपं त्वाशु गतप्राणं चकार ह ॥ १०. ६६ ॥

स पपात गतप्राणो राजा दग्ध इव द्रुमः ।
चुक्रुशुश्च जनाः सर्वे मृतं दृष्ट्वा नराधिपम् ॥ १०. ६७ ॥

गतप्राणं तु राजानं बालं पुत्रं समीक्ष्य च ।
चक्रुश्च मन्त्रिणः सर्वे परलोकस्य सत्क्रियाः ॥ ११. १ ॥

सुमुहूर्ते सुतं बालं प्रजानां प्रीतिवर्धनम् ।
सिंहासने शुभे तत्र मन्त्रिणः संन्यवेशयत् ॥ ११. ५ ॥

10.62. கழுத்தில் வைக்கப்பட்ட புழுவாகிய தக்ஷகன் சூரியன் அஸ்தமித்துக் கொண்டிருப்பதை உணர்ந்து பயங்கரமான காலரூபியானான்.

10.66. தக்ஷகனுடைய வாயிலிருந்து கிளம்பிய கொடிய விஷத் தீயின் ஜ்வாலை அரசனை விரைவில் உயிரிழக்கச் செய்தது.

10.67. எரிந்துபோன மரம்போல் அரசன் உயிரிழந்து சாய்ந்தான். அதைக்கண்டு எல்லா ஜனங்களும் கூக்குரலிட்டனர்.

11.1. மரணமடைந்த அரசனுக்கு உத்திரக்கிரியைகளை அவனுடைய பாலனான புத்திரனைக் கொண்டு மந்திரிமார்கள் செய்வித்தனர்.

11.5. பிரஜைகளுக்குப் பிரீதியைச் செய்யும் அரசனாகிய அந்த (ஜனமேஜயன் என்ற) பாலகுமாரனை நல்ல முகூர்த்தத்தில் மந்திரிகள் சிம்மாஸனத்திலிருத்தினர்.

जनमेजय उवाच—

पिता यस्य गतिं घोरां प्राप्तः पन्नगपीडितः ।
अद्याहं मख-मारभ्य करोम्यपचितिं पितुः ॥ ११. ४८ ॥

सूत उवाच—

मन्त्रिणस्तु तदा चक्रु-र्भूपवाक्यै-र्विचक्षणाः ।
यज्ञस्य सर्वसम्भारं वेदिं यज्ञस्य विस्तृताम् ॥ ११. ५३ ॥

हवने वर्तमाने तु सर्पाणां तक्षको गतः ।
इन्द्रं प्रति भयार्तोऽहं त्राहि मामिति चाब्रवीत् ॥ ११. ५४ ॥

उत्तंकोऽह्वयदुद्विग्नः सेन्द्रं कृत्वा निमन्त्रणम् ।
स्मृतस्तदा तक्षकेन यायावर-कुलोद्भवः ॥ ११. ५७ ॥

ஜனமேஜயன் கூறியது—

11.48. பாம்பினால் கடியுண்டு கோரமான மரணத்தை யடைந்த என் பிதாவிற்குப் பாவத்தைப் போக்கும் கர்மமாக ஒரு (ஸர்ப்ப) யாகத்தை ஆரம்பிக்கிறேன்.

ஸௌதர் கூறியது—

11.53. அரசனுடைய கட்டளையை மேற்கொண்டு திறமைவாய்ந்த மந்திரிகள் யாகத்திற்கு வேண்டிய பொருள்களையெல்லாம் சேகரித்து விஸ்தாரமான யாகமேடையையும் நிர்மாணம் செய்தனர்.

11.54. ஸர்ப்ப ஹோமம் நடைபெறுகையில் தக்ஷகன் இந்திரனை நாடி 'நான் பயத்தினால் பீடிக்கப்பட்டுள்ளேன். என்னைக் காப்பாற்ற வேண்டும்' என்று கூறினான்.

11.57. (ஜனமேஜயருடைய குருவாகிய) உத்தங்கர் (தக்ஷகன் வருவதற்கு) விக்னம் ஏற்பட்டதைக்கண்டு இந்திரனுடன் தக்ஷகன் தீயில் விழட்டும் என்று மந்திரத்தைக் கூறினார். அப்பொழுது தக்ஷகன் (இந்திரனால் பயனில்லை யென்று கண்டு) யாயாவர குலத்தில் தோன்றிய அஸ்தீகரை மனதால் நினைத்தான்.

अस्तिको नाम धर्मात्मा जरत्कारुसुतो मुनिः ।
तत्रागत्य मुनेर्बाल-स्तुष्टाव जनमेजयम् ।। ११. ५८ ।।

राजा तमर्चयामास दृष्ट्वा बालं सुपण्डितम् ।
अर्चयित्वा नृपस्तं तु छन्दयामास वांछितैः ।। ११. ५९ ।।

स तु वव्रे महाभाग यज्ञोऽयं विरमत्विति ।
सत्यबद्धो नृपस्तेन प्रार्थितश्च पुनस्तथा ।। ११. ६० ।।

होमं निवर्तयामास सर्पाणां मुनिवाक्यतः ।
भारतं श्रावयामास वैशम्पायन विस्तरात् ।। ११. ६१ ।।

श्रुत्वाऽपि नृपतिः कामं न शान्तिमभिजग्मिवान् ।
व्यासं पप्रच्छ भूपालो मम शान्तिः कथं भवेत् ।। ११. ६२ ।।

11.58. முனிகுமாரரும் ஜரத்காருவின் பால புத்திரரும் தர்மாத்மாவுமான அஸ்திக முனிவர் அப்பொழுது அங்கு தோன்றி ஜனமேஜயரைத் துதித்தார்.

11.59. அந்த பால பண்டிதரைக் கண்டு வியந்து அவரைப் பூஜித்து அரசன் 'வேண்டியதைக் கேட்கலாம்' என்றான்.

11.60–61. 'மகாபாக்கியசாலியே! இந்த யாகம் இத்துடன் முடிவடையட்டும்' என்ற வரத்தை அவர் கேட்டார். ஸத்தியத்திற்குக் கட்டுப்பட்ட அரசன் அங்ஙனம் பிரார்த்திக்கப்பட்டமையால் முனிவரின் சொல்படி ஸர்ப்ப யாகத்தை அத்துடன் கைவிட்டான். வைசம்பாயனர் (அவரை ஸமாதானப் படுத்தும் பொருட்டு) விரிவாக மகா பாரதக் கதையை எடுத்துக் கூறலானார்.

11.62. அதை வேண்டிய மட்டும் கேட்ட பின்னும் அரசனுக்கு (தந்தையின் மரண விஷயத்தில்) மனதில் சாந்தி ஏற்படவில்லை. அப்பொழுது அவர் வியாஸரையணுகி, 'எனக்கு எவ்வகையில் சாந்தி ஏற்படும்?' என்று வினவினார்.

व्यास उवाच—

श्रृणु राजन् प्रवक्ष्यामि पुराणं गुह्यमद्भुतम् ।
पुण्यं भागवतं नाम नानाख्यानयुतं शिवम् ॥ १२. २ ॥

धर्मार्थकाममोक्षाणां कारणं श्रवणात् किल ।
शुभदं सुखदं नित्यं सर्वागमसमुद्धृतम् ॥ १२. ३ ॥

न श्रोतव्यं परं चास्मात्पुराणाद्विद्यते भुवि ।
नाराध्यं विद्यते राजन् देवी-पदाम्बुजादृते ॥ १२. ५९ ॥

ते सभाग्याः कृतप्रज्ञा धन्यास्ते नृपसत्तम ।
येषां चित्ते सदा देवी वसति प्रेमसंकुले ॥ १२. ६० ॥

வியாஸர் கூறியது—

12.2–3. அரசே! அத்புதமானதும் இரகசியமானதும் புண்ணியம் நிறைந்ததுமான ஸ்ரீதேவிபாகவதம் என்ற புராணத்தைக் கூறுகிறேன், கேளும். அது மங்களமான பல வரலாறுகளுடன் கூடியது. கேட்ட மாத்திரத்திலேயே அது அறம் பொருள் இன்பம் வீடு என்ற புருஷார்த்தங்களை அளிக்கக் கூடியது. என்றும் சுகத்தையும் நன்மையையும் தரக்கூடியது. வேதங்களனைத்தின் ஸாரமாய்த் திரட்டியெடுக்கப்பட்டது.

12.59. இந்தப் புராணத்தைக் கேட்டபின் பூமியில் கேட்பதற்கு வேறு ஒன்றுமிராது. அரசே! தேவியின் பாதகமலங்களையன்றி வழிபடுவதற்கும் வேறெதுவுமில்லை.

12.60. அரச சிரேஷ்டரே! பக்திநிறைந்த எவர்களுடைய சித்தத்தில் தேவி எப்பொழுது வசிக்கின்றாளோ அவர்களே பாக்கியசாலிகள், அவர்களே புத்திசாலிகள், அவர்களே தனவான்கள்.

य इदं शृणुयान्नित्यं सर्वान् कामानवाप्नुयात् ।
भगवत्या समाख्यातं विष्णवे यदनुत्तमम् ।। १२. ६३ ।।

तेन श्रुतेन ते राजंश्चित्तशान्तिर्भविष्यति ।
पितॄणां चाक्षयः स्वर्गो पुराणश्रवणाद्भवेत् ।। १२. ६४ ।।

इति श्रीदेवीभागवते द्वितीयस्कन्धे द्वादशोऽध्यायः

।। महाभारत अवसान कथा समाप्ता ।।

।। द्वितीयः स्कन्धः समाप्तः ।।

12.63. ஒப்புயர்வற்றதும் பகவதியால் மகா விஷ்ணுவிற்கு எடுத்துரைக்கப்பட்டதும் ஆகிய இதை எவன் கேட்கிருனே அவன் எப்பொழுதும் எல்லா மனோரதங்களும் நிறைவேறப் பெற்றவனுவான்.

12.64. அரசே! அதைக் கேட்பதால் உனக்குச் சிறந்த சாந்தி ஏற்படும். இந்தப் புராணசிரவணத்தால் பித்ருக்களுக்கு அழியாத சுவர்க்கப் பிராப்தி ஏற்படும்.

இங்ஙனம் தேவீபாகவதத்தில் இரண்டாவது
ஸ்கந்தத்தில் பன்னிரண்டாவது
அத்தியாயம் முற்றும்

மஹாபாரத இறுதிக்கதை முற்றும்.

இரண்டாவது ஸ்கந்தம் முற்றும்.

மூன்ருவது ஸ்கந்தம்

॥ तृतीयः स्कन्धः ॥

॥ त्रिमूर्ति-रहस्यम् ॥ १० ॥

जनमेजय उवाच—

ब्रह्मा विष्णुश्च रुद्रश्च त्रयो देवा मया श्रुताः ।
सृष्टि-पालन-संहार-कारकाः सगुणास्त्वमी ॥ १. ४ ॥

स्वतन्त्रास्ते महात्मानः पाराशर्य वदस्व मे ।
आहोस्वित् परतन्त्रास्ते श्रोतुमिच्छामि सांप्रतम् ॥ १. ५ ॥

व्यास उवाच—

यत्त्वया च महाबाहो पृष्टोऽहं कुरुसत्तम ।
तान् प्रश्नान् नारदः प्राह मया पृष्टो मुनीश्वरः ॥ २. १ ॥

மூன்றுவது ஸ்கந்தம்

10. மும்மூர்த்தி ரஹஸ்யம்

ஜனமேஜயர் கூறியது—

1.4. பிரம்மாவும் விஷ்ணுவும் ருத்திரரும் சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹார கர்த்தாக்களாகிய மூன்று தேவர்கள் என்றும் அவர்கள் ஸகுண மூர்த்திகள் என்றும் கேள்விப் பட்டுள்ளேன்.

1.5. பராசரபுத்திரரே! அவர்கள் சுதந்திரமுடைய வர்களா அல்லது பரதந்திரர்களா என்பதைப்பற்றி இப்பொழுது கேட்க விரும்புகிறேன். கூறியருளும்.

வியாஸர் கூறியது—

2.1. பெருந்தோள் படைத்தவனே! குருசிரேஷ்டனே! உன்னால் எந்தக் கேள்வி கேட்கப்பட்டதோ அதே கேள்வி என்னால் நாரத முனிவரிடம் கேட்கப்பட்டு அவர் அதற்கு விடையளித்துள்ளார்.

नारद उवाच—

व्यास किं ते ब्रवीम्यद्य पुराऽयं संशयो मम।
उत्पन्नो हृदयेऽत्यर्थं सन्देहासारपीडित: ॥ २. २ ॥
गत्वाऽहं पितरं स्थाने ब्रह्माणममितौजसम्।
अपृच्छं यत्त्वया पृष्टं व्यासाद्य प्रश्नमुत्तमम् ॥ २. ३ ॥

ब्रह्मोवाच—

किं ब्रवीमि सुताद्याहं दुर्बोधं प्रश्नमुत्तमम्।
त्वया शक्यं महाभाग विष्णोरपि सुनिश्चयात् ॥ २. ११ ॥
एकार्णवे पुरा जाते नष्टे स्थावरजंगमे।
भूतमात्रे समुत्पन्ने संजज्ञे कमलादहम् ॥ २. १२ ॥

நாரதர் கூறியது—

2.2–3. வியாஸரே! உமக்கு நான் இப்பொழுது எதைச் சொல்லுகிறேனே அதைப்பற்றிய ஸந்தேகம் முன்பு என்னுடைய உள்ளத்தில் உதித்தது. அதனால் மிகவும் பிடிக்கப்பட்டு நான் என் பிதாவும் அளவுகடந்த தேஜஸ் உடையவருமான பிரம்மாவிடம் சென்று உம்மால் இப்பொழுது கேட்கப்பட்ட அச்சிறந்த கேள்வியையே கேட்டேன்.

பிரம்மா கூறியது—

2.11. மகனே! இக்கேள்வி உத்தமமானது. ஆனால் அதற்கு விடைகாண்பதரிது. மகாபாக்கியசாலியே!. இதின் நிச்சயமான பொருள் உன்னால் அறிய முடியாது; விஷ்ணுவாலும்கூட முடியாது. நான் என்ன சொல்லப்போகிறேன். (ஆயினும் ஒருவாறு கூறுகிறேன்.)

2.13. முன்னொருகால் அசையும் பொருள்களும் அசையாப் பொருள்களும் எல்லாம் அழிந்து போய் பிரளய ஜலம் எங்கும் வியாபித்திருக்கையில் மீண்டும் சிருஷ்டி தொடங்கிய பொழுது நான் ஒரு தாமரை மேல் இருப்பதாய் உணர்ந்தேன்.

तदा दैत्यावतिप्राप्तौ दारुणौ मधुकैटभौ ।
चिन्ता ममाद्भुता जाता किं करोमीति नारद ॥ २. २६ ॥

मया स्मृता तदा देवी स्तुता निद्रास्वरूपिणी ।
विष्णोर्देहं विहायाशु विरराज नभःस्थिता ॥ २. २७ ॥

उदतिष्ठ-दमेयात्मा तया मुक्तो जनार्दनः ।
पंचवर्षसहस्राणि कृतवान् युद्धमुत्तमम् ॥ २. २८ ॥

तदा विलोकितौ दैत्यौ हरिणा विनिपातितौ ।
उत्संगं विपुलं कृत्वा तत्रैव निहतौ च तौ ॥ २. २९ ॥

2.26. நாரதா! அப்பொழுது என்முன் கொடியவர்களான மது-கைடபன் என்ற இரு அரக்கர்கள் தோன்றினர்கள். நான் வியப்படைந்து என்ன செய்ய வேண்டும் என்று சிந்திக்கலானேன்.

2.27. (விஷ்ணுவின் தேகத்தில்) நித்திரை வடிவிலிருந்த தேவியை நினைத்து அவளைத் துதித்தேன். விரைவில் அவள் விஷ்ணுவின் தேகத்தைவிட்டுக்கிளம்பி ஆகாயத்தில் பிரகாசமாய்க் காட்சியளித்தாள்.

2.28. நித்திராதேவியால் விடப்பட்டவரும் அளவு கடந்த சக்தி வாய்ந்தவருமான ஜனார்த்தனர் அவ்விரு அரக்கர்களுடன் ஐயாயிரமாண்டு நீண்ட போர் புரிந்தார்.

2.29. பின்பு அவர்களை முடிக்கும் எண்ணத்துடன் நோக்கித் தனது மடியை விசாலமாக்கி அதில் அவர்களை வீழ்த்தி ஹரியானவர் அவர்களை மாய்த்தார்.

रुद्रस्तत्रैव संप्राप्तो यत्राऽऽवां संस्थितावुभौ ।
त्रिभिः संवीक्षिताऽस्माभिः स्वस्था देवी मनोहरा ॥ २. ३० ॥

संस्तुता परमाशक्तिरुवाचाऽस्मानवस्थितान् ।
कृपावलोकनैः कृत्वा पावनै-र्मुदितानथ ॥ २. ३१ ॥

झटित्येवागतं तत्र विमानं गगनाच्छुभम् ।
सोवाचाऽस्मिन् सुराः कामं विशध्वं गतसाध्वसाः ॥
विमाने ब्रह्मविष्णवीशा दर्शयाम्यद्य चाद्भुतम् ॥ २. ३८ ॥
तन्निशम्य वचस्तस्या ओमित्युक्त्वा पुनर्वयम् ।
समारुह्योपविष्टाः स्मो विमाने रत्नमण्डिते ॥ २. ४० ॥

सोपविष्टांस्ततो दृष्ट्वा देव्यस्मान् विजितेन्द्रियान् ।
स्वशक्त्या तद्विमानं वै नोदयामास चाम्बरे ॥ २. ४१ ॥

2.30–38. பிறகு மகாவிஷ்ணுவும் நானும் எங்கிருந்தோமோ அங்கு ருத்திரரும் வந்தார். எங்கள் மூவராலும் மனதிற்கினிய உருவத்துடன் ஆகாயத்தில் விளங்கிய தேவியானவள் பார்த்துத் துதிக்கப்பட்டாள். பராசக்தியின் கருணை நிறைந்த பார்வையால் நாங்கள் புனிதர்களாகி உள்ளத்தில் ஆனந்தம் நிறைந்தவர்களானோம். அப்பொழுது சரேலென ஆகாயத்திலிருந்து அவ்விடத்தில் ஒரு அழகிய விமானம் வந்திறங்கியது. 'தேவர்களே! பயமில்லாமல் இதில் ஏறிக் கொள்ளுங்கள். பிரம்மா விஷ்ணு ருத்திரர்களாகிய உங்களுக்கு இப்பொழுது நான் விமானத்தில் ஒரு அதிசயத்தைக் காட்டுகிறேன்' என்று தேவி கூறினாள்.

2.40. தேவியின் அவ்வார்த்தையைக் கேட்டு நாங்கள் 'ஓம்! அங்ஙனமே ஆகுக' என்று கூறி இரத்தினத்தாலலங்கரிக்கப்பட்ட அவ்விமானத்தில் ஏறி உட்கார்ந்து கொண்டோம்.

2.41. இந்திரியங்களையடக்கியவர்களாய் நாங்கள் உட்கார்ந்துவிட்டதைப் பார்த்து தேவி தனது சக்தியால் அவ்விமானத்தை ஆகாயத்தில் ஏவினாள்.

विमानं तन्मनोवेगं यत्र स्थानान्तरे गतम् ।
न जलं तत्र पश्यामो विस्मिताः स्मो वयं तदा ।। ३. १ ।।

पुरतो नगरं रम्यं दिव्यप्राकारमण्डितम् ।
प्रत्यभिज्ञा तदा जाताऽप्यस्माकं प्रेक्ष्य तत्पुरम् ।। ३. ४ ।।

स्वर्गोऽयमिति केनाऽसौ निर्मितोऽस्ति तदाद्भुतम् ।
अस्माभिः संस्थिता दृष्टा विमानोपरि चाम्बिका ।। ३. ५ ।।

क्षणाच्चचाल गगने विमानं पवनेरितम् ।
मुहूर्ताद्वा ततः प्राप्तं देशे चान्ये मनोहरे ।। ३. ६ ।।

3.1. மனோவேகத்தில் சென்று அவ்விமானம் புதியதொரு இடத்திற்கு வந்தது. அங்கு நாங்கள் பிரளய ஜலத்தைக் காணவில்லை. ஆச்சரியமடைந்தோம்.

3.4. தெய்வீகமான மதில்கள் சூழ்ந்த அழகியதொரு நகரத்தை எதிரே கண்டு நாங்கள் யோசனையிலாழ்ந்தோம்.

3.5. 'இது ஸ்வர்க்கமா? இவ்வதிசயப்படைப்பு யாரால் ஏற்பட்டது?' என்று இங்ஙனம் சிந்திக்கையில் விமானத்திற்கு மேல் அம்பிகை எங்களால் மீண்டும் காணப் பட்டாள்.

3.6. உடனே ஒரு விநாடியில் விமானம் அவ்விடம் விட்டகன்று ஆகாயத்தில் காற்றினால் உந்தப்பட்டு விரைவில் வாயுமண்டலத்தில் மனதிற்கினிய இன்னொரு இடத்திற்கு வந்து சேர்ந்தது.

गन्धर्वाः शतशस्तत्र यक्षा विद्याधरास्तथा।
मन्दारवाटिका-मध्ये गायन्ति च रमन्ति च ॥ ३. १० ॥

दृष्टः शतक्रतुस्तत्र पौलोम्या सहितः प्रभुः।
वयन्तु विस्मिताश्चास्म दृष्ट्वा त्रैविष्टपं तदा ॥ ३. ११ ॥

विमानस्था वयं तच्च चचाल तरसागतम्।
ब्रह्मलोकं तदा दिव्यं सर्वदेवनमस्कृतम् ॥ ३. १४ ॥

तत्र ब्रह्माणमालोक्य विस्मितौ हरकेशवौ।
मामूचतुश्चतुर्वक्त्र कोऽयं ब्रह्मा सनातनः ॥ ३. १७ ॥

ताववोचमहं नैव जाने सृष्टिपतिं पतिम्।
कोऽहं कोऽयं किमर्थं वा भ्रमोऽयं मम चेश्वरौ ॥ ३. १८ ॥

3.10–11. அவ்விடத்தில் நூற்றுக்கணக்கான கந்தர்வர்களும் யக்ஷர்களும் வித்தியாதரர்களும் மந்தார விருக்ஷங்கள் நிறைந்த ஒரு நந்தவனத்தின் நடுவில் பாடிக்கொண்டு களிப்புடனிருப்பதைக் கண்டோம். அங்கு புலோமையுடன்கூடிய தேவர்கள் நாயகனுன இந்திரனையும் கண்டோம். அந்த சுவர்க்கலோகத்தைக் கண்டு நாங்கள் ஆச்சரியம் மிகுந்தவர்களானோம்.

3.14. அங்கிருந்து விரைவாகக் கிளம்பி அவ்விமானம் எங்களுடன் எல்லா தேவர்களும் நமஸ்கரிக்கும் பிரம்ம லோகம் வந்து சேர்ந்தது.

3.17. அங்கு ஒரு பிரம்மாவைக் கண்டு ஆச்சரியத்துடன் ருத்திரரும் விஷ்ணுவும் என்னை நோக்கி 'நான்முகரே! இங்கு முன்னமேயே வீற்றிருக்கும் இந்த பிரம்மா யார்?' என்றனர்.

3.18. 'சிருஷ்டிகர்த்தாவாய் இங்கு விளங்கும் இந்த லோக நாயகரை நான் யாரென்று அறிந்து கொள்ள முடியவில்லை. நான் யார், இவர் யார், ஈசுவரர்களாகிய நீங்கள் யார்? எனக்கு ஏன் இந்த மதிமயக்கம் ஏற்பட்டுள்ளது? ஒன்றும் விளங்கவில்லை' என்று அவர்களிடம் கூறினேன்.

क्षणादथ विमानं तच्चचालाऽऽशु मनोजवम् ।
कैलासशिखरे प्राप्तं रम्ये यक्षगणान्विते ॥ ३. १९ ॥

यदा प्राप्तं विमानं तत्तदैव सदनाच्छुभात् ।
निर्गतो भगवाञ्छम्भुर्वृषारूढ-स्त्रिलोचनः ॥ ३. २१ ॥

पंचाननो दशभुजः कृतसोमार्धशेखरः ।
व्याघ्रचर्मपरिधानो गजचर्मोत्तरीयकः ॥ ३. २२ ॥

पार्ष्णिरक्षौ महावीरौ गजाननषडाननौ ।
शिवेन सह पुत्रौ द्वौ व्रजमानौ विरेजतुः ॥ ३. २३ ॥

तं वीक्ष्य शंकरं चान्यं विस्मितास्तत्र नारद ।
मातृभिः संशयाविष्टस्तत्राहं न्यवसं मुने ॥ ३. २४ ॥

3.19. அப்பொழுது விமானம் மீண்டும் ஒரு கணப்பொழுதில் கிளம்பி மனோவேகத்தில் விரைவாக யக்ஷர்குழாம் நிரம்பிய கயிலை மலையின் உச்சிக்கு வந்தது.

3.21–22. எப்பொழுது விமானம் அங்கு சேர்ந்ததோ அதே சமயத்தில் அந்த மங்களமான ஆலயத்திலிருந்து ஐந்து முகங்களும் பத்துகைகளும் படைத்தவரும் பாதி சந்திரனை தலையிலணிந்தவரும், இடையில் புலித்தோலணிந்தவரும், யானைத் தோலைப் போர்த்தவரும் முக்கண்ணருமாகிய பகவான் சம்பு விருஷபாரூடராய் வெளிவந்தார்.

3.23. சிவனுக்கு இருபுறத்தும் காப்பாக அவருடைய புத்திரர்களும் மஹாவீரர்களுமான யானைமுகத்தோனும் ஆறுமுகத்தோனும் கூடவே வந்து காட்சியளித்தனர்.

3.24. நாரத முனியே! மேலும் மாத்ருகாசக்திகளுடன் கூடி நின்ற இன்னொரு சங்கரராகிய அவரை இங்ஙனம் அங்கே நாங்கள் கண்டு ஆச்சரியமும் சந்தேகமும் மேலிட்டவர்களாக ஆனோம்.

क्षणात्तस्माद्गिरेः शृंगाद्विमानं वातरंहसा ।
वैकुण्ठसदनं प्राप्तं रमारमणमन्दिरम् ।। ३. २५ ।।

विसिष्मिये तदा विष्णुर्दृष्ट्वा तत्पुरमुत्तमम् ।
सदनाग्रे ययौ तावद्धरिः कमललोचनः ।। ३. २६ ।।

वीज्यमानस्तदा लक्ष्म्या कामिन्या चामरैः शुभैः ।
तं वीक्ष्य विस्मिताः सर्वे वयं विष्णुं सनातनम् ।। ३. २९ ।।

परस्परं निरीक्षन्तः स्थितास्तस्मिन् वरासने ।
ततश्चचाल तरसा विमानं वातरंहसा ।। ३. ३० ।।

3.25. பின்னெரு விநாடியில் அந்த மலை முடியிலிருந்து விமானம் வாயுவேகத்தில் ரமாரமணராகிய மஹாவிஷ்ணு உறையும் வைகுண்டாலயத்திற்கு வந்தது.

3.26–29. சிறந்த அவ்விடத்தைக் கண்ணுற்ற விஷ்ணு வியப்படைந்தார். அங்கு தாமரைக்கண்ணராகிய ஹரி நாயகியாகிய லக்ஷ்மியால் அழகிய சாமரங்கொண்டு வீசப்பட்டவராய் உறைந்தார். புராணபுருஷராகிய அவ் விஷ்ணுவைக் கண்டு நாங்கள் எல்லோரும் ஆச்சரியமடைந் தோம்.

3.30. ஒருவரையொருவர் இங்ஙனம் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே அங்கிருந்து விமானம் வாயு வேகத் தில் கிளம்பிற்று.

सुधा-समुद्रः संप्राप्तो मिष्टवारिमहोर्मिमान् ।
तस्मिन् द्वीपे शिवाकारः पर्यंकः सुमनोहरः ।। ३. ३५ ।।

पर्यंकप्रवरे तस्मिन्नुपविष्टा वरांगना ।
रत्नमाल्याम्बरधरा रक्तगन्धानुलेपना ।। ३. ३८ ।।

रमाकोटयधिका कान्त्या सूर्यबिम्बनिभाखिला ।
वर-पाशां-कुशाभीष्टधरा श्रीभुवनेश्वरी ।। ३. ४० ।।

अदृष्टपूर्वा सा दृष्टा सुन्दरी स्मितभूषणा ।
ह्रींकारजपनिष्ठैस्तु पक्षिवृन्दै-र्निषेविता ।। ३. ४१ ।।

3.35–40. ருசியுள்ள நீரை உடைய உன்னதமான அலைகளுடன் கூடிய பாற்கடல் வந்தது. அதின் நடுவில் ஒரு துவீபமும் அதில் சிவ வடிவான அழகிய கட்டிலும் காணப்பட்டது. அச்சிறந்த கட்டில்மேல் அழகுமிக்கதொரு ஸ்திரீ வீற்றிருக்கக் கண்டோம். அவள் ரத்ன மாலைகளும் சிவப்பு வஸ்திரமும் அணிந்து சிவப்புச் சந்தனம் பூசிக்கொண்டு கோடானுகோடி லக்ஷ்மிகளின் காந்தியையும் பலகோடி சூரியர்களின் காந்தியையும் மிக்கவளாய் வரம் பாசம் அங்குசம் அபயமுத்திரை ஆகியவற்றைக் கைகளில் தரிப்பவளாய் விளங்கினாள். அவள் தான் ஸ்ரீபுவனேச்வரீ.

3.41. முன்பு கண்டிராத அழகும் ஆபரணங்களும் மகிழ்ச்சியும் உடைய சுந்தரியாகிய தேவியைக் கண்டோம். ஹ்ரீங்கார ஜபம் செய்யும் பக்ஷிகளால் அவள் சூழப்பெற்றிருந்தாள்.

अरुणा करुणामूर्तिः कुमारी नवयौवना।
कनकांगदकेयूर-किरीटपरिशोभिता ॥ ३. ४३ ॥

कनच्छ्रीचक्र-ताटंक-विटंक वदनाम्बुजा।
हृल्लेखा भुवनेशीति नामजाप-परायणैः ॥ ३. ४४ ॥

सखीवृन्दैः स्तुता नित्यं भुवनेशी महेश्वरी।
हृल्लेखाद्याभि-रमरकन्याभिः परिवेष्टिता ॥ ३. ४५ ॥

अनंगकुसुमाद्याभिर्देवीभिः परिवेष्टिता।
देवी षट्कोणमध्यस्थ-यन्त्रराजोपरि स्थिता ॥ ३. ४६ ॥

दृष्ट्वा तां विस्मिताः सर्वे वयं तत्र स्थिता भवन्।
केयं कान्ता च किं नाम न जानीमोऽत्र संस्थिता ॥ ३. ४७ ॥

3.43–45. சிவந்த நிறம் படைத்த கருணமூர்த்தியாயும் புதிய யௌவனப் பருவமுடைய குமாரியாயும், பொன்னலான அங்கதம், கேயூரம், கிரீடம் முதலியவற்றால் பிரகாசிப்பவளாயும், ஸ்ரீசக்ர ரூபமான காதோலைகளால்அழகிய முகமுடையவளாயும், ஹ்ருல்லேகை என்றும் புவனேசி என்றும் கூறப்படும் நாமங்களை ஜபிக்கும் தோழிகளால் சூழப்பெற்று துதிக்கப்பெற்றவளாயும் உலக நாயகியான அம்மகேசுவரி விளங்கினள்.

3.46. அனங்க குஸுமா முதலிய தேவிகளால் சேவிக்க பெற்ற தேவி ஆறு கோணங்களின் நடுவில் ஸ்ரீயந்த்ர ராஜத்தில் வீற்றிருந்தாள்.

3.47. அவளை தரிசித்து ஆச்சரியத்தில் மூழ்கியிருந்த நாங்கள் சிறிது நேரம் ஒன்றுமறியாமல் இப்படி பிரகாசிப்பவள் யார், இவள் பெயர் என்ன என்று அறியாமல் சிந்தித்தோம்.

तदाऽसौ भगवान् विष्णु-र्दृष्ट्वा तां चारुहासिनीम् ।
उवाचाम्बां स्वविज्ञानात् कृत्वा मनसि निश्चयम् ॥ ३. ५० ॥

एषा भगवती देवी सर्वेषां कारणं हि नः ।
महाविद्या महामाया पूर्णा प्रकृतिरव्यया ॥ ३. ५१ ॥

दुर्ज्ञेयाऽल्पधियां देवी योगगम्या दुराश्रया ।
इच्छा परात्मनः कामं नित्यानित्यस्वरूपिणी ॥ ३. ५२ ॥

दुराराध्याऽल्प-भाग्यैश्च देवी विश्वेश्वरी शिवा ।
वेदगर्भा विशालाक्षी सर्वेषामादिरीश्वरी ॥ ३. ५३ ॥

3.50. அப்பொழுது பகவான் விஷ்ணுவானவர் புன்னகை பூத்த அவளைப்பார்த்துத் தன்னுடைய ஞான சக்தியால் அவளை அம்பிகையென்றுணர்ந்து பின்வருமாறு கூறினார்.

3.51–52. இவள் பகவதி, நமக்கெல்லாம் காரண மான தேவி, மஹாவித்யா, மஹாமாயை, எங்கும் நிறைந் தவள், பிரகிருதி, மாறுபாடற்றவள், அல்பபுத்தியுடையவர் களால் அறிய முடியாதவள், யோகத்தால் அடையக்கூடிய வள், அணுகுதற்கரியவள். இச்சா சக்தியாயும் பராசக்தி யாயும் தன்னிஷ்டப்படி நித்தியம் அநித்தியமாகிய இரண்டு வடிவிலும் இருப்பவள்.

3.53. பாக்கியங் குறைந்தவர்களால் ஆராதிக்க முடியாதவள், உலகநாயகி, மங்களவடிவினள், வேதங்களுக் குப் பிறப்பிடம், விசாலமான கண்களையுடையவள், அனை வருக்கும் ஆதியாயும் ஆள்பவளாயும் உள்ளவள்.

एषा संहृत्य सकलं विश्वं क्रीडति संक्षये ।
लिंगानि सर्वजीवानां स्वशरीरे निवेश्य च ।। ३. ५४ ।।

सर्वबीजमयी ह्येषा राजते सांप्रतं सुरौ ।
विभूतयः स्थिताः पार्श्वे पश्यतां कोटिशः क्रमात् ।। ३. ५५ ।।

दिव्याभरणभूषाढ्या दिव्यगन्धानुलेपनाः ।
परिचर्यापराः सर्वाः पश्यन्तं ब्रह्मशंकरौ ।। ३. ५६ ।।

धन्या वयं महाभागाः कृतकृत्याःस्म सांप्रतम् ।
यदत्र दर्शनं प्राप्ता भगवत्याः स्वयं त्विदम् ।। ३. ५७ ।।

तपस्तप्तं पुरा यत्नात् तस्येदं फलमुत्तमम् ।
अन्यथा दर्शनं कुत्र भवेदस्माक-मादरात् ।। ३. ५८ ।।

3.54. பிரளய காலத்தில் எல்லா ஜீவர்களின் லிங்க சரீரங்களையும் அனைத்துலகத்தையும் தன்னுடைய சரீரத்தில் ஒடுக்கி வைத்துக்கொண்டு இவள் விளையாடுகிறாள்.

3.55–56. பிரம்மருத்திரர்களே! ஸர்வபீஜஸ்வரூபியான இவளே நம் முன்பு இப்பொழுது பிரகாசிப்பவள். இவள் பக்கத்தில் திவ்யாபரணங்கள் பூண்டு திவ்யமான சந்தனப் பூச்சுடன் அவளுக்கு ஸேவை செய்யச் சித்தமாய் நாம் காண்பவர்களெல்லாம் அவளுடைய விபூதிகளே (அம்சங்களே) யாவர்.

3.57. நேரில் இப்பொழுது இம்மாதிரி நமக்கு பகவதியின் தரிசனம் கிட்டியதால் நாம் உயர் நலம் எய்தியவர்களாகவும் மகா பாக்கியசாலிகளாகவும் செய்ய வேண்டியதைச் செய்து முடித்தவர்களாகவும் ஆகின்றோம்.

3.58. முன்பு நாம் நன்முயற்சியுடன் தவஞ் செய்திருக்க வேண்டும்; அதின் உத்தமப்பயன் இது; இல்லையேல் இவ்வளவு ஆதரவுடன் கூடிய தேவியின் தரிசனம் எங்ஙனம் கிடைக்கும்?

पश्यन्ति पुण्यपुंजा ये ये वदान्यास्तपस्विनः ।
रागिणो नैव पश्यन्ति देवीं भगवतीं शिवाम् ॥ ३. ५९ ॥

मूलप्रकृतिरेवैषा सदा पुरुषसंगता ।
ब्रह्माण्डं दर्शयत्येषा कृत्वा वै परमात्मने ॥ ३. ६० ॥

द्रष्टाऽसौ दृश्यमखिलं ब्रह्माण्डं देवतास्सुरौ ।
तस्यैषा कारणं सर्वा माया सर्वेश्वरी शिवा ॥ ३. ६१ ॥

क्वाहं वा क्व सुराः सर्वे रमाद्याः सुरयोषितः ।
लक्षांशेन तुलामस्या न भवामः कथंचन ॥ ३. ६२ ॥

3.59. எவர்கள் நிறையப் புண்ணியஞ் செய்தவர்களோ, எவர்கள் தானமும் தவமும் செய்தவர்களோ அவர்களே தேவியைக் காணக் கூடியவர்கள். மங்கள ஸ்வரூபியான பகவதியை ஆசைவாய்ப்பட்டவர்கள் காணமாட்டார்கள்.

3.60. எப்பொழுதும் பரம புருஷனுடன் கூடி இணை பிரியாதிருக்கும் மூலப்பிரகிருதி இவள். பிரம்மாண்டத்தை. சிருஷ்டித்துப் பரமாத்மாவிற்குக் காண்பிக்கிருள்.

3.61. பார்க்கும் ஜீவனுகவும் பார்க்கப்படும் பிரம்மாண்டம் அனைத்துமாகவும் தேவர்களாகவும் அசுரர்களாகவும் இருப்பவள் இவளே. மங்களவடிவினளும் ஸர்வேச்வரியும் மகாமாயையுமான இவளே அனைத்திற்கும் காரணம்.

3.62. இப்படியிருக்க நான் எம்மாத்திரம், தேவர்களெல்லாம் எம்மாத்திரம்? லக்ஷ்மீ முதலிய தேவஸ்திரீகள் எம்மாத்திரம்? நாமெல்லோருங் கூடினலும் அவளுடைய லக்ஷாம்சத்திற்கும் சமமாக மாட்டோம்.

सैषा वरांगना नाम या दृष्टा वै महार्णवे ।
बालभावे महादेवी दोलयन्तीव मां मुदा ॥ ३. ६३ ॥

शयानं वटपत्रे च पर्यंके सुस्थिरे दृढे ।
पादांगुष्ठं करे कृत्वा निवेश्य मुखपंकजे ॥ ३. ६४ ॥

लेलिहन्तं च क्रीडन्त-मनेकैर्बालचेष्टितैः ।
रममाणं कोमलांगं वटपत्रपुटे स्थितम् ॥ ३. ६५ ॥

गायन्ती दोलयन्ती च बालभावान्मयि स्थिते ।
सेयं सुनिश्चितं ज्ञानं जातं मे दर्शनादिव ॥ ३. ६६ ॥

कामं नो जननी सैषा शृणुतं प्रवदाम्यहम् ।
अनुभूते मया पूर्वं प्रत्यभिज्ञा समुत्थिता ॥ ३. ६७ ॥

3.63–64. பிரளயப் பெருங்கடலில் தர்சனமளித்தவள் எவளோ அவளே இவள். ஒரு ஆலிலையானது திடமான படுக்கை போலமைய அதன் மேல் நான் குழந்தை வடிவில் கால்கட்டைவிரலைக் கையால் பிடித்து வாயில் வைத்துக் கொண்டு சயனித்திருக்கையில் என்னை மகிழ்ச்சியுடன் தொட்டிலில் ஆட்டுவது போல் ஆட்டுவித்தவள் இவளே.

3.65–66. (கட்டைவிரலை) சுவைத்துக்கொண்டு மெதுவான உடல் படைத்த நான் பலவிதமான பால சேஷ்டைகளுடன் ஆலிலை மேல் இருந்து கொண்டு குழந்தையாக விளையாடுகையில் என்னை ஆட்டுவித்தவளும் பாட்டுவித்தவளும் இவளே என்ற நிச்சய ஞானம் இப்பொழுது இவளுடைய தர்சனத்தினாலேற்பட்டது.

3.67. உண்மையில் நமக்கு இவளே தாய். இன்னும் முந்திய அனுபவ ஞானம் இப்பொழுது என்னிடம் எழுகிறது. அதைக் கூறுகிறேன், கேளுங்கள்.

इत्युक्त्वा भगवान् विष्णुः पुनराह जनार्दनः।
वयं गच्छेम पार्श्वेऽस्याः प्रणमन्तः पुनः पुनः ॥ ४. १ ॥

ओमित्युक्त्वा हरिं सर्वे विमानात् त्वरितास्त्रयः।
उत्तीर्य निर्गता द्वारि शंकमाना मनस्यलम् ॥ ४. ५ ॥

द्वारिस्थान् वीक्ष्य तान् सर्वान् देवी भगवती तदा।
स्मितं कृत्वा चकाराऽऽशु तांस्त्रीन् स्त्रीरूपधारिणः ॥ ४. ६ ॥

ब्रह्मोवाच—

श्रृणु नारद वक्ष्यामि यद् दृष्टं तत्र चाद्भुतम्।
नखदर्पण-मध्ये वै देव्याश्चरणपंकजे ॥ ४. १४ ॥

ब्रह्माण्डमखिलं सर्वं तत्र स्थावरजंगमम्।
अहं विष्णुश्च रुद्रश्च वायुरग्निर्यमो रविः ॥ ४. १५ ॥

4.1. ஜனார்த்தனராகிய பகவான் விஷ்ணு இங்ஙனம் கூறிவிட்டு 'நாம் அவளுக்கருகில் சென்று நமஸ்கரித்து அவளை மேன்மேலும் துதிப்போம்' என்றார்.

4.5. நாங்கள் ஹரி கூறியதற்கிணங்கி மூவருமாக விமானத்திலிருந்து விரைவில் எழுந்து வெளிச்சென்று தேவியின் ஆலயவாயிலில் மனதில் சற்றுத் தயக்கத்துடன் நின்றோம்.

4.6. அங்ஙனம் வாயிற்படியருகில் நின்ற எங்களை பகவதி பார்த்துப் புன்னகை பூத்து உடனே மூவரையும் ஸ்திரீ ரூபங்கொண்டவர்களாய்ச் செய்து விட்டாள்.

பிரம்மா கூறியது—

4.14–15. நாரதா! கேட்பாயாக. அங்கு என்ன அற்புதம் கண்டோம் என்பதைக் கூறுகிறேன். தேவியின் பாதகமலங்களில் கண்ணாடிபோல் பிரகாசித்த நகங்களின் மத்தியில் ஸ்தாவரஜங்கமங்களுடன் கூடிய பிரம்மாண்டங்களையெல்லாம் கண்டோம். அங்கு நானும் விஷ்ணுவும் ருத்திரரும் காணப்பட்டோம். வாயுவும் அக்னியும் யமனும் சூரியனும் காணப்பட்டனர்.

वैकुण्ठो ब्रह्मलोकश्च कैलासः पर्वतोत्तमः ।
सर्वं तदखिलं दृष्टं नखमध्यस्थितं च नः ॥ ४. १९ ॥

मज्जन्मपंकजं तत्र स्थितोऽहं चतुराननः ।
शेषशायी जगन्नाथस्तथा च मधुकैटभौ ॥ ४. २० ॥

विष्णुरुवाच—

नमो देव्यै प्रकृत्यै च विधात्र्यै सततं नमः ।
कल्याण्यै कामदायै च वृद्धयै सिद्धयै नमो नमः ॥ ४. २७ ॥

त्राता वयं जननि ते मधुकैटभाभ्यां
लोकाश्च ते सुविततः खलु दर्शिता वै ।
नीताः सुखस्य भवने परमां च कोटिं
यद्दर्शनं तव भवानि महाप्रभावम् ॥ ४. ३६ ॥

4.19. வைகுண்டமும், பிரம்மலோகமும், மலைகளிற் சிறந்த கயிலாயமும் மற்றும் எல்லாமும் நகமத்தியில் இருப்புடையவையாய் எங்களுக்குக் காட்சியளித்தன.

4.20. நான் தோன்றிய தாமரையும் அதின் மேல் நான்கு முகங்களுடன் வீற்றிருந்த நானும் காணப்பட்டேன். ஆதிசேஷன் மேல் சயனித்திருந்த ஜகந்நாதரும் காணப்பட்டார். மதுகைடபர்களும் காணப்பட்டனர்.

விஷ்ணு கூறியது—

4.27. தேவியே! உனக்கு நமஸ்காரம். பிரகிருதியாகவும் உலகைப் படைப்பவளாகவுமிருக்கும் உனக்கு நமஸ்காரம். மங்கள வடிவினளும் ஆசைகளைப் பூர்த்தி செய்விப்பவளும் விருத்தியும் சித்தியும் அளிப்பவளுமாகிய உனக்கு நமஸ்காரம்.

4.36. தாயே! மதுகைடபர்களிடமிருந்து நாங்கள் காக்கப்பட்டோம். விரிந்து பரந்த உலகங்களெல்லாம் எங்களுக்குக் காட்டப்பட்டன. உன்னுடைய ஆலயத்தில் இன்பத்தின் எல்லை நிலத்தைக் கண்டோம். பவானி! உன்னுடைய தரிசனம் உயர்வற்ற உயர் நலமுடைய பெருமை வாய்ந்தது.

अस्माभिरत्र भुवने हरिरन्य एव
दृष्टः शिवः कमलजः प्रथितप्रभावः ।
अन्येषु देवि भुवनेषु न सन्ति किं ते
किं विद्म देवि विततं तव सुप्रभावम् ॥ ४.४० ॥

विद्या त्वमेव ननु बुद्धिमतां नराणां
शक्तिस्त्वमेव किल शक्तिमतां सदैव ।
त्वं कीर्ति-कान्ति-कमलामलतुष्टिरूपा
मुक्तिप्रदा विरतिरेव मनुष्यलोके ॥ ४. ४४ ॥

नमो देवि महाविद्ये नमामि चरणौ तव ।
सदा ज्ञानप्रकाशं मे देहि सर्वार्थदे शिवे ॥ ४.४९ ॥

4.40. தேவி! எங்களால் இப்புவனத்தில் வேறு விஷ்ணுவும் வேறு சிவனும் வேறு பிரம்மாவும் பிரசித்தியுடையவர்களாய்க் காணப்பட்டனர். இதே மாதிரி இன்னுமுள்ள மற்ற புவனங்களிலும் மும்மூர்த்திகள் இருப்பார்களல்லவா? எங்கும் பரவியுள்ள உனது மகிமையை நாங்கள் எங்ஙனம் அறிவோம்?

4.44. புத்திசாலிகளான மனிதர்களிடம் கல்வியாக நீயே விளங்குகிருய் என்பது நிச்சயம். சக்திமான்களிடம் எப்பொழுதும் சக்தி வடிவில் உள்ளவள் நீயே. கீர்த்தி, அழகு, செல்வம், மாசற்ற ஸந்தோஷம், வைராக்கியம், முக்தி இவற்றின் வடிவாயும் இவைகளை அளிப்பவளாயும் மனித உலகில் விளங்குபவள் நீயே.

4.49. மஹாவித்யா ஸ்வரூபிணியான தேவியே! உன்னுடைய பாதங்களில் பணிகின்றேன். மங்கள வடிவினளே! எல்லா மனோரதங்களையும் பூர்த்தி செய்விப்பவளே! எப்பொழுதும் எனக்கு ஞானப்பிரகாசத்தைத் தந்தருள்வாயாக.

शिव उवाच—

तव गुणास्त्रय एव सदा क्षमा: प्रकटनावनसंहरणेषु वै
हरिहरद्रुहिणाश्च क्रमात्त्वया विरचितास्त्रिजगतां किल
कारणम् ।

परिचितानि मया हरिणा तथा कमलजेन विमानगतेन वै ।
पथि गतै-र्भुवनानि कृतानि वा कथय केन भवानि
नवानि च ।। ५. ११ ।।

त्रिभुवनेषु भवत्विय-मम्बिके
मम सदैव हि कीर्तिरनाविला ।
युवति-भावमवाप्य पदाम्बुजं
परिचितं तव संसृतिनाशनम् ।। ५. १६ ।।

சிவன் கூறியது—

5.11. உன்னுடைய மூன்று குணங்களே சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரமாகிற தொழில்களை எப்பொழுதும் செய்து முடிக்க வல்லமையுடன் விளங்குகின்றன. உன்னால் உண்டாக்கப்பட்ட முவ்வுலகங்களுக்கும் ஹரி ஹரன் பிரம்மா எனப் பெயர் கொண்ட நாங்களா காரணம்? விமானத்தில் செல்லுகையில் என்னாலும் ஹரியாலும் பிரம்மாவாலும் வழியில் காணப்பட்ட புதிய புவனங்கள் எங்களால் ஆக்கப் பட்டனவா? பவானி! அவை யாரால் ஆக்கப்பட்டவை? நீயே சொல்.

5.16. அம்பிகையே! நான் ஸ்திரீ ரூபத்தையடைந்து ஸம்ஸார பந்தத்தைப் போக்கும் உன்னுடைய திருவடிச் சேவை கிடைக்கப் பெற்றேன் எனும் மாசற்ற கீர்த்தி மூன்றுலகங்களிலும் எப்பொழுதும் விளங்கவேண்டும்.

न तपसा न दमेन समाधिना
न च तथा विहितैः क्रतुभिर्यथा ।
तव पदाब्ज-परागनिषेवणाद्
भवति मुक्तिरजे भवसागरात् ॥ ५. १९ ॥

कुरु दयां दयसे यदि देवि मां
कथय मन्त्रमनाविलमद्भुतम् ।
समभवं प्रजपन् सुखितो ह्यहं
सुविशदं च नवार्णमनुत्तमम् ॥ ५. २० ॥

ब्रह्मोवाच—

इत्युक्ता सा तदा देवी शिवेनाद्भुत-तेजसा ।
उच्चचाराम्बिका मन्त्रं प्रस्फुटं च नवाक्षरम् ॥ ५. २२ ॥

5.19. பிறப்பற்றவளே! உன் பாததீர்த்தத்தைச் சேவிப்பதால் பிறவிக் கடலினின்று விடுதலை ஏற்படுவது போல் தவத்தாலோ, புலனடக்கத்தாலோ, ஸமாதியாலோ வேதம் விதிக்கும் யாகம் முதலியவைகளாலோ ஏற்படாது.

5.20. தேவி! என்னிடம் உனக்குக் கருணையிருந்தால் அற்புதமாயும் மாசுகளை நீக்குவதாயும் தெளிவாயும் ஒப்புயர்வற்றதாயுமுள்ள நவாக்ஷரீ மந்திரத்தை எனக்கு உபதேசித்தருள்வாயாக. அதை ஜபித்து நான் நித்தியானந்தமுடையவனுவேன்.

பிரம்மா கூறியது—

5.22. இங்ஙனம் அற்புத தேஜோ ரூபியான சிவனுல் வேண்டிக் கொள்ளப்பட்ட தேவி நவாக்ஷரீ மந்திரத்தைத் தெளிவாக உபதேசித்தார்.

जपन्नवाक्षरं मन्त्रं कामदं मोक्षदं तथा ।
बीजयुक्तं शुभोच्चारं शंकरस्तस्थिवांस्तदा ॥ ५. २४ ॥

तं तथाऽवस्थितं दृष्ट्वा शंकरं लोकशंकरम् ।
अवोचम् तां महामायां संस्थितोऽहं पदान्तिके ॥ ५. २५ ॥

न किं त्वं समर्थोऽसि विश्वं विधातुं
 दृशैवाऽऽशु सर्वं चतुर्धा विभक्तम् ।
विनोदार्थमेवं विधिं मां विधाय
 आदिसर्गे किलेदं करोषीति कामम् ॥ ५. ३५ ॥

दृष्टादृष्टविभेदेऽस्मिन् प्राक् त्वत्तो वै पुमान् परः ।
नाऽन्यः कोऽपि तृतीयोऽस्ति प्रमेये सुविचारिते ॥ ५. ४१ ॥

5.24. காமத்தையும் மோக்ஷத்தையுமளிக்கும் நவாக்ஷரீ மந்திரத்தை பீஜாக்ஷரங்களுடன் அழகாக ஜபித்துக் கொண்டு சங்கரர் நிஷ்டையிலமர்ந்தார்.

5.25. உலகிற்கு மங்களத்தைச் செய்யும் சங்கரர் அவ்வாறு நிஷ்டையிலிருப்பதைக் கண்டு நான் மகாமாயை யாகிய தேவியின் திருவடியை வணங்கிப் பின்வருமாறு விண்ணப்பித்துக் கொண்டேன்.

5.35. உன் கடைக்கண் பார்வையாலேயே (அண்டஜம் ஜராயுஜம் ஸ்வேதஜம் உத்பீஜம் எனும்) நான்குவகைப் படைப்புகளுடன் கூடிய உலகை உண்டாக்குவதற்கு ஸாமர்த்தியமுள்ளவளாக நீ இல்லையா? வேடிக்கைக்காக என்னை பிரம்மா என்று வைத்து ஸர்க்கத்தின் ஆதியில் நீ விளையாடுகிறாய்.

5.41. பிரமாணங்களை ஆராயுமிடத்துக் காணப் படுவதாயும் காணப்படாததாயுமுள்ள இப்பிரபஞ்சத்தில் உனக்கும் முன்னாக உள்ள பரமபுருஷனையும் உன்னையுமன்றி மூன்றாவதாக ஒருவருமில்லை.

न मिथ्या वेदवाक्यं वै कल्पनीयं कदाचन ।
विरोधोऽयं मयाऽत्यन्तं हृदयेषु विशंकितः ॥ ५. ४२ ॥

एकमेवाद्वितीयं यद् ब्रह्म वेदा वदन्ति वै ।
सा किं त्वं वाप्यसौ वा किं सन्देहं विनिवर्तय ॥ ५. ४३ ॥

पुमानसि त्वं स्त्री वाऽसि वद विस्तरशो मम ।
ज्ञात्वाऽहं परमां शक्तिं मुक्तः स्यां भवसागरात् ॥ ५. ४६ ॥

देव्युवाच—

सदैकत्वं न भेदोऽस्ति सर्वदैव ममास्य च ।
योऽसौ साऽहमहं योऽसौ भेदोऽस्ति मतिविभ्रमात् ॥ ६. १ ॥

5.42. வேதவாக்கியத்தை ஒரு பொழுதும் பொய் யெனக் கருதக்கூடாது. ஆனல் நான் இப்பொழுது கூறியது வேத விரோதமோ என்ற சந்தேகம் நீங்காமல் என் இரு தயத்தில் இருக்கிறது.

5.43. வேதம் கூறுகிறபடி இரண்டல்லாத ஒன்றே பிரம்மம் என்றல் அது நீயா, பரமசிவமா என்ற சந்தே கத்தை நீ நீக்கியருளுதல் வேண்டும்.

5.46. மேலும் நீ புருஷனு பெண்ணு? விவரமாய் எனக்குக் கூறு. பராசக்தியாகிய உன்னைப்பற்றிய உண் மையையறிந்து நான் ஸம்ஸாரக் கடலினின்று விடுபட்ட வனுவேன்.

தேவி கூறியது—

6.1. எனக்கும் பரமசிவனுக்குமிடை எப்பொழுதும் பேதமில்லை. நாங்கள் இருவரும் ஒன்றேயாவோம். அவரே நான், நானே அவர். மதிமயக்கத்தால் பேதம் கற்பிக்கப் படுகிறது.

6.1. ஒப்பிடுக— *அத: சேஷ: சேஷீத்யய முபய ஸாதாரணதயா ஸ்தித: ஸம்பந்தோ வாம் ஸமரஸ பரானந்த பரயோ:1 (ஸௌ.ல. 34).*

भेद उत्पत्ति काले वै सर्गार्थः प्रभवत्यजः ।
दृश्यादृश्य-विभेदोऽयं द्वैविध्ये सति सर्वथा ॥ ६. ६ ॥

नाहं स्त्री न पुमांश्चाहं न क्लीबं सर्गसंक्षये ।
सर्गे सति विभेदः स्यात्कल्पितोऽयं धिया पुनः ॥ ६. ७ ॥

नूनं सर्वेषु देवेषु नाना नामधरा ह्यहम् ।
भवामि शक्तिरूपेण करोमि च पराक्रमम् ॥ ६. १३ ॥

गौरी ब्राह्मी तथा रौद्री वाराही वैष्णवी शिवा ।
वारुणी चाथ कौवेरी नारसिंही च वासवी ॥ ६. १४ ॥

गृहाणाज महत्तत्त्व-महंकारस्तदुद्भवः ।
ततः सर्वाणि भूतानि रचयस्व यथा पुरा ॥ ६. ३० ॥

6.6. உலக உற்பத்தி காலத்தில் சிருஷ்டியின்பொருட்டு பேதம் தோன்றுகிறது; அப்பொழுது பிரம்மாவும் தோன்றுகிறார். தோற்றமும் மறைவுமாகிற இவ்விரண்டுமுள்ளவரை இந்த பேதமுண்டு.

6.7. உலக ஸம்ஹார காலத்தில் நான் ஆணுமன்று, பெண்ணுமன்று, அலியுமன்று. உலக உற்பத்தி காலத்தில் தான் புத்தியால் இந்த பேதம் கற்பிக்கப்படுகிறது.

6.13. எல்லா தேவர்களிடமும் நான் பல பெயர்களைத் தரித்துக் கொண்டு அந்தந்தச் சக்தியாய் விளங்கி பராக்கிரமச் செயல்களைப் புரிகிறேன்.

6.14. கௌரீ, பிராம்மீ, ரௌத்ரீ, வாராஹீ, வைஷ்ணவீ, சிவா, வாருணீ, கௌபேரீ, நாரஸிஹ்மீ, வாஸவீ எல்லாம் நானே.

6.30. பிரம்மனே! மஹத்தத்துவத்தை வைத்துக் கொண்டு முன் கல்பங்களிலிருந்த வண்ணம் எல்லா பூதங்களையும் சிருஷ்டிப்பாயாக. அஹங்காரம் மஹத்தத்துவத்திலிருந்து தோன்றுவது.

गृहाणेमां विधे शक्तिं सुरूपां चारुहासिनीम् ।
महासरस्वतीं नाम्ना रजोगुणयुतां वराम् ॥ ६. ३२ ॥

गच्छ त्वमनया सार्धं सत्यलोकं बताशु वै ।
बीजाच्चतुर्विधं सर्वं समुत्पादय सांप्रतम् ॥ ६. ३५ ॥

कालकर्मस्वभावाख्यैः कारणैः सकलं जगत् ।
स्वभाव-स्वगुणैर्युक्तं पूर्ववत्सचराचरम् ॥ ६. ३७ ॥

यदा यदा हि कार्यं वो भविष्यति दुरत्ययम् ।
करिष्यति पृथिव्यां वै अवतारं तदा हरिः ॥ ६. ३९ ॥

भवोऽयं ते सहायश्च भविष्यति महाबलः ।
समुत्पाद्य सुरान् सर्वान् विहरस्व यथा सुखम् ॥ ६. ४१ ॥

6.32. பிரம்மனே! புன்சிரிப்புடன் கூடிய அழகிய ரூபத்துடனிருக்கும் மஹாஸரஸ்வதி எனப் பெயர்பெற்ற இவளை உன்னுடைய சக்தியாக ஏற்றுக்கொள். ரஜோ குணத்துடன் கூடிய அவள் மிகச் சிறந்தவள்.

6.35–37. நீ இவளுடன்கூட விரைவில் ஸத்திய லோகம் சென்று விதைகளிலிருந்து உற்பத்தி (உத்பீஜம், அண்டஜம், ஸ்வேதஜம், ஜராயுஜம்) முதலிய நான்கு வகையான உயிர்களைக் காலம் கர்மம் ஸ்வபாவம் முதலிய காரணங்களுக்கு இயைந்த வகையில் அந்தந்த இயற்கையுடனும் குணங்களுடனும் முந்தைய கல்பங்களில் இருந்த வண்ணமே சிருஷ்டித்துச் சராசரப் பிரபஞ்சம் அனைத்தையும் தோற்றுவிப்பாயாக.

6.39. எப்பெப்பொழுது உங்களுடைய காரியத்திற்குக் கடக்க முடியாத இடையூறு ஏற்படுகிறதோ அப்பப்பொழுது ஹரியானவர் பூமியில் அவதரிப்பார்.

6.41. மகாபலம் பொருந்திய ருத்திரரும் உங்களிருவருக்கும் உதவியாயிருப்பார். தேவர்களையும் உத்பத்தி செய்துகொண்டு எல்லோருடனும் இன்புறுவாயாக.

नवाक्षरमिमं मन्त्रं बीजध्यानयुतं सदा ।

जपन् सर्वाणि कार्याणि कुरु त्वं कमलोद्भव ॥ ६. ४७ ॥

इत्युक्त्वा मां जगन्माता हरिं प्राह शुचिस्मिता ।

विष्णो व्रज गृहाणेमां महालक्ष्मीं मनोहराम् ॥ ६. ४९ ॥

सदा वक्षःस्थले स्थाने भविता नात्र संशयः ।

क्रीडार्थं ते मया दत्ता शक्तिः सर्वार्थदा शिवा ॥ ६. ५० ॥

त्वं च वेधा: शिवस्त्वेते देवा मद्गुणसंभवा: ।

मान्याः पूज्याश्च सर्वेषां भविष्यन्ति न संशयः ॥ ६. ५३ ॥

6.47. தாமரையில் உதித்தவனே! இந்த நவாக்ஷரீ மந்திரத்தை பீஜத்துடன் எப்பொழுதும் தியானித்து ஜபம் செய்து கொண்டு நீ எல்லாக் காரியங்களையும் செய்வாயாக.

6.49. இங்ஙனம் என்னிடம் கூறிவிட்டு ஜகன்மாதா புன்முறுவலுடன் ஹரியை நோக்கிப் பின்வருமாறு கூறினாள்: 'விஷ்ணுவே! மனதிற்கினியவளான இந்த மகாலக்ஷ்மியை நீ ஏற்றுக்கொள்.

6.50. 'இவள் எப்பொழுதும் உன்னுடைய மார்பில் உறைவாள். இதில் சந்தேகமில்லை. பரம மங்களஸ்வரூபிணியான இவள் எல்லா நலன்களையும் அளிப்பவள். நீ கூடி இன்புற்றிருக்க இந்தச் சக்தி என்னால் அளிக்கப்பட்டவளாகின்றாள்.

6.53. 'நீயும் பிரம்மாவும் சிவனும் என்னுடைய குணங்களிலிருந்து தோன்றிய தேவர்களும் எல்லோராலும் போற்றித் தொழுதற்குரியவர்கள். இதில் சந்தேகமில்லை.

यो हरिः स शिवः साक्षाद्यो शिवः स स्वयं हरिः ।
एतयोर्भेदमतिष्ठन्नरकाय भवेन्नरः ॥ ६. ५५ ॥

तथैव द्रुहिणो ज्ञेयो नात्र कार्या विचारणा ।
अपरो गुणभेदोऽस्ति शृणु विष्णो ब्रवीमि ते ॥ ६. ५६ ॥

मुख्यः सत्त्वगुणस्तेऽस्तु परमात्मविचिन्तने ।
गौणत्वेऽपि परौ ख्यातो रजोगुणतमोगुणौ ॥ ६. ५७ ॥

लक्ष्म्या सह विहारेषु नानाभेदेषु सर्वदा ।
रजोगुणयुतो भूत्वा विहरस्वाऽनया सह ॥ ६. ५८ ॥

6.55. ஹரியே சிவன்; ஸாக்ஷாத் சிவனே ஹரி. எந்த மனிதன் இவர்களிடை பேதத்தைக் கற்பிக்கிருனே அவன் நரகில் விழுவான்.

6.56. அவ்வாறே பிரம்மாவையும் அபேதமாய் அறிய வேண்டும். இதைப்பற்றி யோசிக்க வேண்டியதில்லை. குணங்களின் வேறுபாட்டைப்பற்றி இப்பொழுது கூறுகிறேன். விஷ்ணுவே, கேட்பாயாக.

6.57. உன்னிடத்தில் முக்கியமாய் ஸத்துவ குணமிருக்கும். அது பரமாத்ம சிந்தனையைப் பற்றியது. அதற்கடங்கி ரஜோகுணம் தமோகுணமாகிய இரண்டுமிருக்கும்.

6.58. பலவிதமான லீலைகள் புரியும் பொழுது ரஜோ குணத்துடன் கூடியிருப்பாய். அவ்வாறு இவளுடன் இன்புற்றிரு. (தமோகுணம் அசுரர்களை யொழிப்பதில் பயன் படும்.)

वाग्बीजं कामराजं च मायाबीजं तृतीयकम्।
मन्त्रोऽयं त्वं रमाकान्त मद्दत्तः परमार्थदः ॥ ६. ५९ ॥

गृहीत्वा जप तं नित्यं विहरस्व यथासुखम्।
कारयित्वाऽथ वैकुण्ठं वस्तव्यं पुरुषोत्तम ॥ ६. ६३ ॥

इत्युक्त्वा वासुदेवं सा त्रिगुणा प्रकृतिः परा।
निर्गुणा शंकरं देव-मवोच-दमृतं वचः ॥ ६. ६४ ॥

गृहाण हर गौरीं त्वं महाकालीं मनोहराम्।
कैलासं कारयित्वा च विहरस्व यथासुखम् ॥ ६. ६५ ॥

मुख्यस्तमोगुणस्तेऽस्तु गौणौ सत्त्वरजोगुणौ।
विहाराऽसुरनाशार्थं रजोगुणतमोगुणौ ॥ ६. ६६ ॥

6.59. லக்ஷ்மீகாந்தா! வாக்பீஜம் (ஐம்), காமராஜபீஜம் (க்லீம்), மாயாபீஜம் (ஹ்ரீம்) என்ற மூன்று பீஜாக்ஷரங்களுடன் கூடிய மந்திரம் உயர்ந்த நன்மைகளை அளிக்கக் கூடியதாய் என்னால் உனக்கு உபதேசிக்கப் பட்டுள்ளது.

6.63. அதை எப்பொழுதும் ஜபம் செய்து கொண்டு இஷ்டப்படி இன்புற்றிரு. புருஷோத்தமா! வைகுண்டத்தை அமைத்துக் கொண்டு அதில் நீ வசிப்பாயாக.'

6.64. நிர்க்குணஸ்வரூபியாயினும் பராப்ரகிருதியாகி முக்குணங்களைக்கொண்ட அவள் இங்ஙனம் வாஸுதேவரிடம் கூறிவிட்டு சங்கரரை நோக்கிப் பின்வரும் அமுத மொழியைப் பேசினாள்.

6.65. ஹரனே! நீ மனதிற்கினிய கௌரியெனும் மஹாகாளியை ஏற்றுக்கொள். கைலாஸத்தை இருப்பிடமாய் அமைத்துக்கொண்டு அவளுடன் இன்புற்றிரு.

6.66. உன்னிடம் தமோகுணம் முக்கியமாகவும் ரஜஸ்ஸும் ஸத்துவமும் அடங்கியுமிருக்கும்; லீலைகளின் பொருட்டு ரஜோ குணமும் அசுரர்களையழித்தலில் தமோ குணமும் பயன்படும்.

तपस्तप्तुं तथा कर्तुं स्मरणं परमात्मनः ।
शर्व सत्त्वगुणः शान्तो ग्रहीतव्यः सदाऽनघ ॥ ६. ६७ ॥

सर्वथा त्रिगुणा यूयं सृष्टिस्थित्यन्तकारकाः ।
एभिर्विहीनं संसारे वस्तु नैवात्र कुत्रचित् ॥ ६. ६८ ॥

दृश्यं च निर्गुणं लोके न भूतं नो भविष्यति ।
निर्गुणः परमात्मासौ न तु दृश्यः कदाचन ॥ ६. ६९ ॥

सगुणा निर्गुणा चाहं समये शंकरोत्तमा ।
सदाऽहं कारणं शंभो न च कार्यं कदाचन ॥ ६. ७० ॥

6.67. பாவமற்றவனே! தவஞ்செய்வதற்கும் பரமாத்ம சிந்தனைக்கும் எப்பொழுதும் அமைதியுடன் ஸத்துவ குணத்தை மேற்கொள்ள வேண்டும்.

6.68. சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹார கர்த்தாக்களாகிய நீங்கள் மூவரும் முக்குணங்களையும் கைக்கொள்ள வேண்டும். இந்த ஸம்ஸாரத்தில் அவற்றினின்று விலகிய பொருள் எதுவும் எங்கும் இல்லவே இல்லை.

6.69. காணப்படும் உலகில் நிர்க்குணமான பொருள் எப்பொழுதும் இருந்ததில்லை; இருக்கப்போவதுமில்லை. நிர்க்குண ஸ்வரூபி பரமாத்மா ஒருவர்தான். அவர் ஒரு பொழுதும் காணப்படும் பொருளாகார்.

6.70. சங்கரரே! (குணங்களுடன் கூடியபொழுது) ஸகுணையாயும் (கூடாதபொழுது) நிர்க்குணையாயும் நான் உளேன். நான் குணங்களைக் கடந்த காரணவடிவினளாய் எப்பொழுதும் உளேன். ஒருபொழுதும் காரியப் பொருளாவதில்லை.

सगुणा कारणात्वाद्वै निर्गुणा पुरुषान्तिके ।
महत्तत्वमहंकारो गुणाः शब्दादयस्तथा ॥ ६. ७१ ॥

कार्यकारणरूपेण संसरन्ते त्वहर्निशम् ।
सदुद्भूतस्त्वहंकारस्तेनाऽहं कारणं शिवा ॥ ६. ७२ ॥

अहङ्कारश्च मे कार्यं त्रिगुणोऽसौ प्रतिष्टितः ।
अहंकारान्महत्तत्वं बुद्धिः सा परिकीर्तिता ॥ ६. ७३ ॥

महत्तत्वं हि कार्यं स्या-दहंकारो हि कारणम् ।
तन्मात्राणि त्वहंकारा-दुत्पद्यन्ते सदैव हि ॥ ६. ७४ ॥

6.71–72. காரணத்தால் நான் ஸகுணே; புருஷனுடன் கூடி நிற்கையில் நிர்க்குணே. மஹத்தத்துவம், அஹங்காரம், முக்குணங்கள், (சப்தம் ஸ்பர்சம், ரூபம், ரஸம், கந்தம்) முதலியவை காரிய காரண வடிவில் இரவு பகலாய்ச் சுழன்று வருகின்றன. ஸத்திலிருந்து உண்டானது அஹங்காரம். அந்த அஹங்காரத்திற்குக் காரணம் (ஸச்சிதானந்த) மங்களஸ்வரூபியான நான்.

6.73. அஹங்காரம் என்னுடைய காரியம். அது முக்குணத்தில் நிலைபெறுவது. அஹங்காரத்திலிருந்து மஹத்தத்துவம். அது (ஸமஷ்டி) புத்தி எனக் கூறப்படும்.

6.74. மஹத்தத்துவம் காரியம்; அஹங்காரம் அதன் காரணம். (சப்த-ஸ்பர்ச-ரூப-ரஸ-கந்த) தன்மாத்திரைகள் எப்பொழுதும் அஹங்காரத்தினின்று தோன்றுகின்றன.

कारणं पंचभूतानां तानि सर्व-समुद्भवे ।
कर्मेन्द्रियाणि पंचैव पंच ज्ञानेन्द्रियाणि च ॥ ६. ७५ ॥

महाभूतानि पंचैव मनः षोडशमेव च ।
कार्यं च कारणं चैव गणोऽयं षोडशात्मकः ॥ ६. ७६ ॥

परमात्मा पुमानाद्यो न कार्यं न च कारणम् ।
एवं समुद्भवः शंभो सर्वेषामादि-संभवे ॥ ६. ७७ ॥

संक्षेपेण मया प्रोक्तस्तव तत्र समुद्भवः ।
व्रजन्त्वद्य विमानेन कार्यार्थं मम सत्तमाः ॥ ६. ७८ ॥

स्मरणाद्दर्शनं तुभ्यं दास्येऽहं विषमे स्थिते ।
स्मर्तव्याऽहं सदा देवाः परमात्मा सनातनः ॥
उभयोः स्मरणादेव कार्यसिद्धिरसंशयम् ॥ ६. ७९ ॥

6.75–76. அவை பஞ்சபூதங்களுக்குக் காரணம். கர்மேந்திரியங்கள் ஐந்து, ஞானேந்திரியங்கள் ஐந்து, பஞ்சமகாபூதங்கள், மனது ஆகிய பதினறும் காரியம். இப்படி காரிய காரணத் தொகுதி பதினறு கூறுடையது.

6.77. 'ஆதிபுருஷனுகிய பரமாத்மா காரியமுமன்று காரணமுமன்று. சம்புவே! ஆதிசிருஷ்டிகாலத்தில் அனைத்தும் உற்பத்தியானது இவ்வண்ணம்.

6.78. அதைப்பற்றிய வரலாறு சுருக்கமாக என்னுல் உனக்குக் கூறப்பட்டது. இனி மேலோர்களான நீங்கள் என்னுடைய காரியத்தின் பொருட்டு விமானத்தில் ஏறிச் செல்லலாம்.

6.79. உங்களுக்கு ஏதேனும் இடையூறு ஏற்பட்டால் நினைத்தமாத்திரத்தில் நான் தரிசனமளிக்கிறேன். தேவர்களே! ஆதிபுருஷராகிய பரமாத்மாவும் நானும் தியானித்தற்குரியவர்கள். எங்கள் இருவரையும் நினைப்பதால் காரிய சித்தி ஏற்படும். இதில் சந்தேகமில்லை.

इत्युक्त्वा विससर्जास्मान् दत्त्वा शक्तीः सुसंस्कृतान् ।
विमानं तत्समासाद्य संरूढास्तत्र वै त्रयः ॥ ६. ८० ॥

स्थलान्तरं समासाद्य ते जाताः पुरुषा वयम् ।
चिन्तयन्तः स्वरूपं तत्प्रभावं परमाद्भुतम् ॥ ६. ८१ ॥

न द्वीपोऽसौ न सा देवी सुधासिन्धुस्तथैव च ।
पुनर्दृष्टं विमानं वै तत्रास्माभिर्नचान्यथा ॥ ६. ८२ ॥

6.80. (நாரதா!) இவ்வாறு எங்களுக்கு சக்திகளை யளித்து மந்திர தீக்ஷையால் புனிதமாக்கி தேவி விடை கொடுத்தனுப்பினுள். நாங்கள் மூவரும் சக்திகளுடன் விமானத்திலேறிக் கொண்டோம்.

6.81–82. அங்கிருந்து கிளம்பியதும் நாங்கள் (ஸ்திரீ ரூபம் நீங்கி) மீண்டும் புருஷரூபமுடையவர்களானேம். பரமாத்புதமான தேவியின் பிரபாவத்தையும் ஸ்வரூபத்தை யும் சிந்தித்துக் கொண்டிருக்கையில் அந்த துவீபமும் அமிரு தக்கடலும் தேவியும் காணப்படவில்லை. விமானம் மட்டும் எங்களால் காணப்பட்டது.

ஒ. கிரா-மாஹுர்-தேவீம் த்ருஹிணக்ருஹிணீம் ஆகம
விதோ ஹரே: பத்னீம் பத்மாம் ஹரஸஹசரீம் அத்ரி
தநயாம்1
துரியா காபி த்வம் துரதிகம-நிஸ்ஸீம-மஹிமா
மஹாமாயா விச்வம் ப்ரமயஸி பரப்ருஹ்மமஹிஷீ11
(ஸௌ.ல. 97)

आसाद्य तस्मिन्विततते विमाने
प्राप्ता वयं पंकजसन्निधौ च ।
महार्णवे यत्र हतौ दुरत्ययौ
सुरारिणा तौ मधुकैटभाख्यौ ।। ६. ८३ ।।

इति श्रीदेवीभागवते तृतीयस्कन्धे षष्ठोऽध्यायः ।।

।। त्रिमूर्तिरहस्यं समाप्तम् ।।

6.83. அந்த விசாலமான விமானத்திலேயே நாங்கள் எந்தப் பிரளய சமுத்திரத்தில் வெல்லமுடியாத மது கைடபர்கள் மஹாவிஷ்ணுவால் கொல்லப்பட்டார்களோ அவ்விடம் வந்து சேர்ந்தோம்.

இங்ஙனம் ஸ்ரீதேவீபாகவதத்தில்
மூன்றுவது ஸ்கந்தத்தில் ஆறுவது அத்தியாயம் முற்றும்.

மும்மூர்த்தி ரஹஸ்யம் முற்றும்.

॥ गुणविज्ञानम् ॥ ११ ॥

व्यास उवाच—

इत्याकर्ण्य पितुर्वाक्यं नारदो मुनिसत्तमः ।
पप्रच्छ परमप्रीतः प्रजापति-मिदं वचः ॥ ७. २ ॥

नारद उवाच—

त्रिगुणा वीक्षिता शक्तिः निर्गुणा कीदृशी पितः ।
तस्याः स्वरूपं मे ब्रूहि पुरुषस्य च पद्मज ॥ ७. ४ ॥

ब्रह्मोवाच—

निर्गुणस्य मुने रूपं न भवेद्दृष्टिगोचरम् ।
दृश्यं च नश्वरं यस्मा-दरूपं दृश्यते कथम् ॥ ७. ६ ॥

11. குண விக்ஞானம்

வியாஸர் கூறியது—

7.2. முனிசிரேஷ்டராகிய நாரதர் தந்தையாகிய பிரம்மா கூறிய இவ்வார்த்தைகளைக் கேட்டு மிகுந்த பிரீதியுடன் அவரைப் பின்வருமாறு வினவினர்.

நாரதர் கூறியது—

7.4. தந்தையே! முக்குணம் படைத்த சக்தி காணப்பட்டாள். நிர்க்குணமானவள் எத்தகையவள்? அவளுடைய ஸ்வரூபத்தையும் பரமபுருஷனுடைய ஸ்வரூபத்தையும் கூறியருளுதல் வேண்டும்.

பிரம்மா கூறியது—

7.9. நாரதமுனியே! கண்ணுல் காணக் கூடிய ஸ்வரூபம் நிர்க்குணத்திற்கு இருக்க இயலாது. காணக் கூடியது அழியும். அழியாததும் ரூபமற்றமதுமான பரம்பொருள் எப்படி காணப்படுவதாகும்?

निर्गुणा दुर्गमा शक्ति-र्निर्गुणश्च तथा पुमान् ।
ज्ञानगम्यौ मुनीनां तु भावनीयौ तथा पुनः ॥ ७. १० ॥

अनादिनिधनौ विद्धि सदा प्रकृति-पुरुषौ ।
विश्वासेनाभिगम्यौ तौ नाऽविश्वासेन कर्हिचित् ॥ ७. ११ ॥

चैतन्यं सर्वभूतेषु यत्तद्विद्धि परात्मकम् ।
तेजः सर्वत्रगं नित्यं नानाभावेषु नारद ॥ ७. १२ ॥

तं च तां च महाभाग व्यापकौ विद्धि सर्वगौ ।
ताभ्यां विहीनं संसारे न किंचिद्वस्तु विद्यते ॥ ७. १३ ॥

तौ विचिन्त्यौ सदा देहे मिश्रीभूतौ सदाऽव्ययौ ।
एकरूपौ चिदात्मानौ निर्गुणौ निर्मलावुभौ ॥ ७. १४ ॥

7.10. நிர்க்குணமான சக்தி அறியக்கூடாதவள்; நிர்க்குணமான புருஷனும் அப்படியே. முனிவர்கள் ஞானத்தாலும், பாவனையினாலும் அவர்களை அறிதல் வேண்டும்.

7.11. ஆதியந்தமில்லாத பிரகிருதியும் புருஷனும் எப்பொழுதும் சிரத்தையாலும் பக்தியாலும் நம்பிக்கையாலும் அடையத்தக்கவர்கள். சிரத்தையும் பக்தியும் நம்பிக்கையும் இல்லாதவர்களால் ஒரு பொழுதும் அடைய இயலாது.

7.12. நாரதா! எல்லா உயிர்களிடத்தும் அறிவு வடிவில் எது உளதோ அதைப் பரம்பொருள் என்று அறிய வேண்டும். அது ஒளிவடிவானது, எங்கும் நிறைந்தது, மாறுபட்ட பல பொருள்களிலும் மாறுபடாமல் என்றும் இருப்பது.

7.13. மகாபாக்கியசாலியே! அது ஒன்றே சிவமாகவும் சக்தியாகவும் எங்கும் வியாபித்து நிற்பது. சிவனும் சக்தியுமில்லாத ஒரு பொருளும் இவ்வுலகில் இல்லை.

7.14. ஒரே வடிவானவர்களும் அறிவுமயமானவர்களும், குணங்களைக் கடந்தவர்களும், மாசற்றவர்களும், இணைபிரியாது கலந்து நிற்பவர்களும் ஆகிய அவ்விருவரும் தேகமாகிற கோயிலில் தியானம் செய்தற்குரியவர்கள்.

या शक्तिः परमात्माऽसौ योऽसौ सा परमा मता ।
अन्तरं नैतयोः कोऽपि सूक्ष्मं वेद च नारद ॥ ७. १५ ॥
गुणैः समावृतं चेतः कथं जानाति निर्गुणम् ।
अहंकारोद्भवं तच्च तद्विहीनं कथं भवेत् ॥ ७. २० ॥
यावन्न गुणविच्छेदस्तावत्तद्दर्शनं कुतः ।
तं पश्यति तदा चित्ते यदाहंकारवर्जितः ॥ ७. २१ ॥

नारद उवाच—

स्वरूपं देवदेवेश त्रयाणामेव विस्तरात् ।
गुणानां यत्स्वरूपोऽस्ति ह्यहंकारस्त्रिरूपकः ॥ ७. २२ ॥
सात्त्विको राजसश्चैव तामसश्च तथाऽपरः ।
विभेदेन स्वरूपाणि वदस्व पुरुषोत्तम ॥ ७. २३ ॥

7.15. நாரதா! எவள் பராசக்தியோ அவளே பரமாத்மா; எவன் பரமாத்மாவோ அவனே பராசக்தி என்பதுதான் உண்மை. அவர்களிடை சிறிதளவு பேதத்தையும் கண்டவன் எவனுமில்லை.

7.20. குணங்களால் சூழப்பட்ட மனது எப்படி நிர்க்குணத்தை அறியும்? அஹங்காரத்திலிருந்து உண்டான மனது (அஹங்காரத்திற்கு மூலப் பொருளான) குணங்களினின்று நீங்கியதாக எப்படி ஆகும்?

7.21. குணங்களின் ஒழிவு ஏற்படாதவரை (நிர்க்குண) பரம்பொருளின் தரிசனம் எங்ஙனம்? அஹங்காரம் எப்பொழுது ஒழிகிறதோ அப்பொழுது சித்தத்தில் அதைக் காண்பான்.

நாரதர் கூறியது—

7.22–23. தேவதேவர்களின் நாயகா! முக்குணங்களின் ஸ்வரூபங்களையும், அஹங்காரம் எப்படி குணங்களால் மூன்று வகையாகிறதென்பதையும் ஸாத்விக, ராஜஸ, தாமஸ குணங்களின் பாகுபாடுகளையும் விரிவாய்க் கூறியருளப் பிரார்த்திக்கிறேன்.

ब्रह्मोवाच—

त्रयाणां शक्तयस्तिस्रस्तद् ब्रवीमि तवानघ ।
ज्ञानशक्तिः क्रियाशक्तिरर्थशक्तिस्तथाऽपरा ॥ ७. २५ ॥

सात्त्विकस्य ज्ञानशक्ती राजसस्य क्रियात्मिका ।
द्रव्यशक्तिस्तामसस्य तिस्रश्च कथितास्तव ॥ ७. २६ ॥

तेषां कार्याणि वक्ष्यामि शृणु नारद तत्त्वतः ।
तामस्या द्रव्यशक्तेश्च शब्दस्पर्शसमुद्भवः ॥ ७. २७ ॥

रूपं रसश्च गन्धश्च तन्मात्राणि प्रचक्षते ।
शब्दैकगुणमाकाशं वायुः स्पर्शगुणस्तथा ॥ ७. २८ ॥

सुरूपगुणोऽग्निश्च जलं रसगुणात्मकम् ।
पृथ्वी गन्धगुणा ज्ञेया सूक्ष्माण्येतानि नारद ॥ ७. २९ ॥

பிரம்மா கூறியது—

7.25. பாவமற்றவனே! ஞானசக்தி, கிரியாசக்தி, அர்த்தசக்தி (அல்லது திரவிய சக்தி) என குணங்களின் சக்திகள் மூன்று. அவற்றைப்பற்றிக் கூறுகிறேன்.

7.26. ஸாத்விகத்திற்கு ஞானசக்தி, ராஜஸத்திற்கு கிரியாசக்தி, தாமஸத்திற்கு திரவியசக்தி என முக்குணங்களுக்கும் மூன்று சக்திகள் கூறப்பட்டுள்ளன.

7.27–29. நாரதா! அவற்றின் செயல்களை உள்ளபடி கூறுகிறேன், கேள். தாமஸமாகிற திரவிய சக்தியினின்று சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம், கந்தம் என்பவை உண்டாகின்றன. இவை தன்மாத்திரைகள் எனப்படுவன. ஆகாயத்திற்கு குணம் சப்தம், வாயுவிற்கு ஸ்பர்சம், அக்னிக்கு ரூபம், ஜலத்திற்கு ரஸம், பிருதிவிக்கு கந்தம். இவை ஸூக்ஷ்ம குணங்கள் என அறிய வேண்டும்.

दशैतानि मिलित्वा तु द्रव्यशक्तियुतानि वै ।
तामसाहंकारजः स्यात्सर्गस्तदनुवृत्तिकः ॥ ७. ३० ॥

राजस्याश्च क्रियाशक्तेरुत्पन्नानि शृणुष्व मे ।
श्रोत्रं त्वग्रसना चक्षुर्घ्राणञ्चैव च पंचमम् ॥ ७. ३१ ॥

ज्ञानेन्द्रियाणि चैतानि तथा कर्मेन्द्रियाणि च ।
वाक्पाणि-पाद-पायुश्च गुह्यान्तानि च पंच वै ॥ ७. ३२ ॥

प्राणोऽपानश्च व्यानश्च समानोदान-वायवः ।
पंचदश-मिलित्वैव राजसः सर्ग उच्यते ॥ ७. ३३ ॥

साधनानि किलैतानि क्रियाशक्तिमयानि च ।
उपादानं किलैतेषां चिदनुवृत्तिरुच्यते ॥ ७. ३४ ॥

7.30. (ஆகாயம் முதலிய ஐந்தும் அவற்றின் தன்மாத்திரைகளும் ஆகிய) இப்பத்தும் சேர்ந்து திரவிய சக்தியாகிய தாமஸ அஹங்காரத்திலிருந்துண்டாகும் சிருஷ்டி.

7.31–33. ராஜஸமாகிய கிரியாசக்தியினின்று உதிப்பவற்றை இனி என்னிடம் கேள். செவி, தோல், நாக்கு, கண், மூக்கு, என்ற ஐந்து. இவை ஞானேந்திரியங்கள். வாக்கு, பாணி, பாதம், பாயு, உபஸ்தம் என்ற ஐந்து, இவை கர்மேந்திரியங்கள். பிராணன், அபானன், வியானன் உதானன், ஸமானன் என்ற ஐந்து வாயுக்கள். இப் பதினைந்தும் சேர்ந்து ராஜஸசிருஷ்டி எனப்படும்.

7.34. இவையெல்லாம் கிரியாசக்தி மயமான ஸாதனங்கள். இதை உபாதானமாய்க் கொண்டு சிச்சக்தி செயலாற்றுகிறது.

ज्ञानशक्तिसमायुक्ताः सात्त्विकाच्च समुद्भवाः ।
दिशो वायुश्च सूर्यश्च वरुणश्चाश्विनावपि ॥ ७. ३५ ॥

ज्ञानेन्द्रियाणां पंचानां पंचाधिष्ठातृदेवताः ।
चन्द्रो ब्रह्मा तथा रुद्रः क्षेत्रज्ञश्च चतुर्थकः ॥ ७. ३६ ॥

इत्यन्तः-कारणाख्यस्य बुद्ध्यादेश्चाधिदैवतम् ।
चत्वार्येव तथा प्रोक्ताः किलाधिष्ठातृदेवताः ।
सात्त्विकस्य तु सर्गोऽयं सात्त्विकाख्यः प्रकीर्तितः ॥ ७. ३८ ॥

स्थूल-सूक्ष्मादि भेदेन द्वे रूपे परमात्मनः ।
ज्ञानरूपं निराकारं निदानं तत्प्रचक्षते ॥ ७. ३९ ॥

साधकस्य तु ध्यानादौ स्थूलरूपं प्रचक्षते ।
मम चैव शरीरं वै सूत्रमित्यभिधीयते ॥ ७. ४१ ॥

7.35–38. ஸாத்விகமான ஞான சக்தியிலிருந்து தோன்றுபவை திக்தேவதை, வாயு, சூரியன், வருணன், அச்வினீ தேவர்கள் ஆகியோர்; இவ்வைவரும் இந்த ஞானேந்திரியங்களுக்கும் அதிஷ்டான தேவதைகள். சந்திரன், பிரம்மா, ருத்திரன், க்ஷேத்ரக்ஞன்; இந்நால்வரும் (புத்தி மனம் சித்தம் அஹங்காரம்) முதலியவற்றுலான அந்தக் கரணத்திற்கு அதிஷ்டான தேவதைகள். இது ஸாத்விகாஹங்காரசிருஷ்டி.

7.39. ஸ்தூலம் என்றும் ஸூக்ஷ்மம் என்றும் பரமாத்மாவிற்கு ரூபம் இரண்டுவகை. ஞான ரூபம் ஸூக்ஷ்மம், வடிவில்லாதது. அது எல்லா வஸ்துக்களுக்கும் காரணமாவது.

7.41. ஸாதகனுடைய தியானம் பூஜை முதலியவற்றிற்காக ஸ்தூல ரூபம் கூறப்படுகிறது. என்னுடைய சரீரம் ஸூத்ரம் என்று கூறப்படுகிறது.

तन्मात्राणि पुरोक्तानि भूतसूक्ष्माणि यानि वै ।
पंचीकृत्य तु तान्येव पंचभूतसमुद्भवः ।
पंचीकरण-भेदोऽयं श्रृणु संवदतः किल ॥ ७. ४३ ॥

प्रथमं रसतन्मात्रामुपादाय मनस्यपि ।
कल्पयेच्च तथा तद्वै यथा भवति चोदकम् ॥ ७. ४४ ॥

शिष्टानां चैव भूताना-मम्शान् कृत्वा पृथक् पृथक् ।
उदके मिश्रयेच्चांशान् कृते रसमये ततः ॥ ७. ४५ ॥

तदा भूतविभागे च चैतन्ये च प्रकाशिते ।
चैतन्यस्य प्रवेशाच्च तदाऽहमिति संशयः ॥ ७. ४६ ॥

7.43. பூதஸூக்ஷ்மங்கள் என்றும் தன்மாத்திரைகள் என்றும் ஏற்கனவே எவை கூறப்பட்டனவோ அவற்றின் பஞ்சிகரணத்தால் (ஸ்தூலமான) பஞ்சபூதங்கள் தோன்று கின்றன. பஞ்சிகரண பேதத்தைக் கூறுகிறேன் கேள்.

7.44. முதலில் ரஸதன்மாத்திரையை ஜலமாக மன தில் எண்ணிக்கொண்டு அதை இருபாதியாக்கி ஒரு பாதியை நாலுபாகமாகப் பிரித்துக்கொள்.

7.45. அவ்வாறே ஒவ்வொரு தன்மாத்திரையையும் தனித்தனியாகப் பிரித்துக்கொள். (ஒருபாகம் அரை, மற்ற நான்கு பாகங்கள் ஒவ்வொன்றும் அரைக்கால்.) ரஸ தன்மாத்திரையின் பாதியுடன் மற்ற நாலு தன் மாத்தி ரைகளின் அரைக்கால் அரைக்கால் பகுதிகளைக் கூட்டினல் வருவது ஸ்தூலமான ஜலம் (அப்பு).

7.46. (அம்மாதிரியே பஞ்சிகரணத்தால் பிருதிவி முதலிய மற்ற நான்கு ஸ்தூல பூதங்களின் உற்பத்தியும்) அப்படி பிரிக்கப்பட்ட பூதங்களில் சைதன்யம் உட்புகுந்து பிரகாசித்தால் அப்பொழுது அதில் நான் என்ற உணர்வு தோன்ற ஆரம்பிக்கிறது.

प्रतीयमाने तेनैव विशेषणाभिमानतः।
आदिनारायणो देवो भगवानिति चोच्यते ॥ ७. ४७ ॥

घनी-भूतेऽथ भूतानां विभागे स्फष्टतां गते।
वृद्धि प्राप्य गुणैश्चेत्थ-मेकैकगुण-वृद्धितः ॥ ७. ४८ ॥

आकाशस्य गुणश्चैकः शब्द एव न चापरः।
शब्दस्पर्शौ च वायोश्च द्वौ गुणौ परिकीर्तितौ ॥ ७. ४९ ॥

अग्नेः शब्दश्च स्पर्शश्च रूपमेते त्रयो गुणाः।
शब्दस्पर्शरूपरसाश्चत्वारो वै जलस्य च ॥ ७. ५० ॥

स्पर्श-शब्द-रसा रूपं गन्धश्च पृथिवीगुणाः।
एवं मिलितयोगैश्च ब्रह्माण्डोत्पत्तिरुच्यते ॥ ७. ५१ ॥

7.47. விசேஷமான அபிமானத்துடன் அஹங்கார தத்துவம் காணப்படும்பொழுது அதுவே ஆதிநாராயண தேவராகிய பகவானுடைய அம்சம் எனக்கருதப்படுகிறது.

7.48. இவ்வாறு பஞ்சீகரணவிபாகம் செய்யப்பட்ட ஸ்தூலபூதங்கள் விருத்தியடையும் பொழுது ஒவ்வொன்றில் ஒரு குணம் மேலிட்டு நிற்கும்.

7.49. ஆகாயத்திற்கு குணம் ஒன்றே; அதாவது சப்தம்; அதற்கு வேறொரு குணமும் இல்லை. வாயுவிற்கு சப்தத்துடன் ஸபர்சமும் சேர்ந்து இரண்டு குணங்கள் கூறப்படுகின்றன.

7.50. அக்கினிக்கு சப்தம், ஸ்பர்சம், ரூபம் ஆகிய மூன்று குணங்கள். ஜலத்திற்கு சப்தம் ஸ்பர்சம் ரூபம் ரஸம் ஆகிய நான்கு குணங்கள்.

7.51. பிருதிவிக்கு குணங்கள் ஐந்து. சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம், கந்தம். இப்படி ஒன்றுடன் ஒன்று கூடுவதால் பிரம்மாண்டம் தோன்றுவதாய்க் கூறப்படுகிறது.

सर्गोऽयं कथितस्तात यत्पृष्टोऽहं त्वयाऽधुना ।
गुणानां रूपसंस्था वै शृणुष्वैकाग्रमानसः ॥ ८. १ ॥

सत्त्वं प्रीत्यात्मकं ज्ञेयं सुखात्प्रीति-समुद्भवः ।
आर्जवं च तथा सत्यं शौचं श्रद्धा क्षमा धृतिः ॥ ८. २ ॥

अनुकम्पा तथा लज्जा शान्तिः सन्तोष एव च ।
एतैः सत्त्वप्रतीतिश्च जायते निश्चला सदा ॥ ८. ३ ॥

श्वेतवर्णं तथा सत्त्वं धर्मे प्रीतिकरं सदा ।
सच्छ्रद्धोत्पादकं नित्य-मसच्छ्रद्धा-निवारकम् ॥ ८. ४ ॥

रक्तवर्ण-मसत्प्रोक्त-मप्रीतिकर-मद्भुतम् ।
अप्रीति-र्दुःखयोगत्वाद्भवत्येव सुनिश्चिता ॥ ८. ६ ॥

8.1. சிருஷ்டியைப்பற்றி நீ கேட்ட கேள்விக்கு இது விடை. இனி குணங்களுடைய ஸ்வரூப லக்ஷணத்தைக் கூறுகிறேன், கவனமாய்க் கேள்.

8.2–3. ஸத்வம் பிரீதி வடிவானது என உணர வேண்டும். இன்பத்தினின்று ப்ரீதி தோன்றும். நேர்மை, ஸத்தியம், பரிசுத்தம், சிரத்தை, பொறுமை, திடசித்தம், இரக்கம், வெட்கம், அமைதி, சந்தோஷம் இவை நிலையான ஸத்துவகுண எழுச்சியின் அடையாளங்கள்.

8.4. ஸத்வம் வெண்மையானது. தர்மத்தில் பிரீதியை எப்பொழுதும் உண்டாக்குவது. நல்லதில் சிரத்தையை வளர்த்து தீயதில் சிரத்தையை விலக்குவது.

8.6. ராஜஸம் சிவப்பு வர்ணமெனப்படும். இது அப்ரீதியை அத்புதமாய் வளர்க்கும். அப்ரீதி எப்பொழுதுமே நிச்சயமாய் துக்கத்துடன் கூடி நின்று வளர்வது.

प्रद्वेषोऽथ तथा द्रोहो मत्सरः दम्भ् एव च ।
उत्कण्ठा च तथा निद्रा श्रद्धा तत्र च राजसी ॥ ८.७ ॥

मानो मदस्तथा गर्वो राजसः किल जायते ।
प्रत्येतव्यं रजस्त्वेतै-ल्लक्षणैश्च विचक्षणैः ॥ ८.८ ॥

कृष्णवर्णं तमः प्रोक्तं मोहनं च विषादकृत् ।
आलस्यं च तथाऽज्ञानं निद्रा दैन्यं भयं तथा ॥ ८.९ ॥

विवादश्चैव कार्पण्यं कौटिल्यं रोष एव च ।
वैषम्यं वाऽति नास्तिक्यं परदोषानुदर्शनम् ॥ ८.१० ॥

प्रत्येतव्यं तमस्त्वेतै-र्लक्षणैः सर्वथा बुधैः ।
तामस्या श्रद्धया युक्तं परस्तापोपपादकम् ॥ ८.११ ॥

8.7. பகைமை, துரோகம், பொருமை, இடம்பம், பேராசை, உறக்கம், இவைபோன்றவற்றில் முனைப்பு;

8.8. அபிமானம், கொழுப்பு, கர்வம் ஆகியவை ராஜஸ குணத்தினின்று எழுபவை. அறிவாளிகளால் இவ் வடையாளங்களைக் கொண்டு ராஜஸ குணம் ஊகிக்கப்படும்.

8.9–11. தமோகுணம் கறுப்பு வர்ணமெனப்படும். அது மோகத்தையும் மனக்கலக்கத்தையும் வளர்ப்பது. சோம்பல், அஞ்ஞானம், தூக்கம், ஏழ்மை, பயம், சண்டை, நொய்மை, கபடம், கோபம், விஷமம், நாஸ்திகபுத்தி, பிறரிடம் குற்றங்காணுதல் ஆகிய அடையாளங்களால் புத்தி மான்கள் தமோகுணத்தை ஊகிக்கிருர்கள். தாமஸத்தில் முனைப்பு ஏற்பட்டால் அது பிறர்க்குத் துன்பத்தையே விளைப்பதாகும்.

सत्त्वं प्रकाशयितव्यं नियतव्यं रजः सदा।
संहर्तव्यं तमः कामं जनेन शुभमिच्छता ॥ ८. १२ ॥

अन्योन्याभिभवाच्चैते विरुध्यन्ति परस्परम्।
तथाऽन्योन्याश्रयाः सर्वे न तिष्ठन्ति निराश्रयाः ॥ ८. १३ ॥

श्रुतं तीर्थं पवित्रं च श्रद्धोत्पन्ना च राजसी।
निर्गतस्तत्र तीर्थे वै दृष्टं चैव यथा श्रुतम् ॥ ८. १८ ॥

स्नातस्तत्र कृतं कृत्यं दत्तं दानं च राजसम्।
स्थितस्तत्र कियत्कालं रजोगुण समावृतः ॥ ८. १९ ॥

रागद्वेषान्न निर्मुक्तः कामक्रोध-समावृतः।
पुनरेव गृहं प्राप्तो यथा पूर्वं तथा स्थितः ॥ ८. २० ॥

8.12. ஸத்வகுணத்தைப் பிரகாசப்படுத்தி வளர்க்க வேண்டும். ரஜோகுணத்தை எப்பொழுதும் அடக்க வேண்டும். நன்மையை விரும்பும் மக்கள் தமோகுணத்தை முற்றும் அழிக்க வேண்டும்.

8.13. இம்மூன்று குணங்களும் ஒன்றையொன்று அடக்குவதால் ஒன்றுக்கொன்று விரோதப்பட்டவைகளா யிருக்கும். என்றாலும் ஒன்றையொன்று விட்டுப்பிரிந்து நிற்காமல் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவைகளாகவே எல்லாம் இருக்கும். (குணங்களைப்பற்றி அறிவதாலேயே குணங்களை வென்றுவிட முடியாது.)

8.18.20. ஒரு புண்ணியக்ஷேத்திரம் மிகத் தூய்மை யானது என்று ஒருவன் கேள்விப்பட்டு அதில் ராஜஸசிரத்தையு டையவனாய் அந்த இடத்திற்குச் சென்று தான் கேட்டிருந்த பிரகாரம் அதைப்பார்த்து அங்கு ஸ்நானம் செய்து செய்ய வேண்டிய கிருத்தியங்களைச் செய்து ரஜோ குணத்துடன் தானம் முதலியவற்றையும் கொடுத்து ரஜோகுணம்மேலிட்ட வனாய் அங்கு சிறிது காலம் வசித்து விருப்புவெறுப்பு களினின்று விடுபடாதவனாய்க் காமக்குரோதங்களால் சூழப் பட்டவனாகவே தன் வீட்டுக்குத் திரும்பிவந்து முன் எப்படி யிருந்தானோ அப்படியே இருக்கிறான்.

श्रुतं च नानुभूतं वै तेन तीर्थं मुनीश्वर।
न प्राप्तं च फलं यस्मादश्रुतं विद्धि नारद ॥ ८. २१ ॥

निष्पापत्वं फलं विद्धि तीर्थस्य मुनिसत्तम।
कृषेः फलं यथा लोके निष्पन्नान्नस्य भक्षणम् ॥ ८. २२ ॥

एवं जित्वा रजः पूर्वं ततश्च तमसो जयः।
सत्त्वं च केवलं पुत्र तदा भवति निर्मलम् ॥ ८. ३६ ॥

व्यास उवाच—

इत्युक्तं नारदेनाऽथ मम सर्वं सविस्तरम्।
गुणानां लक्षणं सर्वं कार्यं चैव विभागशः ॥ ९. ३२ ॥

8.21. நாரதமுனிவரே! ஆகையால் அவனல் தீர்த்த மகிமை கேட்கப்பட்டிருப்பினும் அனுபவிக்கப்படவில்லை. கேள்வியின் பயன் அடையப்படாமையால் அது கேட்க படாதது போல்தான் என்று அறிய வேண்டும்.

8.22. முனிசிரேஷ்டரே! எப்படி உலகில் பயிர்த் தொழிலின் பயன் அதிலிருந்து விளைந்த உணவை உண்டு களிப்பதோ அப்படியே ஒரு புண்ணியக்ஷேத்திரத்திற்குப் போவதின் பயன் பாவம் நீங்குதல் என்று உணர வேண்டும்.

8.36. இம்மாதிரி (உண்மையை உணர்ந்து) முதலில் ரஜோகுணத்தை ஜயித்துப் பின்பு தமோகுணத்தை ஜயிக்க வேண்டும். மகனே! தனித்து நிற்கும் ஸத்துவம் தானகவே அப்பொழுது மாசற்றதாய்விடும்.

வியாஸர் கூறியது—

9.32. இவ்வாறு நாரதரால் குணங்களின் லக்ஷணமும் செயலும் பாகுபடுத்தி விரிவாக எனக்கு உரைக்கப்பட்டது.

आराध्या परमा शक्तिर्यया सर्वमिदं ततम् ।
सगुणा निर्गुणा चैव कार्यभेदे सदैव हि ॥ ९. ३३ ॥

अकर्ता पुरुषः पूर्णो निरीहः परमोऽव्ययः ।
करोत्येषा महामाया विमिश्रं सदसदात्मकम् ॥ ९. ३४ ॥

सा चैव कारणं राजन् जगतः परमेश्वरी ।
समाराधय तां भूप कुरु यज्ञं जनाधिप ॥ ९. ३८ ॥

पूजनं परया भक्त्या तस्या एव विधानतः ।
महालक्ष्मी-र्महाकाली तथा महासरस्वती ॥ ९. ३९ ॥

9.33. எந்தப் பராசக்தியால் இவ்வுலகம் முழுதும் வியாபிக்கப்பட்டுள்ளதோ அவளை ஆராதிக்கவேண்டும். அவளே நிர்க்குண ஸ்வரூபியாயும், காரியபேதத்தால் ஸகுண ஸ்வரூபியாயும் எப்பொழுதும் உள்ளவள்.

9.34. பரிபூர்ணனும் மாறுபாடற்றவனும், எதிலும் பற்றற்றவனும் உள்ள பரமபுருஷன் எதையும் செய்வதில்லை. மகாமாயையாகிய இவளே காரிய காரணப் பிரபஞ்சமனைத்தையும் சிருஷ்டிக்கிறாள்.

9.38. அரசே! பரமேசுவரியாகிய அவளே உலகிற்குக் காரணம். மக்களை ஆளும் பூபாலா! யக்ஞம் செய்து அவளையே ஆராதிப்பாயாக.

9.39. விதிப்படி பரமபக்தியுடன் அவளுடைய பூஜையைச் செய்தல் வேண்டும். மஹாலக்ஷ்மியும் மஹாகாளியும் மஹாஸரஸ்வதியும் அவளே.

ददाति वांछितानर्थान् दुर्लभानपि सर्वथा ।
ऐ ऐ इति भयार्तेन दृष्ट्वा व्याघ्रादिकं वने ॥ ९. ४३ ॥

बिन्दुहीनमपीत्युक्तं वांछितं प्रददाति वै ।
तत्र सत्यव्रतस्यैव दृष्टान्तो नृपसत्तम ॥ ९. ४४ ॥

प्रत्यक्ष एव चास्माकं मुनीनां भावितात्मनाम् ।
ब्राह्मणानां समाजेषु तस्योदाहरणं बुधैः ॥
कथ्यमानं मया राजञ्छ्रुतं सर्वं सविस्तरम् ॥ ९. ४५ ॥

इति श्रीदेवीभागवते तृतीयस्कन्धे नवमोऽध्यायः ॥

॥ गुणविज्ञानकथनं समाप्तम् ॥

9.43–44. விரும்பப்பட்ட பொருள்கள் அடைதற்கரியவையாயினும் அவற்றை (அடியார்க்கு) அவள் எவ்வகையினும் அளிப்பாள். வனத்தில் புலி முதலியவற்றைக் கண்டு பயத்தால் நடுங்கி 'ஐ ஐ' என்று அனுஸ்வார பிந்து இல்லாமல் உச்சரித்த ஒருவனுக்கு (ஐம் என வாக்பவ பீஜ மந்திரத்தை உச்சரித்ததாய்க்கொண்டு) அவன் மனதின் விருப்பத்தை தேவி அளித்தாள். அரச சிரேஷ்டரே! இவ் விஷயத்தில் ஸத்யவிரதனுடைய உதாரணம் உளது.

9.45. அரசே! முனிவர்களாயும் பிரம்மபாவனையிற் சிறந்தவர்களாயுமுள்ள பிராம்மண ஸமாஜங்களில் அந்த ஸத்யவிரதனுடைய உதாரணம் புத்திமான்களால் கூறப்பட்டு என்னால் நேரில் முழுதும் விரிவாய்க் கேட்கப் பட்டுள்ளது.

இங்ஙனம் தேவீபாகவதத்தில் மூன்ருவது
ஸ்கந்தத்தில் ஒன்பதாவது அத்தியாயம் முற்றும்.

குணவிக்ஞான வர்ணனை முற்றும்.

॥ सत्यव्रताख्यानम् ॥ १२ ॥

जनमेजय उवाच—

कोऽसौ सत्यव्रतो नाम ब्राह्मणो द्विजसत्तमः ।
विस्तरेण वदस्वाद्य कथामेतां मनोरमाम् ॥ १०.१ ॥

व्यास उवाच—

एकदाऽहं कुरुश्रेष्ठ कुर्वंस्तीर्थाटनं शुचि ।
संप्राप्तो नैमिशारण्यं पावनं मुनिसेवितम् ॥ १०.६ ॥

कथाप्रसंग एवासीत् तत्र विप्रसमागमे ।
जमदग्निस्तु पप्रच्छ मुनीनेवं समस्थितः ॥ १०.८ ॥

12. ஸத்தியவிரதன் கதை

ஜனமேஜயன் கூறியது—

10.1. இந்த ஸத்தியவிரதன் என்ற பிராம்மணேத்தமன் யார்? அவருடைய மனதிற்கினிய கதையை விரிவாய்க் கூறியருளும்.

வியாஸர் கூறியது—

10.6. குருசிரேஷ்டரே! பரிசுத்தமான தீர்த்தங்களை தரிசித்துக்கொண்டு நான் செல்லுகையில் ஒரு சமயம் முனிவர்களால் சேவிக்கப்பட்டதும் புண்ணியம் மிக்கதுமான நைமிசாரணியத்தை யடைந்தேன்.

10.8. அங்கு பிராம்மண சமாஜத்தில் கதை நிகழ்ந்துகொண்டிருந்தது. அப்பொழுது அவ்விடத்தில் வீற்றிருந்த ஜமதக்னி முனிவர்களைப் பின்வருமாறு வினவினர்.

जमदग्निरुवाच—

सन्देहोऽस्ति महाभागा मम चेतसि तापसाः ।
ब्रह्मा विष्णुस्तथा रुद्रो मघवा वरुणोऽनलः ॥ १०. ९ ॥

आराधनीयतमः कोऽत्र वांछितार्थ-फलप्रदः ।
सुख-सेव्यश्च सततं चाऽऽशुतोषश्च मानदाः ॥ १०. ११ ॥

एवं प्रश्ने कृते तत्र लोमशो वाक्यमब्रवीत् ॥ १०. १२ ॥

लोमश उवाच—

सेवनीयतमा शक्तिः सर्वेषां शुभमिच्छताम् ।
स्मृता चोच्चारिता देवी ददाति किल वांछितम् ॥ १०. १५ ॥

इतिहासं प्रवक्ष्यामि शृण्वन्तु मुनयः शुभम् ।
अक्षरोच्चारणादेव यथा प्राप्तं द्विजेन वै ॥ १०. १७ ॥

ஜமதக்னி கூறியது—

10.9-11. மகாபாக்கியசாலிகளான தபஸ்விகளே! என் மனதில் ஒரு சந்தேகம் உளது. பிரம்மா, விஷ்ணு, ருத்திரர், இந்திரன், வருணன், அக்னி என்ற தேவர்களில் விரும்பிய பொருளேயும் பயனேயும் அளிப்பவரும், எப்பொழுதும் எளிதில் பூஜிக்கக்கூடியவரும், விரைவில் சந்தோஷித்து அனுக்கிரகிப்பவரும், ஆராதிப்பதற்குச் சிறந்தவரும் யார்?

10.12. இங்ஙனம் கேள்வி கேட்கப்பட்டதும் அங்கு லோமசர் பின்வருமாறு பதிலளித்தார்.

லோமசர் கூறியது—

10.15. நன்மையை விரும்பும் எல்லோராலும் பூஜித்தற்குச் சிறந்தவள் பராசக்தி. நினைத்தாலும் துதித்தாலும் தேவியானவள் விரும்பியதை அளிப்பாள் என்பது பிரசித்தம்.

10.17. மங்களமானதும் உண்மையில் நிகழ்ந்தது மான ஒரு வரலாற்றைக் கூறுகிறேன். முனிவர்கள் செவி சாய்க்கட்டும்.

कोसलेषु द्विजः कश्चिद्देवदत्तेति विश्रुतः ।
कालेन कियता तस्य भार्या रूपवती सती ॥ १०. ५४ ॥

शुभेऽह्नि सुषुवे पुत्रं रोहिणी रोहिणीयुते ।
उतथ्य इति पुत्रस्य कृतं नाम पुराविदा ॥ १०. ५५ ॥

स चाऽष्टतमे तथा वर्षे शुभे वै शुभवासरे ।
तस्योपनयनं कर्म चकार विधिवत्पिता ॥ १०. ५६ ॥

वेदमध्यापयामास गुरुस्तं वै व्रते स्थितम् ।
नोच्चचार तथोतथ्यः संस्थितो मुग्धवत्तदा ॥ १०. ५८ ॥

एवं कुर्वन् सदाभ्यासं जातो द्वादशवार्षिकः ।
न वेद विधिवत्कर्तुं सन्ध्यावन्दनकं विधिम् ॥ १०. ५९ ॥

10.54–55. கோஸல நாட்டில் தேவதத்தன் என்று பெயர் பெற்ற ஒரு பிராம்மணன் இருந்தான். நாளடைவில் ஒரு நல்லநாளில் அவனுடைய அழகிய உத்தமியான மனைவி ரோகிணி என்பவள் ரோஹிணி நக்ஷத்திரத்தில் ஒரு புத்திரனைப் பெற்றாள். அந்தப்புத்திரனுக்கு உதத்தியன் என அறிஞர்களால் பெயரிடப்பட்டது.

10.56. சுபமான எட்டாவது வயதில் ஒரு நல்ல முகூர்த்தத்தில் விதிப்படி அவனுடைய பிதா அவனுக்கு உபநயன கர்மாவைச் செய்வித்தார்.

10.58. பிரம்மசரிய விரதத்தைமேற்கொண்ட உதத்தியனுக்கு குரு வேதத்தை அத்தியயனம் செய்விக்க ஆரம்பித்தார். ஆனால் அவன் மூடனைப்போல் வேதத்தை உச்சரிக்க மாட்டாதவனாயிருந்தான்.

10.59. பன்னிரண்டு வருஷம் ஆயினும் வேதாப்பியாஸம் செய்த பின்னும் ஸந்தியாவந்தனம் கூட முறைப்படி செய்வதற்கு அவன் அறியவில்லை.

निन्दितोऽथ जनैः कामं पितृभ्यामथ बान्धवैः ।
वैराग्यमगमद्विप्रो जगाम वनमप्यसौ ॥ १०. ६२ ॥

गंगातीरे शुभे स्थाने कृत्वोटजमनुत्तमम् ।
वन्यां वृत्तिच संकल्प्य स्थितस्तत्र समाहितः ॥ १०. ६४ ॥

नियमं च परं कृत्वा नासत्यं प्रब्रवीम्यहम् ।
स्थितस्तत्राश्रमे रम्ये ब्रह्मचर्यव्रते हि सः ॥ १०. ६५ ॥

न वेदाध्ययनं किंचिज्जानाति न जपं तथा ।
ध्यानं न देवतानां च न चैवाराधनं तथा ॥ ११. १ ॥

सत्यं ब्रूते स्थितस्तत्र नानृतं वदते पुनः ।
जनैः सत्यतपा नाम कृतमस्य द्विजस्य वै ॥ ११. ७ ॥

10.62. பெற்ருேர்களாலும் உறவினர்களாலும் மற்றவர்களாலும் வெகுவாய் நிந்திக்கப்பட்டு வெறுப்படைந்த அவன் காட்டிற்குச் சென்றுவிட்டான்.

10.64. கங்கைக்கரையில் மங்களமான இடத்தில் சிறந்ததொரு குடிசையைப் போட்டுக்கொண்டு வனத்தில் கிடைக்கக்கூடிய பொருள்களால் வாழ்க்கையை நடத்துவதாய்த் தீர்மானித்துக்கொண்டு மனதையடக்கி அங்கேயே இருக்கலாஞன்.

10.65. பிரம்மசரிய விரதம் பூண்ட அவன் அவ்வழகிய ஆசிரமத்திலிருக்கையில் 'நான் பொய் சொல்லாமலிருப்பேன்' என்ற திடமான நியமத்தைக் கைக்கொண்டான்.

11.1. அவனுக்கு வேதாத்தியயனமில்லே, ஜபமோ தியானமோ செய்யத் தெரியாது, தேவதைகளே ஆராதிக்கும் முறையும் தெரியாது.

11.7. பொய்யே சொல்லாமல் எப்பொழுதும் ஸத்தியத்தைப் பேசுவதைக் கண்ட ஜனங்களால் அந்தப் பிராம்மணன் ஸத்தியதபஸ்வி அல்லது ஸத்தியவிரதன் என அழைக்கப்பட்டான்.

नाहितं कस्यचित्कुर्यान्न तथाऽविहितं क्वचित् ।
सुखं स्वपिति तत्रैव निर्भयश्चिन्तयन्निति ॥ ११. ८ ॥

दैवेनाहं कृतो मूर्खो नान्योऽत्र कारणं मम ।
प्राप्य चैवोत्तमं जन्म वृथा जातं मयाधुना ॥ ११. १० ॥

न वै विद्या मया दत्ता पूर्वजन्मनि निर्मला ।
तेनाहं कर्मयोगेन शठोऽस्मि च द्विजाधमः ॥ ११. १३ ॥

न च तीर्थे तपस्तप्तं सेविता न च साधवः ।
न द्विजाः पूजिता द्रव्यैस्तेन जातोऽस्मि दुष्टधीः ॥ ११. १४ ॥

11.8. அவன் யாருக்கும் தீங்கிழைக்கமாட்டான்; தகாத காரியத்தை ஒரு பொழுதும் செய்யமாட்டான்; சிறிதும் பயமில்லாமல் சுகமாய்த் தூங்குவான்.

11.10. ‘தெய்வம் என்னை மூடனுகச் செய்து விட்டது; இதற்கு வேறு எவரும் காரணமல்லர்; உத்தம மான பிறவி கிடைத்தும் இப்பொழுது என் பிறப்பு வீணுகி விட்டது.

11.13. ‘முன் பிறவியில் மாசற்ற கல்வி என்னுல் பிறருக்கு அளிக்கப்படவில்லை. அந்தக் கர்மத்தின் பயனுய் இப்பொழுது பிராம்மணர்களில் கடையனுய் மூர்க்கனுய் இருக்கிறேன்.

11.14. ‘புண்ணியக்ஷேத்திரத்தில் நான் தவஞ் செய்யாமலும் ஸாதுக்களைச் சேவிக்காமலும், பிராம்மணர் களைப் பொருள்கொண்டு பூஜிக்காமலும் (முற்பிறவியில்) இருந்திருக்க வேண்டும். அதனுல் இப்பொழுது புத்தி யில்லாதவனுய்ப் பிறந்துள்ளேன்.’

एवं स्थितस्य तु वने विमलोदके वै
वर्षाणि तत्र नव पंच गतानि कामम् ।
नाऽऽराधनं न च जपं न विवेद मन्त्रं
कालातिवाहन-मसौ कृतवान् वने वै ॥ ११. २१ ॥

जानाति तस्य विततं व्रतमेव लोकः
सत्यं वदत्यपि मुनिः किल नाम जातम् ।
जातं यशश्च सकलेषु जनेषु कामं
सत्यव्रतोऽयमनिशं न मृषाभिभाषी ॥ ११. २३ ॥

तत्रैकदा तु मृगयां रममाण एव
प्राप्तो निषाद-निशटो धृतचापबाणः ।
क्रीडन्वनेऽति-विपुले यमतुल्यदेहः
क्रूराकृतिर्हनन-कर्मणि चातिदक्षः ॥ ११. २४ ॥

11.21. என்றிவ்வாறு எண்ணிக்கொண்டு இவன் பரிசுத்தமான நீருள்ள வனத்திலிருந்து வருகையில் பதினைன்கு வருஷங்கள் கழிந்துவிட்டன. பூஜையோ, ஜபமோ மந்திரமோ எதையும் அவன் அறியவில்லை. காலத்தை மட்டும் வனத்தில் கழித்தவனானன்.

11.23. 'இந்த முனிவர் ஸத்தியத்தையே பேசும் விரதமுடையவர்' என்ற இவருடைய புகழை மட்டும் பரவலாக உலக மக்கள் அறிந்தனர். 'இவர் ஸத்தியவிரதர். இவர் ஒருபொழுதும் பொய் பேசாதவர்' என்ற கீர்த்தி எல்லா ஜனங்களிடம் நன்ருய்ப் பரவியிருந்தது.

11.24. ஒரு சமயம் ஒரு கொடிய வேடன் வில்லையும் அம்பையும் தாங்கியவனாய் வேட்டையாடிக் கொண்டு அங்கு வந்து சேர்ந்தான். அவன் யமனைப்போல் தேகமுடையவனாயும் குரூரமான வடிவுடையவனாகவும், கொலைத் தொழிலில் மிக்க வல்லவனாயுமிருந்தான்.

तेनातिकृष्टेन शरेण विद्धः
    कोलः किरातेन धनुर्धरेण ।
पलायमानो भयविह्वलश्च
    मुनेः समीपं विद्रुतो जगाम ॥ ११. २५ ॥

अग्रे व्रजन्तं रुधिरार्द्रदेहं दृष्ट्वा मुनिः सूकरमाशु विद्धम् ।
दयाभिवेशादतिकम्पमानः सारस्वतं बीज-मथोच्चचार
॥ ११. २६ ॥

अज्ञातपूर्वं च तथाऽश्रुतं च दैवान्मुखे वै समुपागतं च ।
न ज्ञातवान् बीज-मसौ विमूढो ममज्ज शोके स मुनिर्महात्मा ।
॥ ११. २७ ॥

कोलः प्रविश्याऽऽश्रममण्डलं तद्गतो निकुंजे प्रविलीय गूढम् ।
अप्राप्त-मार्गो दृढनिर्विण्ण-चेताः प्रवेपमानः शरपीडितत्वात् ।
॥ ११. २८ ॥

11.25. வில்லைத் தாங்கிய அந்த வேடனால் மிகவும் வேகமாய் விடப்பட்ட அம்பினால் அடிபட்ட ஒரு பன்றி விரைந்தோடி பயத்தால் சக்தியிழந்து முனிவனிடம் வந்தது.

11.26. தன் முன்னிலையடைந்ததும் இரத்தத்தினால் நனைந்த உடலையுடையதும் வேகமாய் அடிப்பட்டதுமான அந்தப் பன்றியைக் கண்டு இரக்கம் மேலிட்டுத் தன்னுடலும் நடுங்க (ஐயோ ! என்று சொல்லத் தொடங்கி அது நன்ருய்ச் சொல்லவராமல் ஐ ஐ என்ற) ஸாரஸ்வத மந்திர பீஜாக்ஷரத்தை வாய்விட்டுக் கூறலானான்.

11.27. முன்னால் அறியப்படாததும் கேட்கப்படாததும் தெய்வவசமாய்த் தன் வாயில் வந்ததுமான அச்சொல்லை அவன் அறிவின்மையால் பீஜமந்திரம் என்று அறியவில்லை. மகாத்மாவாகிய அவன் துக்கத்திலாழ்ந்தான்.

11.28. ஆசிரமமண்டலத்தில் புகுந்த அந்தப்பன்றி அங்கிருந்து எங்கும் போக வழியில்லாமல் பாணத்தால் அடிபட்டதால் நடுங்கிக்கொண்டு துன்பத்தால் உயிரில் நம்பிக்கையிழந்து அருகாமையிலிருந்த ஒரு புதரில் ஒளிந்துகொண்டது.

ततः क्षणापाकरणान्तकृष्टं चापं दधानोऽतिकरालदेहः ।
प्राप्तस्तदन्ते स च मृग्यमाणो निषादराजः किल काल एव
॥ ११. २९ ॥

दृष्ट्वा मुनिं तत्र कुशासने स्थितं नाम्ना तु सत्यव्रत-
मद्वितीयम् ।
व्याधः प्रणम्य प्रमुखे स्थितोऽसौ पप्रच्छ कोलः क्व गतो
द्विजेश ॥ ११. ३० ॥

हितं कथं स्यादुभयोर्विरुद्धयोस्तदुत्तरं किं न यथा मृषा वचः ।
विचारयन् वाडव धर्मसंकटे न प्राप वक्तुं वचनं यथोचितम्
॥ ११. ३७ ॥

11.29. நொடிப்பொழுதில் நாணைக் காதுவரை இழுத்துப்பிடித்த வில்லுடன் முரட்டு தேகம் படைத்த வேட்டுவ அரசன் யமனைப்போல் அப்பன்றியைத் தேடிக் கொண்டு அங்கு வந்தான்.

11.30. தர்ப்பாஸனத்தில் தனிமையில் வீற்றிருந்த ஸத்தியவிரதன் என்று பெயர் படைத்த அம்முனிவனைக் கண்டதும் வேடன் வணங்கி முன் நின்று கொண்டு 'பிராம் மணசிரேஷ்டரே! பன்றி எங்கு சென்றது?' என்று கேட் டான்.

11.37. '(உண்மையைச் சொல்வது சொல்லாம லிருப்பது என்று) ஒன்றுக்கொன்று முரண்பாடான இரண் டினுள் எந்த பதில் ஹிதமானது? எப்படி சொன்னால் வார்த்தை பொய்யற்றதாயிருக்கும்?' என்று தனக்குள்ளே ஆலோசித்து அந்த பிராம்மணன் தர்மஸங்கடமான நிலையில் பொருத்தமான முறையில் பதில் சொல்ல வார்த்தை வாயில் வரவில்லை.

वाणाहतं वीक्ष्य दयान्वितं च कोलं तदन्तो समुदाहृतं वचः ।
तेन प्रसन्ना निजबीजतः शिवा विद्यां दुरापं प्रददौ च तस्मै
॥ ११. ३८ ॥

बीजोच्चारणतो देव्या विद्या प्रस्फुरिताऽखिला ।
वाल्मीकेश्च यथा पूर्वं तथा ह्यभवत्कविः ॥ ११. ३९ ॥

तमुवाच द्विजो व्याधं सन्मुखस्थं धनुर्धरम् ।
सत्यकामस्तु धर्मात्मा श्लोकमेकं दयापरः ॥ ११. ४० ॥

या पश्यति न सा ब्रूते या ब्रूते सा न पश्यति ।
अहो व्याध स्वकार्यार्थिन् किं पृच्छसि पुनः पुनः ॥ ११. ४१ ॥

11.38. பாணத்தால் அடிபட்ட பன்றியைக்கண்டு அதனிடம் தயையுடன் கூடியவனுய் அவன் உச்சரித்த 'ஐஐ" என்ற தனது பீஜமந்திரத்தினுல் பிரீதியடைந்த பரதேவதை அடைதற்கரிய வித்தையை அவனுக்கருளினுள்.

11.39. தேவி பீஜத்தை உச்சரித்ததால் எல்லா வித்தையும் தானே அவனுக்கு விளங்கிவிட்டது. முன்பு வால்மீகி கவியானதுபோல் அவன் கவியாகிவிட்டான்.

11.40. ஸத்திய காமரும் தர்மாத்மாவாகவும் தயைநிறைந்தவருமாகிய அந்த பிராம்மணன் வில்லேந்திக் கொண்டு தன் முன் நின்ற வேடனை நோக்கி ஒரு சுலோகத்தைச் சொன்னுர்.

11.41. '(யா பச்யதி ந ஸா ப்ரூதே, யா ப்ரூதே ஸா ந பச்யதி | அஹோ வ்யாத ஸ்வகார்யார்த்தின் கிம் ப்ருச்சஸி புன: புன: ||) எவள் பார்க்கிருளோ அவள் சொல்வதில்லே. எவள் சொல்லுகிருளோ அவள் பார்ப்பதில்லே. சொந்தக் காரியத்தில் கண்ணுன வேடனே! மேலும் மேலும் என்ன கேட்கிருய்?—கண்டவர் விண்டதில்லே; விண்டவர் கண்டதில்லே'.

11.41. 'எவள் பார்க்கிருளோ அவள் சொல்வதில்லே" என்றதால் எந்தப் பரதேவதை இதையெல்லாம் ஸாக்ஷியாகப் பார்த்துக்கொண்டிருக்கிருளோ அவள் சொல்வதில்லே அவள்தான் அப்பன்றியை மறைத்து வைத்திருக்கிருள்.

इत्युक्तस्तु तदा तेन गतोऽसौ पशुहा पुनः ।
निराशः सूकरे तस्मिन् परावृत्तो निजालये ।। ११. ४२ ।।

ब्राह्मणस्तु कविर्जातः प्राचेतस इवापरः ।
प्रसिद्धः सर्वलोकेषु नाम्ना सत्यव्रतो द्विजः ।। ११. ४३ ।।

इति राजन् श्रुतं तत्र मया मुनिसमागमे ।
लोमशस्य मुखात्कामं देवीमाहात्म्यमुत्तमम् ।। ११. ५७ ।।

इसि संचिन्त्य राजेन्द्र कर्तव्यं च सदाऽर्चनम् ।
भक्त्या परमया देव्याः प्रीत्या च पुरुषर्षभ ।। ११. ५८ ।।

।। इति तृतीयस्कन्धे एकादशोऽध्यायः ।।

।। सत्यव्रताख्यानं समाप्तम् ।।

11.42. பிராணிவதை செய்யும் அவ்வேடன் அவ் வார்த்தையைக் கேட்டுப் பன்றியைப் பற்றிய ஆசையை யொழித்துத் தன்னிருப்பிடம் சென்றுன்.

11.43. பிராம்மணன் இன்னெரு வால்மீகியைப் போல் கவியாகி ஸத்தியவிரதன் என்ற பெயரால் எல்லா உலகங்களிலும் பிரசித்தனுய் விளங்கினுன்.

11.57. அரசே! முனிவர்களின் சமாஜத்தில் லோமச மஹரிஷியின் வாயிலாக இவ்வரலாறும் உத்தமமான தேவி யின் மாகாத்மியமும் என்னுல் கேட்கப்பட்டது.

11.58. அரசசிரேஷ்டரே! மனிதர்களில் சிறந்தவரே! இதை நன்கு சிந்தித்து தேவியிடம் உத்தமமான பக்தி யுடனும் உள்ளன்புடனும் எப்பொழுதும் அர்ச்சனை செய்தல் வேண்டும்.

இங்ஙனம் மூன்ருவது ஸ்கந்தத்தில்

பதினேராவது அத்தியாயம் முற்றும்.

ஸத்தியவிரதன் கதை முற்றும்.

॥ यागविधानम् ॥ १३ ॥

राजोवाच—

वद यज्ञविधिं सम्यग्देव्यास्तस्याः समन्ततः ।
श्रुत्वा करोम्यहं स्वामिन् यथा-शक्ति ह्यतन्द्रितः ॥ १२. १ ॥

व्यास उवाच—

देशः कालस्तथा द्रव्यं मात्राश्च ब्राह्मणास्तथा ।
श्रद्धा च सात्त्विकी यत्र तं यज्ञं सात्त्विकं विदुः १२. ६ ॥

द्रव्य-शुद्धिः क्रियाशुद्धि-र्मन्त्रशुद्धिश्च भूमिप ।
भवेद्यदि तदा पूर्णं फलं भवति नाऽन्यथा ॥ १२. ७ ॥

अन्यायोपार्जितेनैव द्रव्येण सुकृतं कृतम् ।
न कीर्तिरिह लोके च परलोके न तत्फलम् ॥ १२. ८ ॥

13. யாகவிதானம்

அரசன் கூறியது—

12.1. குருதேவரே! தேவீயாகத்தின் முறையை முழுதும் கூறியருளுதல் வேண்டும். அதைக்கேட்டு நான் என்னுலியன்றவரை சோம்பலின்றி யாகத்தைச் செய் கின்றேன்.

வியாஸர் கூறியது—

12.6. இடம் காலம் பொருள் மந்திரங்கள் பிராம் மணர்கள் எல்லாம் ஒழுங்காயமைந்து சிரத்தையும் ஸாத் விகமான தாயிருந்தால் அந்த யக்ஞத்தை ஸாத்விகம் எனக் கூறுவர்.

12.7. அரசே! பொருள் சுத்தமாயும் கிரியை சுத்தமாயும் மந்திரம் பிழையின்றி சுத்தமாயும் இருந்தால் அப்பொழுது பூர்ணமான பயன்கிட்டும். இன்றேல் கிட்டாது.

12.8. அநியாய வழியில் சம்பாதித்த பொருளேக் கொண்டு நல்ல காரியம் செய்தாலும் அதனுல் இவ்வுலகிலும் புகழில்லே மேலுலகிலும் ஒரு பயனும் ஏற்படாது.

प्रत्यक्षं तव राजेन्द्र पाण्डवैस्तु मखः कृतः।
राजसूयः क्रतुवरः समाप्तवरदक्षिणः ॥ १२. १० ॥

कृत्वा यज्ञं सुसम्पूर्णं मासमात्रेण पाण्डवैः।
प्राप्तं महत्तरं कष्टं वनवासश्च दारुणः ॥ १२. १२ ॥

पीडनं चैव पांचाल्यास्तथा द्यूते पराजयः।
वनवासो महत्कष्टं क्व गतं मखजं फलम् ॥ १२. १३ ॥

सत्यवादी तथा राजन् धर्मपुत्रो युधिष्ठिरः।
द्रौपदी च तथा साध्वी तथाऽन्येप्यनुजा शुभाः ॥ १२. ३२ ॥

कुद्रव्ययोगाद्वैगुण्यं समुत्पन्नं मखेऽथवा।
साभिमानैः कृताद्वापि दूषणं समुपस्थितम् ॥ १२. ३३ ॥

12.10. அரசசிரேஷ்டரே! (உம்முடைய மூதாதையராகிய) பாண்டவர்களால் சிறந்த யாகமாகிய ராஜசூயம் செய்யப்பட்டது உமக்கு நன்ருய்த் தெரியும். அது சிறந்த தக்ஷிணைகளுடன் முடிவுற்றது.

12.12. யாகத்தை நன்ருகப் பூர்த்தி செய்த ஒரு மாதத்திற்குள் பாண்டவர்களால் மஹத்தான கஷ்டமும் கொடிய வனவாச துக்கமும் அடையப்பட்டது.

12.13. பாஞ்சாலியுற்ற பீடை, அவ்வாறே சூதாட்டத்தில் தோல்வி, வனவாசம், இவை போன்ற மஹத்தான கஷ்டம் அடையப்பட்டது. யாகத்தினுடைய பயன் எங்கே போயிற்று?

12.32. அரசே! தர்மபுத்திரராகிய யுதிஷ்டிரர் ஸத்தியவாதி; துரௌபதி மகாபதிவிரதை; தம்பிமார்களும் நல்லவர்கள்.

12.33. கெட்டவர்களிடமிருந்து சேகரித்த பொருள் யாகத்தில் உபயோகிக்கப்பட்டதால் பயன் விபரீதமாயிற்று. அல்லாமலும் அபிமானத்துடன் செய்யப்பட்டதாலும் தோஷம் ஏற்பட்டது.

मुनीनां मोक्षकामानां विरक्तानां महात्मनाम् ।
मानसस्तु स्मृतो यागः सर्वसाधनसंयुतः ॥ १२. ३९ ॥

अन्येषु सर्वयज्ञेपु किंचिन्न्यूनं भवेदपि ।
द्रव्येण श्रद्धया वाऽपि क्रियया ब्राह्मणैस्तथा ॥ १२. ४० ॥

प्रथमं तु मनः शोध्यं कर्तव्यं गुणवर्जितम् ।
शुद्धे मनसि देहो वै शुद्ध एव न संशयः ॥ १२. ४२ ॥

वेदिं च विशदां तत्र मनसा परिकल्पयेत् ।
अग्नयोऽपि तथा स्थाप्या विधिवन्मनसा किल ॥ १२. ४५ ॥

गार्हपत्यस्तदा प्राणोऽपानश्चाहवनीयकः ।
दक्षिणाग्निस्तथा व्यानः समानश्चावसथ्यकः ॥ १२. ४९ ॥

सभ्योदानः स्मृता ह्येते पावकाः परमोत्कटाः ।
द्रव्यं च मनसा भाव्यं निर्गुणं परमं शुचि ॥ १२. ५० ॥

12.39. வைராக்கிய சீலர்களும் மகாத்மாக்களும் மோக்ஷத்தில் விருப்பமுள்ளவர்களுமான முனிவர்களுடைய யாகம் மானஸீகம் என்றும் அது எல்லா ஸாதனங்களுடனும் பூர்ணமானதென்றும் கூறப்படுகிறது.

12.40. மற்றவகையான எல்லா யாகங்களிலும் பொருளிலோ, சிரத்தையிலோ, கிரியையிலோ, பிராம்மணர் களிடத்திலோ ஏதாவது ஒருவகையில் குறையில்லாமலிராது.

12.42. முதலில் குணதோஷமில்லாமல் மனதைச் சுத்தப்படுத்திக் கொள்ளவேண்டும். மனது சுத்தமாய் விட்டால் தேகமும் சுத்தமே என்பதில் சந்தேகமில்லை.

12.45. மனதால் பரிசுத்தமான யாகமேடையைக் கற்பனை செய்து கொள்ளவேண்டும். விதிப்படி மானஸீக மாக அக்கினிகளையும் ஸ்தாபிக்கவேண்டும்.

12.49–50. பிராணனே கார்ஹபத்யாக்னியாகவும், அபானன் ஆஹவனீயாக்னியாகவும், வியானன் தக்ஷிணாக்னி யாகவும், ஸமானன் ஆவஸத்தியமாகவும், உதானன் ஸப் யாக்னியாகவும் கூறப்படுகின்றன. இவ்வக்கினிகள் மிகவும் சக்தி வாய்ந்தவை. தோஷமற்றதும் சுத்தமானதும் சிறந்தது மான திரவியமும் மனதால் பாவிக்கப்படவேண்டும்.

मन एव तदा होता यजमानस्तथैव तत् ।
यज्ञाधिदेवता ब्रह्म निर्गुणं च सनातनम् ॥ १२. ५१ ॥

फलदा निर्गुणा शक्तिः सदा निर्वेददा शिवा ।
ब्रह्मविद्याऽखिलाधारा व्याप्य सर्वत्र संस्थिता ॥ १२. ५२ ॥

तदुद्देशेन तद्द्रव्यं हुनेत्प्राणाग्निषु द्विजः ।
पश्चाच्चित्तं निरालम्बं कृत्वा प्राणानपि प्रभो ॥ १२. ५३ ॥

कुण्डलीमुखमार्गेण हुनेद् ब्रह्मणि शाश्वते ।
स्वानुभूत्या स्वयं साक्षात्स्वात्मभूतां महेश्वरीम् ॥
समाधिनैव योगेन ध्यायेच्चेतस्यनाकुलः ॥ १२. ५४ ॥

12.51. மனதே ஹோதாவும் யஜமானனும்; யக்ஞத்தின் அதிதேவதை ஸநாதனமான நிர்க்குணப் பிரம்மம்.

12.52. பலனையளிப்பவள் வைராக்கியத்தை வளர்ப்பவளாயும், நிர்க்குணவடிவினளாயும், அனைத்திற்கும் ஆதாரமாயும், எங்கும் வியாபித்து நிற்பவளாயும், பிரம்மவித்யா ஸ்வரூபிணியாயும் மங்கள வடிவினளாயும் உள்ள பராசக்தியே யாவாள்.

12.53—54. அரசே! அவளை மனதில் நினைந்து அவளுக்கர்ப்பணமாக அந்த திரவியத்தை பிராணக்கினிகளில் துவிஜன் ஹோமம் செய்ய வேண்டும். பின்பு சித்தத்தையும் பிராணன்களையும் பற்றற்றதாய்ச் செய்து அவற்றைக் குண்டலினீ சக்தியின் வாயிலாக என்றுமழியாத பிரம்மத்திடம் ஹோமம் செய்ய வேண்டும். தன்னுடைய ஆத்மாவாய்ப் பிரத்தியக்ஷமாய் விளங்கும் மஹேசுவரியைத் தனக்குத் தானகவே கண்டனுபவித்து ஒன்றுபட்ட மனதுடன் தியானித்து ஸமாதியில் நிலைபெற வேண்டும்.

सर्वभूतस्थमात्मानं सर्वभूतानि चात्मनि
यदा पश्यति भूतात्मा तदा पश्यति तां शिवाम् ।
दृष्ट्वा तां ब्रह्मविद् भूयात्सच्चिदानन्दरूपिणीम् ॥ १२. ५६ ॥

तदा मायादिकं सर्वं दग्धं भवति भूमिप ।
प्रारब्धकर्म मात्रन्तु यावद्देहं च तिष्ठति ॥ १२. ५७ ॥

जीवन्मुक्तस्तदा ज्ञातो मृतो मोक्षमवाप्नुयात् ।
कृतकृत्यो भवेत्तात यो भजेज्जगदम्बिकाम् ॥ १२. ५८ ॥

तस्मात्सर्वप्रयत्नेन ध्येया श्री भुवनेश्वरी ।
श्रोतव्याश्चैव मन्तव्या गुरुवाक्यानुसारतः ॥ १२. ५९ ॥

राजन्नेवं कृतो यज्ञो मोक्षदो नात्र संशयः ।
अन्ये यज्ञाः सकामास्तु प्रभवन्ति क्षयोन्मुखाः ॥ १२. ६० ॥

12.56. தன்னை எல்லா உயிர்களிடத்தும் எல்லா உயிர்களையும் தன்னிடத்தும் எப்பொழுது ஆத்மாவேயாகிவிட்ட அவன் காண்கிருனே அப்பொழுது மங்களஸ்வரூபியான பரதேவதையைக் காண்கிருன். ஸச்சிதானந்த ரூபிணியான அவளைக்கண்டு அவன் பிரம்மத்தையறிந்தவனுகிருன்.

12.57. அரசே! மாயையின் விளைவனைத்தும் அப்பொழுது எரிந்து போகின்றது. உடலுள்ளவரை பிராரப்த கர்மம் மட்டும் எஞ்சி நிற்கும்.

12.58. அவன் அப்பொழுது ஜீவன் முக்தனுகிருன். சரீரம் விழுந்தபின் விதேகமுக்தி எய்துகிருன். எவன் ஜகதம்பிகையை தியானிக்கின்ருனே அவன் பிறவிப்பயனை எய்தியவனுகிருன்.

12.59. ஆகையால் எல்லா வகையாலும் முயற்சி செய்து ஸ்ரீபுவனேசுவரியை தியானம் செய்ய வேண்டும். அவளைப்பற்றிக் கேட்கவும் வேண்டும். குருவாக்கியத்தின்படி சிந்திக்கவும் வேண்டும்.

12.60. அரசே! இவ்வாறு யாகம் செய்தால் அது மோக்ஷத்தை யளிப்பதாகும். அதில் சந்தேகமில்லை. மற்ற யாகங்கள் காமஸங்கல்பத்துடன் கூடியவையாதலால் அவை அழியும் பயனுடையவை.

तामसस्तु कृतः पूर्वं सर्पयज्ञस्त्वयाऽधुना ।
वैरं निर्वाहितं राजंस्तक्षकस्य दुरात्मनः ।। १२. ६३ ।।
देवी यज्ञं कुरुष्वाद्य विततं विधिपूर्वकम् ।
विष्णुना यः कृतः पूर्वं सृष्ट्यादौ नृपसत्तम ।। १२. ६५ ।।

राजोवाच—

हरिणा तु कथं यज्ञः कृतः पूर्वं पितामह ।
जगत्कारणरूपेण विष्णुना प्रभविष्णुना ।। १३. १ ।।

व्यास उवाच—

एकस्मिन् समये विष्णु-र्वैकुण्ठे संस्थितः पुरा ।
सुधासिन्धुस्थितं द्वीपं सस्मार मणिमण्डितम् ।। १३. २८ ।।
यत्र दृष्ट्वा महामाया मन्त्रश्चासादितः शुभः ।
स्मृत्वा तां परमां शक्तिं स्त्रीभावं गमितो यया ।। १३. २९ ।।

12.63. நீர் இதற்கு முன் செய்த ஸர்ப்பயாகம் தாமஸமானது. துராத்மாவான தக்ஷகனிடத்தில் பகையால் தூண்டப்பட்டதாய் அது இருந்தது.

12.65. அரச சிரேஷ்டரே! விஷ்ணுவால் சிருஷ்டியின் தொடக்கத்தில் முன்பு விதிபூர்வகமாயும் விரிவாயும் எந்த தேவீயக்ஞும் செய்யப்பட்டதோ அதை இப்பொழுது செய்யும்.

அரசன் கூறியது—

13.1. பிதாமகரே! ஜகத்காரணரூபியாயும் ஜயசீலராயும் ஸர்வவியாபகராயுமுள்ள ஹரியால் முன்பு எவ்வாறு யக்ஞும் செய்யப்பட்டது?

வியாஸர் கூறியது—

13.28-29. முன்னொரு சமயம் விஷ்ணுவானவர் வைகுண்டத்திலிருக்கையில் அமிர்தக்கடலின் நடுவிலுள்ள மணிமயமான துவீபத்தையும் மஹாமாயையாகிய பராசக்தியை தரிசித்ததையும் அவளால் தான் ஸ்திரீரூபமடையும்படி செய்யப்பட்டதையும் அவளிடம் சுபமான மந்திரோபதேசம் பெற்றதையும் மனதால் எண்ணினர்.

यज्ञं कर्तुं मनश्चक्रे अम्बिकाया रमापतिः ।
उत्तीर्य भुवनात्तस्मात्समाहूय महेश्वरम् ॥ १३. ३० ॥
ब्रह्माणं वरुणं शक्रं कुबेरं पावकं यमम् ।
वसिष्ठं काश्यपं दक्षं वामदेवं बृहस्पतिम् ॥ १२. ३१ ॥
सम्भारं कल्पयामास यज्ञार्थं चातिविस्तरम् ।
महाविभवसंयुक्तं सात्त्विकं च मनोहरम् ॥ १३. ३२ ॥
मण्डपं विततं तत्र कारयामास शिल्पिभिः ।
ऋत्विजो वरयामास सप्तविंशति-सुव्रतान् ॥ १३. ३३ ॥
चितिं चकारयामास वेदीश्चैव सुविस्तराः ।
प्रजेपु-र्ब्राह्मणा मन्त्रा देव्या बीजसमन्वितान् ॥ १३. ३४ ॥
जुहुवुस्ते हविः कामं विधिवत्परिकल्पिते ।
कृते तु वितते होमे वागुवाचाशरीरिणी ॥ १३. ३५ ॥

13.30—32. லக்ஷ்மீபதியானவர் அம்பிகையின் யக்ஞத்தைச் செய்ய விரும்பி வைகுண்டலோகத்திலிருந்து கிளம்பி மகேசுவரனையும், பிரம்மாவையும், வருணன், இந்திரன், குபேரன், அக்கினி, யமன் முதலிய தேவர்களையும், வசிஷ்டர், காசியபர், தக்ஷன், வாமதேவர், பிருஹஸ்பதி முதலியவர்களையும் அழைத்து யாகத்திற்கு வேண்டிய பொருள்களையெல்லாம் மனதிற்கினியதும் ஸாத்விகமுமான முறையில் விரிவாகவும் மிகுந்த வைபவத்துடனும் சேகரித்தார்.

13.33. சிற்பிகளைக்கொண்டு விசாலமான மண்டபத்தை அமைத்தார். நல்ல விரதம் பூண்டவர்களான இருபத்தேழு ரித்விக்குகளை வரித்தார்.

13.34. விசாலமான யாகமேடையில் சிதக்கினியைப் பிரதிஷ்டை செய்தார். தேவியின் பீஜாக்ஷரங்களுடன் கூடிய மந்திரங்களை பிராம்மணர்கள் ஜபித்தார்கள்.

13.35. விதிப்படிச் செம்மையாக அவர்கள் ஹவிஸ்ஸை ஹோமம் செய்தார்கள். விரிவாக ஹோமம் செய்யப்பட்ட பொழுது அசரீரி வாக்குப் பின்வருமாறு கூறிற்று.

त्वां जनाः पूजयिष्यन्ति वरदस्त्वं भविष्यसि ।
श्रयिष्यन्ति च देवास्त्वां दानवैरति पीडिताः ॥ १३. ४० ॥

शरण्य त्वं च सर्वेषां भविता पुरुषोत्तम ।
पुराणेषु च सर्वेषु वेदेषु विततेषु च ॥ १३. ४१ ॥

त्वं वै पूज्यतमः कामं कीर्तिस्तव भविष्यति ।
यदा यदा हि धर्मस्य ग्लानिर्भवति भूतले ॥
तदांशेनावतीर्याशु कर्तव्यं धर्मरक्षणम् ॥ १३. ४२ ॥

अवतारेषु सर्वेषु शक्तिस्ते सहचारिणी ।
भविष्यति ममांशेन सर्वकार्य-प्रसाधिनी ॥ १३. ४६ ॥

इति दत्त्वा वरान् वाणी विरराम खसम्भवा ।
समाप्य विधिवद्यज्ञं भगवान् हरि-रीश्वरः ॥
जगामानुचरैः सार्द्धं वैकुण्ठं गरुडध्वजः ॥ १३. ५५ ॥

13.40. 'உன்னை ஜனங்கள் பூஜிப்பார்கள். நீ வர தானம் செய்பவனாக ஆவாய். அசுரர்களால் மிகுந்த துன்பம் ஏற்படும் பொழுது தேவர்கள் உன்னை ஆசிரயிப் பார்கள்.

13.41–42. 'புருஷோத்தமனே! நீ எல்லோருக்கும் சரண்யனாக ஆவாய். வேதங்களிலும் எல்லாப்புராணங் களிலும் பூஜிக்கத்தக்கவர்களில் சிறந்தவனாக நீ விளங்கு வாய். தர்மத்திற்கு பூமியில் வாட்டமேற்படும் பொழுது உன்னுடைய அம்சத்தால் அவதாரம் செய்து விரைவில் தர்மத்தை ரக்ஷிப்பவனாக ஆவாய்.

13.46. 'எல்லா அவதாரங்களிலும் எல்லாக் காரியங் களையும் ஸாதிக்கவல்ல என்னுடைய அம்சமான சக்தி உன் னுடன் கூடவே வரும்.'

13.55. இங்ஙனம் வரதானத்தைக் கூறியபின் ஆகாய வாணி அடங்கிற்று. கருடத்வஜரான பகவான் ஹரி விதிப் படி யாகத்தைப் பூர்த்திசெய்துவிட்டுப் பரிவாரங்களுடன் வைகுண்டமேகினார்.

श्रुत्वा वाणीं परमविशदां व्योमजां श्रोत्ररम्यां
सर्वेषां वै प्रकृति विषये भक्तिभावश्च जातः।
चक्रुः सर्वे द्विजमुनिगणाः पूजनं भक्तियुक्ता-
स्तस्याः कामं निखिलफलदं चाऽऽगममोक्तं मुनीन्द्राः
॥ १३. ५९ ॥

॥ इति श्रीदेवी भागवते तृतीयस्कन्धे त्रयोदशोऽध्यायः ॥

॥ यागविधानं समाप्तम् ॥

13.59. முனிசிரேஷ்டர்களே! தெளிவானதும் செவிக்கினியதுமான ஆகாயவாணியைக் கேட்ட எல்லோருக்கும் பராசக்தியிடம் பக்திபாவனை ஏற்பட்டது. எல்லா பிராம்மணர்களும் முனிகணங்களும் பக்தியுடன் கூடி எல்லாப் பலன்களையும் அளிக்கும் அந்த தேவீ பூஜையை ஆகமங்களில் கூறிய முறைப்படிச் சிறப்பாய்ச் செய்தார்கள்.

இங்ஙனம் ஸ்ரீதேவீபாகவதத்தில் மூன்றுவது
ஸ்கந்தத்தில் பதின்மூன்றுவது அத்தியாயம்
முற்றும்.

யாகவிதானம் முற்றும்.

॥ सुदर्शन चरित्रम् ॥ १४ ॥

व्यास उवाच —

श्रृणु राजन् प्रवक्ष्यामि देव्याश्चरित-मुत्तमम् ।
इतिहास-पुराणंच कथयामि सुविस्तरम् ॥ १४. ३ ॥

कोसलेषु नृपश्रेष्ठः सूर्यवंशसमुद्भवः ।
पुष्पपुत्रो महातेजा ध्रुवसन्धिरिति स्मृतः ॥ १४. ४ ॥

धर्मात्मा सत्यसन्धश्च वर्णाश्रमहिते रतः ।
अयोध्यायां समृद्धायां राज्यं चक्रे शुचिव्रतः ॥ १४. ५ ॥

द्वे पत्न्यौ रूपसंपन्ने ह्यासतुः कामभोगदे ।
मनोरमा धर्मपत्नी सुरूपाऽति विचक्षणा ॥
लीलावती द्वितीया च साऽपि रूपगुणान्विता ॥ १४. ६ ॥

14. ஸுதர்சன சரித்திரம்

வியாஸர் கூறியது—

14.3. அரசே! இதிஹாஸ வடிவாயும் புராண வடிவாயுமுள்ள உத்தமமான தேவியின் சரித்திரத்தை விஸ்தாரமாகக் கூறுகிறேன், கேளும்.

14.4. கோஸல நாட்டில் சூரியவம்சத்திலுதித்தவனும் புஷ்பன் என்பவனுக்குப் புத்திரனும் மஹாதேஜஸ்வியுமான துருவஸந்தி எனப்பெயர்பெற்ற ஒரு சிறந்த அரசன் இருந்தான்.

14.5. அவன் தர்மாத்மா, ஸத்தியந்தவறுதவன், வர்ணாசிரமதருமங்களில் பிரியமுள்ளவன், பரிசுத்தமான விரதமுடையவன்; செல்வங்கள் நிறைந்த அயோத்தியில் அரசாண்டு வந்தான்.

14.9. அவனுக்கு காமபோகங்களையளிக்க வல்லவர்களும் அழகுமிக்கவர்களுமான இரண்டு மனைவிகளிருந்தனர். மனோரமா என்ற தர்மபத்னி ரூபத்திலும் திறமையிலும் சிறந்து விளங்கினாள். இரண்டாவது மனைவியான லீலாவதியும் குணவதியாகவும் அழகியாகவும் இருந்தாள்.

मनोरमा शुभे काले सुषुवे पुत्रमुत्तमम् ।
सुदर्शनाभिधं पुत्रं राजलक्षणसंयुतम् ॥ १४. ११ ॥

लीलावत्यपि तत्पत्नी मासेनैकेन भामिनी ।
सुषुवे सुन्दरं पुत्रं शुभे पक्षे दिने तथा ॥ १४. १२ ॥

तयोः सुदर्शनो ज्येष्ठो लीलावत्याः सुतः शुभः ।
शत्रुजित्संज्ञकः कामं चाटुवाक्यो बभूव ह ॥ १४. १७ ॥

एवं गच्छति काले तु ध्रुवसन्धिर्नृपोत्तमः ।
जगाम वनमध्येऽसौ मृगयाभिरतः सदा ॥ १४. २० ॥

उत्पपात ततः सिंहो नृपस्योपरि दारुणः ।
स नखैराहतो राजा पपात च ममार वै ॥ १४. २९ ॥

14.11. மனோரமா சுபவேளையில் உத்தமமான புத்திரனைப் பெற்றாள்; அவன் பெயர் ஸுதர்சனன்; ராஜலக்ஷணங்களுடன் கூடி விளங்கினான்.

14.12 லீலாவதியென்ற மனைவியும் அடுத்த மாதத்தில் சுபமான பக்ஷத்திலும் தினத்திலும் அழகியதொரு புத்திரனை ஈன்றாள்.

14.17. அவர்களுள் ஸுதர்சனன் மூத்தவன். லீலாவதியின் புத்திரனான சத்ருஜித் பேசுவதில் அவனைவிடச் சிறந்து விளங்கினான்.

14.20. இப்படி காலம் செல்லுகையில் எப்பொழுதும் வேட்டையில் பிரியமுள்ளவனாகிய அரசன் துருவஸந்தி ஒரு சமயம் ஒரு வனத்தின் மத்தியில் புகுந்தான்.

14.29. அவன்மேல் கொடியதொரு சிங்கம் பாய்ந்தது. அதனுடைய நகங்களால் கிழித்து வீழ்த்தப்பட்டு அவன் உயிர் துறந்தான்.

प्रजाः प्रकृतयश्चैव वसिष्ठश्च महामुनिः ।
सुदर्शनं नृपं कर्तुं मन्त्रं चक्रुः परस्परम् ॥ १४. ३३ ॥

मृतं जामातरं श्रुत्वा लीलावत्याः पिता तदा ।
तत्राऽऽजगाम त्वरितो दौहित्र-प्रियकाम्यया ॥ १४. ३७ ॥

वीरसेनस्तथाऽऽयातः सुदर्शन-हितेच्छया ।
कलिंगाधिपतिश्चैव मनोरमा-पिता नृपः ॥ १४. ३८ ॥

संग्रामे संवृते तत्र युधाजित्पृथिवीपतिः ।
जघान वीरसेनं तं बाणैस्तीव्रैः सुदारुणैः ॥ १५. १६ ॥

मनोरमा हतं श्रुत्वा पितरं रणमूर्धनि ।
भयत्रस्ताऽथ संजाता पितुर्वैरमनुस्मरन् ॥ १५. १८ ॥

हनिष्यति युधाजिद्वै पुत्रं मम दुराशयः ।
राज्यलोभेन पापात्मा सेति चिन्तापराऽभवत् ॥ १५. १९ ॥

14.33. நாட்டுமக்களும் முனிசிரேஷ்டராகிய வசிஷ்டரும் கூடியோசித்து ஸுதர்சனனை அரசனுக்க நிச்சயித்தனர்.

14.37. அவ்வேளையில் லீலாவதியின் தகப்பன் தன் மாப்பிள்ளை இறந்து போனதைக் கேட்டுத் தன் பேரனுக்குப் பிரியத்தைச் செய்ய விரும்பி விரைவில் அங்கு வந்து சேர்ந்தான்.

14.38. மனோரமாவின் பிதாவும் கலிங்க நாட்டரசனுமான வீரசேனன் என்பவனும் ஸுதர்சனனுக்கு நன்மையை விரும்பி அங்கு வந்தான்.

15.16. இருவருக்கும் யுத்தம் மூளவே யுதாஜித்து (லீலாவதியின் தகப்பன்) வேகமான கொடிய பாணங்களால் வீரசேனனைக் கொன்றான்.

15.18–19. போர்க்களத்தில் தன் தந்தை இறந்ததைக்கேட்ட மனோரமா பயத்தால் பீடிக்கப்பட்டவளாய் 'பிதாவின் மேலிருந்த பகையையெண்ணி திக்கற்ற என் பிள்ளையையும் பாவியாகிய யுதாஜித்து அரசாட்சியில் பேராசையால் கொன்று விடுவான்' என்று மிகுந்த கவலையிலாழ்ந்தாள்.

साऽपि वैरयुता कामं सपत्नी सर्वदा भवेत् ।
लीलावती न मे पुत्रे भविष्यति दयावती ॥ १५. २६ ॥

इति संचिन्त्य सा बाला विदल्लं चातिमानिनम् ।
निपुणं सर्वकार्येषु चिन्त्यं मन्त्रिवरोत्तमम् ॥ १५. ३६ ॥

समाहूय तमेकान्ते प्रोवाच बहुदुःखिता ।
पिता मे निहतः संख्ये पुत्रोऽयं बालकस्तथा ॥
युधाजिद्बलवान् राजा किं विधेयं वदस्व मे ॥ १५. ३८ ॥

तामुवाच विदल्लोऽसौ नात्र स्थातव्य-मेव च ।
गमिष्यामो वने कामं वाराणस्याः पुनः किल ॥ १५. ३९ ॥

तत्र मे मातुलः श्रीमान् वर्तते बलवत्तरः ।
सुबाहुरिति विख्यातो रक्षिता स भविष्यति ॥ १५. ४० ॥

15.26. 'சக்களத்தியாகிய அந்த லீலாவதியும் எப்பொழுதும் பகையுடன் கூடியவளே ஆவாள். என் புத்திரனிடம் தயை உடையவளாக மாட்டாள்.'

15.36–38. என்றிங்ஙனம் சிந்தித்து மிகவும் துக்கத்திலாழ்ந்த அவள் எல்லாக் காரியங்களிலும் வல்லவனும் யோசனை சொல்லக் கூடியவர்களில் உத்தமனும் மிகுந்த மதிப்புக்குரியவனுமான விதல்லன் என்பவனை அழைத்து அவனிடத்தில் தனிமையில் பின்வருமாறு கூறினாள்: 'என்னுடைய தகப்பனார் போரில் கொல்லப்பட்டார்; இந்தப் புத்திரனோ பாலன். யுதாஜித்து மிகவும் பலசாலியான அரசன். இப்பொழுது என்ன செய்தற்குரியது? அதைச் சொல்.'

15.39. விதல்லன் அவளிடம் கூறியதாவது: 'நீங்கள் இங்கிருக்கக் கூடாது. வனத்திற்காவது செல்வோம், அல்லது வாராணஸிக்காவது செல்வோம்.

15.40. 'அங்கே என்னுடைய மாமன் இருக்கிறார். அவர் மிகுந்த செல்வமும் பலமும் கீர்த்தியும் படைத்தவர். அவர் பெயர் ஸுபாஹு. அவர் இரக்ஷகராயமைவார்.'

इत्युक्ता तेन सा राज्ञी गत्वा लीलावतीं प्रति।
उवाच पितरं द्रष्टुं गच्छाम्यद्य सुलोचने ॥ १५. ४२ ॥

इत्युक्त्वा रथमारुह्य सैरन्ध्री संयुता तदा।
विदल्लेन च संयुक्ता निःसृता नगराद्बहिः ॥ १५. ४३ ॥

त्रस्ताह्यार्ताऽतिकृपणा पितुः शोकसमाकुला।
दृष्ट्वा युधाजितं भूपं पितरं गतजीवितम् ॥ १५. ४४ ॥

संस्कार्य च त्वरायुक्ता वेपमाना भयाकुला।
दिनद्वयेन संप्राप्ता राज्ञी भागीरथी-तटम् ॥ १५. ४५ ॥

भारद्वाजाश्रमं प्राप्ता त्वरयाच भयाकुला।
संवीक्ष्य तापसांस्तत्र संजाता निर्भयस्तदा ॥ १५. ४६ ॥

15.42–43. இங்ஙனம் சொல்லக் கேட்ட அரசி லீலாவதியிடம் சென்று 'நான் இப்பொழுது என் பிதாவைப் பார்க்கப் போகிறேன்' என்று சொல்லிவிட்டு ஒரு தாதியைத் தன்னுடன் கூட்டிக் கொண்டு விதல்லனுடன் நகரத்தை விட்டு வெளிச்சென்றாள்.

15.44–45. துன்புற்றவளும் பயந்தவளும் தீன தசையடைந்தவளும் தந்தையின் மரணத்தால் சோகம் மேலிட்டவளுமான அவ்வரசி பூபதியாகிய யுதாஜித்தைக் கண்டுவிட்டு உயிர் துறந்த தந்தையைப்பார்த்து அவருக்கு விரைவில் அந்தியக்கிரியைகளைச் செய்து முடித்து நடுக்கத்துடனும் பயத்துடனும் இரண்டு நாட்களில் கங்கைக்கரை போய்ச் சேர்ந்தாள்.

15.49. பயத்தால் கலங்கிய அவள் வேகமாக பாரத்வாஜ ஆசிரமத்தையடைந்து அங்கு தபஸ்விகளைக் கண்டபின் பயம் நீங்கியவளானாள்.

मुनिना सा ततः पृष्टा काऽसि कस्य परिग्रहः ।
कष्टेनात्र कथं प्राप्ता सत्यं ब्रूहि शुचिस्मिते ॥ १५. ५० ॥

एवं सा मुनिना पृष्टा नोवाच वरवर्णिनी ।
रुदती दुःखसन्तप्ता विदल्लं च समादिशत् ॥ १५. ५२ ॥

विदल्लस्तमुवाचेदं ध्रुवसन्धिर्नृपोत्तमः ।
तस्य भार्या धर्मपत्नी नाम्नाचेयं मनोरमा ॥ १५. ५३ ॥

सिंहेन निहतो राजा सूर्यवंशी महाबलः ।
पुत्रोऽयं नृपतेस्तस्य नाम्नाचैव सुदर्शनः ॥ १५. ५४ ॥

अस्याः पिताऽतिधर्मात्मा दौहित्रार्थं मृतो रणे ।
युधाजिद्भयसंत्रस्ता संप्राप्ता विजने वने ॥ १५. ५५ ॥

15.50. (பாரத்வாஜ) முனிவர் அவளை நோக்கி, 'பெண்ணே! நீ யார்? யாருடைய மனைவி? கஷ்டப்பட்டு இங்கு எப்படி வந்தாய்? உண்மையைக் கூறு' என்று கேட்டார்.

15.52. இங்ஙனம் முனிவரால் கேட்கப்பட்ட அவள் துக்கத்தால் மனங் கொதித்து அழுபவளாய் எதுவும் பேசாமல் விதல்லனைக் குறிப்பிட்டாள்.

15.53–54. விதல்லன் பின்வருமாறு அவருக்கு பதில் கூறினான்: 'துருவஸந்தி என்ற உத்தம அரசனுடைய தர்ம பத்னி இவள். இவள் பெயர் மனோரமா. ஸூர்யவம்சத்தைச் சார்ந்தவனும் மகாபலசாலியுமான அரசன் ஒரு சிங்கத்தால் கொல்லப்பட்டான். அவ்வரசனுடைய புத்திரன் இவன். ஸுதர்சனன் என்பது இவன் பெயர்.

15.55. 'இவளுடைய பிதா சிறந்த தர்மாத்மா. பேரனுக்காகப் போரில் உயிர்துறந்தார். (எதிரியாகிய) யுதாஜித்திடம் பயந்து ஜனநடமாட்டமில்லாத வனத்தை யடைந்துள்ளாள்.

त्वामेव शरणं प्राप्ता बालपुत्रा नृपात्मजा ।
त्राता भव महाभाग त्वमस्या मुनिसत्तम ॥ १५. ५६ ॥

ऋषिरुवाच—

निर्भया वस कल्याणि पुत्रं पालय सुव्रते ।
न ते भयं विशालाक्षि कर्तव्यं शत्रुसंभवम् ॥ १५ . ५७ ॥
पालयस्व सुतं कान्तं राजा ते ऽयं भविष्यति ।
नात्र दुःखं तथा शोकः कदाचित्संभविष्यति १५ ५८ ॥

व्यास उवाच—

इत्युक्ता मुनिना राज्ञी स्वस्था सा संबभूव ह ।
उटजे मुनिना दत्ते वीतशोका तदाऽवसत् ॥ १५ ५९ ॥

15.56. 'அரசகுமாரியும் பாலனாகிய புத்திரனையுடையவளுமான இவள் உங்களைச் சரணடைகின்றாள். முனிசிரேஷ்டரே! மகாபுருஷரே! நீங்கள் அவளுக்கு இரக்ஷகர் ஆகவேண்டும்.'

ரிஷி கூறியது—

15.57. பெண்ணே! பயமில்லாமல் இங்கே இரு. நல்ல விரதமுடையவளே! உன் புத்திரனைக் காப்பாற்று. சத்துருவிடமிருந்து பயப்படவேண்டாம்.

15.58. தேஜஸ்வியான உன் புத்திரனை நீ காப்பாற்றி வந்தால் அவன் அரசனாகிவிடுவான். அதுவரை இங்கு துக்கமோ சோகமோ ஒருபொழுதும் வராது.

வியாஸர் கூறியது—

15.59. இவ்வாறு முனிவரால் கூறப்பட்ட அரசி மனதில் நிம்மதியடைந்தாள். முனிவரளித்த ஒரு குடிசையில் கவலையின்றி வசித்துவந்தாள்.

सैरन्ध्री सहिता तत्र विदल्लेन च संयुता ।
सुदर्शनं पालयाना न्यवसत् सा मनोरमा ।। १५. ६० ।।

युधाजिदपि दौहित्रं स्थापयित्वा विधानतः ।
राज्यं च मन्त्रिसात्कृत्वा चलितः स्वां पुरीं प्रति ।। १६. १० ।।

श्रुत्वा-सुदर्शनं तत्र मुनीना-माश्रमे स्थितम् ।
हन्तुकामो जगामाऽऽशु चित्रकूटं सपर्वतम् ।। १६. ११ ।।

श्रुत्वा मनोरमा तत्र बभूवातिदुःखिता ।
आगच्छन्तं बालपुत्रा भयार्ता सैन्यसंयुतम् ।। १६. १३ ।।

तमुवाचातिशोकार्ता मुनिं साश्रुविलोचना ।
किं करोमि क्व गच्छामि युधाजित्समुपस्थितः ।। १६. १४ ।।

15.60–16.10. மனோரமா தன் தாதியின் உதவியாலும் விதல்லன் உதவியாலும் ஸுதர்சனனைப் பாலித்துக் கொண்டு அங்கிருக்கையில் யுதாஜித்து தன் பேரனை முறைப்படி அரசாட்சியிலமர்த்தி ராஜ்யத்தை மந்திரிகளிடம் ஒப்புவித்துவிட்டுத் தன்னுடைய பட்டணத்திற்குப் போய்ச் சேர்ந்தான்.

16.11. முனிவர்களின் ஆசிரமத்தில் ஸுதர்சனன் இருப்பதைக் கேள்வியுற்று அவனைக் கொல்லும் விருப்பத்துடன் விரைவில் மலையுடன் கூடிய சித்ரகூடத்திற்குச் சென்றான்.

16.13. சைனியத்துடன் அவன் வருவதைக் கேள்வியுற்ற மனோரமா பாலனாகிய தன் புத்திரனையெண்ணி பயத்தாலும் துக்கத்தாலும் மிகவும் பீடிக்கப்பட்டவளானாள்.

16.14. கவலைமேலிட்ட அவள் கண்ணீர்வழியுங் கண்களுடன் முனிவரையணுகி 'நான் என்ன செய்வேன்? எங்கு செல்வேன்? யுதாஜித்து வந்துவிட்டான்.

वृथा तीर्थं वृथादानं वृथाऽध्ययनमेव च ।
लोभमोहवृतानां वै कृतं तदकृतं भवेत् ।। १६. ५५ ।।

तस्मादेनं महाभाग विसर्जय गृहं प्रति ।
सपुत्राऽहं वसिष्यामि जानकीवद् द्विजोत्तम ।। १६. ५६ ।।

इत्युक्तोऽसौ मुनिस्तावद्गत्वा युधाजितं नृपम् ।
उवाच वचनं राज्ञे भारद्वाजः प्रतापवान् ।। १६. ५७ ।।

गच्छ राजन् यथा कामं स्वपुरं नृपसत्तम ।
नेयं मनोरमाऽभ्येति बालपुत्रा सुदुःखिता ।। १६. ५८ ।।

युधाजिदुवाच—

मुने मुंच हठं सौम्यं विसर्जय मनोरमाम् ।
न च यास्याम्यहं मुक्त्वा नेष्याम्यद्य बलात्पुनः ।। १६. ५९ ।।

16.55. 'பேராசையால் மதிகெட்டவர்களுக்கு புண்ணிய க்ஷேத்திரம் வீண், தானம் வீண், அத்தியயனமும் வீணே.

16.56. 'பிராம்மணசிரேஷ்டரே! மகாபுருஷரே! தாங்கள் இவனைத் தன்னிருப்பிடத்திற்குத் திரும்பிச் செல்லும்படி செய்ய வேண்டும். என் புத்திரனுடன் நான் ஜானகியைப் போல் இங்கு வசிக்கிறேன்.'

16.57. இப்படி வேண்டிக் கொள்ளப்பட்ட புகழ் பெற்ற பாரத்வாஜ முனிவர், அரசனாகிய யுதாஜித்திடம் சென்று பின்வரும் வார்த்தையைச் சொன்னார்.

16.58. 'அரசசிரேஷ்டரே! நீர் உம்முடைய பட்டணத்திற்குச் சௌகரியம் போல் திரும்பிச் செல்லலாம். பாலனாகிய புத்திரனையுடையவளும் துக்கத்திலாழ்ந்தவளுமான மனோரமா (உன்வசமாக) உன்னிடம் வரமாட்டாள்.'

யுதாஜித்து கூறியது—

16.59. முனிவரே! பிடிவாதம் செய்யாமல் மனோரமாவை என்னிடம் விட்டுவிடுங்கள். அவளை விட்டுவிட்டு நான் போகமாட்டேன். பலாத்காரமாய்க் கூட்டிக் கொண்டே போவேன்.

ऋषि-रुवाच—

नयस्व यदि शक्तिस्ते बलेनाद्य ममाश्रमात् ।
विश्वामित्रो यथा धेनुं वसिष्ठस्य मुनेः पुरा ॥ १६. ६० ॥

व्यास उवाच—

इत्याकर्ण्य वचस्तस्य मुनेस्तत्रावनीपतिः ।
मन्त्रिवृद्धं समाहूय पप्रच्छ तमतन्द्रितः ॥ १७. १ ॥

प्रधान उवाच—

साहसं न हि कर्तव्यं श्रुतं राजन् मुनेर्वचः ।
विश्वामित्रस्य दृष्टान्तः कथितस्तेन मारिष ॥ १७. ६ ॥

दया सर्वत्र कर्तव्या दैवादीनमिदं जगत् ।
ईर्ष्यया किं नृपश्रेष्ठ यद्भाव्यं तद्भविष्यति ॥ १७. २८ ॥

ரிஷி கூறியது—

16.60. முன்பு வசிஷ்டருடைய காமதேனுவை விசுவாமித்திரர் கொண்டு போனதுபோல் உனக்குச் சக்தியிருக்குமேயானால் என்னுடைய ஆசிரமத்திலிருந்து அவளை நீ கொண்டு போகலாம்.

வியாஸர் கூறியது—

17.1. முனிவருடைய இவ்வார்த்தையைக் கேட்ட அரசன் வயது முதிர்ந்த ஒரு மந்திரியைக் கூப்பிட்டு மிகுந்த கவனத்துடன் அவரிடம் யோசனை கேட்டான்.

மந்திரி கூறியது—

17.6. அரசே! தலைவரே! முனிவருடைய வார்த்தையைக் கேட்டும் பின்னர் துடுக்கான காரியம் செய்தல் கூடாது. விசுவாமித்திரருடைய திருஷ்டாந்தம் அவரால் கூறப்பட்டது.

17.28. எல்லாவிடத்தும் தயை காட்டுதல் வேண்டும். இவ்வுலகம் தெய்வாதீனமாயுளது. அரசசிரேஷ்டரே! எது நடக்க வேண்டுமோ அது நடந்தே திரும். பொறுமையால் என்ன பயன்?

वज्रं तृणायते राजन् दैवयोगान्न संशयः।
तृणं वज्रायते क्वापि समये दैवयोगतः ॥ १७. २९ ॥

शशको हन्ति शार्दूलं मशको वै यथा गजम्।
साहसं मुंच मेधाविन् कुरु मे वचनं हितम् ॥ १७. ३० ॥

व्यास उवाच—

तच्छ्रुत्वा वचनं तस्य युधाजिन्नृपसत्तमः।
प्रणम्य तं मुनिं मूर्ध्ना जगाम स्वपुरं नृपः ॥ १७. ३१ ॥

मनोरमाऽपि स्वस्थाऽभूदाश्रमे तत्र संस्थिता।
पालयामास पुत्रं तं सुदर्शनमृतव्रतम् ॥ १७. ३२ ॥

दिने दिने कुमारोऽसौ जगामोपचयं ततः।
मुनिबालगतः क्रीडन्निर्भयः सर्वतः शुभः ॥ १७. ३३ ॥

17.29. அரசே! வஜ்ராயுதமும் விதிவசத்தால் துரும்பு போலாய்விடும். இதில் சந்தேகமில்லை. துரும்பும் விதிவசத்தால் ஒரு சமயம் வஜ்ரம் போலாய்விடும்.

17.30. முயல் ஒரு புலியைக் கொன்று விடும்; கொசுவும் யானையைக் கொன்று விடலாம். மதிமானே! துணிகரமான செயலில் இறங்க வேண்டாம். உமது நன்மைக்காக நான் சொல்வதைக் கேளும்.

வியாஸர் கூறியது—

17.31. அரசசிரேஷ்டனுகிய யுதாஜித்து அவருடைய வார்த்தையைக் கேட்டு முனிவரைத் தலையால் நமஸ்கரித்து விட்டுத் தன்னுடைய நகரம் போய்ச் சேர்ந்தான்.

17.32. மனோரமா கவலை நீங்கி ஆசிரமத்தில் ஸத்திய விரதனுன தன் புத்திரனைப் பரிபாலித்துக் கொண்டு இருந்து வந்தாள்.

17.33. முனிபாலர்களுடன் கூடி விளையாடிக்கொண்டு எங்கும் பயமில்லாதவனுய் அந்த நல்ல குமாரன் நாள் தோறும் வளர்ச்சியடைந்து வந்தான்.

एकस्मिन् समये तत्र विदल्लं समुपागतम् ।
क्लीबेति मुनिपुत्रस्ता-मामन्त्रयत्तदन्तिके ।। १७. ३४ ।।

सुदर्शनस्तु तच्छ्रुत्वा दधारैकाक्षरं स्फुटम् ।
अनुस्वारयुतं तच्च प्रोवाचाति पुनः पुनः ।। १७. ३५ ।।

बीजं वै कामराजाख्यं गृहीतं मनसा तदा ।
जजाप बालकोऽत्यर्थं धृत्वा चेतसि सादरम् ।। १७. ३६ ।।

भावियोगान्महाराज कामराजाख्यमद्भुतम् ।
स्वभावेनैव तेनेत्थं गृहीतं बालकेन वै ।। १७. ३७ ।।

17.34. ஒரு சமயம் ஒரு முனிகுமாரன் (விளையாடிக் கொண்டிருக்கும் பொழுது) அங்கு வந்த விதல்லனைப்பார்த்து 'க்லீபன்' (பேடி) என்றழைத்தான்.

17.35. ஸுதர்சனன் அச்சொல்லைக்கேட்டு (அதில் முதலெழுத்தான 'க்லீ' என்ற) ஒரு எழுத்தை ('ம்' என்ற) அனுஸ்வாரத்துடன் சேர்த்து (க்லீம், க்லீம்) அடிக்கடி உச்சரிக்கலானான்.

17.36. அதனால் (அறியாமலேயே) அந்த பாலன் 'காமராஜம்' எனப்படும் பீஜாக்ஷரத்தை மனதில் கொண்டவனானான். அதை மிகுந்த ஆதரவுடன் சித்தத்தில் நிறுத்தி ஜபம் செய்யத் தொடங்கினான்.

17.37. மகாராஜனே! பூர்வ புண்ணிய வசத்தால் (இவ்வாறு நிகழவேண்டுமென்றிருந்ததால்) அற்புதமான காமராஜ மந்திரம் அந்த பாலகனால் இங்ஙனம் தன் இயல்பைக் கொண்டே இங்ஙனம் கிரகித்துக் கொள்ளப்பட்டது.

तदाऽसौ पंचमे वर्षे प्राप्य मन्त्रमनुत्तमम् ।
ऋषिच्छन्दो विहीनं च ध्यानन्यास-विवर्जितम् ।। १७. ३८ ।।

प्रजपन्मनसा नित्यं क्रीडत्यपि स्वपित्यपि ।
विसस्मार न तं मन्त्रं ज्ञात्वा सारमिति स्वयम् ।। १७. ३९ ।।

वर्षे चैकादशे प्राप्ते कुमारोऽसौ नृपात्मजः ।
मुनिना चोपनीतोऽथ वेदमध्यापितस्तथा ।। १७. ४० ।।

धनुर्वेदं तथा सांगं नीतिशास्त्रं विधानतः ।
अभ्यस्ताः सकला विद्यास्तेन मन्त्रबलादिव ।। १७. ४१ ।।

कदाचित्सोऽपि प्रत्यक्षं देवीरूपं ददर्श ह ।
रक्ताम्बरं रक्तवर्णं रक्तसर्वांगभूषणम् ।। १७. ४२ ।।

17.38–39. இவ்வாறு ஐந்தாவது வயதில் இந்த ஒப்புயர்வற்ற மந்திரத்தை ரிஷி, சந்தஸ், இல்லாமலும் தியானம் நியாஸம் முதலிய முறைகளில்லாமலும் அடைந்து விளையாடும் பொழுதும் உறங்கும் பொழுதும் கூட அதை எப்பொழுதும் மனதால் ஜபித்து அது ஸாரமானதென்று தனக்குத்தானே உணர்ந்து அதை மறவாமலிருந்தான்.

17.40. பதினொராவது வயது வந்ததும் இந்த அரச குமாரன் முனிவரால் உபநயனம் செய்விக்கப் பெற்று வேதமும் கற்பிக்கப்பட்டான்.

17.41. அங்கங்களுடன் தனுர் வேதமும் நீதி சாஸ்திரமும் எல்லா வித்தைகளும் மந்திர பலத்தால் கைகூடி வந்தாற்போல் அவனால் முறைப்படி அப்பியசிக்கப்பட்டன.

17.42. சில சமயங்களில் சிவப்பாடையணிந்தவளாகவும் சிவந்த திருமேனி படைத்தவளாகவும் எல்லா அங்கங்களிலும் சிவப்பான ஆபரணங்களையணிந்தவளாகவும் தேவியின் திருவுருவை அவன் பிரத்தியக்ஷமாய்க் காணலானான்.

गरुडे वाहने संस्थां वैष्णवीं शक्तिमद्भुताम् ।
दृष्ट्वा प्रसन्नवदनः स बभूव नृपात्मजः ॥ १७. ४३ ॥

वने तस्मिन् स्थितः सोऽथ सर्वविद्यार्थतत्त्ववित् ।
मातरं सेवमानस्तु विजहार नदीतटे ॥ १७. ४४ ॥

शरासनं च संप्राप्तं विशिखाश्च शिलाशिताः ।
तूणीरं कवचं तस्मै दत्तं चाम्बिकया वने ॥ १७. ४५ ॥

एतस्मिन् समये पुत्री काशीराजस्य सुप्रिया ।
नाम्ना शशिकला दिव्या सर्वलक्षणसंयुता ॥ १७. ४६ ॥

शुश्राव नृपपुत्रं तं वनस्थं च सुदर्शनम् ।
सर्वलक्षणसंपन्नं शूरं काममिवापरम् ॥ १७. ४७ ॥

17.43. கருடவாகனத்தில் வீற்றிருப்பவளாய்க்காட்சியளித்த அந்த அத்புதமான வைஷ்ணவீ சக்தியை தரிசித்து அந்த அரசகுமாரன் (தெளிந்த மனதும்) மகிழ்ச்சிபொங்கும் முகவும் உடையவனாய் விளங்கினான்.

17.44–45. எல்லா வித்தைகளின் உட்கருத்துக்களையும் உணர்ந்து கொண்ட அவன் தாயைச் சேவித்துக் கொண்டு அவ்வனத்தில் இருக்கையில் நதிக்கரையில் ஒரு நாள் விளையாடும்பொழுது அம்பிகை பிரசன்னமாகி அவனுக்கு ஒரு வில்லையும், கூர்மையான பாணங்களையும், அம்பறாத் தூணியையும், கவசத்தையும் அளித்தாள்.

17.46–47. இந்த சமயத்தில் எல்லா லக்ஷணங்களுடன் கூடியவளும், தெய்வாம்சம் பொருந்தியவளும் சசிகலா எனப் பெயர் கொண்டவளுமான காசியரசனுடைய பிரிய புத்திரி, வனத்தில் வசிப்பவனும் எல்லா ராஜலக்ஷணங்களும் பொருந்தியவனும், இன்னொரு மன்மதனைப் போன்ற அழகியவனும், சூரனுமான ஸுதர்சனன் என்ற அரச குமாரனைப்பற்றிக் கேள்விப்பட்டாள்.

वन्दीजनमुखाच्छ्रुत्वा राजपुत्रं सुसम्मतम् ।
चकमे मनसा तं वै वरं वरयितुं धिया ॥ १७. ४८ ॥

स्वप्ने तस्याः समागम्य जगदम्बा निशान्तरे ।
उवाच वचनं चेदं समाश्वास्य सुसंस्थिता ॥ १७. ४९ ॥

वरं वरय सुश्रोणि मम भक्तः सुदर्शनः ।
सर्वकामप्रदस्तेऽस्तु वचनान्मम भामिनि ॥ १७. ५० ॥

एवं शशिकला दृष्ट्वा स्वप्ने रूपं मनोहरम् ।
अंबाया वचनं स्मृत्वा जहर्ष भृशमानिनी ॥ १७. ५१ ॥

तावत्तस्याः पिता ज्ञात्वा कन्यां पुत्रवरार्थिनीम् ।
सुबाहुः कारयामास स्वयंवर-मतन्द्रितः ॥ १८. ४० ॥

17.48. துதிபாடகர்களின் வாயிலாக அரச புத்திரன் தனக்கிசைவானவன் எனக் கேள்விப்பட்டு அவனையே மணந்து கொள்வதென்று மனதில் நிச்சயித்துக் கொண்டாள்.

17.49–50. இரவில் அவளுடைய கனவில் ஜகதம்பிகை தோன்றி அவளுக்கு ஆறுதலளித்து 'அழகிய பெண்ணே! ஸுதர்சனன் என்னுடைய பக்தன்; அவனை நீ கணவனாக விரும்பி ஏற்றுக் கொண்டால் அவன் என்னுடைய சொல்லால் உனக்கு எல்லா ஆசைகளையும் பூர்த்தி செய்விப்பவன் ஆவான்' என்று கூறியருளினாள்.

17.51. மனதைக்கவரும் அம்பிகையின் திருவுருவைக் கனவில் கண்டு அவள் பேசியருளியதை நினைத்துப் பார்த்து சசிகலா மகிழ்ச்சி மிக்கவளானாள்.

18.40. அப்பொழுது அவளுடைய தந்தையான ஸுபாகு தன் பெண் சிறந்த வரனை விரும்புவதை அறிந்து சுயம்வரம் நாட்டுவதற்கான ஏற்பாடுகளைத் தாமதமின்றிச் செய்வித்தார்.

एवं कृतेऽतिसंभारे विवाहार्थं सुविस्तरम्।
सखीं शशिकला प्राह दुःखिता चारुलोचना ॥ १८. ४५ ॥

इदं मे मातरं ब्रूहि त्वमेकान्ते वचो मम।
मया वृतः पतिश्चित्ते ध्रुवसन्धिसुतः शुभः ॥ १८. ४६ ॥

नान्यं वरं वरिष्यामि तमृते वै सुदर्शनम् ॥
स मे भर्ता नृपसुतो भगवत्या प्रतिष्ठितः ॥ १८. ४७ ॥

राज्ञी तद्वचनं श्रुत्वा स्वपतौ गृहमागते।
निवेदयामास तदा पुत्रीवाक्यं यथातथम् ॥ १८. ५१ ॥

भर्त्रा साऽभिहिता बालां पुत्रीं कृत्वांकसंस्थिताम्।
उवाच वचनं श्लक्ष्णं समाश्वास्य शुचिस्मिताम् ॥ १९. १ ॥

18.45. இவ்வாறு விவாகத்திற்கான ஏற்பாடுகள் விரிவாக நடக்கையில் அழகிய கண்படைத்த சசிகலா துக்கம் மேலிட்டவளாய்த் தன் தோழியிடம் பின்வருமாறு கூறினாள்.

18.46–47. 'இந்த என் வார்த்தையை என் தாயாரிடம் தனிமையில் கூறு. மங்களம் நிறைந்த துருவசந்திகுமாரனை நான் பதியாக என் மனதில் வரித்துவிட்டேன். அந்த ஸுதர்சனனையல்லாது வேறு ஒருவனையும் நான் வரிக்க மாட்டேன். அவ்வரசகுமாரன் எனக்குப் பதியாக பகவதியால் நியமிக்கப்பட்டவன்.'

18.51. அரசி அவ்வார்த்தையைக் கேட்டுத் தன் கணவன் வீடு வந்ததும் புத்திரி கூறியதைக் கூறியபடியே தெரிவித்தாள்.

19.1. பின்பு கணவன் விருப்பப்படி அவள் புன்னகை பூத்த சிறுமியான புத்திரியையழைத்து மடியில் வைத்துக் கொண்டு ஆறுதல் கூறி இனிய வார்த்தைகள் பேசலானாள்.

सुदर्शनोऽतिदुर्भाग्यो राज्यभ्रष्टो निराश्रयः।
बलकोशविहीनश्च परित्यक्तस्तु बान्धवैः॥ १९. ३॥

मात्रा सह वनं प्राप्तः फलमूलाशनः कृशः।
न ते योग्यो वरोऽयं वै वनवासी च दुर्भगः॥ १९. ४॥

अन्यच्च कारणं सुभ्रु शृणु यच्च मया श्रुतम्।
युधाजित् सततं तस्य वधकामोऽस्ति भूमिपः॥ १९. ५॥

शशिकलोवाच—

मच्चित्तभित्तौ लिखितो भगवत्या सुदर्शनः।
तं विहाय प्रियं कान्तं करिष्येऽहं न चापरम्॥ १९. १३॥

19.3. 'ஸுதர்சனன் மிகவும் துர்ப்பாக்கியசாலி; அரசிழந்தவன்; ஆதரவற்றவன்; சேனையோ பொக்கிசமோ ஏது மில்லாதவன்; உறவினர்களால் தள்ளிவிடப்பட்டவன்.

19.4. 'தாயுடன் காட்டிற்கு வந்திருப்பவன்; கிழங்குகளையும் பழங்களையும் உண்டு பிழைத்து இளைத்திருப்பவன்; வனவாசியும் துர்ப்பாக்கியனுமான அவன் உனக்குத் தகுந்த வரனாகமாட்டான்.

19.5. 'புருவம் அழகியவளே! நான் கேள்விப்பட்ட இன்னொரு காரணமும் கூறுகிறேன், கேள். யுதாஜித் என்னும் அரசன் எப்பொழுதும் அவனைக் கொல்லவேண்டுமென்ற கருத்துடையவனாயிருக்கிறான்.'

சசிகலா கூறியது—

19.13. 'என் சித்தமாகிய சுவற்றில் பகவதியால் ஸுதர்சனனுடைய உருவம் வரையப்பட்டுள்ளது. அவனையன்றி வேறு ஒருவனை நான் என் பிரியத்திற்குரிய கணவனாக ஏற்கமாட்டேன்.'

17

भर्तारं सर्वमाचष्ट पुत्र्योक्तं वचनं भृशम्।
विवाहस्य दिनादर्वागाप्तं श्रुतसमन्वितम्।
द्विजं शशिकला तत्र प्रेषयामास सत्वरम्।। १६. १५।।
यथा न वेद मे तातस्तथा गच्छ सुदर्शनम्।
भारद्वाजाश्रमे ब्रूहि मद्वाक्यात्तरसा विभो।। १६. १६।।
पित्रा मे संभृतः कामं मदर्थेन स्वयंवरः।
आगमिष्यन्ति राजानो बलयुक्ताह्यनेकशः।। १६. १७।।
मया त्वं वै वृतश्चित्ते सर्वथा प्रीतिपूर्वकम्।
भगवत्या समादिष्टः स्वप्ने मम सुरोपम।। १६. १८।।
वरये त्वदृते नान्यं पितृभ्यां प्रेरितापि वा।
मनसा कर्मणा वाचा संवृतस्त्वं मया वरः।। १६. २०।।

19.15. புத்திரி கூறியதனைத்தையும் அரசி தன் பர்த்தாவிடம் தெரிவித்தாள். விவாகத்திற்குக் குறித்த தினத்திற்கு முன்பு கற்றுணர்ந்த ஒரு பிராம்மணரையழைத்து சசிகலா விரைவில் ஸுதர்சனனிடம் தூதனுப்பினாள்.

19.16. 'எல்லாமறிந்தவரே! என் தந்தைக்குத் தெரியாதவண்ணம் ஸுதர்சனனிடம் சென்று பாரத்துவாஜா சிரமத்தில் அவனைக் கண்டு சீக்கிரத்தில் என் வார்த்தைகளைத் தெரிவிக்க வேண்டும்.

19.17. 'என் தந்தை என் பொருட்டு ஸ்வயம்வரம் ஏற்பாடு செய்திருக்கிறார். சேனைகளுடன் பல அரசர்கள் வருவார்கள்.

19.18. 'அன்பை முன்னிட்டு என்னால் நீரே கணவனாக வரிக்கப்பட்டவர். தேவர்களுக்குச் சமமானவரே! என் கனவில் தேவியானவள் இங்ஙனம் கட்டளையிட்டுள்ளாள்.

19.20. 'என் தந்தை கட்டளையிட்டாலும் நான் உம்மையன்றி வேறொருவரையும் மணக்க மாட்டேன். மனதாலும் வாக்காலும் செயலாலும் என்னால் நீரே வரிக்கப் பட்டவர்.

भगवत्या प्रसादेन शर्मावाभ्यां भविष्यति ।
आगन्तव्यं त्वयाऽत्रैव दैवं कृत्वा परं बलम् ॥ १९. २१ ॥

यथा भवति मे कार्यं तत्कर्तव्यं त्वयानघ ।
इत्युक्त्वा दक्षिणां दत्त्वा मुनिर्व्यापारितस्तया ॥ १९. २४ ॥

गत्वा सर्वं निवेद्याशु तत्र प्रत्यागतो द्विजः ।
सुदर्शनस्तु तज्ज्ञात्वा निश्चयं गमने तदा ॥ १९. २५ ॥

गमनायोद्यतं पुत्रं तमुवाच मनोरमा ।
कुत्र गच्छसि तत्राद्य समाजे भूभृतां किल ॥ १९. २६ ॥

पिता मे निहतो येन सोऽपि तत्रागतो नृपः ।
एकाकिनं गतं तत्र युधाजित्त्वां हनिष्यति ॥ १९. २७ ॥

19.21. 'பகவதியின் திருவருளால் நம்மிருவருக்கும் நன்மையே உண்டாகும். தெய்வத்தையே சிறந்த துணையாய்க் கொண்டு நீர் இங்கு வருதல் வேண்டும்.

19.24. 'பாவமற்றவரே! என் காரியம் எப்படிக் கைகூடுமோ அப்படி நீர் செய்தல் வேண்டும்' என்று கூறி தக்ஷிணையளித்து முனிவரான பிராம்மணரை யனுப்பிவைத்தாள்.

19.25. அந்தப் பிராம்மணர் அப்படியே சென்று அனைத்தையும் தெரிவித்துவிட்டு விரைவில் திரும்பிவந்தார். ஸுதர்சனனும் அதையறிந்து அவ்வாறே செல்ல நிச்சயித்தான்.

19.26–27. புறப்பட முயற்சிக்கும் புத்திரனை நோக்கி மனோரமா 'நீ எங்கு செல்கிறாய்? அரசர்கள் கூடும் அவ்விடத்தில் என் தந்தையை கொன்ற அரசனும் வருவான். அந்த யுதாஜித்து தனியாய்ச் செல்லும் உன்னை அங்கு கொன்று விடுவான்' என்று கூறினாள்.

सुदर्शन उवाच—

आदेशाच्च जगन्मातुर्गच्छाम्यद्य स्वयंवरम्।
मा शोकं कुरु कल्याणि क्षत्रियासि वरानने ॥ १९. ३२ ॥

व्यास उवाच—

इत्युक्त्वा रथमारुह्य गन्तुकामं सुदर्शनम्।
दृष्ट्वा मनोरमा पुत्र-माशीर्भिश्चान्वमोदयत् ॥ १९. ३३ ॥

अग्रतस्तेऽम्बिका पातु पार्वती पातु पृष्ठतः।
वाराही विषमे मार्गे दुर्गा दुर्गेषु कर्हिचित् ॥ १९. ३५ ॥

कालिका कलहे घोरे पातु त्वां परमेश्वरी।
मण्डपे तत्र मातंगी तथा सौम्या स्वयंवरे ॥ १९. ३६ ॥

ஸுதர்சனன் கூறியது—

19.32. மங்களமான முகம்படைத்த தாயே! ஜகன் மாதாவின் கட்டளையால் நான் இப்பொழுது ஸ்வயம்வரத் திற்குப் போகிறேன். நீ க்ஷத்திரிய ஸ்திரீயல்லவா? வருந்தாதே.

வியாஸர் கூறியது—

19.33. இங்ஙனம் கூறிவிட்டுத் தேரில் ஏறிச் செல்ல விரும்பும் புத்திரனாகிய ஸுதர்சனனைப் பார்த்து மனோரமா ஆசி மொழிகளைக் கூறி மகிழ்வித்தாள்.

19.35. 'உன் முன் அம்பிகை இருந்து காப்பளிக் கட்டும்; பின்னிருந்து பார்வதி காக்கட்டும்; கடினமான வழியில் வாராஹியும், கடத்தற்கரிய நிலைகள் ஏற்பட்டால் அப்பொழுது துர்க்கையும் காப்பாற்றட்டும்.

19.36. 'கோரமான கலகம் ஏற்பட்டால் உன்னைக் காளிகா பரமேசுவரி காப்பாற்றட்டும். ஸ்வயம்வர மண்ட பத்தில் மனதிற்கினிய மாதங்கிதேவி காப்பாற்றட்டும்.

सर्वदा सर्वदेशेषु पातु त्वां भुवनेश्वरी ।
महामाया जगद्धात्री सच्चिदानन्दरूपिणी ॥ १९. ३९ ॥

इत्युक्त्वा तं तदा माता वेपमाना भयाकुला ।
उवाचाहं त्वया सार्धमागमिष्यामि सर्वथा ॥ १९. ४० ॥

विप्रैर्दत्ताशिषः सर्वे निर्ययुर्हर्षसंयुताः ।
वाराणस्यां ततः प्राप्तो रथेनैकेन राघवः ॥ १९. ४३ ॥

ज्ञातः सुबाहुना तत्र पूजितश्चार्हणादिभिः ।
निवेशार्थं गृहं दत्त-मन्नपानादिकं तथा ॥ १९. ४४ ॥

मिलितास्त्वथ राजानो नानादेशाधिपाः किल ।
युधाजिदपि सम्प्राप्तो दौहित्रेण समन्वितः ॥ १९. ४५ ॥

19.39. 'எல்லாக் காலங்களிலும் எல்லா இடங்களிலும் மகாமாயையும் உலகைக்காப்பாற்றுபவளும் ஸச்சிதானந்த ரூபிணியுமான புவனேசுவரி உன்னைக் காப்பாற்றட்டும்.'

19.40. பயத்தால் நடுக்கத்துடன் அவனுடைய தாயார் இவ்வாறு கூறிவிட்டு 'நானும் உன்னுடன் கூட எப்படியாவது வரத்தான் போகிறேன்' என்றாள்.

19.43. பிராம்மணர்களால் ஆசி கூறப்பெற்று (தாய், தாதிமார் முதலிய) எல்லோரும் அவனுடன் புறப் பட்டனர். ஒற்றைத் தேருடன் ரகுகுலத்தவனாகிய அவன் காசியை அடைந்தான்.

19.44. சுபாகு இவர்கள் வரவையறிந்து மரியாதை களுடன் பூஜித்துத் தங்குவதற்குத் தகுதியான இடமளித்து அன்னபானம் முதலிய உபசாரங்களையும் செய்தான்.

19.45. பல தேசத்து மன்னர்கள் அங்கு கூடினர். யுதாஜித்தும் தன் பேரனுடன் வந்தான்.

संपन्न-भूभुजः सर्वे समाहूय सुदर्शनम् ।
ऊचुः समागतं शान्त-मेकाकिन-मतन्द्रिताः ॥ २०. १३ ॥

युद्धकामा नृपतयो वर्तन्तेऽत्रसमागमे ।
कन्यार्थं सैन्यसम्पन्नाः किं त्वं कर्तुमिहेच्छसि ॥ २०. १६ ॥

भ्राता ते सुबलः शूरः सम्प्राप्तोऽस्ति जिघृक्षया ।
युधाजिच्च महाबाहुः साहाय्यं कर्तुमागतः ॥ २०. १७ ॥

गच्छ वा तिष्ठ राजेन्द्र याथातथ्य-मुदाहृतम् ।
त्वयि सैन्यविहीने च यथेष्टं कुरु सुव्रत ॥ २०. १८ ॥

20.13. கூடியிருந்த அரசர்களெல்லாம் ஸுதர்சனனைக் கூப்பிட்டு அவன் வந்ததும் தனியாகவும் சாந்தமாகவும் இருந்த அவனை நோக்கி எச்சரிக்கையுடன் பின்வருமாறு கூறினார்கள்.

20.16. 'இங்கு வந்துள்ள அரசர்கள் சச்சரவில் பிரியமுள்ளவர்களாயிருக்கிறார்கள். கன்னிப் பெண்ணைக்குறித்துச் சைனியத்துடன் வந்திருக்கிறார்கள். நீ என்ன செய்ய விரும்புகிறாய்?

20.17. 'பலவானாயும் சூரனாயுமுள்ள உன் சகோதரனும் பெண்ணைக்கவர வேண்டும் என்ற ஆசையுடன் வந்திருக்கிறான். தோள் வலி மிகுந்த யுதாஜித்து அவனுக்கு உதவி புரிய வந்திருக்கிறான்.

20.18. 'அரசசிரேஷ்டனே! நல்லவிரதம் பூண்டவனே! உள்ளது உள்ளதுபடி எடுத்துரைத்தோம். இனி நீ போகவாவது போகலாம் அல்லது இருக்க விரும்பினால் இருக்கலாம். உன்னிடம் சைனியமில்லை. இஷ்டப்படி செய்.'

सुदर्शन उवाच—

यद्भावि तद्वै भविता नान्यथा नृपसत्तमाः ।
का चिन्ताऽत्र कर्तव्या दैवाधीनोऽस्मि सर्वदा ॥ २०. २४ ॥

अशक्तो वा सशक्तो वा यादृशस्तादृशस्त्वहम् ।
तदाज्ञया नृपाऽद्यैव संप्राप्तोऽस्मि स्वयंवरे ॥ २०. २८ ॥

अपरेऽह्नि शुभे काले नृपाः सम्मन्त्रिताः किल ।
सुबाहुना नृपेणाथ रुचिरे वै स्वमण्डपे ॥ २०. ५० ॥

अथ काशीपतिः प्राह सुतां स्नातां स्वलंकृताम् ।
मधूकमालासंयुक्तां क्षौमवासो विभूषिताम् ॥ २०. ५६ ॥

ஸுதர்சனன் கூறியது—

20.24. 'அரசசிரேஷ்டர்களே! எது நிகழ வேண்டுமோ அதுவே நிகழும்; வேறுவிதம் நிகழாது; இதில் யோசனை செய்ய என்ன இருக்கிறது? நான் எப்பொழுதும் தெய்வாதீனத்தை நம்பியிருப்பவன்.

20.28. 'நான் சக்தியுள்ளவனோ சக்தியில்லாதவனோ எப்படிப் பட்டவனோ அப்படி (பராசக்தி) என்னை வைத்துள்ள நிலையில் நான் இருக்கிறேன். அரசர்களே! இப்பொழுது ஸ்வயம்வரத்திற்கு நான் வந்துள்ளதும் அவளுடைய கட்டளையாலேயே.'

20.50. இதற்கடுத்த நாள் சுபமுகூர்த்தத்தில் சுபாகு மன்னனால் அரசர்களெல்லாம் அழகிய சுயம்வர மண்டபத்திற்கு அழைக்கப்பட்டார்கள்.

20.56. மங்கள ஸ்நானம் செய்து வெண்பட்டுடுத்து ஆபரணங்கள் பூண்டு இலுப்பப்பூ மாலையணிந்து நன்கு அலங்கரித்துக் கொண்டிருந்த தன் மகளைப் பார்த்து காசி ராஜன் பின்வருமாறு கூறினன்.

गुणवान् रूपसंपन्नः कुलीनश्च नृपोत्तमः ।
तव चित्ते वसेद्यस्तु तं वृणुष्व सुमध्यमे ॥ २०. ५९ ॥

शशिकलोवाच—

नाऽहं दृष्टिपथे राज्ञां गमिष्यामि पितः किल ।
कामुकानां नरेशानां गच्छन्त्यन्याश्च योषितः ॥ २०. ६२ ॥

सुदर्शनो मया पूर्वं वृतः सर्वात्मना पितः ।
तमृते नान्यथा कर्तुमिच्छामि नृपसत्तम ॥ २०. ७० ॥

विवाहविधिना देहि कन्यादानं शुभे दिने ।
सुदर्शनाय नृपते यदीच्छसि शुभं मम ॥ २०. ७१ ॥

20.59. இடையழகிய பெண்ணே! குணவானுகவும், அழகுமிக்கவனுகவும், நல்ல குலத்தில் பிறந்தவனுகவும் எந்த அரசகுமாரனுகவும் உன் சித்தத்தில் குடிகொண்டிருந்தால் நீ அவனே வரிக்கலாம்.

சசிகலா கூறியது—

20.62. 'அப்பா! மற்ற பெண்கள் காமவசப்பட்டு அரசர்களின் முன்னிலேயில் செல்லுகிருர்கள். நான் அவர்கள் கண்ணில் படும்படி செல்லமாட்டேன்.

20.70. 'அப்பா! அரசர்களிற் சிறந்தவரே! என் முழுமனத்துடன் ஏற்கெனவே என்னுல் ஸுதர்சனன் வரிக்கப் பட்டுள்ளார். அவரைவிட்டு வேருெருவரிடம் மனதைச் செலுத்த நான் சம்மதியேன்.

20.71. 'என்னுடைய நன்மையை விரும்பினுல் நீங்கள் நல்லநாளில் ஸுதர்சனனுக்கு என்னே விவாக விதிப் படி கன்யாதானம் செய்து கொடுங்கள்'.

व्यास उवाच—

सुबाहुरपि तच्छ्रुत्वा युक्त-मुक्तं तथा तदा ।
चिन्ताविष्टो बभूवाशु किं कर्तव्यमितः परम् ॥ २१. १ ॥

इति चिन्तापरो राजा जगाम नृपसन्निधौ ।
प्रणम्य तानुवाचाथ प्रश्रयावनतो नृपः ॥ २१. ६ ॥

किं कर्तव्यं नृपाः कामं नैति मे मण्डपे सुता ।
बहुशः प्रेर्यमाणाऽपि सा मात्राऽपि मयाऽपि च ॥ २१. ७ ॥

मूर्ध्ना पतामि पादेषु राज्ञां दासोऽस्मि सांप्रतम् ।
पूजादिकं गृहीत्वाऽद्य व्रजन्तु सदनानि वः ॥ २१. ८ ॥

வியாஸர் கூறியது—

21.1. அவளால் பொருத்தமாய்க் கூறப்பட்ட அவ் வார்த்தையைக் கேட்டு சுபாகு மிகுந்த கவலையிலாழ்ந்து, இனி என்ன செய்யத்தகும் என்று யோசிக்கலானான்.

21.6. இப்படி யோசித்துக் கொண்டு அவன் அரசர்கள் முன்னிலையை நாடி அவர்களை வணங்கித் தலை குனிந்து பின்வருமாறு கூறினான்.

21.7 'அரசர்களே ! என் புத்திரி பலமுறை என்னாலும் அவளுடைய அன்னையாலும் வேண்டப்பட்டும் ஸ்வயம்வர மண்டபத்திற்கு வர இசையவில்லை. என்ன செய்யலாம் ?

21.8. 'என் தலையால் உங்கள் பாதங்களில் வணங்குகிறேன். அரசர்களாகிய உங்களுடைய அடிமை நான். இப்பொழுது மரியாதைகளைப் பெற்றுக் கொண்டு நீங்கள் உங்கள் கிருகங்களுக்குச் செல்லவேண்டும் எனப் பிரார்த்திக்கிறேன்.

अनुग्राह्योऽस्मि वः कामं दासोऽहमिति सर्वथा ।
सुता सुतेव मन्तव्या भवद्भिः सर्वथा मम ॥ २१.१२ ॥

श्रुत्वा सुबाहुवचनं नोचुः केचन भूमिपाः ।
युधाजित्क्रोध-ताम्राक्षस्तमुवाच रुषान्वितः ॥ २१.१३ ॥

अवमान्य नृपान् सर्वांस्त्वं किं सुदर्शनाय वै ।
दातुमिच्छसि पुत्रीं च किमनार्यमतः परम् ॥ २१.१६ ॥

परिचिन्तय धर्मं त्वं राज्यनीतिं च शाश्वतीम् ।
कुरु कार्यं यथा योग्यं मा कृथा मतिमन्यथा ॥ २१.२६ ॥

अन्यथाऽहं हरिष्येऽद्य बलात्कन्या-मिमां शुभाम् ।
मा विरोधं सुदुःसाध्यं गच्छ पार्थिवसत्तम ॥ २१.२९ ॥

21.12. 'நான் உங்களுடைய தாசனுதலால் எப்படியும் அருள் புரிய வேண்டும். என்னுடைய புத்திரியை இனி நீங்கள் உங்களுடைய புத்திரியாகக் கருதவேண்டும்.'

21.13. சுபாகுவின் பேச்சைக்கேட்ட அரசர்கள் ஒருவரும் ஒன்றும் பேசவில்லை. யுதாஜித்து மட்டும் கோபத்தால் கண்சிவந்து ரோஷத்துடன் பின்வருமாறு பேசினுன்.

21.16. 'அரசர்களையெல்லாம் அவமதித்துவிட்டு ஸுதர்சனனுக்கு நீ உன் பெண்ணைக் கொடுக்க விரும்புகிருய்? இது ஆரியர்களுக்குத் தகாத செயல்.

21.26. 'சாசுவதமான தருமத்தையும் இராஜநீதியையும் செவ்வையாக ஆலோசித்துப்பார்த்து எது பொருத்தமாயிருக்குமோ அப்படி காரியத்தைச் செய். வேறுவிதமான எண்ணத்திற்கு இடங்கொடாதே.

21.29. 'இல்லையேல் நான் இவ்வழகிய பெண்ணை பலாத்காரமாகத் தூக்கிச் செல்வேன். அரசசிரேஷ்டரே! கடத்தற்கரிய விரோதத்தைச் சம்பாதித்துக் கொள்ள வேண்டாம்.'

युधाजिता समादिष्टः सुबाहुः शोकसंयुतः।
निःश्वसन् भवनं गत्वा भार्यां प्राह शुचावृतः ॥ २१. ३० ॥

पुत्रीं ब्रूहि सुधर्मज्ञे कलहे समुपस्थिते।
किं कर्तव्यं मया शक्यं त्वद्वशोऽस्मि सुलोचने ॥ २१. ३१ ॥

सा श्रुत्वा पतिवाक्यं तु गत्वा प्राह सुतान्तिकम्।
वत्से राजातिदुःखार्तः पिता तेऽद्यापि वर्तते ॥ २१. ३२ ॥

त्वदर्थे विग्रहः कामं समुत्पन्नोऽद्य भूभृताम्।
अन्यं वरय सुश्रोणि सुदर्शनमृते नृपम्। ॥ २१. ३३ ॥

इति मात्रा बोधितां तां पश्चाद्राजाप्यबोधयत्।
उभयोर्वचनं श्रुत्वा निर्भयोवाच कन्यका ॥ २१. ३६ ॥

21.30. யுதாஜித்தால் இவ்வாறு கூறப்பட்ட சுபாகு கவலையிலாழ்ந்து பெருமூச்சுவிட்டுக் கொண்டு அரண்மனை சென்று துக்கத்துடன் மனைவியிடம் பின்வருமாறு கூறினன்.

21.31. 'தர்மம் அறிந்தவளே! அழகிய கண்படைத்தவளே! கலகம் விளைய விருப்பதைப் புத்திரியிடம் தெரிவி. என்னல் இப்பொழுது செய்யத்தக்கது எது? நான் உன் வசத்திலிருக்கிறேன்.'

21.32—33. அவள் கணவன் சொல்லைக்கேட்டுப் பெண்ணின் சமீபம் சென்று 'குழந்தாய்! உன் பிதாவாகிய அரசர் இப்பொழுது மிகுந்த துக்கத்திலாழ்ந்திருக்கிருர். உன் பொருட்டு அரசர்களிடை இப்பொழுது சச்சரவு ஏற்பட்டிருக்கிறது. அழகிய இடைபடைத்தவளே! ஸுதர்சனனை விட்டு விட்டு நீ வேருெரு அரசனை உன் பர்த்தாவாக வரிக்க வேண்டும்' என்று கூறினுள்.

21.36. இவ்வாறு தாயாரால் புத்தி கூறப்பட்டபின் அரசனுலும் போதிக்கப்பட்டாள். அப்பெண் இரண்டு பேருடைய சொல்லையுங் கேட்டு பயமில்லாமல் பின்வருமாறு பதிலளித்தாள்.

सन्देहे नैव मज्जामि मूर्खकृत्यमिदं यतः ।
मया सुदर्शनः पूर्वं धृतश्चेतसि नाऽन्यथा ।
कारणं पुण्यपापानां मन एव महीपते ॥ २१.४९ ॥

विवाहं कुरु रात्रौ मे वेदोक्तविधिना नृप ।
पारिबर्हं यथा योग्यं दत्त्वा तस्मै विसर्जय ॥ २१.५६ ॥

गमिष्यति गृहीत्वा मां ध्रुवसन्धि-सुतः किल ।
कदाचित्ते नृपाः क्रुद्धाः संग्रामं कर्तुमुद्यताः ।
भविष्यन्ति तदा देवी साहाय्यं नः करिष्यति ॥ २१.५७ ॥

इति तस्या वचः श्रुत्वा राजाऽसौ कृतनिश्चयः ।
मतिं चक्रे तथा कर्तुं विश्वासं प्रतिपद्यत ॥ २१.६० ॥

21.49. 'நான் சந்தேகத்தில் முழுகவில்லை. ஏனெனில் இப்பொழுது நீங்கள் கூறும் இது அறியாதவர்களுடைய செயல். நான் ஏற்கனவே ஸுதர்சனனை மனதில் திடமாய் ஏற்றுக் கொண்டு விட்டேன். அது வேறுபடாது. அரசே! புண்ணியத்திற்கும் பாவத்திற்கும் மனதே காரணம்.

21.56. 'வேதத்தில் கூறியுள்ள முறைப்படி இரவில் என்னுடைய விவாகத்தை நடத்தி அவருக்குப் பொருத்தமான சீரையும் கொடுத்து அனுப்பிவிடுங்கள்.

21.57. 'துருவஸந்தியின் குமாரனுகிய அவர் என்னை அழைத்துக் கொண்டு போய்விடுவார். போர் செய்வதற்கு முனைந்துள்ள அரசர்கள் ஒருவேளை கோபங்கொள்வார்களேயானால் தேவி எங்களுக்கு உதவி செய்வாள்.'

21.60. அவளுடைய இவ்வார்த்தையைக்கேட்டு அரசன் அதில் நம்பிக்கை கொண்டு அவ்வாறே செய்ய நிச்சயித்தான்.

सुबाहुरप्यार्यजनैः समेतश्चकार कार्याणि विवाहकाले ।
पुत्रीं समाहूय गृहे सुगुप्ते पुरोहितै-र्वेदविदां वरिष्ठैः
॥ २२. ७ ॥

स्नानादिकं कर्म वरस्य कृत्वा विवाहभूषाकरणं तथैव ।
आनाय्य वेदी रचिते गृहे वै तस्यार्हणां भूमिपतिश्चकार
॥ २२. ८ ॥

सविष्टरं चाचमनीय-मर्घ्यं वस्त्रद्वयं गामथ कुण्डले द्वे ।
समर्प्य तस्मै विधिवन्नरेन्द्र ऐच्छत्सुतादानमहीनसत्त्वः
॥ २२. ९ ॥

सोऽप्यग्रहीत्सर्वमदीनचेता शशाम चिन्ताऽथ मनोरमायाः ।
कन्यां सुकेशीं निधिकन्यकासमां मेने तदाऽऽत्मान-
मनुत्तमंच ॥ २२. १० ॥

22.7. ஸுபாகு பெரியோர்களுடன் கூடி அரண்மனையில் நன்ருகக் காக்கப்பட்ட ரகசியமான இடத்தில் புத்திரியை அழைத்து வைத்துக்கொண்டு வேதமுணர்ந்தவர்களிற் சிறந்தவர்களான புரோகிதர்களைக் கொண்டு விவாகத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தான்.

22.8–9. வரனுக்கு மங்களஸ்நானம் முதலியவற்றைச் செய்வித்து விவாஹ அலங்காரங்களையும் செய்து கலியாண மண்டபத்திற்கழைத்துக் கொண்டுபோய் ஆஸனத்தில் வீற்றிருக்கச் செய்து ஆசமனீயம், அர்க்கியம், மதுபர்க்கம், இரண்டு வஸ்திரங்கள், குண்டலங்கள் ஆகியவற்றை முறைப்படி அளித்து மரியாதை செய்துச் செல்வம் மிகுந்த அரசசிரேஷ்டன் கன்னியாதானத்தைச் செய்ய விரும்பினுன்.

22.10. ஸுதர்சனன் அனைத்தையுமேற்று மனேரமாவின் சித்தத்தை மகிழ்வித்தான். குபேரனுடைய பெண் போன்றவளும் அழகிய கேசம்படைத்தவளுமான கன்னிகையைத் தான் மருமகளாயடைவதின் சிறப்பையெண்ணி அவள் பேருவகை பூத்தாள்.

सुपूजितं भूषणवस्त्रदानै-र्वरोत्तमं तं सचिवास्तदानीम् ।
निन्युश्च ते कौतुक-मण्डपान्तर्मुदान्विता वीतभयाश्च सर्वे
॥ २२. ११ ॥

समाप्तभूषां विधिवद्विधिज्ञाः स्त्रियश्च तां राजसुतां सुयाने ।
आरोप्य निन्यु-र्वरसंनिधानं चतुष्कयुक्ते किल मण्डपे वै
॥ २२. १२ ॥

अग्निं समाधाय पुरोहितः स हुत्वा यथावच्च तदन्तराले ।
आह्वाययत्तौ कृतकौतुकौ तु वधूवरौ प्रेमयुतौ निकामम्
॥ २२. १३ ॥

लाजाविसर्गं विधिवद्विधाय कृत्वा हुताशस्य प्रदक्षिणांच ।
तौ चक्रतुस्तत्र यथोचितं तत्सर्वं विधानं कुलगोत्रजातम्
॥ २२. १४ ॥

22.11. ஆபரணம், வஸ்திரம் முதலிய தானங்களால் பூஜிக்கப் பெற்ற சிறந்த வரனை மந்திரிமார்களெல்லோரும் கண்டு மகிழ்ந்து சிறிதும் பயமில்லாதவர்களாய்க் கலியாண மண்டபத்தின் நடுவிற்களைத்து வந்தார்கள்.

22.12. அப்பொழுது விவாக முறைகளையறிந்தவர்களாகிய ஸ்திரீகள் எல்லா அலங்காரங்களும் பூர்ணமான ராஜ கன்னிகையைச் சிவிகையிலேற்றிக் கொண்டு வந்து மண்டபத்திலிருக்கும் வரனுடைய முன்பு இருக்கச்செய்தனர்.

22.13–14. அக்கினியை மூட்டிப் புரோகிதர் அதில் விதிப்படி ஹோமத்தைச் செய்வித்து மணக்கோலத்துடன் பிரேமை மிகுந்து மகிழ்வுடனிருக்கும் பெண்ணையும் மாப்பிள்ளையையும் பொரியை முறைப்படி ஹோமம் செய்யச் சொல்லி அக்கினியைப் பிரதக்ஷணமும் செய்யச் சொல்லி குலத்திற்கும் கோத்திரத்திற்கும் தகுந்தபடி எல்லாச் சடங்குகளையும் செய்வித்தார்.

शतद्वयं चाश्वयुजां रथानां सुभूषितं चापि शरौघसंयुतम् ।
ददौ नृपेन्द्रस्तु सुदर्शनाय सुपूजितं पारिबर्हं विवाहे
॥ २२. १५ ॥

अदात्पुनर्दासिसहस्रमेकं सर्वायुधैः संभृतभूषितं च ।
रत्नानि वासांसि यथोचितानि दिव्यानि चित्राणि
तथाऽऽविकानि ॥ २२. १८ ॥

मनोरमां राजसुतां प्रणम्य जहाद वाक्यं विहितांजलिः पुरः
दासोऽस्मि ते राजसुते वरिष्ठे तद्-ब्रूहि यत्स्यात्तु मनोगतं ।
ते ॥ २२. २१ ॥

तं चारुवाक्यं निजगादि साऽपि स्वस्त्यस्तु ते भूपकुलस्य
वृद्धिः ।
सम्मानिताऽहं मम सूनवे त्वया दत्ता यतो रत्नवरा
स्वकन्या ॥ २२. २२ ॥

22.15. நன்கலங்கரிக்கப்பெற்ற குதிரைகள் பூட்டின இருநூறு தேர்களையும் பாணங்கள் நிறைந்த தூணீரத்தையும் அரசசிரேஷ்டன் விவாகத்தில் ஸுதர்சனனுக்கு மரியாதையுடன் சீராக அளித்தான்.

22.18. மேலும் ஆயுதங்களுடனும் ஆபரணங்களுடனும் ஆயிரம் பணியாட்களையும் ரத்தினங்களையும் வஸ்திரங்களையும் திவ்வியமான வேலைப்பாடமைந்த அழகிய கம்பளங்களையும் அளித்தான்.

22.21. பின்பு மனோரமாவின் முன் சென்று வணங்கி கைகூப்பிக் கொண்டு, 'சிறப்புமிக்க ராஜபுத்திரியே! நான் உன் அடிமை. உன் மனதில் ஏதேனும் விருப்பமிருந்தால் தெரிவிக்க வேண்டும்' என்று அரசன் கூறினான்.

22.22. அந்த அழகிய வார்த்தையைக்கேட்டு அவளும் 'அரசே! உன் குலம் விருத்தியாகட்டும். என்னுடைய மகனுக்குக் கன்னியாரத்தினமாகிய உன் மகளைக் கொடுத்ததால் நான் சிறந்த வெகுமானத்தையடைந்திருக்கிறேன்.

अहोऽतिचित्रं नृपतेश्चरित्रं परं पवित्रं तव किं वदामि।
यद् भ्रष्टराज्याय सुताय मेऽद्यदत्ता त्वया पूज्यसुता वरिष्ठा
॥ २२. २४ ॥

सुतोऽपि मे नून-मवाप्य राज्यं साकेतपुर्यां प्रचरिष्यतीह।
विसर्जयाऽस्मान्निजसद्म गन्तुं शिवं भवानी तव संविधास्यति
॥ २२. २५ ॥

न काऽपि चिन्ता मम भूप वर्तते संचिन्तयन्त्याः परमाम्बिकां वै।
दोषा गता विविधवाक्यपदै रसालै-रन्योन्यभाषणपदै-
रमृतोपमैश्च ॥ २२.३४ ॥

22.24. 'அரசே! உம்முடைய நடத்தையின் சிறப்பு ஆச்சரியமானது; மிகவும் புனிதமானது; அதைப்பற்றி நான் என்ன கூறப்போகிறேன்? அரசை இழந்திருந்த என் மகனுக்கு இப்பொழுது சிறந்தவளும் பூஜித்தற்குரியவளு மான உமது பெண்ணைக் கொடுத்தீரல்லவா?

22.25. 'நிச்சயமாக இனி என் புத்திரன் அரசை மீண்டும் பெற்று அயோத்தியாபுரியில் வாழப்போகிறான். எங்கள் வீடு செல்ல இப்பொழுது அனுமதிகொடும். பவானி உமக்கு எல்லா மங்களங்களையும் அளிப்பாள்.

22.34. 'அரசே! பரமாம்பிகையை நன்கு நினைத்துக் கொண்டிருக்கும் எனக்கு ஒரு கவலையும் இல்லை. (உங்க ளுடைய) அன்யோன்ய ஸம்பாஷணையின் அமுதம் போன்ற சொற்களாலும், அன்பு ரஸம் நிறைந்த பலவிதமான பதங் களாலும் வாக்கியங்களாலும், தோஷங்கள் ஓடிப் போய் விட்டன.

एवं विवाहकार्याणि कृत्वा सर्वाणि पार्थिवः।
पारिबर्हं प्रदत्त्वाऽथ मन्त्रयन् सचिवैः सह ॥ २३. २ ॥

दूतैस्तु कथितं श्रुत्वा मार्गसंरोधनं कृतम्।
बभूव विमना राजा सुबाहु-रमितद्युतिः ॥ २३. ३ ॥

सुदर्शन-स्तदोवाच श्वशुरं संहितव्रतः।
अस्मान् विसर्जयाशु त्वं गमिष्यामोह्यशंकिताः ॥ २३. ४ ॥

नृपेभ्यश्च न कर्तव्यं भयं किंचित्त्वयाऽनघ।
जगन्माता भवानी मे साहाय्यं वै करिष्यति ॥ २३. ६ ॥

तस्येति मतमाज्ञाय जामातु-र्नृपसत्तमः।
विससर्ज धनं दत्त्वा प्रतस्थे सोऽपि सत्वरः ॥ २३. ७ ॥

23.2—3. இவ்வாறு விவாஹ காரியங்களனைத்தையும் பூர்த்தி செய்தபின் அளவிலா ஒளிபொருந்திய சுபாகு மன்னன் சீர்வரிசைகளைக் கொடுத்து மந்திரிகளுடன் ஆலோசித்துக் கொண்டிருக்கையில் வழியில் தடங்கல் (அரசர்கள்) உண்டாக்கப்பட்டிருப்பதை தூதர்கள் சொல்லக்கேட்டு மனம் கலங்கியவனானான்.

23.4—6. விரதம் பூண்டவனை ஸுதர்சனன் அப்பொழுது தன் மாமனாரை நோக்கி, 'விரைவில் எங்களை நீங்கள் அனுப்பி விடுங்கள். சந்தேகமின்றி நாங்கள் செல்லுகிறோம். பரிசுத்தமனம் படைத்த நீங்கள் அரசர்களிடம் சிறிதும் அஞ்சவேண்டாம். ஜகன்மாதா பவானி எனக்கு நிச்சயம் சகாயம் புரிவாள்' என்று கூறினான்.

23.7. மாப்பிள்ளையின் இந்த அபிப்பிராயத்தை யறிந்த அரசசிரேஷ்டன் அவனுக்குப் பொருளைக் கொடுத்து விரைவில் புறப்பாடு செய்வித்தான்.

बलेन महताऽऽविष्टो ययावनु नृपोत्तमः।
सुदर्शनो वृतस्तत्र चचाल पथि निर्भयः ॥ २३. ८ ॥

रथैः परिवृतः शूरः सदारो रथसंस्थितः।
गच्छन् ददर्श सैन्यानि नृपाणां रघुनन्दनः ॥ २३. ९ ॥

सुबाहुरपि तान्वीक्ष्य चिन्ताविष्टो बभूव ह।
विधिवत्स शिवां चित्ते जगाम शरणं मुदा ॥ २३. १० ॥

जजापैकाक्षरं मन्त्रं कामराजमनुत्तमम्।
निर्भयो वीतशोकश्च पत्न्या सह नवोदया ॥ २३. ११ ॥

ततः सर्वे महीपालाः कृत्वा कोलाहलं तदा।
उत्थिताः सैन्यसंयुक्ता हन्तुकामास्तु कन्यकाम् ॥ २३. १२ ॥

23.8. பெரிய சேனையுடன் அரசனும் தொடர்ந்தான். சேனையால் சூழப்பெற்ற ஸுதர்சனன் பயமில்லாமல் வழியே ஏகினான்.

23.9. ரகுநந்தனனும் சூரனுமாகிய அவன் மனைவியுடன் தேரிலேறித் தேர்ப்படை சூழச் செல்லுகையில் பிற அரசர்களின் சைனியங்களைக் கண்ணுற்றான்.

23.10. ஸுபாகுவும் அச்சைனியங்களைக் கண்டு கவலை மேலிட்டவனானான். ஸுதர்சனன் மங்கள வடிவினளான அம்பிகையை மகிழ்வுடன் மனதில் முறைப்படி வாழ்த்தி அவளைச் சரணடைந்தான்.

23.11. ஒப்புயர்வற்ற ஓரெழுத்து மந்திரமாகிய (க்லீம் எனும்) காமராஜபீஜத்தை ஜபித்துக்கொண்டு பயமும் கவலையுமில்லாதவனாய்ப் புதிதாய் மணந்த பத்தினியுடன் அவன் சென்றான்.

23.12. அரசர்களெல்லாம் கோலாகலத்துடன் சைனியங்கள் சூழக் கிளம்பிக் கன்னிகையைக் கவரும் எண்ணத்துடன் முன்வந்தார்கள்.

संमर्दः सुमहांस्तत्र संप्रवृत्तः सुमार्गणैः ।
काशीपतिस्तदा तूर्णं सैन्येन बहुना वृतः ॥ २३. १८ ॥

साहाय्यार्थं जगामाशु जामातर-मनिन्दितम् ।
एवं प्रवृत्ते संग्रामे दारुणे रोमहर्षणे ॥ २३. १९ ॥

प्रादुर्बभूव सहसा देवी सिंहोपरि स्थिता ।
नानायुधधरा रम्या वराभूषण-भूषिता ॥ २३. २० ॥

दिव्याम्बरपरीधाना मन्दारस्त्रक्सुसंयुता ।
तां दृष्ट्वा तेऽथ भूपाला विस्मयं परमं गताः ॥ २३. २१ ॥

सुदर्शनः सुबाहुश्च तामालोक्य वराननाम् ।
प्रणामं चक्रतुस्तस्या मुदितौ दर्शनेन च ॥ २३. २५ ॥

ननाद च तदा सिंहो गजास्त्रस्ताश्चकम्पिरे ।
ववुर्वाता महाघोरा दिशश्चासन् सुदारुणाः ॥ २३. २६ ॥

23.18.-21. வழியில் பெரிய நெருக்கடி ஏற்பட்டபொழுது காசிராஜன் தன்னுடைய பெரிய சேனையுடன் குற்றமற்ற தன் மாப்பிள்ளைக்குதவி புரிய விரைந்தார். மயிர்சிலிர்க்கும்படி கோரமான யுத்தம் தொடங்கியதும் தேவியானவள் திவ்விய வஸ்திரந் தரித்தவளாயும் மந்தார மாலை சூடியவளாயும் திவ்விய ஆபரணங்களை அணிந்தவளாயும் பலவிதமான ஆயுதங்களை ஏந்தியவளாயும் சிங்க வாகனத்தின் மேல் பிரஸன்னமானாள். அவளைப்பார்த்து அரசர்கள் ஆச்சரியத்தில் மூழ்கினர்.

23.25. ஸுதர்சனனும் ஸுபாகுவும் சிறந்த முகத்துடன் விளங்கிய அந்த தேவியின் தரிசனத்தால் மகிழ்ச்சி பொங்க அவளை நமஸ்கரித்தனர்.

23.26. அப்பொழுது சிங்கம் கர்ஜித்தது; யானைகள் பயந்து நடுங்கின; மிகவும் கோரமாய்க் காற்று விசிற்று; திசைகள் பயங்கரமாய் விளங்கின.

युधाजित्तु सुसंक्रुद्धस्तानुवाच महीपतीन् ।
किं स्थिता भयसन्त्रस्ता निघ्नन्तु कन्यकान्वितम्
॥ २३. ३० ॥

अवमन्य च नः सर्वान् वलहीनो बलाधिकान् ।
कन्यां गृहीत्वा संयाति निर्भयस्तरसा शिशुः ॥ २३. ३१ ॥

किं भीताः कामिनीं वीक्ष्य सिंहोपरि सुसंस्थिताम् ।
नोपेक्ष्यो हि महाभागा हन्तव्योऽत्र समाहितैः ॥ २३. ३२ ॥

हत्वैनं संग्रहीष्यामः कन्यां चारुविभूषणाम् ।
नायं केसरिणाऽऽदत्तां छेत्तुमर्हति जम्बुकः ॥ २३. ३३ ॥

एवं युद्धे प्रवृद्धेऽथ चुकोप चण्डिका भृशम् ।
दुर्गा देवी मुमोचाथ वाणान् युधाजितं प्रति ॥ २३. ३७ ॥

23.30. யுதாஜித்து மிகுந்த கோபத்துடன் அங்கிருந்த அரசர்களை நோக்கி, 'ஏன் பயத்தால் நடுங்கிக் கொண்டு நிற்கிறீர்கள்? கன்னிகையைச் சூழ்ந்திருப்பவர்களைக் கொல்லுங்கள்.

23.31. 'பலமற்றவனாகிய ஒரு சிசு பயமில்லாமல் பலம் மிக்கவர்களாகிய நம்மை யெல்லாம் அவமதித்து விட்டுக் கன்னிகையைக் கூட்டிக் கொண்டு போகிறான்.

23.32. 'சிங்கத்தின்மேல் வீற்றிருக்கும் பெண்பிள்ளையைக் கண்டு பயப்படுகிறீர்களா? மகாபாக்கியசாலிகளே! அவனை அசட்டையாய் விட்டுவிடாமல் சூழலுடன் கொல்ல வேண்டும்.

23.33. 'அவனைக் கொன்று ஆபரணங்களால் நன்கு அலங்கரிக்கப்பட்ட கன்னிகையை நாம் கிரகிப்போம். சிங்கத்தால் கொள்ளத்தக்க இரையை ஒரு நரி தடுப்பது தகாது.'

23.37. இவ்வாறு யுத்தம் தொடங்கிய பொழுது சண்டிகா துர்க்காதேவியானவள் மிகவும் கோபித்து யுதாஜித்தின் மேல் பாணங்களை ஏவினாள்.

शत्रुजिन्निहतस्तत्र युधाजिदपि पार्थिवः ।
पतितौ तौ रथायां तु जयशब्दस्तदाऽभवत् ॥ २६. ३९ ॥

सुबाहुरपि तं दृष्ट्वा निधनं संयुगे तयोः ।
तुष्टाव परमप्रीतो दुर्गतिनाशिनीम् ॥ २३. ४१ ॥

सुबाहुरुवाच—

नमो देव्यै जगद्धात्र्यै शिवायै सततं नमः ।
दुर्गायै भगवत्यै ते कामदायै नमो नमः ॥ २३. ४२ ॥

ज्ञातासि देवि सततं किल भावयुक्ता भक्तानुकंपनपराऽमरवर्ग-पूज्या ।
किं वर्णयामि तव देवि चरित्रमेत-द्यद्रक्षितोऽस्ति विषमेऽत्र सुदर्शनोऽयम् ॥ २३. ४९ ॥

23.39. சத்ருஜித்தும் அரசன் யுதாஜித்தும் கொல்லப் பட்டனர். அவர்கள் தேரிலிருந்து வீழ்ந்தனர். ஜய சப்தம் கிளம்பிற்று.

23.41. யுத்தத்தில் அவர்கள் மாண்டதைக்கண்ட ஸுபாகு பரமப்ரீதியுடன் துர்க்கதியை நாசம் செய்யும் தேவியைத் துதித்தான்.

ஸுபாகு கூறியது—

23.42. தேவிக்கு நமஸ்காரம். உலகைப் போஷிக்கும் மங்களவடிவினளுக்கு நமஸ்காரம். விரும்பியதையளிக்கும் பகவதி துர்க்கைக்கு நமஸ்காரம்.

23.49. தேவி! எப்பொழுதும் நீ பக்தர்களுக் கிரங்கி அருள் புரியும் இயல்புடன் கூடியவள். தேவர் கூட்டங்களால் பூஜிக்கப்பெற்றவள். சங்கடமான நிலே யிலிருந்து இந்த ஸுதர்சனனைக் காப்பாற்றிய உன்னுடைய சரித்திரத்தை வர்ணிக்க என்னல் எங்ஙனம் இயலும்?

शक्तासि जन्म-मरणादि भयान्विहन्तुं किं चित्रमत्र किल
भक्तजनस्य कामम्
त्वं गीयसे जननि भक्तजनैरपारा त्वं पापपुण्यरहिता
सगुणाऽगुणा च ॥ २३. ५३ ॥

नता सुदर्शनेनाथ स्तुता च बहुविस्तरम् ।
अन्तर्हितां तु तां दृष्ट्वा राजानः सर्वं एव ते ॥ २४. २४ ॥

प्रणेमुस्तं समागम्य यथा शक्रं सुरास्तथा
ऊचुः सर्वे महीपाला अयोध्याधिपतिस्तदा ॥ २४. २५ ॥

पृच्छामस्त्वं महाभाग सर्वज्ञोऽसि महामते ।
केयं शक्तिः कुतो जाता किं प्रभावा वदस्व तत् ॥ २४. ३१ ॥

23.53. பிறப்பு, இறப்பு முதலிய துன்பங்களைத் துடைக்கும் வல்லமை வாய்ந்தவள் நீ. பக்தர்களின் துன்பத்தை நீ போக்குவதில் என்ன ஆச்சரியம்? தாயே! உன்னடியார்கள் உன்னை அளவிடற்கரியவளென்றும், புண்ணியத்திற்கும் பாவத்திற்கும் அப்பாற்பட்டவளென்றும், குணங்களுடன் கூடியவளாயினும் குணங்களைக் கடந்தவளென்றும் துதிக்கிறார்கள்.

24.24–25. ஸுதர்சனனும் அவளை வணங்கி மிகவும் விஸ்தாரமாய்த் துதித்த பின் அவள் அங்கேயே மறைந்ததைக் கண்ணுற்ற அரசர்களெல்லாம் அயோத்தியரசனாகிய ஸுதர்சனனை யணுகி இந்திரனை தேவர்கள் வணங்குவது போல் வணங்கிப் பின் வருமாறு கூறினர்.

24.31. மகானுபாவனே! மகாமதிமானே! நீ எல்லாமறிந்தவன். ஆகையால் உன்னைக் கேட்கின்றோம். இந்த சக்தியானவள் யார்? எங்கிருந்து தோன்றினாள்? அவளுடைய பெருமை என்ன? எங்களுக்கு அதைக் கூறுதல் வேண்டும்.

सुदर्शन उवाच—

किं ब्रवीमि महीपालास्तस्याश्चरितमुत्तमम्।
ब्रह्मादयो न जानन्ति सेशाः सुरगणास्तथा ॥ २४. ३५ ॥

सर्वस्याद्या महालक्ष्मी-र्वरेण्या शक्तिरुत्तमा ।
सात्त्विकीयं महीपाला जगत्पालन-तत्परा ॥ २४. ३६ ॥

सृजते या रजोरूपा सत्त्वरूपा च पालने।
संहारे च तमोरूपा त्रिगुणा सा सदा मता ॥ २४. ३७ ॥

निर्गुणा परमा शक्तिः सर्वकामफलप्रदा ।
सर्वेषां कारणं सा हि ब्रह्मादीनां नृपोत्तमाः ॥ २४. ३८ ॥

ஸுதர்சனன் கூறியது—

24.35. அரசர்களே! அவளுடைய உத்தமமான சரித்திரத்தை நான் உங்களுக்கு என்னவென்று சொல்லுவேன்? தேவர் கூட்டங்களும் அவர்களை ஆள்பவர்களும் பிரம்மா முதலியவர்களுங்கூட அவளுடைய பெருமையை அறியமாட்டார்கள்.

24.36. அனைத்திற்கும் ஆதியாய் உத்தம சக்தியாய் மகாலக்ஷ்மியாய்ச் சிறந்து விளங்குபவள் அவள். அரசர்களே! உலகை இரக்ஷிக்கும் ஸாத்விகீ சக்தி இப்பொழுது தோன்றியவள்.

24.37. அவள் முக்குண வடிவினளாயிருந்துகொண்டு ரஜோ ரூபத்தில் சிருஷ்டிப்பவளாயும், ஸத்துவரூபத்தில் இரக்ஷிப்பவளாயும், தமோரூபத்தில் ஸம்ஹரிப்பவளாயும் இருக்கிருள்.

24.38. அரசசிரேஷ்டர்களே! அவளே நிர்க்குணமான பராசக்தியாயும் வேண்டுவோர் வேண்டும் பயன்களை அளிப்பவளாயும் பிரம்மா முதலிய எல்லோருக்கும் காரணமாயும் உள்ளவள்.

निर्गुणा सर्वथा ज्ञातु-मशक्ता योगिभि-र्नृपाः ।
सगुणा सुखसेव्या सा चिन्तनीया सदा बुधैः ॥ २४. ३९॥

तन्निशम्य वचस्तस्य राजानो भक्तितत्पराः ।
तां मत्वा परमां शक्तिं निर्ययुः स्वगृहान् प्रति ॥ २४. ४४ ॥

सुबाहुरगमत्काश्यां तमापृच्छ्य सुदर्शनम् ।
सुदर्शनोऽपि धर्मात्मा निर्जगाम सुकोशलान् ॥ २४. ४५ ॥

मन्त्रिणस्तु नृपं श्रुत्वा हतं शत्रुजितं मृधे ।
जितं सुदर्शनं चैव बभूवुः प्रेमसंयुताः ॥ २४. ४६ ॥

गत्वाऽयोध्यां नृपश्रेष्ठो गृहं राज्ञः सुहृद्वृतः ।
शत्रुजिन्मातरं प्राह प्रणम्य शोकसंकुलाम् ॥ २५. १ ॥

24.39. அரசர்களே! அவளுடைய நிர்க்குண ஸ்வரூபத்தை யோகிகள் கூட ஒருபொழுதும் அறியமாட்டார்கள். புத்திமான்களால் எப்பொழுதும் தியானித்தற்கும் எளிதில் சேவித்தற்கும் உரியது அவளுடைய ஸகுணஸ்வரூபமே.

24.44. அரசர்கள் அவனுடைய அவ்வார்த்தையைக் கேட்டு பக்தி மேலிட்டவர்களாய்ப் பராசக்தியைப் போற்றித் தத்தம் வீடுகளுக்கு ஏகினர்.

24.45. ஸுதர்சனனை வழியனுப்பிவிட்டு ஸுபாகு காசிக்குச் சென்றான். தர்மாத்மாவாகிய ஸுதர்சனன் கோசல நாடு சென்றான்.

24.46. மந்திரிமார்கள் அரசன் சத்ருஜித் கொல்லப் பட்ட செய்தியையும் ஸுதர்சனன் வெற்றியடைந்த செய்தியையும் கேள்விப்பட்டு மகிழ்ச்சி மிகுந்தவர்களானார்கள்.

25.1. அரசசிரேஷ்டனாகிய ஸுதர்சனன் அயோத்தி சென்று அரண்மனையில் நண்பர்கள் சூழவிருந்து சோகத்திலாழ்ந்திருந்த சத்ருஜித்தின் தாயாரை நமஸ்கரித்துப் பின் வருமாறு கூறினான்.

मातर्न ते मया पुत्रः संग्रामे निहतः किल।
न पिता ते युधाजिच्च शपे ते चरणौ तथा ॥ २५. २ ॥

दुर्गया तौ हतौ संख्ये नाऽपराधो ममात्र वै।
अवश्यं भावि भावेषु प्रतीकारो न विद्यते ॥ २५. ३ ॥

इत्युक्ता सा तदा तेन लीलावत्यतिलज्जिता।
पुत्रशोकं परित्यज्य तमाहाश्रुविलोचना ॥ २५. २० ॥

पुत्रस्त्वमसि कल्याण भगिनी मे मनोरमा।
न क्रोधो न च शोको मे त्वयि पुत्र मनागपि ॥ २५. २५ ॥

कुरु राज्यं महाभाग प्रजां पालय सुव्रत।
भगवत्याः प्रसादेन प्राप्तमेतदकण्टकम् ॥ २५. २६ ॥

25.2. தாயே! உங்கள் புத்திரன் போரில் என்னுல் கொல்லப்படவில்லை. உங்கள் சரணங்களில் ஆணையாகச் சொல்லுகிறேன். உங்கள் தந்தை யுதாஜித்தையும் நான் கொல்லவில்லை.

25.3. யுத்தத்தில் துர்க்கா தேவியால் அவர்கள் கொல்லப்பட்டார்கள். அதில் என் குற்றம் ஏதுமில்லை. எது நிகழவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறதோ அதற்கு மாற்று ஏதுமில்லை.

25.20. இங்ஙனம் கூறப்பெற்ற லீலாவதி மிகவும் வெட்கம் மேலிட்டவளாய்ப் புத்திர சோகத்தை விலக்கி விட்டுக் கண்களில் நீர் ததும்ப அவனிடம் பின்வருமாறு கூறினுள்.

25.25. மங்கள வடிவினனே! இனி நீயே என் புத்திரன். மனேரமா என் சகோதரி. புத்திரனுகிய உன்னிடம் எனக்கு ஒரு சிறிதும் கோபமில்லை; சோகமும் இல்லை.

25.26. மகாபாக்கியசாலியே! நல்ல விரதமுடையவனே. நன்ருக அரசுபுரி. மக்களைப் பரிபாலனம் செய். பகவதியின் அருளால் இன்னலற்ற இந்த ராஜ்யம் உன்னுல் அடையப்பட்டுளது.

कृत्वा पूजाविधिं राजा राज्यं प्राप्य स्वपैतृकम् ।
विख्यातश्चाम्बिका देवी कोसलेषु बभूव ह ।। २५. ३६ ।।

ग्रामे ग्रामे च प्रासादांश्चक्रुः सर्वे जनाधिपाः ।
देव्याः पूजा तदा प्रीत्या कोसलेषु प्रवर्तिता ।। २५. ४० ।।

सुबाहुरपि काश्यां तु दुर्गायाः प्रतिमां शुभाम् ।
कारयित्वा च प्रासादं स्थापयामास भक्तितः ।। २५. ४१ ।।

सर्वत्र भारते लोके सर्ववर्णेषु सर्वथा ।
भजनीया भवानी तु सर्वेषामभवत्तदा ।। २५. ४४ ।।

नवरात्रेषु सर्वेषु चक्रुः सर्वे विधानतः ।
अर्चनं हवनं यागं देव्या भक्तिपरा जनाः ।। २५. ४५ ।।

इति श्रीदेवीभागवते तृतीयस्कन्धे
पंचविंशोऽध्यायः
।। सुदर्शन चरित्रं समाप्तम् ।।

25.36. அரசன் தேவியைப் பூஜித்துத் தந்தை வழி வந்த ராஜ்யத்தை யடைந்தான். கோஸல நாட்டில் அம்பிகையின் பெருமை எங்கும் பரவியதாயிற்று.

25.40. எல்லா ஜனநாயகர்களும் ஒவ்வொரு கிராமத்திலும் தேவிக்குக் கோவில் கட்டினர்கள். அப்படியாகக் கோஸலத்தில் பிரீதியுடன் தேவிபூஜை பிரபலமாயிற்று.

25.41. காசியிலும் ஸுபாகு துர்க்கையின் மங்களமான பிரதிமையைச் செய்வித்து பக்தியுடன் கோவிலில் பிரதிஷ்டை செய்வித்தான்.

25.44. பாரத நாட்டில் எப்பொழுதும் எல்லா வர்ணத்தாராலும் எல்லோராலும் பவானி தேவியானவள் அப்பொழுது பூஜிக்கப் பெற்றவளானள்.

25.45. எல்லா நவராத்திரிகளிலும் எல்லா ஜனங்களும் முறைப்படி அர்ச்சனையும் ஹோமமும் யாகமும் தேவிக்கு மிகுந்த பக்தியுடன் செய்பவர்களானர்கள்.

இங்ஙனம் ஸ்ரீதேவிபாகவதத்தில் மூன்றுவது ஸ்கந்தத்தில் இருபத்தைந்தாவது அத்தியாயம் முற்றும்.

ஸுதர்சன சரித்திரம் முற்றும்.

॥ नवरात्रि-महिमा ॥ १५ ॥

जनमेजय उवाच—

नवरात्रे तु संप्राप्ते किं कर्तव्यं द्विजोत्तम।
विधानं विधिवद् ब्रूहि शरत्काले विशेषत: ॥ २६. १ ॥

व्यास उवाच—

द्वावेव सुमहाघोरावृतू रोगकरौ नृणाम्।
वसन्त-शारदावेव जन-नाशकरावुभौ ॥ २६. ६ ॥

तस्मात्तत्र प्रकर्तव्यं चण्डिकापूजनं बुधैः।
चैत्रेऽश्विने शुभे मासे भक्तिपूर्वं नराधिप ॥ २६. ७ ॥

15. நவராத்திரி மகிமை

ஜனமேஜயர் கூறியது—

26.1. த்விஜோத்தமரே! நவராத்திரிகாலம் வரும் பொழுது என்ன செய்ய வேண்டும்? விசேஷமாய் சரத் காலத்தில் பூஜாவிதானத்தை முறைப்படி கூறியருளுதல் வேண்டும்.

வியாஸர் கூறியது—

26.6. இரண்டு ருதுக்கள் மிகவும் கொடியவை; மனிதர்களுக்கு நோய்களைத் தருபவை; வஸந்த ருதுவும் சரத் ருதுவுமாகிய இரண்டும் ஜனங்களுக்கு அழிவை விளைப் பவை.

26.7. ஆகையால், அரசே! அச்வினியுடன் கூடிய சுபமான சித்திரை மாதத்தில் பக்தியுடன் புத்திமான்களால் சண்டிகையின் பூஜை செய்யப்பட வேண்டும்.

अमावास्यां च संप्राप्य संभारां कलयेच्छुभम् ।
हविष्यं चाशनं कार्य-मेकभुक्तं तु तद्दिने ॥ २६. ८ ॥

मण्डपस्तु प्रकर्तव्यः समदेशे शुभे स्थले ।
तोरणानि विचित्राणि वितानं च प्रकल्पयेत् ॥ २६. ११ ॥

प्रतिपद्दिवसे कार्यं प्रातः स्नानं विधानतः ।
प्रातर्नित्यं पुरः कृत्वा द्विजानां वरणं ततः ॥ २६. १४ ॥

नवपंचत्रयश्चैको देव्याः पाठे द्विजाः स्मृताः ।
वरयेद् ब्राह्मणं शान्तं पारायणकृते तदा ॥ २६. १५ ॥

स्वस्तिवाचनकं कार्यं वेदमन्त्रविधानतः ।
वेद्यां सिंहासनं स्थाप्य क्षौमवस्त्रसमन्वितम् ॥ २६. १७ ॥

26.8. அமாவாசை வந்ததும் பூஜாத்திரவியங்களைச் சேகரித்து ஒழுங்குபடுத்தி வைத்துக் கொள்ளவேண்டும். அன்று ஹவிஷ்யான்னமாக ஒருவேளை மட்டும் சாப்பிட்டு உபவாசமிருக்க வேண்டும்.

26.11. சமமாயும் பார்ப்பதற்கு அழகாயும் உள்ள இடத்தில் விதானத்துடன் கூடிய மண்டபத்தை அமைத்துப் பலவிதமான தோரணங்களால் அலங்கரிக்க வேண்டும்.

26.14. பிரதமையன்று முறைப்படி காலையில் ஸ்நானம் செய்து நித்தியகர்மானுஷ்டங்களை முடித்துக் கொண்டு பிராம்மணர்களைப் பூஜையை நடத்தித்தரும்படிப் பிரார்த்திக்க வேண்டும்.

26.15. சாந்த ஸ்வபாவமுடைய பிராம்மணர்களாகப் பாராயணத்தின் பொருட்டும் தேவியின் ஸ்தோத்திரங்களைச் சொல்லவும் ஒன்பது அல்லது ஐந்து அல்லது மூன்று அல்லது ஒருவராவது வரிக்கப்பட வேண்டும் என்பது விதி.

26.17. வேதமந்திரங்களால் முறைப்படி ஸ்வஸ்தி வாசனம் செய்து வேதிகையின் மேல் ஸிம்மாஸனத்தை ஸ்தாபித்து அதன்மேல் பட்டுவஸ்திரத்தை விரிக்கவேண்டும்.

तत्र स्थाप्याऽम्बिका देवी चतुर्हस्ताऽऽयुधान्विता ।
शंखचक्रगदापद्मधरा सिंहे स्थिता शिवा ।। २६. १९ ।।

अष्टादशभुजावाऽपि प्रतिष्टाप्य सनातनी ।
अर्चाभावे तथा यन्त्रं नवार्णमन्त्र-संयुतम् ।। २६. २० ।।

स्थापयेत् पीठपूजार्थं कलशं तत्र पार्श्वतः ।
पंचपल्लवसंयुक्तं वेदमन्त्रैः सुसंस्कृतं ।। २६. २१ ।।

नियमं प्रथमं कृत्वा पश्चात्पूजां समाचरेत् ।
उपवासेन नक्तेन चैकभक्तेन वा पुनः ।। २६. २४ ।।

चन्दनागरु-कर्पूरैः कुसुमैश्च सुगन्धिभिः ।
पूजयेज्जगतां धात्रीं धूपैर्दीपैर्विधानतः ।। २६. २९ ।।

26.19. அதன் மேல் நான்கு கைகளிலும் சங்குசக்கரம் கதை தாமரைப்பூ ஆகியவற்றை ஏந்தியிருப்பவளும் சிம்ம வாகனத்தில் மேலிருப்பவளுமான தேவியை ஆவாஹனம் செய்ய வேண்டும்.

26.20. அல்லது பதினெட்டுக் கைகளையுடைய ஸநாதனமான தேவியின் விக்கிரகத்தையாவது ஸ்தாபிக்க வேண்டும். விக்கிரகம் இல்லாவிடில் நவாக்ஷரீ மந்திரத்துடன் கூடிய யந்திரத்தை ஸ்தாபிக்க வேண்டும்.

26.21. பீடபூஜைக்காக அதன் பக்கத்தில் கலசத்தை ஸ்தாபித்து ஐந்து வகைத் தளிர்களை வேதமந்திரங்களால் புனிதமாக்கி அதன் மேல் வைக்க வேண்டும்.

26.24. பூஜா நியமங்களைக் கைக்கொண்டு அதன்பின் பூஜையைத் தொடங்க வேண்டும். (பகலில்) உபவாஸமிருந்து இரவில் ஒரு வேளை மட்டும் உணவேற்க வேண்டும்.

26.29. சந்தனம், அகில், பச்சைக் கற்பூரம், நல்ல வாசனையுள்ள புஷ்பங்கள் ஆகியவற்றால் அலங்கரித்து ஜகத்தாத்ரீ தேவியை முறைப்படி தூபம் தீபம் முதலியவற்றுடன் பூஜை செய்யவேண்டும்.

फलैर्नानाविधै-रर्घ्यं प्रदातव्यं च तत्र वै ।
अन्नदानं च प्रकर्तव्यं भक्तिपूर्वं नराधिप ॥ २६. ३१ ॥

नित्यं भूमौ च शयनं कुमारीणां च पूजनम् ।
एकैकां पूजयेन्नित्य-मेकवृद्धचा तथा पुन: ॥ २६. ३८ ॥

विभवस्यानुसारेण कर्तव्यं पूजनं किल ।
कुमारी पूजिता कुर्याद् दु:खदारिद्रयनाशनम् ॥ २६. ४५ ॥

अशक्तो नियतं पूजां कर्तुं चेन्नवरात्रके ।
अष्टम्यां च विशेषेण कर्तव्यं पूजनं सदा ॥ २७. ८ ॥

पूजाभिश्चैव होमैश्च कुमारीपूजनैस्तथा ।
संपूर्णं तद्व्रतं प्रोक्तं विप्राणां चैव भोजनै: ॥ २७. १४ ॥

26.31. அரசே! பலவிதமான பழங்களுடன் அர்க்கியம் கொடுக்க வேண்டும். பக்தியுடன் அன்னதானமும் செய்யவேண்டும்.

26.38. எப்பொழுதும் தரையில்தான் படுக்க வேண்டும். முதல் நாள் ஒரு கன்னிகையிலாரம்பித்து ஒவ்வொரு நாளும் ஒரு கன்னிகை அதிகமாக தினந்தோறும் குமாரி பூஜை செய்ய வேண்டும்.

26.45. செல்வத்திற்குத் தக்கபடி பூஜையைச் சிறப்பாகச் செய்தல் வேண்டும். குமாரி பூஜை செய்தால் துக்கமும் தரித்திரமும் அழிந்துபோம்.

27.8–14. நவராத்திரியில் தினந்தோறும் பூஜை செய்யச் சக்தியில்லாவிட்டால், விசேஷமாக அஷ்டமியன்று பூஜையைச் செய்ய வேண்டும். பூஜையாலும் ஹோமத்தாலும் குமாரி பூஜையாலும் பிராம்மண போஜனத்தாலும் அந்த விரதம் பூர்த்தியடையும் என்று கூறப்பட்டுள்ளது.

ज्ञानदं मोक्षदं चैव सुखसन्तानवर्धनम् ।
शत्रुनाशकरं कामं नवरात्रव्रतं सदा ।। २७. ४८ ।।

राज्यभ्रष्टेन रामेण सीताविरहितेन च ।
किष्किन्धायां व्रतंचैतत् कृतं दुःखातुरेण वै ।। २७. ४९ ।।

आजगाम तदाऽऽकाशान्नारदो भगवान् ऋषिः ।
रणयन्महतीं वीणां स्वरग्रामविभूषिताम् ।। ३०. १ ।।

पूजां परमिकां कृत्वा कृतांजलिरुपस्थितः ।
उपविष्टे समीपे तु कृताज्ञो मुनिना हरिः ।। ३०. ४ ।।

उपविष्टं तदा रामं सानुजं दुःखमानसम् ।
पप्रच्छ नारदः प्रीत्या कुशलं मुनिसत्तमः ।। ३०. ५ ।।

27.48. நவராத்ரீ விரதானுஷ்டானம் ஞானத்தையும் முக்தியையுமளிக்கும்; சுகத்தையும் நல்ல புத்திரப் பேற்றையும் அளிக்கும், சத்துருக்களை யழிக்கும், எல்லா ஆசைகளையும் பூர்த்தி செய்யும்.

27.49. அரசைத் துறந்து ஸீதையின் பிரிவாற்ருமையால் துக்கத்திலாழ்ந்திருந்த ஸ்ரீராமனுல் கிஷ்கிந்தையில் இந்த விரதம் அனுஷ்டிக்கப்பட்டது.

30.1. அப்பொழுது ஆகாசமார்க்கமாய் பகவான் நாரதமகரிஷி ஸ்வரக்கிராமத்தால் அலங்கரிக்கப்பெற்ற மஹதீ எனும் தமது வீணையை மீட்டிக் கொண்டு அங்கு வந்தார்.

30.4–5. அவருக்குச் சிறந்த முறையில் பூஜை செய்து அம்முனிவரால் அனுமதிக்கப்பட்டு அருகில் கை கூப்பிக் கொண்டு வீற்றிருக்கையில், துக்கம் நிறைந்த மனமுடைய ராமனையும் தம்பியையும் அம்முனிசிரேஷ்டர் குசலப் பிரச்னம் செய்தார்.

कथं राघव शोकार्तो यथा वै प्राकृतो नरः ।
हृता सीता च जानामि रावणेन दुरात्मना ।। ३०. ६ ।।

तव जन्म च काकुत्स्थ पौलस्त्य-निधनाय वै ।
मैथिलीहरणं जात-मेतदर्थं नराधिप ।। ३०. ८ ।।

पूर्वजन्मनि वैदेही मुनिपुत्री तपस्विनी ।
रावणेन वने दृष्टा तपस्यन्ती शुचिस्मिता ।। ३०. ९ ।।

प्रार्थिता रावणेनासौ भव भार्येति राघव ।
तिरस्कृतस्तयाऽसौ वै जग्राह कबरं बलात् ।। ३०. १० ।।

शशाप तत्क्षणं राम रावणं तापसी भृशम् ।
कुपिता त्यक्तुमिच्छन्ती देहं संस्पर्शदूषितम् ।। ३०. ११ ।।

30.6. 'ராகவா! பாமரமக்களைப் போல் நீ துக்கப்படுவதெங்ஙனம்? துராத்மாவாகிய ராவணனால் ஸீதை அபகரிக்கப்பட்டதை நான் அறிவேன்.

30.8. 'காகுத்ஸ்தா! உன்னுடைய பிறவியே ராவண வதத்திற்காகத்தான். மைதிலீ அபகரிக்கப்பட்டதும் அக் காரணம் பற்றியே.

30.9–10. முற்பிறவியில் வைதேகி ஒரு முனிவரின் புத்திரியாகவும் தவஞ் செய்பவளாகவும் இருக்கையில் ராவணனால் அவள் பார்க்கப்படவே அவளுடைய அழகில் மோகித்த ராவணன் அவளைத் தன் மனைவியாகும்படி வேண்டினன். அவளால் நிராகரிக்கப்படவே அவன் அவளுடைய தலைமயிரைப்பிடித்து பலாத்காரம் செய்தான்.

30.11. 'ராமா! தவ வலிமைமிக்க அவள் அவன் தொட்டதால் அசுத்தமான உடலை விட்டுவிட விரும்பிய வளாய்க் கோபம் மூண்டு அவனை உடனே பின்வருமாறு சபித்தாள்.

दुरात्मंस्तव नाशार्थं भविष्यामि धरातले।
अयोनिजा वरा नारी त्यक्त्वा देहं जहावपि ॥ ३०.१२ ॥

सेयं रमांशसंभूता गृहीता तेन रक्षसा।
विनाशार्थं कुलस्यैव व्याली स्रगिव संभ्रमात् ॥ ३०.१३ ॥

तव जन्म च काकुत्स्थ तस्य नाशाय चामरैः।
प्रार्थितस्य हरेरंशादजवंशेऽप्यजन्मनः ॥ ३०.१४ ॥

कुरु धैर्यं महाबाहो तत्र सा वर्ततेऽवशा।
सती धर्मरता सीता त्वां ध्यायन्ती दिवानिशम् ॥ ३०.१५ ॥

30.12. 'கொடியோனே! நான் இப்பொழுது, தேகத்தை விட்டாலும் உன்னுடைய அழிவிற்காகக் கருவில் பிறவாமல் பூமியில் சிறந்த பெண்ணாகத் தோன்றப் போகிறேன்.'

30.13. 'லக்ஷ்மியின் அம்சமாக அவள் அங்ஙனமே தோன்றி இப்பொழுது ஒரு ஸர்ப்பத்தை மாலையென்ற மதிமயக்கத்தால் ஒருவன் கிரகிப்பதுபோல் அவ்வரக்கனால் தன் குலம் அழியும் பொருட்டு கிரகிக்கப்பட்டுள்ளாள்.

30.14. 'காகுத்ஸ்தா! பிறப்பற்ற நீயும் தேவர்களால் பிரார்த்திக்கப்பட்டு ஹரியின் அம்சத்தால் அஜனுடைய வம்சத்தில் அவ்வரக்கனுடைய அழிவிற்காகவே பிறந்துள்ளாய்.

30.15. 'பெருந்தோள் படைத்தோனே! தைரியத்தை மேற்கொள். தருமத்தில் ஊன்றிய பற்றுடையவளும் பதிவிரதையுமான ஸீதை இரவும் பகலும் உன்னையே தியானிப்பவளாய்த் தன்வயமிழந்து அங்கு உறைகிறாள்.

कामधेनुपयः पात्रे कृत्वा मघवता स्वयम् ।
पानार्थं प्रेषितं तस्याः पीतं चैवामृतं तथा ॥ ३०. १६ ॥

उपायं कथयाम्यद्य तस्य नाशाय राघव ।
व्रतं कुरुष्व श्रद्धावानाश्विने मासि साम्प्रतम् ॥ ३०. १७ ॥

नवरात्रोपवासं च भगवत्याः प्रपूजनम् ।
सर्वसिद्धिकरं राम जपहोमविधानतः ॥ ३०. १९ ॥

राम उवाच—

विधिं मे ब्रूहि विप्रर्षे व्रतस्यास्य समासतः ।
करोम्यद्यैव श्रद्धावाञ्छ्रीदेव्याः पूजनं तथा ॥ ३०. ३८ ॥

30.16. 'இந்திரனால் காமதேனுவின் பால் ஒரு பாத்திரத்தில் அவளுடைய பானத்திற்காக அனுப்பப்பட்டு அவளால் அவ்வமிருதம் பருகப்பட்டுமுளது.

30.17. 'ராகவா! அவ்வரக்கனுடைய நாசத்திற்கு நான் இப்பொழுது வழி கூறுகிறேன். இப்பொழுது நடைபெறும் ஆச்வின (புரட்டாசி—ஐப்பசி) மாதத்தில் சிரத்தையுடன் விரதத்தைக் கைக்கொள்.

30.19. 'ராமா! (நவராத்திரி) ஒன்பது நாள் உபவாஸமிருந்து ஜபம் ஹோமம் முதலியவற்றுடன் ஸர்வஸித்தியளிக்கும் தேவி பூஜையைச் செய்வாயாக.'

ஸ்ரீராமர் கூறியது—

30.38. பிரம்மரிஷியே! இவ்விரதத்தின் முறையை ஒழுங்காக எனக்குக் கூறியருளுங்கள். இப்பொழுதே ஸ்ரீதேவியின் பூஜையை அம்முறைப்படி சிரத்தையுடன் தொடங்குகிறேன்.

नारद उवाच—

पीठं कृत्वा समे स्थाने संस्थाप्य जगदम्बिकाम्।
उपवासान्नवैव त्वं कुरु राम विधानत: ॥ ३०. ३९ ॥

आचार्योऽहं भविष्यामि कर्मण्यस्मिन् महीपते।
देवकार्यविधानार्थ-मुत्साहं प्रकरोम्यहम् ॥ ३०. ४० ॥

व्यास उवाच—

तच्छ्रुत्वा वचनं सत्यं मत्वा रामः प्रतापवान्।
कारयित्वा शुभं पीठं स्थापयित्वाऽम्बिकां शिवाम् ॥ ३०. ४१ ॥

நாரதர் கூறியது—

30.39–40. சமமான ஸ்தானத்தில் பீடத்தையமைத்து அதில் ஜகதம்பிகையை ஆவாஹனம் செய்து தேவியின் சமீபத்திலேயே இருந்துகொண்டு ஒன்பது நாளும் பூஜையைச் செய். அரசே! இதில் நானே உனக்கு ஆசாரியனாயிருக் கிறேன். தேவகாரியம் சித்திக்கும் பொருட்டு நான் உற்சா கத்தை மேற்கொண்டுள்ளேன்.

வியாஸர் கூறியது—

30.41. புகழ் படைத்த ராமர் அவ்வார்த்தையைக் கேட்டு அது ஸத்தியமென உணர்ந்து சுபமான பீடத்தை யமைத்து அதில் மங்கள வடிவினளான அம்பிகையைப் பிரதிஷ்டை செய்தார்.

उपवासपरो रामः कृतवान् व्रतमुत्तमम् ।
होमं च विधिवत्तत्र बलिदानंच पूजनम् ॥ ३०. ४३ ॥

भ्रातरौ चक्रतुः प्रेम्णा व्रतं नारदसम्मतम् ।
अष्टम्यां मध्यरात्रे तु देवी भगवती हि सा ॥ ३०. ४४ ॥

सिंहारूढा ददौ तत्र दर्शनं प्रतिपूजिता ।
गिरि-श्रृंगे स्थितोवाच राघवं सानुजं गिरा ॥ ३०. ४५ ॥

मेघगंभीरया चेदं भक्तिभावेन तोषिता ।
राम राम महाबाहो तुष्टास्म्यद्य व्रतेन ते ॥ ३०.४६ ॥

प्रार्थयस्व वरं कामं यत्ते मनसि वर्तते ।
नारायणांशः संभूतस्त्वं वंशे मानवेऽनघे ॥ ३०. ४७ ॥

30.43–46. இராமர் உத்தமமான அவ்விரதத்தை உபவாஸத்துடன் கைக்கொண்டார். சகோதரர்களிருவரும் நாரதர் கூறியவழியில் அன்புடன் விரதத்தையனுஷ்டித்து பூஜையையும் ஹோமத்தையும் பலிதானத்தையும் செய்தனர். அஷ்டமியன்று நடுஇரவில் பகவதி தேவியானவள் பக்தியினல் ஸந்தோஷமடைந்தவளாய் சிம்மவாகனத்தின் மேல் அந்த மலையின் உச்சியில் தோன்றி லக்ஷ்மணருடன் கூடிய ஸ்ரீராமரை நோக்கி மேககர்ஜனை போன்ற கம்பீரமான குரலில் பின்வருமாறு கூறினுள். ‘ராமா! ராமா! தோள்வலிமிக்கவனே! உன்னுடைய விரதத்தால் நான் மகிழ்ச்சியடைந்துள்ளேன்.

30.47. ‘உன் மனதிலுள்ள விருப்பத்திற்கிணங்க இஷ்டமான வரத்தைக் கேட்டுக்கொள். பாவமற்ற மனுவம்சத்தில் நாராயணம்சமாக நீ தோன்றியுள்ளாய்.

रावणस्यैव वधायैव प्रार्थितस्त्वमरैरसि ।
पुरा मत्स्यतनुं कृत्वा हत्वा घोरं च राक्षसम् ।। ३०. ४८ ।।

त्वया वै रक्षिता वेदा: सुराणां हितमिच्छता ।
भूत्वा कच्छपरूपस्तु धृतवान् मन्दरं गिरिम् ।। ३०: ४९ ।।

अकूपारं प्रमन्थानं कृत्वा देवानपोषयः ।
कोलरूपं पुरा कृत्वा दशनाग्रेण मेदिनीम् ।।
धृतवानसि यद्राम हिरण्याक्षं जघान च ।। ३०. ५० ।।

नारसिंही तनुं कृत्वा हिरण्यकशिपुं पुरा ।
प्रह्लादं राम रक्षित्वा हतवानसि राघव ।। ३०. ५१ ।।

वामनं वपुरास्थाय पुरा छलितवान्बलिम् ।
भूत्वेन्द्रस्यानुज: कामं देवकार्यप्रसाधकः ।। ३०. ५२ ।।

30.48–49. 'இராவணனுடைய வதத்தின் பொருட்டு நீ தேவர்களால் பிரார்த்திக்கப்பட்டுள்ளாய். ஆதியில் மத்ஸ்யாவதாரமெடுத்து கொடிய அரக்கனைக் கொன்று தேவர்களின் நன்மையை விரும்பிய உன்னால் வேதங்கள் காப்பாற்றப்பட்டன. பின்பு ஆமை வடிவில் தோன்றி மந்தரகிரியைத் தாங்கினாய்.

30.50. அம்மலையை மத்தாகக் கொண்டு (பாற்கடலைக் கடையச் செய்து அதிலெழுந்த அமிருதத்தால்) தேவர்களைக் காப்பாற்றினாய். வராக உருக்கொண்டு பல் நுனியில் பூமியைத் தூக்கி ஹிரணியாக்ஷனைக் கொன்றாய்.

30.51. ராகவா! நரசிம்ம வடிவெடுத்து பிரஹ்லாதனை ரக்ஷித்து ஹிரண்யகசிபுவை ஸம்ஹரித்தாய்.

30.52. வாமனனாய்த் தோன்றி பலியை ஏமாற்றி இந்திரனுக்குத் தம்பியாய் விளங்கி தேவகாரியத்தைச் சாதித்தவனானாய்.

जमदग्निसुतस्त्वं मे विष्णोरंशेन संगतः।
कृत्वाऽन्तं क्षत्रियाणां तु दानं भूमेरदाद् द्विजे ॥ ३०. ५४ ॥

तथेदानीं तु काकुत्स्थ जातो दशरथात्मजः।
प्रार्थितस्तु सुरैः सर्वैं रावणेंनातिपीडितैः।
कपयस्ते सहाया वै देवांशा बलवत्तरा: ॥ ३०. ५५ ॥

भविष्यन्ति नरव्याघ्र मच्छक्ति-संयुताह्यमी।
शेषांशोऽप्यनुजस्तेऽयं रावणात्मजनाशकः ॥ ३०. ५६ ॥

भविष्यति न सन्देहः कर्तव्योऽत्र त्वयानघ।
वसन्ते सेवनं कार्यं त्वया तत्रातिश्रद्धया ॥ ३०. ५७ ॥

हत्वाऽथ रावणं पापं कुरु राज्यं यथासुखम्।
एकादश सहस्राणि वर्षाणि पृथिवीतले ॥ ३०. ५८ ॥

30.54. காகுத்ஸ்தா! ஜமதக்னிக்கு மகனுய்த் தோன்றி விஷ்ணுவின் அம்சம் கூடப்பெற்று க்ஷத்திரியர்களை யொழித்து பூமியை பிராம்மணருக்கு தானமாகக் கொடுத்தனே.

30.55–57. இராவணனுல் பீடிக்கப்பட்ட தேவர் களனைவராலும் பிரார்த்திக்கப்பட்டு இப்பொழுது தசரத புத்திரனுக அவதரித்துள்ளாய். தேவர்களின் அம்சமாய் மிகுந்த பலத்துடன் தோன்றியுள்ள குரங்குகள் என்னுடைய சக்தியுடன் கூடியவை. நரசிரேஷ்டனே! அவை உனக்குச் சகாயம் புரியும். இந்த உன் சகோதரன் ஆதிசேஷ அம்சம் பொருந்தியவன். அவன் இராவணனுடைய புத்திரனைக் கொல்பவனுவான். இதில் சந்தேகமில்லை. பாவமற்றவனே! அதன் பின் உன்னுல் மிகுந்த சிரத்தையுடன் வஸந்த நவராத்ரி விரதமும் அனுஷ்டிக்கப்பட வேண்டும்.

30.58. பாவியான இராவணனைக் கொன்று சௌக் கியமாய்ப் பதினோராயிரம் வருஷங்கள் பூமண்டலத்தில் ஆட்சி புரிவாயாக.

व्यास उवाच—

इत्युक्त्वाऽन्तर्दधे देवी रामस्तु प्रीतिमानसः।
समाप्य तद् व्रतं चक्रे प्रयाणं दशमी दिने ॥
विजया पूजनं कृत्वा दत्त्वा दानान्यनेकशः ॥ ३०.५६ ॥

कपिपति-बलयुक्तः सानुजः श्रीपतिश्च ।
प्रकटपरमशक्त्या प्रेरितः पूर्णकामः।
उदधितट-गतोऽसौ सेतुबन्धं विधाया-
त्यहन-दमरशत्रुं रावणं गीतकीर्तिः ॥ ३०.६१ ॥

यः शृणोति नरो भक्त्या देव्याश्चरित-मुत्तमम् ।
स भुक्त्वा विपुलान् भोगान् प्राप्नोति परमं पदम् ॥ ३०.६२ ॥

इति श्रीदेवीभागवते तृतीयस्कन्धे त्रिंशोऽध्यायः।
नवरात्रिमहिमावर्णनं समाप्तम् ॥
॥ तृतीयं स्कन्धं समाप्तम् ॥

வியாஸர் கூறியது—

30.59–61. இங்ஙனம் கூறிவிட்டு தேவி மறைந்தாள். அன்பு நிறைந்த மனத்துடன் கூடி அவ்விரதத்தைப் பூர்த்தி செய்து விஜயதசமி தினத்தன்று ஜயமளிக்கும் தேவி பூஜையைச் செய்து பலவிதமான யாத்ரா தானங்களைச் செய்து வானர அரசனுடைய சேனுபலத்துடன் கூடியவராய்த் தம்பியுடன் புகழ்மிக்க ஸ்ரீபதியான ராமர் பராசக்தியால் ஏவப்பட்டு பூர்ண காமராய்ச் சமுத்திரக் கரை சேர்ந்து ஸேது பந்தம் செய்து தேவசத்துருவான இராவணனை வதம் செய்தார்.

30.62. எந்த மனிதன் தேவியின் உத்தம சரித்திரமாகிய இதை பக்தியுடன் கேட்கிருனே அவன் இவ்வுலகில் சிறந்த போகங்களை அனுபவித்து இறுதியில் பரமபதத்தையடைவான்.

இங்ஙனம் ஸ்ரீதேவீபாகவதத்தில்
மூன்ருவது ஸ்கந்தத்தில் முப்பதாவது அத்தியாயம் முற்றும்.
நவராத்திரி மகிமையின் வர்ணனை முற்றும்.
மூன்ருவது ஸ்கந்தம் முற்றும்.

நான்காவது ஸ்கந்தம்

॥ चतुर्थः स्कन्धः ॥

श्री कृष्णावतार-रहस्यम् ॥ १६ ॥

जनमेजय उवाच—

शूरसेन-सुतः श्रीमान् वसुदेवः प्रतापवान् ।
श्रुतं मया हरिर्यस्य पुत्रभावमवाप्तवान् ॥ १. २ ॥
देवानामपि पूज्योऽभून्नाम्नाचानकदुन्दुभिः ।
कारागारे कथं बद्धः कंसस्य धर्मतत्परः ॥ १. ३ ॥
देवक्या भार्यया सार्धं किमागः कृतवानसौ ।
देवक्या बालषट्कस्य विनाशश्च कृतः पुनः ॥ १. ४ ॥
तेन कंसेन कस्माद्वै ययाति-कुलजेन च ।
कारागारे कथं जन्म वासुदेवस्य वै हरेः ॥ १. ५ ॥

நாலாவது ஸ்கந்தம்

16. ஸ்ரீகிருஷ்ணவதார ரஹஸ்யம்

ஜனமேஜயர் கூறியது—

1.2. சூரஸேனரின் புத்திரரான வஸுதேவர் பாக்கிய சாலி, பராக்கிரமம் படைத்தவர். ஹரி அவரிடம் புத்திர ராய்த் தோன்றினர் என்ற வரலாறு என்னல் கேட்கப் பட்டது.

1.3. தேவர்களாலும் பூஜித்தற்குரியவரும் ஆனக துந்துபி என்று புகழ் பெற்றவரும் தர்மத்தில் நிலைத்தவரு மான அவர் எப்படி கம்ஸனுடைய சிறைச்சாலையில் அடைக் கப்படலானர்?

1.4–5. மனைவியாகிய தேவகியுடன் சிறையிலடைபட அவர் என்ன பாவஞ் செய்தார்? மேலும் தேவகியின் ஆறு குழந்தைகளும் யயாதி குலத்தில் பிறந்த அந்தக் கம்ஸனல் எக்காரணத்தால் கொல்லப்பட்டனர்? ஹரியாகிய வாஸுதேவருக்குச் சிறைச்சாலையில் பிறவி ஏன்?

देवकी-वसुदेवौ च कृष्णस्यामिततेजसः।
कथं न मोचितौ वृद्धौ पितरौ हरिणाऽमुना ॥ १. ६ ॥

जगत्कर्तुं समर्थेन स्थितेन जनकोदरे।
प्राक्तनं किं तयोः कर्म दुर्विज्ञेयं महात्मभिः ॥ १. ७ ॥

व्यास उवाच—

राजन् किमेतद्वक्तव्यं कर्मणां गहना गतिः।
दुर्ज्ञेया किल देवानां मानवानां च का कथा ॥ २. २ ॥

रामावतार-योगेन देवा वानरतां गताः।
तथा कृष्णसहायार्थं देवा यादवतां गताः ॥ २. ३६ ॥

1.6. அளவு கடந்த சக்திவாய்ந்த கிருஷ்ணனுடைய தாய்தந்தையரும் பெரியோர்களுமான வசுதேவரையும் தேவகியையும் உடனே ஏன் அவர் விடுவிக்கவில்லை?

1.7. உலகைப் படைக்கும் சக்திவாய்ந்த பகவான் வயிற்றிலிருக்கையில் மஹாத்மாக்களான அவர்களுடைய பூர்வகர்மம் (இங்ஙனம் செய்தது) என்பதும் அறிந்துகொள்ள முடியாமலிருக்கிறது.

வியாஸர் கூறியது—

2.2. அரசே! இதில் என்ன சொல்ல இருக்கிறது? கருமத்தின் போக்கு அறிய முடியாதது. தேவர்களாலேயே அதை அறிவது கடினமாயிருக்கையில் மனிதர்களைப்பற்றிச் சொல்லுவானேன்?

2.36. இராமாவதாரத்துடன் கூடிய தேவர்கள் வானரர்கள் ஆனார்கள். அவ்வாறே கிருஷ்ணனுக்கு உதவி புரியும் பொருட்டு தேவர்கள் யாதவர்களானார்கள்.

एवं युगे युगे विष्णु-रवतारानानेकशः।
करोति धर्मरक्षार्थं ब्रह्मणा प्रेरितो भृशम् ॥ २. ३७ ॥

तदहं संप्रवक्ष्यामि कृष्णजन्मकथां शुभाम्।
स एव भगवान् विष्णु-रवतीर्णो यदोः कुले ॥ २. ४० ॥

कश्यपस्य मुनेरंशो वसुदेवः प्रतापवान्।
गोवृत्तिरभवद्राजन् पूर्वशापानुभावतः ॥ २. ४१ ॥

कश्यपस्य द्वे पत्न्यौ शापादत्र महीतले।
अदितिः सुरसा चैवमासतुः पृथिवीपते ॥ २. ४२ ॥

देवकी रोहिणी चोभे भगिन्यौ भरतर्षभ।
वरुणेन महाञ्छापो दत्तः कोपा दिति श्रुतम् ॥ २. ४३ ॥

2.37. பிரம்மாவினுல் வெகுவாய்ப் பிரார்த்திக்கப் பட்டு விஷ்ணுவானவர் தருமத்தைக் காப்பாற்றுவதற்காக யுகந்தோறும் பற்பல அவதாரங்களை எடுக்கிறுர்.

2.40. அந்த பகவான் விஷ்ணுவே யதுகுலத்தில் அவ தரித்தார். அந்த மங்களமான கிருஷ்ணுவதாரக் கதையை நான் இப்பொழுது கூறுகிறேன்.

2.41. அரசே! புகழ்மிக்க வசுதேவர் கசியப முனிவரின் அம்சம். முன்னேற்பட்ட சாபத்தால் அவருக்குப் பசு பாலனம் தொழிலாயேற்பட்டது.

2.42—43. அரசே! கசியபருக்கு மனைவிகளாகிய அதிதி, ஸுரஸா என்ற இருவரும் அதே சாபத்தால் தேவகி, ரோஹிணி என்ற சகோதரிகளாய்த் தோன்றினர். வருண னுடைய கோபத்தால் கடுமையான சாபம் கொடுக்கப் பட்டது எனக் கேள்வி.

एकदा कश्यपः श्रीमान् यज्ञार्थं धेनुमाहरन् ।
याचितोऽयं बहुविधं न ददौ धेनु-मुत्तमाम् ॥ ३. ३ ॥
वरुणस्तु ततो गत्वा ब्रह्माणं जगतः प्रभुम् ।
प्रणम्योवाच दीनात्मा स्वदुःखं विनयान्वितः ॥ ३. ४ ॥
किं करोमि महाभाग मत्तोऽसौ न ददाति गाम् ।
शापो मया विसृष्टोऽस्मै गोपालो भव मानुषे ॥ ३. ५ ॥
भार्ये द्वे अपि तत्रैव भवेतांचातिदुःखिते ।
ततो वत्सा रुदन्त्यत्र मातृहीनाः सुदुःखिताः ॥ ३. ६ ॥
मृतवत्सादितिस्तस्माद्भविष्यति धरातले ।
कारागार-निवासा च तेनापि बहुदुःखिता ॥ ३. ७ ॥

3.3. ஒரு சமயம் மகானுகிய கசியபர் யாகத்தின் பொருட்டு வருணனுடைய பசுவை இரவலாக வாங்கிச் சென்ருர். (யாகம் முடிந்தபின்) பலவகையில் திருப்பிக் கேட்டும் அச்சிறந்த பசுவைத் திருப்பிக் கொடுக்கவில்லை.

3.4. வருத்தமடைந்த வருணன் உலக நாயகனுன பிரம்மாவிடம் சென்று நமஸ்கரித்து வணக்கத்துடன் தனது துக்கத்தைத் தெரிவித்துக் கொண்டான்.

3.5. 'பகவானே! நான் என்ன செய்வேன்? அவர் மதம் பிடித்தவராயிருக்கிருர். பசுவைத் திருப்பிக் கொடுப்ப தாயில்லை. ''மனிதர்களிடை பசுபாலகனுய்ப் பிறக்கக் கடவாய்'' என்று அவருக்கு என்னுல் சாபம் கொடுக்கப் பட்டது.

3.6–7. 'அவருடைய இரு மனைவிகளும் அங்கேயே பிறந்து மிகுந்த துக்கத்தையனுபவிக்கட்டும் (என்றும் சாபம் கொடுத்தேன்). தாயைப்பிரிந்து என்னுடைய பசுவின் கன்றுகள் துக்கத்தால் கண்ணீர் விடுவதால் அதிதியும் பூமியில் தன்னுடைய குழந்தைகள் சாவதைக் காண்பவளாவாள். சிறைவாசத்தையடைந்து அதனுலும் மிகுந்த துன்பத்தை யடைபவளாவாள்.'

ब्रह्मापि तं शशापाऽथ कश्यपं मुनिसत्तमम् ।
मर्यादारक्षणार्थं हि पौत्रं परमवल्लभम् ॥ ३. १५ ॥

अंशेन त्वं पृथिव्यां वै प्राप्य जन्म यदोः कुले ।
भार्याभ्यां संयुतस्तत्र गोपालत्वं करिष्यसि ॥ ३. १६ ॥

एवं शप्तः कश्यपोऽसौ वरुणेन च ब्रह्मणा ।
अंशावतरणार्थाय भूभारहरणाय च ॥ ३. १७ ॥

तथा दित्याऽदितिः शप्ता शोकसन्तप्तया भृशम् ।
जाता जाता विनश्येरंस्तव पुत्रास्तु सप्त वै ॥ ३. १८ ॥

अथ किं बहुनोक्तेन संसारेऽस्मिन् नृपोत्तम ।
धर्मात्मा द्रोहबुद्धिस्तु कश्चिद्भवति कर्हिचित् ॥ ५. १ ॥

3.15-16. பிரம்மாவும் முனிசிரேஷ்டரும் திறமை மிக்கவரும் தனது பேரனுமாகிய கசியபரைச் சபித்தார். 'அம்சத்தால் நீ மனைவிகளுடன் பூமியில் யதுகுலத்தில் பிறந்து (வருணன் கூறியபடி) பசுபாலனம் செய்பவனுவாய்.'

3.17. இங்ஙனம் வருணனுலும் பிரம்மாவாலும் கசியபர் சபிக்கப்பட்டார். இது பகவானுடைய அம்சாவதாரத்திற்கும் பூபாரத்தைக் குறைப்பதற்கும் உதவி செய்வதாக ஆயிற்று.

3.18. (அதிதியின் தூண்டுதலால் திதியின் கருவை ஏழு துண்டாய்ச் சிதைக்க அதிதியின் குமாரனுன இந்திரன் சூழ்ச்சி செய்ததால்) மிகவும் துன்பத்தால் கொதிப்படைந்த திதியும் அதிதிக்குப் பின்வருமாறு சாபம் கொடுத்திருந்தாள். 'உனக்கும் ஏழு புத்திரர்கள் பிறக்கப் பிறக்க அழிந்து போகட்டும்.'

5.1. அரசசிரேஷ்டரே! அதிகமாய்ப் பேசுவதால் ஆவதென்ன? இந்தப் பிறவிச் சுழலில் சிலசமயம் ஒருவன் பொதுப்பட தர்மாத்மாவாயிருந்தும் துரோக புத்தியுள்ளவனுய்க் காணப்படுகிறுன்.

रागद्वेषावृतं विश्वं सर्वं स्थावरजंगमम् ।
आद्ये युगेऽपि राजेन्द्र किमद्य कलिदूषिते ॥ ५.२ ॥

देवाः सेर्ष्याश्च सद्रोहाश्छलकर्मरताः सदा ।
मानुषाणां तिरश्चां च का वार्ता नृप गण्यते ॥ ५.३ ॥

द्रोहपरे द्रोहपरो भवेदिति समानता ।
अद्रोहिणि तथा शान्ते विद्वेषः खलता स्मृता ॥ ५.४ ॥

यः कश्चित्तापसः शान्तो जपध्यानपरायणः ।
भवेत्तस्य जपे विघ्नकर्ता वै मघवा परम् ॥ ५.५ ॥

5.2. அரசசிரேஷ்டரே ! அசையும் உயிர்களும் அசையாப் பொருள்களும் நிறைந்த இவ்வுலகெல்லாம் விருப்பு வெறுப்பால் மூடப்பட்டுள்ளது. ஆதி (கிருத) யுகத்திலும் கூட அப்படி யென்றால் கலியால் கெடுதியடைந்த தற்காலத்தைப்பற்றிக் கூறுவானேன் ?

5.3. அரசே ! தேவர்கள்கூட பொறாமையும் துரோக சிந்தையும் உடையவர்களாகவும் வஞ்சகத் தொழில் புரிபவர்களாயும் எப்பொழுதும் காணப்படுகின்றனர். மனிதர்களைப் பற்றியும் தாழ்பிறவிகளைப் பற்றியும் சொல்லுவதற்கு என்ன இருக்கிறது ?

5.4. துரோகம் செய்பவர்க்கு துரோகம் செய்வதென்பது சரிசமமான நடவடிக்கை. துரோக எண்ணமில்லாமல் சாந்தமாயுள்ளவரை துவேஷித்தல் கடைமக்களின் இயல்பு.

5.5. எவராவது ஒருவர் சாந்தராயும் ஜபத்திலும் தியானத்திலும் ஆழ்ந்தவராயும் தபஸ்வியாயும் இருந்தால் அவருடைய ஜபத்திற்கு இடையூறு விளைவிப்பவராய் இந்திரனே காணப்படுகிறான். (மற்றவர்களைப்பற்றிக் கேட்பானேன்).

सतां सत्ययुगं साक्षात्सर्वदैवासतां कलिः।,

मध्यमो मध्यमानां तु क्रियायोगौ युगे स्मृतौ ।। ५. ६ ।।

वासना कारणं राजन् सर्वत्र धर्मसंस्थितौ ।

तस्यां वै मलिनायां तु धर्मोपि मलिनो भवेत् ।।

मलिना वासना सत्यं विनाशयति सर्वथा ।। ५. ८ ।।

ब्रह्मणो हृदयाज्जातः पुत्रो धर्म इति स्मृतः ।।

ब्राह्मणः सत्यसम्पन्नो वेदधर्मरतः सदा ।

दक्षस्य दुहितारो हि वृता दश महात्मना ।। ५. १० ।।

5.6. ஸாதுக்களுக்கு ஸத்யயுகம் (அல்லது கிருதயுகம்) உரிய காலமாகும்; அஸத்துக்களுக்கு எப்பொழுதும் உரிய காலம் கலி என்பது தெளிவு; இடையிலுள்ளவர்களுக்குப் பொருத்தமானது இடைக்காலம்; கிரியையும் யோகமும் ஒவ்வொரு யுகத்திலும் உண்டு.

5.8. அரசே! எல்லா இடங்களிலும் தருமம் நிலைபெறுவதற்கு முந்தைய வாஸனை காரணமாகும். அந்த வாஸனை அழுக்கடைந்ததானல் தருமமும் சீர் கெட்டுப் போகும். அழுக்கடைந்த வாஸனை ஸத்தியத்தை முற்றும் அழித்து விடுகிறது.

5.10. பிரம்மாவின் இருதயத்திலிருந்து தோன்றிய புத்திரன் தருமப் பிரஜாபதி என்று சொல்லப்படுகிருர். உண்மையைக் கடைப்பிடிப்பவராயும் வேத தர்மத்தில் எப்பொழுதும் பற்றுள்ளவராயும் இருந்த அந்த மகாத்மாவால் தக்ஷப் பிரஜாபதியின் பெண்கள் பதின்மர் வரிக்கப் பட்டனர்.

विवाहविधिना सम्यङ्ग मुनिना गृहधर्मिणा ।
तास्वजीजनयत्पुत्रान् धर्मः सत्यवतां वरः ॥ ५. ११ ॥

हरिं कृष्णं नरं चैव तथा नारायणं नृप ।
योगाभ्यासरतो नित्यं हरिः कृष्णो बभूव ह ॥ ५. १२ ॥

नरनारायणौ चैव चेरतुस्तप उत्तमम् ।
प्रालेयाद्रिं समागत्य तीर्थे बदरिकाश्रमे ॥ ५. १३ ॥

तपस्विषु धुरीणौ तौ पुराणौ मुनिसत्तमौ ।
गृणन्तौ तत्परं ब्रह्म गंगाया विपुले तटे ॥ ५. १४ ॥

हरेरंशौ स्थितौ तत्र नरनारायणावृषी ।
पूर्णं वर्षसहस्रं तु चक्राते तप उत्तमम् ॥ ५. १५ ॥

5.11–12. கிருஹஸ்த தர்மத்தைக் கைக்கொண்ட அவரால் அப்பதின்மரும் விவாஹ முறைப்படி மணந்து கொள்ளப்பட்டனர். ஸத்தியவான்களில் சிறந்த அந்த தருமர் அம்மனைவிகளிடம் ஹரி என்ற கிருஷ்ணன், நரன், நாராயணன் ஆகிய புத்திரர்களைப் பெற்றார். ஹரி என்ற கிருஷ்ணன் எப்பொழுதும் யோகப்பியாசத்தில் பற்றுள்ளவர்களாயிருந்தார்.

5.13. நரனும் நாராயணனும் இமயமலையை அடைந்து பதரிகாசிரமப் புண்ணியக்ஷேத்திரத்தில் உத்தமமான தவத்தைச் செய்பவர்களாயினர்.

5.14. அந்தப் புராதனமான முனிசிரேஷ்டர்கள் விசாலமான கங்கைக்கரையில் 'தத்' என்ற பரப்பிரம்மத்தை தியானிப்பவர்களாய்த் தபஸ்விகளில் தலைசிறந்தவர்களாய் விளங்கினர்.

5.15. ஹரியின் அம்சமான நரநாராயண ரிஷிகளிருவரும் ஆயிரவருஷம் பூர்ணமாக உத்தமமான தவத்தைச் செய்தனர்.

மூர்த்தி என்ற பத்னியிடம் நரநாராயணவதாரம்.

तापितं च जगत्सर्वं तपसा सचराचरम् ।
नरनारायणाभ्यां च शक्रः क्षोभं तदा ययौ ॥ ५. १६ ॥

चिन्ताविष्टः सहस्राक्षो मनसा समकल्पयत् ।
विघ्नः कथं प्रकर्तव्यस्तपो ये भवेन्न हि ॥ ५. १८ ॥

इति संचिन्त्य तौ दृष्ट्वा तदोवाच शचीपतिः ।
किं वा कार्यं महाभागौ ब्रूतं धर्मसुतौ किल ॥ ५. २२ ॥

ददामि वां वरं श्रेष्ठं दातुं यातोऽस्म्यहं ऋषी ।
अदेयमपि दास्यामि तुष्टोऽस्मि तपसा किल ॥ ५. २३ ॥

एवं पुनः पुनः शक्रस्तावुवाच पुरः स्थितः ।
नोचतुस्तावृषी ध्यानसंस्थितौ दृढचेतसौ ॥ ५. २४ ॥

5.16. நரநாராயாணர்களாகிய அவர்களுடைய தவத்தால் சராசரப் பிரபஞ்சமனைத்தும் தாபத்தையடைந்தன. இந்திரனும் கவலையுற்ருன்.

5.18. சிந்தை மேலிட்டவனுய் ஆயிரங்கண் படைத்த இந்திரன் எவ்வாறு ஊறு விளைத்தால் இத்தவம் தடைப்படும் என்று மனதில் ஆலோசித்தான்.

5.22. அங்ஙனமாலோசித்து (அவர்களுடைய ஆசிரமம் சென்று) அவர்களைக் கண்டு இந்திரன் கூறுவான்: 'மகா பாக்கியசாலிகளே! தருமப்பிரஜாபதியின் புத்திரர்களே! உங்களுக்கு என்ன காரியம் ஆகவேண்டும், கூறுங்கள்.

5.23. 'ரிஷிகளே! நான் உங்களுடைய தவத்தால் சந்தோஷம் அடைந்துள்ளேன். உங்களுக்குச் சிறந்த வரத்தை அளிக்கிறேன். அதற்காகவே வந்துள்ளேன். கொடுத்தற்கரியதாயினும் கொடுக்கிறேன்.'

5.24. இவ்வாறு அவர்கள் முன் நின்று கொண்டு மீண்டும் மீண்டும் இந்திரன் கூறியும் அந்த ரிஷிகள் தியானத்திலாழ்ந்த திடச்சித்தமுடையவர்களாய் ஒன்றும் பேசவில்லை.

भीषयामास तौ शक्रो मायां कृत्वा विमोहिनीम् ।
भयतोऽपि वशं नीतौ न तौ धर्मसुतौ मुनी ॥ ५. २७ ॥

व्याघ्रसिंहादिभिः क्रान्तौ चलितौ नाश्रमात्स्वकात् ।
न तयोर्ध्यानभंगं वै कर्तुं कोऽपि क्षमोऽभवत् ॥ ५. २९ ॥

इन्द्रोऽपि सदनं गत्वा चिन्तयामास दुःखितः ।
चलितौ भयलोभाभ्यां नेमौ मुनिवरोत्तमौ ॥ ५. ३० ॥

चिन्तयन्तौ महाविद्या-मादिशक्ति सनातनीम् ।
ईश्वरीं सर्वलोकानां परां प्रकृतिमद्भुताम् ॥ ५. ३१ ॥

ध्यायतां कः क्षमो लोके बहुमायाविदप्युत ।
यन्मूलाः सकला माया देवासुरवृताः किल ॥ ५. ३२ ॥

5.27. அப்பொழுது இந்திரன் மனதை மயக்கும் மாயையால் அவர்களை பயமுறுத்தினன். தருமருடைய புத்திரர்களாகிய அவர்கள் அந்த பயமுறுத்தலினுல் வசப் படவில்லை.

5.29. புலி சிங்கம் முதலியவற்ருல் தாக்கப்பட்டும் அவர்கள் ஆசிரமத்திலிருந்து அசையவில்லை. அவர்களுடைய தியானத்திற்கு ஊறு விளைக்க எவரும் சக்தியுடையவர்களா யில்லை.

5.30–32. இந்திரன் துக்கத்துடன் தன்னிருப்பிடத்திற்கு திரும்பிப்போய் யோசிக்கலானுன்: 'இம்முனிசிரேஷ்டர்கள் பயத்தாலோ லோபத்தாலோ அசையவில்லை'. என்றுமுள்ள வளும் மஹாவித்யா ஸ்வரூபிணியும் உலகனைத்திற்கும் ஈசுவரியும், அற்புதமான பராப்ரகிருதியுமான ஆதி சக்தியை தியானம் செய்பவர்களை எவர்தான் இவ்வுலகில் எவ்வளவு மாயைகளை அறிந்தவராயினும் அசைக்க இயலும்? தேவர் களாலும் அசுரர்களாலும் வரிக்கப்படும் மாயையெல்லாம் அந்தப் பராசக்தியையே மூலமாயுடையதன்ருே?

ते कथं बाधितुं शक्ता ध्यायन्ति गतकल्मषाः ।
वाग्बीजं कामबीजं च मायाबीजं तथैव च ॥ ५. ३३ ॥

मायामोहितः शक्रो भूयस्तस्य प्रतिक्रियाम् ।
कर्तुं कामवसन्तौ तु समाहूयाब्रवीद्वचः ॥ ५. ३४ ॥

मनोभव वसन्तेन रत्यायुक्तो व्रजाऽधुना ।
अप्सरोभिः समायुक्तस्तरसा गन्धमादनम् ॥ ५. ३५ ॥

नरनारायणौ तत्र पुराणावृषिसत्तमौ ।
कुरुतस्तप एकान्ते स्थितौ बदरिकाश्रमे ॥ ५. ३६ ॥

गत्वा तत्र समीपे तु तयोर्मन्मथ-मार्गणैः ।
चित्तं कामातुरं कार्यं कुरु कार्यं ममाधुना ॥ ५. ३७ ॥

5.33. வாக்பீஜம், காமபீஜம், மாயாபீஜம் ஆகிய மந்திரங்களை ஜபிப்பவர்களும் பாவமற்றவர்களுமான அவர்கள் எங்ஙனம் இடையூறுகளால் பாதிக்கப்படுவர்?

5.34. எனினும் மாயையினுல் மயங்கிய இந்திரன் மறுபடியும் அவர்களுக்கு இடையூறு விளைக்க எண்ணிக் காமதேவனையும் வஸந்தருது தேவதையையும் வரவழைத்துப் பின்வரும் வார்த்தைகளைச் சொன்ஞன்.

5.35. 'காமனே! வஸந்த தேவதையுடனும் ரதி தேவியுடனும் அப்ஸரஸ்திரீகளுடனும் இப்பொழுதே விரைவில் கந்தமாதனபர்வதத்திற்குச் செல்ல வேண்டும்.

5.36. 'அங்கு பதரிகாசிரமத்தில் ஏகாந்தமான இடத்தில் புராதன ரிஷிசிரேஷ்டர்களான நரநாராயணர்கள் தவத்தில் நிலைபெற்றிருக்கிருர்கள்.

5.37. 'நீ அவர்களை யணுகி மன்மத பாணங்களால் அவர்களுடைய மனதைக் காமவசப்படும்படி செய்தல் வேண்டும். எனக்காக இக்காரியத்தை இப்பொழுதே செய்யப் புறப்படு.'

रतियुक्तस्ततः कामः पूरयन् पंचमार्गणान् ।
चकार त्वरितस्तत्र वासं बदरिकाश्रमे ॥ ६. ६ ॥

रम्भा तिलोत्तमाद्याश्च गत्वा तत्र वराश्रमे ।
गानं चक्रुः सुगीतज्ञाः स्वरतानसमन्वितम् ॥ ६. ७ ॥

नरं नारायणः प्राह विस्मयोत्फुल्ललोचनः ।
श्रूयते सुरनारीणां गानं ध्यानविनाशनम् ॥ ६. २० ॥

आवयोस्तपभंगाय कृतं मघवता किल ।
ऋतुराडन्यथाऽकाले प्रीतिं संजनयेत्कथम् ॥ ६. २१ ॥

विघ्नोऽयं विहितो भाति भीतेनाऽसुरशत्रुणा ।
इति ब्रुवति विप्राग्र्ये देवे नारायणे विभौ ॥ ६. २३ ॥

सर्वे दृष्टिपथं प्राप्ता मन्मथप्रमुखास्तदा ।
ददर्श भगवान् सर्वान्नरो नारायणस्तथा ॥ ६. २४ ॥

6.6. அவ்வாறே மன்மதன் ரதியுடன்கூடப் பஞ்ச பாணங்களை (அம்பருத் தூணியில்) நிரப்பிக்கொண்டு பதரி காசிரமத்திற்கு விரைந்து அங்கு தான் வசிக்க ஒரு இடத்தை கற்பித்துக் கொண்டான்.

6.7. கானத்தில் சிறந்தவர்களான இரம்பை, திலோத் தமை முதலியவர்கள் அவ்வாசிரமத்திற்குச் சென்று ஸ்வரத் துடனும் தாளத்துடனும் பாட ஆரம்பித்தார்கள்.

6.20. நாராயணர் நரனை நோக்கி ஆச்சரியத்தால் மலர்ந்த கண்களுடன் பின்வருமாறு கூறினார்: 'தியானத்தை நாசம் செய்யும் தேவஸ்திரீகளின் கானம் கேட்கப்படுகிறது.

6.21. 'நம்முடைய தவத்தைக் கலைப்பதற்காக இது இந்திரனால் செய்யப்பட்ட சூழ்ச்சி. இல்லையேல் பருவ மல்லாத சமயத்தில் ருதுக்களின் அரசாகிய வஸந்தம் எப்படி இன்பம் விளைப்பதாக இப்பொழுது ஆகும்?

6.23–24. 'இது அசுரசத்துருவாகிய இந்திரன் பயத் தினால் ஏற்படுத்திய விக்னம் என்று தோன்றுகிறது.' இவ் வாறு பிராம்மணர்கள் முன்னிலையில் பிரபுவாகிய நாரா யணர் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது மன்மதன் முதலியவர்கள் தென்பட்டார்கள். பகவான் நாராயணரும் நரனும் அவர்களைக் கண்டார்கள்.

विस्मयाविष्टमनसौ बभूवतुरुभावपि ।
मन्मथं मेनकांचैव रंभांचैव तिलोत्तमाम् ।। ६. २५ ।।

एताश्चान्या वरारोहा दृष्टास्ताभ्यां तदाऽन्तिके ।
वीक्ष्य तौ विस्मितौ जातौ कामसैन्यं सुविस्तरम् ।। ६. २८ ।।

प्रणम्याग्रे स्थिताः सर्वा देववारांगनास्तदा ।
जगुश्छलेन ताः सर्वाः पृथिव्यामतिदुर्लभम् ।। ६. ३० ।।

तत्तथाऽवस्थितं दिव्यं मन्मथातिविवर्धनम् ।
शुश्राव भगवान् विष्णुर्नरो नारायणस्तदा ।। ६. ३१ ।।

श्रुत्वा प्रोवाच तास्तत्र प्रीत्या नारायणो मुनिः ।।
आस्यतां सुखमत्रैव करोम्यथित्यमद्भुतम् ।
भवन्त्योऽतिथिधर्मेण प्राप्ताः स्वर्गात्सुमध्यमाः ।। ६. ३२ ।।

6.25–28. இருவரும் மனதில் ஆச்சரியம் மிக்கவர்களானார்கள். மன்மதனுடன் மேனகை, இரம்பை, திலோத்தமை ஆகியோரையும் மற்ற அழகிய ஸ்திரீகளையும் கொண்ட விரிவான காமசைனியத்தை அருகாமையில் கண்டு மிகவும் வியப்படைந்தனர்.

6.30. அச்சிறந்த தேவஸ்திரீகள் எல்லோரும் நரநாராயணர் முன் நமஸ்கரித்துவிட்டு அங்கு நின்றனர். பிறகு வஞ்சிக்கும் எண்ணத்துடன் பூமியில் காணக்கிடைக்காத வகையில் அவர்களெல்லோரும் ஆடிப்பாடினார்கள்.

6.31. பகவான் விஷ்ணுவின் அம்சமாகிய நரநாராயணர்கள் காமத்தைத் தூண்டி வளரச் செய்யும் அந்த தெய்வீகமான கானத்தை கேட்டனர்.

6.32. அங்ஙனம் கேட்டபின் நாராயண முனியானவர் பிரீதியுடன் அவர்களை நோக்கிப் பின்வருமாறு கூறினார்: 'அழகிய இடைபடைத்த பெண்களே! நீங்கள் சுவர்க்கத்திலிருந்து அதிதிகளாய் வந்திருக்கிறீர்கள். இங்கே நீங்கள் சுகமாயிருக்கலாம். அற்புதமான அதிதிபூஜையை நான் செய்கிறேன்.'

साभिमानस्तु संजातस्तदा नारायणो मुनिः ।
इन्द्रेण प्रेषिता नूनं तथा विघ्नचिकीर्षया ॥ ६. ३३ ॥

वराक्यः का इमाः सर्वाः सृजाम्यद्य नवाः किल ।
एताभ्यो दिव्यरूपाश्च दर्शयामि तपोबलम् ॥ ६. ३४ ॥

इति संचिन्त्य मनसा करेणोरुं प्रताड्य वै ।
तरसोत्पादयामास नारीं सर्वांगसुन्दरीम् ॥ ६. ३५ ॥

नारायणोरुसम्भूता ह्यूर्वशीति ततः शुभा ।
ददृशुस्ताः स्थितास्तत्र विस्मयं परमं ययुः ॥ ६. ३६ ॥

तासां च परिचर्यार्थं तावतीश्चातिसुन्दरीः ।
प्रादुश्चकार तरसा तदा मुनि-रसंभ्रमः ॥ ६. ३७ ॥

6.33–34. பின்பு நாராயண முனிவர் சற்று அபிமானம் மேலிட்டவராய்ப் பின்வருமாறு எண்ணினார்: 'தவத்திற்கு இடையூறு விளைப்பதற்காக இவர்கள் இந்திரனால் ஏவப்பட்டவர்கள் என்பது நிச்சயம். இவர்களெல்லாம் அற்பமானவர்கள். இவர்களைக் காட்டிலும் திவ்யமான ரூபமுடைய புதிய ஸ்திரீகளை இப்பொழுது சிருஷ்டிக்கிறேன். இவர்களுக்கு என்னுடைய தவ வலிமையைக் காட்டுகிறேன்.'

6.35. இங்ஙனம் மனதில் எண்ணிக் கையால் துடையைத் தட்டினார். உடனே எல்லா உறுப்புகளிலும் அழகிற் சிறந்த ஒரு ஸ்திரி தோன்றினாள்.

6.36. நாராயணருடைய (ஊரு) துடையிலிருந்து உண்டாகிய அவ்வழகி ஊர்வசி எனப்பெயர் பெற்றாள். அங்கிருந்தவர்களனைவரும் அவளைக்கண்டு மிகுந்த ஆச்சரியத்தை அடைந்தனர்.

6.37. அவர்கள் எத்தனை பேர்களிருந்தார்களோ அத்தனை ஸ்திரீகளை அவர்களுக்குப் பணிவிடை செய்வதற்காக மீண்டும் அம்முனிவர் விரைவில் சிறிதும் சிரமமின்றித் தோற்றுவித்தார்.

गायन्त्यश्च हसन्त्यश्च नानोपायनपाणयः।
प्रणेमुस्ता मुनी सर्वाः स्थिताः कृत्वांजलिं पुरः॥ ६. ३८॥

ता वीक्ष्य विभ्रमकरीं तपसो विभूतिं
देवांगना हि मुमुहुः प्रविमोहयन्त्यः।
ऊचुश्च तौ प्रमुदितानन-पद्मशोभा
रोमोद्गमोल्लसित चारुनिजांगवल्लयः॥ ६. ३९॥

भाग्येन केन युवयोः किल दर्शनं नः
संपादितं न विदितं संचितं तत्।
चित्तं क्षमं निजजने विहितं युवाभ्या—
मस्मद्विधे किल कृतागसि तापमुक्तम्॥ ६. ४२॥

6.38. அவர்கள் புன்னகை பூத்தவர்களாய்ப் பாடிக் கொண்டு பலவிதமான உபசாரப் பொருள்களைக் கைகளில் ஏந்திக்கொண்டு வந்து முனிவர்களை வணங்கிவிட்டுக் கை கூப்பி நின்றனர்.

6.39. பிரமிக்கச் செய்யும் தவத்தின் பெருமையைக் கண்ணுற்ற அந்த தேவஸ்திரீகள் ஆச்சரியத்தில் மூழ்கினவர் களாய்த் தாமரை போல் மலர்ந்த முகங்களுடனும் புள காங்கிதத்தையடைந்த கொடி போன்ற அங்கங்களுடனும் நரநாராயணர்களை நோக்கிப் பின்வருமாறு கூறினர்.

•

6.42. எந்தப் பூர்வ புண்ணியத்தின் பாக்கியத்தால் எங்களுக்கு உங்களுடைய தரிசனம் கிட்டியதோ அறியோம். பாவஞ் செய்த எங்களிடம் வருத்தத்தையடையாமல் எங் களைப் போன்றவர்களிடமும் நம்மைச் சார்ந்தவர்கள் என்ற எண்ணத்துடன் பொறுமை காட்டப்பட்டது.

नरनारायणावूचतुः—

ब्रुवन्तु वांछितान् कामान् ददावस्तुष्टमानसौ ।
यान्तु स्वर्गं गृहीत्वेमा-मुर्वशीं चारुलोचनाम् ॥ ६. ४४ ॥

स्वस्त्यस्तु सर्वदेवेभ्यो यथेष्टं प्रव्रजन्तु च ।
न कस्यापि तपोविघ्नं प्रकर्तव्य-मतः परम् ॥ ६. ४६ ॥

देव्य ऊचुः—

क्व गच्छामो महाभाग प्राप्तास्ते पादपंकजम् ।
नारायण सुरश्रेष्ठ भक्त्या परमया मुदा ॥ ६. ४७ ॥

वांछितं चेद्वरं नाथ ददासि मधुसूदन ।
तुष्टः कमलपत्राक्ष ब्रवीमो मनसेप्सितम् ॥ ६. ४८ ॥

நரநாராயணர் கூறியது—

6.44. உங்களுக்கு விருப்பமான வரங்களைக் கேளுங்கள். சந்தோஷமடைந்த நாங்கள் தருகிறோம். அழகிய கண்படைத்த இந்த ஊர்வசியையும் அழைத்துக்கொண்டு சுவர்க்கம் செல்லுங்கள்.

6.46. எல்லா தேவர்களிடமிருந்தும் உங்களுக்கு மங்களம் உண்டாகட்டும். உங்களிஷ்டப்படி நீங்கள் செல்லலாம். இனிமேல் எவருடைய தவத்திற்கும் இடையூறு செய்தல் கூடாது.

தேவஸ்திரீகள் கூறியது—

6.47. மகானுபாவரே! நாராயணரே! தேவசிரேஷ்டரே! பரமபக்தியுடனும் சந்தோஷத்துடனும் உங்களுடைய திருவடித்தாமரைகளை நாடுகின்றோம். நாங்கள் எங்கு செல்வோம்?

6.48. மதுசூதனரே! தாமரைக்கண்ணரே! நாதரே! எங்களிடம் சந்தோஷித்து நாங்கள் விரும்பும் வரத்தை அளிப்பீர்களேயானால் எங்கள் மனதின் ஆசையைக் கூறுகிறோம்.

पतिस्त्वं भव देवेश वरमेनं परंतप ।
भवामः प्रीतियुक्तास्त्वां सेवितुं जगदीश्वर ॥ ६. ४९ ॥

त्वयाचोत्पादिता नार्यः सन्त्यन्याश्चारुलोचनाः ।
उर्वश्याद्यास्तथा यान्तु स्वर्गं वै भवदाज्ञया ॥ ६. ५० ॥

नारायण उवाच—

अस्मिन् जन्मनि चार्वंग्यः कृतसंकल्पवाहनम् ।
आवाभ्यां च न कर्तव्यः सर्वथा दारसंग्रहः ॥ १७. ९ ॥

तस्माद्गच्छन्तु त्रिदिवं कृपां कृत्वा ममोपरि ।
धर्मज्ञा न प्रकुर्वन्ति व्रतभंगं परस्य वै ॥ १७. १० ॥

6.49. தேவநாயகரே! சத்ருக்களை ஜயிப்பவரே! ஜகதீசுவரரே! தாங்கள் எங்களுக்குப் பதியாக வேண்டும். இதுவே எங்கள் வரம். உங்களைப் பிரீதியுடன் சேவிக்க ஆசைப்படுகிறோம்.

6.50. உங்களால் தோற்றுவிக்கப்பட்ட அழகிய கண்களைப் படைத்தவர்களும் ஊர்வசி முதலியவர்களுமான இந்த மற்ற ஸ்திரீகள் இருக்கிறார்களே, இவர்கள் உங்களுடைய கட்டளையால் (எங்களுக்குப் பதிலாக) சுவர்க்கம் செல்லட்டும்.

நாராயணர் கூறியது—

17.9. அழகிய அங்கங்களை உடையவர்களே! இந்த ஜன்மத்தில் நாங்கள் கொண்ட ஸங்கல்பப்படி மனைவிகளாய் ஸ்திரீகளை ஏற்பதென்பது ஒருபொழுதுமில்லை.

17.10. ஆகையால் என்னிடம் கிருபை வைத்து நீங்கள் சுவர்க்கம் செல்லுங்கள். தருமந் தெரிந்தவர்கள் பிறருடைய தவத்திற்கு ஊறுவிளைக்க மாட்டார்கள்.

अष्टाविंशे विशालाक्ष्यो द्वापरेऽस्मिन् धरातले ।
देवानां कार्यसिद्ध्यर्थं प्रभविष्यामि सर्वथा ॥ १७. १५ ॥

तदा भवत्यो मद्दाराः प्राप्य जन्म पृथक् पृथक् ।
भूपतीनां सुता भूत्वा पत्नीभावं गमिष्यथ ॥ १७. १६ ॥

इत्याश्वास्य हरिस्तास्तु प्रतिश्रुत्य परिग्रहम् ।
व्यसर्जयत्स भगवान् जग्मुश्च विगतज्वराः ॥ १७. १७ ॥

एवं विसर्जितास्तेन गताः स्वर्गं तदांगनाः ।
शक्राय कथयामासुः कारणं सकलं पुनः ॥ १७. १८ ॥

तौ हि कृष्णार्जुनौ वीरौ भूभारहरणाय च ।
जातौ तौ भरतश्रेष्ठ भृगोः शापवशादिह ॥ १७. २३ ॥

17.15. பரந்த கண்படைத்தவர்களே! இருபத்தெட்டாவது சதுர் யுகத்தில் துவாபரத்தில் இந்த பூமியில் தேவர்களுடைய காரிய சித்திக்காக எப்படியும் அவதரிப்பேன்.

17.16. அப்பொழுது நீங்கள் தனித்தனியே அரச குமாரிகளாய்ப் பிறந்து என்னுடைய பத்தினிகள் என்ற பாவனையை அடையலாம்.

17.17. பகவான் ஹரியானவர் இவ்வாறு அவர்களை ஏற்றுக் கொள்வதாய் வாக்களித்து சமாதானம் செய்து அனுப்பி வைத்தார். அவர்களும் மனதில் வருத்தமில்லாமல் சென்றனர்.

17.18. அப்படி அவரால் அனுப்பப்பட்ட அப்பெண்களும் சுவர்க்கம் சென்று இந்திரனிடம் தாங்கள் திரும்பிவந்த காரணம் அனைத்தையும் கூறினர்.

17.23. பரதசிரேஷ்டரே! பிருகுவின் சாபவசத்தால் அந்த நரநாராயணர்களே வீரர்களாகிய அர்ஜுனனுகவும் கிருஷ்ணனுகவும் பூபாரத்தைப் போக்குவதற்காக இங்கு தோன்றியவர்கள்.

राजोवाच—

कृष्णावतार चरितं विस्तरेण वदस्व मे ॥ १७. २४ ॥

व्यास उवाच—

श्रृणु राजन् प्रवक्ष्यामि कृष्णस्य चरितं महत् ।
अवतारकारणं चैव देव्याश्चरित-मद्भुतम् ॥ १८. १ ॥

धरैकदा भराक्रान्ता रुदती चातिकर्षिता ।
गोरूपधारिणी दीना भीताऽगच्छत् त्रिविष्टपम् ॥ १८. २ ॥

इन्द्र उवाच—

इले किं ते करोम्यद्य ब्रह्माणं शरणं व्रज ।
अहं तत्राऽऽगमिष्यामि स ते दुःखं हरिष्यति ॥ १८. १५ ॥

அரசன் கூறியது—

17.24. கிருஷ்ணுவதார சரித்திரத்தை எனக்கு விரிவாய்க் கூறியருள வேண்டுகிறேன்.

வியாஸர் கூறியது—

18.1. அரசே! கேளும்! மஹத்தான கிருஷ்ணசரித்திரத்தையும் அவதார காரணத்தையும் தேவியின் அத்புத லீலைகளையும் கூறுகிறேன்.

18.2. ஒரு சமயம் பூதேவியானவள் பாரத்தால் பீடிக்கப்பட்டு மெலிந்தவளாய் அழுது கொண்டு பசுவின் வடிவந்தாங்கி பயத்துடன் உதவியற்றவளைப் போல் (இந்திரனிடம்) சுவர்க்கஞ் சென்ருள்.

இந்திரன் கூறியது—

18.15. பூதேவியே! நான் இப்பொழுது உனக்கு என்ன செய்யக் கூடும்? பிரம்மாவைச் சரண் அடை. நானும் அங்கு வருகிறேன். அவர் உன்னுடைய துன்பத்தைப் போக்குவார்.

तच्छ्रुत्वा त्वरिता पृथ्वी ब्रह्मलोकं गता तदा ।
शक्रोपि पृष्ठतः प्राप्तः सर्वदेवपुरःसरः ॥ १८. १६ ॥

ब्रह्मोवाच—

नाहं शक्तस्तथा देवि भारावतरणे तव ।
गच्छावः सदनं विष्णोर्देवदेवस्य चक्रिणः ॥ १८. २२ ॥

व्यास उवाच—

इत्युक्त्वा वेदकर्ताऽसौ पुरस्कृत्य सुरांश्च गाम् ।
जगाम विष्णुसदनं हंसारूढश्चतुर्मुखः ॥ १८. २५ ॥

तमुवाचाब्जजो नत्वा धरादुःखंच संस्मरन् ।
भारावतरणं विष्णो कर्तव्यं ते जनार्दन ॥ १८. ३१ ॥

18.16. அதைக்கேட்டு பூதேவி விரைவில் பிரம்ம லோகம் சென்றாள். இந்திரனும் எல்லா தேவதைகளையும் முன்னிட்டுக்கொண்டு பின்னாலேயே வந்தான்.

பிரம்மா கூறியது—

18.22. பூதேவியே! உன்னுடைய பாரத்தைக் குறைப்பதற்கு நான் சக்தனல்லன். சக்ராயுதம் தாங்கிய தேவதேவனாகிய விஷ்ணுவின் இருப்பிடம் செல்வோம்.

வியாஸர் கூறியது—

18.25. இங்ஙனம் கூறிவிட்டு வேதகர்த்தாவாகிய நான்முகப் பிரம்மா தேவர்களையும் பூதேவியையும் முன்னிட்டுக் கொண்டு ஹம்ஸவாஹனத்தில் விஷ்ணுவின் ஆலயம் சென்றார்.

18.31. பூதேவியின் துக்கத்தை நினைந்து அவரை வணங்கி பிரம்மா கூறியதாவது: 'விஷ்ணுவே! ஜனார்த்தனரே! பூபாரத்தைக் குறைத்தருள வேண்டும்.'

विष्णुरुवाच—

वयं मायावृताः सर्वे न स्मरामो जगद्गुरुम्।
परमं पुरुषं शान्तं सच्चिदानन्द-मव्ययम् ॥ १९. २ ॥

अहं विष्णुरहं ब्रह्मा शिवोऽहमिति मोहिताः।
न जानीमो वयं धातः परं वस्तु सनातनम् ॥ १९. ३ ॥

भवताऽपि तथा दृष्टा विभूतिस्तस्य चाद्भुता।
कल्पादौ भवयुक्तेन मयाऽपि च सुधार्णवे ॥ १९. ५ ॥

मणिद्वीपेऽथ मन्दारविटपे रासमण्डले।
समाजे तत्र सा दृष्टा श्रुता तु वचसाऽपि च ॥ १९. ६ ॥

तस्मात्तां परमां शक्तिं स्मरन्त्वद्य सुराः शिवाम्।
सर्वकामप्रदां मायामाद्यां शक्तिं परात्मनः ॥ १९. ७ ॥

விஷ்ணு கூறியது—

19.2. நாமெல்லோரும் மாயையினுல் சூழப்பட்டவர்கள். பரமபுருஷரும், சாந்தரும், சச்சிதானந்தரும் மாறுபாடற்றவருமான ஜகத்குருவை மனதால் நினைக்கவில்லை.

19.3. பிரம்மாவே! 'நான் விஷ்ணு', 'நான் பிரம்மா', 'நான் சிவன்' என்று மயங்கி ஸநாதனமான பரம்பொருளை நாம் அறியவில்லை.

19.5. அந்தப் பரமேசுவரனுடைய அத்புத விபூதியான பராசக்தி கல்பத்தின் ஆரம்பத்தில் ருத்திரருடன் கூடியிருந்த உம்மாலும் என்னுலும் பாற்கடலில் பார்க்கப்பட்டாள்.

19.6. மணித்வீபத்தில் மந்தார வாடிகையில் ராஸ மண்டல ஸமாஜத்தில் பார்க்கப்பட்டு வார்த்தையால் கேட்கவும் பட்டாள்.

19.7. ஆகையால் தேவர்கள் இப்பொழுது மங்கள வடிவினளும் எல்லா ஆசைகளையும் பூர்த்தி செய்விப்பவளும் மாயா ஸ்வரூபிணியும் பரமாத்மாவின் ஆதிபராசக்தியுமான அவளை தியானம் செய்யட்டும்.

व्यास उवाच—

इत्युक्ता हरिणा देवा ब्रह्माद्या भुवनेश्वरीम् ।
सस्मरुर्मनसा देवीं योगमायां सनातनीम् ॥ १९. ८ ॥

स्मृतमात्रा तदा देवी प्रत्यक्षं दर्शनं ददौ ।
पाशांकुशवराभीतिधरा देवी जपारुणा ॥ १९. ९ ॥

देवा ऊचुः—

यदज्ञानाद्भवोत्पत्तिर्यज्ज्ञानाद्भवनाशनम् ।
संविद्रूपां च तां देवीं स्मरामः सा प्रचोदयात् ॥ १९. १२ ॥

महालक्ष्म्यै च विद्महे सर्वशक्त्यै च धीमहि ।
तन्नो देवी प्रचोदयात् ॥ १९. १३ ॥

வியாஸர் கூறியது—

19.8. இங்ஙனம் விஷ்ணுவால் உபதேசிக்கப்பெற்ற பிரம்மா முதலிய தேவர்கள் யோகமாயையும் ஸனாதனியு மான புவனேசுவரீ தேவியை மனதால் தியானித்தார்கள்.

19.9. நினைத்தமாத்திரத்தில் செம்பருத்திப்பூ நிறத் தினளான தேவி பாசமும் அங்குசமும் வரம் அபயம் ஆகிய முத்திரைகளும் தரித்தவளாய்ப் பிரத்தியக்ஷமாய் தரிசன மளித்தாள்.

தேவர்கள் கூறியது—

19.12. எவளை அறியாமையால் ஸம்ஸாரம் தோன்று கிறதோ, எவளை அறிவதால் ஸம்ஸாரம் அழிகிறதோ அந்த ஞானஸ்வரூபிணியான தேவியை தியானம் செய்கின்றோம். அவள் எங்கள் புத்திசக்திகளை மலரச் செய்யட்டும்.

19.13. மஹாலக்ஷ்மியாகிய அவளை நாம் அறிவோ மாக. ஸர்வசக்தியாகிய அவளை தியானிப்போம். அந்த தேவி நம்முடைய புத்திசக்திகளை மலரச் செய்யட்டும்.

मातर्नताः स्म भुवनार्तिहरे प्रसीद
शं नो विधेहि कुरु कार्यमिदं दयार्द्रे ।
भारं हरस्व विनिहत्य सुरारिवर्गं
महचा महेश्वरि सतां कुरु शं भवानि ॥ १६. १४ ॥

यद्यंबुजाक्षि दयसे न सुरान् कदाचित्
किं ते क्षमा रणमुखेऽसिशरैः प्रहर्तुम् ।
एतत्त्वयैव गदितं ननु यक्षरूपं
धृत्वा तृणं दह हुताश-पदाभिलापैः ॥ १६. १५ ॥

19.14. தாயே! நாங்கள் உன்னை நமஸ்கரிக்கிறோம். உலகின் துன்பத்தைப் போக்குபவளே! அருள் புரிவாய். எங்களுக்கு மங்களத்தை அளி. தயையால் கசியும் உள்ளம் படைத்தவளே! நாங்கள் இப்பொழுது வேண்டும் காரியத்தைப் பூர்த்தி செய். மஹேசுவரி! அசுரக்கூட்டங்களையழித்து பூதேவியின் பாரத்தைப் போக்கியருள். பவானி! ஸாதுக்களுக்கு நன்மையைச் செய்.

19.15. தாமரை மலர் போன்ற கண்படைத்தவளே! எப்பொழுதாவது தேவர்கள்பால் உன்னுடைய தயை இல்லாமற் போகுமேயானால் அவர்கள் போர்முனையில் கத்தியாலும் பாணங்களாலும் சத்துருக்களை அடிப்பதற்குச் சக்தி உடையவர்களாவார்களா? நீயே யக்ஷரூபம் தரித்து 'அக்கினியே! இந்தப்புல்லை எரி பார்க்கலாம்' என்பது முதலிய வார்த்தைகளால் இவ்வுண்மையை உபதேசிக்கவில்லையா? (ஓ. கேனோபநிஷத்து).

विष्णुरुवाच—

कर्तुं प्रभुर्न द्रुहिणो न कदाचनाऽहं
नाऽपीश्वरस्तव कलारहितस्त्रिलोक्याः।
कर्तुं प्रभुत्वमनघेऽत्र तथा विहर्तुं
त्वं वै समस्तविभवेश्वरि भासि नूनम् ॥ १९. २० ॥

श्रीदेव्युवाच—

मयेदं चिन्तितं पूर्वमंशावतरणं सुराः।
भारावतरणं चैव यथा स्याद् दुष्टभूभुजाम् ॥ १९. २९ ॥
मया सर्वे निहन्तव्या दैत्येशा ये महीभुजः।
मागधाद्या महाभागाः स्वशक्त्या मन्दतेजसः ॥ १९. ३० ॥

விஷ்ணு கூறியது—

19.20. முவ்வுலகையும் ஆளும் செயலைச் செய்வதற்கு பிரம்மாவோ, நானோ, ஈசுவரனோ உன்னுடைய சக்தியின் ஒரு பகுதியாவது இல்லாமல் சமர்த்தர்களாக மாட்டோம். மாசற்றவளே! எல்லாப் பெருமைகளுக்கும் உறைவிடமான ஈசுவரி! உண்மையில் அனைத்தையும் நடத்துவிக்கும் சக்தியாக நீ ஒருத்தியே விளங்குகிறாய்.

ஸ்ரீதேவி கூறியது—

19.29. தேவர்களே! கொடிய அரசர்களால் பூமிக்கு ஏற்பட்ட பாரத்தைக் குறைப்பதற்காக அம்சாவதாரம் செய்ய வேண்டும் என்று ஏற்கெனவே நான் ஸங்கல்பித்துள்ளேன்.

19.30. மகத தேசத்தையாளும் ஜராசந்தன் முதலிய பலசாலிகளான அரசர்களெல்லாம் அசுரர்களே யாவர். அவர்களனைவரும் என்னுடைய சக்தியால் மரணமடையத் தக்கவர்கள்.

भवद्भिरपि स्वैरंशै-रवतीर्य धरातले ।
मच्छक्तियुक्तैः कर्तव्यं भारावतरणं सुराः ॥ १९. ३१ ॥

कश्यपो भार्ययासार्धं दिविजानां प्रजापतिः ।
यादवानां कुले पूर्वं भविताऽऽनकदुन्दुभिः ॥१९. ३२ ॥

तथैव भृगुशापाद्वै भगवान् विष्णुरव्ययः ।
अंशेन भविता तत्र वसुदेवसुतो हरिः ॥ १९. ३३ ॥

तदाऽहं प्रभविष्यामि यशोदायां च गोकुले ।
कार्यं सर्वं करिष्यामि सुराणां सुरसत्तमाः ॥ १९. ३४ ॥

कारागारे गतं विष्णुं प्रापयिष्यामि गोकुले ।
शेषंच देवकीगर्भात्प्रापयिष्यामि रोहिणीम् ॥ १९. ३५ ॥

19.31. தேவர்களே! நீங்களும் பூமியில் உங்கள் அம்சங்களால் தோன்றி என்னுடைய சக்தியுடன் கூடினவர்களாய் பூபாரத்தைப் போக்க வேண்டும்.

19.32. தேவர்களின் பிரஜாபதியான காசியபர் மனைவியுடன் யாதவகுலத்தில் முன்னுடியாக ஆனகதுந்துபி என்ற பெயருடன் பிறப்பார்.

19.33. மாறுபாடற்ற பகவான் விஷ்ணுவும் பிருகு மகரிஷியின் சாபத்தால் (ஆனகதுந்துபி என்ற) வசுதேவருக்குப் பிள்ளையாக அம்சாவதாரம் செய்வார்.

19.34. நானும் கோகுலத்தில் யசோதையிடம் தோன்றுவேன். தேவசிரேஷ்டர்களே! தேவகாரியம் அனைத்தையும் நான் முடித்து வைப்பேன்.

19.35. (வசுதேவர் மனைவியான) தேவகியின் கர்ப்பத்திலிருந்து ஆதிசேஷனை (வசுதேவருடைய இன்னொரு மனைவியான) ரோகிணியிடம் சேர்ப்பேன். சிறையில் பிறக்கப் போகும் விஷ்ணுவை கோகுலம் சேரச் செய்வேன்.

मच्चकत्योपचितौ तौ च कर्तारौ दुष्टसंक्षयम् ।
दुष्टानां भूभुजां कामं द्वापरान्ते सुनिश्चितम् ॥ १९. ३६ ॥

इन्द्रांशोऽप्यर्जुनः साक्षात्करिष्यति बलक्षयम् ।
धर्मांशोऽपि महाराजो भविष्यति युधिष्ठिरः ॥ १९. ३७ ॥

वाय्वंशो भीमसेनश्चाश्विन्यंशौ च यमावपि ।
वसोरंशोऽथ गांगेयः करिष्यति बलक्षयम् ॥ १९. ३८ ॥

व्रजन्तु च भवतोऽद्य धरा भवतु सुस्थिरा ।
भारावतरणं नूनं करिष्यामि सुरोत्तमाः ॥ १९. ३९ ॥

कृत्वा निमित्तमात्रांस्तान् स्वशकत्याऽहं न संशयः ।
कुरुक्षेत्रे करिष्यामि क्षत्रियाणां च संक्षयम् ॥ १९. ४० ॥

19.36. என்னுடைய சக்திவாய்ந்த அவ்விருவரும் நிச்சயமாக துவாபரயுகத்தின் இறுதியில் துஷ்டர்களான அரசர்களை அறவே ஒழிக்கும் காரியத்தைச் செய்வார்கள்.

19.37. ஸாக்ஷாத் இந்திரனுடைய அம்சமாய்த் தோன்றும் அர்ஜுனன் சேனைகளை யழிப்பான். தரும தேவதையின் அம்சமாக யுதிஷ்டிர மகாராஜன் தோன்றுவான்.

19.38. வாயுவின் அம்சமாக பீமசேனனும் அச்வினீ தேவதைகளின் அம்சமாக இரட்டையர்களும் (நகுல ஸஹ தேவர்கள்), வசுவின் அம்சமாய் கங்காபுத்திரனாகிய பீஷ்மனும் தோன்றி அசுரபலத்தை யழிப்பார்கள்.

19.39. தேவசிரேஷ்டர்களே! நீங்கள் இப்பொழுது போகலாம். பூதேவி திடச்சித்தத்துடனிருக்கட்டும். நிச்சயமாக நான் பூபாரத்தைக் குறைக்கிறேன்.

19.40. அவர்களை நிமித்த மாத்திரமாய்ச் செய்து என்னுடைய சக்தியால் நான் குருக்ஷேத்திரத்தில் க்ஷத்திரியர்களை அழிப்பேன். இதில் சந்தேகமில்லை.

असूयेर्ष्यामतिस्तृष्णा-ममताभिमता-स्पृहा ।
जिगीषा-मदनो-मोहो दोषैर्नंक्ष्यन्ति यादवाः ॥ १९. ४१ ॥

ब्राह्मणस्य च शापेन वंशनाशो भविष्यति ।
भगवानपि शापेन त्यक्ष्यत्येतत्कलेवरम् ॥ १९. ४२ ॥

भवन्तोऽपि निजांगैश्च सहायाः शार्ङ्गधन्वनः ।
प्रभवन्तु सनारीका मथुरायां च गोकुले ॥ १९. ४३ ॥

व्यास उवाच—

इत्युक्त्वाऽन्तर्दधे देवी योगमाया परात्मनः ।
सधरा वै सुराः सर्वे जग्मुः स्वान्यालयानि च ॥ १९. ४४ ॥

19.41. யாதவர்கள் அசூயையோடும் கலக புத்தியோடும் பேராசையோடும் அகங்காரத்தோடும் கர்வத்தோடும் ஜயிக்க வேண்டுமென்ற இச்சையோடும் காமத்தோடும் மோகத்தோடும் கூடியவர்களாய் இந்த தோஷங்களால் அழியப் போகிருர்கள்.

19.42. பிராம்மண சாபத்தால் வம்சம் நாசமடையும். பகவானும் அதே சாபத்தை வியாஜமாய்க்கொண்டு தனது உடலைவிடப் போகிருர்.

19.43. நீங்கள் உங்கள் உடலால் பகவான் சாரங்கபாணிக்கு உதவி புரிபவர்களாய் உங்கள் ஸ்திரீகளுடன் மதுரையிலும் கோகுலத்திலும் போய்த் தோன்றுங்கள்.

வியாஸர் கூறியது—

19.44. பரமாத்மாவின் யோகமாயையான தேவி இங்ஙனம் கூறிவிட்டு மறைந்தாள். பூதேவியுடன் தேவர்கள் அனைவரும் தத்தம் இருப்பிடமேகினர்.

धराऽपि सुस्थिरा जाता तस्या वाक्येन तोषिता ।
ओषधी-वीरुधोपेता बभूव जनमेजय ।। १६. ४५ ।।

इति श्रीदेवीभागवते चतुर्थस्कन्धे
एकोनविंशोऽध्यायः

।। श्री कृष्णावताररहस्यं समाप्तम् ।।

19.45. ஜனமேஜயா! பரதேவதையின் வாக்கியத்தால் நிம்மதியடைந்த பூதேவி கொழுந்துவிட்டுத் தளிர்த்த செடி கொடிகளுடன் கூடியவளாய்ச் சந்தோஷமாயிருந்தாள்.

இங்ஙனம் ஸ்ரீதேவிபாகவதத்தில்
நாலாவது ஸ்கந்தத்தில் பத்தொன்பதாவது அத்தியாயம்
முற்றும்.

ஸ்ரீகிருஷ்ணாவதார ரஹஸ்யம் முற்றும்.

श्री कृष्णचरित्रम् ॥ १७ ॥

कालिन्दी पुलिने रम्ये ह्यासीन्मधुवनं पुरा ।
लवणो मधुपुत्रस्तु तत्रासीद्दानवो बली ॥ २०. ५४ ॥

द्विजानां दुःखदः पापो वरदानेन गर्वितः ।
निहतोऽसौ महाभाग लक्ष्मणस्यानुजेन वै ॥ २०. ५५ ॥

शत्रुघ्नेनाथ संग्रामे तं निहत्य मदोत्कटम् ।
वासिता मथुरा नाम पुरी परमशोभना ॥ २०. ५६ ॥

स तत्र पुष्कराक्षौ द्वौ पुत्रौ शत्रुनिषूदनः ।
निवेश्य राज्ये मतिमान् काले प्राप्ते दिवंगतः ॥ २०. ५७ ॥

सूर्यवंशक्षये तां तु यादवाः प्रतिपेदिरे ।
मथुरां मुक्तिदां राजन् ययाति-तनयाः पुरा ॥ २०. ५८ ॥

17. ஸ்ரீ கிருஷ்ண சரித்திரம்.

20.54. முன்னொரு காலத்தில் அழகிய யமுனைக் கரையில் மதுவனம் என்று ஒன்று இருந்தது. அங்கு மது என்ற அசுரனின் புத்திரனான லவணன் என்பவன் மிகுந்த பலவானாயிருந்தான்.

20.55. அவன் பெற்றிருந்த வரங்களால் கர்வ மடைந்து பாவச் செயல் புரிபவனாகவும் பிராம்மணர்களைத் துன்புறுத்துபவனாகவும் இருந்தான். இலக்ஷ்மணனுடைய தம்பியால் அவன் கொல்லப்பட்டான்.

20.56. மதம் பிடித்த அசுரனைப் போரில் கொன்ற சத்ருக்னன் மங்களமான மதுராபுரியில் வாழலானான்.

20.57—58. பகைவர்களையொழித்த அந்த புத்திமான் தாமரை போன்ற கண்களைப் படைத்த இரு புத்திரர்களை அங்கே அரசாட்சியில் வைத்துவிட்டு மரணமடைந்தபின் சூரியவம்சமும் அழிந்துபோகவே அந்த முக்தி க்ஷேத்திரமான மதுரையின் அரசாட்சியை யயாதியின் புத்திரர்களான யாதவர்கள் அடைந்தார்கள்.

शूरसेनाभिधः शूरस्तत्राभून्मेदिनीपतिः ।
माथूराञ्छूरसेनांश्च बुभुजे विषयान्नृप ॥ २०. ५९ ॥

तत्रोत्पन्नः कश्यपांशः शापाच्च वरुणस्य वै ।
वसुदेवोऽतिविख्यातो शूरसेनसुतस्तदा ॥ २०. ६० ॥

वैश्यवृत्तिरतः सोऽभून्मृते पितरि माधवः ।
उग्रसेनो बभूवाथ कंसस्तस्यात्मजो महान् ॥ २०. ६१ ॥

अदितिर्देवकी जाता देवकस्य सुता तदा ।
शापाद्वै वरुणस्याथ कश्यपानुगता किल ॥ २०. ६२ ॥

दत्ता सा वसुदेवाय देवकेन महात्मना ।
अथ काले तु सम्प्राप्ते देवकी देवरूपिणी ॥
गर्भं दधार विधिवद्वसुदेवेन संगता ॥ २१. १ ॥

20.59. நாளடைவில் சூரஸேனன் எனப் பெயர் பெற்ற சூரன் அங்கு அரசனுனன். அவன் மதுரை சூர ஸேனம் என்ற ராஜ்யங்களை அனுபவிப்பவனுயிருந்தான்.

20.60. வருண சாபத்தால் கசியபரின் அம்சமாகவும் சூரஸேனனுக்குப் புத்திரனுகவும் வசுதேவர் என்பவர் தோன்றினுர். அவர் மிகுந்த புகழ் பெற்றவரானுர்.

20.61. தகப்பன் இறந்தபின் அவர் வைசிய விருத்தியை மேற்கொண்டவரானுர். உக்ரஸேனர் என்பவர் நாட்டை ஆள்பவரானுர். அவருடைய பிள்ளை மகாபல சாலியான கம்ஸன்.

20.62. (கசியபருடைய மனைவியாகிய) அதிதியும் அதே வருண சாபத்தால் கசியபரைத் தொடர்பவளாய் தேவகர் என்பவரிடம் பெண்ணுகப் பிறந்து தேவகி என்ற பெயருடன் வளர்ந்து வந்தாள்.

21.1. மகாத்மாவாகிய தேவகரால் அவள் வசுதேவருக்குக் கொடுக்கப்பட்டாள். தேவரூபிணியான தேவகி விதிப்படி வசுதேவருடன் கூடி நாளடைவில் கருத்தரித்தாள்.

वसुदेवोऽपि धर्मात्मा आदाय स्वसुतं शिशुम् ।
जगाम कंससदनं मार्गे लोकैरभिष्टुतः ॥ २१. ३५ ॥

ददावस्मै कुमारं तं जातमात्र-ममानुषम् ।
कंसोऽपि विस्मयं प्राप्तो दृष्ट्वा धैर्यं महात्मनः ॥ २१. ३९ ॥

गृहीत्वा बालकं प्राह स्मितपूर्व-मिदं वचः ।
धन्यस्त्वं शूरपुत्राद्य ज्ञातः पुत्रसमर्पणात् ॥ २१. ४० ॥

मम मृत्युर्न चायं वै गिरा प्रोक्तस्तु चाष्टमः ।
न हन्तव्यौ मया कामं बालोऽयं यातु ते गृहम् ॥ २१. ४१ ॥

गतेषु तेषु संप्राप्तो नारदो मुनिसत्तमः ।
पप्रच्छ कुशलं राजा तत्राऽऽगमनकारणम् ॥ २१. ४७ ॥

21.35–39. (குழந்தை பிறந்ததும் கம்ஸனுக்குத்தான் கொடுத்திருந்த வாக்கை நினைத்து) தர்மாத்மாவாகிய வசுதேவர் சிசுவாகிய தன் மகனை எடுத்துக்கொண்டு, வழியில் கண்டவர்கள் அவர் நேர்மையை மெச்சும்படி கம்ஸன் மாளிகைக்குச் சென்று அமானுஷமானதும் அப்பொழுதுதான் பிறந்ததுமான அக்குழந்தையை அவனிடம் கொடுத்தார். கம்ஸனும் அம்மகாத்மாவின் தைரியத்தைக் கண்டு ஆச்சரியமடைந்தான்.

21.40. குழந்தையை வாங்கிக்கொண்டு சிரித்துக் கொண்டே ஒரு வார்த்தை சொன்னான்: 'சூரபுத்திரரே! நீர் புண்ணியசாலி என்பது இப்பொழுது நீர் புத்திரனைச் சமர்ப்பித்ததால் என்னால் உணரப்பட்டது.

21.41. 'இவனால் எனக்குச்சாவு இல்லை. அசரீரி கூறியது எட்டாவது பிள்ளையல்லவா? ஆகையால் இவனை நான் கொல்வது தகாது. இந்த பாலன் உம்முடன் வீடு சேரலாம்.'

21.47. அவர்கள் சென்ற பின் முனிசிரேஷ்டரான நாரதர் அங்கு வந்தார். அரசன் கம்ஸன் அவரைக் குசலப் பிரச்னம் செய்து அங்குவந்த காரணத்தை வினவினான்.

नारद उवाच—

न जानासि नृपश्रेष्ठे राजनीतिं शुभाशुभम्।
मायाबलं च देवानां न त्वं वेत्सि वदामि किम् ॥ २१. ५१ ॥

रिपुरल्पोऽपि शूरेण नोपेक्ष्यः शुभमिच्छता।
सम्मेलनक्रियायां तु सर्वे ते ह्यष्टमाः स्मृताः ॥ २१. ५३ ॥

व्यास उवाच—

गतेऽथ नारदे कंसः समाहूयाथ बालकम्।
पाषाणे पोथयामास सुखं प्राप च मन्दधीः ॥ २१. ५४ ॥

जनमेजय उवाच—

किं कृतं पातकं तेन बालकेन पितामह।
यो जातमात्रो निहतस्तथा तेन दुरात्मना ॥ २२. १ ॥

நாரதர் கூறியது—

21.51. அரசர்களிற் சிறந்தவனே! நல்லதும் பொல்லாததும் எதனுல் வருமென்ற ராஜநீதி உனக்குத் தெரியவில்லை. தேவர்களுடைய மாயா பலத்தையும் நீ உணரவில்லை. அதை நான் சொல்லட்டுமா?

21.53. நன்மையை விரும்பும் சூரனுல் சத்துரு அற்பனுயினும் கவனிக்காமல் விடத்தக்கவனன்று. ஒன்றுகூட்டிப் பார்த்தால் எட்டுப் புத்திரர்களில் எல்லோருமே எட்டாவதாகக் கருதப்படலாம்.

வியாஸர் கூறியது—

21.54. நாரதர் சென்றபின் மந்தபுத்தியுடைய கம்ஸன் அந்தக் குழந்தையைக் கொண்டுவரச் செய்து கல்லில் அறைந்து நிம்மதியடைந்தான்.

ஜனமேஜயர் கூறியது—

22.1. பாட்டனுரே! அவ்வாறு அந்தக் கொடியவனுல் பிறந்தவுடன் கொல்லப்படுவதற்கு அக்குழந்தை என்ன பாவம் செய்தது?

नारदोऽपि मुनिश्रेष्ठो ज्ञानवान् धर्मतत्परः ।
कथमेवं विधं पापं कृतवान् ब्रह्मवित्तमः ।। २२. २ ।।

व्यास उवाच—

नारदः कौतुकप्रेक्षी सर्वदा कलहप्रियः ।
देवकार्यार्थ-मागत्य सर्वमेतच्चकार ह ।। २२. ५ ।।

न मिथ्या भाषणे बुद्धिर्मुनेस्तस्य कदाचन ।
सत्यवक्ता सुराणां स कर्तव्ये निरतः शुचिः ।। २२. ६ ।।

एवं षड् बालकास्तेन जाता जाता निपातिताः ।
षड् गर्भाः शापयोगेन संभूय मरणं गताः ।। २२. ७ ।।

22.2. நாரதர் முனிசிரேஷ்டர், அறிவாளி, தருமத்தில் நிலை பெற்றவர், பிரம்மஞானிகளில் சிறந்தவர். இம்மாதிரிப் பாவத்தை அவர் எங்ஙனம் செய்தார்?

வியாஸர் கூறியது—

22.5. நாரதர் வேடிக்கை பார்க்கிறவர். எப்பொழுதும் கலகத்தில் பிரியங்கொண்டவர் (போல் காணப்படுகிறவர்.) தேவகாரியத்தின் பொருட்டு அங்ஙனம் வந்து இதையெல்லாம் செய்தார்.

22.6. அவருடைய புத்தி ஒருபொழுதும் பொய் பேசுவதில் செல்லாது. அவர் உண்மையே பேசுபவர். தேவகாரியத்தைச் சாதிப்பதிலேயே எப்பொழுதும் யோசனை உள்ளவர்.

22.7. இவ்வாறு ஆறு குழந்தைகள் பிறக்கப் பிறக்க அந்தக் கம்ஸனால் கொல்லப்பட்டன. அவ்வறுவரும் சாப நிமித்தமாகக் கருவில் தோன்றி மரணமடைந்தவர்கள்.

शृणु राजन् प्रवक्ष्यामि तेषां शापस्य कारणम् ।
स्वायंभुवेऽन्तरे पुत्रा मरीचे षण्महाबलाः ॥ २२. ८ ॥

ऊर्णायां च भार्याया-मासन् धर्मविचक्षणाः ।
ब्रह्माणं जहसुर्वीक्ष्य सुतां यमितुमुद्यतम् ॥ २२. ९ ॥

शशाप तांस्तदा ब्रह्मा दैत्ययोनिं विशन्त्वधः ।
कालनेमिसुता जातास्ते षड्गर्भा विशांपते ॥ २२. १० ॥

अवतारे परे ते तु हिरण्यकशिपोः सुताः ।
जातास्ते ज्ञानसंयुक्ताः पूर्वशापभयान्नृप ॥ २२. ११ ॥

तस्मिन्जन्मनि शान्ताश्च तपश्चक्रुः समाहिताः ।
तेषां प्रीतोऽभवद्ब्रह्मा षड्गर्भाणां वरान् ददौ ॥ २२. १२ ॥

22.8–9. அரசே! அவர்களுடைய சாபத்திற்குக் காரணம் கூறுகிறேன் கேள். ஸ்வாயம்புவ மன்வந்தரத்தில் மரீசிரிஷிக்குப் பத்தினியாகிய ஊர்ணை என்பவளிடத்தில் மகாபலசாலிகளாகவும் தர்மம் நன்கு தெரிந்தவர்களாகவும் ஆறு பிள்ளைகள் இருந்தார்கள். அவர்கள் பிரம்மா தான் சிருஷ்டித்த பெண்ணிடம் காமுறுவதைக் கண்டு சிரித்தார்கள்.

22.10. அரசே! அப்பொழுது பிரம்மா அவர்களை அசுரயோனியில் பிறக்க வேண்டுமென்று சபிக்கவே அவர்கள் அறுவரும் காலநேமியின் புத்திரர்களாய்ப் பிறந்தனர்.

22.11–12. இன்னொரு பிறவியில் ஹிரண்யகசிபுவின் புத்திரர்களாய்த் தோன்றினார்கள். என்றாலும் ஞானமுடையவர்களாய் முன்னேற்பட்ட சாபத்தின் பயத்தால் அந்தப் பிறவியில் சாந்தமுடையவர்களாய் மனதையடக்கித் தவம் செய்தனர். அவர்களிடம் பிரம்மா இரங்கி வரமளித்தார்.

हिरण्यकशिपुः क्रुद्धस्तानुवाच कुरूद्वह ।
यस्माद्विहाय मां पुत्रास्तोषितो वै पितामहः ॥ २२ १,८ ॥

यूयं व्रजन्तु पाताले षड्गर्भा विश्रुता भुवि ।
पाताले निद्रयाऽऽविष्टास्तिष्ठन्तु बहुवत्सरान् ॥ २२. १९ ॥

ततस्तु देवकीगर्भे वर्षे वर्षे पुनः पुनः ।
पिता वः कालनेमिस्तु तत्र कंसो भविष्यति ॥
स एव जातमात्रान् वो वधिष्यति सुदारुणः ॥ २२. २१ ॥

एवं शप्तांस्तदा तेन गर्भे जातान् पुनः पुनः ।
जघान देवकीपुत्रान् षड्गर्भाञ्छापनोदितः ॥ २२. २२ ॥

शेषांशः सप्तमस्तत्र देवकीगर्भसंस्थितः ।
विस्रंसितश्च गर्भोऽसौ योगेन योगमायया ॥ २२. २३ ॥

22.18–19. குருசிரேஷ்டனே! ஹிரண்யகசிபு அதனுல் கோபமடைந்து அவர்களைப் பின்வருமாறு சபித்தான். 'புத்திரர்களே! நீங்கள் என்னைவிட்டு பிரம்மாவைத் திருப்தி செய்தமையால், பாதாளம் சென்று அங்கு தூக்கத்திலாழ்ந்து பல வருஷங்கள் இருக்கக் கடவீர்கள்.'

22.21. 'அதன்பின் தேவகியின் கர்ப்பத்தில் வருஷத்திற்கொருவராய்த் தோன்றுவீர்கள். உங்களுடைய முற்பிறவிப் பிதாவான காலநேமி அப்பொழுது கம்ஸனுய்த் தோன்றி உங்களைப் பிறந்தவுடன். கருணையின்றிக் கொல்வான்.'

22.22. இவ்வாறு சபிக்கப்பட்ட அவர்கள் அறுவரும் சாபத்திற்கிணங்க தேவகியின் புத்திரர்களாய்ப் பிறந்து (கம்ஸனுல்) கொல்லப்பட்டனர்.

22.23. தேவகியின் வயிற்றில் ஏழாவது கர்ப்பமாக வந்து தங்கியது ஆதிசேஷ அம்சமாகும். யோகமாயையின் சக்தியால் இந்த கர்ப்பம் மறைந்து போயிற்று.

नीतश्च रोहिणी गर्भे कृत्वा संकर्षणं बलात् ।
पतितः पंचमे मासि लोकख्यातिं गतस्तदा ॥ २२. २४ ॥

कंसोऽपि ज्ञातवांस्तत्र देवकीगर्भ-पातनम् ।
मुदं प्राप स दुष्टात्मा श्रुत्वा वार्तां सुखावहाम् ॥ २२. २५ ॥

अष्टमे देवकी-गर्भे भगवान् सात्वतांपतिः ।
उवास देवकार्यार्थं भारावतरणाय च ॥ २२. २६ ॥

तदेयं योगमाया च यशोदायां यथेच्छया ।
प्रवेशमकरोद्देवी देवकार्यार्थसिद्धये ॥ २३. ४ ॥

रोहिण्यास्तनयो रामो गोकुले समजायत ।
यतः कंसभयोद्विग्ना संस्थिता सा च कामिनी ॥ २३. ५ ॥

कारागारे ततः कंसो देवकीं देवसंस्तुताम् ।
स्थापयामास रक्षार्थं सेवकान् समकल्पयत् ॥ २३. ६ ॥

22.24. ஐந்தாவது மாதத்தில் கரைந்து போயிற்றென்று உலகில் பேச்செழுந்தது. உண்மையில் அது பலாத்காரமாய் ஆகர்ஷிக்கப்பட்டு ரோகிணியின் கர்ப்பத்தில் வைக்கப்பட்டது.

22.25. தேவகி கர்ப்பம் கரைந்து போன செய்தியை துஷ்டாத்மாவாகிய கம்ஸன் கேள்விப்பட்டு அது நல்ல சமாசாரம் என்று சந்தோஷப் பட்டான்.

22.26. தேவகியின் எட்டாவது கர்ப்பமாக பகவான் பிரவேசித்து பூபாரத்தைப் போக்கி தேவகாரியத்தைச் சாதிப்பதற்காக அங்கு வாசம் செய்யலானுர்.

23.4. அதே சமயம் யோகமாயா தேவியும் தன்னிச்சா மாத்திரத்தால் தேவகாரியசித்திக்காக யசோதையின் கருவில் புகுந்தாள்.

23.5–6. கோகுலத்தில் ரோகிணியின் பிள்ளையாக பலராமன் பிறந்தான். கம்ஸனிடம் பயத்தால் நடுங்கிக் கொண்டிருந்த தேவகி எங்கிருந்தாளோ அந்த சிறைச் சாலையை இன்னும் கடுமையாய்க் காப்பதற்காகக் கம்ஸன் சேவகர்களை ஏற்படுத்தினுன்.

संजाते दशमे तत्र मासेऽथ श्रावणे शुभे।
प्राजापत्यर्क्षसंयुक्ते कृष्णपक्षेऽष्टमी दिने ॥ २३. ९॥

वीक्ष्य पुत्रमुखं शौरिश्चिन्ताविष्टो बभूव ह।
किं करोमि कथं न स्याद्दुःखमस्य कृते मम ॥ २३. २५ ॥

एवं चिन्तातुरे तस्मिन्वागुवाचाशरीरिणी।
वसुदेव गृहीत्वैनं गोकुलं नय सत्वरः ॥ २३. २६ ॥

रक्षपालास्तथा सर्वे मया निद्राविमोहिताः।
विवृतानि कृतान्यष्ट कपाटानि च शृंखलाः ॥ २३. २७ ॥

मुक्त्वैनं नन्दगेहे त्वं योगमायां समानय।
श्रुत्वैवं वसुदेवस्तु तस्मिन् कारागृहे गतः॥ २३. २८ ॥

गत्वा तु गोकुलं शौरिर्निशीथे निर्जने पथि।
नन्दद्वारे स्थितः पश्यन् विभूतिं पशुसंज्ञिताम् ॥ २३. ३१ ॥

23.9–25. பத்தாவது மாதமாகிய சிராவண மாதம் கிருஷ்ணபக்ஷம் அஷ்டமி திதியும் ரோகிணி நக்ஷத்திரமும் கூடிய சுபதினத்தில் பிறந்த தன் பிள்ளையின் முகத்தைப் பார்த்து வசுதேவர் 'நான் என்ன செய்வேன்? இந்தக் குழந்தையின் நிமித்தமாயெழும் துக்கம் எப்படிப் போகும்?' என்று கவலையிலாழ்ந்தார்.

23.26–31. அவ்வாறு அவர் கவலைப்படுகையில் அசரீரி வாக்கொன்று எழுந்தது: 'வசுதேவா! இவனை எடுத்து விரைவில் கோகுலம் கொண்டு போய்ச்சேர். காவற்காரர்களெல்லாம் என்னால் மயக்கப்பட்டு உறங்குகிறார்கள். எட்டுக் கதவுகளும் அவைகளின் சங்கிலிப்பூட்டுகளும் திறக்கப்பட்டிருக்கின்றன. இவனை நந்தனுடைய வீட்டில் விட்டுவிட்டு அங்கு பிறந்திருக்கும் யோக மாயையை இங்கு கொண்டுவா'. சிறைச்சாலையிலிருந்த வசுதேவர் இந்தக்கேட்டு அவ்வாறே ஜனசஞ்சாரமற்ற வழியில் நடுநிசியில் கோகுலம் சென்று நந்தனுடைய வீட்டுவாயிலில் அவனுடைய பசுக்களின் ஸம்பத்துப் பெருமையைப் பார்த்துக்கொண்டு சற்றுநின்றார்.

तदैव तत्र संजाता यशोदा-गर्भसंभवा।
योगमायांशजा देवी त्रिगुणा दिव्यरूपिणी ।। २३-३२ ।।

जातां तां बालिकां दिव्यां गृहीत्वा करपंकजे।
तत्रागत्य ददौ देवी सैरन्ध्रीरूपधारिणी ।। २३. ३३ ।।

वसुदेवः सुतं दत्वा सैरन्ध्रीकरपंकजे।
तामादाय ययौ शीघ्रं बालिकां मुदिताशयः ।। २३. ३४ ।।

कारागारे ततो गत्वा देवक्याः शयने सुताम्।
निःक्षिप्य संस्थितः पार्श्वे चिन्ताविष्टो भयातुरः
।। २३. ३५ ।।

रुरोद सुस्वरं कन्या तदैवागत संज्ञकाः।
उत्तस्थुः सेवका राज्ञः श्रुत्वा तद्रुदितं निशि ।। २३. ३६ ।।

23.32–33. பிறகு அங்கு யசோதையின் கர்ப்பத்திலிருந்து அப்போதுதான் பிறந்திருந்த முக்குண வடிவினளான யோகமாயா தேவியாகிய தெய்வீகக் குழந்தையைத் தன் தாமரைக் கைகளில் எடுத்துக்கொண்டு அங்கொரு சைரந்திரி வேஷந்தரித்த தேவியானவள் வந்து வசுதேவரிடம் கொடுத்தாள்.

23.34. வசுதேவர் அந்த சைரந்திரியின் கரகமலங்களில் தன் மகனை வைத்துவிட்டு அவள் கொடுத்த பெண் குழந்தையை எடுத்துக்கொண்டு உள்ளத்தில் மகிழ்ச்சியுடன் சீக்கிரம் திரும்பினர்.

23.35. சிறைச்சாலையுள் சென்று தேவகியின் படுக்கையில் அப்பெண் குழந்தையை விட்டுவிட்டு அருகாமையில் பயத்தோடும் கவலையோடும் நின்ருர்.

23.36. அப்பெண் குழந்தை உறக்க அழுதது. நள்ளிரவில் அவ்வழுகையைக் கேட்ட அரசனுடைய சேவகர்கள் விழித்துக் கொண்டார்கள்.

तमूचुर्भूपतिं गत्वा त्वरितास्तेऽतिविह्वलाः ।
तदाकर्ण्य वचस्तेषां शीघ्रं भोजपतिर्ययौ ।। २३. ३८ ।।

दृष्ट्वाऽथ दारिकां राजा विस्मयं परमं गतः ।
देववाणी वृथा जाता नारदस्य च भाषितम् ।। २३. ४२ ।।

सन्देहोऽत्र न कर्तव्यः कालस्य विषमा गतिः ।
इति संचिन्त्य तां बालां गृहीत्वा पादयोः खलः ।। २३. ४४ ।।

पोथयामास पाषाणे निर्घृणः कुलपांसनः ।
सा कराग्निः सृता बाला ययावाकाशमण्डलम् ।। २३. ४५ ।।

23.38. அரசனிடம் விரைந்து சென்று படபடப்புடன் சமாசாரத்தைச் சொன்னார்கள். அவர்களுடைய வார்த்தையைக் கேட்டதும் போஜபதியான கம்ஸன் விரைந்து வெளிப்போந்தான்.

23.42. (சிறைச்சாலைவந்து) பெண் குழந்தையைக் கண்ட அவ்வரசன் மிகுந்த ஆச்சரியமடைந்தான். தேவ வாக்கும் நாரதர் பேச்சும் பொய்யாகவல்லவா போயின.

23.44–45. 'சந்தேகப்படுவதற்குக் காரணமில்லை; காலத்தினுடைய கதி அறிய முடியாதது' என்று எண்ணிக் கொண்டு அக்குழந்தையைக் கால்களைப் பிடித்துத் தூக்கிக் குலத்தின் பெயரைக் கெடுக்கும் அக்கொடியோன் சற்றும் இரக்கமின்றி ஒரு பாறையின் மேல் மோதும்படி எறிந்தான். அவன் கையிலிருந்து நழுவியதும் அக்குழந்தை ஆகாய மண்டலத்தில் சென்றது.

दिव्यरूपा तदा भूत्वा तमुवाच मृदुस्वना।
किं मया हतया पाप जातस्ते बलवान् रिपुः ॥ २३. ४६ ॥

हनिष्यति दुराराध्यः सर्वथा त्वां नराधमम्।
इत्युक्त्वा सा गता कन्या गगनं कामगा शिवा।

कंसस्तु विस्मयाविष्टो गतो निजगृहं तदा ॥ २३. ४७ ॥
आनाय्य दानवान्सर्वानिदं वचनमब्रवीत् ॥

बकधेनुक-वत्सादीन् क्रोधाविष्टो भयाऽऽतुरः।
गच्छन्तु दानवाः सर्वे मम कार्यार्थसिद्धये ॥ २३. ४९ ॥

जातमात्राश्च हन्तव्या बालकाः यत्रकुत्रचित्।
पूतनैषा व्रजत्वद्य बालघ्नी नन्दगोकुलम् ॥ २३. ५० ॥

23.46–47. தெய்விக ரூபத்தையெடுத்துக் கொண்டு மெதுவான குரலில் அவனை நோக்கிப் பின்வருமாறு கூறியது: 'பாவியே! என்னைக் கொல்வதால் உனக்கென்ன பயன்? பலவானாகிய உன் சத்துரு பிறந்திருக்கிறான்; அவன் எவராலும் வெல்லக் கூடாதவன்; மனிதரில் கடையப்பட்டவனாகிய உன்னை எப்படியும் அவன் கொல்லப்போகிறான்.'

இப்படிக் கூறிவிட்டுக் கன்னியாய் வந்தவளும் இஷ்டப்படி செல்பவளுமான அந்த தேவி ஆகாயத்தில் சென்று மறைந்தாள். கம்ஸன் ஆச்சரியத்தில் மூழ்கியவனாய்த் தன்னிருப்பிடம் போய்ச் சேர்ந்தான்.

24.49–50. கோபாவேசமுடையவனும் பயத்தினால் பிடிக்கப்பட்டவனுமான அவன் பகன், தேனுகன், வத்ஸன் முதலிய எல்லா அசுரர்களையும் வரவழைத்து, 'அசுரர்களே! எல்லோரும் என் காரிய சித்திக்காக கிளம்பவேண்டும். எங்கெங்கு குழந்தை பிறந்தாலும் பிறந்தவுடனே அவர்களைக் கொல்ல வேண்டும். பாலர்களைக் கொல்லும் பூதனையானவள் இப்பொழுது நந்த கோகுலம் செல்லட்டும்' என்று கூறினான்.

पूतना निहता तत्र कृष्णेनामिततेजसा ।
बको वत्सासुरश्चापि धेनुकश्च महाबलः ॥ २४. ६ ॥
श्रुत्वैतत्कर्म कंसस्तु मेने मरणमात्मनः ।
धनुर्यागमिषेणाशु तावानेतुं प्रचक्रमे ॥ २४. ८ ॥
अक्रूरं प्रेषयामास क्रूरः पापमतिस्तदा ।
आनेतुं रामकृष्णौ च वधायामितविक्रमौ ॥ २४. ९ ॥
जघान कंसं देवेशः केशेष्वाकृष्य लीलया ।
उपनीतौ तथा तौ तु गतौ सांदीपनालयम् ॥ २४. १४ ॥
मागधस्तु जरासन्धो जामातृवधदुःखितः ।
कृत्वा सैन्यसमाजं स मथुरामागतः पुरीम् ॥ २४. १७ ॥

24.6. அங்ஙனம் சென்ற பூதனை அங்கு அளவற்ற வீரியம் படைத்த கிருஷ்ணனால் கொல்லப்பட்டாள். மகா பலம் பொருந்திய தேனுகனும் பகனும் வத்ஸாஸுரனும் அவ்வாறே கொல்லப்பட்டனர்.

24.8–9. இச்செயலைக் கேட்ட கம்ஸன் தன் மரணம் நிச்சயம் என்று எண்ணினன். (நாளடைவில்) ஒரு தனுர் யாகம் ஏற்பாடு செய்து அதை வியாஜமாய்க் கொண்டு அளவற்ற பராக்கிரமமுடைய பலராமன் கிருஷ்ணன் ஆகிய இருவரையும் அழைத்து வந்து கொன்றுவிடுவதென்று திட்டம் போட்டு, பாவியும் குரூரபுத்தியுடையவனுமான கம்ஸன் அதற்காக அக்ரூரரை அனுப்பிவைத்தான்.

24.14. (அங்கு வந்தபின்) தேவநாயகனுகிய கிருஷ்ணன் கம்ஸன் தலைமயிரைப் பிடித்திழுத்து விளையாட்டாக அவனைக் கொன்று வீழ்த்தினன். அதன் பின் பலராமனும் கிருஷ்ணனும் உபநயனம் செய்விக்கப்பெற்று ஸாந்தீபனி முனிவருடைய ஆலயம் சேர்ந்தனர்.

24.17. மகததேசாதிபதியான ஜராசந்தன் தன் மருமகனுகிய கம்ஸன் கொல்லப்பட்டதைக் கேட்டு துக்கமடைந்து சேனையைத் திரட்டிக்கொண்டு மதுராபுரியின் மேல் படையெடுத்து வந்தான்.

जगाम द्वारकां कृष्णो बलदेवसमन्वितः ।
उग्रसेनं नृपं कृत्वा विजहार यथारुचि ।। २४. ४० ।।

।। इति श्रीकृष्णचरित्रं समाप्तम् ।।

।। श्रीदेवीभागवते चतुर्थ स्कन्ध :
समाप्त : ।।

24.40. கிருஷ்ணன் (கம்ஸன் தகப்பனாராகிய) உக்ர ஸேனரை அரசனாக்கிவிட்டுப் பலராமனுடன் துவாரகை சென்று தன்னிஷ்டப்படி அங்கு சுகமாயிருந்தார்.

இங்ஙனம் ஸ்ரீகிருஷ்ண சரித்திரம் முற்றும்.

ஸ்ரீதேவிபாகவதத்தில் நாலாவது
ஸ்கந்தம் முற்றும்.

ஐந்தாவது ஸ்கந்தம்

॥ पंचमः स्कन्धः ॥

महिषासुरवधवर्णनम् ॥ १८ ॥

व्यास उवाच—

पुरा युद्धमभूद्घोरं देवदानवसेनयोः ।
पृथिव्यां पृथिवीपाल महिषाख्ये महीपतौ ॥ २.४ ॥

महिषो नाम राजेन्द्र चकार तप उत्तमम् ।
तस्य तुष्टो महाराज ब्रह्मलोक—पितामहः ॥ २.६ ॥

तत्राऽऽगत्याब्रवीद्वाक्यं हंसारूढश्चतुर्मुखः ।
वरं वरय धर्मात्मन् ददामि तव वांछितम् ॥ २.७ ॥

ஐந்தாவது ஸ்கந்தம்

18. மஹிஷாஸுர வத வர்ணனே

வியாஸர் கூறியது—

2.4. அரசே ! முன்னெரு சமயம் மகிஷாசுரன் பூமியை ஆளுகையில் தேவர்களுக்கும் அசுரர்களுக்குமிடையே கொடிய போர் மூண்டது.

2.6. அரசசிரேஷ்டரே ! மகிஷாசுரன் உயர்ந்த தவம் செய்தான். அதனுல் பிரம்மா சந்தோஷமடைந்தார்.

2.7. நான்முகக்கடவுள் ஹம்ஸ வாகனத்திலேறி அவன் முன் வந்து பின்வருமாறு கூறினுர்: 'தர்மாத்மாவே ! வரம் கேள். நீ விரும்பியதைத் தருகிறேன்.'

महिष उवाच—

अमरत्वं देवदेव वांछामि द्रुहिण प्रभो ।
यथा मृत्युभयं न स्यात्तथा कुरु पितामह ॥ २. ८ ॥

ब्रह्मोवाच—

उत्पन्नस्य ध्रुवं मृत्यु-र्ध्रुवं जन्म मृतस्य च ।
एकं स्थानं परित्यज्य मरणस्य महीपते ।
प्रब्रूहि तं वरं साधो यस्ते मनसि वर्तते ॥ २. ११ ॥

महिष उवाच—

न देवान्मानुषाद्दैत्यान्मरणं मे पितामह ।
पुरुषान्न च मे मृत्यु-र्योषा मां का हनिष्यति ॥ २. १२ ॥
तस्मान्मे मरणं नूनं कामिन्याः कुरु पद्मज ।
अबला हन्त मां हन्तुं कथं सक्ता भविष्यति ॥ २. १३ ॥

மகிஷாசுரன் கூறியது—

2.8. தேவதேவராகிய பிரம்மாவே! பிரபுவே! பிதாமகரே! சாகாத் தன்மையை வேண்டுகிறேன். எனக்கு எவ்வாறு மிருத்யு பயம் இல்லாமற் போகுமோ அப்படி அருள வேண்டும்.

பிரம்மா கூறியது—

2.11. பிறந்தவனுக்குச் சாவு நிச்சயம்; செத்தவனுக்குப் பிறப்பும் நிச்சயம். அரசே! நல்லவனே! மரணத்தையொழிக்கும் இந்த விருப்பத்தைவிட்டு உன் மனதில் எழும் விருப்பம் வேறொன்றைக் கூறு.

மகிஷாசுரன் கூறியது—

2.12-13 பிதாமகரே! தேவர்களிடமிருந்தோ, மனிதர்களிடமிருந்தோ, புருஷர்களால் மரணம் ஏற்படாமல் அருள வேண்டும். ஸ்திரீயாகிய எவள் என்னைக் கொல்லக்கூடும்? ஆகையால் மரணம் ஏற்படுவதானால் ஸ்திரீயால் ஏற்படட்டும் என்று செய்தருளும். வலிமையற்ற ஸ்திரீ என்னைக் கொல்லும் சக்தியுடையவளாய் எப்படி ஆவாள்?

ब्रह्मोवाच—

यदाकदाऽपि दैत्येन्द्र नार्यास्ते मरणं ध्रुवम् ।
न नरेभ्यो महाभाग मृतिस्ते महिषासुर ॥ २. १४ ॥

एवं स महिषो नाम दानवो वरदर्पितः ।
प्राप्य राज्यं जगत्सर्वं वशे चक्रे महाबलः ॥ ३.१ ॥

सेनानी चिक्षुरस्तस्य महावीर्यो मदोत्कटः ।
धनाध्यक्षस्तथा ताम्रः सेनाऽयुतसमावृतः ॥ ३. ३ ॥

असिलोमा तथोदर्को बिडालाख्यश्च बाष्कलः ।
त्रिनेत्रोऽथ तथा कालबन्धको बलदर्पितः ॥ ३. ४ ॥

एते सैन्ययुताः सर्वे दानवा मेदिनीं तदा ।
आवृत्य संस्थिता काममृद्धा सागरमेखलाम् ॥ ३. ५ ॥

பிரம்மா கூறியது—

2.14. அசுரசிரேஷ்டனே! மகா பலம் பொருந்திய மகிஷாசுரனே! எப்பொழுதாவது ஒரு சமயம் உனக்கு ஒரு ஸ்திரீயாலேயே மரணம் என்பது நிச்சயம். வேறு வகையில் உனக்கு மனிதர்களால் மரணமில்லை.

3.1. மகாபலசாலியான மகிஷாசுரன் வரம் பெற்றதால் கர்வமடைந்து தன்னுடைய அரசின் கீழ் உலகையெல்லாம் கொணர்ந்தான்.

3.3. அவனுடைய சேனுநாயகனுகக் கொழுப்பு மிகுந்தவனும் மகாவீரியவானுமான சிக்ஷுரன் என்பவன் இருந்தான். பல்லாயிரம் சேனைகளால் சூழப்பட்ட தாம்ரன் என்பவன் தனுதிகாரியாயிருந்தான்.

3.4—5. அஸிலோமா, உதர்க்கன், பிடாலன், பாஷ்கலன், த்ரிநேத்ரன், காலபந்தகன் முதலிய அசுர சேனுபதிகள் செல்வம் நிறைந்ததும் கடல் சூழ்ந்ததுமான உலகனைத்தையும் ஆக்கிரமித்தனர்.

एकातपत्रं तद्राज्यं कृत्वा स महिषासुरः ।
स्वर्गं जेतुं मनश्चक्रे वरदानेन गर्वितः ॥ ३.८ ॥

समाहूयाब्रवीद्दैत्यान् क्रोधसंरक्तलोचनः ।
न मे भयं सुरेभ्यश्च वरदानेन दानवाः ॥ ३.४१ ॥

सर्वे सज्जा भवंत्वद्य रोचतां गमनं दिवि ।
संग्रामार्थं सुरैः सार्धं कृत्वा मंगलमुत्तमम् ॥ ३.५१ ॥
रक्षणार्थं च सर्वेषां भार्गवं मुनिसत्तमम् ।
समाहूय च संपूज्य स्थाप्य यज्ञे गुरुं परम् ॥ ३.५२ ॥

गते दूते सुरेन्द्रोऽपि समाहूय सुरानथ ।
यमवायु-धनाध्यक्ष-वरुणानिदमूचिवान् ॥ ४.१ ॥

3.8. வரத்தால் கொழுப்படைந்த மகிஷாசுரன் பூலோகராஜ்யத்தை ஒருகுடைக்கீழ் கொணர்ந்தபின் சுவர்க்கத்தை ஜயிக்க வேண்டுமென்று மனதில் எண்ணினான்.

3.41. கோபத்தால் சிவந்த கண்களுடன் அசுரர்களையெல்லாம் கூப்பிட்டு 'அசுரர்களே! நான் வரம் பெற்றுள்ளமையால் எனக்கு தேவர்களிடம் பயமில்லை.

3.51–52. 'தேவலோகம் செல்ல விருப்பமுள்ளவர்கள் எல்லாம் இப்பொழுது தயாராகட்டும். தேவர்களுடன் போர்புரிவதற்கு முன்னாடியாக முனிசிரேஷ்டரான குரு சுக்ராசாரியாரை அழைத்து அவரைப் பூஜித்து யக்ஞத்தில் அவரை ஸ்தாபித்து எல்லோருடைய ரக்ஷணத்திற்காக உத்தமமான மங்கள காரியங்களைச் செய்து கொண்டு புறப்படுவோம்.'

4.1. தூதன் சென்றதும் தேவேந்திரன், யமன், வாயு, குபேரன், வருணன் முதலிய தேவர்களையழைத்துப் பின்வருமாறு பேசினான்.

महिषो नाम दैत्येन्द्रो रम्भपुत्रो महाबलः ।
स्वर्गं कामेन लुब्धेन मामुवाचेदृशं वचः ॥ ४.३ ॥

त्यज देवालयं चक्र यथेच्छं व्रज वासव ।
सेवां वा कुरु दैत्यस्य महिषस्य महात्मनः ॥ ४.४ ॥

नो चेद्युद्धाय देवेश सेनोद्योगं कुरु स्वयम् ।
किं कर्तव्यमतः कार्यं चिन्तयध्वं सुरोत्तमाः ॥ ४.७ ॥

देवानचोदयत्तूर्णं समाहूय पुरोहितम् ।
मन्त्रं मन्त्रविदां श्रेष्ठं चकार त्रिदशेश्वरः ॥ ४.२१ ॥

उवाचांगिरसश्रेष्ठं समासीनं वरासने ।
भो भो देवगुरो विद्वन् किं कर्तव्यं वदस्व नः ॥ ४.२२ ॥

4.3. 'இரம்பபுத்திரனுகிய மகிஷன் என்ற அசுர சிரேஷ்டன் மிகுந்த பலம் வாய்ந்தவன். சுவர்க்கத்தை யடைய வேண்டுமென்ற பேராசையால் எனக்கு இந்தமாதிரி தூது அனுப்பியிருக்கிறுன்:

4.4. ''இந்திரனே! தேவாலயத்தைவிட்டு எங்கு இஷ்டமோ அங்கு நீ செல்லலாம். அல்லது மகாத்மாவாகிய மகிஷாசுரனுக்குச் சேவை செய்து கொண்டிரு.

4.7. ''இல்லையேல் யுத்தம் செய்வோம். தேவர்களின் அரசனே! உம்முடைய சேனையைத் தயார் செய்து கொள்ளும்.'' தேவசிரேஷ்டர்களே! இனிமேல் என்ன செய்ய வேண்டும் என்பதைப்பற்றி யோசியுங்கள்.'

4.21. என்றிவ்வாறு தேவர்களிடம் கூறி அவர்களைத் தயாராகும்படி கட்டளை யிட்டுவிட்டு தேவேந்திரன் ஆலோசனை கூறுவதிற் சிறந்தவரான புரோகிதரை யழைத்து யோசனை கேட்டான்.

4.22. சிறந்த ஆசனத்தில் அங்கிரஸ குல சிரேஷ்டரான அவரை இருக்கச் செய்து கூறுவான்: 'தேவகுருவே! வித்துவானே! எது செய்யத்தக்கது என்பதைப்பற்றி எங்களுக்குக் கூறுங்கள்.

तत्र प्रतिक्रिया कार्या त्वया मन्त्रविदाऽधुना।
तेषां शुक्रस्तथा त्वं मे विघ्नहर्ता सुसम्मतः ॥ ४. २४ ॥

गुरुरुवाच—

कार्यसिद्धिर्न सैन्येऽस्ति न मन्त्रे न च मन्त्रणे।
न रथेनायुधे नूनं दैवाधीना सुराधिप ॥ ४. ३३ ॥

दुःखदे सुखदेवापि तत्र तौ न विचिन्तयेत्।
दुःखे दुःखाधिकान् पश्येत्सुखे पश्येत्सुखाधिकान् ॥ ४. ३७ ॥

यद्भावि तद्भवत्येव का चिन्ता सुखदुःखयोः।
सुरैः सर्वैः सहायैर्वा बुद्धया वा तव सत्तम ॥ ४. ४८ ॥

अथवा मन्त्रयित्वाऽद्य कुरु यत्नं यथाविधि।
कृते यत्ने महाराज भवितव्यं भविष्यति ॥ ४. ५० ॥

4.24. 'இரகசிய ஆலோசனையிற் சிறந்த உங்களால் இப்பொழுது தீமைகள் வராமலிருக்கப் பிரதிக்கிரியைகள் செய்யப்பட வேண்டும். அசுரர்களுக்கு சுக்கிரர் அவ்வாறு செய்கிறார். நீங்களும் எனக்கு விக்கினங்களைப் போக்குபவராக இருத்தல் வேண்டும்.'

குரு கூறியது—

4.33. 'காரியசித்தியானது சைனியத்திலும் இல்லை, மந்திரத்திலுமில்லை, இரகசிய ஆலோசனையிலுமில்லை; தேரிலுமில்லை, ஆயுதத்திலுமில்லை; தேவர்கள் நாயகனே! தெய்வத்தால்தான் காரியசித்தி.

4.37. 'துன்பந்தரும் நிகழ்ச்சியிலும் இன்பந்தரும் நிகழ்ச்சியிலும் ஒருவன் அவ்விரண்டையும் பற்றிச் சிந்திக்கக் கூடாது. துக்கம் வந்தபோது நம்மைவிட அதிக துக்கம் அனுபவிப்பவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். சுகம் வந்தபோது நம்மைவிட அதிக சுகம் அனுபவிப்பவர்களை எண்ணிப்பார்த்து அடக்கமாயிருக்க வேண்டும்.

4.48–50. 'எது வரவேண்டியதோ அது வந்தே தீரும். சுகதுக்கங்களைப்பற்றிக் கவலை எதற்கு? தேவர்கள் அனைவருடைய சகாயத்துடனும் உன்னுடைய புத்திவன்மையாலும் யோசித்து முறைப்படி செய்ய வேண்டிய முயற்சியைச் செய். மகாராஜனே! முயற்சி செய்தபின் நடக்க வேண்டியது நடக்கும்.'

इन्द्र उवाच—

यतीनां भूषणं ज्ञानं सन्तोषो हि द्विजन्मनाम् ।
उद्यमं शत्रुहननं भूषणं भूतिमिच्छताम् ॥ ५. ३ ॥

उद्यमेन हतस्त्वाष्ट्रा नमुचि-र्बल एव च ।
तथैनं निहनिष्यामि महिषं मुनिसत्तम ॥ ५. ४ ॥

बलं देवगुरुस्त्वं मे वज्रमायुध-मुत्तमम् ।
सहायस्तु हरिर्नूनं तथोमापतिरव्ययः ॥ ५. ५ ॥

रक्षोघ्नान् पठ मे साधो करोम्यद्य समुद्यमम् ।
स्वसैन्याभिनिवेशंच महिषं प्रति मानद ॥ ५. ६ ॥

இந்திரன் கூறியது—

5.3. ஸந்நியாஸிகளுக்கு பூஷணம் ஞானம்; பிராம்மணர்களுக்கு பூஷணம் ஸந்தோஷம்; ஐசுவரியத்தை விரும்புபவர்களுக்கு பூஷணம் முயற்சி செய்து சத்துருக்களை யழித்தல்.

5.4. முயற்சியால் த்வாஷ்ட்ரனுல் நமுசியும் பலனும் கொல்லப்பட்டார்கள். முனிசிரேஷ்டரே! அவ்வாறே நான் இந்த மகிஷனைக் கொல்லுகிறேன்.

5.5. தேவகுருவாகிய நீர் எனக்கு வஜ்ராயுதம் போன்ற உத்தம பலம்; ஹரி சகாயமாயிருப்பவர் என்பது நிச்சயம்; அவ்வாறே மாறுபாடற்ற உமாபதியும் சகாயம்.

5.6. சாதுவே! ரக்ஷோக்ன மந்திரங்களைப் பாராயணம் செய்யுங்கள்: நான் இப்பொழுது முயற்சியைக் கைக்கொள்ளுகிறேன். நான் எனது சேனைகளை மகிஷனை நோக்கிச் செலுத்துகிறேன்.

बृहस्पतिरुवाच—

प्रेरयामि न चाहं त्वां न च निवारयाम्यहम्।
सन्दिग्धेऽत्र जये कामं युध्यतश्च पराजये ॥ ५. ८ ॥

तस्मादुपायः कर्तव्यो बुद्धिमद्भिः सदा नरैः।
कार्यसिद्धिः सदा नूनं दैवाधीना सुराधिप ॥ ५. १३ ॥

व्यास उवाच—

तच्छ्रुत्वा वचनं सत्यं गुरोः सार्थं शचीपतिः।
ब्रह्माणं शरणं गत्वा नत्वा वचनमब्रवीत् ॥ ५. १४ ॥

पितामह सुराध्यक्ष दैत्यो महिषसंज्ञकः।
गृहीतुकामः स्वर्गं मे बलोद्योगं करोत्यलम् ॥ ५. १५ ॥

பிருஹஸ்பதி கூறியது—

5.8. போர்புரிபவனுக்கு வெற்றி ஏற்படுவதிலும் தோல்வி ஏற்படுவதிலும் சந்தேகம் இருப்பதால் நான் உன்னைப் போருக்குச் செல்லத் தூண்டவுமில்லை, விலக்கவுமில்லை.

5.13. தேவேந்திரனே! ஆகையால் புத்திமான்களான மனிதர்களால் எப்பொழுதும் உபாயம் கைக் கொள்ளப்பட வேண்டும். காரியசித்தி தெய்வாதீனம் என்பது நிச்சயம்.

வியாஸர் கூறியது—

5.14. குருவின் அர்த்த புஷ்டியுள்ளதும் ஸத்தியமானதுமான பேச்சைக் கேட்டு பிரம்மாவை நாடிச் சரணடைந்து நமஸ்கரித்துப் பின்வருமாறு இந்திரன் பேசினான்.

5.15. 'பிதாமகரே! தேவர்களின் அதிபதியே! மகிஷன் எனப்பெயர் படைத்த அசுரன் எனது ராஜ்யமாகிய சுவர்க்கத்தைப் பிடிக்கும் ஆசையுடன் சேனுபலத்தை வேண்டிய மட்டும் வளர்த்து வருகிறான்.

तेनाहं भीत भीतोऽस्मि त्वत्सकाशमिहागतः।
सर्वज्ञोऽसि महाप्राज्ञ साहाय्यं कर्तुमर्हसि ॥ ५. १७ ॥

ब्रह्मोवाच—

गच्छामः सर्व एवाद्य कैलासं त्वरिता वयम्।
शंकरं पुरतः कृत्वा विष्णुं च बलिनां वरम् ॥ ५. १८ ॥

ततो युद्धं प्रकर्तव्यं सर्वैः सुरगणैः सह।
मिलित्वा मन्त्रमाधाय देशं कालं विचिन्त्य च ॥ ५. १९ ॥

व्यास उवाच—

तन्निशम्य सहस्राक्षः कैलासं निर्जगाम ह।
ब्रह्माणं पुरतः कृत्वा लोकपालं समन्वितः ॥ ५. २१ ॥

तुष्टाव शंकरं गत्वा वेदमन्त्रैर्महेश्वरम्।
प्रसन्नं पुरतः कृत्वा ययौ विष्णुपुरं प्रति ॥ ५. २२ ॥

5.17. 'அதனுல் நான் மிகவும் பயத்தையடைந்து உங்களிடம் இங்கு வந்துள்ளேன். எல்லாம் அறிந்த தாங்கள் எனக்கு உதவி புரிந்தருள வேண்டும்.

பிரம்மா கூறியது—

5.18–19. நாம் எல்லோரும் இப்பொழுது விரைவில் கைலாஸம் செல்வோம். சங்கரரையும் பலம் மிகுந்தவர்களிற் சிறந்த விஷ்ணுவையும் முன்னிட்டுக் கொண்டு எல்லா தேவகணங்களுடனும் கூடி தேசம் காலம் முதலியவற்றை யோசித்து நிச்சயித்துக் கொண்டு யுத்தம் செய்ய வேண்டும்.

வியாஸர் கூறியது—

5.21. அதைக்கேட்டு இந்திரன் லோகபாலர்களுடன் பிரம்மாவை முன்னிட்டுக் கொண்டு கைலாஸம் சென்ருன்.

5.22. அங்கு சென்று வேதமந்திரங்களால் மகேசுவரராகிய சங்கரரைத் துதித்து அவர் பிரசன்னமானதும் அவரை முன்னிட்டுக் கொண்டு எல்லோரும் விஷ்ணுலோகம் சென்றனர்.

तदाकर्ण्य भयं तस्य विष्णुर्देवानुवाच ह ।
करिष्यामो वयं युद्धं हनिष्यामस्तु दुर्जयम् ॥ ५. २४ ॥

इति ते निश्चयं कृत्वा ब्रह्मविष्णुहरीश्वराः ।
स्वानि स्वानि समारुह्य वाहनानि ययुः सुराः ॥ ५. २५ ॥

तावद्दैत्यबलं प्राप्तं दृतं महिषपालितम् ।
तत्राभूत्तुमुलं युद्धं देवदानवसैन्ययोः ॥ ५. २७ ॥

चुकोप महिषः श्रुत्वा जयशब्दं सुरैः कृतम् ।
प्रेषयामास तत्रैव ताम्रं परमदापहम् ॥ ५. ५० ॥

तत्र युद्धमभूद्घोरं देवदानवयोर्मिथः ।
बाणैः खड्गैश्च मुसलैः शक्तिभिश्च परश्वधैः ॥ ५. ५३ ॥

5.24. அவர்களுடைய பயத்திற்குக் காரணத்தைக் கேட்ட விஷ்ணுவானவர் 'நாம் யுத்தம் செய்து ஜயித்தற் கரிய பகைவனை ஜயிப்போம்' என்று கூறினர்.

5.25. இவ்வாறு பிரம்மா விஷ்ணு மகேசுவரர்கள் நிச்சயம் செய்த பின் தேவர்கள் தத்தம் வாகனங்களில் ஏறிக்கொண்டு கிளம்பினர்கள்.

5.27. மகிஷனால் பாலிக்கப்பட்ட சேனை சமூகத்தை யடைந்ததும் தேவர்களுக்கும் அசுரர்களுக்குமிடையே கடுமை யான போர் ஆரம்பமாயிற்று.

5.50. தேவர்கள் செய்த ஜயகோஷத்தைக் கேட்டு மகிஷன் கோபமடைந்து பிறருடைய கொழுப்பையடக்க வல்ல தாம்ரன் என்பவனை அனுப்பி வைத்தான்.

5.53. பாணங்களாலும், கத்திகளாலும், முஸலம், சக்தி, பரசு முதலிய ஆயுதங்களாலும் தேவர்களுக்கும் அசுரர்களுக்குமிடையே மிகவும் கொடிய போர் நிகழ்ந்தது.

दण्डेन निहतस्ताम्रो यमहस्तोद्यतेन च।
न चचाल महाबाहुः संग्रामांगणस्तदा ॥ ५. ५४ ॥

चापमाकृष्य वेगेन मुक्त्वा तीव्रान् शिलीमुखान्।
इन्द्रादीनहनत्तूर्णं ताम्रस्तस्मिन् रणाजिरे ॥ ५. ५५ ॥

तेऽपि देवाः शरै-र्दिव्यैर्निशितैश्च शिलाशितैः।
निजघ्नु-र्दानवान् क्रुद्धास्तिष्ठ तिष्ठेति चुक्रुशुः ॥ ५. ५६ ॥

निहतैस्तैः सुरै-र्दैत्या मूर्च्छामाप रणांगणे।
हाहाकारो महानासीद्दैत्यसैन्ये भयाऽतुरे ॥ ५. ५७ ॥

ताम्रेऽथ मूर्छिते दैत्ये महिषः क्रोधसंयुतः।
समुद्यम्य गदां गुर्वीं देवानुपजगाम ह ॥ ६. १ ॥

5.54–55. யமன் கையிலேந்திய தண்டத்தால் தாம்ரன் தாக்கப்பட்டான். ஆனுல் தோள்வலிமிக்க அவன் அதற்கசையாமல் வில்லேயெடுத்துக்கொண்டு வேகமான அம்புகளே எய்து போர்க்களத்தில் இந்திரன் முதலியவர்களே வெகுவாய்த் துன்புறுத்தினுன்.

5.56. கோபம் மிகுந்த தேவர்களும் 'நில் நில்' என்று கூவிக்கொண்டு தெய்வீக சக்திவாய்ந்த கூரிய பாணங்களால் அசுரர்களேத் தாக்கினுர்கள்.

5.57. தேவர்களால் தாக்கப்பட்ட அசுரர்கள் போர்க்களத்தில் மூர்ச்சித்து விழ்ந்தனர். பயத்தால் பீடிக்கப்பட்ட அசுரசைனியத்தில் 'ஹா! ஹா!' என்ற கூக்குரல் கிளம்பிற்று.

6.1. தாம்ராசுரன் மூர்ச்சையடைந்த பொழுது மகிஷன் கோபாவேசத்துடன் கிளம்பிப் பெரியதொரு கதாயுதத்தைச் சுழற்றிக்கொண்டு தேவர்களே எதிர்த்தான்.

चकाराऽऽशु तदा दैत्यो मायां मोहकरीं किल।
शाम्बरीं सर्वलोकघ्नीं मुनीनामपि मोहिनीम् ॥ ६.७ ॥

कोटिशो महिषास्तत्र तद्रूपास्तत्पराक्रमाः।
ददृशुः सायुधाः सर्वे निघ्नन्तो देववाहिनीम् ॥ ६.८ ॥

पलायनपराः सर्वे भभूवु-र्मोहिताः सुराः।
ब्रह्मविष्णुमहेशानां स्मरणं चक्रुरुद्यताः॥
तत्राजग्मुश्चकाजेशाः स्मृतमात्राः सुरोत्तमाः ॥ ६. ११ ॥

महिषाख्यो महावीरः सेनानीश्चिक्षुरस्तथा।
उग्रास्यश्चोग्रवीर्यश्च दुद्रुवुर्युद्धकामुकाः ॥ ६. १५ ॥

असिलोमात्रिनेत्रश्च बाष्कलोऽन्धक एव च।
एते चान्ये च बहवो युद्धकामा विनिर्ययुः ॥ ६. १६ ॥

6.7. எல்லா உலகங்களையும் அழிக்கவல்லதும் முனிவர்களையும் மயக்குவிப்பதுமான சாம்பரீ என்னும் மாயா சக்தியைத் தோற்றுவித்தான்.

6.8. அப்பொழுது மகிஷாசுரனைப்போல் உருவமும் பராக்கிரமமும் படைத்த கோடிக்கானவர்களை தேவர்கள் கண்டனர். அவர்கள் எல்லோரும் ஆயுதங்களைத் தாங்கி தேவசேனைகளை அழிக்க முற்பட்டனர்.

6.11. தேவர்கள் மதிமயங்கி எல்லோரும் பின்வாங்கி ஓடத் தலைப்பட்டனர். பிரம்மா விஷ்ணு மகேசுவரர்களை மனதில் தியானித்தார்கள். அங்ஙனம் நினைத்தமாத்திரத்தில் தேவநாயகர்களாகிய அவர்கள் அங்கு தோன்றினார்கள்.

6.15–16. மகா வீரனாகிய மகிஷனும் சேனாபதியாகிய சிக்ஷுரனும் உக்ராஸ்யன், உக்ரவீர்யன் ஆகியோரும் போர் புரியும் ஆவலுடன் முன் போந்தனர். அஸிலோமா, த்ரிநேத்ரன், பாஷ்கலன், அந்தகன் ஆகியோரும் இன்னும் பலரும் போர்புரிய ஆசை கொண்டு வெளிப்போந்தனர்.

वासुदेवोऽपि तरसा दृष्ट्वा देवाञ्छुचाऽऽवृतान् ।
गदां कौमोदकीं धृत्वा दानवं समुपाद्रवत् ।
तं जघानातिवेगेन मूर्ध्नि मायाविनं हरिः ॥ ६. ३२ ॥

स गदाभिहतो भूमौ निपपातातिमूर्छितः ।
स विहाय व्यथां दैत्यो मुहूर्तादुत्थितः पुनः ॥ ६. ३८ ॥

असुरान्महिषो दृष्ट्वा विषण्णमनसस्तदा ।
त्यक्त्वा तन्माहिषं रूपं बभूव मृगराडसौ ॥ ७. १ ॥

वासुदेवोऽपि तं दृष्ट्वा चक्रमुद्यम्य वेगवान् ।
हन्तुकामो हरिः काममवापऽऽशु क्रुधान्वितः ॥ ७. ४ ॥

यावद्धयरिपुं वेगाच्चक्रेणाभिजघान तम् ।
तावत्सोऽतिबलः श्रृंगी श्रृंगाभ्यां न्यहनद्धरिम् ॥ ७. ५ ॥

6.32. வாசுதேவர் அவர்களேப் பார்த்து, தேவர்கள் துக்கத்திலாழ்ந்திருப்பதையும் கண்ணுற்றுக் கௌமோதகீ என்னும் கதாயுதத்தைக் கொண்டு அசுரர்களேப் பீடித்தார். மாயாவியான மகிஷனே அவர் வேகமாய்த் தலேயில் அடித்தார்.

6.38. கதையால் அடிக்கப்பட்ட அவன் மூர்ச்சித்து பூமியில் சாய்ந்தான். சிறிது நேரத்தில் மூர்ச்சை நீங்கி அவன் மீண்டும் எழுந்தான்.

7.1. மகிஷன் அசுரர்களேப் பார்த்து மனம் நொந்து தன்னுடைய எருமை வடிவை விட்டுச் சிங்க வடிவை எடுத்துக் கொண்டான்.

7.4. வாசுதேவர் அதைப்பார்த்து வேகமாய்ச் சக்ராயுதத்தை எடுத்துக் கொண்டு கோபத்துடன் அவனேக் கொல்லக் கிளம்பினர்.

7.5. எப்பொழுது சக்கரத்தால் அவனேத் தாக்கினரோ அப்பொழுது கொம்புகளில் பலம் மிகுந்த அவன் கொம்புகளால் ஹரியை முட்டினன்.

वासुदेवो विषाणाभ्यां ताडितोरसि विह्वलः ।
पलायनपरो वेगाज्जगाम भुवनं निजम् ॥ ७. ६ ॥

गतं दृष्ट्वा हरिं कामं शंकरोऽपि भयान्वितः ।
अवध्यं तं परं मत्वा ययौ कैलासपर्वतम् ॥ ७. ७ ॥

ब्रह्मापि च निजं धाम त्वरितः प्रययौ भयात् ।
मघवा व्रजमालम्ब्य तथा बाजौ महाबलः ॥ ७. ८ ॥

खुरघातैस्तथा देवान् पुच्छस्य भ्रमणेन च ।
स जघान रुषाविष्टो महिषः परमाद्भुतः ॥ ७. १६ ॥

ततो देवाः स गन्धर्वा भयमाजग्मुरुद्यताः ।
मघवा महिषं दृष्ट्वा पलायनपरोऽभवत् ॥ ७. १७ ॥

7.6. மார்பில் கொம்புகளால் தாக்கப்பட்ட வாசுதேவர் கலவரமடைந்து போர்க்களத்தைவிட்டு நீங்கி வேகமாய்த் தமது இருப்பிடமடைந்தார்.

7.7. ஹரி சென்றுவிட்டதைக் கண்ட சங்கரரும் பயம் மேலிட்டவராய் அவ்வசுரன் கொல்ல முடியாதவன் என்று கருதி கைலாஸபர்வதத்திற்குத் திரும்பினார்.

7.8. பிரம்மாவும் பயத்தால் தன்னிருப்பிடத்திற்கு விரைந்தார். மகாபலசாலியான இந்திரன் வஜ்ரத்தை எடுத்துக்கொண்டு போர் புரிய முயற்சித்தான்.

7.16. அத்புதச் செயல் புரியும் மகிஷன் கோபம் மிகுந்து குளம்புகளாலும் வாலைச் சுழற்றுவதாலும் தேவர்களைத் துன்புறுத்தினான்.

7.17. அப்பொழுது தேவர்களும் கந்தர்வர்களும் பயத்தையடைந்தனர். இந்திரன் மகிஷாசுரனைக்கண்டு ஓட்டம் பிடிப்பவனாயினான்.

संगरं सम्परित्यज्य गते शक्रे शचीपतौ ।
यमो धनाधिपः पाशी जग्मुः सर्वे भयातुराः ॥ ७. १८ ॥

महिषोऽतिजयं मत्वा जगाम स्वगृहं ततः ।
स्वसैन्यसंवृतस्तूर्णं स्वर्गं गन्तुं मनो दधे ॥ ७. २० ॥

तरसा देवसदनं गत्वा स महिषासुरः ।
जग्राह सुरराज्यं वै त्यक्तं देवैर्भयातुरैः ॥ ७. २१ ॥

इन्द्रासने तथा रम्ये दानवः समुपाविशत् ।
दानवान्स्थापयामास देवानां स्थानकेषु सः ॥ ७. २२ ॥

निर्जरा निर्गता नाकात्तेन सर्वेऽतिपीडिताः ।
एवं बहूनि वर्षाणि बभ्रमुर्गिरिगह्वरे ॥ ७. २४ ॥

7.18. சசிபதியாகிய இந்திரன் போர்க்களத்தைவிட்டு ஓடியபின் யமனும் பாசத்துடன் குபேரனும் மற்றும் எல்லோரும் பயம் மேலிட்டவர்களாய்ப் போய்விட்டார்கள்.

7.20. மகிஷன் ஜயித்துவிட்டதாயெண்ணிக்கொண்டு தன் வீட்டிற்குத் திரும்பினுன். பின்பு தனது சைனியம் சூழ்ந்துவர விரைவில் சுவர்க்கம் செல்ல மனதில் திட்டம் போட்டான்.

7.21. அவ்வாறே மகிஷாசுரன் தேவலோகம் சென்று தேவர்களால் பயந்து கைவிடப்பட்ட அவர்களுடைய ராஜ்யத்தைக் கைப்பற்றிக் கொண்டான்.

7.22. அவ்வசுரன் அழகான இந்திரனுடைய ஆசனத்தில் ஏறியமர்ந்தான். தேவர்களின் பதவிகளில் அசுரர்களை அமர்த்தினுன்.

7.24. தேவர்கள் அவனுல் மிகவும் பீடிக்கப்பட்டு சுவர்க்கத்தினின்று வெளியேறினுர்கள். இவ்வாறு மலைகளிலும் காடுகளிலும் ஒளிந்து பல வருஷங்களைக் கழித்தார்கள்.

श्रान्ताः सर्वे तदा राजन् ब्रह्माणं शरणं ययुः।
तुष्टुवुर्भयभीतास्ते देवदेवं जगद्गुरुम् ॥ ७. २७ ॥

ब्रह्मोवाच—

किं करोमि सुराः कामं दानवो वरदर्पितः।
स्त्रीवध्योऽसौ न पुंवध्यो विधेयं तत्र किं पुनः ॥ ७. ३६ ॥

व्रजामोऽद्य सुराः सर्वे कैलासं पर्वतोत्तमम्।
शंकरं पुरतः कृत्वा सर्वकार्यविशारदम् ॥ ७. ३७ ॥

ततो व्रजाम वैकुण्ठं यत्र देवो जनार्दनः।
मिलित्वा देवकार्यं च विमृशामो विशेषतः ॥ ७. ३८ ॥

इत्युक्त्वा हंसमारुह्य ब्रह्मा कार्यसमुच्चये।
देवांश्च पृष्ठतः कृत्वा कैलासाभिमुखो ययौ ॥ ७. ३९ ॥

7.27. அரசே! மிகவும் சிரமப்பட்ட அவர்களனே வரும் பயம் மேலிட்டவர்களாய் தேவ தேவரும் ஜகத் குருவுமான பிரம்மாவைச் சரணடைந்து துதித்தார்கள்.

பிரம்மா கூறியது—

7.36. தேவர்களே! அவ்வசுரன் வரத்தால் கொழுப் படைந்திருக்கிறுன். நான் என்ன செய்யட்டும்? ஸ்திரீ யினுல் தான் அவனைக் கொல்ல முடியும்; புருஷன் எவனுலும் கொல்ல முடியாது. அப்படியிருக்கையில் செய்யத் தக்கதைப் பற்றி யோசிக்க வேண்டும்.

7.37–38. தேவர்களே! இப்பொழுது எல்லோரும் பர்வதங்களிற் சிறந்த கைலாஸம் செல்வோம். எக்காரியத் திலும் வல்லவரான சங்கரரை முன்னிட்டுக்கொண்டு ஜனுர்த் தனர் இருக்கும் வைகுண்டலோகம் எதுவோ அங்கு செல் வோம். தேவகாரியத்தைப்பற்றி விசேஷமாய் அங்கு கூடி ஆலோசனை செய்வோம்.

7.39. காரியம் செய்ய வேண்டிய முறையைப்பற்றி பிரம்மா இவ்வாறு கூறிவிட்டு ஹம்ஸ வாகனத்திலேறிக் கொண்டு தேவர்கள் பின்தொடரக் கைலாஸம் சென்றுர்.

शिव उवाच—

किमत्रागमनं ब्रह्मन् कृतं देवैः सवासवैः।
भवता च महाभाग ब्रूहि तत्कारणं किल ॥ ७. ४४ ॥

ब्रह्मोवाच—

महिषेण सुरेशान पीडिताः स्वर्निवासिनः।
भ्रमन्ति गिरिदुर्गेषु भयत्रस्ताः सवासवाः ॥ ७. ४५ ॥

यज्ञभुग्महिषो जातस्तथाऽन्ये सुरशत्रवः।
पीडिता लोकपालाश्च त्वामद्य शरणं गताः ॥ ७. ४६ ॥

शिव उवाच—

भवतैव कृतं कार्यं वरदानात्पुरा विभो।
अनर्थदंच देवानां किं कर्तव्यमतः परम् ॥ ७. ४९ ॥

சிவன் கூறியது—

7.44. பிரம்மாவே! தேவர்களுடனும் இந்திரனுடனும் பெருமை மிகுந்த நீர் இங்கு வந்த காரணம் என்ன? கூறும்.

பிரம்மா கூறியது—

7.45. தேவர்கள் நாயகனே! தேவலோகவாசிகள் மகிஷனல் பீடிக்கப்பட்டு பயந்தவர்களாய் இந்திரனுடன் மலைகளிலும் துர்க்கங்களிலும் வசித்துக் கொண்டு அலைகின்றனர்.

7.46. யக்ஞபாகங்களை மகிஷனும் மற்ற தேவ சத்துருக்களும் புசிக்கின்றனர். லோகபாலர்கள் துன்புற்று தேவரீரைச் சரணடைந்திருக்கிறார்கள்.

சிவன் கூறியது—

7.49. விபுவே! உம்மாலேயே முன்பு கொடுக்கப்பட்ட வரத்தால் தேவர்களுக்கு ஆபத்தை விளைத்துள்ள இக்காரியம் நிகழ்ந்துள்ளது. இனிமேல் என்ன செய்வது?

का समर्था वरा नारी तं हन्तुं मददर्पितम् ।
मिलित्वा वासुदेवं वै कर्तव्यं कार्यचिन्तनम् ।। ७. ५५ ।।

व्यास उवाच—

तरसा तेऽथ संप्राप्य वैकुण्ठं विष्णुवल्लभम् ।
ददृशुः सर्वशोभाढयं दिव्यगृह-विराजितम् ।। ८. १ ।।

ते च विष्णुगृहं प्राप्य द्वारपालौ शुभाकृती ।
वीक्ष्योचुर्जयविजयौ हेमयष्टिधरौ स्थितौ ।। ८. ६ ।।

गत्वैकोप्युभयोर्मध्ये निवेदयतु संगतान् ।
द्वारस्थान् ब्रह्मरुद्रादीन् विष्णुदर्शनलालसान् ।। ८. १० ।।

तच्छ्रुत्वा वचनं विष्णुर्विजयस्य रमापतिः ।
निर्जगाम गृहात्तूर्णं सुरान् समधिकोत्सवः ।। ८. १४ ।।

7.55. மதம் பிடித்து கர்வித்திருக்கும் அவனைக் கொல்லக் கூடிய சிறந்த சாமர்த்தியமுடைய ஸ்திரீ யார்? வாசுதேவரையடைந்து செய்ய வேண்டிய காரியத்தைப் பற்றிச் சிந்திப்போம்.

வியாஸர் கூறியது—

8.1. அவர்கள் விரைவில் விஷ்ணுலோகமாகிய வைகுண்டம் சென்று அங்கு தெய்வீக சோபையுடன் சிறந்து விளங்கிய மாளிகையைக் கண்டனர்.

8.9–10. அழகிய உருப்படைத்தவர்களும் தங்கப்பிரம்பேந்தி நிற்பவர்களும் ஜயன் விஜயன் என்ற பெயருடையவர்களுமான துவாரபாலகர்களைக் கண்டு, உங்களில் ஒருவர் உட்சென்று வாயிலில் பிரம்மா ருத்திரர் முதலியோர் விஷ்ணு தர்சனத்தை விரும்பி வந்திருப்பதைத் தெரிவியுங்கள் என்று கூறினார்கள்.

8.14. அங்ஙனம் சென்று விஜயன் கூறியதைக் கேட்ட லக்ஷ்மீபதியாகிய விஷ்ணு தேவர்களை வரவேற்க வெளியே வந்தார்.

विष्णुरुवाच—

विशन्तु निर्जराः सर्वे कुशलं कथयन्तु वः।
ब्रह्मरुद्रेण सहिताः कार्यं ब्रुवत सत्वरम् ॥ ८. १९ ॥

देवा ऊचुः—

महिषेण महाराज पीडिताः पापकर्मणा।
असाध्येनातिदुष्टेन वरदृप्तेन पापिना ॥ ८. २० ॥

धात्रा तस्मै वरो दत्तो ह्यवध्योऽसि नरैः किल।
का स्त्री त्वेवं विधा बाला या हन्यात्तं शठं रणे ॥ ८. २४ ॥

श्रुत्वा तद्वचनं विष्णुस्तानुवाच हसन्निव।
युद्धं कृतं पुराऽस्माभिस्तथाऽपि न मृतोह्यसौ ॥ ८. २७ ॥

अद्य सर्वसुराणां तेजोभी रूपसम्पदा।
उत्पन्नाचेद्वरारोहा सा हन्यात्तं रणे बलात् ॥ ८. २८ ॥

விஷ்ணு கூறியது—

8.19. தேவர்களே! எல்லோரும் உள்ளே வாருங்கள். க்ஷேமஸமாசாரத்தைச் சொல்லுங்கள். பிரம்மாவுடனும் ருத்திரருடனும் கூடி வந்த காரியத்தை விரைவில் கூறுங்கள்.

தேவர்கள் கூறியது—

8.20. பாவியாயும் பாவச் செயலே புரிபவனுயும் மிகவும் துஷ்டனுயும் அடக்க முடியாதவனுயும் வரத்தால் கொழுப்படைந்தவனுயுமுள்ள மகிஷனுல் நாங்கள் பீடிக்கப் பட்டுள்ளோம்.

8.24. 'புருஷர்களால் நீ கொல்லப்படமாட்டாய்' என்று பிரம்மா அவனுக்கு வரமளித்துள்ளார். அந்த துஷ்டனைப் போரில் கொல்லக் கூடியவளான ஸ்திரீ எவள் இருக்கிருள்?

8.27–28. அந்த வார்த்தையைக் கேட்டுப் புன்முறுவல் பூத்தவராய் விஷ்ணு கூறினுர்: 'நம்மால் முன்பு யுத்தம் செய்யப்பட்டது; என்ருலும் அவன் மடியவில்லை. இப் பொழுது எல்லா தேவர்களுடைய தேஜோ ரூபஸம்பத்தால் ஒரு சிறந்த ஸ்திரீ படைக்கப்பட்டால் அவள் தன் பலத்தால் போரில் அவ்வசுரனைக் கொல்பவளாவாள்.'

व्यास उवाच—

इत्युक्तवति देवेशे ब्रह्मणो वदनात्ततः ।
स्वयमेवोद्बभौ तेजोराशिश्चातीव दुःसहः ॥ ८. ३३ ॥

रक्तवर्णं शुभाकारं पद्मरागमणिप्रभम् ।
किंचिच्छीतं तथा चोष्णं मरीचिजालमण्डितम् ॥ ८. ३४ ॥

शंकरस्य शरीरात्तु निःसृतं महदद्भुतम् ।
रौप्यवर्णमभूत्तीव्रं दुर्दर्शं दारुणं महत् ॥ ८. ३६ ॥

ततो विष्णुशरीरात्तु चित्ररूपं दुरासदम् ।
आविरासीत्सुसंवृत्तं तेजः सर्वगुणात्मकम् ॥ ८. ३९ ॥

कुबेरयमवह्नीनां शरीरेभ्यः समन्ततः ।
निश्चक्राम महत्तेजो वरुणस्य तथैव च ॥ ८. ४० ॥

வியாஸர் கூறியது—

8.33. தேவநாதர் இவ்வாறு கூறியதும் பிரம்மாவினுடைய முகத்திலிருந்து தானுகவே ஒரு ஒளிக்கற்றை கிளம்பிக் காணக் கூசும்படி பிரகாசித்தது.

8.34. பத்மராக மணிபோல் சிவப்பு வர்ணமாயும் அழகிய வடிவுடையதாயும் உஷ்ணமும் குளிர்ச்சியும் கலந்தாற்போன்ற கிரணங்களை உடையதாயும் அது இருந்தது.

8.36. சங்கரருடைய சரீரத்திலிருந்து வெளிப்போந்த மிகவும் அற்புதமான வெள்ளிபோன்ற ஒளி கண் கூசும்படி திவிரமாயிருந்தது.

8.39. பின்பு விஷ்ணு சரீரத்திலிருந்து தோன்றிய ஒளி எல்லா குணங்களும் உருவெடுத்ததாய் விசித்திர ரூபத்துடன் நெருங்க முடியாததாய் விளங்கிற்று.

8.40. குபேரன் யமன் அக்னி ஆகியோரின் சரீரங்களினின்றும் அவ்வாறே வருணனுடைய சரீரத்தினின்றும் மஹத்தான தேஜஸ் வெளிப்போந்தது.

अन्येषां चैव देवानां शरीरेभ्योऽतिभास्वरम्।
निर्गतं तन्महातेजो राशिरासीन्महोज्ज्वलः ॥ ८. ४१ ॥

पश्यतां तत्र देवानां तेजः पुंजसमुद्भवा।
बभूवातिवरा नारी सुन्दरी विस्मयप्रदा ॥ ८. ४३ ॥

त्रिगुणा सा महालक्ष्मीः सर्वदेवशरीरजा।
अष्टादशभुजा रम्या त्रिवर्णा विश्वमोहिनी ॥ ८. ४४ ॥

सा नित्या सर्वदैवास्ते देवकार्यार्थसिद्धये।
नानारूपात्वेकरूपा जायते कार्यगौरवात् ॥ ८. ५७ ॥

8.41. மற்ற தேவர்களுடைய சரீரங்களினின்றும் அவ்வாறே கிளம்பிய மிகவும் பிரகாசமான மஹா தேஜஸ்ஸும் கூடி ஜ்வலிக்கும் ஒரு தேஜோராசியாயிற்று.

8.43. தேவர்கள் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுதே அந்த ஒளிப்பிழம்பிலிருந்து அதிசயிக்கத்தக்க முறையில் அழகான ஒரு ஸ்திரீ ரூபம் தோன்றிற்று.

8.44. எல்லா தேவர்களுடைய சரீரத்திலிருந்தும் தோன்றிய அவள் மஹாலக்ஷ்மி எனப்படுவாள். அவள் முக்குண மயமானவள். உலகை மயக்கும் அழகுடன் மூன்று வர்ணமுடையவளாய்ப் பதினெட்டு புஜங்களுடையவளாய் அவள் இருந்தாள்.

8.57. அவள் நித்தியமானவள். தேவகாரிய சித்திக்காக எப்பொழுதுமிருப்பவள். காரியத்தின் பொருட்டுப் பலவடிவுகளில் (சகுணமாக) தோன்றினாலும் அவளுடைய ரூபம் (நிர்குணமாக) ஒன்றே.

शंकरस्य च यत्तेजस्तेन तन्मुखपंकजम् ।
नयनस्त्रितयं तस्या जज्ञे पावकतेजसा ।। ८. ६४ ।।

वायोश्च तेजसा शस्तौ श्रवणौ संबभूवतुः ।
तिलपुष्पसमाकारा नासिका सुमनोहरा ।।
संजाता स्निग्धवर्णा वै धनदस्य च तेजसा ।। ८. ६७ ।।

दन्ताः शिखरिणः श्लक्ष्णाः कुन्दाग्रसदृशाः समाः ।
संजाताः सुप्रभा राजन् प्राजापत्येन तेजसा ।। ८. ६८ ।।

अधरश्चातिरक्तोऽस्याः संजातोऽरुणतेजसा ।
उत्तरोष्ठस्तथा रम्यः कार्तिकेयस्य तेजसा ।। ८. ६९ ।।

अष्टादशभुजाकारो बाहवो विष्णुतेजसा ।
वसूनां तेजसांगुल्यो रक्तवर्णास्तथाऽभवन् ।। ८. ७० ।।

7.64–67. சங்கரருடைய ஒளி எதுவோ அதனால் அவளுடைய முககமலம் தோன்றிற்று. அவளுடைய மூன்று கண்களும் அக்னியின் ஒளியால் தோன்றியவை. வாயுவினுடைய ஒளியால் அவளுடைய அழகிய காதுகள் தோன்றின. எள்ளின் பூவைப்போல் மனதைக்கவரும் அழகுடையதும் பளபளப்பான வர்ணமுடையதுமான மூக்கு குபேரனுடைய ஒளியால் தோன்றியது.

7.68. அரசே! அவ்வழகிய தேவியின் பற்கள், குருக்கத்தி மலர் போன்றவையாயும் சமமாயும் மெல்லியவையாயும் பிரகாசமுடையவையாயும், பிரம்மாவின் ஒளியால் தோன்றியவை.

8.69. அவளுடைய சிவப்புமிக்க கீழுதடு உதய சூரியனுடைய ஒளியாலுண்டானது. அழகிய மேலுதடு கார்த்திகேயனுடைய ஒளியாலுண்டானது.

8.70. பதினெட்டு புஜங்களும் கைகளும் விஷ்ணு தேஜஸ்ஸாலும் சிவப்பு வர்ணமுடைய விரல்கள் வசுக்களின் தேஜஸ்ஸாலும் தோன்றின.

सौम्येन तेजसा जातं स्तनयोर्युग्ममुत्तमम् ।
ऐन्द्रेणास्यास्तथा मध्यं जातं त्रिवलिसंयुतम् ॥ ८. ७१ ॥

जंघोरू वरुणस्याऽथ तेजसा संबभूवतुः ।
नितंबः स तु संजातो विपुलस्तेजसा भुवः ॥ ८. ७२ ॥

एवं नारी शुभाकारा सुरूपा सुस्वरा भृशम् ।
समुत्पन्ना तथा राजंस्तेजोराशि समुद्भवा ॥ ८. ७३ ॥

विष्णुस्त्वाह सुरान् सर्वान् भूषणान्यायुधानि च ।
प्रयच्छन्तु शुभान्यस्यै देवाः सर्वाणि सांप्रतम् ॥ ८. ७५ ॥

स्वायुधेभ्यः समुत्पाद्य तेजोयुक्तानि सत्वराः ।
समर्पयन्तु सर्वेऽद्य देव्यै नानायुधानि वै ॥ ८. ७६ ॥

8.71. உத்தமமான இரு நகில்களும் ஸோமனுடைய தேஜஸ்ஸால் உண்டானவை. மூன்று மடிப்புக்களுடன் கூடிய இடுப்புப்பிரதேசம் இந்திரனுடைய தேஜஸ்ஸால் உண்டானது.

8.72. துடைகளும் முழங்கால்களும் வருணனுடைய தேஜஸ்ஸால் தோன்றியவை. விசாலமான நிதம்பப்பிர தேசம் பூமியின் தேஜஸ்ஸால் தோன்றியது.

8.73. அரசே! இவ்வாருக எல்லா தேவர்களின் தேஜோராசியினின்று அழகிய ரூபமும் இனிய குரலும் மங்கள வடிவும் படைத்த ஸ்திரீ ரூபம் தோன்றிற்று.

8.75–76. எல்லா தேவர்களேயும் பார்த்து விஷ்ணு அப்பொழுது கூறியதாவது: 'தேவர்கள் இப்பொழுது எல்லா வகையான மங்கல பூஷணங்களேயும் ஆயுதங்களேயும் இந்த தேவிக்கு அளிக்கட்டும். தங்கள் தங்கள் ஆயுதங்களினின்று தேஜஸ்ஸுடன் கூடிய பல ஆயுதங்களேயும் உற்பத்தி செய்து தேவர்கள் விரைவில் சமர்ப்பிக்கட்டும்.'

देवा विष्णुवचः श्रुत्वा सर्वे प्रमुदितास्तदा।
ददुश्च भूषणान्याशु वस्त्राणि स्वायुधानि च ॥ ९. १ ॥

क्षीरोदश्चाम्बरे दिव्ये रक्ते सूक्ष्मे तथाऽजरे।
निर्मलं च तथा हारं प्रीतस्तस्यै सुमण्डितम् ॥ ९. २ ॥

ददौ चूडामणिं दिव्यं सूर्यकोटिसमप्रभम्।
कुण्डले च तथा शुभ्रे कटकानि भुजेषु वै ॥ ९. ३ ॥

केयूरान् कंकणान् दिव्यान् नानारत्नविराजितान्।
ददौ तस्यै विश्वकर्मा प्रसन्नेन्द्रियमानसः ॥ ९. ४ ॥

नूपुरौ सुस्वरौ कान्तौ निर्मलौ रत्नभूषितौ।
ददौ सूर्यप्रतीकाशौ त्वष्टा तस्यै सुपादयोः ॥ ९. ५ ॥

9.1. தேவர்கள் அனைவரும் விஷ்ணுவின் வார்த்தையைக் கேட்டு மகிழ்ச்சியுடன் விரைவில் பூஷணங்களையும் வஸ்திரங்களையும் தங்கள் ஆயுதங்களையும் அளித்தனர்.

9.2–3. பாற்கடலரசன் நுட்பமானதும் என்றும் நூதனமானதும் சிவப்பு வர்ணமுள்ளதுமான திவ்யமான இரண்டு வஸ்திரங்களையும், அவ்வாறே நிர்மலமான அழகிய ஆரத்தையும், கோடி சூரியப்பிரகாசமுள்ள சூடாமணியையும் பிரீதியுடன் அந்த தேவிக்கு அளித்தான்.

9.4. இரண்டு குண்டலங்களையும் புஜங்களில் அணியும் கடகங்களையும் பலவகை ரத்தினங்களிழைத்த திவ்யமான கேயூரங்களையும் கங்கணங்களையும் மகிழ்ச்சி பொங்கும் மனத்துடன் விசுவகர்மா அளித்தார்.

9.5. அழகிய பாதங்களில் அணிவதற்கு இன்னொலியுடன் கூடியவையும் நிர்மலமான இரத்தினங்களிழைத்தவையும் சூரியனைப்போல் பிரகாசிப்பவையுமான நூபுரங்களை துவஷ்டா கொடுத்தார்.

तथा ग्रैवेयकं रम्यं ददौ तस्यै महार्णवः ।
अंगुलीयकरत्नानि तेजोवन्ति च सर्वशः ॥ ९. ६ ॥

अम्लानपंकजां मालां गन्धाढ्यां भ्रमरानुगाम् ।
तथैव वैजयन्तीं च वरुणः संप्रयच्छत ॥ ९. ७ ॥

हिमवानथ सन्तुष्टो रत्नानि विविधानिच ।
ददौ च वाहनं सिंहं कनकाभं मनोहरम् ॥ ९. ८ ॥

भूषणैर्भूषिता दिव्यैः सा रराज वरा शुभा ।
सिंहारूढा वरारोहा सर्वलक्षणसंयुता ॥ ९. ९ ॥

विष्णुश्चक्रात्समुत्पाद्य ददावस्यै रथांगकम् ।
सहस्रारं सुदीप्तं च देवारिशिरसां हरम् ॥ ९. १० ॥

9.6. சமுத்திர ராஜன் கழுத்திலணியும் அழகிய ஆபரணங்களையும் விரல்களிலணியும் பிரகாசமான ரத்தினங்களையும் அளித்தான்.

9.7. வண்டுகள் மொய்ப்பதும் வாசனை மிக்கதும் வாடாததுமான தாமரை மாலையையும் வைஜயந்தீ மாலையையும் வருணன் கொடுத்தான்.

9.8. ஹிமவான் மகிழ்ச்சியுடன் பலவித ரத்தினங்களையும் மனதைக் கவரும் பொன் வண்ணமான சிங்க வாகனத்தையும் அளித்தான்.

9.9. திவ்ய ஆபரணங்களால் அலங்கரிக்கப்பெற்று மங்கல வடிவினளாகிய அந்த தேவி எல்லா லக்ஷணங்களும் பொருந்தியவளாய்ச் சிறந்த சிங்க வாகனத்தின் மேல் விளங்கினுள்.

9.10. விஷ்ணு தன் சக்ரத்திலிருந்து உத்பத்தி செய்ததும் தேவசத்துருக்களின் தலைகளைக் கொய்வதும் ஆயிரம் ஆரங்களுடன் நன்கு பிரகாசிப்பதுமான சக்ராயுதத்தைக் கொடுத்தார்.

स्वत्रिशूलात्समुत्पाद्य शंकरः शूलमुत्तमम् ।
ददौ देव्यै सुरारीणां कृन्तनं भयनाशनम् ॥ ९. ११ ॥

वरुणश्च प्रसन्नात्मा ददौ शंखं समुज्ज्वलम् ।
घोषवन्तं स्वशंखात्तु समुत्पाद्य सुमंगलम् ॥ ९. १२ ॥

हुताशनस्तथा शक्ति शतघ्नीं सुमनोरमाम् ।
प्रायच्छत प्रसन्नात्मा तस्यै दैत्यविनाशिनीम् ॥ ९. १३ ॥

इषुधिं बाणपूर्णं च चापं चाद्भुतदर्शनम् ।
मारुतो दत्तवांस्तस्यै दुराकर्षं खरस्वरम् ॥ ९. १४ ॥

स्ववज्राद्वज्रमुत्पाद्य ददाविन्द्रोऽतिदारुणम् ।
घण्टामैरावतात्तूर्णं सुशब्दां चातिसुन्दराम् ॥ ९. १५ ॥

9.11. சங்கரர் தன் த்ரிசூலத்திலிருந்து உத்பத்தி செய்ததும் தேவ சத்துருக்களைக் கொல்வதும் பயத்தை நாசம் செய்வதுமான சிறந்த சூலாயுதத்தை தேவிக்குக் கொடுத்தார்.

9.12. சந்தோஷம் மிக்க வருணன் தனது சங்கத்திலிருந்து உண்டாக்கியதும் ஒலி மிக்கதும் பிரகாசமானதும் மங்கல வடிவினதுமான சங்கத்தைக் கொடுத்தான்.

9.13. அக்னிதேவன் அசுரர்களையழிப்பதும் அழகு பொருந்தியதுமான 'சதக்னீ' எனும் சக்தி ஆயுதத்தை அன்புடன் அவளுக்கு அளித்தான்.

9.14. வாயுதேவன் பாணங்கள் நிறைந்த தூணிரத்தையும், ஒருவராலும் வளைக்கக் கூடாததாயும் பயத்தைக் கொடுக்கும் சப்தமுடையதாயும் அத்புதமாயுமுள்ள வில்லையும் கொடுத்தான்.

9.15. இந்திரன் தன் வஜ்ராயுதத்திலிருந்து உத்பத்தி செய்த மிகவும் குரூரமான வஜ்ராயுதத்தையும், ஐராவதத்திலிருந்து மிகவழகியதும் சிறந்த சப்தமுடையதுமான மணியையும் கொடுத்தான்.

ददौ दण्डं यमः कामं कालदण्डसमुद्भवम् ।
येनान्तं सर्वभूताना-मकरोत्काल आगते ।। ९. १६ ।।

ब्रह्मा कमण्डलुं दिव्यं गंगावारि-प्रपूरितम् ।
ददावस्यै मुदायुक्तो वरुणः पाशमेव च ।। ९. १७ ।।

कालः खड्गं तथा चर्म प्रायच्छत्तु नराधिप ।
परशुं विश्वकर्मा च तीक्ष्णमस्यै ददावथ ।। ९. १८ ।।

धनदस्तु सुरापूर्णं पानपात्रं सुवर्णजम् ।
पंकजं वरुणश्चादाद्देव्यै दिव्यं मनोहरम् ।। ९. १९ ।।

गदां कौमोदकीं त्वष्टा घण्टाशतनिनादिनीम् ।
अदात्तस्यै प्रसन्नात्मा सुरशत्रुविनाशिनीम् ।। ९. २० ।।

अस्त्राण्यनेकरूपाणि तथाऽभेद्यं च दंशनम् ।
ददौ त्वष्टा जगन्मात्रे निजरश्मीन् दिवाकरः ।। ९. २१ ।।

9.16. யமன் எல்லாப் பிராணிகளுக்கும் காலம் வந்ததும் முடிவைச் செய்யும் காலதண்டத்திலிருந்து உத்பத்திசெய்த தண்டாயுதத்தைக் கொடுத்தான்.

9.17. பிரம்மதேவன் கங்கை நீர் நிறைந்த திவ்யமான கமண்டலுவை பிரீதியுடன் கொடுத்தான் வருணன். பாசத்தைக் கொடுத்தான்.

9.18. காலன் கத்தியையும் கவசத்தையும் கொடுத்தான். அரசே! விச்வகர்மா கூர்மையான பரசுவை அந்த தேவிக்குக் கொடுத்தான்.

9.19. குபேரன் மது நிறைந்ததும் தங்கத்தாலானதுமான பானபாத்திரத்தைக் கொடுத்தான். மனதைக்கவரும் திவ்வியமான தொரு தாமரைப்பூவை வருணன் தேவிக்குக் கொடுத்தான்.

9.20—21. மகிழ்ச்சியுடன் கூடிய த்வஷ்டா நூறு மணிகளொலிக்கும் கௌமோதகீ என்ற கதாயுதத்தையும், தேவசத்துருக்களை நாசம் செய்யும் பலவடிவங் கொண்ட அஸ்திரங்களையும் பிளக்க முடியாத கவசத்தையும் ஜகன்மாதாவிற்குக் கொடுத்தான். சூரியன் தனது கிரணங்களைக் கொடுத்தான்.

सायुधां भूषणैर्युक्तां दृष्ट्वा ते विस्मयं गताः ।
तुष्टुवुस्तां सुरा देवीं त्रैलोक्यमोहिनीं शिवाम् ॥ ९. २२ ॥

देवा ऊचुः—

नमः शिवायै कल्याण्यै शान्त्यै पुष्टचै नमो नमः ।
भगवत्यै नमो देव्यै रुद्राण्यै सततं नमः ॥ ९. २३ ॥

कालरात्र्यै तथाऽम्बाया इन्द्राण्यै ते नमो नमः ।
सिद्धचै बुद्धचै तथा वृद्धचै वैष्णव्यै ते नमो नमः ॥ ९. २४ ॥

पृथिव्यां या स्थिता पृथ्व्या न ज्ञाता पृथिवीं च या ।
अन्तः स्थिता यमयति वन्दे तामीश्वरीं पराम् ॥ ९. २५ ॥

मायायां या स्थिता ज्ञाता मायया न च तामजाम् ।
अन्तः स्थिता प्रेरयति प्रेरयित्रीं नुमः शिवाम् ॥ ९. २६ ॥

9.22. மூவுலகங்களேயும் மயக்கும் மங்களவடிவினளும் ஆயுதங்களேயும் ஆபரணங்களேயுந் தரித்தவளுமான தேவியை தேவர்கள் கண்டு ஆச்சரியமடைந்தவர்களாய் அவளைத் துதித்தனர்.

தேவர்கள் கூறியது

9.23. சாந்தியும் புஷ்டியும் கல்யாணமும் மங்களமும் நிறைந்தவளுக்கு நமஸ்காரம். ருத்ராணியும் பகவதியுமாகிய தேவிக்கு எப்பொழுதும் நமஸ்காரம்.

9.24. காலராத்ரியும் இந்திராணியுமாகிய அம்பிகைக்கு நமஸ்காரம். சித்தி, புத்தி, விருத்தி வடிவினளான வைஷ்ணவிக்கு நமஸ்காரம்.

9.25. எவள் பூமிவடிவினளோ பூமியில் இருப்பவளோ உள்ளிருந்து கொண்டு அதை இயக்குபவளோ, ஆனல் பூமி எவளே அறிய வில்லேயோ அந்தப் பரமேச்வரியை வணங்குகிருேம்.

9.26. எவள் மாயையில் உள்ளவளோ, பிறப்பற்றவளோ, எவளே மாயை அறியவில்லேயோ, உள்ளிருந்து கொண்டு எவள் ஏவுகிருளோ அந்த ஏவல் வடிவான சிவசக்தியை வணங்குகிருேம்.

कल्याणं कुरु भो मातस्त्राहि नः शत्रुतापितान् ।
जहि पापं हयारिं त्वं तेजसा स्वेन मोहितम् ॥ ९. २७ ॥

खलं मायाविनं घोरं स्त्रीवध्यं वरदर्पितम् ।
दुःखदं सर्वदेवानां नानारूपधरं शठम् ॥ ९. २८ ॥

त्वमेका सर्वदेवानां शरणं भक्तवत्सले ।
पीडितान् दानवेनाद्य त्राहि देवि नमोऽस्तु ते ॥ ९. २९ ॥

देव्युवाच—

भयं त्यजन्तु गीर्वाणा महिषान्मन्दचेतसः ।
हनिष्यामि रणेऽद्यैव वरदृप्तं विमोहितम् ॥ ९. ३१ ॥

9.27. தாயே! எங்களுக்கு மங்களத்தைச் செய்தருள்வாய். சத்துருக்களால் துன்பமடைந்த எங்களேக் காத்தருள்வாய். தன்னுடைய வல்லமையால் மதிமயங்கியிருக்கும் மகிஷாசுரனேச் சம்ஹாரம் செய்தல் வேண்டும்.

9.28. வரத்தினுல் கொழுப்படைந்தவனும் ஸ்திரீயால் மரணமடையத்தக்கவனும், மாயாவியும், கொடியவனும், துஷ்டனும், தேவர்களேயெல்லாம் துன்புறுத்துபவனும், பல வடிவங்களே எடுக்கவல்லவனும், திருட்டுத்தனமுள்ளவனும், ஆகிய இவ்வசுரனே ஒழிக்க வேண்டும்.

9.29. பக்தர்களிடம் வாத்ஸல்யம் உள்ள தேவியே! நீ ஒருத்தியே எல்லா தேவர்களுக்கும் புகலிடம். அசுரர்களால் பீடிக்கப்பட்ட அவர்களே இப்பொழுது காத்தருள்வாய். உன்னே நமஸ்கரிக்கிருேம்.

தேவி கூறியது—

9.31. தேவர்களே! புத்திமழுங்கிய மகிஷாசுரனிடம் பயத்தை ஒழியுங்கள். வரத்தால் கொழுப்படைந்து மதிமயங்கியிருக்கும் அவனேப் போரில் இப்பொழுதே கொல்லுகிறேன்.

व्यास उवाच—

इत्युक्त्वा सा सुरान् देवी जहासातीव सुस्वरम्।
चित्रमतेच्च संसारे भ्रममोहयुतं जगत् ॥ ९. ३२ ॥

सृष्टिपालनसंहारे समर्था अपि ते यदा।
मुह्यन्ति क्लेशसन्तप्ता महिषेण प्रपीडिताः ॥ ९. ३५ ॥

इति कृत्वा स्मितं देवी साट्टहासं चकार ह।
उच्चैः शब्दं महाघोरं दानवानां भयप्रदम् ॥ ९. ३६ ॥

महिषोऽपि स्वनं श्रुत्वा चुकोप मदगर्वितः।
किमेतदिति तान् दैत्यान् पप्रच्छ स्वनशंकितः ॥ ९. ३९ ॥

வியாஸர் கூறியது—

9.32–36. இங்ஙனம் தேவர்களிடம் கூறிவிட்டு தேவியானவள் 'ஸம்ஸாரத்தில் இது விசித்திரமாயிருக்கிறது. உலகம் மோகத்தினுல் மதி மயக்கத்தையடைந்திருக்கிறது. ஆக்கவும் காக்கவும் அழிக்கவும் சக்தியுள்ளவர்களாயினும் இவர்கள் மகிஷனுல் பீடிக்கப்பட்டு வருத்தத்தால் மெலிந்து மயங்குகிருர்கள்,' என்று கூறிவிட்டு அட்டஹாஸத்துடன் உரக்கச் சிரித்து அசுரர்களை நடுங்க வைக்கும்படி மிகவும் கோரமான சப்தத்தைச் செய்தாள்.

9.39. மகிஷனும் அந்த சப்தத்தைக் கேட்டுக் கொழுப்பின் கர்வத்தால் கோபித்தான். அதைப்பற்றி மனத்தில் சங்கை எழவே அசுரர்களை நோக்கி, 'இது என்ன சப்தம்?' என்று வினவினுன்.

गच्छन्तु त्वरिता दूता ज्ञातुं शब्दसमुद्भवम् ।
कृतः केनायमत्युग्रः शब्दः कर्णव्यथाकरः ॥ ९. ४० ॥

देवो वा दानवो वाऽपि यो भवेत्स्वन-कारकः ।
गृहीत्वा तं दुरात्मानं मत्समीपं नयन्त्विह ॥ ९. ४१ ॥

इत्युक्तास्तेन ते दूता देवीं सर्वांगसुन्दरीम् ।
अष्टादशभुजां दिव्यां सर्वाभरणभूषिताम् ॥ ९. ४६ ॥

सर्वलक्षणसंपन्नां वरायुधधरां शुभाम् ।
दधतीं चषकं हस्ते पिबन्तीं च मुहुर्मधु ॥ ९. ४७ ॥

संवीक्ष्य भयभीतास्ते जग्मुस्त्रस्ता सुशंकिताः ।
सकाशे महिषस्याशु तमूचुः स्वनकारणम् ॥ ९. ४८ ॥

9.40–41. ''தூதர்கள் விரைவில் சென்று இந்த சப்தம் எங்கு உதித்தது என்றும் காதைத் துளைக்கும் இக்கொடிய நாதம் யாரால் செய்யப்பட்டதென்றும் அறிந்து, அதைச் செய்தவன் தேவனாயினும் அசுரனாயினும் அந்த துராத்மாவைப் பிடித்து என் சமீபத்தில் இங்கு கொண்டு வரட்டும்'' என்றான்.

9.46–48. இங்ஙனம் அவனால் கட்டளையிடப்பட்ட தூதர்கள் சென்று பதினெட்டு புஜமுடையவளும், திவ்வியமான ஆபரணங்களெல்லாம் அணிந்தவளும், ஸர்வலக்ஷணங்களும் நிறைந்தவளும், சிறந்த ஆயுதங்களை ஏந்தியவளும், மங்கள வடிவினளும், கையில் பான பாத்திரத்தை வைத்துக் கொண்டு அடிக்கடி குடிப்பவளும், ஆகிய தேவியைக் கண்ணுற்று பயத்தால் நடுநடுங்கிச் சந்தேகம் மேலிட்டவர்களாய் மகிஷனிடம் விரைவில் திரும்பிச் சப்தத்தின் காரணத்தைக் கூறினார்கள்.

दूता ऊचुः—

देवी दैत्येश्वर प्रौढा दृश्यते काचिदंगना।
सर्वांगभूषणा नारी सर्वरत्नोपशोभिता ॥ ९. ४९ ॥

न मानुषी नासुरी सा दिव्यरूपा मनोहरा।
सिंहारूढाऽऽयुधधरा चाष्टदशकरा वरा ॥ ९. ५० ॥

सा नादं कुरुते नारी लक्ष्यते मदगर्विता।
न जाने का वरारोहा कस्य वा सा परिग्रहः ॥ ९. ५२ ॥

किमर्थमागता चात्र किं चिकीर्षति सुन्दरी।
द्रष्टुं नैव समर्थाः स्मस्तत्तेजः परिधर्षिताः ॥ ९. ५३ ॥

தூதர்கள் கூறியது—

9.49–50. அசுரர்கள் நாயகரே! யாரோ ஒரு யௌவனப்பருவமுள்ள ஸ்திரீ காணப்படுகிருள். அவள் எல்லா அங்கங்களிலும் ஆபரணங்கள் அணிந்தவளாய் எல்லா ரத்னங்களாலும் பிரகாசிப்பவளாய் விளங்குகிருள். அவள் மனித ஸ்திரீயுமல்லள், அசுர ஸ்திரீயுமல்லள்; மனதைக் கவரும் தெய்விக ரூபமுடையவள்; தேவஸ்திரீயா யிருக்க வேண்டும். சிறந்த பதினெட்டுக் கைகளுடன் ஆயுதங்களைத் தாங்கியவளாய்ச் சிம்மவாகனத்தில் வீற்றிருக்கிருள்.

9.52. அந்த ஸ்திரீதான் கொழுப்பால் கர்வித்துச் சத்தம் போடுகிருள். அவள் யாரென்றும் யாருடைய மனைவியென்றும் தெரியவில்லை.

9.53. அந்த அழகி எதற்காக வந்துள்ளாள் என்ருே அவள் என்ன விரும்புகிருள் என்ருே அவளுடைய பேரொளியால் பயமடைந்த நாங்கள் கண்டுகொள்ள இயலவில்லை.

महिष उवाच—

गच्छ वीर मयाऽऽदिष्टो मन्त्रिश्रेष्ठ बलान्वितः।
सामादिभिरुपायैस्त्वं समानय शुभाननाम् ॥ ९. ५५ ॥

अहत्वा तां वरारोहां त्वमानय ममान्तिकम्।
करोमि पट्टमहिषीं तां मरालभ्रुवं मुदा ॥ ९. ५७ ॥

रसभंगो यथा न स्यात् तथा कुरु ममेप्सितम्।
श्रवणान्मोहितोऽस्म्यद्य तस्या रूपस्य संपदा ॥ ९. ५८ ॥

व्यास उवाच —

महिषस्य वचः श्रुत्वा पेशलं मन्त्रिसत्तमः।
जगाम तरसा कामं गजाश्वरथसंयुतः ॥ ९. ५९ ॥

மகிஷன் கூறியது—

9.55. வீரனாகிய மந்திரி சிரேஷ்டனே! சேனாபலத்துடன் சென்று ஸாமம் முதலிய உபாயங்களால் அந்த அழகிய முகம் படைத்தவளைக் கூட்டிவாரும்.

9.57. அச்சிறந்த பெண்ணைக் கொல்லாமல் நீர் என் பக்கம் அழைத்துவாரும். நான் மகிழ்ச்சியுடன் அவ்வழகியை என்னுடைய பட்டமகிஷியாக்கிக் கொள்ளுகிறேன்.

9.58. எப்படிச் செய்தால் ரஸபங்கம் ஏற்படாதோ அப்படிச் செய்து என் விருப்பத்தை நீ பூர்த்தி செய்ய வேண்டும். அவளைப்பற்றிக் கேட்ட மாத்திரத்தில் நான் அவளுடைய அழகில் மோகித்துள்ளேன்.

வியாஸர் கூறியது—

9.59. மகிஷனுடைய சாதுர்யமான வார்த்தையைக் கேட்டு மந்திரி சிரேஷ்டன் யானை குதிரை தேர் முதலிய படைகளுடன் விரைவில் புறப்பட்டான்.

गत्वा दूरतरं स्थित्वा तामुवाच मनस्विनीम् ।
विनयावनतः श्लक्ष्णं मन्त्री मधुरया गिरा ॥ ९. ६० ॥

प्रधान-मन्त्री उवाच—

काऽसि त्वं मधुरालापे किमत्रागमनं कृतम् ।
पृच्छति त्वां महाभागे मन्मुखेन मम प्रभुः ॥ ९. ६१ ॥

स जेता सर्वदेवानामवध्यस्तु नरैः किल ।
ब्रह्मणो वरदानेन गर्वितश्चारुलोचने ॥ ९. ६२ ॥

श्रुत्वा त्वां समुपायातां चारुवेषां मनोहराम् ।
द्रष्टुमिच्छति राजा मे महिषो नाम पार्थिवः ॥ ९. ६३ ॥

मानुषं रूपमादाय त्वत्समीपं समेष्यति ।
यथा रुच्येत चार्वंगी तथा मन्यामहे वयम् ॥ ९. ६४ ॥

9.60. அப்படிச் சென்று அம்மந்திரி எட்டி நின்று கொண்டு அப்பெருமாட்டியிடம் வணக்கத்துடன் இனிமையாகப் பின் வருமாறு பேசினன்.

பிரதான மந்திரி கூறியது—

9.61. இன்சொல் பேசுபவளே! நீ யார்? இங்குவந்த காரணம் என்ன? மகாபாக்கியசாலியே! என்னுடைய தலைவர் என் மூலமாக உன்னை இதைப்பற்றி வினவுகிறார்.

9.62. அவர் எல்லா தேவர்களையும் ஜயித்தவர். மானிடர்களால் கொல்ல முடியாதவர். கண்ணழகுபடைத்தவளே! அவர் பிரம்மாவிடமிருந்து பெற்ற வரத்தால் கர்வித்திருப்பவர்.

9.63. மனதைக்கவரும் அழகான வேஷம் பூண்ட உன்னுடைய வரவைப் பற்றிக் கேள்விப்பட்டு மகிஷாசுரன் என நாமம் படைத்த எனது அரசர் உன்னைக் காண விரும்புகிறார்.

9.64. மனித வடிவுகொண்டு உன்னை நாடி அவர் வருவார். அழகிய அங்கங்களைப் படைத்தவளே! உன் விருப்பம் எப்படியோ அப்படி நடந்து கொள்வோம்.

तह्र्येहि मृगशावाक्षि समीपं तस्य धीमतः ।
नोचेदिहानयाम्येनं राजानं भक्तितत्परम् ॥ ९. ६५ ॥

तथा करोमि देवेशि यथा ते मनसेप्सितम् ।
वशगोऽसौ तवात्यर्थं रूपसंश्रयणात्तव ॥ ९. ६७ ॥

करभोरु वदाऽऽशु त्वं संविधेयं मया तथा ॥ ९. ६८ ॥

देव्युवाच—

मन्त्रिवर्य सुराणां वै जननीं विद्धि मां किल ।
महालक्ष्मीमिति ख्यातां सर्वदैत्यनिषूदिनीम् ॥ १०. २ ॥

प्रार्थिताऽहं सुरैः सर्वै-र्महिषस्य वधाय च ।
पीडितै-र्दानवेन्द्रेण यज्ञभागबहिष्कृतैः ॥ १०. ३ ॥

तस्मादिहागताऽस्म्यद्य तद्वधार्थं कृतोद्यमा ।
एकाकिनी न सैन्येन संयुता मन्त्रिसत्तम ॥ १०. ४ ॥

9.65. மான்விழியாளே! அந்த மதிமானுன அவ ரிடம் நீ வரலாம். இல்லையேல் உன்னிடம் பக்திபூண்ட அவ்வரசரை நான் இங்கு அழைத்து வருகிறேன்.

9.67. தேவர்களின் அரசியே! உன் மனதில் எது விருப்பமோ அப்படி நான் செய்கிறேன். உன்னுடைய அழகில் மிகவும் ஈடுபட்டு அவர் உனக்கு முற்றும் வச மாகியவர்.

9.68. யானையின் துதிக்கை போன்ற துடைபடைத் தவளே! விரைவில் பதிலளிப்பாய். நான் அக்கட்டளேப்படி நடக்கிறேன்.

தேவி கூறியது—

10.2. மந்திரி சிரேஷ்டனே! என்னே தேவர்களுடைய தாயாக அறிந்துகொள்; எல்லா அசுரர்களேயும் அழிக்கும் மஹாலக்ஷ்மி எனப்பெயர் பெற்றவள் நான்.

10.3–4. அசுரர்களின் தலைவனுகிய மகிஷனுல் பீடிக் கப்பட்டு யக்ஞபாகங்கள் அபகரிக்கப்பட்டுள்ள தேவர்களனே வராலும் வேண்டிக் கொள்ளப்பட்டவளாய் நான் அந்த மகிஷனேக் கொல்வதற்காக இப்பொழுது இங்கு ஆயத்தமாய் வந்துள்ளேன். மந்திரி சிரேஷ்டனே! நான் சைனியத் துடன் கூடி வரவில்லை; தனியொருத்தியாகவே வந்துள்ளேன்.

व्यास उवाच —

इत्युक्तः स ततो देव्या मन्त्रिश्रेष्ठो बलान्वितः।
प्रत्युवाच निशम्यासौ वचनं हेतुगर्भितम् ॥ १०. १७ ॥

देवि स्त्रीसदृशं वाक्यं ब्रूषे त्वं मदगर्विता।
क्वासौ क्व त्वं कथं युद्ध-मसंभाव्यमिदं किल ॥ १०. १८ ॥

एकाकिनी पुनर्बाला प्रारब्ध-यौवना मृदुः।
स्वामी मे मोहितः श्रुत्वा रूपं ते भुवनातिगम्।
तत् प्रियार्थं प्रियं कामं वक्तव्यं त्वयि यन्मया ॥ १०. २५ ॥

राज्यं तव धनं सर्वं दासस्ते महिषः किल।
कुरु भावं विशालाक्षि त्यक्त्वा रोषमृतिप्रदम् ॥ १०. २६ ॥

வியாஸர் கூறியது—

10.17. இங்ஙனம் தேவியால் கூறப்பெற்றவனும் சேனைபலத்துடன் கூடியவனுமான மந்திரிசிரேஷ்டன் காரணத்துடன் தேவி கூறியதைப்பற்றி யாலோசித்துப் பின்வருமாறு பதிலளித்தான்.

10.18. தேவி! மதத்தால் கர்வங்கொண்டு நீ ஸ்திரீபுத்திக்குத் தகுந்த வகையில் வார்த்தையைப் பேசியுள்ளாய். மகிஷாசுரனாகிய இவன் எங்கே? நீ எங்கே? இவனுடன் யுத்தம் எங்ஙனம்? அது முடியாத காரியம்.

10.25. நீ ஒருத்தி, மேலும் சிறுமி, மங்கைப் பருவத்தில் புகுபவள், மெதுவானவள்; எனது தலைவர் உன்னுடைய ரூபம் இவ்வுலகை மீறியதெனக் கேள்விப்பட்டு உன்னிடம் மோகித்திருக்கிறார். அவருக்குப் பிரியத்தைச் செய்யும் பொருட்டு நான் உன்னிடம் அவருடைய காம வார்த்தைகளைக் கூறுதற்குரியவன்.

10.26. அவருடைய அரசும் பொருளனைத்தும் உன்னுடையவை. அவரும் உனக்கடிமை. பரந்த கண்படைத்தவளே! அழிவைத்தரும் கோபத்தைவிட்டு நல்ல பாவனையைச் செய்வாயாக.

पतामि पादयोस्तेऽहं भक्तिभावेन भामिनि।
पट्टाराज्ञी महाराज्ञो भव शीघ्रं शुचिस्मिते ॥ १०. २७ ॥

देव्युवाच—

पशुबुद्धिस्वभावोऽसि वचनात्तव सांप्रतम्।
मन्त्रिणस्त्वादृशा यस्य स कथं बुद्धिमान् भवेत् ॥ १०. ३० ॥

याचितं मरणं पूर्वं स्त्रिया त्वत्प्रभुणा यथा।
तस्मान्मन्येऽति मूर्खोऽसौ न वीररसवित्तमः ॥ १०. ३३ ॥

कामिन्या मरणं क्लीबरतिदं शूरदुःखदम्।
प्रार्थितं प्रभुणा तेन महिषेणात्मबुद्धिना ॥ १०. ३४ ॥

10.27. புன்முறுவலால் அழகுமிக்கவளே! பக்தி பாவனையுடன் உன் பாதத்தில் நான் விழுகிறேன். மகாராஜருக்குப் பட்டமகிஷியாகச் சீக்கிரமே ஆகிவிடு.

தேவி கூறியது—

10.30. இப்பொழுது நீ கூறிய வார்த்தையால் நீ மிருகபுத்தி படைத்தவனாகிறாய்; எவனுக்கு உன்னைப்போன்ற மந்திரிகள் உள்ளார்களோ அவன் எப்படி புத்திமானாக இருக்க முடியும்?

10.33. உன்னுடைய தலைவனால் முன்பு பிரார்த்திக்கப்பட்டது ஸ்திரீயால் மரணம்; ஆகையால் அவன் மிகவும் முட்டாளாயிருக்க வேண்டும் என்று கருதுகிறேன்; வீரரஸம் படைத்தவனாயிருக்க முடியாது.

10.34. உன் பிரபுவாகிய மகிஷன் தன்னியற்கைக்கு ஒத்தபடி பேடிகளுக்கு மகிழ்ச்சி தருவதும் சூரர்களுக்கு துக்கத்தைத் தருவதுமான வகையில் ஸ்திரீயிடம் மரணத்தை வரமாய்க் கேட்டிருக்கிறான்.

ये मृत्युधर्मिणस्तेषां वरदानेन दर्पिताः।
मरिष्यामो न मन्यन्ते ते मूढा मन्दचेतसः ॥ १०. ४१ ॥

तस्माद्गच्छ नृपं ब्रूहि वचनं मम सत्वरम्।
यदाज्ञापयते भूपस्तत्कर्तव्यं त्वया किल ॥ १०. ४२ ॥

मघवा स्वर्गमाप्नोति देवाः सन्तु हविर्भुजः।
यूयं प्रयात पातालं यदि जीवितुमिच्छथ ॥ १०. ४३ ॥

अन्यथा चेन्मतिर्मन्द महिषस्य दुरात्मनः।
तद्युध्यस्व मया सार्धं मरणाय कृतादरः ॥ १०. ४४ ॥

मन्यसे संगरे भग्ना देवा विष्णुपुरोगमाः।
दैवं हि कारणं तत्र वरदानं प्रजापतेः ॥ १०. ४५ ॥

10.41. எவர்கள் சாகும் இயல்புடையவர்களோ அவர்கள் வரதானத்தால் கொழுப்படைந்து மந்தபுத்தியுடைய மூடர்களாதலால் தாங்கள் மரிப்போம் என்பதை எண்ணுவதில்லை.

10.42. ஆகையால் விரைவில் உனதரசனிடம் சென்று என்னுடைய வார்த்தையைத் தெரிவி. அரசன் என்ன கட்டளையிடுகிருனே அப்படி நீ செய்யலாம்.

10.43. இந்திரன் சுவர்க்கத்தைத் திருப்பிப் பெற வேண்டும். தேவர்கள் யக்ஞபாகங்களைப் புசிப்பவர்களாக வேண்டும். நீங்களெல்லோரும் உயிர்வாழ விரும்பினுல் பாதாளம் செல்லவேண்டும்.

10.44. மந்த புத்தியும் துராத்மாவுமான மகிஷனுடைய எண்ணம் வேறுவிதமாயிருக்குமேயானுல் மரணமடைய நிச்சயித்துக்கொண்டு என்னுடன் கூடப் போர் புரியலாம்.

10.45. ஏற்கெனவே விஷ்ணுவை முன்னிட்டுக்கொண்டு வந்த தேவர்கள் போரில் தோற்று விட்டார்கள் என்று கருதுவாயேயானுல் அதற்குக் காரணம் பிரம்மாவின் வரதானத்தை அடிப்படையாய்க் கொண்ட ஊழ்வினை.

ध्यास उवाच—

इति देव्या वचः श्रुत्वा चिन्तयामास दानवः।
सहसा न मया युद्धं कर्तव्य-मनया सह ॥ १०. ५० ॥

जये पराजये वाऽपि भूपतेरप्रियं भवेत्।
तस्मात्तत्रैव गत्वाऽहं बोधयिष्यामि तं नृपम् ॥ १०. ५१ ॥

इति संचिन्त्य मेधावी जगाम नृपसन्निधौ।
प्रणम्य तमुवाचेदं कृतांजलिरमात्यजः ॥ १०. ५३ ॥

राजन् देवी वरारोहा सिंहस्योपरि संस्थिता।
अष्टादशभुजा रम्या वराऽऽयुधधरा परा ॥ १०. ५४ ॥

सा मयोक्ता महाराज महिषं भज भामिनि।
महिषी भव राज्ञस्त्वं त्रैलोक्याधिपतेः प्रिया ॥ १०. ५५ ॥

வியாஸர் கூறியது—

10.50–51. தேவியின் இவ்வார்த்தையைக் கேட்ட அசுரன் யோசித்து 'இவளுடன் உடனே நான் போர் செய்யக் கூடாது; ஜயித்தாலும் தோற்ருலும் அரசனுக்கு அது விருப் பமாயிராது. ஆகையால் அங்கு சென்று நான் அவரிடம் தெரிவிக்கிறேன்'.

10.53. என்று இங்ஙனம் எண்ணி அந்த புத்திசாலி யான மந்திரி அரசன் முன்னிலேக்குச் சென்று அவனே வணங் கிக் கைகூப்பிக் கொண்டு பின்வருமாறு கூறினுன்.

10.54. 'அரசே! தேவியானவள் சிறந்த சிங்கத்தின் மேல் வீற்றிருப்பவளாய்ப் பதினெட்டு புஜங்களுடன் அழகு மிக்கவளாய்ச் சிறப்பான ஆயுதங்களே ஏந்தியவளாய் விளங்கு கிருள்.

10.55. 'மகாராஜனே! அவளிடம் நான் கூறிய தாவது: 'பெண்ணரசியே! மகிஷாசுரனே நாடி மூவுலகையும் ஆளும் அவருக்குப் பிரியமான பட்டமகிஷியாக நீ விளங்க வேண்டும்.'

इति मद्वचनं श्रुत्वा सा स्मयावेशमोहिता ।
मामुवाच विशालाक्षी स्मितपूर्वमिदं वचः ॥ १०. ५८ ॥

करिष्येऽहं मृधे युद्धं हनिष्ये त्वां सुराप्रियम् ।
गच्छ वा दुष्ट पातालं जीवितेच्छा यदस्ति ते ॥ १०. ६२ ॥

रसभंगं विचिन्त्यैव न युद्धे तु मयाकृतम् ।
आज्ञां विना तवात्यन्तं कथं कुर्यां वृथोद्यमम् ॥ १०. ६४ ॥

साऽतीव बलोन्मत्ता वर्तते भूप भामिनी ।
भवितव्यं न जानामि किं वा भावि भविष्यति ॥ १०. ६५ ॥

महिष उवाच—
गच्छ ताम्र महाभाग युद्धाय कृतनिश्चयः ।
तामानय वरारोहां जित्वा धर्मेण मानिनीम् ॥ ११. ४५ ॥

10.58. 'இந்த என் வார்த்தையைக் கேட்டு கர்வத்தால் மதிமயங்கியவளும் விசாலமான கண்படைத்தவளுமான அவள் புன்சிரிப்புடன் என்னை நோக்கிப் பின்வரும் வார்த்தையைக் கூறினள்.

10.62. 'நான் போர் புரிந்து தேவர்களின் சத்துருவான உன்னைக் கொல்லப் போகிறேன். அல்லது, துஷ்டனே, உயிருடன் இருக்க நீ விரும்பினல் பாதாளம் செல்.'

10.64. 'காமரஸத்திற்கு இழிவு ஏற்படக்கூடாதென்று கருதி நான் அவளுடன் போர் புரியவில்லை. மேலும் உங்களுடைய கட்டளையில்லாமல் நான் எங்ஙனம் போரைத் தொடங்க இயலும்?

10.65. 'அரசே! அப்பெண் பலத்தால் மிகவும் கர்வத்துடன் இருக்கிருள். என்ன நிகழுமோ தெரியவில்லை. நிகழ்வது நிகழ்ந்தே தீரும்.'

மகிஷாசுரன் கூறியது—

11.45. பெருமை மிக்க தாமிரனே! போர்புரிய நிச்சயம் செய்து கொண்டு சென்று மதிப்பிற்குரிய அப்பெண்ணை தர்மவழியில் ஜயித்து என்னிடம் கொண்டு வா.

न भवेद्वशगा नारी संग्रामे यदि सा तव।
हन्तव्या नान्यथा कामं माननीया प्रयत्नतः ॥ ११.४६ ॥

कातरत्वं न कर्तव्यं निर्दयत्वं तथा न च।
यादृशं हि मनस्तस्याः कर्तव्यं तादृशं त्वया ॥ ११.५१ ॥

व्यास उवाच—

इति तद्भाषितं श्रुत्वा ताम्रः कालवशं गतः।
निर्गतः सैन्यसंयुक्तः प्रणम्य महिषं नृपम् ॥ ११.५२ ॥

स गत्वा तां समालोक्य देवीं सिंहोपरि स्थिताम्।
स्तूयमानां सुरैः सर्वैः सर्वायुधविभूषिताम् ॥ ११.५४ ॥

तामुवाच विनीतः सन् वाक्यं मधुरया गिरा।
सामभावं समाश्रित्य विनयावनतः स्थितः ॥ ११.५५ ॥

11.46. அப்பெண் போரில் உன் வசமாகாவிட்டால் அவளைக் கொல்லாமலும் அவமதிக்காமலும் எப்படியாவது வேறு பிரயத்னம் செய்ய வேண்டும்.

11.51. தயையற்றதும் பயமுறுத்துவதுமான எதையும் செய்யாமல் அவளுடைய மனப்போக்கு எத்தகையதென்றுணர்ந்து அதற்குத் தகுந்த செயல் உன்னால் செய்யப்பட வேண்டும்.

வியாஸர் கூறியது—

11.52. அவ்வார்த்தையைக் கேட்ட தாமிரன் காலனுக்கு வசப்பட்டவனாய்த் தன் அரசனாகிய மகிஷனை வணங்கி விட்டுச் சைனியத்துடன் புறப்பட்டான்.

11.54–55. தேவியை நாடிச் சென்று சிங்கத்தின்மேல் எழுந்தருளியிருந்த அவளைக் கண்ணுற்று அவள் எல்லா ஆயுதங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருப்பதையும் தேவர்களனைவராலும் துதிக்கப்படுவதையும் கண்டு அவளை யணுகிச் சமாதானத்துடனும் வணக்கத்துடனும் அவள் முன் நின்று கொண்டு பின்வருமாறு இனிய சொற்களால் பேசலானான்.

संसारे दुःखदं युद्धं न कर्तव्यं विजानता।
लोभासक्ताः प्रकुर्वन्ति संग्रामं च परस्परम् ॥ ११. ६१ ॥

तस्मात्त्वमपि तन्वंगि प्रसादं कर्तुमर्हसि।
भर्तारं भज मे नाथं देवदानवपूजितम् ॥ ११. ६३ ॥

स तेऽत्र वांछितं सर्वं करिष्यति मनोरथम्।
त्वं पट्टमहिषी राज्ञः सर्वथा नाऽत्र संशयः ॥ ११. ६४ ॥

तन्निशम्य वचस्तस्य ताम्रस्य जगदम्बिका।
मेघगम्भीरया वाचा हसन्ती तमुवाच ह ॥ १२. १ ॥

देव्युवाच—

गच्छ ताम्र पतिं ब्रूहि मुमूर्षुं मन्दचेतसम्।
नाहं पति-परा नारी वर्तते मे पतिः प्रभुः ॥ १२. ६ ॥

11.61. 'இப்பிறவிச் சுழலில் போர் துன்பத்தை விளைப்பது; அறிவாளி அதில் பிரவேசிக்கக் கூடாது; பேராசையால் ஒருவருடன் ஒருவர் போர் புரிகின்றனர்.

11.63. 'ஆகையால் மென்மையான உடல் படைத்த நீ அருள் புரிதல் வேண்டும். தேவர்களாலும் அசுரர்களாலும் பூஜிக்கப்பெற்றவரான எனது தலைவரை நீ நாயகராக ஏற்றுக்கொள்.

11.64. 'அவர் உன் மனதிலெழும் விருப்பங்களையெல்லாம் பூர்த்தி செய்வார். நீ அவ்வரசருடைய பட்டமகிஷியாவாய். இதில் சந்தேகமில்லை.'

12.1. அந்தத் தாமிரனுடைய அவ்வார்த்தையைக் கேட்டு ஜகதம்பிகை மேகம் போல் கம்பீரமான குரலில் சிரித்துக் கொண்டே அவனிடம் பின்வருமாறு கூறினாள்.

தேவி கூறியது—

12.6. தாமிரனே! புத்திமழுங்கியவனும் மரணத்தை விரும்புபவனும் ஆகிய உன் தலைவனிடம் திரும்பிப் போய் நான் நாயகனை நாடுபவளல்லள், எனக்குப் பிரபுவான என் பதி இருக்கிறார் என்று தெரிவி.

सर्वकर्ता सर्वसाक्षी ह्यकर्ता निःस्पृहः स्थिरः।
निर्गुणो निर्ममोऽनन्तो निरालम्बो निराश्रयः ॥ १२. ७ ॥

सर्वज्ञः सर्वगः साक्षी पूर्णः पूर्णाशयः शिवः!
सर्वावासक्षमः शान्तः सर्वदृक् सर्वभावनः ॥ १२. ८ ॥

तं त्यक्त्वा महिषं मन्दं कथं सेवितु-मुत्सहे।
प्रवुध्य युध्यतां कामं करोमि यमवाहनम् ॥ १२. ९. ॥

व्यास उवाच—

इत्युक्त्वा सा तदा देवी जगर्ज भृशमद्भुतम्।
कल्पान्तसदृशं नादं चक्रे दैत्यभयावहम् ॥ १२. १४ ॥

12.7. அவர் அனைத்திற்கும் கர்த்தா, அனைத்திற்கும் சாக்ஷி எனினும் எதையும் செய்யாதவர், பற்றற்றவர், நிலையானவர், குணங்களைக் கடந்தவர், மமகாரமில்லாதவர், முடிவற்றவர், பிடிப்பற்றவர், ஆசிரயமற்றவர்;

12.8. எல்லாமறிந்தவர், எங்கும் செல்பவர், எல்லாவற்றையும் பார்ப்பவர், பரிபூர்ணர், எண்ணங்கள் நிறைவேறப் பெற்றவர், மங்கள வடிவினர், எங்கும் நிறைந்திருக்கும் திறமை வாய்ந்தவர், அமைதி நிறைந்தவர். யாவர்க்கும் கண்ணும் எல்லோரையும் தோற்றுவிப்பவராயும் வளர்ப்பவராயும் உள்ளவர்.

12.9. அவரைவிட்டு மந்தனாகிய மகிஷனைச் சேவிப்பதற்கு நான் எங்ஙனம் இசைவேன்? அவன் எழுந்து இஷ்டப்படி யுத்தம் செய்யட்டும். அவனை யமனுக்கு (இன்னொரு) வாகனமாய்ச் செய்கிறேன்.

வியாஸர் கூறியது—

12.14. இங்ஙனம் கூறிவிட்டு அந்த தேவியானவள் அற்புதமாய் கர்ஜனை செய்தாள். அந்த சப்தம் கல்பத்தின் முடிவைப் போல் முழங்கி அசுரர்களுக்கு பயத்தை விளைவித்தது.

ताम्रः श्रुत्वा च तं शब्दं भयत्रस्तमनास्तदा ।
पलायनं ततः कृत्वा जगाम महिषान्तिकम् ॥ १२. १६ ॥

ताम्रं समागतं दृष्ट्वा हयारिरपि मोहितः ।
चिन्तयामास सचिवैः किं कर्तव्यमतः परम् ॥ १२. १९ ॥

दुर्मुख उवाच—

राजन् युद्धे जयो नोऽद्य भविता वेद्म्यहं किल ।
पलायनं न कर्तव्यं यशोहानिकरं नृणाम् ॥ १२. ४० ॥

इन्द्रादीनां संयुगेऽपि न कृतं यज्जुगुप्सितम् ।
एकाकिनीं स्त्रियं प्राप्य को हि कुर्यात्पलायनम् ॥ १२. ४१ ॥

तस्माद्युद्धं प्रकर्तव्यं मरणं वा रणे जयः ।
यद्भावि तद्भवत्येव काऽत्र चिन्ता विपश्यतः ॥ १२. ४२ ॥

12.16. தாமிரன் அந்த சப்தத்தைக் கேட்டு பயத்தால் நடுங்கிய மனத்துடன் அவ்விடம் விட்டோடி மகிஷனுடைய அருகாமையை அடைந்தான்.

12.19. திரும்பி வந்த தாமிரனைப் பார்த்து மகிஷனும் மதிகலங்கி மேலே என்ன செய்யத்தக்கதென்று மந்திரிமார்களுடன் ஆலோசித்தான்.

துர்முகன் கூறியது—

12.40. அரசே! போரில் நமக்கு வெற்றி கிடைக்காது என்பதை நான் உணர்கிறேன். என்றாலும் பின்வாங்கக் கூடாது. அது கீர்த்தியை அழித்துவிடும்.

12.41. இந்திரன் முதலியவர்களுடன் செய்த போரிலும் பின்வாங்குதல் என்ற எந்த இழிவான காரியத்தைச் செய்யவில்லையோ அதை ஒருத்தியாயுள்ள பெண் பிள்ளையை யடைந்து எவன் செய்வான்?

12.42. ஆகையால் யுத்தத்தில் வெற்றி வந்தாலும் மரணம் வந்தாலும் யுத்தத்தைத்தான் செய்ய வேண்டும். எது வரவேண்டுமோ அது வந்தே தீரும். உண்மையைக் காண்பவனுக்கு அவ்விஷயத்தில் ஏன் கவலே?

பாஷ்கல உவாச—

उत्साहस्तु प्रकर्तव्यः स्थायीभावो रसस्य च।
भयानको भवेद्वैरी वीरस्य नृपसत्तम ॥ १२. ४७ ॥
तस्मात् त्यक्त्वा भयं भूप करिष्ये युद्धमुत्तमम्।
नयिष्यामि नरेन्द्राहं चण्डिकां यमसादनम् ॥ १२. ४८ ॥

வ்யாஸ உவாச—

इत्युक्त्वा तौ महाबाहू दैत्यौ बाष्कलदुर्मुखौ।
जग्मुर्मदविग्धांगौ सर्वशस्त्रास्त्रकोविदौ ॥ १३. १ ॥
बाष्कलोऽपि गदां गृह्य देवीं हन्तुमुपाययौ।
आगच्छन्तं गदापाणिं दानवं मदगर्वितम् ॥
चण्डिका स्वगदापातैः पातयामास भूतले ॥ १३. २३ ॥

பாஷ்கலன் கூறியது—

12.47. அரசசிரேஷ்டரே! வீரரணத்திற்கு உச்ச நிலையாகிய உற்சாகத்தைக் கைக்கொள்ள வேண்டும். 'பயானகம்' எனப்படும் பீதிரஸம் வருமேயானல் அதுவே வீரனுக்குச் சத்துருவாய் விடும்.

12.48. அரசே! ஆகையால் பயத்தைவிட்டுச் சிறந்த வகையில் போர் புரிகிறேன். அரசசிரேஷ்டரே! நான் அந்தச் சண்டிகையை யமாலயத்திற்கு அனுப்புகிறேன்.

வியாஸர் கூறியது—

13.1. இங்ஙனம் கூறிவிட்டுப் பெருந்தோள்படைத்தவர்களும் கொழுப்பேறிய அங்கங்களுடையவர்களும் சஸ்திரப் பயிற்சியிலும் அஸ்திரப் பயிற்சியிலும் தேர்ந்தவர்களும் ஆகிய பாஷ்கலன் துர்முகன் என்ற இரு அசுரர்கள் தேவியை நோக்கிச் சென்றனர்.

13.23. பாஷ்கலன் கதாயுதத்தைக் தூக்கிக்கொண்டு தேவியைக் கொல்ல முன் சென்ருன். கொழுப்பால் கர்வித்துக் கையில் கதையுடன் வரும் அந்த அசுரனைச் சண்டிகை தன் கதையாலடித்து பூமியில் வீழ்த்தினுள்.

वाष्कलः पतितो भूमौ मुहूर्तादुत्थितः पुनः ।
चिक्षेप च गदां सोऽपि चण्डिकां चण्डविक्रमः ॥ १३. २४ ॥

तमागच्छन्त-मालोक्य देवी शूलेन वक्षसि ।
जघान वाष्कलं क्रुद्धा पपात च ममार सः ॥ १३. २५ ॥

पतिते वाष्कलं सैन्यं भग्नं तस्य दुरात्मनः ।
जयेति च मुदा देवाश्चुक्रुशु-र्गगने स्थिताः ॥ १३. २६ ॥

तस्मिश्च निहते दैत्ये दुर्मुखोऽतिबलान्वितः ।
आजगाम रणे देवीं क्रोधसंरक्तलोचनः ॥ १३. २७ ॥

तिष्ट तिष्टऽवले सोऽपि भाषमाणः पुनः पुनः ।
धनुर्बाणधरः श्रीमान् रथस्थः कवचावृतः ॥ १३. २८ ॥

13.24. பாஷ்கலன் சிறிது நேரத்தில் பூமியிலிருந்து எழுந்து கோபத்துடன் சண்டிகையின் மேல் கதையை மீண்டும் எறிந்தான்.

13.25. அதைக் கண்ட தேவியானவள் கோபித்து பாஷ்கலனை மார்பில் சூலத்தால் அடித்து வீழ்த்தவே அவன் இறந்தான்.

13.26. பாஷ்கலன் விழ்ந்ததும் அந்த துராத்மாவின் சைனியம் சிதறிப்போயிற்று. ஆகாயத்திலிருந்து கொண்டு தேவர்கள் மகிழ்ச்சியுடன் ஜயகோஷம் செய்தனர்.

13.27. அவ்வசுரன் இறந்ததும் மிகுந்த பலசாலியான துர்முகன் கோபத்தால் சிவந்த கண்களுடன் போர்க்களத்தில் தேவியை எதிர்த்து வந்தான்.

13.28. 'வலிமையற்ற பெண்ணே! நில், நில்' என்று அடிக்கடி கூவிக்கொண்டு வில்லையும் அம்பையும் தாங்கிக்கொண்டு கவசம் பூண்டு தேரின் மேல் ஏறிக் கொண்டு அந்தச் சீமான் வந்தான்.

तयोः परस्परं युद्धं बभूव तुमुलं नृप।
बाण-शक्तिगदाघात-मुसलैस्तोमरैस्तथा ॥ १३. ३१ ॥

देवी चिच्छेद तरसा धनुस्तस्य करस्थितम्।
तथैव पंचभिर्बाणैर्बभंज रथमुत्तमम् ॥ १३. ४४ ॥

रथे भग्ने महाबाहु: पदाति-र्दुर्मुखस्तदा।
गदां गृहीत्वा दुर्धर्षां जगाम चण्डिकां प्रति ॥ १३. ४५ ॥

चकार स गदाघातं सिंहमौलौ महाबलात्।
न चचाल हरिः स्थानात्ताडितोऽपि महाबल: ॥ १३. ४६ ॥

अम्बिका तं समालोक्य गदापाणिं पुरः स्थितम्।
खड्गेन शितधारेण शिरश्चिच्छेद मौलिमत् ॥ १३. ४७ ॥

13.31. அரசே! அவர்களிடையில் பாணம், சக்தி, கதை, முஸலம், தோமரம் முதலிய ஆயுதங்களின் தாக்குதலுடன் கடும்போர் மூண்டது.

13.44. தேவியானவள் விரைவில் அவன் கையிலிருந்த வில்லே ஒடித்தாள். அவ்வாறே ஐந்து பாணங்களால் அவனுடைய சிறந்த தேரை உடைத்தாள்.

13.45. தேர் உடைந்ததும் பெருந்தோள் படைத்த துர்முகன் கையில் கொடிய கதாயுதத்தைத் தூக்கிக்கொண்டு கால் நடையாகச் சண்டிகையை நோக்கிச் சென்முன்.

13.46. சிங்கத்தின் தலேயில் தன் முழு பலத்துடன் அவன் அடித்தும் பலம் மிகுந்த சிங்கம் இடம் விட்டு அசையவில்லே.

13.47. கதையுடன் தன்னெதிரில் நின்ற அவ்வசுரனேப் பார்த்து அம்பிகை கிரீடமணிந்த அவன் தலேயைக் கூரிய வாளால் வெட்டி வீழ்த்தினுள்.

छिन्ने च मस्तके भूमौ पपात दुर्मुखो मृतः ।
जय शब्दं तदा चक्रु-र्मुदिता निर्जरा भृशम् ॥ १३. ४८ ॥

दुर्मुखं निहतं श्रुत्वा महिषः क्रोधमूर्च्छितः ।
उवाच दानवान् सर्वान् किं जातमिति चासकृत् ॥ १४. १ ॥

निहतौ दानवौ शूरौ रणे दुर्मुखबाष्कलौ ।
तन्व्या तत्परमाश्चर्यं पश्यन्तु दैवचेष्टितम् ॥ १४. २ ॥

कालो हि बलवान् कर्ता सततं सुखदुःखयोः ।
नराणां परतन्त्राणां पुण्यपापानुयोगतः ॥ १४. ३ ॥

निहतौ दानवश्रेष्टौ किं कर्तव्य-मतः परम् ।
ब्रुवन्तु मिलिताः सर्वे यदुक्तं कार्यसंकटे ॥ १४. ४ ॥

13.48. தலை வெட்டப்பட்டதும் துர்முகன் உயிரிழந்து பூமியில் சாய்ந்தான். தேவர்கள் மகிழ்ச்சி பொங்க ஜய கோஷம் செய்தனர்.

14.1. துர்முகன் கொல்லப்பட்டான் என்று கேள்விப் பட்ட மஹிஷாசுரன் கோப வெறியுடன் தானவர்களை யெல் லாம் விளித்து 'என்ன நிகழ்ந்தது? என்ன நிகழ்ந்தது?' எனப் பலமுறை வினவினான்.

14.2. 'சூரர்களான துர்முகன் பாஷ்கலன் என்ற தானவர்களிருவரும் ஒரு மென்மையான உடல் படைத்த பெண்ணால் போரில் கொல்லப்பட்டனர் என்ற இந்தப் பரம ஆச்சரியத்தைப் பாருங்கள். இது தெய்வச் செயல்.

14.3. 'பரதந்திரர்களும் புண்ணிய பாவத்தின் வசப் பட்டவர்களுமான மனிதர்களின் சுகத்திற்கும் துக்கத் திற்கும் காரணமாவது வலிமை மிக்க காலமே.

14.4. 'தானவசிரேஷ்டர்கள் கொன்று வீழ்த்தப்பட்ட பின் இனி மேற்கொண்டு செய்ய வேண்டியது என்ன? காரியத்தில் சங்கடம் ஏற்பட்டுள்ள இந்நிலையில் எது பொருத்தம் என்று இங்கு கூடியுள்ள எல்லோரும் கூறட்டும்.'

एवं ब्रुवति राजेन्द्र महिषेऽतिबलान्विते।
चिक्षुराख्यस्तु सेनानीस्तमुवाच महारथः ॥ १४. ५ ॥

राजन्नहं हनिष्यामि का चिन्ता स्त्रीविहिंसने।
इत्युक्त्वा स्वबलैर्युक्तः प्रययौ रथसंयुतः ॥ १४. ६ ॥

द्वितीयं पार्ष्णिरक्षं तु कृत्वा ताम्रं महाबलम्।
महता सैन्यघोषेण पूरयन् गगनं दिशः ॥ १४. ७ ॥

युद्धं परस्परं तत्र बभूव विस्मयप्रदम्।
गदया घातयामास तं रथाज्जगदम्बिका ॥ १४. ३२ ॥

तं तथा मूर्च्छितं दृष्ट्वा ताम्रः परबलार्दनः।
आजगाम रणे योद्धुं चण्डिकां प्रति चापलात् ॥ १४. ३४ ।

14.5. அரசசிரேஷ்டரே! இவ்வாறு மிகுந்த பலவானுன மஹிஷன் கூறியபொழுது மகாரதனுன சிக்ஷுரன் என்ற சேனுபதி பின்வருமாறு அவனிடம் பதிலளித்தான்.

14.6. 'அரசே! ஒரு ஸ்திரீயைக் கொல்வதில் என்ன கவலே? நான் அவளேக் கொல்லுகிறேன்' என்று கூறிவிட்டுத் தேரில் ஏறிக்கொண்டு தன் சேனுபலத்துடன் கிளம்பினுன்.

14.7. பக்கத்தில் காப்பதற்கு மகாபலசாலியான தாமிரனேத் தனக்கு இரண்டாமவனுக அமைத்துக்கொண்டு ஆகாயத்தையும் திசைகளேயும் பெரிய சைனியத்தில் ஆரவாரத்தால் நிரப்பிக்கொண்டு சென்றுன்.

14.33. தேவிக்கும் அசுர சேனேக்கும் ஆச்சரியகரமான போர் நிகழ்ந்தது. ஜகதம்பிகை தேரிலிருந்து கொண்டு கதாயுதத்தால் சிக்ஷுரனே அடித்தாள்.

14.34. அதனுல் அவன் மூர்ச்சையடைந்ததைப் பார்த்த தாமிரன் எதிரிகளேப் பீடிப்பவனுய்ச் சண்டிகா தேவியுடன் போர் புரியும் நோக்கத்துடன் முன் வந்தான்.

चिक्षुराख्योऽपि बलवान्मूर्च्छां त्यक्त्वोत्थितः पुनः।
गृहीत्वा सशरं चापं तस्थौ तत्सम्मुखः क्षणात् ॥ १४.४२ ॥

चिक्षुराख्यश्च ताम्रश्च द्वावप्यतिबलोत्कटौ।
युयुधाते महावीरौ सह देव्या रणांगणे ॥ १४.४३ ॥

ताम्रो मुसलमादाय लोहजं दारुणं दृढम्।
जघान मस्तके सिंहं जहास च ननर्द च ॥ १४.४८ ॥

नर्दमानं तदा तं तु दृष्ट्वा देवी रुषान्विता।
खड्गेन शितधारेण शिरश्चिच्छेद सत्वरा ॥ १४.४९ ॥

पतितं ताम्रमालोक्य चिक्षुराख्यो महाबलः।
खड्गमादाय तरसा दुद्राव चण्डिकां प्रति ॥ १४.५१ ॥

14.42. பலவானுகிய சிக்ஷுரனும் மூர்ச்சையிலிருந்து ஒரு நொடியில் எழுந்து மீண்டும் வில்லையும் அம்பையும் எடுத்துக்கொண்டு தேவியை எதிர்த்தான்.

14.43. சிக்ஷுரனும் தாமிரனும் இருவருமே மிகவும் அதிகமான பலம் படைத்தவர்கள்; மகா வீரர்களாகிய அவர்கள் போர்க்களத்தில் தேவியுடன் யுத்தம் செய்தனர்.

14.48. தாமிரன் திடமான கொடியதொரு இரும்பு உலக்கையை எடுத்துக்கொண்டு சிங்கத்தின் தலையில் அடித்து விட்டு உரக்கச் சிரித்து நர்த்தனம் செய்தான்.

14.49. நர்த்தனம் செய்யும் அவனைக் கண்ணுற்ற தேவி கோபங்கொண்டு கூரிய வாளால் விரைவில் அவனுடைய தலையை வெட்டினுள்.

14.51. தாமிரன் விழுந்ததைப் பார்த்த மகாபலசாலியான சிக்ஷுரன் வாளை உருவிக்கொண்டு சண்டிகையை நோக்கி விரைவாக ஓடினுன்.

भगवत्यपि तं दृष्ट्वा खड्गपाणि-मुपागतम् ।
दानवं पंचभिर्बाणै-र्जघान तरसा रणे ।। १४. ५२ ।।

एकेन पतितं खड्गं द्वितोयेन तु तत्करः ।
कण्ठाच्च मस्तकं तस्य कृन्तितं चापरैः शरैः ।। १४. ५३ ।।

एवं तौ निहतौ क्रूरौ राक्षसौ रणदुर्मदौ ।
भग्नं सैन्यं तयोस्तूर्णं दिक्षु सन्त्रस्त-मानसम् ।। १४. ५४ ।।

देवाश्च मुदिताः सर्वे दृष्ट्वा तौ निहतौ रणे ।
पुष्पवृष्टिं मुदा चक्रु-र्जयशब्दं नभः स्थिताः ।। १४. ५५ ।।

14.52. கையில் வாளுடன் நெருங்கும் அந்த அசுரனைப் பார்த்து தேவியானவள் போரில் ஐந்து பாணங்களால் அவனை அடித்தாள்.

14.53. ஒரு பாணத்தால் அவனுடைய வாள் விழுந்தது; இரண்டாவதால் அவனுடைய கை வெட்டப் பட்டது; மற்ற பாணங்களால் அவனுடைய தலையானது கழுத்திலிருந்து துண்டிக்கப்பட்டது.

14.54. இவ்வாறு போர் வெறிகொண்ட அக்கொடிய அசுரர்களிருவரும் கொல்லப்பட்டனர். அவர்களுடைய சைனியமும் பயத்தினுல் விரைவில் நாற்புறமும் சிதறடிக்கப் பட்டன.

14.55. அவர்கள் போரில் கொல்லப்பட்டதைப் பார்த்த தேவர்கள் மகிழ்ச்சியினுல் பூமாரி பொழிந்து ஆகா யத்திலிருந்து கொண்டு ஜயகோஷம் செய்தனர்.

तौ तया निहतौ श्रुत्वा महिषो विस्मयान्वितः ।
प्रेषयामास दैतेयांस्तद्वधार्थं महाबलान् ।। १५. १ ।।

असिलोमा-विडालाख्य-प्रमुखान्युद्धदुर्मदान् ।
सैन्येन महता युक्तान् सायुधान् सपरिच्छदान् ।। १५. २ ।।

प्रथमं तु बिडालाख्यः सप्तबाणान् मुमोच ह ।
असिलोमा स्थितो दूरे प्रेक्षकः परमास्त्रवित् ।। १५. ३६ ।।

चिच्छेद तांस्तथा प्राप्तानम्बिका स्वशरैः शरान् ।
विडालाख्यं त्रिभिर्बाणै-र्जघान च शिलाशितैः ।। १५. ३७ ।।

मूर्च्छितोऽथ ममाराशु दानवो दैवयोगतः ।
असिलोमा धनुष्पाणिः संस्थितो युद्धतत्परः ।। १५. ३९ ।।

15.1–2. அவ்வசுரர்கள் தேவியால் கொல்லப்பட்டதைக் கேள்வியுற்று மஹிஷாசுரன் ஆச்சரியம் மேலிட்டவனாய் அவளைக் கொல்வதற்கு மகாபலம் பொருந்திய அஸிலோமன், பிடாலன் எனப் பெயர்பெற்றவர்களும், போர் வெறி கொண்டவர்களுமான அசுரசிரேஷ்டர்களைப் பெரிய சைனியத்துடனும் ஆயுதங்களுடனும் தளவாடங்களுடனும் அனுப்பிவைத்தான்.

15.36. முதலில் பிடாலன் ஏழு பாணங்களை ஏவினான். அஸ்திர வித்தையில் சிறந்த அஸிலோமா தூரத்தில் இருந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

15.37. தேவி பிடாலனுடைய பாணங்களைத் தன்னுடைய பாணங்களால் நாசம் செய்தாள். பின்பு பிடாலனை கூரான மூன்று பாணங்களாலடித்தாள்.

15.39. அவன் மூர்ச்சித்து விழ்ந்து தெய்வவசமாய் விரைவில் இறந்தும் போனான். அஸிலோமா வில்லுங் கையுமாக யுத்தத்திற்கு ஆயத்தமானான்.

ऊर्ध्वं सव्यं करं कृत्वा तामुवाच मितं वचः।
देवि जानामि मरणं दानवानां दुरात्मनाम् ॥ १५. ४० ॥

तथाऽपि युद्धं कर्तव्यं पराधीनेन वै मया।
महिषो मन्दबुद्धिश्च न जानाति प्रियाप्रिये ॥ १५. ४१ ॥

तदग्रे नैव वक्तव्यं हितं चैवाप्रियं मया।
मर्तव्यं वीरधर्मेण शुभं वाऽप्यशुभं भवेत् ॥ १५. ४२ ॥
इत्युक्त्वा शरवृष्टिं स चकार दानवोत्तमः।

देवी चिच्छेद तान् बाणै-रप्राप्तांस्तु निजान्तिके ॥ १५. ४४।
असिलोमा गदां गुर्वीं लौहीमुद्यम्य वेगतः।
दुद्राव चण्डिकां कोपात्सिंहं मूर्ध्नि जघान ह ॥ १५. ४७ ॥

15.40–41. இடதுகையை உயரத் தூக்கிக்கொண்டு தேவியை நோக்கிச் சுருக்கமாய்ச் சில வார்த்தைகளைச் சொன்னான். 'தேவி! துராத்மாக்களாகிய அசுரர்களின் மரணம் நிச்சயமென்பதை நான் அறிவேன். என்றாலும் நான் பிறனை அண்டியிருப்பதால் யுத்தம் செய்ய வேண்டியவனாயிருக்கிறேன். மகிஷன் மந்த புத்தி படைத்தவன். நல்லதும் கெட்டதும் தெரியாதவன்.

15.42. 'அவன் முன்னிலையில் அவனுக்கு நன்மை பயக்கும் வார்த்தைகளை நான் சொல்லுவதை அவன் விரும்பமாட்டானாகையால் சொல்ல இயலாது.'

15.44. என்றிவ்வாறு கூறிவிட்டு அந்த அசுர சிரேஷ்டன் பாணங்களைப் பொழியலானான். அந்த பாணங்கள் தன்னை அணுகுமுன் தேவி அவைகளைத் தன் பாணங்களால் அழித்தாள்.

15.47. அஸிலோமா பெரிய இரும்பு கதையை வேகமாய்த் தூக்கிக் கொண்டு சண்டிகையை நோக்கிப் பாய்ந்து கோபத்துடன் சிங்கத்தின் தலையிலடித்தான்.

सिंहोऽपि नखराघातैस्तं ददार भुजान्तरे।
अगणय्य गदाघातं कृतं तेन बलीयसा ।। १५. ४८ ।।

उत्पत्य तरसा दैत्यो गदापाणिः सुदारुणः।
सिंहमूर्ध्नि समारुह्य जघान जगदम्बिकाम् ।। १५. ४९ ।।

कृतं तेन प्रहारं तु वंचयित्वा विशांपते।
खड्गेन शितधारेण शिरश्चिच्छेद कण्ठतः ।। १५. ५० ।।

जय देवीति देवास्तां तुष्टुवु-र्जगदम्बिकाम्।
देव दुन्दुभयो नेदु-र्जगुश्च नृप किन्नराः ।। १५. ५२ ।।

भग्नाः केचिद्गता मन्दा महिषं प्रति दुःखिताः।
चक्रुशू रुरुदुश्चैव त्राहि त्राहीति भाषणैः ।। १५. ५४ ।।

15.48. வலிமிகுந்த அவனுடைய கதையால் தாக்கப் பட்டதைப் பொருட்படுத்தாமல் சிங்கம் அவனுடைய மார்பில் அவனை நகங்களால் கிழித்தது.

15.49. மீண்டும் அவ்வசுரன் விரைவில் கையில் கதை யுடன் எழுந்து பயங்கரமாகச் சிங்கத்தின் மேல் குதித்து அம்பிகையைத் தாக்கினான்.

15.50. அரசே! தேவியானவள் அவனுடைய தாக் குதல் தன் மேல் படாமல் ஏமாற்றிக் கூரிய வாளால் அவன் தலையைக் கழுத்திலிருந்து துண்டித்தாள்.

15.52. அரசே! உலகமாதாவாகிய அவளை தேவர்கள் ஜயகோஷத்துடன் துதித்தனர். தேவதுந்துபிகள் முழங்கின. கின்னரர்கள் கீதம் பாடினர்.

15.54. போரில் அடிபட்டு மீண்ட சில மூடர்கள் துக்கத்துடன் மகிஷாசுரனிடம் சென்று 'எங்களைக் காப் பாற்றுங்கள், காப்பாற்றுங்கள்' என்று முறையிட்டுக் கொண்டு கூக்குரலிட்டுக் கதறினர்.

असिलोमबिडालाख्यौ निहतौ नृपसत्तम ।
अन्ये ये सैनिका राजन् सिंहेन भक्षिताश्च ते ।। १५. ५६ ।।

एवं ब्रुवन्तो राजानं तदा चक्रुश्च वैशसम् ।
तच्छ्रुत्वा वचनं तेषां महिषो दुर्मनस्तदा ।

बभूव चिन्ताकुलितो विमना दुःखसंयुतः ।। १५. ५७ ।।
त्यक्त्वा तन्माहिषं रूपं बभूव पुरुषः शुभः ।

सर्वायुधधरः श्रीमांश्चारुभूषणभूषितः ।
सेनापरिवृतो देवीं जगाम मदगर्वितः ।। १६. ९ ।।

समीपमेत्य देव्यास्तु तामुवाच हसन्निव ।
दयां कुरु विशालाक्षि तप्तोऽस्मि काममार्गणैः ।। १६. ३२ ।।

15.56. 'அரசசிரேஷ்டரே! அஸிலோமாவும் பிடாலனும் கொல்லப்பட்டனர். மீதியிருந்த சைனியம் சிங்கத்தால் கொன்று தின்னப்பட்டது.'

15.57. என்றிவ்வாறு கூறி அவர்கள் கஷ்டத்தைத் தெரிவித்ததைக் கேட்டு மகிஷாசுரன் மனமுடைந்து கவலை மிக்கவனாய் ஒன்றுந் தோன்றாதவனாய்த் துக்கத்திலாழ்ந்தான்.

16.9. பிறகு தன்னுடைய எருமை உருவத்தை விட்டு விட்டு அவன் அழகான புருஷ ரூபத்தை எடுத்துக்கொண்டு எல்லா ஆயுதங்களையும் ஆபரணங்களையும் தரித்துக்கொண்டு சேனை புடைசூழ மதக்கொழுப்புடன் தேவியை நோக்கிச் சென்றான்.

16.32. தேவியை அணுகியதும் சிரிப்பவன் போன்ற பாவனையுடன் அவளைப் பார்த்து 'விசாலாக்ஷி! என்னிடம் தயை காட்டு. காமபாணங்களால் தாக்குண்டு நான் தவிக்கிறேன்.

जन्मप्रभृति चार्वङ्गि दैन्यं नाऽऽचरितं मया ।
ब्रह्मादीनीश्वरान् प्राप्य त्वयि तद्विदधाम्यहम् ॥ १६. ३३ ॥

चरितं मम जानन्ति रणे ब्रह्मादयः सुराः ।
सोऽप्यहं तव दासोऽस्मि मन्मुखं पश्य भामिनि ॥ १६. ३४ ॥

इति ब्रुवाणं तं दैत्यं देवी भगवती हि सा ।
प्रहस्य सस्मितं वाक्यमुवाच वरवर्णिनी ॥ १६. ३५ ॥

देव्युवाच—

नाहं पुरुषमिच्छामि परमं पुरुषं विना ।
तस्य चेच्छाऽस्म्यहं दैत्य सृजामि सकलं जगत् ॥ १६. ३६ ॥

16.33. 'அழகிய அங்கம் படைத்தவளே! நான் பிறந்தது முதல் எவரிடமும் கெஞ்சுதல் என்பது என்னால் செய்யப்படவில்லை. பிரம்மா முதலிய உலக நாயகர்களை அடைந்தும் அப்படிச் செய்யாத நான் உன் முன் இப்பொழுது அவ்வாறு நிற்கிறேன்.

16.34. 'பெண்ணரசியே! பிரம்மாதி தேவர்கள் போரில் என்னுடைய சரித்திரத்தை அறிவார்கள். அப்படிப்பட்ட நான் உனக்கு அடிமையாயிருக்கிறேன். என் முகத்தைப் பார்.'

16.35. அழகிற் சிறந்த பகவதி தேவி இவ்வாறு பேசும் அசுரனை நோக்கிச் சிரித்து மலர்ந்த முகத்துடன் பின்வருமாறு கூறினாள்.

தேவி கூறியது—

16.36. அசுரனே! பரமபுருஷன் ஒருவனைத்தவிர நான் வேறு புருஷனை நாடமாட்டேன். அவருடைய இச்சா சக்தியாயிருந்து கொண்டுதான் நான் உலகனைத்தையும் சிருஷ்டிக்கிறேன்.

स मां पश्यति विश्वात्मा तस्याऽहं प्रकृतिः शिवा ।
तत्सान्निध्यवशादेव चैतन्यं मयि शाश्वतम् ।। १६. ३७ ।।

जडाऽहं तस्य संयोगात्प्रभवामि सचेतना ।
अयस्कान्तस्य सान्निध्यादयसश्चेतना यथा ।। १६. ३८ ।।

त्यज वैरं सुरैः सार्धं यथेष्टं विचरावनौ ।
पातालं गच्छ वा कामं जीवितेच्छा यदस्ति ते ।। १६. ४२ ।।

अथवा कुरु संग्रामं बलवत्यस्मि सांप्रतम् ।
प्रेषिताऽहं सुरैः सर्वैस्तव नाशाय दानव ।। १६. ४३ ।।

सत्यं ब्रवीमि येनाद्य त्वया वचनसौहृदम् ।
दर्शितं तेन तुष्टाऽस्मि जीवन् गच्छ यथासुखम् ।। १३. ४४ ।।

16.37. அப்படிப்பட்ட என்னே உலகின் ஆத்மாவாகிய அவர் பார்த்துக் கொண்டிருக்கிருர். அவருடைய இயல்பான மங்களத்தின் வடிவினள் நான். அவருடைய முன்னிலே யிலிருப்பதாலேயே என்னிடம் சைதன்யம் என்றும் நிலேத் திருக்கிறது.

16.38. நான் ஜடமானவள். காந்தத்தின் முன்னி லேயில் இரும்பு இயங்குவதுபோல் அவருடன் கூடியதால் நான் சைதன்யமுடையவளாகிறேன்.

16.42. உனக்கு உயிருடனிருக்க விருப்பமுண்டானுல் தேவர்களிடம் கொண்டுள்ள பகைமையை விட்டுவிட்டு பூமியில் இஷ்டப்படி சஞ்சரிக்கலாம். அல்லது பாதாளம் செல்ல விரும்பினுல் அங்கு போகலாம்.

16.43. அல்லாவிட்டால் போர் புரியலாம். இப் பொழுது நான் உன்னுடைய அழிவிற்காகவே தேவர்களே வராலும் அனுப்பப்பட்டு பலமுடையவளாயிருக்கிறேன்.

16.44. உன்னுல் சொல்லப்பட்ட பிரியமான வார்த் தைகளால் நான் சந்தோஷமடைந்திருப்பதால் நீ வேண்டு மானுல் சுகமாக உயிருடன் போகலாம். நான் உண்மை யைச் சொல்லுகிறேன்.

मरणेच्छाऽस्ति चेद्युद्धं कुरु वीर यथासुखम् ।
हनिष्यामि महाबाहो त्वामहं नाऽत्रसंशयः ॥ १६. ४५ ॥

यदा यदा हि साधूनां दुःखं भवति दानव ।
तदा तेषां च रक्षार्थं देहं सन्धारयाम्यहम् ॥ १८. २२ ॥

अरूपायाश्च मे रूप-मजन्मायाश्च जन्म च ।
सुराणां रक्षणार्थाय विद्धि दैत्य विनिश्चितम् ॥ १८. २३ ॥

व्यास उवाच—

इत्युक्तः स तया देव्या धनुरादाय दानवः ।
युद्धकामः स्थितस्तत्र संग्रामांगणभूमिषु ॥ १८. २६ ॥

16.45. வீரனே! பெருந்தோள்படைத்தவனே! மரணத்தில் ஆசையிருக்குமேயானுல் விருப்பப்படி யுத்தம் செய். உன்னே நான் கொல்லுவேன். இதில் சந்தேகமில்லே.

18.22. அசுரனே! எப்பொழுது நல்லவர்களுக்குத் துன்பம் விளேகிறதோ அப்பொழுதெல்லாம் அவர்களேக் காப்பாற்றுவதற்காக நான் உடலெடுக்கின்றேன்.

18.23. அசுரனே! உருவமில்லாத எனக்கு உருவமும் பிறப்பில்லாத எனக்குப் பிறப்பும் தேவர்களே இரக்ஷிப்பதற்காக என்பது நிச்சயம். இதை அறிவாயாக.

வியாஸர் கூறியது—

18.26. இவ்வாறு தேவியால் கூறப்பட்ட அசுரன் வில்லே எடுத்துக் கொண்டு போர்க்களத்தில் யுத்தத்திற்கு ஆயத்தமாய் நின்முன்.

मुमोच तरसा बाणान् कर्णाऽऽकृष्टाञ्छिलाशितान्।
देवी चिच्छेद तान् बाणैः क्रोधान्मुक्तैरयोमुखैः ॥ १८. २७ ॥

विहाय पौरुषं रूपं सोऽपि सिंहो बभूवह।
नखैर्विदारयामास देवीसिंहं महोत्कटम् ॥ १८. ३९ ॥

तं च केसरिणं वीक्ष्य देवी क्रुद्धाह्यचयोमुखैः।
शरैरवाकिरत्तीक्ष्णैः शरैराशीविषैरिव ॥ १८. ४० ॥

त्यकत्वा स हरिरूपं तु गजो भूत्वा मदस्रवः।
शैलशृंगं करे कृत्वा चिक्षेप चण्डिकां प्रति ॥ १८. ४१ ॥

आगच्छन्तं गिरेः शृंगं देवी बाणैः शिलाशितैः।
चकार तिलशः खण्डां जहास जगदम्बिका ॥ १८. ४२ ॥

18.27. காதுவரை நாணே இழுத்துக் கூரிய பாணங்களே விரைவாக அவன் ஏவவே தேவியானவள் கோபத்துடன் தன்னுடைய வில்லிலிருந்து விடுத்தவையும் எஃகு முனேகளே உடையவையுமான பாணங்களால் அவற்றை நாசம் செய்தாள்.

18.39. அவ்வசுரன் அதன்பின் தன்து புருஷ வடிவை விட்டுச் சிங்க வடிவை எடுத்துக்கொண்டு பயங்கரமான தேவியின் சிங்கத்தை நகங்களால் கிழிக்க முற்பட்டான்.

18.40. அச்சிங்கத்தைக் கண்ணுற்ற தேவி கோபம் மூண்டு எஃகு முனேயுள்ளவையும் பாம்புகளேப் போன்றவையுமான கூரிய பாணங்களால் அவனே அடித்தாள்.

18.41. அவன் சிங்க ரூபத்தை விட்டு மதத்தைப் பெருக்கும் யானே வடிவங் கொண்டு மலேச்சிகரங்களேப் பிடுங்கி எடுத்துச் சண்டிகையின் மேல் எறிந்தான்.

18.42. தன்னே நோக்கிவரும் அம்மலேச் சிகரங்களே ஜகதம்பிகா தேவியானவள் கூரிய பாணங்களால் எள்ளேப் போல் பொடியாக்கிவிட்டுச் சிரித்தாள்.

उत्पत्य च तदा सिंहस्तस्य मूर्ध्नि व्यवस्थितः।
नखैर्विदारयामास महिषं गजरूपिणम् ॥ १८. ४३ ॥

विहाय गजरूपंच बभूवाष्टापदी तथा।
हन्तुकामो हरिं कोपाद्दारुणो बलवत्तरः ॥ १८. ४४ ॥

तं वीक्ष्य शरभं देवी खड्गेन सरुषान्विता।
उत्तमांगे जघानाशु सोऽपि तां प्राहरत्तदा ॥ १८. ४५ ॥

तयोः परस्परं युद्धं बभूवातिभयप्रदम्।
माहिषं रूपमास्थाय शृंगाभ्यां प्राहरत्तदा ॥ १८. ४६ ॥

चण्डिकाऽपि च तं पापं त्रिशूलेन बलाद्-धृदि।
ताडयामास तीक्ष्णेन क्रोधादरुणलोचना ॥ १८. ५९ ॥

18.43. அப்பொழுது சிங்கம் யானை ரூபியான மகிஷாசுரனுடைய தலைமேல் ஏறி உட்கார்ந்து கொண்டு நகங்களால் அவனைக் கிழித்தது.

18.44. வலிமைமிகுந்த அவன் கோபாவேசத்துடன் சிங்கத்தைக் கொல்ல எண்ணியவனாய் யானை வடிவத்தை விட்டுச் சரப வடிவுடையவனானான்.

18.45. சரப வடிவங்கொண்ட அவனைப் பார்த்து தேவியானவள் கோபத்துடன் வாளினால் தலையில் தாக்கினாள். அவனும் தேவியைத் தாக்கினான்.

18.46. அவர்களிடை மிகவும் பயங்கரமான போர் நிகழ்ந்தது. அவன் எருமை உருவையடைந்து கொம்புகளால் முட்டினான்.

18.59. சண்டிகா தேவி கோபத்தால் கண்கள் சிவந்தவளாய் அந்தப்பாவியைக் கூரிய திரிசூலத்தால் பலமாக மார்பில் தாக்கினாள்.

ताडितोऽसौ पपातोर्व्यां मूर्च्छामाप मुहूर्तकम् ।
पुनरुत्थाय चामुण्डां पद्भ्यां वेगादताडयत् ॥ १८. ६० ॥

विनिहत्य पदाघातैर्जहास च मुहुर्मुहुः ।
रुराव दारुणं शब्दं देवानां भयकारकम् ॥ १८. ६१ ॥

ततो देवी सहस्रारं सुनाभं चक्रमुत्तमम् ।
करे कृत्वा जगादोच्चैः संस्थितं महिषासुरम् ॥ १८. ६२ ॥

पश्य चक्रं मदान्धाद्य तव कण्ठनिकृन्तनम् ।
क्षणमात्रं स्थिरो भूत्वा यमलोकं व्रजाधुना ॥ १८. ६३ ॥

इत्युक्त्वा दारुणं चक्रं मुमोच जगदम्बिका ।
शिरश्छिन्नं रथांगेन दानवस्य तदा रणे ॥ १८. ६४ ॥

18.60. அங்ஙனம் அடிபட்ட அவன் பூமியில் விழுந்து சிறிது நேரம் மூர்ச்சித்துக் கிடந்து பின்பு எழுந்து சாமுண்டா தேவியைத் தனது கால்களால் வேகமாகத் தாக்கினுன்.

18.61. அப்படி தாக்கிவிட்டுத் திரும்பத் திரும்பச் சிரித்துக்கொண்டு தேவர்களுக்கு நடுக்கத்தை விளேவிக்கும் வகையில் கொடியதொரு சத்தத்தை உண்டாக்கினுன்.

18.62. அப்பொழுது தேவி ஆயிரம் ஆரங்களேயுடையதும் அழகிய மையமுடையதுமான சிறந்த சக்ராயுதத்தைக் கையிலெடுத்துக்கொண்டு எதிரில் நின்ற மகிஷாசுரனே நோக்கிப் பின்வருமாறு உரக்கக் கூறினுள்.

18.63. 'மதத்தால் மதிகெட்டவனே! இப்பொழுது உன் கழுத்தையறுக்கப் போகும் இந்தச் சக்ராயுதத்தைப் பார். ஒரு கணம் மனதை திடப்படுத்திக்கொண்டு யம லோகம் செல்.'

18.64. என்றிவ்வாறு கூறிவிட்டு பயங்கரமான சக்கரத்தை ஜகதம்பிகை அவன் மேல் ஏவினுள். அச்சக்கரத்தால் அவ்வசுரனுடைய தலே போர்க்களத்தில் வெட்டித் தள்ளப்பட்டது.

कवन्धस्तस्य दैत्यस्य भ्रमन्वै पतितः क्षितौ।
जयशब्दश्च देवानां बभूव सुखवर्धनः॥ १८. ६६॥

मृते च महिष क्रूरे दानवा भयपीडिताः।
मृतशेषाश्च ये केचित्पातालं ते ययुर्नृप॥ १८. ६८॥

आनन्दं परमं जग्मुर्देवास्तस्मिन्निपातिते।
मुनयो मानवाश्चैव ये चान्ये साधवः क्षितौ॥ १८. ६९॥

चण्डिकाऽपि रणं त्यक्त्वा शुभे देशेऽथ संस्थिता।
देवास्तत्राऽऽययुः शीघ्रं स्तोतुकामाः सुखप्रदाम्॥ १८. ७०॥

॥ इति देवीभागवते पंचमस्कन्धे अष्टादशोऽध्यायः॥

॥ महिषासुरवधवर्णनं समाप्तम्॥

18.66. தலையில்லாத அவனுடைய உடல் சுழன்று பூமியில் சாய்ந்தது. தேவர்களுக்கு இன்பத்தை வளர்க்கும் ஜயகோஷம் எழுந்தது.

18.68. அரசே! கொடிய மகிஷாசுரன் இறந்தபின் சாகாமலிருந்த சில அசுரர்கள் பயத்தால் பீடிக்கப்பட்டுப் பாதாள உலகம் சென்றனர்.

18.69. அவ்வசுரனுடைய வீழ்ச்சியில் தேவர்களும் பூவுலகிலுள்ள முனிவர்களும் மற்றும் நல்ல மனிதர்கள் எல்லோரும் பரமானந்த மெய்தினர்.

18.70. சண்டிகாதேவி போர்க்களத்தை விட்டகன்று சுபமான ஓரிடத்தில் எழுந்தருளியதும் தேவர்கள் தங்களுக்கு இன்பத்தையளித்த அவளைத் துதிக்கும் பொருட்டு விரைவில் அங்கு வந்து சேர்ந்தனர்.

இங்ஙனம் தேவீபாகவதத்தில் ஐந்தாவது
ஸ்கந்தத்தில் பதினெட்டாவது அத்தியாயம் முற்றும்.

மஹிஷாசுர வத வர்ணனை முற்றும்.

குருகீதை	3	25
நாரத பக்தி சூத்திரங்கள்	1	75
ஜபவிதானம்	(அச்சில்)	
ஸந்தியாவந்தனம் (தமிழ்)	2	00
,, காலிகோ	4	00
,, ,, (நாகரம்–தமிழ்)	4	00
தேவீஸூக்தங்களும் உபநிஷதங்களும்	1	50
புருஷஸூக்தம்	2	25
பூஜாவிதானம் (தமிழ்)	5	00
காலிகோ	7	00
,, (நாகரம்)	4	50
காலிகோ	6	00

V. புராணங்கள்

ஸ்ரீமத் பாகவத ஸாரம் : முதல் பாகம் (ஸ்கந்தம் 1-9) பக்கம் 560	10	00
ஷை இரண்டாம் பாகம் (ஸ்கந்தம் 10–12) பக்கம் 560	12	50

VI. ஸ்தோத்தரங்கள்

ஸௌந்தர்யலஹரி பாஷ்யம்	5	00
ஸௌந்தர்யலஹரீ (மூலம்) (நாகரம்-தமிழ்)	1	50
சிவானந்தலஹரி பாஷ்யம்	4	00
(மூலம்)	1	00
சிவ ஸ்தோத்திரங்கள்	1	50
ஸ்ரீ லலிதாஸஹஸ்ரநாம பாஷ்யம் காலிகோ	6	50
,, ,, பாராயணம்	3	00
,, ,, மூலம்	1	50
ஸ்ரீ லலிதா த்ரிசதீ பாஷ்யம்	2	50
ஸ்ரீ லலிதா த்ரிசதீ ஸ்தோத்ரம்	1	00
ஸ்ரீ வித்யா	5	00
பஜகோவிந்தம்	1	00
அஷ்டோத்தர சத நாமாவளிகள்	2	00
சித்தி விநாயக பூஜை	0	50

ஸ்ரீராமகிருஷ்ண கதாமிருதம்

பக்கம் 667 + xvi ✻ முதல் பாகம் ✻ சைஸ் : க்ரௌன் 1/8

உபநிஷதங்கள், கீதை, தம்மபதம், பைபிள், குரான் என்ற வரிசையில் சமீப காலத்தில் தோன்றியுள்ள ஓர் அபூர்வமான நூல் ஸ்ரீ ராமகிருஷ்ண கதாமிருதம்

குறிப்பிட்ட நாட்டவர்களுக்கு, குறிப்பிட்ட சமயப் பிரிவினர்களுக்கு, குறிப்பிட்ட மொழியைச் சேர்ந்தவர்களுக்கு என்று இல்லாமல், மனிதகுலம் முழுவதையும் தழுவியனவாக ஸ்ரீராமகிருஷ்ணரின் உபதேசங்கள் அமைந்திருக்கின்றன. பண்டிதர்-பாமரர், ஆடவர்-மகளிர், பாலர்-வயோதிகர் ஆகிய எல்லாத் தரத்தினருக்கும் ஆன்மிக ஆலய தீபஸ்தம்பமாக விளங்கி ஸ்ரீராமகிருஷ்ணர் தெய்வத்தை அடையும் பாதையை இந்த நூலில் காட்டுகிறார். தவமே பிறந்து தவம் செய்ததோ என்னும்படியான வாழ்க்கை அவருடையது. எனவே ஞானசாதகர் அனைவருக்கும் அனைத்துமாக இருந்து, பிறவிப் பிணியை நீக்கும் பொருத்தமான மருந்தை அவர் தமது உபதேசங்களில் வழங்கியிருக்கிறார். சாதகர்கள் பரமஹம்சரின் கருத்துக்களைப் படிக்கப் படிக்கத் தங்களின் அறிவிற்கும் அனுபவத்திற்கும் ஏற்ப அவற்றின் உட்கருத்துகள் விரிந்துகொண்டே போவதைப் பார்க்கலாம்.

இந் நூலைக் கசடறக் கற்கவும் அவ்வழி நிற்கவும் உண்மையாக முயலுபவர்கள் அனைவரும் வாழ்க்கையின் குறிக்கோளை அடைவார்கள்; பேரின்பம் பெறுவார்கள்; இறைவனின் திருவருளுக்குப் பாத்திரமாவார்கள்.

முதல் பாகம் : இரு பகுதிகள்.

பகுதி ஒன்றுக்கு ரூ. 8

ஸ்ரீராமகிருஷ்ண மடம்

மயிலாப்பூர் : : சென்னை-600 004

Sri Devi Bhagavathasaram 15-00